பெருநகர சென்னை மாநகராட்சி மன்றம்

திருவள்ளுவராண்டு *2057*, மாசி திங்கள் *8* - ஆம் நாள்,

***2026*-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் *20*-ஆம் நாள்**

வெள்ளிக்கிழமை காலை *10.00* மணிக்கு ரிப்பன் கட்டிடத்தில்

உள்ள மன்ற கூடத்தில் நடைபெற்ற ஒத்தி வைக்கப்பட்ட

வரவு செலவு கூட்ட விவாத நிகழ்ச்சிகள்

மாண்புமிகு மேயர்

தமிழ்த்தாய் வாழ்த்து

(அவையில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது)

அனைவருக்கும் வணக்கம்.

திருக்குறள். *39* இறைமாட்சி என்கிற அதிகாரம். குறள் எண். *388*.

“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்”.

நீதி நெறியுடன் அரசு நடத்தி, மக்களை காப்பாற்றும் ஆட்சியாளன் தான் மக்களுக்கு தலைவன் என போற்றப்படுவான்.

***2026*-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் *20*-ஆம் நாள் வெள்ளிக்கிழமை இம்மன்றத்தின் ஒத்தி வைக்கப்பட்ட வரவு செலவு கூட்ட விவாத நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன.**

(தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியினை மாண்புமிகு மேயர் அவர்கள் படிக்க மன்ற உறுப்பினர்கள் அனைவரும் திரும்ப சொல்லுதல்)

தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்திய குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாக கொண்டு எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படை கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற, சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழு பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

அனைவருக்கும் வணக்கம்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் காட்டிய வழியில் தமிழ்நாடு இந்திய திருநாட்டின் இரண்டாவது மிகப் பெரிய பொருளாதார மாநிலமாக திகழ்வது மட்டுமின்றி நாட்டிலேயே இரட்டை இலக்க உயர் பொருளாதார வளர்ச்சியை அடையும் வகையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் நாடே போற்றும் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி, நல்வழி காட்டிய நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

இருப்போர், இல்லாதோர் என்றில்லாமல் கிடைத்ததை பகிர்ந்து கொண்டு எல்லா உயிர்களும் வாழ வேண்டும் என்கிற சமநிலை கொள்கைக்கு ஈடானது வேறு எதுவுமே இல்லை என்கின்ற வான் புகழ் வள்ளுவரின் வாக்கினை பின்பற்றி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டின்

வளர்ச்சி வழி நடத்தப்பட்டு வருகிறது. மகளிர், மழலையர், முதியோர், பழங்குடியினர்கள், மாற்று திறனாளிகள் என கடைக்கோடி தமிழரும் தமிழ்நாட்டின் வளர்ச்சி பயணத்தில் பங்குபெறும் சூழல் உருவாகியிருப்பது தனிச் சிறப்பாகும்.

அதன் அடிப்படையில் இந்தியாவின் மிக தொன்மையான நகராட்சி அமைப்பாகவும், உலகின் இரண்டாவது தொன்மையான நகராட்சியாகவும், தொன்மையும், புதுமையும் ஒருங்கே அமைய பெற்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் வளர்ச்சிக்காகவும் அதன் கட்டமைப்பினை மேம்படுத்தவும் தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்ததற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களுக்கும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களுக்கும் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் வழங்கிய ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள், அறிவுரைகளின் அடிப்படையில் சிறப்பாக தயாரிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சியின் *2026-2027*-ஆம் ஆண்டிற்கான வரவு - செலவு திட்டத்தில் கல்வி, பொது சுகாதாரம், அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்தும், அதற்கேற்ப நிதியினை ஒதுக்கீடு செய்தும் *18.02.2026* அன்று இம்மாமன்றத்தில் வரவு – செலவு திட்டம் தாக்கல் செய்யப்பட்டது. இத்திட்டமானது அனைத்து தரப்பினரிடையே பெரும் வரவேற்பையும், பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன்.

இந்தச் சிறப்பான வரவு – செலவு திட்டம் பொதுமக்களிடம் வரவேற்பையும், பாராட்டுதல்களையும் பெறுவதற்கும், மக்களிடம் சென்றடைவதற்கும் காரணமாக இருந்த நாளிதழ்கள் மற்றும் ஊடக துறை நண்பர்களுக்கு

இம்மாமன்றத்தின் சார்பாக எனது நன்றியினையும், வணக்கத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்பொழுது வரவு – செலவு திட்ட அறிக்கை மீதான விவாதம் நடைபெறும். இந்த விவாதத்தின் மீது 39 உறுப்பினர்கள் பேச உள்ளார்கள். எனவே, பேச உள்ள உறுப்பினர்கள் காலத்தின் அருமை கருதி, குறித்த நேரத்திற்குள் பேசுமாறு கேட்டு கொள்கிறேன்.

முதலில், திரு. தா.இளங்கோ (எ) தா. இளைய அருணா அவர்கள், தலைவர், நிலைக்குழு (நகரமைப்பு) / மாமன்ற உறுப்பினர், வார்டு எண். 49.

திரு. தா.இளங்கோ (எ) தா. இளைய அருணா

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, மாநகராட்சியின் அதிகாரிகளே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே, பத்திரிகை துறையினை சார்ந்த நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

ஒப்பாரும் மிக்காரும் அற்ற தலைவர் ஐம்பதாண்டு காலம் நிகழ்த்த வேண்டிய சாதனைகளை, ஐந்து வருட ஆட்சி காலத்தில் சாதித்து காட்டிய தலைவர், என் உயிரினும் மேலான கழக தலைவர், மூன்று பரிணாமங்களிலும் பிரகாசிக்கும் தலைவர், கண்டிப்பதிலும், சிந்திப்பதிலும் தந்தை பெரியாராய், கனிவிலும், அரசியல் நாகரீகம் காப்பதில் பேரறிஞர் அண்ணாவாய், ராஜதந்திரத்திலும், உழைப்பிலும் முத்தமிழறிஞர் கலைஞராய் பிரகாசிக்கும் கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை வணங்கி, ஆட்சி நடத்துவதிலும், கட்சி நடத்துவதிலும், தலைவருக்கு துணையாக செயல்படும் விளையாட்டு துறையில் இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்திய மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்

திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் நெஞ்சில் நிறுத்தி, நேற்றைய முன்தினம் மாண்புமிகு மேயர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையின் மீது என் உரையை துவக்குகிறேன்.

எப்படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எதிர்ப்போரும் போற்றக்கூடிய இடைக்கால நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு மூலமாக இந்த நாட்டிற்கு அர்பணித்தாரோ, அதனை பின்பற்றி, அதே அடிச்சுவட்டில் ஒரு பாராட்டுக்குரிய நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், அதற்கு துணை நின்று அந்த நிதிநிலை அறிக்கை முழுமை பெறுவதற்கும், முழுமையாக ஒத்துழைத்த மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், நிர்வாக சக்கரத்தை சுழற்றுவதிலும், நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்கும் மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், துணை நின்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் அவர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *14*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பள்ளி செல்லாத மாணவ-மாணவியர்கள், இடை நின்ற மாணவ-மாணவியர்கள் மற்றும் இடம் பெயர்ந்த மாணவ-மாணவியர்கள் ஆகியோர்களை கண்டறிந்து அனைவருக்கும் அடிப்படை கல்வியை கற்பிக்கும் நோக்கத்தில் வட்டாரத்திற்கு ஒரு பள்ளி என *3* பள்ளிகளை தேர்ந்தெடுத்து, அப்பள்ளியில் மாணவ-மாணவியர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப வகுப்பறைகளை ஒதுக்கி இணைப்புப் பாடப்பயிற்சியை *(Bridge Course)* தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களை கொண்டு நடத்தப்படும் என்கிற அறிவிப்பினை நான் வரவேற்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அடிக்கடி வலியுறுத்தியது போல, வீடு கட்டும் போது புத்தகங்களை வைக்க சிறிய அறையாவது ஒதுக்க வேண்டும் என்று கல்வியின் பெருமையை எடுத்துரைத்தார். அது போலவே, நம் முதலமைச்சர் கழக தலைவர்

தளபதி அவர்கள் எந்த இடத்தில் உரையாற்றினாலும், கல்வி என்பது யாராலும் திருட முடியாத சொத்து என்பதை நினைவூட்டுவார். எனவே, கல்வி கற்றுக் கொள்ளுங்கள்; நீங்கள் கல்வி பயில இந்த அரசு துணை நிற்கும் என்று கல்வியின் அவசியத்தை உணர்த்துவார். அதே அடிப்படையில், இந்நிதிநிலை அறிக்கையில் கல்வி துறைக்கே 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு மேயர் அவர்களை பாராட்டுவது என் கடமையாகும்.

தமிழ்நாடு முதலமைச்சர், இந்தியாவின் முதன்மை முதலமைச்சர் தளபதி அவர்கள், உலகிலேயே எந்தத் தலைவருக்கும் தோன்றாத எண்ணமாக, கோடைக்கால வெயிலின் தாக்கத்திலிருந்து மக்களை தற்காத்து கொள்ள ரூபாய் இரண்டாயிரம் வழங்கியது போல, இம்மாமன்றமும் மக்களின் நலனுக்காக செயல்பட்டு வருகிறது.

அறிவிப்பு 35: பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து நிரந்தர, தற்காலிக மற்றும் வெளிமுகமை தூய்மைப் பணியாளர்களுக்கும் கோடைக் காலங்களில் ஏற்படும் வெயில் தாக்கத்தை போக்கவும் நீர்ச்சத்தை பராமரிக்கவும் உடல் வெப்பத்தை தணிக்கவும் கோடை காலம் முழுவதும் தூய்மைப் பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்கிற அறிவிப்பினை வரவேற்கிறேன்.

அறிவிப்பு 38: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் மத்திய தடுப்புகளில் சேகரமாகும் மண் துகள்கள் மற்றும் தூசி ஆகியவற்றை இயந்திரம் கொண்டு பெருக்கி தூய்மைப்படுத்தும் பணிக்கென 20 எண்ணிக்கையில் சிறியவகை இயந்திரப் பெருக்கி வாகனங்கள் *(Battery Operated Machanical Sweeper Mounted on LMV Vehicle)* ரூ.8 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும். இந்த வாகனம், பேருந்துகள் செல்லும் பெரும் சாலைகளில் மட்டுமல்லாது, சிறு சிறு தெருக்களிலும் நுழைந்து செயலாற்றும் வகையில் பயன்பட வேண்டுமென நான் கேட்டு கொள்கிறேன்.

அறிவிப்பு *44*: *2026-2027* ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில், முதற்கட்டமாக *200* பூங்காக்களில் நிலத்தடி நீர்மட்டத்தினை அதிகரிக்கும் வகையிலும் பூங்காவிற்கு வரும் மக்களிடம் மழை நீர் சேகரிப்பை கொண்டு சேர்க்கும் விதத்திலும், ஒரு பூங்காவிற்கு ரூ.*10* இலட்சம் வீதம் ரூ.*20* கோடி மதிப்பீட்டில் மழை நீர் சேகரிப்பு *(Rain Water Harvesting)* திட்டம் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்திருப்பது பாராட்டிற்குரியது.

அறிவிப்பு *45*: *2026-27*ஆம் நிதியாண்டில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில் மக்கள் அதிகம் கூடும் பூங்காக்களான

1. மண்டலம்-*2*,கோட்டம்-*15*, மணலி நியு டவுன், *Block No.26*, *CPS-10* பூங்கா.
2. மண்டலம்-*5*, கோட்டம்-*53*, தங்கசாலை பூங்கா.
3. மண்டலம்-*7*, கோட்டம்-*83*, மதனகுப்பம் பூங்கா.
4. மண்டலம்-*8*, கோட்டம்-*103*, டாக்டர். விஸ்வேஸ்வரய்யா டவர் பூங்கா.
5. மண்டலம்-*13*, கோட்டம்-*123*, ராஜிவ் காந்தி சாலை பூங்கா ஆகிய *5* பூங்காக்களில், சிறப்பு குழந்தைகளுக்கான உபகரணங்கள் உள்ளடக்கிய *(Inclusive Parks for Special Children)* சிறப்பு அம்சங்கள் கொண்ட பூங்காக்களாக ரூ.*10* கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

அறிவிப்பு *61*: சுற்றுலாவை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மெரினா கடற்கரையை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்காக கலங்கரை விளக்கம் *(Light House)* முதல் அண்ணா நினைவிடம் வரை கயிறு வழித்தட *(Rope way car)* வசதி அறிமுகப்படுத்த திட்டமிட்டப்பட்டுள்ளது. இந்த கயிறு வழித்தடங்கள், நகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்வதுடன், சுற்றுலா பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்துகின்றன. இந்த கயிறு வழித்தடங்கள் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் அழகை ரசிக்க வைக்கும் பரந்த காட்சிகளை *(Panoramic views)* வழங்குவதோடு மறக்க முடியாத அனுபவங்களையும் உருவாக்கும் வகையில் பொது-தனியார் பங்களிப்பு *(PPP)*

முறையில் கயிறு வழித்தடங்கள் *(Rope way car)* அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

சென்ன மாநகரின் முகத்தையே மாற்றியமைக்கும், கலங்கரை விளக்கம் தொட்டு பேரறிஞர் அண்ணா நினைவாலயம் வரை ரோப் *way* கார் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பினை மனதார வரவேற்கிறேன். இத்திட்டம் வடிவமைக்கப்பட்டதற்கு, நகரமைப்பு நிலைக்குழு உறுப்பினரும், மதிப்பிற்குரிய திரு. டி.வி செம்மொழி அவர்களின் தொடர் முயற்சியே முதன்மை காரணமாகும். எனவே, இப்புதிய திட்டத்தை முன்மொழிந்து, இதற்காக தொடர்ந்து குரல் கொடுத்த திரு. டி.வி. செம்மொழி அவர்களுக்கு என் பாராட்டுக்களையும் நன்றியினையும் சமர்ப்பிக்க கடமைப்பட்டுள்ளேன். இத்தகு பெருமைமிகு ரோப் *way* கார் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி விவரங்களை தெரிவிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

அறிவிப்பு *69*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் *6* இடங்களில் வீடற்றோர்கள் தங்குவதற்கான அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய இரவு காப்பகம் *(*தரைதளம் மற்றும் முதல் தளம்*)* மொத்தம் ரூ.*9* கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு *70*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெயரும் தொழிலாளர்கள், வீடில்லாத நபர்கள் / குடும்பங்கள் *(Family Homeless)* தற்காலிகமாக தங்குவதற்கு *200* தற்காலிக / இடைநிலை தங்குமிடங்கள் *(Container - Temporary Homes)* ரூ.*12* கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது பாராட்டிற்குரியது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போன்று, ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம் என்ற வாசகங்களுக்கு உயிர் கொடுக்கும் பட்சமாக இருக்கின்ற இந்தத் திட்டத்தை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மேயர் சிறப்பு மேம்பாட்டு நிதி நான்கு கோடியிலிருந்து ஆறு கோடியாக உயர்த்தி தர வேண்டும். மேலும், மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி *60* இலட்சத்திலிருந்து *80* இலட்சமாக உயர்த்தி தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மொத்தத்தில் இந்த நிதிநிலை அறிக்கை பெருநகர சென்னை மாநகராட்சியின் உட்கட்டமைப்புகளை உயர்த்தும் நிதிநிலை அறிக்கை, எதிர் கருத்து உள்ளவரும் ஏற்றுக்கொள்கின்ற நிதிநிலை அறிக்கை, மாற்றுக் கருத்து உள்ளவரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் நிதிநிலை அறிக்கை என்று கூறி, இந்த நிதிநிலை அறிக்கையை நானும் பாராட்டி அமைகிறேன், நன்றி, வணக்கம். **(கைதட்டல்)**

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய *3*வது மண்டல வார்டு குழுதலைவர் திரு. சு. நந்தகோபால் / மாமன்ற உறுப்பினர், வார்டு எண். *25*.

திரு.சு. நந்தகோபால்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, துணை ஆணையர்களே, வட்டார துணை ஆணையர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே அனைவருக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொண்டு,

பெருநகர சென்னை மாநகராட்சி *2025-2026*ஆம் ஆண்டு நிதியை கொண்டு *2026-2027*-ஆம் ஆண்டு அந்த நிதியை உள்ளடக்கி ஒரு சிறப்பான வரவு-செலவு திட்டத்தை ஏற்படுத்தி தந்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும், அவரோடு பணிபுரிந்த அனைத்து அதிகாரிகளுக்கும், நிலைக்குழு தலைவர்களுக்கும் *3*வது மண்டலத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய 14வது வார்டுகுழு தலைவர் திரு. எஸ்.வி. ரவிச்சந்திரன் அவர்கள் / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.184.

திரு.எஸ்.வி. ரவிச்சந்திரன்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்தியாவிலேயே விவசாயத்திற்கென்று தனி நிதிநிலை அறிக்கையினை அமைத்திருக்கின்ற, இந்தியாவிலேயே இரட்டை இலக்க பொருளாதாரம், அதாவது 11.39 என்கிற அடைய முடியாத இலக்கை அடைந்து மேலும், மேலும் தமிழ்நாட்டை பொருளாதார ரீதியாக வளர்த்து கொண்டிருக்கின்ற, இந்தியாவிலேயே அந்நிய முதலீடுகளை அதிக அளவில் ஈர்த்து கொண்டிருக்கின்ற, இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதல் மாநிலமாக ஆக்கி கொண்டிருக்கின்ற, எங்களை எல்லாம் அன்பாக வழிநடத்தி செல்லுகின்ற எங்கள் இதயத்தில் தெய்வமாக வீற்றிருக்கும் அன்பு தலைவர் அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி,

அதே போல், மருத்துவ துறையில் இல்லந்தேடி மருத்துவம் போன்ற அற்புதமான திட்டத்தினை வழங்கிய மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்களை வணங்கி,

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை ஒரு அற்புதமான நிதிநிலை அறிக்கையாகும். இந்த அற்புதமான நிதிநிலை அறிக்கையில் உள்ள சிறந்த திட்டம் என்னவென்றால், ஒரு தலைவன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தான் உதாரணம். அரசியல்வாதிகள் அடுத்த தேர்தலுக்கு எப்படி ஓட்டு வாங்கலாம் என்று தான் யோசிப்பார்கள். ஆனால், ஒரு அற்புதமான தலைவர், தமிழ்நாடு, எதிர்காலத்தில் எப்படி இருக்க வேண்டும் என்று யோசித்து 14 வயது பெண் குழந்தைகளுக்கு எதிர்காலத்தில் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் வரக்கூடாது என்று யோசித்து அதற்கான தடுப்பூசி செலுத்துவதற்காகவும், அந்தத் தடுப்பூசி தனியார்

மருத்துவமனைகளில் செலுத்தி கொள்ள வேண்டும் என்றால் ரூ.7000/- என 2 தடுப்பூசி செலுத்தி கொள்வதற்கு ரூ. 14,000/- செலவாகிறது. வாக்கு வங்கியை மட்டும் கணக்கிடாமல் எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் எந்தப் பெண்களுக்கும் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் வரக்கூடாது என்று யோசித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பின்பற்றி பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு எண்.15ல் அதற்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்துள்ளமைக்கு மாண்புமிகு மேயர் அவர்களையும், ஆணையர் அவர்களையும் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

அறிவிப்பு.15

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 19 மாநகர சமுதாய நல மையங்கள், 200 மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் 1 தொற்று நோய் மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த 360 சுகாதார மையங்களில் புற்று நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பெண்களை பெரிதும் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோய் HPV DNA என்னும் நுண்கிருமியால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால், HPV வைரஸ் மூலம் உண்டாக்கும் கருப்பை வாய் புற்றுநோயை கண்டறியும் விதமாக 360 சுகாதார மையங்களிலும் இந்தப் பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மாதிரிகளை தொற்று நோய் மருத்துவமனையிலுள்ள RTPCR கூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு.13

பெருநகர சென்னை மாநகராட்சியில் 417 சென்னை பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில் 1,13,398 மாணவ-மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள சென்னை பள்ளிகளுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்தி கொடுத்திடும் பொருட்டு, மணலி, மாதவரம், சோழிங்கநல்லூர் பகுதியில் உள்ள சென்னை பள்ளிகளுக்கு ஏற்கனவே 4 பேருந்துகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இத்திட்டம் பெற்றோர் மற்றும் மாணவ-மாணவியர்களிடையே அமோக வரவேற்பு பெற்றுள்ளதால், இத்திட்டத்தை மேலும் விரிவுப்படுத்தி மாணவர்களைப் பள்ளிக்கு அழைத்து

வரவும், கல்விச் சுற்றுலா அழைத்து செல்லவும் கூடுதலாக 11 பேருந்துகள் இயந்திரப் பொறியியல் துறையின் மூலம் கொள்முதல் செய்வதற்கு ரூ. 4 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

அறிவிப்பு. 32

பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் பயோ மைனிங் மூலம் மீட்டெடுக்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட காற்றுப்புகும் வகையில் பதனம் செய்யும் உரம் தயாரிக்கும் நிலையத்தை 20 ஏக்கர் பரப்பளவில் (Windrow Compost Plant) பொது-தனியார் பங்களிப்பு (PPP) நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்துள்ளமைக்காக மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர் மற்றும் ஆணையர் ஆகியோர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு. 27

பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறையின் கீழ்வரும் மகப்பேறு மருத்துவமனைகள், அவசர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் அறுவை சிகிச்சை அரங்குகளில் அனுமதிக்கப்படும் குழந்தைகளின் இரத்தத்தில் உள்ள ஆக்ஸிஜன் அளவையும், இதயத் துடிப்பையும் (Pulse Rate,Blood Pressure,Heart Rate, SPO2) அளவிட பயன்படும் Fetal Pulse Oximeter கருவியின் மூலம் நுரையீரல் நோய்கள், இதய நோய்கள் மற்றும் ஆக்ஸிஜன் அளவு குறைவாக உள்ள குழந்தைகளின் உடல் நிலையினை தொடர்ந்து கண்காணிக்கவும் Fetal Pulse Oximeter கருவிகள் அவசியமாக உள்ளதால், 16 நகர்ப்புற சமுதாய நலமையங்கள் (UCHC) மற்றும் மூன்று 24 மணிநேர மகப்பேறு மருத்துவமனைகள் (EOC) ஆக மொத்தம் 19 மருத்துவமனைகளுக்கும் தலா ஒரு கருவி வீதம் 19 எண்ணிக்கையில் Fetal Pulse Oximeter - High End with detachable hand held front panel, கருவிகள் தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் (TNMSC) மூலமாக ரூ.23 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

அறிவிப்பு.51

பேருந்து பணிமனைகளின் சேவை தரத்தை மேம்படுத்தவும், வணிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் பொருளாதார ஆற்றலை வெளிக்கொணரவும், பொதுப்போக்குவரத்து உள்கட்டமைப்பை நவீன மயமாக்கவும், பொது நிதி மீதான சுமையைக் குறைக்கவும், பொதுமக்களின் அதிக பயன்பாட்டில் உள்ள ஜார்ஜ்டவுன் (மண்டலம்-4), கத்திவாக்கம் (மண்டலம்-1), துரைப்பாக்கம், பள்ளிக்கரணை (மண்டலம்-15), இராமாபுரம், ஸ்ரீ ராம் நகர் (மண்டலம்-11), நங்கநல்லூர் (மண்டலம்-12), என்.ஜி.ஓ காலனி ஆதம்பாக்கம் (மண்டலம்-13) மற்றும் மடிப்பாக்கம் (மண்டலம்-14) ஆகிய முக்கிய இடங்களில் உள்ள பேருந்து பணிமனைகள் பொது-தனியார் கூட்டாண்மை (PPP) / வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் (EPC) முறையில் ரூ.110 கோடி மதிப்பீட்டில் மறுவடிவமைப்பு செய்யப்படும் என்கிற அறிவிப்பினை நான் பாராட்டுகிறேன்.

அறிவிப்பு.61

சுற்றுலாவை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மெரினா கடற்கரையை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்காக கலங்கரை விளக்கம் (Light House) முதல் அண்ணா நினைவிடம் வரை கயிறு வழித்தட (Rope way car) வசதி அறிமுகப்படுத்த திட்டமிட்டப்பட்டுள்ளது. இந்த கயிறு வழித்தடங்கள், நகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்வதுடன், சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்துகின்றன. இந்த கயிறு வழித்தடங்கள் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் அழகை ரசிக்க வைக்கும் பரந்த காட்சிகளை (Panoramic views) வழங்குவதோடு மறக்க முடியாத அனுபவங்களையும் உருவாக்கும் வகையில் பொது-தனியார் பங்களிப்பு (PPP) முறையில் கயிறு வழித்தடங்கள் (Rope way car) அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

மத்திய அரசு நிதி வழங்காது நெருக்கடி ஏற்படுத்தினாலும், மக்கள் நலனை முன்னிறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல திட்டங்களை வகுத்து அவற்றை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றார். அதனை பின்பற்றி பெருநகர சென்னை மாநகராட்சியும் மக்களின் நலனை காக்கும் பொருட்டு ஜப்பான் தேசத்திற்கு சென்று நிதி திரட்டி, பல்வேறு திட்டங்களை வகுத்து

செயல்படுத்தி வருவதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன்,நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. ச. நந்தினி அவர்கள், வார்டு எண்.15.

திருமதி. ச. நந்தினி

மாண்புமிகு மேயர் அவர்களே, மகளிர் உரிமை தொகையாக ரூ. 5000/- வழங்கி, இனி வரும் கோடைக்காலங்களிலும் ரூ.2000/- வழங்கப்படும் என மகளிருக்கு சிறப்பு திட்டத்தை அறிமுகப்படுத்திய மாண்புமிகு கழக தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இத்தருணத்தில் என் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களை வழிநடத்தி சென்று கொண்டிருக்கின்ற எங்கள் மாவட்ட செயலாளர் மாண்புமிகு மாதரவரம் திரு.எஸ்.சுதர்சனம் அவர்களுக்கும், மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும், நிலைக்குழு தலைவர்களுக்கும், நியமனக்குழு உறுப்பினர்களுக்கும், வார்டுகுழு தலைவர்களுக்கும், மாமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்து துறை அதிகாரிகளுக்கும், ஊடகத்துறை மற்றும் பத்திரிகை துறையினை சார்ந்த நண்பர்களுக்கும் எனது இனிய காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

2026-2027-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கல்வி, பூங்கா மற்றும் சுகாதாரத்துறை என பல்வேறு துறைகளில் பல்வேறு சிறப்பு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பாக,

அறிவிப்பு.13

பெருநகர சென்னை மாநகராட்சியில் 417 சென்னை பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில் 1,13,398 மாணவ-மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள சென்னை பள்ளிகளுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்தி கொடுத்திடும் பொருட்டு, மணலி, மாதவரம், சோழிங்கநல்லூர் பகுதியில் உள்ள சென்னை பள்ளிகளுக்கு

ஏற்கனவே 4 பேருந்துகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இத்திட்டம் பெற்றோர் மற்றும் மாணவ-மாணவியர்களிடையே அமோக வரவேற்பு பெற்றுள்ளதால், இத்திட்டத்தை மேலும் விரிவுப்படுத்தி மாணவர்களைப் பள்ளிக்கு அழைத்து வரவும், கல்விச் சுற்றுலா அழைத்து செல்லவும் கூடுதலாக 11 பேருந்துகள் இயந்திரப் பொறியியல் துறையின் மூலம் கொள்முதல் செய்வதற்கு ரூ. 4.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்துள்ளமைக்காக எனது நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு.15

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 19 மாநகர சமுதாய நல மையங்கள், 200 மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் 1 தொற்று நோய் மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த 360 சுகாதார மையங்களில் புற்று நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பெண்களை பெரிதும் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோய் ***HPV DNA*** என்னும் நுண்கிருமியால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால் ***HPV*** வைரஸ் மூலம் உண்டாக்கும் கருப்பை வாய் புற்றுநோயை கண்டறியும் விதமாக 360 சுகாதார மையங்களிலும் இந்த பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மாதிரிகளை தொற்று நோய் மருத்துவமனையிலுள்ள ***RTPCR*** கூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்துள்ளமைக்கு என்னுடைய நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிவிப்பு.42

2026-27 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 955 பூங்காக்களில் முதற்கட்டமாக 200 பூங்காக்கள் அறிவியல் பூர்வமாக பொலிவேற்றம் செய்யப்படும். அதற்காக, உரிய தாவர அமைப்புகள், பொலிவான வருகையாளர் ஓய்விடங்கள் மற்றும் இருக்கைகள், மரங்களில் பறவைகள் வாழ்விட அமைப்புகள், இயற்கை சூழலை மக்கள் பூங்காக்களில் உணரும் வண்ணம் மரங்களில் செயற்கையான பறவைகளின் ஒலிகள் வழங்கும் அமைப்புகள் அமைத்தல், சிறார்களைக் கவரும் வண்ணம் சிறுகுளங்கள் மற்றும்

நீர்ப்பறவைகள் போன்ற அமைப்புகள், தற்காலத்திற்கேற்றவாறு நடைபாதைகள் மற்றும் ஒளிவிளக்குகள் போன்ற அமைப்புகளை ஏற்படுத்த ரூ.60 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்துள்ளமைக்கு என்னுடைய நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு.45

2026-27ஆம் நிதியாண்டில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில் மக்கள் அதிகம் கூடும் பூங்காக்களான

1. மண்டலம்-2,கோட்டம்-15, மணலி நியு டவுன், Block No.26, CPS-10 பூங்கா.
2. மண்டலம்-5, கோட்டம்-53, தங்கசாலை பூங்கா.
3. மண்டலம்-7, கோட்டம்-83, மதனகுப்பம் பூங்கா.
4. மண்டலம்-8, கோட்டம்-103, டாக்டர். விஸ்வேஸ்வரைய்யா டவர் பூங்கா.
5. மண்டலம்-13, கோட்டம்-123, ராஜிவ் காந்தி சாலை பூங்கா

ஆகிய 5 பூங்காக்களில், சிறப்பு குழந்தைகளுக்கான உபகரணங்கள் உள்ளடக்கிய (Inclusive Parks for Special Children) சிறப்பு அம்சங்கள் கொண்ட பூங்காக்களாக ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளமைக்காக என்னுடைய நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு.61

சுற்றுலாவை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மெரினா கடற்கரையை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்காக கலங்கரை விளக்கம் (Light House) முதல் அண்ணா நினைவிடம் வரை கயிறு வழித்தட (Rope way car) வசதி அறிமுகப்படுத்த திட்டமிட்டப்பட்டுள்ளது. இந்த கயிறு வழித்தடங்கள், நகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்வதுடன், சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்துகின்றன. இந்த கயிறு வழித்தடங்கள் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் அழகை ரசிக்க வைக்கும் பரந்த காட்சிகளை (Panoramic views) வழங்குவதோடு மறக்க முடியாத அனுபவங்களையும் உருவாக்கும் வகையில் பொது-தனியார் பங்களிப்பு (PPP) முறையில் கயிறு வழித்தடங்கள் (Rope way car) அமைக்கப்படும் என்று

அறிவித்துள்ளமைக்கு எனது வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்களின் சிறப்பு மேம்பாட்டு நிதியில் 15வது வார்டில் மகளிர் உடற்பயிற்சி கூடம் மற்றும் சமுதாய நலகூடம் அமைத்து கொடுத்தமைக்காக அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்தில் எனக்கு பேச வாய்ப்பளித்த ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.எல். நவீன் அவர்கள், வார்டு எண்.55.

திரு.எல். நவீன்

வரலாற்று சிறப்புமிக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் 2026-2027-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாத உரையில் எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும், துறைமுகம் சட்டமன்ற தொகுதியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும், இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சரும் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் தலைவர் திரு.பி.கே. சேகர்பாபு அவர்களுக்கும், ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும், நிலைக்குழு தலைவர்களுக்கும், வார்டுகுழு தலைவர்களுக்கும், சக மாமன்ற உறுப்பினர்களுக்கும், நான் சார்ந்து இருக்கின்ற மனித நேய மக்கள் கட்சி தலைவர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களின் சார்பாகவும், மாமன்ற உறுப்பினர் என்கிற முறையில் நான் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். தமிழ்நாட்டிலே மிக சிறப்பானதொரு ஆட்சியை நடத்தி கொண்டிருக்கின்ற நமது திராவிட மாடல் அரசின் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சிறுபான்மை முஸ்லீம்கள் உள்ளிட்ட அனைத்து சமுதாய மக்களுக்காகவும் எல்லோருக்கும் எல்லாம் என்கிற அடிப்படையில் பல்வேறு திட்டங்களை தீட்டி ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கடந்த 17.2.2026 அன்று தமிழ்நாட்டினுடைய இந்த ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து கடந்த 18.2.2026 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியின் 2026-2027-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மாண்புமிகு மேயர் அவர்களால் இந்த மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தியாவில் இருக்கக்கூடிய அத்துனை மாநகராட்சிகளுக்கும் முன் உதாரணமாய் திகழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு மாமன்றமாய் நமது பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றம் திகழ்ந்து கெண்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

இந்த நிதிநிலை அறிக்கை என்பது மற்ற மாநகராட்சி மன்றங்களுக்கு எல்லாம் முன்னுதாரணமான ஒரு நிதிநிலை அறிக்கையாக இருக்கும் என்பதில் எவருக்கும் மாற்று கருத்து இருக்க முடியாது.

அந்த வகையில் பல சிறப்பு வருவாய் திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் முன்னெடுத்து இருப்பதை மனிதநேய மக்கள் கட்சியின் மாமன்ற உறுப்பினர் என்கிற அடிப்படையில் மனதார வரவேற்றி பாராட்டி எனது நன்றியினை மீண்டும் தெரிவித்து கொள்கிறேன்.

மேலும், 55வது வார்டு மக்களின் அடிப்படை தேவைகள் குறித்து நான் கோரிக்கை வைத்த பொழுதெல்லாம் அதற்கு உடனடியாக செவி சாய்த்து நிறைவேற்றி கொடுத்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களுக்கும், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதிமாறன் அவர்களுக்கும் இந்த நேரத்திலே 55-வது வார்டின் மாமன்ற உறுப்பினர் என்கிற அடிப்படையில் எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையின் முகவரியாக முதல் அட்டவணையாக மாநகராட்சி பள்ளிக்கும், கல்விக்கும் இந்த அரசும், பெருநகர சென்னை மாநகராட்சியும் முதல் இடம் அளித்திருப்பது பாராட்டிற்குரியது.

மேலும், எதிர்கால மாணவ, மாணவியர்களின் அடுத்த தலைமுறைக்கான திட்டங்களை வகுப்பதில் இந்த அரசும் மாநகராட்சியும் காட்டுகின்ற அக்கறை என்பது முன்மாதிரியான ஒரு மாநகராட்சி நிதிநிலை அறிக்கையாக அமைந்திருப்பது பாராட்டிற்குரியது.

அறிவிப்பு.11

2025-26 கல்வியாண்டில் முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 35 மேல்நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்ட 10 உளவியல் ஆலோசகர்கள் இன்றைய சூழலில் வளர் இளம் பருவ மாணவ-மாணவியர்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளுக்கு நல்ல முறையில் உளவியல் ஆலோசனை வழங்கி வருகிறார்கள். அதை தொடர்ந்து இரண்டாம் கட்டமாக 2026-27ஆம் கல்வியாண்டில் 46 சென்னை உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவியர்களுக்கு தகுந்த உளவியல் ஆலோசனை வழங்கி படிப்பில் கவனம் செலுத்துவதற்கும் மாநகராட்சியில் உள்ள பள்ளிகள் அதிக தேர்ச்சி சதவீதம் பெறுவதற்கு ஏதுவாக 17 உளவியல் ஆலோசகர்களுக்கு தொகுப்பூதிய அடிப்படையில் 10 மாதங்களுக்கு ரூ.59.50 இலட்சம் செலவினத்தில் நியமிக்கப்படுவார்கள். இந்த உளவியல் ஆலோசகர்களின் நியமனங்கள் பாலின ஆய்வகத்தின் (Gender Lab) மேற்பார்வையின் மூலம் செயல்படுத்தப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு.15

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 19 மாநகர சமுதாய நல மையங்கள், 200 மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் 1 தொற்று நோய் மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த 360 சுகாதார மையங்களில் புற்று நோய்க்கான பரிசோதனை

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பெண்களை பெரிதும் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோய் ***HPV DNA*** என்னும் நுண்கிருமியால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால் ***HPV*** வைரஸ் மூலம் உண்டாக்கும் கருப்பை வாய் புற்றுநோயை கண்டறியும் விதமாக *360* சுகாதார மையங்களிலும் இந்த பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மாதிரிகளை தொற்று நோய் மருத்துவமனையிலுள்ள ***RTPCR*** கூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.*1* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பினை வரவேற்கிறேன்.

அறிவிப்பு.*19*

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட *1* முதல் *15* வரை உள்ள மருத்துவ மண்டலங்களில் *7* நடமாடும் ஊடுகதிர் *(X-Ray)* வசதியுள்ள காசநோய் பரிசோதனை அலகுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாநகர காச நோய் மருத்துவமனைகளிலும், தொற்று நோய் மருத்துவமனை மற்றும் மாவட்ட காச நோய் மருத்துவமனையில் ஊடுகதிர் *(X-Ray)* சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த மருத்துவமனைகளில் ஊடுகதிர் *(X-Ray)* இயந்திரத்தின் வழியாக எடுக்கப்படும் ஊடுகதிர்களை செயற்கை நுண்ணறிவு *(AI)* வழியாக தன்னிச்சையாக ஆய்வு செய்து ஆய்வறிக்கை அளித்திட செயற்கை நுண்ணறிவு *(AI)* மென்பொருள் மற்றும் மென்பொருளை செயல்படுத்துவதற்கான உபகரணங்கள் ரூ.*1* கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதை வரவேற்று பாராட்டுகிறேன்.

அறிவிப்பு.*28*

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் *24* மணிநேரம் செயல்பட்டுவரும் சமுதாய மகப்பேறு மருத்துவமனைகள், பேறுகால பின்

கவனிப்பு மையம் மற்றும் அறுவை சிகிச்சை பின் கவனிப்பு மையங்களான திருவொற்றியூர், இராயபுரம், பாடி, செனாய்நகர் மற்றும் அடையாறு ஆகிய 5 இடங்களில் உள்ள மையங்களுக்கு வார்டுக்கு 2 வீதம் 10 எண்ணிக்கையிலான மையப்படுத்தப்பட்ட குளிர்சாதன (Centralized AC) வசதி ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று அறிவித்திருப்பது பாராட்டிற்குரியது.

அறிவிப்பு.69

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் 6 இடங்களில் வீடற்றோர்கள் தங்குவதற்கான அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய இரவு காப்பகம் (தரைதளம் மற்றும் முதல் தளம்) மொத்தம் ரூ.9 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என்கிற அறிவிப்பு மிகவும் சிறப்பிற்குரியது.

அறிவிப்பு.61

சுற்றுலாவை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மெரினா கடற்கரையை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்காக கலங்கரை விளக்கம் (Light House) முதல் அண்ணா நினைவிடம் வரை கயிறு வழித்தட (Rope way car) வசதி அறிமுகப்படுத்த திட்டமிட்டப்பட்டுள்ளது. இந்த கயிறு வழித்தடங்கள், நகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்வதுடன், சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்துகின்றன. இந்த கயிறு வழித்தடங்கள் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் அழகை ரசிக்க வைக்கும் பரந்த காட்சிகளை (Panoramic views) வழங்குவதோடு மறக்க முடியாத அனுபவங்களையும் உருவாக்கும் வகையில் பொது-தனியார் பங்களிப்பு (PPP) முறையில் கயிறு வழித்தடங்கள் (Rope way car) அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு இந்த பட்ஜெட்டின் கூடுதல் சிறப்பு.

அறிவிப்பு.87

கையடக்கக் கருவி (HHD/POS) மூலம் சொத்துவரி வசூல் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்கருவியில் சம்பந்தப்பட்ட சொத்து உரிமையாளர்கள் செலுத்த வேண்டிய தொகைக்கு ஏற்ப QR Code ஏற்படுத்தப்படும். இதன் மூலம் வரி வசூல் பணி மேற்கொள்வது மற்றும் சொத்து

உரிமையாளர்களுக்கு சொத்துவரி செலுத்துவது மிகவும் எளிதாகும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

55-ஆவது வார்டில் பழுதடைந்த சாலைகளை சீரமைத்து மேம்படுத்துவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அத்துடன், அந்த வார்டில் மிக முக்கியமான பிரச்சினையாக உள்ள கழிவுநீர் மற்றும் குடிநீர் தொடர்பான சிக்கல்களை விரைவில் சரி செய்து, அவற்றிற்கான பணிகளை துவக்க ஆவன செய்ய வேண்டும்.

தற்போது 2.0 நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்ற நிலையில், *Internet / TV Cable* நிறுவனங்கள் தெருக்களில் கேபிள்களை அறுத்து போட்டு விட்டு சென்று விடுவதினால், சாலைகள் மிக மோசமான நிலையை அடைந்துள்ளன. இது தொடர்பான அறிவிப்பு இந்த நிதிநிலை அறிக்கையில் வெளியாகுமென எதிர்பார்த்தேன். ஆனால், இதற்கான அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை. எனவே, இதனை சரி செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டு கொண்டு, இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொண்டு, மனிதநேயக் கட்சி சார்பாக இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

திரு. த. விஸ்வநாதன், தலைவர், நிலைக்குழு (கல்வி, பூங்கா மற்றும் விளையாட்டு திடல்) **/ மாமன்ற உறுப்பினர், வார்டு எண். 181.**

திரு. த. விஸ்வநாதன்

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோர் அடித்தட்டு மக்களின் உயர்விற்கும், முன்னேற்றத்திற்கும் பெரும் முயற்சிகளை செய்தவர்கள் இன்று அவர்களின் வழியில் அவர்களுடைய மொத்த உருவமாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் மகனாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மிக சிறந்த முறையில் பணியாற்றி கொண்டிருக்கிறார். எல்லோருக்கும் எல்லாம் என்கிற அடிப்படையில் ஒரு கோடியே 31 இலட்சம் மகளிருக்கு மகளிர் உரிமை தொகையை வழங்கி, அதிலும் குறிப்பாக கோடைக்கால உதவி தொகையாக ரூ.2000/- வழங்கி, அதையும் இனி வருங்காலங்களிலும் தொடர்ந்து

வழங்குவேன் என்று அறிவித்திருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்கி, மேலும் அவருக்கு துணையாக தமிழ்நாட்டின் மாண்புமிகு துணை முதலமைச்சரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சருமான திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு துறையை இந்தியாவிலே இருக்கின்ற விளையாட்டு துறைக்கெல்லாம் முன்னுதாரணமாக மாற்றியுள்ளார். தமிழ்நாட்டில் உள்ள விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் வசதி இல்லாதவர்களாக இருக்கின்ற காரணத்தினால், விளையாட்டில் பிரகாசிக்க முடியவில்லை. எனவே, அவர்களுக்கான உதவிகளை வழங்கி, இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் விளையாட்டு துறையில் முதல் மாநிலம் என சிறப்பாக வழிநடத்தி கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மருத்துவ துறையிலே ஏன் இந்தியாவிலேயே குறிப்பாக உலக நாடுகளில் கூட மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால், அதற்கான முன் அனுமதி பெற வேண்டும். ஒரு வாரத்திற்கு முன்பாக, 10 நாட்களுக்கு முன்பாக பதிவு செய்தால் தான் மருத்துவம் கிடைக்கும் என்கிற சூழ்நிலையில் இன்றைக்கு மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் – 48 என்கிற அடிப்படையில் மிக சிறந்த முறையில் மருத்துவத்தில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாட்டை திகழ வைத்து கொண்டிருக்கக்கூடிய மாவட்ட கழக செயலாளரும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சருமான மாரத்தான் வீரர் திரு.மா. சுப்பிரமணியன் அவர்களுக்கும், உள்ளாட்சி துறையை மிக சிறப்பாக வழி நடத்தி கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி துறை அமைச்சர் திரு.கே.என். நேரு அவர்களுக்கும், பெருநகர சென்னை மாநகராட்சியின் மேயராக பதவி ஏற்கின்ற போது பல பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களில் இவர் எப்படி இந்தப் பெருநகர சென்னை மாநகராட்சியை வழி நடத்த போகிறார், இவர் சிறு வயதுடையவராக இருக்கிறார், இவரால் முடியுமா என்றெல்லாம் விமர்சனங்கள் எழுந்தது. அதையெல்லாம் முறியடித்து மிக சிறப்பாக வழிநடத்தி வருகின்ற மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருக்கு துணையாக, மாண்புமிகு துணை முதலமைச்சர் எப்படி பணியாற்றுகிறாரோ அதே போன்று

மாண்புமிகு மேயர் அவர்களுக்கு துணையாக பணியாற்றி வருகின்ற மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், நான் 2014 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 185-வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினராக பதவி ஏற்ற தருணத்தில், அன்றிலிருந்து இன்று வரை இருந்த ஆணையர்கள் எனக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்கள். தற்பொழுதுள்ள ஆணையர் மிக சிறப்பாக பணியாற்றி வருகிறார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருக்கு தலைமை செயலாளர், முதன்மை செயலாளர்கள், அனைத்து துறை அதிகாரிகள் அவருக்கு எப்படி துணையாக இருக்கிறார்களோ அதே போன்று இன்றைக்கு ஆணையருக்கு துணையாக இணை ஆணையர்கள் / துணை ஆணையர்கள், வட்டார துணை ஆணையர்கள், மண்டல அலுவலர்கள், செயற் பொறியாளர்கள் என சிறப்பாக பணியாற்றி கொண்டிருக்கிறார்கள். இதற்காக நான் அவர்களுக்கும் இத்தருணத்தில் மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

பேசுவதற்கு வாய்ப்பு கேட்டாலும் இல்லை என்று சொல்லி மீண்டும் பேச வாய்ப்பு வழங்குகின்ற ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும், சக நிலைக்குழு தலைவர்கள், நியமனக்குழு உறுப்பினர்கள், வார்டுகுழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு இந்தத் தருணத்தில் எனது நன்றி கலந்த வணக்கத்தினை தெரிவித்து கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

2011-2016-ஆம் ஆண்டு அன்றைய காலகட்டத்தில் நாங்கள் எதிர்கட்சியில் 24 மாமன்ற உறுப்பினர்கள் இருந்தோம். அதில் நானும் ஒரு நபர். அன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்களை எல்லாம் அறிவாலயத்திற்கு அழைத்து யார் ஆளுங்கட்சி தலைவர், துணை தலைவர், செயலாளர், பொருளாளர், கொறடா என்று நியமிக்கின்ற போது ஒன்றை சொன்னார்கள். 2011-2016 அன்று சட்டமன்றத்தில் 23 சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். 200 மாமன்ற உறுப்பினர்களில் 24 மாமன்ற உறுப்பினர்கள் திராவிட முன்னேற்ற கழகத்தினை சார்ந்தவர்கள். அன்றைக்கு அறிவாலயத்தில் நம் தலைவர் அவர்கள் 200 மாமன்ற உறுப்பினர்களில் 24 திராவிட முன்னேற்ற கழக மாமன்ற உறுப்பினர்களாக வெற்றி பெற்று வந்திருக்கிறீர்கள் என்றால் இது கட்சியினால் மட்டும் கிடையாது.

உங்களுடைய தனிப்பட்ட உழைப்பினால் தான் இன்றைக்கு மாமன்ற உறுப்பினர்களாக வெற்றி பெற்று வந்திருக்கிறீர்கள் என்று தெரிவித்தார்.

இதை சொல்வதற்கு என்ன காரணம் என்று சொன்னால், 24 மாமன்ற உறுப்பினர்களுக்கும் அன்றைக்கு இருந்த மேயர், துணை மேயர் ஆகியோர் எங்களுக்கு மாமன்றத்தில் பேசுவதற்கு அனுமதி வழங்கவில்லை. நாங்கள் ஒவ்வொரு கூட்டத்திற்கும் வருவோம். பேச வாய்ப்பில்லை என்று சொல்லி வெளிநடப்பு செய்து பத்திரிகைக்கு பேட்டி கொடுப்போம். இன்றைக்கு சிறப்பாக பணியாற்று வருகின்ற மாண்புமிகு மேயர் மற்றும் மதிப்பிற்குரிய துணை மேயர் ஆகியோர் அ.இ.அ.தி.மு.க கட்சியை சார்ந்த 15 மாமன்ற உறுப்பினர்களுக்கும் மாமன்றத்தில் தொடர்ந்து பேச வாய்ப்பு தந்து கொண்டிருக்கிறீர்கள். இது தான் திராவிட மாடல் ஆட்சி என்பதை தெரிவித்து கொள்ள விரும்புகிறேன். **(கைதட்டல்)**

எல்லோருக்கும் எல்லாம் என்கிற அடிப்படையில் இந்த மாநகராட்சி அஇ.அ.தி.மு.க கட்சியை சார்ந்த 15 உறுப்பினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களின் பிரச்சனைகளை மாமன்றத்தில் எடுத்துரைப்பதற்காக மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்புகள் வழங்கப்படுகிறது. கடந்த மன்றக் கூட்டத்தில் பாரதிய ஜனதா கட்சியை சார்ந்த திருமதி. உமா ஆனந்தன் அவர்கள் உரையாற்றியபோது நம்முடைய ஆட்சியை வாழ்த்தினார்கள். மாநகராட்சியை வாழ்த்தினார்கள். நன்றி சொன்னார்கள் என்று சொன்னால் அவ்வளவு சிறப்பாக நடைபெறுகிற இந்த மாநகராட்சியில் நான் பணியாற்றுகிறேன் என்றால் நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன். **(அவையில் பாரதிய ஜனதா கட்சி மாமன்ற உறுப்பினர் திருமதி.உமா ஆனந்தன் அவர்கள் ஏதோ பேசுதல்) (அவையில் சலசலப்பு)** ஆட்சியை பாராட்டினாலும், ஆட்சியை நடத்துகிற முதலமைச்சரை பாராட்டினாலும் ஒன்று தான். மாநகராட்சியை பாராட்டினாலும், மாநகராட்சி மேயரை பாராட்டினாலும் ஒன்று தான்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் நல்லாட்சியில், அனைத்து தரப்பினருக்கும் நன்மையளிக்கும் அரசாக இந்த அரசு செயல்பட்டு வருகின்றது. எல்லோருக்கும் எல்லாம் என்கிற வகையில் செயல்பட்டு வருகிறது, அதன்படி,

நமது தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சியின் மேயராக பதவி வகித்தபோது இந்தியாவிலேயே சிறந்த திட்டமாக சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் மழலையர்பள்ளிகளை தொடங்கினார். மேலும், அப்பள்ளிகளுக்கு மழலையர்பள்ளி ஆசிரியர்கள், மழலையர்பள்ளி ஆயாக்கள் ஆகியோர் பணியமர்த்தப்பட்டனர். அவ்வாறு பணியமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி உட்பட இதரபடிகள் வழங்குவதற்கும் மற்றும் பணி விதிகள் ஏற்படுத்துவதற்கும் இந்நிலைக்குழுவில் நான் உட்பட அனைத்து நிலைக்குழு உறுப்பினர்களும் கோரிக்கை வைத்ததை தொடர்ந்தும் மற்றும் மாமன்றத்தில் நான் நிலைக்குழு சார்பில் கோரிக்கை வைத்ததை தொடர்ந்தும் மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, ஆணையர் அவர்கள் அரசிற்கு கருத்துரு அனுப்ப ஆணையிட்டார்கள்.

அதன்படி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கடிதம் எண். *887/மாந.3(2)/2025-1*, நாள். *30.01.2026*ன்படி, மழலைப்பள்ளிகளில் பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு அரசாணை (நிலை) எண். *245*, நிதி (ஊதிய பிரிவு)துறை, நாள். *10.06.2009*ன்படி காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில், அப்பணியாளர்களுக்கு வழங்கப்படும் இதர படிகள் மற்றும் பிடித்தங்கள் *(CPS)* அனைத்துமே அவர்களுக்கு பொருந்தும் என்ற நிலைப்பாட்டினை அறிவித்துள்ளதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) சார்பிலும் மாமன்ற உறுப்பினர்கள் சார்பிலும், மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர், இணை ஆணையர் (கல்வி), கல்வி அலுவலர், உதவி கல்வி அலுவலர்கள் ஆகியோருக்கு கல்வி நிலைக்குழு சார்பில் நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்.

தமிழ்நாடு அரசின் *2026-2027* நிதிநிலை அறிக்கையில் கல்வித்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் *38* மாவட்டங்களிலும் *மாதிரி பள்ளிகள்* செயல்பட்டு வருகின்றன. அரசு பள்ளி மாணவர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச வாய்ப்புகளை உருவாக்குதல், அவற்றை அணுக தேவையான கல்வி மற்றும் கலை ஆளுமை திறன் பயிற்சியை வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம். இதன் மூலமாக *4* ஆண்டுகளில் மட்டும் *2,358*

மாணவர்கள் 93 முன்னணி கல்வி நிறுவனங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர். 17 மாணவர்கள் ஜப்பான், தைவான், மலேசியா உள்ளிட்ட நாடுகளில் பயின்று வருகின்றனர். இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பள்ளி கல்வி துறைக்கு சென்ற ஆண்டு ரூ. 46767 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் தற்போது 2026-27 ஆம் ஆண்டில் ரூ.48,534 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே போல் உயர்கல்வி துறைக்கு ரூ.8,505 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 6 லட்சம் மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கப்பட்டுள்ளது. அதே போல் உயர் கல்வியில் ஆர்வம் காட்டும் வகையில் மாணவர்களுக்கு உதவி தொகை அளிக்கப்பட்டு வருகிறது,. புதுமைப் பெண் திட்டத்தில் 6.95 லட்சம் மாணவிகளும், தமிழ் புதல்வன் திட்டங்களில் 5.40 லட்சம் மாணவர்களும் என ஒட்டுமொத்தமாக 12 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் திராவிட மாடல் அரசின் கீழ் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திட்டத்தால் பயனடைந்துள்ளனர். இதற்காக நன்றியினை தெரிவித்து கொள்கிறோம்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2022-2023 முதல் 2026-2027 இந்நாள்வரை மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையில் மொத்தம் 43 மாமன்ற கூட்டங்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

அவ்வாறு நடைபெற்ற மாமன்ற கூட்டங்களில் 2023-2024 முதல் 2026-2027 தற்போது வரை மொத்தம் 255 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

அவ்வாறு நடைபெற்ற மாமன்ற கூட்டங்களில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் கல்வித்துறைக்கு மொத்தம் 89 அறிவிப்புகள் இடம் பெற்றுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

கல்வித் துறைக்கு மட்டும் இந்த ஆண்டு ரூ.101.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்தமைக்காக நிலைக்குழு (கல்வி) சார்பாக நன்றியை தெரிவித்து கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பினை அளித்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும் மீண்டும் நன்றி சொல்லி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. ந. பவித்ரா அவர்கள், வார்டு எண். *43*.

திருமதி. ந. பவித்ரா

எதிரிகளின் சதியை முறியடித்து கடும் நிதி சுமையிலும், மகளிர் நலன் கருதி மகளிருக்கான உரிமை தொகை ரூ.*5,000/-* ரொக்கமாக வழங்கி இன்ப அதிர்ச்சி அளித்த எங்கள் தலைவர் தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியை இம்மாமன்றம் வாயிலாக சமர்ப்பித்து கொள்கிறேன்.

எங்கள் அண்ணன் ஓய்வு அறியா சூரியன் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களை வணங்கியும், மாண்புமிகு நகரட்சி நிர்வாக துறை அமைச்சர் அண்ணன் திரு. *K.N.* நேரு அவர்களை வணங்கியும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் அண்ணன் திரு. *P.K.* சேகர்பாபு அவர்களை வணங்கியும், மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர், ஆளுங்கட்சி தலைவர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், சக மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள், பத்திரிகை மற்றும் ஊடக துறையினை சார்ந்த நண்பர்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

2026 - 2027 ஆம் ஆண்டிற்கான பெருநகர சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிக்கையில் குழந்தைகளின் கல்வி நலன், மகளிரின் உடல் நலனுக்காகவும், பொதுமக்களின் நலன் சார்ந்த பணிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது மிகவும் வரவேற்கும் வகையில் அமைந்துள்ளது.

அறிவிப்பு *89*: பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள *5, 8, 9, 10, 11, 12* மற்றும் *15* ஆகிய மண்டலங்களில் பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் *10* எண்ணிக்கையிலான சமுதாய நலக்கூடங்களை ரூ.*20* கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் நவீனமயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியதாகும்.

மண்டலம் - *4*இல் அமைந்துள்ள *R.K.* நகர் சமுதாய நல கூடம் பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டிருந்தாலும், தற்போது தான் இவை

பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. 300 இருக்கைகளுடன் கூடிய மூன்று அடுக்குமாடி கட்டிடமாக இது உள்ளது. அதில் உள்ள நிகழ்ச்சி மண்டபத்தில் Air Conditioner பொருத்த வேண்டும் என்பது மக்களின் கோரிக்கையாகும். எனவே, இந்தக் கோரிக்கையினை நிறைவேற்றி தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

43-ஆவது வார்டில் தண்டையார்பேட்டையில் உள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் செவிலியர்கள் படிப்பிற்காக தங்கும் விடுதி கட்டுவதற்கு சுமார் 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மேலும், இம்மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த மரியாதைக்குரிய ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய 15வது மண்டல வார்டுகுழு தலைவர் திரு. எ. மதியழகன் அவர்கள் / மாமன்ற உறுப்பினர், வார்டு எண். 192.

திரு.எ. மதியழகன்

மாண்புமிகு மேயர் அவர்களே,

“எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு”

எண்ணும் எழுத்தும் எனப்படும் அறிவு கண்களை பெற்றவர்களே, உயிர் வாழ்வோர் என கருதப்படுவார்கள். ஐயன் வள்ளுவர் அவர்களின் குறளுக்கு ஏற்ப ஆட்சி நடத்தி வருகின்ற திராவிட மாடல் நாயகர் கழக தலைவர் எங்கள் உயிரினும் மேலான அன்பு தலைவர் தளபதி அவர்கள் வழியிலே செயல்பட்டு கொண்டிருக்கின்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் மாண்புமிகு மேயர் அவர்கள் தாக்கல் செய்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் நம்முடைய பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பள்ளிகளுக்கு அதிக திட்டங்கள் தீட்டப்பட்டு அவை அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்துள்ளமைக்காக மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய

ஆணையர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் என்னுடைய நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *6* : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட *1* முதல் *15* மண்டலங்களில் உள்ள சென்னை பள்ளிகளில் *6* முதல் *9*-ஆம் வகுப்பில் பயிலும் *33,865* மாணவ-மாணவியர்களின் உடல் நலத்தினை பேணும் வகையில் யோகா பயிற்சி அளிக்கப்படும். மேலும், *7, 8* மற்றும் *9*ஆம் வகுப்பில் பயிலும் *25,526* மாணவ-மாணவியர்களுக்கு உடல் ஆரோக்கியம், தன்னம்பிக்கை மற்றும் துணிச்சலை வளர்க்கும் வகையில் தற்காப்புக்கலைப் பயிற்சி அளிக்கப்படும். யோகா பயிற்சி ரூ.*40* இலட்சம் மதிப்பீட்டிலும், தற்காப்புக்கலைப் பயிற்சி ரூ.*1.50* கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.*1.90* கோடி மதிப்பீட்டில் இந்த பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளமைக்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிவிப்பு *4*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட *1* முதல் *15* மண்டலங்களில் உள்ள அனைத்து சென்னை மேல்நிலை பள்ளிகளிலும் *12*ஆம் வகுப்பில் பயிலும் *5,314* மாணவ-மாணவியர்களின், விருப்பம் மற்றும் ஆர்வத்தின் அடிப்படையில் ஜூன் *2026* முதல் கல்வியாண்டு இறுதி வரை உயர்கல்விக்கான ஒரு வருட சிறப்பு பயிற்சிகள் ரூ.*6* கோடி மதிப்பீட்டில் மாணவ-மாணவியர்களின் எதிர்கால நலனுக்காக செய்து தரப்படும் என்று அறிவித்துள்ளமைக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *14* : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பள்ளி செல்லாத மாணவ-மாணவியர்கள், இடை நின்ற மாணவ-மாணவியர்கள் மற்றும் இடம் பெயர்ந்த மாணவ-மாணவியர்கள் ஆகியோர்களை கண்டறிந்து அனைவருக்கும் அடிப்படை கல்வியைக் கற்பிக்கும் நோக்கத்தில் வட்டாரத்திற்கு ஒரு பள்ளி என *3* பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து, அப்பள்ளியில் மாணவ-மாணவியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வகுப்பறைகளை ஒதுக்கி இணைப்புப் பாடப்பயிற்சியை *(Bridge Course)* தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களை கொண்டு நடத்தப்படும் என்ற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்களே, தமிழ்நாட்டில் உயர்கல்வி வகுப்புகளில் சேரும் மாணவ, மாணவியர்களின் ***Gross Enrolment Ratio (GER)*** 51% ஆக உள்ளது. இந்திய அளவில் இதே சதவிகிதம் 29% மட்டுமே காணப்படுகிறது. தமிழ்நாட்டில் மட்டும் உயர்கல்வி சேர்க்கை 51% என்ற நிலையை அடைந்திருப்பது, திராவிட மாடல் ஆட்சியை முன்னெடுத்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்த சிறப்பு சாதனையாகும்.

புதுமை பெண் திட்டம், **தமிழ்புதல்வன் திட்டம்**, **நான் முதல்வன் திட்டம்**, **முதலமைச்சரின் காலை உணவு திட்டம்** போன்ற மக்கள் நல திட்டங்களின் காரணமாக, தமிழ்நாட்டில் அதிகமான மாணவர்கள் உயர்கல்வியில் சேர்ந்து வருகின்றனர்.

இதனால், இந்திய அளவில் தமிழ்நாடு **முதன்மை மாநிலமாக** திகழ்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, இது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்த சாதனை என்பதை குறிப்பிடுவது எனது கடமையாகும், நன்றி, வணக்கம்.

அறிவிப்பு17: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட *1* முதல் *15* மண்டலங்களில் உள்ள மக்களை தேடி மருத்துவ திட்டம், பெண் தன்னார்வ களப்பணியாளர்களைக் கொண்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பெண் தன்னார்வலர்கள், பிசியோதெரபிஸ்ட் மற்றும் செவிலியர்கள் என *600* களப்பணியாளர்கள் களப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் களப்பணிக்கு தேவையான இரத்த அழுத்தமானி, இரத்த சர்க்கரை அளவிடும் கருவி, ஊசிகள், சுத்தமான பஞ்சுப் பெட்டி, பயன்படுத்தப்பட்ட பஞ்சுப் பெட்டி, அளவிடும் நாடா, கையுறைகள், டார்ச் லைட், மின்னணு எடை இயந்திரம், கோப்புகள் மற்றும் கோப்புறைகள் எடுத்துச் செல்ல ஒரே மாதிரியான மருத்துவம் சார்ந்த உடைமைகள் வைக்கும் பை *(Medical Kit Bag)* அளிப்பது அவசியமாகிறது. இதன் மூலம் இந்த களப் பணியாளர்கள் களப்பணிக்கு தேவையான அனைத்து பொருட்களையும் ஒரே பையில் எடுத்து சென்று சிறப்பாக செயலாற்ற இயலும் என்பதால் *600* களப்பணியாளர்களுக்கு ரூ.*50* இலட்சம் செலவில் மருந்து உபகரணங்கள் வைக்கும் பை கொள்முதல் செய்து

வழங்கப்படும் என்று அறிவித்துள்ளமைக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

இல்லம் தேடி மருத்துவம் திட்டம், ஐக்கிய நாடுகள் சபையின் *(UN)* உயரிய விருதினை பெற்றிருப்பது தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்க்கும் நிகழ்வாகும். இதற்காக எனது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்து கொள்கிறேன், நன்றி. வணக்கம்.

அறிவிப்பு *32* : பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் பயோ மைனிங் மூலம் மீட்டெடுக்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியில் *1,000* மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட காற்றுப்புகும் வகையில் பதனம் செய்யும் உரம் தயாரிக்கும் நிலையத்தை *20* ஏக்கர் பரப்பளவில் *(Windrow Compost Plant)* பொது-தனியார் பங்களிப்பு *(PPP)* நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிவிப்பு *44*: *2026-27* ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில், முதற்கட்டமாக *200* பூங்காக்களில் நிலத்தடி நீர்மட்டத்தினை அதிகரிக்கும் வகையிலும் பூங்காவிற்கு வரும் மக்களிடம் மழை நீர் சேகரிப்பை கொண்டு சேர்க்கும் விதத்திலும், ஒரு பூங்காவிற்கு ரூ.*10* இலட்சம் வீதம் ரூ.*20* கோடி மதிப்பீட்டில் மழை நீர் சேகரிப்பு *(Rain Water Harvesting)* திட்டம் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

இன்று தமிழ்நாடு, விளையாட்டு துறையில் மிகப் பெரிய சாதனையை, எழுச்சியை பெற்று கொண்டிருக்கிறது. பொதுவாக பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை படி என்று தான் சொல்வார்கள். ஆனால், இன்று விளையாட்டு துறையில் ஆர்வமுள்ள மாணவ மாணவியரை பெற்றோர்கள் விளையாட்டு துறையில் ஈடுபடுத்துவதற்கு நம்பிக்கை ஊட்டியவர் நமது மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்கள். இவர் இத்துறைக்கு பொறுப்பேற்ற பிறகு *200* விளையாட்டு

வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் அரசு துறைகளிலே பணி பெற்று இன்று பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கான அரசாணையினை வெளியிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *47*: *2026-27* ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட இடங்களில் உள்ள *50* விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும் மற்றும் புதிய விளையாட்டு உபகரணங்களை ரூ.*20* கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

2015 ஆம் ஆண்டு முன்னறிவிப்போ அல்லது எச்சரிக்கையோ இன்றி செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து திடீரெனவும் அறிவியல் சாராத முறையிலும் நீர் வெளியேற்றப்பட்டதே பேரழிவுக்கு காரணமாக இருந்தது என்று *CAG* அறிக்கை கூறுகிறது. இது மனித தவறினால் ஏற்பட்ட தவறு என்று கூறுகிறது. இது போன்று நேராதவாறு இருப்பதற்காக

அறிவிப்பு *84*: பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில், ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் *(ICCC)* வெள்ளக் கண்காணிப்பு நடவடிக்கைகளை கண்காணிக்கும் நோக்கில் கண்காணிப்பு கேமராக்கள் ஏற்கனவே நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

ஒரு அரசாங்கம், அடிப்படை வசதிகள் சாலை, குடிநீர், கழிவுநீர் இதைத் தாண்டி, தற்போது வெள்ளத் தடுப்பு தொடர்பான திட்டங்களை மேலும் வலுப்படுத்தவும், கண்காணிப்பு செயல்திறனை மேம்படுத்துவதற்கும் அதன் பரப்பளவை மேலும் விரிவுபடுத்துவதற்கும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள *100* முக்கியமான மழைநீர் வெளியேற்றும் இடங்களில் *(Disposal points)* கண்காணிப்பு கேமராக்கள் ரூ.*2* கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

பல தலைமுறைகளுக்கு சென்று சேருகின்ற திட்டத்தை வகுத்து செயல்படுத்தி வருகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கீழ் இயங்க கூடிய நம்முடைய பெருநகர சென்னை மாநராட்சியை மனதார பாராட்டி, வாழ்த்தி இந்த மாமன்றத்தில் நம்முடைய மன்ற உறுப்பினர்கள் எடுத்துரைக்கின்ற மக்களின் கோரிக்கைகளை தாயுள்ளம் கொண்டு கேட்டு அவற்றை செய்து கொடுத்து வருகின்ற மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், சட்டத்திற்கு உட்பட்டு நமக்கு செய்து தருகின்ற ஆணையர் அவர்களுக்கும், இந்த நிதிநிலை அறிக்கையை தயார் செய்வதற்கு உதவியதற்காக அனைத்து அலுவலருக்கும், ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்து கொண்டு, ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம் என்பதே திராவிட மாடல் ஆட்சியின் சமூக நீதி கோட்பாட்டால், இன்று தமிழ்நாடே கழக தலைவர் அவர்களால், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், திராவிட நாயகர் அவர்களால், சமூக நீதி காவலர் அவர்களால் இன்று தமிழ்நாடே தலைநிமிர்ந்து நடை போட்டு வருகின்றது. எனவே, ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய தலைவர், நிலைக்குழு (பொது சுகாதாரம்) அவர்கள் / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.81.

டாக்டர் திருமதி கோ. சாந்தகுமாரி

அனைவருக்கும் வணக்கம்.

இந்தியாவிலேயே ஈடு இணையற்ற ஆளுமையாக திகழும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதியார் அவர்களை வணங்கி உரையை தொடங்குகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்கள் தலைமையிலான இந்த திராவிட மாடல் ஆட்சியில் *2026 - 2027* ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மருத்துவ துறைக்காக ரூ. *22,090* கோடி நிதி ஒதுக்கீடு செய்தமைக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், நியமனக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் இந்தச் சபையில் அமர்ந்துள்ள அதிகார பெருமக்கள், அலுவலர்கள், ஊடக நண்பர்கள், சக மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மீண்டும் என் காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 15: பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள *140* மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், *19* மாநகர சமுதாய நல மையங்கள், *200* மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் *1* தொற்று நோய் மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த *360* சுகாதார மையங்களில் புற்று நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பெண்களை பெரிதும் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோய் ***HPV DNA*** என்னும் நுண்கிருமியால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால் ***HPV*** வைரஸ் மூலம் உண்டாக்கும் கருப்பை வாய் புற்றுநோயை கண்டறியும் விதமாக *360* சுகாதார மையங்களிலும் இந்த பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மாதிரிகளை தொற்று நோய் மருத்துவமனையிலுள்ள ***RTPCR*** கூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.*1* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பு அனைவருக்கும் மன மகிழ்ச்சியை அளிக்கிறது. மேலும்,

அறிவிப்பு *19* : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட *1* முதல் *15* வரை உள்ள மருத்துவ மண்டலங்களில் *7* நடமாடும் ஊடுகதிர் *(X-Ray)* வசதியுள்ள காசநோய் பரிசோதனை அலகுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாநகர காச நோய் மருத்துவமனைகளிலும், தொற்று நோய் மருத்துவமனை மற்றும் மாவட்ட காச நோய் மருத்துவமனையில் ஊடுகதிர் *(X-Ray)* சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த மருத்துவமனைகளில் ஊடுகதிர் *(X-Ray)* இயந்திரத்தின் வழியாக எடுக்கப்படும் ஊடுகதிர்களை செயற்கை நுண்ணறிவு *(AI)* வழியாக தன்னிச்சையாக ஆய்வு செய்து ஆய்வறிக்கை அளித்திட செயற்கை நுண்ணறிவு *(AI)* மென்பொருள் மற்றும் மென்பொருளை

செயல்படுத்துவதற்கான உபகரணங்கள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு 23 : வெறிநாய்க்கடி நோய் பாதிப்பிலிருந்து பொது மக்களை காத்திடவும், வெறிநாய்க்கடி நோய் இல்லா சென்னை மாநகரை உருவாக்கிடவும் *(Rabies free Chennai)* கடந்த ஆண்டு *09.08.2025* முதல் *31.12.2025* வரை அனைத்து மண்டலங்களிலும் உள்ள *1,47,538* தெரு நாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி *(Anti Rabies Vaccination)* மற்றும் அகப்புற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தும் திட்டம் முதல் தவணையாக செயல்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து இரண்டாவது தவணையாக *1* முதல் *15* வரையிலான மண்டலங்களில் உள்ள அனைத்து தெருநாய்களுக்கும் வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி மற்றும் அகப்புற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தும் சிறப்பு முகாம் ரூ.*3.50* கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு 25: பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு மக்களின் நலனை பாதுகாக்க நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பூச்சிகள் மற்றும் கொசுத் தொல்லையை கட்டுப்படுத்த சென்னையில் உள்ள நீர்வழிப்பாதைகள் (கூவம் ஆறு, அடையாறு ஆறு, பக்கிம்காம் கால்வாய் மற்றும் சிறிய கால்வாய்கள்) மற்றும் மழைநீர் வடிகால் கால்வாய்கள் என கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அவ்விடங்களில் தரமான பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் மேம்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி கொசுப்புழு அடர்த்தியை நிகழ்நேர கண்காணிப்பை *(Real time Monitoring)* மூன்று ஆண்டுகள் மேற்கொண்டு பூச்சிகள் மற்றும் கொசுத்தொல்லைகளைக் கட்டுப்படுத்த ஆண்டொன்றிற்கு சுமார் ரூ.*25* கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு 26 : பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறையின் கீழ்வரும் மகப்பேறு மருத்துவமனைகள், அவசர சிகிச்சை பிரிவுகள் மற்றும் அறுவை சிகிச்சை அரங்குகளில் அனுமதிக்கப்படும் நோயாளிகளின்

உடல்நிலையை தொடர்ந்து கண்காணிக்க *Multipara Monitor Type III (With Digital Spo2)* கருவிகளைப் பயன்படுத்தி, அவசர காலங்களில் உடனடியாக சிகிச்சை மேற்கொள்ள, பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையின் கீழ் இயங்கும் *16* நகர்ப்புற சமுதாய நலமையங்கள் *(UCHC)* மற்றும் மூன்று *24* மணிநேர மகப்பேறு மருத்துவமனை *(EOC)* மற்றும் ஒரு தொற்றுநோய் மருத்துவமனை உட்பட *20* மருத்துவமனைகளுக்கும் தலா இரண்டு வீதம் *40* எண்ணிக்கையிலான கருவிகள் தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் மூலமாக ரூ.*29* இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு *27* : பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறையின் கீழ்வரும் மகப்பேறு மருத்துவமனைகள், அவசர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் அறுவை சிகிச்சை அரங்குகளில் அனுமதிக்கப்படும் குழந்தைகளின் இரத்தத்தில் உள்ள ஆக்ஸிஜன் அளவையும், இதயத் துடிப்பையும் *(Pulse Rate,Blood Pressure,Heart Rate, SPO2)* அளவிட பயன்படும் *Fetal Pulse Oximeter* கருவியின் மூலம் நுரையீரல் நோய்கள், இதய நோய்கள் மற்றும் ஆக்ஸிஜன் அளவு குறைவாக உள்ள குழந்தைகளின் உடல் நிலையினை தொடர்ந்து கண்காணிக்கவும் *Fetal Pulse Oximeter* கருவிகள் அவசியமாக உள்ளதால், *16* நகர்ப்புற சமுதாய நலமையங்கள் *(UCHC)* மற்றும் மூன்று *24* மணிநேர மகப்பேறு மருத்துவமனைகள் *(EOC)* ஆக மொத்தம் *19* மருத்துவமனைகளுக்கும் தலா ஒரு கருவி வீதம் *19* எண்ணிக்கையில் *Fetal Pulse Oximeter - High End with detachable hand held front panel*, கருவிகள் தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் *(TNMSC)* மூலமாக ரூ.*23* இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு.*30* : பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக வரும் மருத்துவப் பயனாளிகளுக்கு, கதிரியக்க சாதனம் வழியாக நோய்களை கண்டறிவதும் அவசரக் காலங்களில் உடனடியாக எடுக்க வேண்டிய ஸ்கேன், ஊடுகதிர், *Mamogram* போன்ற

சேவைகள் அளிப்பதற்கும், மேலும், மருத்துவச் சேவைகளை சிறப்பான முறையில் வழங்குவதற்கும், முதலாவதாக, மூன்று *24* மணி நேர அவசர மகப்பேறு மையங்கள் மற்றும் *16* நகர்ப்புற சமுதாய சுகாதார மையங்கள் என மொத்தம் *19* மையங்களுக்கு *19* எண்ணிக்கையிலான கதிரியக்க நிபுணர்கள் *(RADIOLOGIST)* தொகுப்பூதிய அடிப்படையில் பணியமர்த்தப்படுவார்கள் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. **இதற்காக எனது நன்றியினை** தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *26* *:* பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறையின் கீழ்வரும் மகப்பேறு மருத்துவமனைகள், அவசர சிகிச்சை பிரிவுகள் மற்றும் அறுவை சிகிச்சை அரங்குகளில் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் உடல்நிலையை தொடர்ந்து கண்காணிக்க *Multipara Monitor Type III (With Digital Spo2)* கருவிகளைப் பயன்படுத்தி, அவசர காலங்களில் உடனடியாக சிகிச்சை மேற்கொள்ள, பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையின் கீழ் இயங்கும் *16* நகர்ப்புற சமுதாய நலமையங்கள் *(UCHC)* மற்றும் மூன்று *24* மணிநேர மகப்பேறு மருத்துவமனை *(EOC)* மற்றும் ஒரு தொற்றுநோய் மருத்துவமனை உட்பட *20* மருத்துவமனைகளுக்கும் தலா இரண்டு வீதம் *40* எண்ணிக்கையிலான கருவிகள் தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் மூலமாக ரூ.*29* இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு *27* *:* பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறையின் கீழ்வரும் மகப்பேறு மருத்துவமனைகள், அவசர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் அறுவை சிகிச்சை அரங்குகளில் அனுமதிக்கப்படும் குழந்தைகளின் இரத்தத்தில் உள்ள ஆக்ஸிஜன் அளவையும், இதயத் துடிப்பையும் *(Pulse Rate,Blood Pressure,Heart Rate, SPO2)* அளவிட பயன்படும் *Fetal Pulse Oximeter* கருவியின் மூலம் நுரையீரல் நோய்கள், இதய நோய்கள் மற்றும் ஆக்ஸிஜன் அளவு குறைவாக உள்ள குழந்தைகளின் உடல் நிலையினை தொடர்ந்து கண்காணிக்கவும் *Fetal Pulse Oximeter* கருவிகள் அவசியமாக உள்ளதால், *16* நகர்ப்புற சமுதாய நலமையங்கள் *(UCHC)* மற்றும் மூன்று *24*

மணிநேர மகப்பேறு மருத்துவமனைகள் *(EOC)* ஆக மொத்தம் *19* மருத்துவமனைகளுக்கும் தலா ஒரு கருவி வீதம் *19* எண்ணிக்கையில் *Fetal Pulse Oximeter - High End with detachable hand held front panel*, கருவிகள் தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் *(TNMSC)* மூலமாக ரூ.*23* இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு *31*: நீரிழிவு விழித்திரை *(Diabetic Retinopathy)* நோயானது நிரந்தரப் பார்வையின்மையை ஏற்படுத்தும் தன்மை கொண்டது என்பதால் சிறப்பு பரிசோதனைகள் மேற்கொண்டு ஆரம்ப காலத்திலேயே அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதன் மூலம் நிரந்தரப் பார்வையின்மை நோயிலிருந்து பூரணமாக குணமாக்க முடியும். எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ்வரும்*16* நகர சமுதாய நல மையங்கள் *(UCHC)* மற்றும் மூன்று *24* மணிநேர அவசர மகப்பேறு மையங்கள் *(EOC)* ஆக *19* மருத்துவமனைகளில், *19* எண்ணிக்கையிலான *Slit Lamp, Auto refractometer (A/C), Fundus Camera* ஆகிய கருவிகள் ரூ.*2.30* கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்ற அறிவிப்பிற்கும் நிலைக்குழு (பொது சுகாதாரம்) சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

அறிவிப்பு *32* : பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் பயோ மைனிங் மூலம் மீட்டெடுக்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியில் *1,000* மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட காற்றுப்புகும் வகையில் பதனம் செய்யும் உரம் தயாரிக்கும் நிலையத்தை *20* ஏக்கர் பரப்பளவில் *(Windrow Compost Plant)* பொது-தனியார் பங்களிப்பு *(PPP)* நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு *35*: பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து நிரந்தர, தற்காலிக மற்றும் வெளிமுகமை தூய்மைப் பணியாளர்களுக்கும் கோடைக் காலங்களில் ஏற்படும் வெயில் தாக்கத்தை போக்கவும் நீர்ச்சத்தை பராமரிக்கவும் உடல் வெப்பத்தை தணிக்கவும் கோடை காலம் முழுவதும்

தூய்மைப் பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்த தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு மேயர் அவர்களுக்கு மீண்டும் எங்களுடைய நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

அறிவிப்பு *37*: பெருநகர சென்னை மாநகராட்சியில் *10* வருடங்களுக்கு மேல் பயன்பாட்டில் உள்ள கனரக வாகனங்களுக்கு மாற்றாக இயற்கை எரிவாயுவால் இயங்கும் *(CNG)* *8.5* கன மீட்டர் கொள்ளளவு கொண்ட *30* எண்ணிக்கையிலான கனரக டிப்பர் வாகனங்கள் ரூ.*9.60* கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு *41*: பெருநகர சென்னை மாநகராட்சியின் *1* முதல் *15* மண்டலங்களில் பல்வேறு பணிகளின் பயன்பாட்டிற்கான இயற்கை எரிவாயுவில் *(CNG)* இயங்கும் *50* எண்ணிக்கையிலான இலகுரக வாகனங்கள் ரூ.*5* கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு *39*: பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலங்களில் பேருந்து நிழற்குடைகள் மற்றும் நடைபாதைகளை தண்ணீர் மூலம் சுத்தம் செய்வதற்காக *2,000* லிட்டர் கொள்ளளவு கொண்ட *Jet Washer Mounted* இயற்கை எரிவாயு *(CNG)* மூலம் இயங்கும் *10* எண்ணிக்கையிலான இலகுரக வாகனங்கள் ரூ.*1.50* கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு *40* : பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் காற்று மாசினை தடுக்கும் பொருட்டு காற்றில் பரவும் தூசியினை தண்ணீர் புகை கொண்டு படியவைக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக கனரக அடிச்சட்டத்தில் பொருத்தப்பட்ட *CANON Mist Blower Machine Mounted on HMV Truck (CNG)* இயந்திரம் இரண்டு எண்ணிக்கையிலும் மற்றும் இலகுரக அடிச்சட்டத்தில் பொருத்தப்பட்ட *CANON Mist Blower Machine Mounted on LMV Truck (CNG)* இயந்திரம் ஆறு எண்ணிக்கையிலும் ரூ.*3.56* கோடி

மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இரண்டு கண்களாக கருதுவது ஒன்று **மருத்துவம்** மற்றொன்று **கல்வி** ஆகும்.

அறிவிப்பு 12: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் - 9ல் ஆயிரம் விளக்கு பகுதியில் தசைத்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் தசைச்சிதைவு நோயால் *(Muscular Dystrophy)* பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்புக்கல்வி கற்பித்தல் மற்றும் குறைந்த நடமாடும் திறன் கொண்ட குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதில் மாணவ-மாணவியர்களுக்கான ஹைட்ராலிக் தூக்கிகள் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள், சாய்தள வசதியுடன் கூடிய கழிவறை, பாதுகாப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பள்ளியைப் போன்று இதர 14 மண்டலங்களிலும் வட்டார துணை ஆணையர் அவர்களின் மேற்பார்வையில் பொது-தனியார் பங்களிப்பு *(Public-Private Partnership)* மற்றும் அரசு சாரா நிறுவனம் *(Non Governmental Organization)* மூலம் சிறப்பு பள்ளிகள் நிறுவப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டத்தக்கதாகும். அனைத்து தாய்மார்களும் இந்தத் திட்டத்திற்காக மிகுந்த நன்றி கடன்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதை இந்நேரத்தில் நான் தெரிவித்து கொள்கிறேன், நன்றி. வணக்கம்.

அறிவிப்பு 71: பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ், பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களின் கௌரவமான வாழ்க்கைக்காக, அடிப்படை வசதிகள் மற்றும் உரிமைகளை உறுதி செய்ய, பெண்கள், குழந்தைகள், முதியோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் சமூகத்தினருக்கான நலத்திட்டங்கள், பாதுகாப்பு, புகார் தீர்வு மற்றும் விழிப்புணர்வை ஒருங்கிணைத்து, கள ஆய்வுகள் மற்றும் சமூக-பொருளாதார கணக்கெடுப்புகளின் உண்மைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு சமூகச் ஒருங்கிணைப்பு மற்றும் மேம்பாட்டை வலுப்படுத்த ரூ.1 கோடி மதிப்பீட்டில் "சமூக-பொருளாதார மேம்பாட்டுப் பிரிவு" *(Socio-Economic Development*

Wing) புதிதாக உருவாக்கப்படும் என்கிற அறிவிப்பிற்கு நான் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

மேலும், இந்த நிதிநிலை அறிக்கையை அருமையாக தயார் செய்து வழங்கியுள்ள மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், அனைத்து அதிகாரிகளுக்கும் மற்றும் இந்தக் குறுகிய காலத்தில் இந்த நிதிநிலை அறிக்கையை தயார் செய்து, மக்களுக்கான தொலைநோக்கு பார்வையுடன் அளித்த அனைவருக்கும், தலைவர், நிலைக்குழு *(வரிவிதிப்பு மற்றும் நிதி)* அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

மீண்டும், மீண்டும் *2.0* ஆட்சியில் கொண்டு வந்த ஒவ்வொரு திட்டங்களையும், இன்னும் அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லுகின்ற ஒரே முதலமைச்சர் நம்முடைய இந்தியாவில் *Best* முதலமைச்சர் நம்முடைய கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தான். ஸ்டாலின் தொடரட்டும், மீண்டும் வெல்வோம் என்று கூறி, எனக்கு பேச வாய்ப்பளித்த ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொண்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி பா. ஜான்சி உமா அவர்கள், நியமன மன்ற உறுப்பினர்.

திருமதி. பா. ஜான்சி உமா

அனைவருக்கும் வணக்கம், மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும் முதலில் என் நன்றி கலந்த வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிக்கை *2026 – 2027* ன் மீது நன்றி தெரிவிக்கும் வாய்ப்பை எனக்கு வழங்கிய அண்ணாநகரின் மூத்த முன்னோடி, அண்ணாநகர் பகுதியை தி.மு.கவின் கோட்டையாக மாற்றி

வைத்துள்ள பகுதி செயலாளர் மற்றும் ஆளுங்கட்சி தலைவர் அண்ணன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மறைந்தும் மறையாமல் நம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பவரும், 5 முறை தமிழ்நாட்டை ஆட்சி செய்தவரும், விதவை என்று அழைத்தவர்களை மாற்றி "கைம்பெண்" என அழைக்க வைத்தவரும், மூன்றாம் பாலினத்தவர் என்று வசை பாடியவர்களுக்கு மத்தியில் "திருநங்கைகள்" என்று பெயர் சூட்டி அழைத்தவரும், ஊனமுற்றோர் என்கிற வார்த்தையை மாற்றி எங்களுக்கும் திறமைகள் உண்டு என்று அறிந்து "மாற்றுத் திறனாளிகள்" என்று அழைத்தவரும், 50 ஆண்டுகளுக்கு மேல் தலைவராக இருந்து திராவிட முன்னேற்ற கழகத்தை வழி நடத்தியவருமான, எங்கள் ஆருயிர் தலைவர் முத்தமிழ் அறிஞர் இருக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன்.

தமிழ்நாட்டின் இன்றைய முதலமைச்சரும், தமிழ்நாட்டை நிரந்தரமாக ஆளக்கூடிய தலைவருமான திராவிட இனத்தின் போர்வாளாக திகழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்நாட்டு மக்களின் இதயத்தில் தாயாக காலை உணவு திட்டத்தின் மூலமாகவும், இல்லம் தேடி கல்வி திட்டத்தின் மூலமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே. தந்தையாக – புதுமை பெண் திட்டத்தின் மூலமாகவும், தமிழ் புதல்வன் திட்டத்தின் மூலமாகவும், வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே, சகோதரனாக – மகளிர் உரிமை தொகை திட்டத்தின் மூலமாகவும், மகளிர் விடியல் பயணம் திட்டத்தின் மூலமாகவும், தமிழ்நாட்டு மக்களின் இதயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும், தமிழ்நாட்டின் ஒற்றை நம்பிக்கையாக இருந்து கொண்டு எதிரிகளுக்கு தோல்வியை மட்டுமே பரிசாக வழங்கி கொண்டு, கூட்டணி அமைப்பதில் சாணக்கியனாக விளங்கி கொண்டிருக்கும், வருங்காலத்தை தீர்மானிக்கக்கூடிய, என்னை போன்ற மாற்றுத்திறனாளிகளுக்கு வாய்ப்பு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

தந்தை பெரியாரின் கொள்கை வாரிசாகவும், தலைவர் கலைஞர் அவர்களின் மறு உருவமாகவும், ஒற்றை செங்கல்லால் ஒன்றிய அரசை அலற விட்டவரும், சனாதனத்தை எதிர்க்கும் போர்வாளாக திகழ்ந்து கொண்டிருப்பவரும், தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களின் ஒற்றை நம்பிக்கையாய் திகழ்பவரும், மாற்று திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு அரசு

வேலை வாய்ப்புகள் வழங்கி என்னை போன்ற மாற்று திறனாளிகளை கௌரவித்து கொண்டிருக்கும், இன்றைய தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

கழகத்தின் கொள்கை பற்றாளர், இளைஞர் அணி அமைப்பாளராகவும், மாநில இளைஞர் அணி துணை செயலாளராகவும், மாமன்ற உறுப்பினராகவும், சைதை சட்டமன்ற உறுப்பினராகவும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சராகவும் இருந்து, தனது உழைப்பால் உயர்ந்தவர், தொண்டர்களின் பாதுகாவலர், மாரத்தான் வீரர் மாசற்ற மாணிக்கம் என்றும் மக்கள் மனதில் மேயராக வாழ்ந்து கொண்டிருக்கும், மாற்றுத் திறனாளியான எனக்கு மாமன்றத்தில் பணியாற்றிட வாய்ப்பு வழங்கிய சென்னை தெற்கு மாவட்டத்தின் போற்றுதலுக்குரிய செயலாளராக உள்ள இவருக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதியின் போர்ப்படை தளபதிகளில் முதல் தளபதியாக விளங்கி கொண்டிருக்கும் அமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகின்றேன்.

பெருநகர சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிக்கை *2026-2027* ல்

அறிவிப்பு *12* : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் - *9*ல் ஆயிரம் விளக்கு பகுதியில் தசைத்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் தசைச்சிதைவு நோயால் *(Muscular Dystrophy)* பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்புக்கல்வி கற்பித்தல் மற்றும் குறைந்த நடமாடும் திறன் கொண்ட குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதில் மாணவ-மாணவியர்களுக்கான ஹைட்ராலிக் தூக்கிகள் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள், சாய்தள வசதியுடன் கூடிய கழிவறை, பாதுகாப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பள்ளியைப் போன்று இதர *14* மண்டலங்களிலும் வட்டார துணை ஆணையர் அவர்களின் மேற்பார்வையில் பொது-தனியார் பங்களிப்பு *(Public-Private Partnership)* மற்றும் அரசு சாரா நிறுவனம் *(Non Governmental Organization)* மூலம் சிறப்பு பள்ளிகள் நிறுவப்படும்.பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் தசைத்திறன் குறைபாடுள்ள சிறப்பு குழந்தைகளுக்கான

சிறப்பு பள்ளிகள் நிறுவப்படும் என்ற அறிவிப்பின் மூலம், தசைத்திறன் குறைபாடுள்ள குழந்தைகளின் கல்வி கற்கும் ஆர்வம் அதிகரித்து, கட்டாயமாக அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்கிற அறிவிப்பிற்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு*15* : பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள *140* மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், *19* மாநகர சமுதாய நல மையங்கள், *200* மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் *1* தொற்று நோய் மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த *360* சுகாதார மையங்களில் புற்று நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பெண்களை பெரிதும் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோய் ***HPV DNA*** என்னும் நுண்கிருமியால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால் ***HPV*** வைரஸ் மூலம் உண்டாக்கும் கருப்பை வாய் புற்றுநோயை கண்டறியும் விதமாக *360* சுகாதார மையங்களிலும் இந்த பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மாதிரிகளை தொற்று நோய் மருத்துவமனையிலுள்ள ***RTPCR*** கூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.*1* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்ற அறிவிப்பிற்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். இந்த அறிவிப்பு மிகவும் பாராட்டிற்குரியது. பெண்களுக்கு இச்சிறப்பான திட்டத்தின் மூலம் வருங்காலத்தில் கருப்பைவாய் புற்றுநோய் இல்லா மாநகராக சென்னை மாநகரம் திகழும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. இத்தகைய சிறந்த அறிவிப்பை நிதிநிலையில் அறிவித்ததற்காக என் மனமார்ந்த நன்றியின தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *45*: *2026-27*ஆம் நிதியாண்டில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில் மக்கள் அதிகம் கூடும் பூங்காக்களான

1. மண்டலம்-*2*,கோட்டம்-*15*, மணலி நியு டவுன், *Block No.26*, *CPS-10* பூங்கா.
2. மண்டலம்-*5*, கோட்டம்-*53*, தங்கசாலை பூங்கா.
3. மண்டலம்-*7*, கோட்டம்-*83*, மதனகுப்பம் பூங்கா.
4. மண்டலம்-*8*, கோட்டம்-*103*, டாக்டர். விஸ்வேஸ்வரைய்யா டவர் பூங்கா.
5. மண்டலம்-*13*, கோட்டம்-*123*, ராஜிவ் காந்தி சாலை பூங்கா

ஆகிய ஐந்து பூங்காக்களில், சிறப்பு குழந்தைகளுக்கான உபகரணங்கள் உள்ளடக்கிய *(Inclusive Parks for Special Children)* சிறப்பு அம்சங்கள் கொண்ட பூங்காக்களாக ரூ.*10* கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்கிற அறிவிப்பின் மூலம் மற்ற குழந்தைகளை போல் சிறப்பு குழந்தைகளும் பொழுதுபோக்கு இடங்களுக்கு வருவது அதிகரிக்கும். இவர்கள் வெளி உலகை காண்பதற்கும், மற்ற குழந்தைகளோடு தயக்கமின்றி பழகுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும். இத்தகைய அறிவிப்பை நிதிநிலையில் அறிவித்ததற்காக என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *61*: சுற்றுலாவை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மெரினா கடற்கரையை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்காக கலங்கரை விளக்கம் *(Light House)* முதல் அண்ணா நினைவிடம் வரை கயிறு வழித்தட *(Rope way car)* வசதி அறிமுகப்படுத்த திட்டமிட்டப்பட்டுள்ளது. இந்த கயிறு வழித்தடங்கள், நகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்வதுடன், சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்துகின்றன. இந்த கயிறு வழித்தடங்கள் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் அழகை ரசிக்க வைக்கும் பரந்த காட்சிகளை *(Panoramic views)* வழங்குவதோடு மறக்க முடியாத அனுபவங்களையும் உருவாக்கும் வகையில் பொது-தனியார் பங்களிப்பு *(PPP)* முறையில் கயிறு வழித்தடங்கள் *(Rope way car)* அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியதாகும். இந்தத் திட்டத்தின் மூலம் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிக்கும். மேலும், சென்னை மாநகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்யும் என்பதால் இத்திட்டத்தினை அறிவித்தமைக்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிவிப்பு *71*: பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ், பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களின் கௌரவமான வாழ்க்கைக்காக, அடிப்படை வசதிகள் மற்றும் உரிமைகளை உறுதி செய்ய, பெண்கள், குழந்தைகள், முதியோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் சமூகத்தினருக்கான

நலத்திட்டங்கள், பாதுகாப்பு, புகார் தீர்வு மற்றும் விழிப்புணர்வை ஒருங்கிணைத்து, கள ஆய்வுகள் மற்றும் சமூக-பொருளாதார கணக்கெடுப்புகளின் உண்மைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு சமூகச் ஒருங்கிணைப்பு மற்றும் மேம்பாட்டை வலுப்படுத்த ரூ.1 கோடி மதிப்பீட்டில் "சமூக-பொருளாதார மேம்பாட்டுப் பிரிவு" *(Socio-Economic Development Wing)* புதிதாக உருவாக்கப்படும் என்கிற சிறப்பான அறிவிப்பை நிதிநிலையில் அறிவித்ததற்காக என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

என்னை போன்ற மாற்று திறனாளிகளின் மனதில் ஓடும் எண்ணமாக சில கோரிக்கைகளை இங்கு சமர்ப்பிக்கின்றேன்.

சென்னை மாநகரில் உள்ள பெரும்பாலான தனியார் பள்ளிகளில் மாற்று திறனாளி மாணவர்கள் கிடையாது. எனவே, அனைத்து தனியார் பள்ளிகளிலும் குறைந்தபட்சம் 3 சதவிகித மாற்று திறனாளி மாணவ, மாணவியர்களை சேர்த்து கொள்வது என்பது கட்டாயமாக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்,

சென்னை மாநகரில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் ஒருங்கிணைந்த கல்வியின் கீழ் மாற்று திறனாளி குழந்தைகளுக்கான மையங்கள் அமைக்க வேண்டும். அதாவது, சென்னை மாநில கல்லூரி மற்றும் *Loyola* கல்லூரியில் இருப்பதை போன்று *RCDA (Resource Center for the Differently Able)* மையங்கள் அமைக்கப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மநாகராட்சியின் இணையதள சேவைகள் எல்லாம் அனைத்துவிதமான மாற்றுத்திறனாளிகளும் அணுகத்தக்க வகையில் இருக்க வேண்டும். அதாவது பார்வை குறைபாடு உடையவர்கள், செவித்திறன் குறைபாடு உடையவர்கள் போன்ற 21 வகையான மாற்று திறனாளிகளும் இணையதள சேவைகளை பயன்படுத்தும் வகையில் இருக்க வேண்டும்.

அனைத்து தனியார் நிறுவனங்களிலும் மாற்று திறனாளிகள் தடையின்றி சென்று வருவதற்கு *Ramp Wheel Chair* மற்றும் கழிப்பிட வசதி ஆகிய அடிப்படை வசதிகள் இருக்கின்றனவா என்பதை கண்காணிக்க, மாற்று திறனாளிகள் அடங்கிய ஒரு கண்காணிப்பு குழுவை அமைத்து, நியமன மாமன்ற உறுப்பினர்களின் தலைமையில் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டு கொள்கிறேன்.

ஒன்றிய அரசால் மாநில அரசிற்கு தர வேண்டிய கல்வி நிதி, மெட்ரோ ரயில் திட்ட நிதி, பேரிடர் நிவாரண நிதி, விவசாய நிதி ஆகிய நிதிகள் எல்லாம் முடக்கப்பட்ட போதிலும், அதையும் தாண்டி வீறு கொண்டு எழுந்து, தமிழ்நாட்டு மக்களை காத்து கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலைமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரின் தலைமையிலேயே

தமிழ்நாடு போராடும்!

தமிழ்நாடு வெல்லும்!

திராவிட முன்னேற்ற கழக தலைவரின் தலைமையிலேயே 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் மீண்டும் வருவோம்! மீண்டும் வெல்வோம்!

தந்தை பெரியாரின் புகழ் வாழ்க

அறிஞர் அண்ணாவின் புகழ் வாழ்க

டாக்டர் கலைஞரின் புகழ் வாழ்க

மாண்புமிகு முதலமைச்சர் தளபதியின் புகழ் வாழ்க

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் புகழ் வாழ்க

நன்றி.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய 13வது மண்டல வார்டுகுழு தலைவர் திரு.ரா.துரைராஜ் அவர்கள் / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.172.

திரு.ரா. துரைராஜ்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, சக மாமன்ற உறுப்பினர்களே, பத்திரிகை மற்றும் ஊடகவியல் நண்பர்களே, துறை சார்ந்த அதிகாரிகளே, உங்கள் அத்துணை பேர்களுக்கும் எனது அன்பான வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

இந்த நாடும், நகரமும் நலம் பெற, மண்ணும் மக்களும் வளம் பெற, நேரம் காலம் கருதாது, உணவும், உறக்கமும் பாராது, எல்லோருக்கும் எல்லாம் என்று மக்கள் நலன் ஒன்றே தன் உயிர் மூச்சாய் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழக

தலைவர் அவர்களுடைய திட்டங்களை, சாதனைகளை பட்டியலிட்டால் நாட்கள் போதாது. எழுதி வைக்க தாள்கள் போதாது.

திராவிட மாடல் அரசு என்றால் என்ன? இலக்கணம் என்ன? வரையறை என்ன? வினாவிற்கான விடையாக தான் பொதுவுடமை சித்தாந்தத்தின் பிதாமகன் கார்ல்மார்க்ஸ் அவர்களின் திருவுருவ சிலையை கழக தலைவர் அவர்கள் திறந்து வைத்து திராவிடமும், மார்க்சியமும் திராவிட முன்னேற்ற கழகத்தின் இரண்டு கண்கள் என புரிய வைத்திருக்கிறார். தமிழ் தேசிய இனத்தின் அரசியல் விடுதலையும், சமநல சமுதாயமாக தமிழ் சமூகத்தை கட்டியமைப்பதும் தான் திராவிட முன்னேற்ற கழகத்தின் அரசியல் தத்துவம். அதை நடைமுறைப்படுத்துவதற்காக எல்லோருக்கும் எல்லாம் என்கிற கொள்கை முழக்கத்தோடு நடைபெற்று வரும் திராவிட மாடல் அரசின் தலைவராகிய மாண்புமிகு திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் கார்ல் மார்க்ஸ் அவர்களின் திருவுருவ சிலையை திறந்து வைத்திருப்பது இயல்பான இயற்கையான அற்புதமான நிகழ்வு மட்டுமல்ல. இந்திய துணை கண்டத்தை கவ்வி இருக்கும் அரசியல் இருளை கிழிக்க போவது தென்கிழக்கிலிருந்து உதிக்கின்ற உதயசூரியனாக உலாவி கொண்டிருக்க கூடிய கழக தலைவர் தான் என்பதை நாடறியும், உலகறியும்.

ஜாதிய சமூக ஏற்றத்தாழ்வுகளை கட்டி காக்கும் வருணாசிரம சனாதன கொள்கைகளுக்கு எதிராக அரசியல் போர் நடத்தி கொண்டிருக்கும் இதே வேளையில் மக்களிடையே நிலவும் பொருளாதார ஏற்ற தாழ்வுகளை களைந்து சமநல சம வாய்ப்புள்ள சமூகமாக தமிழ் சமூகத்தை தலை நிமிர செய்வது தான் திராவிட மாடல் அரசின் நோக்கம், செயல் திட்டம், செயல்பாடுகள் என அனைத்தும் இந்த ஐந்தாண்டு கால பொற்கால ஆட்சியில் வகுக்கப்பட்ட திட்டங்களை பெருமையாக என்னால் சத்தமாக சொல்ல முடியும். ஆனால், மொத்தமாக சொல்ல முடியாது. காரணம் நேரம் போதாது. அதற்காக சொல்லாமல் கடந்து செல்லவும் முடியாது. ஆகவே, ஒருசில முத்தான திட்டங்களை மட்டும் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

தொடக்க கல்வி தொய்வில்லாமல் நடைபெற தமிழ்நாடு முழுவதும் உள்ள ஏழை / எளிய உழைக்கும் மக்களின் குழந்தைகள் அரசு பள்ளிகளில் பயின்று வருகின்றனர். அந்தக் குழந்தைகளுக்காக காலை உணவு திட்டம்

செயல்படுத்தப்படுகிறது. மேலும், உயர் கல்வியை ஊக்குவிக்க மாணவ/மாணவியர்களுக்கு மாதம் ரூ.1000/- வழங்கும் "புதுமைப் பெண்" மற்றும் "தமிழ் புதல்வன் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

உயர் கல்வி பயிலும் மாணவ/மாணவிகளுக்கு 10 இலட்சம் மடிக்கணினிகளை "உலகம் உங்கள் கையில்" என்கிற திட்டத்தின் அடிப்படையில் மடிக்கணினிகள் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. மாணவ/மாணவிகள் திறனை மேம்படுத்தி IAS/IPS போன்ற பல்வேறு துறைகளில், உலகளவில் பல்வேறு நிறுவனங்களிலும் பணியாற்றுவதற்காக மற்றும் அவர்களின் திறனை மேம்படுத்தி கொள்வதற்கு அற்புதமான " நான் முதல்வன் திட்டம் " போன்ற முத்தான திட்டங்களால் இந்திய அளவில் உயர்கல்வி சதவிகிதம் 28 சதவிகிதம் ஆகும். ஆனால், தமிழ்நாட்டில் உயர் கல்வி சதவிகிதம் 50 சதவிகிதத்தை எட்டியுள்ளது என்று சொன்னால் அது தான் திராவிட மாடல் அரசு.

மருத்துவ கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மிக சிறந்த திட்டங்களில் ஒன்று எந்த மொழி பேசுபவராக இருந்தாலும், எந்த நாட்டை சார்ந்தவராக இருந்தாலும் சாலை விபத்தில் பாதிக்கப்பட்டார்கள் என்று சொன்னால் உடனடியாக உயிரை காக்கும் வகையில் "இன்னுயிர் காப்போம் – நம்மை காக்கும் 48" என்ற அற்புதமான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உலகம் முழுவதும் நோய் பாதிப்பு ஏற்பட்டால் மருத்துவமனையை நாடி மருத்துவர்களை பார்க்க வேண்டிய நிலை உருவாகிறது. ஆனால், தமிழ்நாட்டில் நோய் பாதிப்பு ஏற்படும் மக்களை தேடி மருத்துவ சேவையை வழங்கும் ஒரு அற்புதமான திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தை 15வது வார்டுகுழு தலைவர் திரு.எ. மதியழகன் அவர்கள் கூறியது போன்று, ஐக்கிய நாடு சபையே பாராட்டி விருது வழங்கியுள்ளது. நமது தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்பு இந்தியாவிற்கே முன்னுதாரணமாக மட்டுமல்லாது, உலக நாடுகளுக்கெல்லாம் முன்னுதாரணமாக இன்று திகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதில் மாற்று கருத்து இல்லை.

பெண்கள் அவர்கள் சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்கிற கருத்தின் அடிப்படையில் பல திட்டங்கள் நடைமுறையில்

உள்ளன. பெண்கள் உழைப்பிலும், உற்பத்தியிலும் ஈடுபட்டு முன்னேறுவதற்காக கட்டணமில்லா பேருந்தில் பயணிக்கக்கூடிய "விடியல் பயண திட்டம்" செயல்படுத்தப்படுகிறது. அவர்களின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையில் மாதம் ரூ.1000/- வழங்கும் மகத்தான "மகளிர் உரிமை திட்டம்" நடைமுறையில் உள்ளது. மேலும், பெண்கள் பல நகரங்களுக்கு சென்று பணியாற்றும் போது தங்குவதற்காக "தோழியர் விடுதிகள்" அமைத்து தரும் திட்டம்.

இவ்வாறு பல எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 20 ஆண்டுளாக அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், அதை மீண்டும் புதுப்பித்து நிரந்தர ஓய்வூதியம் கிடைக்க செய்த அற்புதமான திட்டத்தையும் அறிவித்துள்ளார்.

இப்படி எண்ணற்ற பல திட்டங்களை வழங்கியதோடு மட்டுமல்லாமல், அனைத்து துறைகளிலும் சம வாய்ப்பு, சம உரிமை வழங்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார். குறிப்பிட்ட திட்டங்களை அறிவித்ததோடு மட்டுமன்றி அவற்றை நடைமுறைப்படுத்தும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிகாரிகளுடன் விரிவான ஆலோசனைகளை நடத்தி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் இப் பணிகளை கண்காணித்து கொண்டிருப்பது மிகவும் சிறப்பிற்குரியது.

அந்த வகையில் 10 ஆண்டுகாலம் பாழாய் கிடந்த பெருநகர சென்னை மாநகராட்சியை நாடு போற்றும் நல்ல நகரமாக ஆக்கிய பெருமை இந்த மன்றத்திற்கு உண்டு. அந்த வகையில் கழக ஆட்சி பொறுப்பேற்ற ஐந்தாண்டுகளில் பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைபெற்ற திட்டங்களின் பட்டியலை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மழைநீர் வடிகால்வாயின் கட்டமைப்பை மேம்படுத்தி, சென்னையில் மழைநீர் வெள்ள பாதிப்பை தடுப்பதற்காக 1422.26 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.4809.30 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 1077 கிலோ மீட்டர் தூரத்திற்கு பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள 345 கிலோ மீட்டர் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மக்களுக்கு அடிப்படை தேவையான கட்டிடங்கள், சமுதாய நல கூடங்கள், அங்கன்வாடிகள், பள்ளி கட்டிடங்கள் போன்ற எண்ணற்ற கட்டிடங்கள் மக்கள் பயன்பாட்டிற்காக, கழக ஆட்சி பொறுப்பேற்று, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 1061.43 கோடி ரூபாய் செலவில் பல்வேறு கட்டிடங்கள் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 458 பணிகள் முடிவடைந்துள்ளன. 101 பணிகள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக, ஏழை, எளிய சாதாரண உழைக்கும் மக்களின் குழந்தைகள் அரசு பள்ளிகளில் தனியார் பள்ளிகளுக்கு நிகரான கட்டமைப்புள்ள பள்ளிகளில் பயில வேண்டும் என்கிற கருத்தியலின் அடிப்படையில் பள்ளி கட்டிடங்களுக்கு மட்டும் 296.16 கோடி ரூபாய் செலவு செய்திருப்பது மிகவும் சிறப்பிற்குரியது என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஆட்சி அதிகாரத்தில் இருக்க கூடிய நம்முடைய கழக அரசு சார்பில் எண்ணற்ற பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் வகையில் பல பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.1016.26 கோடி செலவில் இதுவரை 17 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 19 பாலங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சாலைகளை மிக சிறப்பாக கட்டமைப்பதற்கு ரூ.2359.73 கோடி செலவில் 3652.15 கிலோ மீட்டர் நீளத்திற்கு பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன. இதில் 3455.14 கிலோ மீட்டர் நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதம் 196.71 கிலோ மீட்டர் தூரத்திற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு மிக சிறப்பாக பணிகள் நடைபெற்று வரும் நிலையில், குறிப்பிட்ட பணிகளை தாண்டி மேலும் பல எண்ணற்ற பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. இதனால் எதிர் வரிசையில் அமர்ந்திருக்கின்ற எதிர்கட்சி உறுப்பினர் மரியாதைக்கும் மதிப்பிற்கும் உரிய சகோதரி திருமதி. உமா ஆனந்தன் அவர்களே, நம்முடைய பணிகளை பாராட்டுகின்ற அளவிற்கு மிக சிறப்பாக பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றது என்று சொன்னால் அது மிகையல்ல.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மொழியில் சொல்ல வேண்டுமென்றால், எங்களுக்கு வாக்களிக்காதவர்கள் கூட இவர்களுக்கு

வாக்களிக்காமல் போனோமே என்று வருத்தப்படுகின்ற அளவிற்கு பணிகள் மிக சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் இந்த ஆண்டு வெளியிடப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கை, மாநகராட்சியின் ஐந்தாண்டு கால பணிகளுக்கெல்லாம் ஒரு முத்தாய்ப்பாக பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட கூடிய அளவிற்கு இந்தப் பணிகள் மிக சிறப்பாக நடைபெற்றுள்ளது என்பதையும் தாண்டி, என்னுடைய அருமை நண்பர்கள் இந்தத் திட்டங்களை எல்லாம் பட்டியலிட்டு வாழ்த்தி பாராட்டியிருக்கிறார்கள். மீண்டும் அவைகளை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்கின்ற காரணத்தினால், இந்த நிதிநிலை அறிக்கை மிக பெரிய அளவில் மற்ற நிதிநிலை அறிக்கைகளையும் தாண்டி ஒரு மகுடம் சூடுவதாக இது அமைந்திருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை மொத்தத்தையும் நாம் வாசிக்கின்ற போது நம் வாய் மணக்கும். கேட்போருடைய செவியை குளிர்விக்கும். இந்த திட்டங்களால் பயனடைந்தவர்களுடைய மனம் மகிழ்ச்சியால் பூரிக்கும். இந்த மகிழ்ச்சியும், மனநிறைவும் வருகின்ற தேர்தலில் வாக்குகளாய் எதிரொலிக்கும், எதிரிகளின் வாய் பிளக்கும். வயிறு எரியும். பொறாமையால் உள்ளம் பொசுங்கி போகும். அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.

மக்களின் மனங்களை வென்று திராவிட முன்னேற்றக் கழகத்தை எப்படியாவது சூழ்ச்சி செய்து வீழ்த்தலாம் என்று பகல் கனவு காணும் சகுனிகளுக்கு நான் சொல்லிக் கொள்வது என்னவென்றால், இது ஈ.வெ.ராமசாமி பூமி. பேரறிஞர் அண்ணா அவர்கள் அலங்கரித்த தமிழ்நாடு, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் கட்டிக்காத்த தமிழ்நாடு.

மக்களின் கனவுகளை அரசின் திட்டங்கள் மூலம் நாள்தோறும் நனைவாக்கி வரும் நல்லாட்சி நாயகர், கழக தலைவர் மாண்புமிகு திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னேறி செல்லும் தமிழ்நாடு.

அத்துணை பணிகளையும் மிக சிறப்பாக நிறைவேற்றியமைக்காக இந்த மன்றத்தையும், அரசையும் பாராட்டுகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டங்களை மக்கள் இன்று கண்கூடாக பார்த்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, வருகின்ற தேர்தலில் தமிழ்நாடு வெல்லும், வரும் தேர்தல் முடிவுகள் அதனை தெளிவாக சொல்லும் என்று நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய 4வது மண்டல வார்டுகுழு தலைவர் திரு. உ. கணேசன்(எ) நேதாஜி உ. கணேசன் அவர்கள் / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.38.

திரு. உ. கணேசன்(எ) நேதாஜி உ. கணேசன்

மாண்புமிகு மேயர் அவர்களே, பொதுமக்களுக்கு அள்ளி கொடுக்கும் வள்ளல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, எங்களை போன்ற ஏழை, எளிய தொண்டர்களை வழி நடத்தும் இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் மண்டலம்-4ல் பாரதி நகர் பேருந்து நிலையம், கவிஞர் கண்ணதாசன் நகர் பேருந்து நிலையம், ஆர்.கே.நகரில் தொகுதியில் தண்டையார்பேட்டை பேருந்து நிலையம், ஆர்.கே.நகர் விளையாட்டு திடல் என்று தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் ஆர்.கே.நகர் தொகுதியை திரும்பி பார்க்க வைத்த மாண்புமிகு அமைச்சர் அருமை அண்ணன் திரு. பி.கே.சேகர்பாபு அவர்களுக்கு இந்த நேரத்தில் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, உதவி ஆணையர் (பணிகள்) அவர்களே, உயர்திரு வடக்கு வட்டார துணை ஆணையர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே, பத்திரிகை மற்றும் ஊடக துறையினை சார்ந்த நண்பர்களே அனைவருக்கும் எனது காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கின்றேன்.

வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்று பாடியவர் வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகளார். அந்த வள்ளல் பெருமான் திருவொற்றியூர்

நெடுஞ்சாலையில் அமைந்துள்ள வடிவுடை அம்மன் உடனுறை தியாகராஜ சுவாமி திருக்கோயிலுக்கு இரு கைகளை கட்டியவாறு நடந்து சென்ற அந்தச் சாலை பகுதிக்கு மண்டலம்-4ல் உள்ள திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு "வள்ளலார் நெடுஞ்சாலை" என்று பெயர் சூட்டிய மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலைமைச்சர் அவர்களுக்கு பொதுமக்கள் சார்பாகவும், மண்டலம்-4ன் சார்பாகவும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

13.02.2026 அன்று வெள்ளிக்கிழமை காலை குடும்ப இல்லத்தரசிகளை இன்ப செய்தியை தந்து ஒரு கோடியே 31 இலட்சம் பொது மக்களுக்கு கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாதத்திற்கு ரூ.3000/-ம், மே மாதம் கோடை கால சிறப்பு நிதியாக ரூ.2000/-ம் மொத்தமாக ரூ.5000/- வழங்கிய மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர், எங்களை வாழ வைக்கும் வள்ளல் அவர்களுக்கு மண்டலம்-4ன் சார்பாக நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

எங்கள் பகுதி பொது மக்களின் 50 ஆண்டு கால கனவாக மண்டலம்-4, வார்டு-41 மற்றும் வார்டு-37ம் இணையும் பகுதியில் மணலி சாலை, தண்டையார்பேட்டை நெடுஞ்சாலையில் ரூ.96.04 கோடி செலவில் புதிய மேம்பாலம் திறந்து வைத்தும், வார்டு-38ல் உள்ள எண்ணூர் நெடுஞ்சாலையில் ரூ.75 கோடி செலவில் புதிய மேம்பாலத்திற்கு அடிக்கல் நாட்டிய மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர், எங்களை எல்லாம் வாழ வைக்கும் வள்ளல் அவர்களுக்கு மண்டலம்-4ன் சார்பாகவும் இங்கு வாழ்கின்ற பொதுமக்கள் சார்பாகவும் நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். மண்டலம் 4ஐ பொறுத்த அளவில் எண்ணற்ற பணிகள், பொதுமக்கள் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு 2.0 ஆட்சிக்கு என்றும் நன்றி கடன்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதை இதன் முலம் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 6: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள சென்னை பள்ளிகளில் 6 முதல் 9-ஆம் வகுப்பில் பயிலும் 33,865 மாணவ-மாணவியர்களின் உடல் நலத்தினை பேணும்

வகையில் யோகா பயிற்சி அளிக்கப்படும். மேலும், 7, 8 மற்றும் 9ஆம் வகுப்பில் பயிலும் 25,526 மாணவ-மாணவியர்களுக்கு உடல் ஆரோக்கியம், தன்னம்பிக்கை மற்றும் துணிச்சலை வளர்க்கும் வகையில் தற்காப்புக்கலைப் பயிற்சி அளிக்கப்படும். யோகா பயிற்சி ரூ.40 இலட்சம் மதிப்பீட்டிலும், தற்காப்புக்கலைப் பயிற்சி ரூ.1.50 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் இந்த பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு15: பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 19 மாநகர சமுதாய நல மையங்கள், 200 மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் 1 தொற்று நோய் மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த 360 சுகாதார மையங்களில் புற்று நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பெண்களை பெரிதும் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோய் ***HPV DNA*** என்னும் நுண்கிருமியால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால் ***HPV*** வைரஸ் மூலம் உண்டாக்கும் கருப்பை வாய் புற்றுநோயை கண்டறியும் விதமாக 360 சுகாதார மையங்களிலும் இந்த பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மாதிரிகளை தொற்று நோய் மருத்துவமனையிலுள்ள ***RTPCR*** கூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *23*: வெறிநாய்க்கடி நோய் பாதிப்பிலிருந்து பொது மக்களை காத்திடவும், வெறிநாய்க்கடி நோய் இல்லா சென்னை மாநகரை உருவாக்கிடவும் *(Rabies free Chennai)* கடந்த ஆண்டு 09.08.2025 முதல் 31.12.2025 வரை அனைத்து மண்டலங்களிலும் உள்ள 1,47,538 தெரு நாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி *(Anti Rabies Vaccination)* மற்றும் அகப்புற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தும் திட்டம் முதல் தவணையாக செயல்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து இரண்டாவது தவணையாக 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் உள்ளஅனைத்து தெருநாய்களுக்கும் வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி மற்றும் அகப்புற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து

செலுத்தும் சிறப்பு முகாம் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *25*: பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு மக்களின் நலனை பாதுகாக்க நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பூச்சிகள் மற்றும் கொசுத் தொல்லையை கட்டுப்படுத்த சென்னையில் உள்ள நீர்வழிப்பாதைகள் (கூவம் ஆறு, அடையாறு ஆறு, பக்கிம்காம் கால்வாய் மற்றும் சிறிய கால்வாய்கள்) மற்றும் மழைநீர் வடிகால் கால்வாய்கள் என கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அவ்விடங்களில் தரமான பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் மேம்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி கொசுப்புழு அடர்த்தியை நிகழ்நேர கண்காணிப்பை (Real time Monitoring) மூன்று ஆண்டுகள் மேற்கொண்டு பூச்சிகள் மற்றும் கொசுத்தொல்லைகளைக் கட்டுப்படுத்த ஆண்டொன்றிற்கு சுமார் ரூ.25 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் ஒரு நடவடிக்கையாக மெரினா கடற்கரையை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்காக கலங்கரை விளக்கம் (Light House) முதல் அண்ணா நினைவிடம் வரை கயிறு வழித்தட வசதி அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த கயிறு வழித்தடங்கள் நகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்வதுடன், சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்துகின்றன. இந்த கயிறு வழித்தடங்கள் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் அழகை ரசிக்க வைக்கும் பரந்த காட்சிகளை வழங்குவதோடு மறக்க முடியாத அனுபவங்களையும் உருவாக்கும் வகையில் பொது தனியார் பங்களிப்பு (PPP) முறையில் கயிறு வழித்தடங்கள் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பிற்கு மண்டலம்-4ன் சார்பாக நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *80*: பெருநகர சென்னை மாநகராட்சியில் 3,01,969 தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மண்டலம்-1 முதல் 15 வரையில் 10

ஆண்டுகளுக்கு மேல் உபயோகப்படுத்தப்பட்டுள்ள மற்றும் வெளிச்சம் குறைவாக உள்ள 78,130 எண்ணிக்கையிலான LED விளக்குகள் ரூ.65 கோடி மதிப்பீட்டில் மாற்றி பொருத்தப்படும் என்கிற அறிவிப்பிற்கு மண்டலம்-4ன் சார்பாக நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 66: கொடுங்கையூர் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பாலம் மிகவும் வலுவிழந்துள்ளதால், பொதுமக்களின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு, இப்பாலத்தினை முற்றிலுமாக இடித்துவிட்டு மூலதன நிதியிலிருந்து ரூ.3 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பிற்கு மண்டலம்-4ன் சார்பாகவும் பகுதி வாழ் மக்களின் சார்பாகவும் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிவிப்பு 57: தண்டையார்பேட்டை, இராயபுரம், வண்ணாரப்பேட்டை மற்றும் கே.கே.நகர் ஆகிய பள்ளி மண்டலங்கள் உள்ள பகுதிகளில் தலா 10 கி.மீ தூரத்திற்கு வாகன வேகத்தைக் குறைக்கும் நடவடிக்கைகள், அகலமான நடைபாதைகள், பாதுகாப்பான சாலைக் கடப்புகள் (Crossings), உயர் தர மின் விளக்குகள் மற்றும் வழிகாட்டி பலகைகள் அமைப்பது போன்ற பணிகள் ரூ.200 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்கிற அறிவிப்பிற்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 35:பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து நிரந்தர, தற்காலிக மற்றும் வெளிமுகமை தூய்மைப் பணியாளர்களுக்கும் கோடைக் காலங்களில் ஏற்படும் வெயில் தாக்கத்தை போக்கவும் நீர்ச்சத்தை பராமரிக்கவும் உடல் வெப்பத்தை தணிக்கவும் கோடை காலம் முழுவதும் தூய்மை பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்கிற அறிவிப்பிற்கு மாண்புமிகு மேயர் அவர்களுக்கு மண்டலம் 4ன் சார்பாகவும் பொதுமக்களின் சார்பாகவும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

மண்டலம்-4, ஆர்.கே.நகர் தொகுதியில் 38வது வார்டில் சுடுகாடு மற்றும் இடுகாடு, சென்ற நிதியாண்டில் அறிவித்த சுங்கச்சாவடி பேருந்து நிலையம்,

38து வார்டு ஐ.ஓ.சி. பேருந்து நிலையத்தை நவீன முறையில் கட்டி தந்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும் மண்டலம்-4ன் சார்பாக நன்றியை தெரிவித்து கொள்கிறேன். மண்டலம் 4ன் சார்பில் பொதுமக்கள் எப்போதும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கடன்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதை தெரிவித்து கொண்டு, சிறப்பான 2026-2027ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், உடன் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அதிகாரிகளுக்கும், வரிவிதிப்பு மற்றும் நிதிநிலைக்குழு தலைவர் திருமதி சர்பஜயாதாஸ் அவர்களுக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்து கொண்டு, வெல்வோம் 200 படைப்போம் வரலாறு வெல்வோம் ஒன்றாக என்று கூறி பேச வாய்பளித்த அனைவருக்கும் நன்றி பாராட்டி அமைகிறேன், நன்றி வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய 11வது மண்டல வார்டுகுழு தலைவர் திரு.வே. ராஜன் அவர்கள் / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.143.

திரு.வே. ராஜன்

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும் நிலைக்குழு / வார்டுகுழு தலைவர்களுக்கும், மாமன்ற உறுப்பினர்களுக்கும், இணை ஆணையர்கள் / துணை ஆணையர்களுக்கும், மாநகராட்சியின் அனைத்து சகோதர, சகோதரிகளுக்கும், தொலைக்காட்சி மற்றும் பத்திரிகை துறையினை சார்ந்த நண்பர்களுக்கும், எங்களை எல்லாம் வழிநடத்தி கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன் அவர்களுக்கும், மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் திரு.டி.ஆர்.பாலு அவர்களுக்கும், மாண்புமிகு மதுரவாயல் தொகுதி

சட்டமன்ற உறுப்பினர் திரு. க. கணபதி அவர்களுக்கும் எனது காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

மாநில அரசு எந்த அளவிற்கு நிதி நெருக்கடியில் திட்டங்களை தீட்டி கொண்டிருக்கிறதோ, அதே போன்ற நிதி நெருக்கடியிலும் மிக சிறப்பான திட்டங்களை அறிவித்துள்ள மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும், வரிவிதிப்பு மற்றும் நிதிநிலைக்குழுவின் தலைவர் திருமதி.சர்பஜெயாதாஸ் அவர்களுக்கும் பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்து என் உரையை துவக்குகிறேன்.

அறிவிப்பு *1* : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட *35* மேல்நிலைப் பள்ளிகள், *46* உயர்நிலைப்பள்ளிகள், *15* மைய பள்ளிகள் மற்றும் உயர்கல்விக்கான சிறப்பு பயிற்சி அளிக்கும் *4* வட்டார பள்ளிகள் என மொத்தம் *100* பள்ளிகளுக்கு, உயர்தர தொழில்நுட்ப வசதியுடன் கூடிய பன்முக செயல்பாட்டு அச்சுப்பொறி இயந்திரம் *(MULTI FUNCTIONAL PRINTER)* ரூ.*60* இலட்சம் மதிப்பீட்டில் தகவல் தொழில்நுட்ப துறையின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு என்னுடைய பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *2*: *2025-26*ஆம் கல்வியாண்டில் முதற்கட்டமாக *141* உடற்கல்வி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் உடல் ஆரோக்கியம், ஒழுக்கம் மற்றும் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் இரண்டாம் கட்டமாக *2026-27*ஆம் கல்வியாண்டில் தொடக்கப்பள்ளிகளுக்கு *101* ஆசிரியர்கள், நடுநிலைப்பள்ளிகளுக்கு *29* ஆசிரியர்கள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு *50* ஆசிரியர்கள் என மொத்தம் *180* தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள், ஜூன் *2026* முதல் மார்ச் *2027* வரை தொகுப்பூதிய அடிப்படையில் *10* மாதங்களுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகம்/பள்ளி மேலாண்மைக் குழு *(PTA / SMC)* மூலம் பணியமர்த்தப்படுவார்கள். இதற்காக ரூ.*3.65* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பிற்கு மாணவர்கள் சார்பாக எனது நன்றியை மன்றத்தில் பதிவு செய்கிறேன்.

அறிவிப்பு 3: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கல்வித்துறையின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளிகளில் 114 தொடக்கப் பள்ளிகள், 79 நடுநிலைப்பள்ளிகள், 35 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 22 மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 250 பள்ளிகளில் உள்ள வகுப்பறைகள், மதிய உணவு சமையற்கூடங்கள், ஆய்வகங்கள், அரங்கங்கள், கழிவறைகள், பள்ளி சுற்றுச்சுவர்கள் மற்றும் பள்ளி வளாகங்கள் ஒரே மாதிரியான வண்ணக் குறியீடு (Colour Coding) செய்து புதுப்பொலிவுடன் மேம்படுத்திட ரூ.20 கோடி மதிப்பீட்டில் வட்டார துணை ஆணையர்களின் மேற்பார்வையில் கட்டடத்துறையின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு என்னுடைய நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 4: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள அனைத்து சென்னை மேல்நிலைப் பள்ளிகளிலும் 12ஆம் வகுப்பில் பயிலும் 5,314 மாணவ-மாணவியர்களின், விருப்பம் மற்றும் ஆர்வத்தின் அடிப்படையில் ஜூன் 2026 முதல் கல்வியாண்டு இறுதி வரை உயர்கல்விக்கான ஒரு வருட சிறப்பு பயிற்சிகள் ரூ.6 கோடி மதிப்பீட்டில் மாணவ-மாணவியர்களின் எதிர்கால நலனுக்காக செய்து தரப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

அறிவிப்பு 6: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள சென்னை பள்ளிகளில் 6 முதல் 9-ஆம் வகுப்பில் பயிலும் 33,865 மாணவ-மாணவியர்களின் உடல் நலத்தினை பேணும் வகையில் யோகா பயிற்சி அளிக்கப்படும். மேலும், 7, 8 மற்றும் 9ஆம் வகுப்பில் பயிலும் 25,526 மாணவ-மாணவியர்களுக்கு உடல் ஆரோக்கியம், தன்னம்பிக்கை மற்றும் துணிச்சலை வளர்க்கும் வகையில் தற்காப்புக்கலைப் பயிற்சி அளிக்கப்படும். யோகா பயிற்சி ரூ.40 இலட்சம் மதிப்பீட்டிலும், தற்காப்புக்கலைப் பயிற்சி ரூ.1.50 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும் என்கிற

அறிவிப்பிற்கு எனது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 9: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை பள்ளிகளில் 130 நடுநிலைப் பள்ளிகள், 46 உயர்நிலை பள்ளி மற்றும் 35 மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ - மாணவியர்கள் தமிழ், ஆங்கிலத்தில் இலக்கணப் பிழை இல்லாமல் எழுதுவதற்கும் மாணவர்களிடையே உரையாடலை எளிமையாக்குவதற்கும், அதிக அளவில் தமிழ், ஆங்கிலச் சொற்களை கற்றுக்கொள்ளவதற்கும், மேலும், அவர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தும் நோக்கிலும், 8ஆம் வகுப்பில் பயிலும் 8,892 மாணவ-மாணவியர்கள், 9-ஆம் வகுப்பில் பயிலும் 7,934 மாணவ-மாணவியர்கள் மற்றும் 10-ஆம் வகுப்பில் பயிலும் 7,292 மாணவ-மாணவியர்கள் என மொத்தம் 24,118 மாணவ-மாணவியர்களுக்கு தமிழ்–ஆங்கில அகராதி (Dictionary) ரூ.37 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து மாணவ-மாணவியர்களுக்கு வழங்கப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 10: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவியர்களிடையே, வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப மாணவ-மாணவியர்களின் அறிவியல் ஆர்வத்தைத் தூண்டி, அவர்களை இளம் விஞ்ஞானிகளாக உருவாக்க வழிகாட்டும் வகையில் உயிரியல், வேதியியல், இயற்பியல், பொறியியல் மற்றும் கணினி அறிவியல் போன்ற பாடங்களில் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்திடவும் தனியார் பள்ளிகளுக்கு நிகராக ஆய்வகங்கள் அமைத்திடவும், நவீன முறையில் ஒரு புதிய நவீன அறிவியல் மையம் (Modern Science Centre) பொது-தனியார் பங்களிப்புடன் நிறுவப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியையும், பாரட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 11: 2025-26 கல்வியாண்டில் முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 35 மேல்நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்ட 10

உளவியல் ஆலோசகர்கள் இன்றைய சூழலில் வளர் இளம் பருவ மாணவ-மாணவியர்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளுக்கு நல்ல முறையில் உளவியல் ஆலோசனை வழங்கி வருகிறார்கள். அதை தொடர்ந்து இரண்டாம் கட்டமாக *2026-27*ஆம் கல்வியாண்டில் *46* சென்னை உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவியர்களுக்கு தகுந்த உளவியல் ஆலோசனை வழங்கி படிப்பில் கவனம் செலுத்துவதற்கும் மாநகராட்சியில் உள்ள பள்ளிகள் அதிக தேர்ச்சி சதவீதம் பெறுவதற்கு ஏதுவாக *17* உளவியல் ஆலோசகர்களுக்கு தொகுப்பூதிய அடிப்படையில் *10* மாதங்களுக்கு ரூ.*59.50* இலட்சம் செலவினத்தில் நியமிக்கப்படுவார்கள். இந்த உளவியல் ஆலோசகர்களின் நியமனங்கள் பாலின ஆய்வகத்தின் *(Gender Lab)* மேற்பார்வையின் மூலம் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பிற்கு எனது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *12*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் - *9*ல் ஆயிரம் விளக்கு பகுதியில் தசைத்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் தசைச்சிதைவு நோயால் *(Muscular Dystrophy)* பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்புக்கல்வி கற்பித்தல் மற்றும் குறைந்த நடமாடும் திறன் கொண்ட குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதில் மாணவ-மாணவியர்களுக்கான ஹைட்ராலிக் தூக்கிகள் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள், சாய்தள வசதியுடன் கூடிய கழிவறை, பாதுகாப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பள்ளியைப் போன்று இதர *14* மண்டலங்களிலும் வட்டார துணை ஆணையர் அவர்களின் மேற்பார்வையில் பொது-தனியார் பங்களிப்பு *(Public-Private Partnership)* மற்றும் அரசு சாரா நிறுவனம் *(Non Governmental Organization)* மூலம் சிறப்பு பள்ளிகள் நிறுவப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *14*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பள்ளி செல்லாத மாணவ-மாணவியர்கள், இடை நின்ற மாணவ-மாணவியர்கள் மற்றும்

இடம் பெயர்ந்த மாணவ-மாணவியர்கள் ஆகியோர்களை கண்டறிந்து அனைவருக்கும் அடிப்படை கல்வியைக் கற்பிக்கும் நோக்கத்தில் வட்டாரத்திற்கு ஒரு பள்ளி என 3 பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து, அப்பள்ளியில் மாணவ-மாணவியர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப வகுப்பறைகளை ஒதுக்கி இணைப்பு பாடப்பயிற்சியை *(Bridge Course)* தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களை கொண்டு நடத்தப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 15: பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 19 மாநகர சமுதாய நல மையங்கள், 200 மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் 1 தொற்று நோய் மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த 360 சுகாதார மையங்களில் புற்று நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பெண்களை பெரிதும் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோய் ***HPV DNA*** என்னும் நுண்கிருமியால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால் ***HPV*** வைரஸ் மூலம் உண்டாக்கும் கருப்பை வாய் புற்றுநோயை கண்டறியும் விதமாக 360 சுகாதார மையங்களிலும் இந்த பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மாதிரிகளை தொற்று நோய் மருத்துவமனையிலுள்ள ***RTPCR*** கூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 19: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 வரை உள்ள மருத்துவ மண்டலங்களில் 7 நடமாடும் ஊடுகதிர் *(X-Ray)* வசதியுள்ள காசநோய் பரிசோதனை அலகுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாநகர காச நோய் மருத்துவமனைகளிலும், தொற்று நோய் மருத்துவமனை மற்றும் மாவட்ட காச நோய் மருத்துவமனையில் ஊடுகதிர் *(X-Ray)* சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த மருத்துவமனைகளில் ஊடுகதிர் *(X-Ray)* இயந்திரத்தின் வழியாக எடுக்கப்படும் ஊடுகதிர்களை செயற்கை நுண்ணறிவு *(AI)* வழியாக தன்னிச்சையாக ஆய்வு செய்து ஆய்வறிக்கை அளித்திட செயற்கை நுண்ணறிவு *(AI)* மென்பொருள் மற்றும் மென்பொருளை

செயல்படுத்துவதற்கான உபகரணங்கள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு மிக சிறப்பானது என தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *28*: பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் *24* மணிநேரம் செயல்பட்டுவரும் சமுதாய மகப்பேறு மருத்துவமனைகள், பேறுகால பின் கவனிப்பு மையம் மற்றும் அறுவை சிகிச்சை பின் கவனிப்பு மையங்களான திருவொற்றியூர், இராயபுரம், பாடி, செனாய்நகர் மற்றும் அடையாறு ஆகிய *5* இடங்களில் உள்ள மையங்களுக்கு வார்டுக்கு *2* வீதம் *10* எண்ணிக்கையிலான மையப்படுத்தப்பட்ட குளிர்சாதன *(Centralized AC)* வசதி ரூ.*70* இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பிற்கு நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *29*:

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் வரும் வடக்கு வட்டாரம், *(புழல்)*, மத்திய வட்டாரம் *(பாடி)* மற்றும் தெற்கு வட்டாரம் *(போரூர்)* ஆகிய இடங்களில் இயங்கி வரும் மூன்று மாநகர சமுதாய நல மருத்துவமனைகளில் *(UCHC)* கூடுதலான மருத்துவ சேவைகளை விரிவாக்கம் செய்து பொதுமக்கள் பயன்படும் வகையில் இயற்கை மருத்துவ சேவைகள் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக இந்த மூன்று மாநகர சமுதாய நல மருத்துவமனைகளிலும், கூடுதல் மருத்துவ பிரிவுகள் அமைக்கப் போதிய இடவசதி இல்லாததால், முதற்கட்டமாக மூன்று கட்டடங்கள் கீழ்கண்டுள்ள இடங்களில் ரூ.*3.00* கோடி மதிப்பீட்டில் கட்டட துறையின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு பராட்டிற்குரியது.

1. புழல் *(*கூடுதலாக ஒரு தளம்*) 2000* சதுர அடி
2. பாடி, *(A* பிளாக் பழைய கட்டிடம் இடித்து புதியதாக தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டுதல்*) (G+2) 4500* ச. அடி
3. போரூர் *(*கூடுதலாக ஒரு தளம்*) 2000* சதுர அடி.

அவற்றில் மண்டலம்-11ல் உள்ள போரூர் மருத்துவமனை இடம் பெற்றுள்ளதற்காக மண்டலம்-11ன் சார்பாக நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 40: பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் காற்று மாசினை தடுக்கும் பொருட்டு காற்றில் பரவும் தூசியினை தண்ணீர் புகை கொண்டு படியவைக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக கனரக அடிச்சட்டத்தில் பொருத்தப்பட்ட *CANON Mist Blower Machine Mounted on HMV Truck (CNG)* இயந்திரம் இரண்டு எண்ணிக்கையிலும் மற்றும் இலகுரக அடிச்சட்டத்தில் பொருத்தப்பட்ட *CANON Mist Blower Machine Mounted on LMV Truck (CNG)* இயந்திரம் ஆறு எண்ணிக்கையிலும் ரூ.3.56 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 42 : 2026-2027ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 955 பூங்காக்களில் முதற்கட்டமாக 200 பூங்காக்கள் அறிவியல் பூர்வமாக பொலிவேற்றம் செய்யப்படும். அதற்காக, உரிய தாவர அமைப்புகள், பொலிவான வருகையாளர் ஓய்விடங்கள் மற்றும் இருக்கைகள், மரங்களில் பறவைகள் வாழ்விட அமைப்புகள், இயற்கை சூழலை மக்கள் பூங்காக்களில் உணரும் வண்ணம் மரங்களில் செயற்கையான பறவைகளின் ஒலிகள் வழங்கும் அமைப்புகள் அமைத்தல், சிறார்களைக் கவரும் வண்ணம் சிறுகுளங்கள் மற்றும் நீர்ப்பறவைகள் போன்ற அமைப்புகள், தற்காலத்திற்கேற்றவாறு நடைபாதைகள் மற்றும் ஒளிவிளக்குகள் போன்ற அமைப்புகளை ஏற்படுத்த ரூ.60 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 45 : 2026-27ஆம் நிதியாண்டில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில் மக்கள் அதிகம் கூடும் பூங்காக்களான,

1. மண்டலம்-2, கோட்டம்-15, மணலி நியு டவுன், Block No.26, CPS-10 பூங்கா.

2. மண்டலம்-5, கோட்டம்-53, தங்கசாலை பூங்கா.
3. மண்டலம்-7, கோட்டம்-83, மதனகுப்பம் பூங்கா.
4. மண்டலம்-8, கோட்டம்-103, டாக்டர். விஸ்வேஸ்வரய்யா டவர் பூங்கா.
5. மண்டலம்-13, கோட்டம்-123, ராஜிவ் காந்தி சாலை பூங்கா

ஆகிய 5 பூங்காக்களில், சிறப்பு குழந்தைகளுக்கான உபகரணங்கள் உள்ளடக்கிய (Inclusive Parks for Special Children) சிறப்பு அம்சங்கள் கொண்ட பூங்காக்களாக ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்கிற அறிவிப்பிற்கு நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 47 : 2026-27 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட இடங்களில் உள்ள 50 விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும் மற்றும் புதிய விளையாட்டு உபகரணங்களை ரூ.20 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 51: பேருந்து பணிமனைகளின் சேவைத் தரத்தை மேம்படுத்தவும், வணிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் பொருளாதார ஆற்றலை வெளிக்கொணரவும், பொதுப்போக்குவரத்து உள்கட்டமைப்பை நவீன மயமாக்கவும், பொது நிதி மீதான சுமையைக் குறைக்கவும், பொதுமக்களின் அதிக பயன்பாட்டில் உள்ள ஜார்ஜ்டவுன் (மண்டலம்-4), கத்திவாக்கம் (மண்டலம்-1), துரைப்பாக்கம், பள்ளிக்கரணை (மண்டலம்-15), இராமாபுரம், ஸ்ரீ ராம் நகர் (மண்டலம்-11), நங்கநல்லூர் (மண்டலம்-12), என்.ஜி.ஓ காலனி ஆதம்பாக்கம் (மண்டலம்-13) மற்றும் மடிப்பாக்கம் (மண்டலம்-14) ஆகிய முக்கிய இடங்களில் உள்ள பேருந்து பணிமனைகள் பொது-தனியார் கூட்டாண்மை (PPP) / வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் (EPC) முறையில் ரூ.110 கோடி மதிப்பீட்டில் மறுவடிவமைப்பு செய்யப்படும் என்கிற அறிவிப்பிற்கு நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 72: பெருநகர சென்னை மாநகராட்சியின் நகர மக்களின் மனநலம், சமூக இணைப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், குழந்தைகளை திரைச் சார்ந்த பழக்கங்களிலிருந்து பாரம்பரிய விளையாட்டு மற்றும் கலை சார்ந்த கலாச்சார செயல்பாடுகளில், ஆர்வத்தை ஏற்படுத்தவும், இளைஞர்கள் மற்றும் முதியோர் உட்பட அனைத்து தரப்பினருக்கும் மன-உடல் நலத்தை ஊக்குவிக்கவும், மக்களிடையே அன்பையும், நட்பையும் வளர்க்கும் பொழுது போக்குகளை ஊக்கப்படுத்தவும், பொது மற்றும் பொழுதுபோக்கு இடங்கள், மக்கள் இணையும் நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளை உருவாக்கும் வகையில் 'மகிழ்ச்சி மற்றும் பொழுதுபோக்குப் பிரிவு *(Happiness and Recreation Wing)* பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.*1* கோடி மதிப்பீட்டில் புதிதாக உருவாக்கப்படும் என்கிற அறிவிப்பு மிகவும் பாராட்டிற்குரியதாகும்.

எவரையும் நாங்கள் பின்தங்க விட மாட்டோம் எனும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கொள்கைக்கு ஏற்றவாறு, **பெண் குழந்தைகள்**, **மாற்றுத்திறனாளிகள்**, **மூன்றாம் பாலினத்தவர்** ஆகியோரின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் வகையில் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக எனது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்து கொள்கிறேன், நன்றி. வணக்கம்.

தலைவர், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) அவர்களின் உரையில்,

பேருந்து சாலைகள் : தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு நிதி *(TURIF)*, சிங்கார சென்னை *2.0* திட்டம், நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் *(NSMT)*, ஆகிய தமிழ்நாடு அரசின் மான்யம் மூலமாக சாலைகளை புதியதாக அமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி மூலம் பேருந்து நிறுத்தங்களை தரம் உயர்த்துதல், நடைபாதைகளை மேம்படுத்துதல் மற்றும் பல்வேறு விதமான பணிகள் பேருந்து சாலை துறையின் மூலம் மேற்கொள்ள ஏதுவாக *2025-2026*-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*311.60* கோடியும், *2026-2027*-ஆம் நிதியாண்டிற்கு ரூ.*725.06* கோடியும் ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பின்படி கடந்த ஆண்டு பேருந்து சாலைகளை மேம்படுத்துவதற்காக ரூ.*330.60* கோடி நிதி

ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆண்டு நிதிப்பற்றாக்குறை இருந்தும், பேருந்து சாலைகளை மேம்படுத்துவதற்காக ரூ.725.6 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவித்தமைக்கு தலைவர், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) அவர்கள் உள்ளிட்ட மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர் ஆகியோர்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

அதே போன்று, திடக்கழிவு மேலாண்மை துறையில்

திடக்கழிவு மேலாண்மை: தூய்மை இந்தியா திட்டம் 2.0 மூலம் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தினை அகழ்ந்தெடுக்கும் பணி, துப்புரவு பணிக்கு தேவையான தளவாட பொருட்களை கொள்முதல் செய்தல், குப்பை கொட்டும் கிடங்குகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளுதல் மற்றும் இதர பணிகளுக்காக 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.272.52 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.323.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்து கொள்கிறேன்.

மேயர் சிறப்பு மேம்பாட்டு நிதி : 2026-2027ஆம் நிதியாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெற ஏதுவாக ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சிக்கு நிலவும் நிதி நெருக்கடியில், மத்திய அரசின் உதவி இன்றி மாநில அரசு பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்துவது ஆச்சரியமானது. இதே போன்ற நிலைமையில் தான் மாநகராட்சியும் இயங்கி வருகிறது.

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி ரூ.60 இலட்சத்திலிருந்து ரூ.80 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட வேண்டும்.

உங்களுடைய **திட்டங்கள்**, **அறிவு திறன்**, **நிர்வாக திறமை** ஆகியவற்றினாலேயே மாமன்ற உறுப்பினர்கள் தங்கள் பணிகளை சிறப்பாக செய்து வருகின்றனர். 2027 ஆம் ஆண்டில் அனைவரும் வெற்றி பெறுவோம் என்றால், அது உங்களுடைய நிர்வாக திறமைக்கும் அறிவாற்றலுக்கும் உரிய சான்றாகும். இதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை, நன்றி. வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அனைவரும் பேசி முடித்த பிறகு இதற்கான முடிவு தெரிவிக்கப்படும்.

திரு. வே. ராஜன்

ஆணையர் அவர்களுக்கு எனது கோரிக்கை, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் *GST* விலக்கு அளிக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மதிப்பிற்குரிய துணை மேயர்

GST-யை அரசு ஏற்றுக்கொள்ளும் என்று தெரிவித்துள்ளனர். அதே போன்று, **மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி** கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்கும் *GST*-னை மாநகராட்சி ஏற்றுக் கொள்ள வேண்டும் என மாமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

திரு. வே. ராஜன்

அப்படி வழங்கப்பட்டால், அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் மேம்பாட்டு நிதியில் ரூ.*50* இலட்சம் விலக்கு கிடைக்கும் என்பதை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

GST விலக்கு அளிக்கும் முறை அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அந்த முறையை பின்பற்றி, மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் *GST* விலக்கு அளிக்க முடிவு செய்யப்படும்.

திரு. வே. ராஜன்:

14 உதவி கல்வி அலுவலர்களுக்கு வாகன வசதி *(Bolero Jeep)* அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக மகிழ்ச்சி, நன்றி, பாராட்டுக்கள்.

ஒவ்வொரு வார்டுகுழு தலைவர்களின் தலைமையிலேயே அந்தந்த மண்டலத்தின் நிர்வாகம் செயல்பட்டு வருகிறது.

மண்டல அலுவலர்கள், உதவி செயற் பொறியாளர்கள், உதவி கல்வி அலுவலர்கள், மண்டல சுகாதார அலுவலர்களுக்கு வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்காக எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

நிலைக்குழு தலைவர்களுக்கும், வார்டுகுழு தலைவர்களுக்கும் வாகன வசதி வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கிறார். எதிர்காலத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் மூலமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று வாகன வசதி வழங்க ஆவன செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கிறார்.

திரு. வே. ராஜன்

கியூபா நாட்டில் மட்டும் கல்வியும் மருத்துவமும் இலவசமாக வழங்கப்படுகின்றன. அங்கு தனியார் கல்வி கூடங்கள், கல்லூரிகள், தனியார் மருத்துவமனைகள் எதுவும் இல்லை. தமிழ்நாட்டில் அரசு கல்லூரிகளும், பள்ளிக் கூடங்களும் – ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி – மேலும் மருத்துவமனைகளும் தனியாரை மிஞ்சும் அளவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தற்போது நிர்வாகம் செய்து வருகிறார் என்பதில் மாற்று கருத்து இல்லை.

Fidel Castro **மற்றும்** ***Karl Marx*** பொதுவுடமை தத்துவத்தின் அடிப்படையில் வந்தவர்கள். இன்று தமிழ்நாட்டின் *Fidel Castro*, *Karl Marx* யார் என்றால், அது மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தான் என்பதை இந்நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அவருடைய அரசின் **திட்டங்கள்** மற்றும் **கொள்கைகள்** ஆகியவற்றுக்கு ஏற்றவாறு மிகச் சிறப்பாக இந்த நிதிநிலை அறிக்கையை அறிவித்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும், தலைவர், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) அவர்களுக்கும், அனைத்து இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், வட்டார துணை

ஆணையர்கள் ஆகியோருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி. வணக்கம்.

மாண்புமிகு மேயர்

மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. ஆர்.ஜி. ராஜேஷ்சேகர் அவர்கள், வார்டு எண்.21.

திரு. ஆர்.ஜி. ராஜேஷ்சேகர்

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், வார்டுகுழு தலைவர் அவர்களுக்கும், வதிவிதிப்பு மற்றும் நிதிநிலைகுழு தலைவர் அவர்களுக்கும், அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்து துறை அதிகாரிகளுக்கும், ஊடகத்துறை நண்பர்களுக்கும் இனிய மதிய வணக்கம்.

2026-2027 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் எண்ணற்ற துறைகளுக்கு நிதி வழங்கியுள்ளீர்கள். அதில் என்னுடைய ஒரு சில கோரிக்கைகளையும் ஏற்று கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

மழலையர் வகுப்புகளில் *(LKG, UKG)* பயிலும் குழந்தைகளுக்கு சத்துணவும், முட்டையும் வழங்கப்படுவதில்லை. ஆனால், ஒன்று முதல் அதற்கு மேற்பட்ட வகுப்புகளில் உள்ள மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இதனால், இவ்வகுப்புகளில் உள்ள சிறுவர், பிற மாணவர்களுடன் பகிர்ந்து உண்ண வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே, இவ்வகுப்புகளுக்கே உரிய வகையில் சத்துணவு மற்றும் முட்டை வழங்கப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

தூய்மை பணிகளை மேற்கொள்வதற்காக *BOV* வாகனங்கள் மற்றும் தூய்மை பணியாளர்களை தூய்மை பணியில் ஈடுபடுத்துவதற்கு *2011*ஆம் ஆண்டின் கணக்கீட்டின்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. தற்போது வீடுகள் அதிகரித்துள்ளதால், இதற்கான நிதி ஒதுக்கீடு கூடுதலாக வழங்கப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

புறநகர் பகுதி – 2வது மண்டலம் இப்பகுதி புறநகர் பகுதியாக இருப்பதால் பல்வேறு பணிகள் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே, இதற்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மழைநீர் வடிகால்வாய் பணி - மழைநீர் வடிகால்வாய் பணிகளில் 50 சதவிகிதம் மட்டுமே நிறைவு பெற்றுள்ளது. எனவே, இப்பணியை முழுமையாக நிறைவு செய்ய அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

அறிவிப்பு 15 : பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 19 மாநகர சமுதாய நல மையங்கள், 200 மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் 1 தொற்று நோய் மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த 360 சுகாதார மையங்களில் புற்று நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பெண்களை பெரிதும் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோய் ***HPV DNA*** என்னும் நுண்கிருமியால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால் ***HPV*** வைரஸ் மூலம் உண்டாக்கும் கருப்பை வாய் புற்றுநோயை கண்டறியும் விதமாக 360 சுகாதார மையங்களிலும் இந்த பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மாதிரிகளை தொற்று நோய் மருத்துவமனையிலுள்ள ***RTPCR*** கூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும். இவற்றை பயன்படுத்தும் அறை பாதுகாப்பாக இருக்க வேண்டும். ஏனெனில், அதிலிருந்து வெளிப்படும் கதிரியக்கம் பிறருக்கு பாதிப்பை ஏற்படுத்த கூடும். எனவே, பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

அறிவிப்பு 46 : 2026-27ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுடன் இணைந்து பசுமைப் பரப்பை பெருமளவில் அதிகரிக்க மாடம்பாக்கம், கைலாசபுரம் (மயிலாப்பூர்) (மண்டலம்-9) மற்றும் சாத்தாங்காடு (மண்டலம்-2) ஆகிய இடங்களில் நாற்றங்கால் பண்ணைகள் ஏற்படுத்தி அங்கு வனத்துறையின் உதவியுடன் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து, பொது மக்களுக்கு விலையில்லாமல் வழங்குவதோடு அவர்கள் உள்ளார்ந்த பங்கேற்புடன், சென்னை மாநகராட்சி பகுதிகளில் பசுமைப்பரப்பை அதிகரிக்க

இம்மரக்கன்றுகளை நடவு செய்து, சென்னையை பசுமை மிக்க நகரமாக மாற்ற ரூ.10 கோடி மதிப்பீட்டில் **"பசுமைச் சென்னை திட்டம்"** என்கிற திட்டம் அறிமுகம் செய்யப்படும்.

2 இலட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு ஆணையிட்டுள்ளீர்கள். கடந்த காலங்களில் ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க அரசாங்கம் ஆணையிட்டது. அதே போல, ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது ஒரு மரக்கன்று நட வேண்டும் என அறிவுறுத்தப்பட வேண்டும் என இங்கே பதிவு செய்கிறேன். பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய 5வது மண்டல வார்டுகுழு தலைவர் திரு.ப. ஸ்ரீராமுலு அவர்கள் / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.54.

திரு.ப. ஸ்ரீராமுலு

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, வடக்கு வட்டார துணை ஆணையர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, நியமனக்குழு உறுப்பினர்களே மற்றும் மண்டலம் 5க்கு உட்பட்ட 49வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.தா. இளங்கோ (எ) தா. இளைய அருணா மற்றும் 63வது வார்டுக்கு உட்பட்ட காங்கிரஸ் பேரியக்கத்தின் முன்னாள் மாவட்ட தலைவர் திரு. சிவராஜசேகரன் வரை அனைத்து வார்டு மாமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்து மற்றும் சக மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

இந்திய திருநாட்டிற்கே வழிகாட்டியாக விளங்கி கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய நிர்வாகத்தால் சிறப்பான செயல்பாடுகள் மூலமாக தனியார் துறைகளிலும், அரசு துறைகளிலும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கி கொண்டிருக்கிறார். அவருக்கு உறுதுணையாக நமது மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறையினை மிக சிறப்பான முறையில் நிர்வகித்து வருகிறார். உதாரணமாக விளையாட்டு வீரர்களுக்கு *sports quota* மூலமாக 3% வேலை வாய்ப்பு வழங்கி ஏறத்தாழ 172 விளையாட்டு

வீரர்களுக்கு பணி நியமனம் அளித்துள்ளார். அதற்காக அவருக்கும் நன்றியை தெரிவித்து மேலும் எங்களது சென்னை கிழக்கு மாவட்டத்தின் சிங்கம் இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும தலைவர் மாண்புமிகு அண்ணன் அவர்களுடைய துறையின் மூலமாக திராவிட மாடல் ஆட்சியில் ஏறத்தாழ 5000 திருக்கோவில்களுக்கு திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழாவை நடத்தி ஆன்மீக பக்தர்களை மகிழ்வித்து இறைவனை குளிர்வித்து ஆனந்தம் செய்யும் ஆட்சி தான் திராவிட மாடல் ஆட்சி என்று ஆண்டவன் மனம் குளிர குளிர தமிழ்நாட்டில் கடந்த நான்கரை ஆண்டுகளாக பருவ மழை பொய்க்காமல் பெய்துள்ளது. அனைத்து ஏரி, குளங்களும் 95% நீர் நிரம்பியுள்ளன. மூன்று போகம் விளைந்தால் போதும் என்று நினைத்த விவசாயி இன்று நான்கு போகம் நெல்லினை அறுவடை செய்கிறார். இந்தியாவிலேயே நெல் சாகுபடியில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பது பெருமை கொள்ள செய்கிறது.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பாக மருத்துவமனைகள், உடற்பயிற்சி கூடங்கள், திருமண கூடங்கள், முதல்வர் படைப்பகங்கள் என ஏராளமான திட்டங்களை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்கள் கூறியது போன்று, 50 ஆண்டு கால சாதனைகளை 5 ஆண்டுகளில் இந்து சமயம் மற்றும் அறநிலைய துறையும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமும் செய்து வருகிறார்கள் என்றால் அது மிகையாகாது. இத்தகைய மாவட்ட செயலாளரை நாங்கள் பெற்றதற்கு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். 5வது மண்டலத்திற்கும் நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்ததற்கு மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும் இந்த நிதிநிலை அறிக்கையினை சிறப்பாக தயார் செய்து சமர்ப்பித்த வரிவிதிப்பு மற்றும் நிதிநிலைக்குழு தலைவர் திருமதி.சர்பஜெயாதாஸ் அவர்களுக்கும் மற்றும் அனைத்து அதிகாரிகளுக்கும் எனது நன்றியினை கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் **திருமதி க. தேவி (எ) தேவி கதிரேசன்** அவர்கள், வார்டு எண்.*39*.

மாண்புமிகு மேயர் அவர்களே, அறநெறியுடன் ஆட்சி செய்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அன்பு செலுத்துவதில் தாய் போன்றும், நலம் பயப்பதில் தவம் போன்றும், நோயுற்றவர்களுக்கு மருந்து போன்றும், நூல்களை ஆய்ந்து கற்பதால் பெரும் அறிவு போன்றும் குடிமக்களுக்கு துணை நின்று ஆட்சி செய்து வருகிறார்.

களம் புகுந்து போராடும் நாற்படையினும், காலமும் இடமும் அறிந்து களம் புகும் படைத்தலைவன் எங்கள் சின்னவர் – மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், பெண்ணின் பெருமையை உயர்த்தும் நாடே இந்த மண்ணுலகில் உயர்ந்துள்ளன என்பதற்கு சான்றாக சென்னைக்கு மேயராக தலைவரால் பணிக்கப்பட்டு, அதனை தன் பணியால் சிறப்பிக்கும் மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், அவருடன் துணை நிற்கும் மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், இந்த நிதிநிலை அறிக்கையினை சிறப்பாக தயார் செய்து சமர்ப்பித்த நிலைக்குழு தலைவர் திருமதி சர்பஜெயாதாஸ் அவர்களுக்கும், நிலைக்குழு தலைவர்களுக்கும், வார்டுகுழு தலைவர்களுக்கும், அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும், ஊடக துறையினை சார்ந்த நண்பர்களுக்கும், பத்திரிகை நண்பர்களுக்கும் நன்றி தெரிவித்து கொண்டு, என் உரையை தொடங்குகிறேன்.

*39*வது வார்டில் *RME* மின் டிரான்ஸ்பார்மர்களை சுற்றி குப்பைகள் கொட்டப்படுவதால் அடிக்கடி தீ விபத்து ஏற்பட்டு மக்களுக்கு பாதிப்பு உண்டாகும் என்பதனை கருத்தில் கொண்டு, *RME* மின் டிரான்ஸ்பார்மர்களுக்கு வேலி அமைத்து தர வேண்டும் என *26.7.2024* அன்று நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் பேசினேன். அதற்கு மாண்புமிகு மேயர் அவர்கள், *"39*வது வார்டுக்கு மட்டுமல்லாமல் *200* வார்டுகளுக்கும் வேலி அமைத்து தருகிறேன்*"* என்று பதில் அளித்தார்கள்.

39வது வார்டில் **காசிமா** மற்றும் **கீர்த்தனா** என்கிற இரு கேரம் விளையாட்டு வீராங்கனைகளை உலகறிய செய்த மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி.

பெருநகர சென்னை மாநகராட்சியின் ***2026***-2027 **நிதிநிலை அறிக்கை** சிறப்பானதாகும்.

அறிவிப்பு *4*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள அனைத்து சென்னை மேல்நிலைப் பள்ளிகளிலும் 12ஆம் வகுப்பில் பயிலும் 5,314 மாணவ-மாணவியர்களின், விருப்பம் மற்றும் ஆர்வத்தின் அடிப்படையில் ஜூன் 2026 முதல் கல்வியாண்டு இறுதி வரை உயர்கல்விக்கான ஒரு வருட சிறப்பு பயிற்சிகள் ரூ.6 கோடி மதிப்பீட்டில் மாணவ-மாணவியர்களின் எதிர்கால நலனுக்காக செய்து தரப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *5*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள 206 தொடக்கப்பள்ளி, 130 நடுநிலைப்பள்ளி, 46 உயர்நிலைப்பள்ளி மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 417 பள்ளிகளில் பயிலும், மாணவ-மாணவியர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி மின் வசதிகள், மோட்டார் மற்றும் பம்பு போன்றவைகளில் ஏற்படும் பழுதுகளை சரிபார்ப்பதற்கும், வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் ஆண்டுக்கு ரூ.15 கோடி மதிப்பீட்டில் வட்டார துணை ஆணையர்களின் மேற்பார்வையில், மின்துறையின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *6*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள சென்னை பள்ளிகளில் 6 முதல் 9-ஆம் வகுப்பில் பயிலும் 33,865 மாணவ-மாணவியர்களின் உடல் நலத்தினை பேணும் வகையில் யோகா பயிற்சி அளிக்கப்படும். மேலும், 7, 8 மற்றும் 9ஆம் வகுப்பில் பயிலும் 25,526 மாணவ-மாணவியர்களுக்கு உடல் ஆரோக்கியம், தன்னம்பிக்கை மற்றும் துணிச்சலை வளர்க்கும் வகையில் தற்காப்புக்கலைப் பயிற்சி அளிக்கப்படும். யோகா பயிற்சி ரூ.40 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தற்காப்புக்கலைப் பயிற்சி ரூ.1.50 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் இந்த பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும் என்ற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிவிப்பு 8: மாணவ-மாணவியர்களுக்கு பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், அவர்கள் பயிலும் பள்ளிகளின் சூழ்நிலையை மேம்படுத்திடவும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை பள்ளிகளில் பழுதடைந்த 95 பள்ளிக் கட்டிடங்களை மறுசீரமைக்கவும், மிகவும் சிதிலமடைந்த 9 பள்ளிக் கட்டடங்களை இடித்துவிட்டு புதிய கட்டடங்கள் கட்டவும், சென்னை பள்ளிகளுக்குத் தேவையான 113 கூடுதல் வகுப்பறைகள் கட்டவும் மற்றும் 14 பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற பணிகள் ரூ.40 கோடி மதிப்பீட்டில் கட்டிடத்துறை மூலம் மேற்கொள்ளப்படும். இந்த பணி மேற்கொள்வதன் மூலம் அனைத்து சென்னை பள்ளிகளிலும் மாணவ-மாணவியர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 11: 2025-26 கல்வியாண்டில் முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 35 மேல்நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்ட 10 உளவியல் ஆலோசகர்கள் இன்றைய சூழலில் வளர் இளம் பருவ மாணவ-மாணவியர்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளுக்கு நல்ல முறையில் உளவியல் ஆலோசனை வழங்கி வருகிறார்கள். அதை தொடர்ந்து இரண்டாம் கட்டமாக 2026-27ஆம் கல்வியாண்டில் 46 சென்னை உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவியர்களுக்கு தகுந்த உளவியல் ஆலோசனை வழங்கி படிப்பில் கவனம் செலுத்துவதற்கும் மாநகராட்சியில் உள்ள பள்ளிகள் அதிக தேர்ச்சி சதவீதம் பெறுவதற்கு ஏதுவாக 17 உளவியல் ஆலோசகர்களுக்கு தொகுப்பூதிய அடிப்படையில் 10 மாதங்களுக்கு ரூ.59.50 இலட்சம் செலவினத்தில் நியமிக்கப்படுவார்கள். இந்த உளவியல் ஆலோசகர்களின் நியமனங்கள் பாலின ஆய்வகத்தின் (Gender Lab) மேற்பார்வையின் மூலம் செயல்படுத்தப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *57*: தண்டையார்பேட்டை, இராயபுரம், வண்ணாரப்பேட்டை மற்றும் கே.கே.நகர் ஆகிய பள்ளி மண்டலங்கள் உள்ள பகுதிகளில் தலா *10* கி.மீ தூரத்திற்கு வாகன வேகத்தைக் குறைக்கும் நடவடிக்கைகள், அகலமான நடைபாதைகள், பாதுகாப்பான சாலைக் கடப்புகள் *(Crossings)*, உயர் தர மின் விளக்குகள் மற்றும் வழிகாட்டி பலகைகள் அமைப்பது போன்ற பணிகள் ரூ.*200* கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *44*: *2026-27* ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில், முதற்கட்டமாக *200* பூங்காக்களில் நிலத்தடி நீர்மட்டத்தினை அதிகரிக்கும் வகையிலும் பூங்காவிற்கு வரும் மக்களிடம் மழை நீர் சேகரிப்பை கொண்டு சேர்க்கும் விதத்திலும், ஒரு பூங்காவிற்கு ரூ.*10* இலட்சம் வீதம் ரூ.*20* கோடி மதிப்பீட்டில் மழை நீர் சேகரிப்பு *(Rain Water Harvesting)* திட்டம் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *15*: பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள *140* மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், *19* மாநகர சமுதாய நல மையங்கள், *200* மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் *1* தொற்று நோய் மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த *360* சுகாதார மையங்களில் புற்று நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பெண்களை பெரிதும் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோய் ***HPV DNA*** என்னும் நுண்கிருமியால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால் ***HPV*** வைரஸ் மூலம் உண்டாக்கும் கருப்பை வாய் புற்றுநோயை கண்டறியும் விதமாக *360* சுகாதார மையங்களிலும் இந்த பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மாதிரிகளை தொற்று நோய் மருத்துவமனையிலுள்ள ***RTPCR*** கூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.*1* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிவிப்பு 16: பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் (UPHC), 19 மாநகர சமுதாய நல மையங்கள் (UCHC), 200 மாநகர நல வாழ்வு மையங்கள் (HWC) மற்றும் 1 தொற்று நோய் மருத்துவமனை (CDH) ஆகியவை செயல்பட்டு வருகின்றன. களப்பணியின்போது மருத்துவப் பதிவேடுகளை உடனுக்குடன் சேகரிப்பதற்கும், அதனை தலைமையிடத்திற்கு அனுப்புவதற்கும் கணினிமயமாக்கம் (Computerisation) செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக செவிலியர்கள், மருத்துவப் பரிசோதனை செய்யும்போது பெறப்படும் தகவல்களான இரத்த அழுத்தம், நாடி துடிப்பு விகிதம், உயரம் மற்றும் எடை போன்ற தரவுகளின் குறிப்புகளை பகிரச் செய்ய தனியாக Tablet கீழ்கண்டுள்ள மையங்களுக்கு தேவைப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 360 மருத்துவமனைகளில் உள்ள 520 செவிலியர்கள் மற்றும் 200 காச நோய்களப் பணியாளர்கள் பயன்பாட்டிற்கு இணையதள வசதியுடன் கூடிய 720 Tablet ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிவிப்பு 19: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 வரை உள்ள மருத்துவ மண்டலங்களில் 7 நடமாடும் ஊடுகதிர் (X-Ray) வசதியுள்ள காசநோய் பரிசோதனை அலகுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாநகர காச நோய் மருத்துவமனைகளிலும், தொற்று நோய் மருத்துவமனை மற்றும் மாவட்ட காச நோய் மருத்துவமனையில் ஊடுகதிர் (X-Ray) சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த மருத்துவமனைகளில் ஊடுகதிர் (X-Ray) இயந்திரத்தின் வழியாக எடுக்கப்படும் ஊடுகதிர்களை செயற்கை நுண்ணறிவு (AI) வழியாக தன்னிச்சையாக ஆய்வு செய்து ஆய்வறிக்கை அளித்திட செயற்கை நுண்ணறிவு (AI) மென்பொருள் மற்றும் மென்பொருளை செயல்படுத்துவதற்கான உபகரணங்கள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 21: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் புறநோயாளிகளுக்குத் தேவையான அனைத்து மருத்துவ சேவைகள் சிறப்பாகவும், தரமானதாகவும், 30 வருடங்களுக்கு மேலான பழைய மருத்துவ கட்டடத்தில் சிசிச்சை அளிக்கப்பட்டுவருகிறது. இந்த கட்டிடம் முற்றிலும் பழுதடைந்து காணப்படும் நிலையிலும், நாள் ஒன்றுக்கு 400 மேற்பட்ட புறநோயாளிகள் சிகிச்சைக்கு வருவதாலும் போதுமான இடவசதி, ஆய்வக வசதி, மற்றும் கழிப்பறை வசதி இல்லாத நிலையிலும் பழுதடைந்த இந்த பழைய கட்டிடத்திற்கு பதிலாக புதிய கட்டிடம் கட்டும் பணிகள் ரூ.6 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 12: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் - 9ல் ஆயிரம் விளக்கு பகுதியில் தசைத்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் தசைச்சிதைவு நோயால் *(Muscular Dystrophy)* பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்புக்கல்வி கற்பித்தல் மற்றும் குறைந்த நடமாடும் திறன் கொண்ட குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதில் மாணவ-மாணவியர்களுக்கான ஹைட்ராலிக் தூக்கிகள் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள், சாய்தள வசதியுடன் கூடிய கழிவறை, பாதுகாப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பள்ளியைப் போன்று இதர 14 மண்டலங்களிலும் வட்டார துணை ஆணையர் அவர்களின் மேற்பார்வையில் பொது-தனியார் பங்களிப்பு *(Public-Private Partnership)* மற்றும் அரசு சாரா நிறுவனம் *(Non Governmental Organization)* மூலம் சிறப்பு பள்ளிகள் நிறுவப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 25: பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு மக்களின் நலனை பாதுகாக்க நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பூச்சிகள் மற்றும் கொசு தொல்லையை கட்டுப்படுத்த சென்னையில் உள்ள நீர்வழிப்பாதைகள் (கூவம் ஆறு, அடையாறு ஆறு, பக்கிம்காம் கால்வாய் மற்றும் சிறிய கால்வாய்கள்) மற்றும் மழைநீர் வடிகால்

கால்வாய்கள் என கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அவ்விடங்களில் தரமான பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் மேம்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி கொசுப்புழு அடர்த்தியை நிகழ்நேர கண்காணிப்பை *(Real time Monitoring)* மூன்று ஆண்டுகள் மேற்கொண்டு பூச்சிகள் மற்றும் கொசுத்தொல்லைகளைக் கட்டுப்படுத்த ஆண்டொன்றிற்கு சுமார் ரூ.*25* கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *33*: குப்பை கொட்டும் வளாகத்தில் ஈரக்கழிவுகளை கொட்டுவதை தவிர்க்க மண்டலம்-*2*, வார்டு-*22* மணலியில், *2* எண்ணிக்கையிலான தலா *50* மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்ட காற்றுப்புகும் வகையில் உரம் தயாரிக்கும் நிலையம் *(Windrow Composting Plant)* ரூ.*15* கோடி மதிப்பீட்டில் மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு-*35*: பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து நிரந்தர, தற்காலிக மற்றும் வெளிமுகமை தூய்மைப் பணியாளர்களுக்கும் கோடைக் காலங்களில் ஏற்படும் வெயில் தாக்கத்தை போக்கவும் நீர்ச்சத்தை பராமரிக்கவும் உடல் வெப்பத்தை தணிக்கவும் கோடை காலம் முழுவதும் தூய்மைப் பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

இப்படியாக மக்களுக்காக மக்களின் நலன் காக்கும் அரசின் திட்டங்களை பாராட்டி பேசுவதை பெருமையாக கருதுகிறேன். பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய *8*வது மண்டல வார்டுகுழு தலைவர் திரு. கூ.பீ. ஜெயின் அவர்கள் / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.*94*.

திரு. கூ.பீ. ஜெயின்

மாண்புமிகு மேயர் அவர்களே, இந்திய தேசமே திரும்பி பார்க்கும் வகையில் தமிழ்நாட்டை வழிநடத்தி சென்று கொண்டிருக்கின்ற எங்களது நம்பிக்கை தளபதியார் அவர்களுக்கும், இன்றைய தினம் எங்கள் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், தளபதி அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு கலைவாணர் அரங்கில் 73 திருமணத்தை நடத்தி வைத்த எங்கள் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும்; அந்த நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்று, தமிழ்நாட்டில் உள்ள அத்துனை மாவட்டங்களிலும் முதன்மை மாவட்டமாக அது எந்த விழாவாக இருந்தாலும், எந்தப் பணியாக இருந்தாலும் சிறப்புற செய்து கொண்டிருக்கின்ற எங்கள் அமைச்சரின் வழிகாட்டுதலோடு செயலாற்றும் மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன். தொடர்ந்து, அனைத்து துறைகளுக்கும் ஒரு சிறப்பான நிதிநிலை அறிக்கையை வழங்கிய வரிவிதிப்பு மற்றும் நிதிநிலைக்குழு தலைவர் திருமதி. சர்பஜெயாதாஸ் அவர்களுக்கும் பாராட்டுகளை தெரிவித்து கொள்கிறேன்.

சென்னை பள்ளிகள் என்று சொன்னால் அது வறுமையின் சின்னம் என்று சொல்லுகின்ற காலம் போய், இன்றைய தினம் சென்னை பள்ளிகள் பெருமையின் சின்னமாக விளங்கி கொண்டிருக்கின்றன **(கைதட்டல்)** தனியார் பள்ளிகளுக்கு நிகரான பள்ளிகளாக விளங்கி கொண்டிருக்கின்றன. இந்த நிதிநிலை அறிக்கையிலும் அதற்கான பங்களிப்பை தாங்கள் வழங்கியதற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

பல்வேறு சிறப்பு திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. அவற்றை பல மாமன்ற உறுப்பினர்கள் வரவேற்று பேசினார்.

அறிவிப்ப 1: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 35 மேல்நிலைப்பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள், 15 மையப்பள்ளிகள் மற்றும்

உயர்கல்விக்கான சிறப்பு பயிற்சி அளிக்கும் 4 வட்டாரப் பள்ளிகள் என மொத்தம் 100 பள்ளிகளுக்கு, உயர்தர தொழில்நுட்ப வசதியுடன் கூடிய பன்முகசெயல்பாட்டு அச்சுப்பொறி இயந்திரம் ***(MULTI FUNCTIONAL PRINTER)*** ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் தகவல் தொழில்நுட்ப துறையின் மூலம் கொள்முதல் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை அறிவிப்பானது நிச்சயம் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "நான் முதல்வன்" திட்டத்தினுடைய மறுபதிப்பாக தான் நான் இங்கே பார்க்கிறேன்.

பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு அடுத்து உயர்கல்வியில் எந்த பாடப் பிரிவினை எடுத்து பயிலலாம் எனும் ஆலோசனை வழங்குவது என்பது சிறப்பான திட்டமாகும். You Tube-ல் இன்பா IPS. என்பவர் நான் முதல்வன் திட்டத்தின் வாயிலாக UPSC-யில் தேர்ச்சி பெற்று பதவியேற்றதாக தெரிவித்துள்ளார். **(கைதட்டல்)**

மதிப்பிற்குரிய துணை மேயர்

"நான் முதல்வன்" திட்டம் தமிழ்நாட்டில் அனைத்து தரப்பினரின் வரவேற்பினை பெற்ற ஒரு அருமையான திட்டம். **(கைதட்டல்)**அதில் மாறுபட்ட கருத்து கிடையாது. இன்றைய தினம் அனைத்து ஏழை எளிய மக்கள் பயன் பெறும் வகையில் இத்திட்டம் அமைந்துள்ளது.

திரு. கூ.பீ. ஜெயின்

"நான் முதல்வன்" திட்டத்தினால் நேரடியாக பயனடைந்தவர்கள் தங்களின் நன்றிகளை தெரிவித்துள்ளனர். இரண்டு நாட்களுக்கு முன்னதாக நேரு உள் விளையாட்டரங்கத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களும் கலந்து கொண்ட நிகழ்ச்சியில், பல மாணவ-மாணவியர் இத்திட்டத்தின் வாயிலாக தாங்கள் அடைந்த பயன்களை மேடையில் பகிர்ந்து கொண்டு தங்களின் நன்றிகளை தெரிவித்தனர்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

நானும் அந்த நிகழ்ச்சியில் பங்கேற்றேன். மாணவ, மாணவியர் நன்றி தெரிவித்தது உணர்வுபூர்வமாகவும், கண்கலங்கும் வகையிலும் நெகிழ்ச்சியாக இருந்தது.

திரு. கூ.பீ. ஜெயின்

அதே போன்று "உலகம் உங்கள் கையில்" – எனும் மாணவ-மாணவியருக்கு லேப்-டாப் வழங்கும் திட்டம். இந்த ஆண்டில் மட்டும் கிட்டத்தட்ட *10* லட்சம் மாணவ-மாணவியருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு *12*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் - *9*ல் ஆயிரம் விளக்கு பகுதியில் தசைத்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் தசைச்சிதைவு நோயால் *(Muscular Dystrophy)* பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்புக்கல்வி கற்பித்தல் மற்றும் குறைந்த நடமாடும் திறன் கொண்ட குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதில் மாணவ-மாணவியர்களுக்கான ஹைட்ராலிக் தூக்கிகள் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள், சாய்தள வசதியுடன் கூடிய கழிவறை, பாதுகாப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பள்ளியைப் போன்று இதர *14* மண்டலங்களிலும் வட்டார துணை ஆணையர் அவர்களின் மேற்பார்வையில் பொது-தனியார் பங்களிப்பு *(Public- Private Partnership)* மற்றும் அரசு சாரா நிறுவனம் *(Non Governmental Organization)* மூலம் சிறப்பு பள்ளிகள் நிறுவப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *15* : பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள *140* மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், *19* மாநகர சமுதாய நல மையங்கள், *200* மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் *1* தொற்று நோய் மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த *360* சுகாதார மையங்களில் புற்று நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பெண்களை பெரிதும் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோய் ***HPV DNA*** என்னும் நுண்கிருமியால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால் ***HPV*** வைரஸ் மூலம் உண்டாக்கும் கருப்பை வாய்

புற்றுநோயை கண்டறியும் விதமாக *360* சுகாதார மையங்களிலும் இந்த பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மாதிரிகளை தொற்று நோய் மருத்துவமனையிலுள்ள ***RTPCR*** கூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.*1* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *20* : சென்னை மாவட்டத்தில் காசநோய் திட்டம் *1998*-ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டு, இதற்காக மண்டலம்-*6*ல் புளியந்தோப்பு பகுதியில் காசநோய் மருத்துவமனை *2001* முதல் இயங்கி வருகிறது. இந்த காசநோய் மருத்துவமனையில் மாவட்ட திட்ட அலுவலகம், ஊடுகதிர் *(X-Ray)* வசதி மற்றும் பயிற்சி வசதிகள் உள்ளன. தற்போது, இந்த கட்டடம் பழுதடைந்து ஒரு சில இடங்களில் சிதிலமடைந்து காணப்படுகிறது. இந்த பழுதடைந்த காச நோய் மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டுவது அவசியமாகிறது. எனவே, பழைய கட்டடத்திற்கு பதிலாக புதிய கட்டிடம் ரூ.*5* கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *34* : பணியாளர்களின் பாதுகாப்பதற்கும் மற்றும் சுலபமாக கையாள்வதற்கும், அவர்களின் வேலையை எளிமையாக்குவதற்கும், துருப்பிடிப்புத் தன்மை குறைவான, நீண்ட ஆயுட்காலம் மற்றும் குறைந்த பராமரிப்பு செலவு கொண்ட சுமார் *2,850* எண்ணிக்கையிலான *Hot Dip Galvanised Compactor Bins*-களை ரூ.*12* கோடி மதிப்பீட்டில் மூலதன நிதியின் கீழ் கொள்முதல் செய்து மண்டலம் - *4, 7* மற்றும் *8*-ற்கு தேவைக்கேற்ப பகிர்ந்து வழங்கப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *62*: சேத்துபட்டு, டாக்டர் குருசாமி பாலத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ளதால் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகிறார்கள். போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு, சேத்துப்பட்டு மெக்னிக்கல்ஸ் சாலை பகுதியிலிருந்து ஈ.வெ.ரா. பெரியார் சாலையை எளிதில் சென்றடையும் வகையில் இரயில்வே இருப்புப்பாதையின் குறுக்கே ரூ.*25* கோடி

மதிப்பீட்டில் இலகுரக வாகனங்கள் செல்லும் வகையில் ஒரு வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை *(3.60* மீட்டர்*)* அமைக்கப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *61* *:* சுற்றுலாவை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மெரினா கடற்கரையை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்காக கலங்கரை விளக்கம் *(Light House)* முதல் அண்ணா நினைவிடம் வரை கயிறு வழித்தட *(Rope way car)* வசதி அறிமுகப்படுத்த திட்டமிட்டப்பட்டுள்ளது. இந்த கயிறு வழித்தடங்கள், நகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்வதுடன், சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்துகின்றன. இந்த கயிறு வழித்தடங்கள் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் அழகை ரசிக்க வைக்கும் பரந்த காட்சிகளை *(Panoramic views)* வழங்குவதோடு மறக்க முடியாத அனுபவங்களையும் உருவாக்கும் வகையில் பொது-தனியார் பங்களிப்பு *(PPP)* முறையில் கயிறு வழித்தடங்கள் *(Rope way car)* அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக எனது பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறேன். இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

மாண்புமிகு மேயர்

போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்.

திரு. கூ.பீ. ஜெயின்

மாண்புமிகு மேயர் அவர்களே, நீர்நிலைகளை சுற்றி சுவர் எழுப்பப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் ஆறு பகுதிகளுக்கும் சுற்றி சுவர் எழுப்பப்படும் என நினைக்கிறேன். இடம் பெயரும் தொழிலாளர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்து தர வேண்டும்.

மாண்புமிகு மேயர்

வெளி மாநிலத்தவர், மற்றும் சாலையோரம் வசிப்பவர்கள் அனைவருக்குமே ஒதுக்கீடு செய்யப்படும்.

திரு. கூ.பீ. ஜெயின்

நம் தமிழ்நாட்டில் இருப்பவர்களோடு, மற்ற மாநிலத்தவருக்கும் வீடுகள் ஒதுக்கீடு செய்ய உள்ளதற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். ***(கைதட்டல்)***

அடுத்து, நகரமைப்பு நிலைக்குழு தலைவர் திரு. இளைய அருணா அவர்கள் கோரியபடி மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியினை ரூ.75 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும். GST நீங்கலாக அதனை ரூ.80 லட்சமாக உயர்த்தப்பட வேண்டும் என்பதே எனது கோரிக்கை.

அறிவிப்பு 49 : பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அம்பத்தூர் ஏரி (மண்டலம்- 7), மஞ்சம்பாக்கம் ஏரி (மண்டலம்-2), மற்றும் மண்டலம்-15ல் உள்ள புல்லக்கேணி குளம், வையாபுரி குளம், சாலிமார் கார்டன் குளம் என முக்கியமான மற்றும் பயன்பாட்டிற்கு அதிகம் தேவையான 30 நீர்நிலைகளை புனரமைத்து, அதன் கொள்ளளவை அதிகரிக்கவும், மழைநீர் சேமிக்கும் திறனை அதிகரிக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் ரூ.100 கோடி மதிப்பீட்டில் நீர்நிலைகளை புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

மேற்கண்ட அறிவிப்பில் 95 ஆவது வார்டில் வரும் வலையங்குளம் நீர்த்தேக்கம், புதிய பாலம் வழியாக அம்பேத்கர் சாலை வழியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொகுதியின் தொடக்கத்தில் இடதுபுறம் அமைந்துள்ள இந்த நீர்நிலையினையும் சேர்த்து புனரமைக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

(அவையில் மன்ற உறுப்பினர்கள் எழுந்து நின்று, தங்களுக்கு வழங்கப்பட்ட CUG (Closed User Group) அலைபேசிகளில் இன்னும் முந்தைய அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் பெயரே வருவதால், அவற்றை பயன்படுத்த இயலவில்லை என்றும், அவற்றை மாற்றி தருமாறும் கேட்டுக்கொண்டனர்)

மதிப்பிற்குரிய துணை மேயர்

சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பி இதற்கான தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.கே. கண்ணன் அவர்கள், வார்டு எண்.138.

திரு.கே.கண்ணன்

நம்மை ஆளாக்கிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோர்களை வணங்கி, திராவிட மாடல் *2.0*-னை தமிழ்நாட்டில் செயல்படுத்தி, இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக ஆக்க முன்னேற்பாடுகளை செய்து கொண்டிருக்கும், எங்களை எல்லாம் வழி நடத்தி கொண்டிருக்கும் தமிழ்நாட்டின் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை வணங்கி, இளைஞர்களின் இணையில்லா இளைய தலைவராக இன்று உருவெடுத்து நிற்கும் எங்கள் இளைய தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், எங்களை எல்லாம் வழி நடத்தி வரும் மாவட்ட செயலாளர் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அண்ணன் திரு. மா.சுப்பிரமணியன் அவர்களுக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

சட்டமன்றத்தில் அவை முன்னவர், தமிழ்நாட்டை வழி நடத்தும் முதலமைச்சர் மற்றும் சபாநாயகர் என்று மூவர் இருப்பார்கள். இங்கு மூன்றும் சேர்ந்து ஒரு பெண்ணாக ***(கைதட்டல்)*** பெண் சிங்கமாக, பெண் மேயராக, இந்தியாவின் மாநகராட்சிக்கே வழிகாட்டியாக உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மிக வேகமாக செயல்பட்டு கொண்டிருக்கும் மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும் எனக்கு பேச வாய்ப்பளித்த ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கல்வி, சுகாதாரம் மற்றும் மக்களின் வாழ்க்கை தரம் என்பதே மனித வள மேம்பாடு. அவற்றிற்கு எந்த நாடு முக்கியத்துவம் கொடுக்கிறதோ அதுவே உலகின் தலை சிறந்த நாடாகும். நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்விக்கும், சுகாதாரத்திற்கும் முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள்.

அறிவிப்பு 1 : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 35 மேல்நிலைப்பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள், 15 மையப்பள்ளிகள் மற்றும் உயர்கல்விக்கான சிறப்பு பயிற்சி அளிக்கும் 4 வட்டாரப் பள்ளிகள் என மொத்தம் 100 பள்ளிகளுக்கு, உயர்தர தொழில்நுட்ப வசதியுடன் கூடிய பன்முகசெயல்பாட்டு அச்சுப்பொறி இயந்திரம் ***(MULTI FUNCTIONAL PRINTER)*** ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் தகவல் தொழில்நுட்ப துறையின் மூலம் கொள்முதல் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

அறிவிப்பு 2: 2025-26ஆம் கல்வியாண்டில் முதற்கட்டமாக 141 உடற்கல்வி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் உடல் ஆரோக்கியம், ஒழுக்கம் மற்றும் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் இரண்டாம் கட்டமாக 2026-27ஆம் கல்வியாண்டில் தொடக்கப்பள்ளிகளுக்கு 101 ஆசிரியர்கள், நடுநிலைப்பள்ளிகளுக்கு 29 ஆசிரியர்கள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு 50 ஆசிரியர்கள் என மொத்தம் 180 தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள், ஜூன் 2026 முதல் மார்ச் 2027 வரை தொகுப்பூதிய அடிப்படையில் 10 மாதங்களுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகம்/பள்ளி மேலாண்மைக் குழு (PTA / SMC) மூலம் பணியமர்த்தப்படுவார்கள். இதற்காக ரூ.3.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

அறிவிப்பு 4: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள அனைத்து சென்னை மேல்நிலைப் பள்ளிகளிலும் 12ஆம் வகுப்பில் பயிலும் 5,314 மாணவ-மாணவியர்களின், விருப்பம் மற்றும் ஆர்வத்தின் அடிப்படையில் ஜூன் 2026 முதல் கல்வியாண்டு இறுதி வரை உயர்கல்விக்கான ஒரு வருட சிறப்பு பயிற்சிகள் ரூ.6 கோடி மதிப்பீட்டில் மாணவ-மாணவியர்களின் எதிர்கால நலனுக்காக செய்து தரப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

அறிவிப்பு 6: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள சென்னை பள்ளிகளில் 6 முதல் 9-ஆம் வகுப்பில் பயிலும் 33,865 மாணவ-மாணவியர்களின் உடல் நலத்தினை பேணும் வகையில் யோகா பயிற்சி அளிக்கப்படும். மேலும், 7, 8 மற்றும் 9ஆம் வகுப்பில்

பயிலும் 25,526 மாணவ-மாணவியர்களுக்கு உடல் ஆரோக்கியம், தன்னம்பிக்கை மற்றும் துணிச்சலை வளர்க்கும் வகையில் தற்காப்புக்கலைப் பயிற்சி அளிக்கப்படும். யோகா பயிற்சி ரூ.40 இலட்சம் மதிப்பீட்டிலும், தற்காப்புக்கலைப் பயிற்சி ரூ.1.50 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும் என்கிற அறிவிப்பு சிறப்பானதாகும்.

அறிவிப்பு 9: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை பள்ளிகளில் 130 நடுநிலை பள்ளிகள்,46 உயர்நிலைபள்ளி மற்றும் 35 மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவியர்கள் தமிழ், ஆங்கிலத்தில் இலக்கண பிழை இல்லாமல் எழுதுவதற்கும் மாணவர்களிடையே உரையாடலை எளிமையாக்குவதற்கும், அதிக அளவில் தமிழ், ஆங்கிலச் சொற்களை கற்றுக்கொள்ளவதற்கும், மேலும், அவர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தும் நோக்கிலும், 8ஆம் வகுப்பில் பயிலும் 8,892 மாணவ-மாணவியர்கள், 9-ஆம் வகுப்பில் பயிலும் 7,934 மாணவ-மாணவியர்கள் மற்றும் 10-ஆம் வகுப்பில் பயிலும் 7,292 மாணவ-மாணவியர்கள் என மொத்தம் 24,118 மாணவ-மாணவியர்களுக்கு தமிழ்-ஆங்கில அகராதி (Dictionary) ரூ.37 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வழங்கப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும். இது போன்ற அறிவிப்புகள் கல்வித்துறையை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான மிக சிறந்த அறிவிப்புகளாக உள்ளன.

அறிவிப்பு 15: பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 19 மாநகர சமுதாய நல மையங்கள், 200 மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் 1 தொற்று நோய் மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த 360 சுகாதார மையங்களில் புற்று நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பெண்களை பெரிதும் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோய் ***HPV DNA*** என்னும் நுண்கிருமியால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால் ***HPV*** வைரஸ் மூலம் உண்டாக்கும் கருப்பை வாய் புற்றுநோயை கண்டறியும் விதமாக 360 சுகாதார மையங்களிலும் இந்த பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மாதிரிகளை தொற்று நோய் மருத்துவமனையிலுள்ள ***RTPCR*** கூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

இதற்காக ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பு சிறப்பானதாகும்.

மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி எதிர்கால சந்ததியினருக்காக இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் தமிழ்நாட்டில் தான் முதன் முதலில் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு 17 : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள மக்களைத்தேடி மருத்துவத் திட்டம், பெண் தன்னார்வ களப்பணியாளர்களைக் கொண்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பெண் தன்னார்வலர்கள், பிசியோதெரபிஸ்ட் மற்றும் செவிலியர்கள் என 600 களப்பணியாளர்கள் களப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் களப்பணிக்கு தேவையான இரத்த அழுத்தமானி, இரத்த சர்க்கரை அளவிடும் கருவி, ஊசிகள், சுத்தமான பஞ்சுப் பெட்டி, பயன்படுத்தப்பட்ட பஞ்சுப் பெட்டி, அளவிடும் நாடா, கையுறைகள், டார்ச் லைட், மின்னணு எடை இயந்திரம், கோப்புகள் மற்றும் கோப்புறைகள் எடுத்துச் செல்ல ஒரே மாதிரியான மருத்துவம் சார்ந்த உடைமைகள் வைக்கும் பை *(Medical Kit Bag)* அளிப்பது அவசியமாகிறது. இதன் மூலம் இந்த களப் பணியாளர்கள் களப்பணிக்கு தேவையான அனைத்துப் பொருட்களையும் ஒரே பையில் எடுத்துச் சென்று சிறப்பாக செயலாற்ற இயலும் என்பதால் 600 களப்பணியாளர்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் மருந்து உபகரணங்கள் வைக்கும் பை கொள்முதல் செய்து வழங்கப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

அறிவிப்பு 16: பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் *(UPHC)*, 19 மாநகர சமுதாய நல மையங்கள் *(UCHC)*, 200 மாநகர நல வாழ்வு மையங்கள் *(HWC)* மற்றும் 1 தொற்று நோய் மருத்துவமனை *(CDH)* ஆகியவை செயல்பட்டு வருகின்றன. களப்பணியின்போது மருத்துவப் பதிவேடுகளை உடனுக்குடன் சேகரிப்பதற்கும், அதனை தலைமையிடத்திற்கு அனுப்புவதற்கும் கணினிமயமாக்கம் *(Computerisation)* செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக

செவிலியர்கள், மருத்துவப் பரிசோதனை செய்யும்போது பெறப்படும் தகவல்களான இரத்த அழுத்தம், நாடி துடிப்பு விகிதம், உயரம் மற்றும் எடை போன்ற தரவுகளின் குறிப்புகளை பகிரச் செய்ய தனியாக *Tablet* கீழ்கண்டுள்ள மையங்களுக்கு தேவைப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள *360* மருத்துவமனைகளில் உள்ள *520* செவிலியர்கள் மற்றும் *200* காச நோய் களப்பணியாளர்கள் பயன்பாட்டிற்கு இணையதள வசதியுடன் கூடிய *720 Tablet* ரூ.*2.50* கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

அறிவிப்பு எண் *17*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட *1* முதல் *15* வரை உள்ள மருத்துவ மண்டலங்களில் *7* நடமாடும் ஊடுகதிர் *(X-Ray)* வசதியுள்ள காசநோய் பரிசோதனை அலகுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாநகர காச நோய் மருத்துவமனைகளிலும், தொற்று நோய் மருத்துவமனை மற்றும் மாவட் ட காச நோய் மருத்துவமனையில் ஊடுகதிர் *(X-Ray)* சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த மருத்துவமனைகளில் ஊடுகதிர் *(X-Ray)* இயந்திரத்தின் வழியாக எடுக்கப்படும் ஊடுகதிர்களை செயற்கை நுண்ணறிவு *(AI)* வழியாக தன்னிச்சையாக ஆய்வு செய்து ஆய்வறிக்கை அளித்திட செயற்கை நுண்ணறிவு *(AI)* மென்பொருள் மற்றும் மென்பொருளை செயல்படுத்துவதற்கான உபகரணங்கள் ரூ.*1.00* கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும். இதற்கான நான் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *25*: பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு மக்களின் நலனை பாதுகாக்க நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பூச்சிகள் மற்றும் கொசுத் தொல்லையை கட்டுப்படுத்த சென்னையில் உள்ள நீர்வழிப்பாதைகள் (கூவம் ஆறு, அடையாறு ஆறு, பக்கிம்காம் கால்வாய் மற்றும் சிறிய கால்வாய்கள்) மற்றும் மழைநீர் வடிகால் கால்வாய்கள் என கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அவ்விடங்களில் தரமான பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் மேம்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி கொசுப்புழு அடர்த்தியை நிகழ்நேர கண்காணிப்பை *(Real time Monitoring)* மூன்று ஆண்டுகள் மேற்கொண்டு

பூச்சிகள் மற்றும் கொசுத்தொல்லைகளைக் கட்டுப்படுத்த ஆண்டொன்றிற்கு சுமார் ரூ.25 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

அறிவிப்பு 35: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் மத்திய தடுப்புகளில் சேகரமாகும் மண் துகள்கள் மற்றும் தூசி ஆகியவற்றை இயந்திரம் கொண்டு பெருக்கி தூய்மைப்படுத்தும் பணிக்கென 20 எண்ணிக்கையில் சிறியவகை இயந்திரப் பெருக்கி வாகனங்கள் *(Battery Operated Machanical Sweeper Mounted on LMV Vehicle)* ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 39: பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலங்களில் பேருந்து நிழற்குடைகள் மற்றும் நடைபாதைகளை தண்ணீர் மூலம் சுத்தம் செய்வதற்காக 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட *Jet Washer Mounted* இயற்கைஎரிவாயு(CNG) மூலம் இயங்கும் 10 எண்ணிக்கையிலான இலகுரக வாகனங்கள் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். இந்த அறிவிப்புகள் அனைத்தும் சுகாதார துறையின் "வருமுன் காப்போம்" என்கிற திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்து தலைசிறந்த ஒரு மாநகராட்சியாக விளங்கி, அடுத்த கட்டத்திற்கு சென்று கொண்டிருக்கிறது.

அறிவிப்பு 52 : சென்னையின் 5 சதுர கி.மீ பரப்பளவிலான நுங்கம்பாக்கம், கல்லூரிசாலை, கிரீம்ஸ்சாலை மற்றும் அண்ணா சாலையை உள்ளடக்கிய பகுதியை, செயற்கை நுண்ணறிவு *(AI)* தொழில் நுட்பத்துடன் கூடிய ஒரு டிஜிட்டல் ட்வின் *(Digital Twin)* திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. நகர்ப்புற தரவு களஞ்சிய திட்டம் *(Urban Data Observatory)*. சென்னை நகர மேம்பாட்டின் அனைத்துத் துறைகளிலும் *'data-driven'* திட்டமிடலை வலுப்படுத்தும் ஒரு முன்னோடியான திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய *(ICCC)* தரவுகள், ஐஓடி *(IoT)* சென்சார்கள், புவிசார் *(GIS)*, *3D/4D* உருவகப்படுத்துதல் ஆகியவற்றை ஒருங்கிணைத்து வெள்ள அபாயம், போக்குவரத்து நெரிசல் மற்றும் அவசர கால நிகழ்வுகளை திட்டமிட்டு அதற்கான நடவடிக்கை மேற்கொள்ள பயனுள்ளதாக

அமையும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 59: மெரினா, பெசன்ட் நகர், வண்ணாரப்பேட்டை, நுங்கம்பாக்கம் உள்ளிட்ட *20* முக்கிய பகுதிகளில் சீரமைக்கப்பட்ட ஸ்மார்ட் பார்க்கிங் மேலாண்மை திட்டம் *(Smart Parking Management System)* செயல்படுத்தப்படும். இந்த திட்டத்தில் சீரமைக்கப்பட்ட சாலையோர வாகன நிறுத்தம், டிஜிட்டல் மற்றும் *QR* குறியீடு வழி கட்டணம், கேமரா அடிப்படையிலான கண்காணிப்பு, டிஜிட்டல் பகுப்பாய்வு *(Digital Analytics)* போன்ற பணிகள் பொதுத்-தனியார் கூட்டாண்மை *(PPP)* முறையில் நகரம் முழுவதும் ஸ்மார்ட் பார்க்கிங் வாகன நிறுத்த மேலாண்மை திட்டம் *(Smart Partking)* செயல்படுத்தப்படும் என்கிற அறிவிப்பிற்கு நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். **எங்கெல்லாம்** ஸ்மார்ட் பார்க்கிங் மேலாண்மை திட்ட **வசதி உள்ளதோ, அங்கெல்லாம் இத்திட்டத்தை விரிவுபடுத்துமாறு கேட்டு கொள்கிறேன். இத்திட்டம் மிகச் சிறப்பானதாகும். இத்திட்டம் சென்னையை போக்குவரத்து நெரிசல் அற்ற நகரமாக மாற்றும் நோக்கத்துடன் அமைகிறது.**

அறிவிப்பு 61: சுற்றுலாவை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மெரினா கடற்கரையை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்காக கலங்கரை விளக்கம் *(Light House)* முதல் அண்ணா நினைவிடம் வரை கயிறு வழித்தட *(Rope way car)* வசதி அறிமுகப்படுத்த திட்டமிட்டப்பட்டுள்ளது. இந்த கயிறு வழித்தடங்கள், நகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்வதுடன், சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்துகின்றன. இந்த கயிறு வழித்தடங்கள் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் அழகை ரசிக்க வைக்கும் பரந்த காட்சிகளை *(Panoramic views)* வழங்குவதோடு மறக்க முடியாத அனுபவங்களையும் உருவாக்கும் வகையில் பொது-தனியார் பங்களிப்பு *(PPP)* முறையில் கயிறு வழித்தடங்கள் *(Rope way car)* அமைக்கப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். இதற்கான நிதியினை மாண்புமிகு மேயர் அவர்கள் வருங்காலத்தில் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென கேட்டு கொள்கிறேன்.

அறிவிப்பு 68: பெருநகர சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 மண்டலங்களுக்குட்பட்ட 50 மயான பூமிகளில் உள்ள சுற்றுச்சுவர் மற்றும் மயான பூமி வளாகத்தை நவீன முறையில் மேம்படுத்த ரூ.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். மேலும், மயானங்களை மேம்படுத்தும் பணிகளுக்கும் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து மேம்படுத்த வேண்டுமென்றும் கேட்டு கொள்கிறேன்.

அறிவிப்பு 76: 2026-27 ஆம் நிதியாண்டில் மண்டலம்-1 முதல் 15 வரை உள்ள போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள கீழ்கண்ட 15 பேருந்து தட சாலைகளை அகலப்படுத்தி சாலையை கடந்து செல்ல சாலையின் குறுக்கே கான்கிரீட்டிலான மேடை வேகத்தடை(Concreate Table top) அமைத்தல், எச்சரிக்கை மற்றும் அறிவிப்புப் பலகைகள், கட்டை தூண்கள் (Bollards) நிறுவுதல் மற்றும் பாதசாரிகளின் பாதுகாப்பிற்காக ஒலிப்பெருக்கி அமைக்கும் பணிகள் போன்ற அனைத்து வகையான பாதுகாப்பு அம்சங்களுடன் ரூ.45.00 கோடி மதிப்பீட்டில் பேருந்து தட சாலைகள் மேம்படுத்தப்படும் என்கிற அறிவிப்பிற்கு நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

138-ஆவது வார்டு அண்ணா பிரதான சாலை மற்றும் அஷோக்பில்லர் சாலையில் பணிகள் மேற்கொள்ளப்பட இருப்பதற்காக மாண்புமிகு மேயர் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு - 77: பெருநகர சென்னை மாநகராட்சி சாலைகளில் ஏற்படும் ஒட்டுப்பணிகள் தார்கலவை அல்லது சிமென்ட் கான்கிரீட் கலவை மூலம் மேற்கொள்ளப்படுகிறது. நவீன மறுசுழற்சி சாலை பழுதுபார்க்கும் இயந்திரத்தின் மூலம் ஒட்டுப்பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்கனவே சேதமடைந்த பகுதிகளை அகச்சிவப்பு (Infrared) வெப்பமானி மூலம் சூடாக்கி தார்கலவையுடன் கலந்து சீரமைக்கப்படும், இதனால் சாலை ஒட்டுப்பணி மேற்கொள்ளும் பகுதி, சாலைப்பகுதியுடன் சரிசமமாக (Seamless) இணைக்கப்படுவதால் எவ்வித மேடு பள்ளம் இல்லாமல் சீராக அமையும் என்பதால், 2026-27 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி

பேருந்து தட சாலைகள் மற்றும் உட்புற சாலைகளில் ஏற்படும் ஒட்டுப்பணிகளுக்கு நவீன மறுசுழற்சி சாலை பழுது பார்க்கும் நடமாடும் இயந்திரங்கள் *(Infra Red Recycling Road repair mobile machines)* கொள்முதல் செய்து முதற்கட்டமாக பத்து எண்ணிக்கையிலான நவீன மறுசுழற்சி சாலை பழுது பார்க்கும் நடமாடும் கனகர வாகனங்கள் ரூ.*15* கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும். இந்த மறுசுழற்சி சாலை பழுது பார்க்கும் நடமாடும் கனகர வாகனங்கள் மூன்று வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஒப்பந்ததாரர் மூலம் சாலை பழுது பார்க்கும் பணிகள் ஒட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும். உண்மையிலேயே, இவ்வறிவிப்பு சாலை வசதிகளை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றும். இது மக்களுக்கு பயனளிப்பதோடு மட்டுமல்லாது, மாமன்ற உறுப்பினர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியளிக்கும் அறிவிப்பாக அமைந்துள்ளது என்பதை தெரிவித்து கொண்டு, இதற்காக என் நன்றியை உரித்தாக்கி கொள்கிறேன்.

அறிவிப்பு *79*: பெருநகர சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகளில் உள்ள தெருவிளக்கு கம்பங்கள் மற்றும் தனியார் மூலம் நிறுவப்பட்ட கம்பங்களின் மூலம் *Over Head cable* எடுத்து செல்வதை அகற்றிவிட்டு சேவைக் குழாய் *(Service Duct)* மூலம் கம்பி வடங்களை *(Cable)* எடுத்து செல்லும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *88*: சொத்து உரிமையாளர்கள் சொத்துவரி செலுத்தும்போது வரி ரசீது உடனுக்குடன் சொத்து உரிமையாளருக்கு குறுந்தகவல் மூலமாக பதிவு செய்துள்ள தொலைப்பேசி எண்ணிற்கு பதிவு செய்துள்ள கைப்பேசி எண்ணிற்கு *WhatsApp Message* அனுப்பப்படும். அதன் மூலமாக வரி செலுத்துபவர்கள் உடனுக்குடன் வரி ரசீது பெற்று கொள்வது எளிதாகும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு -*89*: பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள *5, 8, 9, 10, 11, 12* மற்றும் *15* ஆகிய மண்டலங்களில் பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் *10*

எண்ணிக்கையிலான சமுதாய நலக்கூடங்களை ரூ.20 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் நவீனமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டத்தக்கதாகும்.

128வது வார்டில் உள்ள சமூக நலக்கூடத்தினை மேம்படுத்த வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்காதவர்களுக்குமான அரசு இது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பினரையும் தம் மக்களாக கருதி, அவர்களுக்கான நன்மைகளை செய்து வருகிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியை தெரிவித்து கொண்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. க.வி. நாகவள்ளி, அவர்கள், வார்டு எண்.88.

திருமதி. க.வி. நாகவள்ளி

"தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்" என்று நம்மை எல்லாம் தலை நிமிர செய்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர், செயல் வீரர், எங்கள் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அவர்களையும் வணங்குகிறேன்.

அறிவிப்பு 6: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள சென்னை பள்ளிகளில் 6 முதல் 9-ஆம் வகுப்பில் பயிலும் 33,865 மாணவ-மாணவியர்களின் உடல் நலத்தினை பேணும் வகையில் யோகா பயிற்சி அளிக்கப்படும். மேலும், 7, 8 மற்றும் 9ஆம் வகுப்பில் பயிலும் 25,526

மாணவ-மாணவியர்களுக்கு உடல் ஆரோக்கியம், தன்னம்பிக்கை மற்றும் துணிச்சலை வளர்க்கும் வகையில் தற்காப்புக்கலைப் பயிற்சி அளிக்கப்படும். யோகா பயிற்சி ரூ.40 இலட்சம் மதிப்பீட்டிலும், தற்காப்புக்கலைப் பயிற்சி ரூ.1.50 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் இந்த பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

அறிவிப்பு 4: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள அனைத்து சென்னை மேல்நிலைப் பள்ளிகளிலும் 12ஆம் வகுப்பில் பயிலும் 5,314 மாணவ-மாணவியர்களின், விருப்பம் மற்றும் ஆர்வத்தின் அடிப்படையில் ஜூன் 2026 முதல் கல்வியாண்டு இறுதி வரை உயர்கல்விக்கான ஒரு வருட சிறப்பு பயிற்சிகள் ரூ.6 கோடி மதிப்பீட்டில் மாணவ-மாணவியர்களின் எதிர்கால நலனுக்காக செய்து தரப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

அறிவிப்பு 2: 2025-26ஆம் கல்வியாண்டில் முதற்கட்டமாக 141 உடற்கல்வி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் உடல் ஆரோக்கியம், ஒழுக்கம் மற்றும் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் இரண்டாம் கட்டமாக 2026-27ஆம் கல்வியாண்டில் தொடக்கப்பள்ளிகளுக்கு 101 ஆசிரியர்கள், நடுநிலைப்பள்ளிகளுக்கு 29 ஆசிரியர்கள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு 50 ஆசிரியர்கள் என மொத்தம் 180 தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள், ஜூன் 2026 முதல் மார்ச் 2027 வரை தொகுப்பூதிய அடிப்படையில் 10 மாதங்களுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகம்/ பள்ளி மேலாண்மைக் குழு (PTA / SMC) மூலம் பணியமர்த்தப்படுவார்கள். இதற்காக ரூ.3.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

மாண்புமிகு மேயர் அவர்களே, மேற்கண்ட அறிவிப்புகளில் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு யோகா, தற்காப்பு கலை பயிற்சி, 12-ஆம் மாணவ, மாணவியர்களுக்கான ஒரு வருட கால சிறப்பு பயிற்சி, தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள் பணியமர்த்துதல் என்று ஒருவரையும் பின் தங்க

விடமாட்டோம் என்கிற கொள்கையின் அடிப்படையில் கல்வியின் தரத்தை உயர்த்தும் வகையில் அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து-

அறிவிப்பு 12: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் - 9ல் ஆயிரம் விளக்கு பகுதியில் தசைத்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் தசைச்சிதைவு நோயால் *(Muscular Dystrophy)* பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்புக்கல்வி கற்பித்தல் மற்றும் குறைந்த நடமாடும் திறன் கொண்ட குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதில் மாணவ-மாணவியர்களுக்கான ஹைட்ராலிக் தூக்கிகள் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள், சாய்தள வசதியுடன் கூடிய கழிவறை, பாதுகாப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பள்ளியைப் போன்று இதர 14 மண்டலங்களிலும் வட்டார துணை ஆணையர் அவர்களின் மேற்பார்வையில் பொது-தனியார் பங்களிப்பு *(Public-Private Partnership)* மற்றும் அரசு சாரா நிறுவனம்*(Non Governmental Organization)* மூலம் சிறப்பு பள்ளிகள் நிறுவப்படும் என்கிற அறிவிப்பு மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்த கூடிய ஒரு அறிவிப்பாக இருக்கின்றது.

அறிவிப்பு 15 : பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 19 மாநகர சமுதாய நல மையங்கள், 200 மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் 1 தொற்று நோய் மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த 360 சுகாதார மையங்களில் புற்று நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பெண்களை பெரிதும் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோய் ***HPV DNA*** என்னும் நுண்கிருமியால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால் ***HPV*** வைரஸ் மூலம் உண்டாக்கும் கருப்பை வாய் புற்றுநோயை கண்டறியும் விதமாக 360 சுகாதார மையங்களிலும் இந்த பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மாதிரிகளை தொற்று நோய் மருத்துவமனையிலுள்ள ***RTPCR*** கூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

இதற்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

இந்த அறிவிப்பு பெண்களுக்கு கருப்பை வாய் புற்றுநோய் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்கான நல்லதொரு நடவடிக்கையாக உள்ளது.

அறிவிப்பு 35: பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து நிரந்தர, தற்காலிக மற்றும் வெளிமுகமை தூய்மைப் பணியாளர்களுக்கும் கோடைக் காலங்களில் ஏற்படும் வெயில் தாக்கத்தை போக்கவும் நீர்ச்சத்தை பராமரிக்கவும் உடல் வெப்பத்தை தணிக்கவும் கோடை காலம் முழுவதும் தூய்மைப் பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

எல்லோருக்கும் எல்லாம் என்கின்ற ஆட்சியை நடத்தி கொண்டிருக்கும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் இத்தகைய புதிய திட்டம் தொடங்கப்படுவது மிகவும் வரவேற்கத் தக்கது.

அறிவிப்பு 45: 2026-27ஆம் நிதியாண்டில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில் மக்கள் அதிகம் கூடும் பூங்காக்களான

1. மண்டலம்-2, கோட்டம்-15, மணலி நியு டவுன், Block No.26, CPS-10 பூங்கா.
2. மண்டலம்-5, கோட்டம்-53, தங்கசாலை பூங்கா.
3. மண்டலம்-7, கோட்டம்-83, மதனகுப்பம் பூங்கா.
4. மண்டலம்-8, கோட்டம்-103, டாக்டர். விஸ்வேஸ்வரய்யா டவர் பூங்கா.
5. மண்டலம்-13, கோட்டம்-123, ராஜிவ்காந்தி சாலை பூங்கா

ஆகிய 5 பூங்காக்களில், சிறப்பு குழந்தைகளுக்கான உபகரணங்கள் உள்ளடக்கிய (Inclusive Parks for Special Children) சிறப்பு அம்சங்கள் கொண்ட பூங்காக்களாக ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

அறிவிப்பு *46*: *2026-27*ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுடன் இணைந்து பசுமைப் பரப்பை பெருமளவில் அதிகரிக்க மாடம்பாக்கம், கைலாசபுரம் *(மயிலாப்பூர்) (மண்டலம்-9)* மற்றும் சாத்தாங்காடு *(மண்டலம்-2)* ஆகிய இடங்களில் நாற்றங்கால் பண்ணைகள் ஏற்படுத்தி அங்கு வனத்துறையின் உதவியுடன் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து, பொது மக்களுக்கு விலையில்லாமல் வழங்குவதோடு அவர்கள் உள்ளார்ந்த பங்கேற்புடன், சென்னை மாநகராட்சி பகுதிகளில் பசுமைப்பரப்பை அதிகரிக்க இம்மரக்கன்றுகளை நடவு செய்து, சென்னையை பசுமை மிக்க நகரமாக மாற்ற ரூ.*10* கோடி மதிப்பீட்டில் **"பசுமைச் சென்னை திட்டம்"** என்ற திட்டம் அறிமுகம் செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

அறிவிப்பு *69* *:* பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் *6* இடங்களில் வீடற்றோர்கள் தங்குவதற்கான அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய இரவு காப்பகம் *(தரைதளம் மற்றும் முதல் தளம்)* மொத்தம் ரூ.*9* கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

அறிவிப்பு *71* *:* பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ், பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களின் கௌரவமான வாழ்க்கைக்காக, அடிப்படை வசதிகள் மற்றும் உரிமைகளை உறுதி செய்ய, பெண்கள், குழந்தைகள், முதியோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் சமூகத்தினருக்கான நலத்திட்டங்கள், பாதுகாப்பு, புகார் தீர்வு மற்றும் விழிப்புணர்வை ஒருங்கிணைத்து, கள ஆய்வுகள் மற்றும் சமூக-பொருளாதார கணக்கெடுப்புகளின் உண்மைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு சமூகச் ஒருங்கிணைப்பு மற்றும் மேம்பாட்டை வலுப்படுத்த ரூ.*1* கோடி மதிப்பீட்டில் *"சமூக-பொருளாதார மேம்பாட்டுப் பிரிவு" (Socio-Economic Development Wing)* புதிதாக உருவாக்கப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

அறிவிப்பு *72* *:* பெருநகர சென்னை மாநகராட்சியின் நகர மக்களின் மனநலம், சமூக இணைப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில்,

குழந்தைகளை திரைச் சார்ந்த பழக்கங்களிலிருந்து பாரம்பரிய விளையாட்டு மற்றும் கலை சார்ந்த கலாச்சார செயல்பாடுகளில், ஆர்வத்தை ஏற்படுத்தவும், இளைஞர்கள் மற்றும் முதியோர் உட்பட அனைத்து தரப்பினருக்கும் மன-உடல் நலத்தை ஊக்குவிக்கவும், மக்களிடையே அன்பையும், நட்பையும் வளர்க்கும் பொழுது போக்குகளை ஊக்கப்படுத்தவும், பொது மற்றும் பொழுதுபோக்கு இடங்கள், மக்கள் இணையும் நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளை உருவாக்கும் வகையில் 'மகிழ்ச்சி மற்றும் பொழுதுபோக்குப் பிரிவு *(Happiness and Recreation Wing)* பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.*1* கோடி மதிப்பீட்டில் புதிதாக உருவாக்கப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

மேற்படி அறிவிப்புகளில் பல்வேறு சிறப்பு அம்சங்களோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவுக்கு தமிழ்நாடு தான் மாடல் என்று கூறியதை நினைவு கூர்ந்து அனைத்து மாநகராட்சிகளுக்கும் பெருநகர சென்னை மாநகராட்சி தான் மாடல் என்கிற வகையிலே இந்த நிதிநிலை அறிக்கை உருவாக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக,

அறிவிப்பு *82*: பெருநகர சென்னை மாநகராட்சி, தற்போது "நம்ம சென்னை" *(Namma Chennai)* கைப்பேசி செயலி மற்றும் *www.chennaicorporation.gov.in* என்ற அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம், சென்னை வாழ் குடிமக்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்கி வருகிறது. இத்தளங்கள், மாநகராட்சிக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான முக்கியமான தொடர்பு பாலமாக செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில், தகவல் தொழில் நுட்பத் துறையின் வேகமான வளர்ச்சி, பொதுமக்களிடம் அதிகரித்து வரும் எதிர்பார்ப்புகள் மற்றும் டிஜிட்டல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்களை கருத்தில் கொண்டு, தற்போதுள்ள "நம்ம சென்னை" செயலி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தை முழுமையாக மறுவடிவமைத்து, சென்னை வாசிகளின் இணையதள தினசரி வாழ்க்கையை எளிதாக்கும் நோக்கில் நவீன நகர சேவைத் தளமாக ரூ.*2.50* கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

மேற்கண்ட அறிவிப்பில் பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே இயங்கி வரும் நம்ம சென்னை கைப்பேசி செயலி 1.0ஐ மறுவடிவமைப்பு செய்து நம்ம சென்னை கைப்பேசி செயலி 2.0ஆக *(Chennai Mobile App)* மேம்படுத்தப்படும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி www.chennaicorporation.gov.in அதிகாரப்பூர்வ இணையதளம் 2.0ஆக மறுவடிவமைப்பு செய்யப்படும் **என அறிவிக்கப்பட்டுள்ளது. "யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே" என்கிற பழமொழிக்கேற்ப, திராவிட மாடல் ஆட்சி *2.0* வருவதற்கான முன்னறிவிப்பாக இந்த மேம்பாடுகள் நிகழ்ந்திருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது.**

இத்தகைய சிறப்பானதொரு நிதிநிலை அறிக்கையை தயார் செய்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், வட்டார துணை ஆணையர்கள், அனைத்து துறை அதிகாரிகளுக்கும் வணக்கத்தையும், நன்றியையும், வாழ்த்துக்களையும் என் சார்பாகவும், 88வது வார்டு பொதுமக்கள் சார்பாகவும் தெரிவித்து கொண்டு, பேசுவதற்கு இந்த வாய்ப்பினை வழங்கிய ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். "மாண்புமிகு ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்."- திராவிட மாடல் 2.0 ஆட்சியில் மீண்டும் சந்திப்போம். " வெல்வோம் ஒன்றாக."

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. சிவராஜசேகரன் அவர்கள், வார்டு எண். 63.

திரு. சிவராஜசேகரன்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, சக மாமன்ற உறுப்பினர்களே, ஆளுங்கட்சி தலைவர் திரு.ந. இராமலிங்கம் அவர்களே, மேலும் இக் கூட்டத்தில் பங்கேற்று கொண்டிருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மன்ற குழு தலைவர் அன்பு சகோதரர் திரு. ம. சாமுவேல் திரவியம் உள்ளிட்ட சக மாமன்ற

உறுப்பினர்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

முதலில், மாமன்ற உறுப்பினர்களாகிய நாம் மாண்புமிகு மேயர் அவர்களுக்கு பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து கொள்ள வேண்டிய தருணம் இது. அவர் முதன் முறையாக பொறுப்பேற்ற காலத்தில் மாநகராட்சி நிதிநிலை அறிக்கை ரூ. *3000* கோடியில் சமர்ப்பிக்கப்பட்டது. இன்று நான்கு ஆண்டுகளில் அது மும்மடங்கு வளர்ச்சி பெற்று, கிட்டத்தட்ட ரூ. *9000* கோடியாக நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது மகத்தான வளர்ச்சி; அதற்காக நான் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் அவரை பாராட்டுகிறேன்.

இந்த வளர்ச்சி எவ்வாறு இருக்க வேண்டுமென்றால், பாரம்பரியமிக்க மாநகராட்சி மன்றங்களில் சென்னைக்கு நிகராக சொல்ல வேண்டுமென்றால் மும்பை மாநகராட்சியை சொல்லலாம். இந்தியாவிலேயே ஒரு மாநிலத்திற்கு இணையாக சுமார் ரூ. *70,000* கோடி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யும் அளவிற்கு பெருமை பெற்ற மாநகராட்சி மும்பை மாநகராட்சி. அத்தகைய கட்டமைப்பை நாமும் விரைவில் அடைவோம்.

வெள்ள பேரிடர்களை சமாளிப்பதற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிலை இருந்தது. உட்கட்டமைப்புகளுக்காக பெரும் தொகை செலவிடப்பட்டது. இப்போது ஒரு நவீன மாற்றம் உருவாகியுள்ளது. அந்த நவீன மாற்றம் என்னவென்றால், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அனைத்து அறிவிப்புகளும் "சிங்கார சென்னையை அடுத்த நிலைக்கு எடுத்து செல்லும் வகையில், சுற்றுலாவிற்கு அதிக கவனம் செலுத்தி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக...

அறிவிப்பு *61* சுற்றுலாவை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மெரினா கடற்கரையை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்காக கலங்கரை விளக்கம் *(Light House)* முதல் அண்ணா நினைவிடம் வரை கயிறு வழித்தட *(Rope way car)* வசதி அறிமுகப்படுத்த திட்டமிட்டப்பட்டுள்ளது. இந்த கயிறு வழித்தடங்கள், நகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்வதுடன்,

சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்துகின்றன. இந்த கயிறு வழித்தடங்கள் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் அழகை ரசிக்க வைக்கும் பரந்த காட்சிகளை *(Panoramic views)* வழங்குவதோடு மறக்க முடியாத அனுபவங்களையும் உருவாக்கும் வகையில் பொது-தனியார் பங்களிப்பு *(PPP)* முறையில் கயிறு வழித்தடங்கள் *(Rope way car)* அமைக்கப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

திடக்கழிவு மேலாண்மை துறையில், தூய்மை இந்தியா திட்டம் *2.0* மூலம் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தினை அகழ்ந்தெடுக்கும் பணி, துப்புரவு பணிக்கு தேவையான தளவாட பொருட்களை கொள்முதல் செய்தல், குப்பை கொட்டும் கிடங்குகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளுதல் மற்றும் இதர பணிகளுக்காக *2025-2026*-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*272.52* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் ரூ.*323.00* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்காக எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

சிறப்பு திட்டங்கள் : உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி, சிட்டீஸ் திட்டம், சிங்கார சென்னை *2.0* திட்டம், நீலக் கடற்கரை பணிகள், சென்னை மாநகர பங்களிப்பு *(உலக வங்கி நிதி)* போன்ற பல்வகை நிதி ஆதாரங்களை கொண்டு மூலதனப் பணிகளை மேற்கொள்ள *2025-2026*-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*157.53* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் ரூ.*85.03* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்காக எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *58*: முக்கிய போக்குவரத்து சந்திப்புகளில் ஏற்படும் நெரிசலையும், பயண நேரத்தையும் கணிசமாக குறைக்கவும், சென்னையின் பொதுப் போக்குவரத்து வலையமைப்பை வலுப்படுத்தவும் மற்றும் நிலையான, மகிழ்ச்சியான, பாதுகாப்பான போக்குவரத்து பயணத்தை மக்களுக்கு ஏற்படுத்தவும், மின்ட்சாலை – வண்ணாரப்பேட்டை மெட்ரோ மற்றும் சேப்பாக்கம் – மெரினா ஆகிய இடங்களில் மெட்ரோ இரயில், புறநகர் இரயில், பேருந்துகள், பாதசாரிகள், மிதிவண்டி பயணிகள் மற்றும் கடைசி மைல்

இணைப்புச் சேவைகளை *(Last-Mile Services)* தடையின்றி இணைக்கும் போக்குவரத்து மையங்கள் **ரூ.*40* கோடி** மதிப்பீட்டில் உருவாக்கப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

பாலங்கள்: உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி மற்றும் மூலதன நிதி ஆகியவற்றின் மூலமாக புதிய பாலங்கள் கட்டுமான பணிகள் மற்றும் பாலங்கள் விரிவுபடுத்தும் பணிகளுக்காக *2025-2026*-ஆம் நிதியாண்டில் திருத்திய திட்ட மதிப்பீட்டில் ரூ.*160.00* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் ரூ.*130.03* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்காக எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *59*: மெரினா, பெசன்ட் நகர், வண்ணாரப்பேட்டை, நுங்கம்பாக்கம் உள்ளிட்ட *20* முக்கிய பகுதிகளில் சீரமைக்கப்பட்ட ஸ்மார்ட் பார்க்கிங் மேலாண்மை திட்டம் *(Smart Parking Management System)* செயல்படுத்தப்படும். இந்த திட்டத்தில் சீரமைக்கப்பட்ட சாலையோர வாகன நிறுத்தம், டிஜிட்டல் மற்றும் *QR* குறியீடு வழி கட்டணம், கேமரா அடிப்படையிலான கண்காணிப்பு, டிஜிட்டல் பகுப்பாய்வு *(Digital Analytics)* போன்ற பணிகள் பொதுத்-தனியார் கூட்டாண்மை *(PPP)* முறையில் நகரம் முழுவதும் ஸ்மார்ட் பார்க்கிங் வாகன நிறுத்த மேலாண்மை திட்டம் *(Smart Partking)* செயல்படுத்தப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *47*: *2026-27* ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட இடங்களில் உள்ள *50* விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும் மற்றும் புதிய விளையாட்டு உபகரணங்களை ரூ.*20* கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

கல்வியை பொறுத்தவரையில் தாங்கள் செய்திருக்கும் திட்டங்கள் ஏராளம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "காலை சிற்றுண்டி" திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அந்தத் திட்டத்தை மாநகராட்சியின் அனைத்து பள்ளிகளிலும் நிறைவேற்றியுள்ளீர்கள். அது வரவேற்கத்தக்கதாகும்.

சுகாதாரம்: பெருநகர சென்னை மாநகராட்சி பரிசோதனை கூடங்களை நவீனப்படுத்துதல் மற்றும் கொசு ஒழிப்பு பணியை மேற்கொள்ள ஏதுவாக கையில் எடுத்து செல்லத்தக்க புகைபரப்பும் இயந்திரம் மற்றும் வாகனத்தில் பொருத்தகூடிய புகைபரப்பும் இயந்திரம் கொள்முதல் செய்ய *2025-2026*-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*4.85* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் ரூ.*4.30* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு எண் *15*: பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள *140* மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், *19* மாநகர சமுதாய நல மையங்கள், *200* மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் *1* தொற்று நோய் மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த *360* சுகாதார மையங்களில் புற்று நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பெண்களை பெரிதும் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோய் ***HPV DNA*** என்னும் நுண்கிருமியால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால் ***HPV*** வைரஸ் மூலம் உண்டாக்கும் கருப்பை வாய் புற்றுநோயை கண்டறியும் விதமாக *360* சுகாதார மையங்களிலும் இந்த பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மாதிரிகளை தொற்று நோய் மருத்துவமனையிலுள்ள ***RTPCR*** கூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.*1* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *70*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெயரும் தொழிலாளர்கள், வீடில்லாத நபர்கள் / குடும்பங்கள் *(Family Homeless)* தற்காலிகமாக தங்குவதற்கு *200* தற்காலிக / இடைநிலை தங்குமிடங்கள் *(Container - Temporary Homes)* ரூ.*12* கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

நிறைவாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இந்த மாமன்றம் ஒரு பெருமை வாய்ந்த மாமன்றம். நூற்றாண்டுகால பெருமை வாய்ந்த இந்த மாநகராட்சியின் இந்த இருக்கைக்கு ஒரு வரலாறு உண்டு. தமிழ்நாடு

சட்டசபை சபாநாயகரின் இருக்கை எப்படியோ அதே போன்று இந்த இருக்கையும் ஆகும்.

இன்னும் சொல்லப்போனால், செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் நிர்வாகம் இருந்த காலத்தில், இந்த நகர நிர்வாகத்தை தனியாக கவனிப்பதற்காகவே மாநகராட்சி அமைப்பு உருவாக்கப்பட்டது. டாக்டர் ராஜா சர் எம்.ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் 1933 ஆம் ஆண்டில் இந்த மன்றத்தில் மேயராக இருந்தார். இந்த இருக்கையில் அமர்கிறவர்களுக்கு ஒரு பெரிய அதிரிஷ்டம் உண்டு. **(கைதட்டல்)**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வெள்ளை மாளிகையின் வேந்தராக கோலூன்றிய இடம் இதுவே. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க மாநகராட்சியின் மேயர் தற்பொழுது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். அதே போன்று மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் மேயராக அமர்ந்திருந்த இருக்கை இதுவே. இங்கு இருந்தவர்கள் பலர் அமைச்சர்களாகவும், சட்டமன்ற உறுப்பினர்களாகவும் பணியாற்றியுள்ளனர்.

அந்த வாய்ப்பு நம்முடைய மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், அவரோடு அமர்ந்திருக்கும் மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும் கிடைக்க வேண்டும். அந்த அதிர்ஷ்ட நாற்காலி இங்கு இருக்கும் மாமன்ற உறுப்பினர்கள் பலருக்கும் கிடைக்க வேண்டும். வருங்காலத்தில் அவர்களும் அரசியலில் மேல் நிலையை அடைய வேண்டும் என கூறி, நிறைவாக ஒரு கருத்தை சொல்ல விரும்புகிறேன்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்: "உறவுக்கு கை கொடுப்போம்; உரிமைக்கு குரல் கொடுப்போம்." அந்த வார்த்தை காங்கிரஸ் பேரியக்கத்திற்கும் பொருந்தும். நாங்களும் சொல்கிறோம்: உறவிற்கு கை கொடுக்கிறோம்; உரிமைக்காக குரல் கொடுக்கிறோம். வருகின்ற தேர்தலிலும் மீண்டும் சொல்கிறேன்: ஒன்றாய் இணைவோம், தொடர்ந்து பயணிப்போம், நிச்சயம் வெல்வோம், ஒன்றிணைவோம் வா என்று சொல்வதற்குரிய அளவிற்கு, ஒன்றாய் வெல்வோம் என்று சொல்லுகின்ற அளவிற்கு இந்தக் கூட்டணி மக்கள் விரும்பும் கூட்டணியாக தொடரும்.

மகத்தான வெற்றி பெறுவோம் என்று கூறி, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், 5வது முறையாக மாமன்றத்தில் இந்த நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

திரு. த.விஸ்வநாதன், தலைவர், நிலைக்குழு (கல்வி) (குறுக்கீடு)

மாண்புமிகு மேயர் அவர்களே, பேரறிஞர் அண்ணாவின் ஐம்பெரும் முழக்கங்களில் மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சியை நாம் கடைபிடிப்போம் என்று தெரிவித்து கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

நன்றி. மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. கே. ராணி அவர்கள், வார்டு எண்.102.

திருமதி கே. ராணி

மறைந்த மாவீரர் திரு. ஜெ. அன்பழகன் அவர்களை வணங்கி என்னுடைய உரையை தொடங்குகிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்களே, தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டோம் என்று இரவு பகல் பாராமல், தமிழ் மக்களின் நலனே முக்கியம் என்று அரும்பாடுபட்டு கொண்டிருக்கும், மகளிர் உரிமை தொகை எந்த நேரத்திலும் தடைபட கூடாது என்றும், கோடை காலத்திற்கு ஊக்க தொகையாக இராண்டாயிரத்தை அளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாட்டை விளையாட்டு துறையில் உயர்த்தி உயரத்திற்கு கொண்டு சென்று, தமிழ்நாடு முழுவதும் சுற்றி சுற்றி பணியாற்றி வரும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் நாடாளுமன்றத்தில் தளபதியின் குரலாகவும், கழகத்தின் குரலாகவும் ஒலிக்கின்ற சிங்கப்பெண் கழக துணை பொது செயலாளர் எங்களது ஆருயிர் அக்கா கனிமொழி அவர்களுக்கும், எங்களோடு தோளோடு தோள் நின்று கழக பணியாற்றி ஊக்கம் தந்து கொண்டிருக்கின்ற சென்னை மேற்கு மாவட்ட

செயலாளர் சகோதரர் திரு.நே. சிற்றரசு அவர்களுக்கும், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. தயாநிதி மாறன் அவர்களுக்கும், மாண்புமிகு அண்ணாநகர் சட்டமன்ற தொகுதியின் கொடை வள்ளல் அண்ணன் திரு. எம்.கே. மோகன் அவர்களுக்கும், 102வது வார்டில் நான் எப்போது எது கேட்டாலும் செய்து தந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், துணை ஆணையர் (பணிகள்) அவர்களுக்கும், வட்டார துணை ஆணையர் அவர்களுக்கும், மண்டல அலுவலர் அவர்களுக்கும், உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் அவர்களுக்கும் மன்றத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்து அனைவருக்கும் வழிகாட்டியாக உள்ள என்னுடைய குரு ஆளுங்கட்சி தலைவர் அண்ணன் திரு.ந. இராமலிங்கம் அவர்களுக்கும், 8வது மண்டல வார்டுகுழு தலைவர் திரு.கூ.பி. ஜெயின் அவர்களுக்கும், எங்களது வடக்கு பகுதி செயலாளர் திரு. பரமசிவம் அவர்களுக்கும், நிலைக்குழு, வார்டுகுழு தலைவர்களுக்கும் மற்ற மாமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் அதிகாரி பெருமக்களுக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

102வது வார்டு மக்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பல எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 20-30 வருடங்களாக மழைநீரினால் சாலைகள் மிகவும் சேதமடைந்து மக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகி வந்தனர். சிறிய மழைக்கு கூட வீடுகளில் மழைநீர் புகும் நிலை இருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியினால், மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர், துணை ஆணையர் (பணிகள்), வட்டார துணை ஆணையர் ஆகியோர்களின் முயற்சி மற்றும் அதிகாரிகளின் ஒத்துழைப்பினால் பல பாதிக்கப்பட்ட தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் அமைத்து தந்ததற்காக கோடானுகோடி நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். புதிய சாலை அமைத்து தந்தமைக்கும், பூங்காக்களை சீரமைத்து தந்தமைக்கும், மின் விளக்குகள் அமைத்து தந்தமைக்கும், பெண்களுக்கு யோகா மையம் அமைத்து

தந்தமைக்கும் இந்த நேரத்தில் 102வது வார்டு மக்களின் சார்பாக எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

திராவிட மாடல் ஆட்சியில் மகளிர் நலம் பெற ஏராளமான திட்டங்கள் தீட்டப்பட்டு அவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கலைஞர் உரிமை தொகை ரூ.5000/-, பேருந்தில் கட்டணமில்லாமல் செல்ல மகளிர் விடியல் பயணம் மற்றும் புதுமை பெண் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 16: பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் (UPHC), 19 மாநகர சமுதாய நல மையங்கள் (UCHC), 200 மாநகர நல வாழ்வு மையங்கள் (HWC) மற்றும் 1 தொற்று நோய் மருத்துவமனை (CDH) ஆகியவை செயல்பட்டு வருகின்றன. களப்பணியின்போது மருத்துவப் பதிவேடுகளை உடனுக்குடன் சேகரிப்பதற்கும், அதனை தலைமையிடத்திற்கு அனுப்புவதற்கும் கணினிமயமாக்கம் (Computerisation) செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக செவிலியர்கள், மருத்துவப் பரிசோதனை செய்யும்போது பெறப்படும் தகவல்களான இரத்த அழுத்தம், நாடி துடிப்பு விகிதம், உயரம் மற்றும் எடை போன்ற தரவுகளின் குறிப்புகளை பகிரச் செய்ய தனியாக Tablet கீழ்கண்டுள்ள மையங்களுக்கு தேவைப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 360 மருத்துவமனைகளில் உள்ள 520 செவிலியர்கள் மற்றும் 200 காச நோய் கள பணியாளர்கள் பயன்பாட்டிற்கு இணையதள வசதியுடன் கூடிய 720 Tablet ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 42: 2026-27 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 955 பூங்காக்களில் முதற்கட்டமாக 200 பூங்காக்கள் அறிவியல் பூர்வமாக பொலிவேற்றம் செய்யப்படும். அதற்காக, உரிய தாவர அமைப்புகள், பொலிவான வருகையாளர் ஓய்விடங்கள் மற்றும் இருக்கைகள், மரங்களில் பறவைகள் வாழ்விட அமைப்புகள், இயற்கை சூழலை மக்கள்

பூங்காக்களில் உணரும் வண்ணம் மரங்களில் செயற்கையான பறவைகளின் ஒலிகள் வழங்கும் அமைப்புகள் அமைத்தல், சிறார்களைக் கவரும் வண்ணம் சிறுகுளங்கள் மற்றும் நீர்ப்பறவைகள் போன்ற அமைப்புகள், தற்காலத்திற்கேற்றவாறு நடைபாதைகள் மற்றும் ஒளிவிளக்குகள் போன்ற அமைப்புகளை ஏற்படுத்த ரூ.60 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு மிகவும் சிறப்பான ஒன்றாகும்.

அறிவிப்பு 43: 2026-27 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்கள் உள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டத்தினை அதிகரிக்கும் வகையிலும், பருவமழை காலங்களில் கிடைக்கும் நீரினை முழுமையாக சேமிக்கும் வகையிலும், முதற்கட்டமாக 1,000 சதுர மீட்டருக்கு மேல் உள்ள 25 எண்ணிக்கையிலான பூங்காக்களில், ஒரு பூங்காவிற்கு ரூ.20 இலட்சம் வீதம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் நீர் உறிஞ்சுதல் (Sponge Park) அமைப்பு அமைக்கப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 44: 2026-27 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில், முதற்கட்டமாக 200 பூங்காக்களில் நிலத்தடி நீர்மட்டத்தினை அதிகரிக்கும் வகையிலும் பூங்காவிற்கு வரும் மக்களிடம் மழை நீர் சேகரிப்பை கொண்டு சேர்க்கும் விதத்திலும், ஒரு பூங்காவிற்கு ரூ.10 இலட்சம் வீதம் ரூ.20 கோடி மதிப்பீட்டில் மழை நீர் சேகரிப்பு (Rain Water Harvesting) திட்டம் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு எண்-4: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள அனைத்து சென்னை மேல்நிலைப் பள்ளிகளிலும் 12ஆம் வகுப்பில் பயிலும் 5,314 மாணவ-மாணவியர்களின், விருப்பம் மற்றும் ஆர்வத்தின் அடிப்படையில் ஜூன் 2026 முதல் கல்வியாண்டு இறுதி வரை உயர்கல்விக்கான ஒரு வருட சிறப்பு பயிற்சிகள் ரூ.6 கோடி மதிப்பீட்டில் மாணவ-மாணவியர்களின் எதிர்கால நலனுக்காக செய்து தரப்படும் என்கிற அறிவிப்பு மிகவும் பாராட்டிற்குரியது.

அறிவிப்பு 23: வெறிநாய்க்கடி நோய் பாதிப்பிலிருந்து பொது மக்களை காத்திடவும், வெறிநாய்க்கடி நோய் இல்லா சென்னை மாநகரை

உருவாக்கிடவும் *(Rabies free Chennai)* கடந்த ஆண்டு *09.08.2025* முதல் *31.12.2025* வரை அனைத்து மண்டலங்களிலும் உள்ள *1,47,538* தெரு நாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி *(Anti Rabies Vaccination)* மற்றும் அகப்புற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தும் திட்டம் முதல் தவணையாக செயல்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து இரண்டாவது தவணையாக *1* முதல் *15* வரையிலான மண்டலங்களில் உள்ள அனைத்து தெருநாய்களுக்கும் வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி மற்றும் அகப்புற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தும் சிறப்பு முகாம் ரூ.*3.50* கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *15*: பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள *140* மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், *19* மாநகர சமுதாய நல மையங்கள், *200* மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் *1* தொற்று நோய் மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த *360* சுகாதார மையங்களில் புற்று நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பெண்களை பெரிதும் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோய் ***HPV DNA*** என்னும் நுண்கிருமியால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால் ***HPV*** வைரஸ் மூலம் உண்டாக்கும் கருப்பை வாய் புற்றுநோயை கண்டறியும் விதமாக *360* சுகாதார மையங்களிலும் இந்த பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மாதிரிகளை தொற்று நோய் மருத்துவமனையிலுள்ள ***RTPCR*** கூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.*1* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். இந்த மகத்தான திட்டத்தின் மூலம் ஏராளமான பெண்கள் பயனடைவார்கள்.

அறிவிப்பு *42*: *2026-27* ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட *955* பூங்காக்களில் முதற்கட்டமாக *200* பூங்காக்கள் அறிவியல் பூர்வமாக பொலிவேற்றம் செய்யப்படும். அதற்காக, உரிய தாவர அமைப்புகள், பொலிவான வருகையாளர் ஓய்விடங்கள் மற்றும் இருக்கைகள், மரங்களில் பறவைகள் வாழ்விட அமைப்புகள், இயற்கை சூழலை மக்கள் பூங்காக்களில் உணரும் வண்ணம் மரங்களில் செயற்கையான பறவைகளின் ஒலிகள் வழங்கும் அமைப்புகள் அமைத்தல், சிறார்களைக் கவரும் வண்ணம் சிறுகுளங்கள் மற்றும் நீர்ப்பறவைகள் போன்ற அமைப்புகள்,

தற்காலத்திற்கேற்றவாறு நடைபாதைகள் மற்றும் ஒளிவிளக்குகள் போன்ற அமைப்புகளை ஏற்படுத்த ரூ.60 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

சென்னை மாநகர மக்களின் மகிழ்ச்சியின் மூலாதாரம் பூங்காக்களே. மன அமைதிக்காகவும், உடல் ஆரோக்கியத்திற்காகவும் பூங்காக்களை நாடி செல்லும் மக்களுக்கு அங்கு ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது. அதன் மூலம் அவர்களின் ஆயுளும், ஆரோக்கியமும் பெருகுகின்றன. இதற்காக என் மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 68: பெருநகர சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 மண்டலங்களுக்குட்பட்ட 50 மயான பூமிகளில் உள்ள சுற்றுசுவர் மற்றும் மயான பூமி வளாகத்தை நவீன முறையில் மேம்படுத்த ரூ.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு மிகவும் பாராட்டிற்குரியது.

அறிவிப்பு 70: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இடம் பெயரும் தொழிலாளர்கள், வீடில்லாத நபர்கள் / குடும்பங்கள் *(Family Homeless)* தற்காலிகமாக தங்குவதற்கு 200 தற்காலிக / இடைநிலை தங்குமிடங்கள் *(Container - Temporary Homes)* ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு மிகவும் பாராட்டிற்குரியது.

அறிவிப்பு 80: பெருநகர சென்னை மாநகராட்சியில் 3,01,969 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மண்டலம்-1 முதல் 15 வரையில் 10 ஆண்டுகளுக்கு மேல் உபயோகப்படுத்தப்பட்டுள்ள மற்றும் வெளிச்சம் குறைவாக உள்ள 78,130 எண்ணிக்கையிலான LED விளக்குகள் ரூ.65 கோடி மதிப்பீட்டில் மாற்றி பொருத்தப்படும் என்கிற அறிவிப்பு மிகவும் சிறப்பான ஒன்றாகும்.

இந்த பெருநகர சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிக்கையில் கொண்டு வரப்பட்ட அனைத்து திட்டங்களும் மகத்தான திட்டங்களாகும். பெண்களுக்கெல்லாம் சிங்க பெண்ணாக விளங்கும் பெருநகர சென்னை

மாநகராட்சியின் மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் நன்றி வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய 6வது மண்டல வார்டு குழு தலைவர் திருமதி ரா. சரிதா அவர்கள் / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.69.

திருமதி ரா. சரிதா

சமூகநீதியின் அரசன், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயர், நவீன சென்னையை உருவாக்கிய சிற்பி, 7 கோடி மக்களின் காவலன். மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்களை வணங்கி, இளைஞர்களின் எழுச்சி நாயகன், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களை வணங்கி, சென்னை கிழக்கு மாவட்டத்திலுள்ள அனைவருக்கும் ஒரு ஆசானாகவும், ஒரு தந்தையாகவும், ஒரு சகோதரனாகவும் செயல்பட்டு கொண்டிருக்கும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் திரு. பி. கே. சேகர்பாபு அவர்களை வணங்கி, மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், இங்கு எனக்கு பேச வாய்ப்பளித்த ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும், நிலைக்குழு தலைவர்களுக்கும், வார்டுகுழு தலைவர்களுக்கும்,அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் துறை சார்ந்த அனைத்து அதிகாரிகளுக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு எண்.15: பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 19 மாநகர சமுதாய நல மையங்கள், 200 மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் 1 தொற்று நோய் மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த 360 சுகாதார மையங்களில் புற்று நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பெண்களை பெரிதும் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோய் ***HPV DNA*** என்னும் நுண்கிருமியால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால் ***HPV*** வைரஸ் மூலம் உண்டாக்கும் கருப்பை வாய் புற்றுநோயை கண்டறியும் விதமாக 360 சுகாதார மையங்களிலும் இந்த பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மாதிரிகளை தொற்று நோய்

மருத்துவமனையிலுள்ள ***RTPCR*** கூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.*1* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பினை அறிவித்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

பள்ளி கட்டிடங்கள்

நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர் தொகுதியில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் ஆய்வுகள் மேற்கொண்டு, எந்தெந்த பள்ளிகள் புனரமைக்க வேண்டுமென்று புனரமைத்து, மற்றும் பழுதடைந்த *8* பள்ளிகளுக்கு சுமார் ரூ.*41.12* இலட்சம் மதிப்பீட்டில் வானுயர்ந்து நிற்கும் நவீன வசதிகளுடன் கூடிய குழந்தைகள் தங்குதடையின்றி கல்வி கற்பதற்கு ஏற்றவாறு, அவர்களுக்கு சூழ்நிலையை ஏற்படுத்தி, தனியார் பள்ளிகளுக்கு நிகராக கல்வியை கொடுத்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கொளத்தூர் தொகுதி மாணவர்கள் சார்பாகவும், பெற்றோர்கள் சார்பாகவும், இத்தருணத்தில் நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் கொளத்தூர் தொகுதியிலுள்ள மாணவ மாணவியர்கள் கல்வியில் மேலும் மெருகேற்றிட வேண்டுமென்று அப்பள்ளியில் கல்விச்சோலை என்னும் திட்டத்தை கொண்டு வந்து, பள்ளிகளிலுள்ள மாணவர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தி, அம்மாணவர்களுக்கு மதிப்பெண்களை கூட்டும் விதமாக பயிற்சிகள் அளித்து, அவர்கள் மிக சிறப்பாக கல்வி பயின்று வருகின்றனர்.

குளங்கள் மற்றும் பூங்காக்கள்

கொளத்தூர் தொகுதியில் உள்ள *4* குளங்கள் ஒவ்வொன்றையும் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு, அக்குளங்களை புனரமைத்து, அக்குளங்களை சுற்றியும், நடை மேடைகளும், யோகா மேடைகளும், செயற்கை நீருற்றுகளும், குழந்தைகள் விளையாடுவதற்கு தேவையான விளையாட்டு உபகரணங்கள், உடற்பயிற்சிக்கு தேவையான உபகரணங்கள் அனைத்தையும் அளித்து, மக்கள் இடைவிடாமல் ஆர்வமுடனும், குழந்தைகள் மிகவும் மகிழ்ச்சியுடனும் அவற்றை பயன்படுத்தி கொண்டிருக்கின்றனர். இதனை ஏற்படுத்தி தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கொளத்தூர்

தொகுதியிலுள்ள மக்கள் சார்பாகவும், குழந்தைகள் சார்பாகவும் இத்தருணத்தில் நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மழைநீர் வடிகால்வாய்கள்

நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர் தொகுதியில் ஆட்சி பொறுப்பேற்ற நாளிலிருந்து ஒவ்வொரு முறையும் மழைக்காலங்களில் நேரடியாக வந்து, எந்தெந்த இடங்களில் மழைநீர் தேங்கி நிற்கிறது என்பதை ஆய்வு செய்து, குறைவான கன அடி கொண்ட உட்கட்டமைப்பு வசதிகள் கொண்ட கால்வாய்களை பெரிதாக்கி, மழைநீர் தேங்காத வகையில் புதிய மழைநீர் வடிகால்வாய்கள் அமைத்து, மழை பெய்த அடுத்த நொடியே மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் வெகுவாக பயணிக்கும் வகையில் எந்த இடங்களிலும் மழைநீர் தேங்காத வகையில் மழைநீர் வடிகால்வாய்கள் அமைத்து கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இத்தருணத்தில் கொளத்தூர் தொகுதி மக்களின் சார்பாக நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

முதல்வர் படைப்பகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வட சென்னை வளர்ச்சி திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் முதன்முறையாக கொளத்தூர் தொகுதியில் ஜெகன்நாதன் சாலையில் ஒரு முதல்வர் படைப்பகத்தை ஏற்படுத்தி, அப்படைப்பகத்தில் பயின்று வரும் மாணவர்கள் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றார்போல் *UPSC*, *TNPSC* போன்ற தேர்வுகளில் வெற்றி பெற்று, அரசு துறைகளில் வேலை வாய்ப்புகளை பெற்று, அவர்கள் மகிழ்ச்சியுடன் பணியாற்றி வருகின்றனர். அதோடு மட்டுமல்ல அதில் ஒரு பகுதியாக *Co-Working Place* அதன் மூலம் தனியார் தொழில் முனைவோருக்கான வசதிகளும், *Wifi* வசதியும் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்படும் கூடங்களும் அமைத்து கொடுத்து, அனைவரும் பயனடையும் வகையில் அமைத்து கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்து கொள்வதோடு மட்டுமல்லாமல், வார்டு *58* ன் மாமன்ற உறுப்பினர் திருமதி ராஜேஸ்வரி ஸ்ரீதர் அவர்கள் இதே போன்று முதல்வர் படைப்பகங்கள் அனைத்து தொகுதிகளிலும் வேண்டுமென்று விழையும் போது, அந்த படைப்பகங்களுக்கு முதல்வர் படைப்பகம் என்ற பெயர்

கூட்ட நான் விழைந்த போது, அதற்கு இசைவு தந்து தற்போது 30 இடங்களில் முதல்வர் படைப்பகங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தி, மக்கள் பயன்பாட்டிற்கு ஓரிரு நாட்களில் அர்ப்பணிக்க உள்ளார் என்பதை இத்தருணத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன்.

திருமண மாளிகை

கொளத்தூர் தொகுதியில் ஏற்கனவே காமராஜர் திருமண மண்டபம் என்கிற ஒரு சமுக நலக்கூடத்தை குறைந்த விலையில் மக்கள் பயன்பாட்டிற்கு அளித்துள்ளார். அதோடு மட்டுமல்லாமல், வட சென்னையிலுள்ள அனைத்து மக்களும் தங்கள் இல்லங்களில் நடைபெற கூடிய சுப நிகழ்வுகளை குறைந்த செலவிலும், மகிழ்ச்சியுடனும் நடத்த வேண்டுமென்கிற நோக்கத்தோடு அவற்றின் தேவை அதிகம் இருப்பதை அறிந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அண்ணா திருமண மாளிகை என்கிற திருமண மண்டபத்தை சுமார் ரூ 25.65 கோடி மதிப்பீட்டில் பயன்பாட்டிற்கு அர்பணித்துள்ளார். இதன் மூலம் வட சென்னையிலுள்ள மக்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் சுப நிகழ்வுகளை மிக சந்தோஷமாகவும், நல்ல முறையிலும் நடத்தி பயனடைந்து வருகின்றனர்.

பேருந்து நிலையம்

கொளத்தூர் தொகுதியில் பெரியார் நகர் மற்றும் திரு.வி.க நகர் பகுதிகளிலுள்ள பேருந்து நிலையங்கள் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளதை கண்டறிந்து, உடனே ஆய்வு மேற்கொண்டு, வட சென்னை வளர்ச்சி திட்டத்தின் மூலம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் உடனே அவற்றிற்கு அடிக்கல் நாட்டி, அப்பணியை விரைவுபடுத்துமாறு தொகுதிக்கு வரும் போதெல்லாம் ஆய்வு மேற்கொண்டு மக்கள் பயன்பாட்டிற்கு அளித்ததோடு, அங்கு வரும் பயணிகள் இளைப்பாறவும், அங்கு பணியாற்றும் பணியாளர்கள் ஓய்வெடுக்க அறையும், தாய்மார்கள் பாலூட்டும் அறை போன்றவை அமைத்தும், CCTV கேமராக்கள் பொருத்தியும், நவீன வசதிகளுடன் கூடிய கழிப்பிட வசதிகளை அமைத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேருந்து நிலையத்தை அர்பணித்தார். அதன் மூலம் அங்கு பயணம் செய்பவர்கள் மிகவும், சந்தோஷமாகவும், மிகவும் பாதுகாப்பாகவும் பயணம் செய்கின்றனர்.

நீச்சல் குளம்

கடந்த *40* ஆண்டுகளாக கொளத்தூர் தொகுதியில் உள்ள பெரியவர்கள் மற்றும் சிறியவர்கள் வெளியிடங்களுக்கு சென்று நீச்சல் பயிற்சி பெற்று வந்தனர். இதை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோர்களும் ஆய்வினை மேற்கொண்டு ஒரு நீச்சல் குளமும், இறகு பந்து உடற்பயிற்சி உள்விளையாட்டு அரங்கத்தையும் ஏற்படுத்தி இன்று விளையாட்டு மேம்பாட்டு துறையின் மூலம் அவற்றை கண்காணித்து வருகின்றனர். அதன் மூலம் அப்பகுதியிலுள்ள பெரியவர்களும், சிறியவர்களும் பயனடைந்து வருகின்றனர். இத்தருணத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

காவல் நிலையம்

ஜவஹர் நகரிலுள்ள துணை ஆணையர் மற்றும் காவல் அலுவலக கட்டிடம் *40* ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டு வந்த நிலையில், கட்டிடம் மிகவும் சேதமடைந்ததை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக ஆய்வினை மேற்கொண்டு, அவற்றிற்கு *4* அடுக்கு கட்டிடமாக நவீன வசதிகளுடன் கூடிய கட்டிடத்தை அமைத்து, காவலர்கள் தங்குதடையின்றி பணியாற்றுவதற்கு அவற்றை அர்பணித்தார்.

மருத்துவமனை

நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர் தொகுதியில் வசிக்கும் மக்களுக்காக முன்பு புறநகர் பெரியார் நகர் அரசு மருத்துவமனையாக இருந்த மருத்துவமனையை, *860* படுக்கை வசதிகளுடன் கூடிய அனைத்து மருத்துவ பிரிவுகளுடன் கூடிய பெரியார் அரசு மருத்துவமனை என தரம் உயர்த்தி மக்கள் பயன்பாட்டிற்கு அளித்து, மக்கள் நல்ல முறையில் பயனடைந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கடன் பட்டுள்ளனர் .

கொளத்தூர் தொகுதியில் வாழும் மக்கள் அனைவரும் தங்களுடைய அரசு துறை சார்ந்த தேவைகளுக்காக அலுவலகங்களுக்கு வெளியில் பயணிக்க கூடாது என்கிற நோக்கத்தோடு அனைத்து அரசு துறைகளும் கொளத்தூர் தொகுதியில் கொண்டு வந்து, அவற்றை நம் மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்கள் மக்கள் பயன்பாட்டிற்கு ஓரிரு நாட்களில் அர்பணிக்க உள்ளார் என்பதை இத்தருணத்தில் கூறி கொளத்தூர் தொகுதி மக்கள் சார்பாக நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

கொளத்தூர் தொகுதியிலுள்ள மாணவர்கள் பள்ளி கல்வியை நிறுத்தி விட கூடாது மற்றும் வெகு தூரங்களுக்கு பயணம் செய்ய கூடாது என்கிற நோக்கத்தோடு தற்காலிகமாக இயங்கி கொண்டிருக்கும் கபாலீஸ்வரர் நகர் கலை கல்லூரி கட்டிடத்தை, தற்போது நிரந்தர கட்டிடமாக ஓரிரு நாட்களில் மாணவர்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்க உள்ளார். இதற்காக கொளத்தூர் தொகுதியிலுள்ள அனைத்து மக்களும் நன்றி கடன்பட்டவர்களாக இருப்பதோடு மட்டுமல்லாமல், அனைவரும் இவரே நிரந்தர முதலமைச்சர் என்கிற வாழ்த்துக்களோடு அவருக்கு நன்றி தெரிவித்து வருகின்ற இந்தத் தருணத்தில் இந்த அனைத்து பணிகளுக்கும் உறுதுணையாக இருந்த மாண்புமிகு மேயர் மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர், துணை ஆணையர்கள், மத்திய வட்டார துணை ஆணையர், மண்டல அலுவலர்கள், செயற்பொறியாளர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி தெரிவித்து கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. பரிதி இளம் சுருதி அவர்கள், வார்டு எண்.*99*.

திரு. பரிதி இளம் சுருதி

அனைவருக்கும் வணக்கம். மாண்புமிகு மேயர் அவர்களே, பொதுவாக சூப்பர் ஓவரில் சிக்ஸர் அடிப்பது கடினம். நம்முடைய உயிரினும் மேலான தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இரண்டு சிக்ஸர்களை அடித்து விட்டார். அந்த இரண்டு சிக்ஸர்கள் என்னவென்று உங்களுக்கே தெரியும். இன்னும் நான்கு சிக்ஸர்களை எதிர்பார்த்து தமிழ்நாட்டு மக்களே காத்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தினுடைய தலைவர், மரியாதைக்குரிய, வணக்கத்திற்குரிய, மாநகராட்சியினுடைய மாண்புமிகு மேயர் அவர்களை பார்க்கின்ற போது, ***Harmanpreet Kaur Bhullar*** - இவர் *2025* ஆம் ஆண்டில் நடைபெற்ற ***ICC*** **மகளிர் உலக கோப்பையை இந்தியா கைப்பற்றிய போது கேப்டனாக இருந்து வெற்றியை தந்தவர்**. அவரின் மறு உருவமாகவே

காண்கின்றேன். அதே போல, அவருக்கு பக்கத்திலே அமர்ந்திருக்கின்ற மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு. மகேஷ்குமார் அவர்கள், சூர்யகுமார் யாதவ் *(SKY)* தற்போது இந்திய ஆடவர் *T20* அணியின் கேப்டனாக இருந்து *2026 ICC T20* உலக கோப்பையை வெற்றிகரமாக வழிநடத்தியவர். திரு. சூர்யகுமார் யாதவ் போன்று மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள் காட்சியளிக்கின்றார். அவர் தான் தற்போது நடைபெற்று கொண்டிருக்கின்ற உலக கோப்பை ஆடவர் அணியினுடைய கேப்டன். அதே போல, எனக்கு பேச வாய்ப்பு வழங்கிய ஆளுங்கட்சியுடைய மரியாதைக்குரிய தலைவர் எந்நாளும் என் உணர்வுக்கு மதிப்பளித்து பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய இந்த அவையினுடைய மூத்தவர் அவரை பார்க்கின்ற போது கபில்தேவ் தான் என் நினைவுக்கு வருகிறார்.

2026-2027-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த திருமதி சர்பஜெயாதாஸ் அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

*8*வது வார்டுகுழு தலைவர் திரு.கூ.பி.ஜெயின் அவர்கள் தான் என்னை போன்ற இளைஞர்களை எல்லாம் பயிற்றுவிக்கும் இந்த அணியினுடைய பயிற்சியாளர், அவர் உட்பட அனைத்து மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு என் மதிய வணக்கத்தினை பதிவு செய்ய நான் கடமைபட்டிருக்கிறேன்.

4200 திருக்கோயில்களுக்கு மேல் கும்பாபிஷேகம் நடத்திய திராவிட மாடல் *2.0* ஆட்சியில் அனைத்து விதமான உணர்வுகளுக்கும் மதிப்பு இருக்கின்றது, குறிப்பாக, ஆன்மீகத்திற்கு ஒரு போதும் திராவிட முன்னேற்ற கழகம் எதிர்ப்பில்லை என்கிற வகையிலே தமிழ்நாட்டில் ஆன்மீக புரட்சியினை ஏற்படுத்தி இருக்கின்ற மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்களை வணங்கி, இந்தியா மட்டுமல்ல உலகமே தமிழ்நாட்டினுடைய விளையாட்டு துறையை வியந்து பார்க்கின்ற அளவிற்கு உயர்ந்து நின்று கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் வணங்கி கொள்கிறேன்.

பிரிக்ளின் சாலையினை தாத்தா இரட்டமலை சீனிவாசன் என்று பெயர் மாற்றம் செய்து அரசாணை வெளியிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் வட்ட மேஜை மாநாட்டிலே கலந்து கொண்டு இட ஒதுக்கீட்டிற்காக பேசியவர். இட ஒதுக்கீடு மூலமாக மாமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட நானும் அவருக்காக அந்தக் கோரிக்கையினை வைத்ததிலே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இதற்காக என்னுடைய நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்து கொள்ள கடமைப்பட்டுள்ளேன். அவருடைய நினைவிடம் 99வது வார்டில் தான் உள்ளது என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 61: சுற்றுலாவை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மெரினா கடற்கரையை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்காக கலங்கரை விளக்கம் *(Light House)* முதல் அண்ணா நினைவிடம் வரை கயிறு வழித்தட *(Rope way car)* வசதி அறிமுகப்படுத்த திட்டமிட்டப்பட்டுள்ளது. இந்த கயிறு வழித்தடங்கள், நகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்வதுடன், சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்துகின்றன. இந்த கயிறு வழித்தடங்கள் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் அழகை ரசிக்க வைக்கும் பரந்த காட்சிகளை *(Panoramic views)* வழங்குவதோடு மறக்க முடியாத அனுபவங்களையும் உருவாக்கும் வகையில் பொது-தனியார் பங்களிப்பு *(PPP)* முறையில் கயிறு வழித்தடங்கள் *(Rope way car)* அமைக்கப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பொது சுகாதாரம் சம்பந்தப்பட்ட பல அறிவிப்புகள் இடம் பெற்றுள்ளன. அதற்காக எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 49: பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அம்பத்தூர் ஏரி *(மண்டலம்- 7)*, மஞ்சம்பாக்கம் ஏரி *(மண்டலம்-2)*, மற்றும் மண்டலம்-*15*ல் உள்ள புல்லக்கேணி குளம், வையாபுரி குளம், சாலிமார் கார்டன் குளம் என முக்கியமான மற்றும் பயன்பாட்டிற்கு அதிகம் தேவையான *30* நீர்நிலைகளை புனரமைத்து, அதன் கொள்ளளவை அதிகரிக்கவும், மழைநீர் சேமிக்கும் திறனை அதிகரிக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் ரூ.*100* கோடி மதிப்பீட்டில் நீர்நிலைகளை புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 62: சேத்துபட்டு, டாக்டர் குருசாமி பாலத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ளதால் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகிறார்கள். போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு, சேத்துப்பட்டு மெக்னிக்கல்ஸ் சாலை பகுதியிலிருந்து ஈ.வெ.ரா. பெரியார் சாலையை எளிதில் சென்றடையும் வகையில் இரயில்வே இருப்புப்பாதையின் குறுக்கே ரூ.25 கோடி மதிப்பீட்டில் இலகுரக வாகனங்கள் செல்லும் வகையில் ஒரு வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை *(3.60* மீட்டர்) அமைக்கப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். இதற்காக எழும்பூர் சட்டமன்ற தொகுதி மக்களின் சார்பாகவும், மேம்பாலத்தினை பயன்படுத்த உள்ள அனைத்து பொதுமக்களின் சார்பாகவும் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 72: பெருநகர சென்னை மாநகராட்சியின் நகர மக்களின் மனநலம், சமூக இணைப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், குழந்தைகளை திரைச் சார்ந்த பழக்கங்களிலிருந்து பாரம்பரிய விளையாட்டு மற்றும் கலை சார்ந்த கலாச்சார செயல்பாடுகளில், ஆர்வத்தை ஏற்படுத்தவும், இளைஞர்கள் மற்றும் முதியோர் உட்பட அனைத்து தரப்பினருக்கும் மன-உடல் நலத்தை ஊக்குவிக்கவும், மக்களிடையே அன்பையும், நட்பையும் வளர்க்கும் பொழுது போக்குகளை ஊக்கப்படுத்தவும், பொது மற்றும் பொழுதுபோக்கு இடங்கள், மக்கள் இணையும் நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளை உருவாக்கும் வகையில் மகிழ்ச்சி மற்றும் பொழுதுபோக்கு பிரிவு *(Happiness and Recreation Wing)* பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.*1.00* கோடி மதிப்பீட்டில் புதிதாக உருவாக்கப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் *(GCC)* பழைய, சேதமடைந்த தெரு பெயர் பலகைகளை மாற்றி, நீவீன டிஜிட்டல் மற்றும் ஸ்மார்ட் பெயர் பலகைகளை நிறுவும் திட்டத்தை மாநகராட்சி நிர்வாகம் தீவிரமாக செயல்படுத்தி வருவதை வரவேற்கிறேன். இதற்காக உட்கட்டமைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டிருப்பது மிகவும் பாராட்டிற்குரியது.

அதே போல ***"No patch work, No road cuts"*** என அறிவிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியூட்டும் செய்தியாகும். ஏனெனில், சாலையில் பள்ளம் இருந்தாலே அரசு, மாநகராட்சி, மாமன்ற உறுப்பினர் மீது குறைகள் கூறப்படுவது வழக்கம். எனவே, இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு *45*: *2026-27*ஆம் நிதியாண்டில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில் மக்கள் அதிகம் கூடும் பூங்காக்களான

1) மண்டலம்-*2*,கோட்டம்-*15*, மணலி நியு டவுன், *Block No.26, CPS-10* பூங்கா.
2) மண்டலம்-*5*, கோட்டம்-*53*, தங்கசாலை பூங்கா.
3) மண்டலம்-*7*, கோட்டம்-*83*, மதனகுப்பம் பூங்கா.
4) மண்டலம்-*8*, கோட்டம்-*103*, டாக்டர். விஸ்வேஸ்வரைய்யா டவர் பூங்கா.
5) மண்டலம்-*13*, கோட்டம்-*123*, ராஜிவ் காந்தி சாலை பூங்கா ஆகிய *5* பூங்காக்களில், சிறப்பு குழந்தைகளுக்கான உபகரணங்கள் உள்ளடக்கிய *(Inclusive Parks for Special Children)* சிறப்பு அம்சங்கள் கொண்ட பூங்காக்களாக ரூ.*10* கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *61*: சுற்றுலாவை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மெரினா கடற்கரையை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்காக கலங்கரை விளக்கம் *(Light House)* முதல் அண்ணா நினைவிடம் வரை கயிறு வழித்தட *(Rope way car)* வசதி அறிமுகப்படுத்த திட்டமிட்டப்பட்டுள்ளது. இந்த கயிறு வழித்தடங்கள், நகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்வதுடன், சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்துகின்றன. இந்த கயிறு வழித்தடங்கள் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் அழகை ரசிக்க வைக்கும் பரந்த காட்சிகளை *(Panoramic views)* வழங்குவதோடு மறக்க முடியாத அனுபவங்களையும் உருவாக்கும் வகையில் பொது-தனியார் பங்களிப்பு *(PPP)*

முறையில் கயிறு வழித்தடங்கள் *(Rope way car)* அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. இத்திட்டத்தில் சிறப்பு குழந்தைகள் பயன் பெறும் வகையில், அவர்களுக்கு ஏற்றவாறு *Rope Way Car* வடிவமைக்கப்பட வேண்டும் என நான் கேட்டு கொள்கிறேன்.

அறிவிப்பு-*35*: பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து நிரந்தர, தற்காலிக மற்றும் வெளிமுகமை தூய்மை பணியாளர்களுக்கும் கோடைக் காலங்களில் ஏற்படும் வெயில் தாக்கத்தை போக்கவும் நீர்ச்சத்தை பராமரிக்கவும் உடல் வெப்பத்தை தணிக்கவும் கோடை காலம் முழுவதும் தூய்மைப் பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *29*: பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் வரும் வடக்கு வட்டாரம், (புழல்), மத்திய வட்டாரம் (பாடி) மற்றும் தெற்கு வட்டாரம் (போருர்) ஆகிய இடங்களில் இயங்கி வரும் மூன்று மாநகர சமுதாய நல மருத்துவமனைகளில் *(UCHC)* கூடுதலான மருத்துவ சேவைகளை விரிவாக்கம் செய்து பொதுமக்கள் பயன்படும் வகையில் இயற்கை மருத்துவ சேவைகள் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக இந்த மூன்று மாநகர சமுதாய நல மருத்துவமனைகளிலும், கூடுதல் மருத்துவ பிரிவுகள் அமைக்கப் போதிய இடவசதி இல்லாததால், முதற்கட்டமாக மூன்று கட்டிடங்கள் கீழ்கண்டுள்ள இடங்களில் ரூ.*3* கோடி மதிப்பீட்டில் கட்டிடத் துறையின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு *27*: பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறையின் கீழ்வரும் மகப்பேறு மருத்துவமனைகள், அவசர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் அறுவை சிகிச்சை அரங்குகளில் அனுமதிக்கப்படும் குழந்தைகளின் இரத்தத்தில் உள்ள ஆக்ஸிஜன் அளவையும், இதயத் துடிப்பையும் *(Pulse Rate,Blood Pressure,Heart Rate, SPO2)* அளவிட பயன்படும் *Fetal Pulse Oximeter* கருவியின் மூலம் நுரையீரல் நோய்கள், இதய நோய்கள் மற்றும் ஆக்ஸிஜன் அளவு குறைவாக உள்ள குழந்தைகளின் உடல் நிலையினை தொடர்ந்து கண்காணிக்கவும் *Fetal Pulse Oximeter* கருவிகள் அவசியமாக

உள்ளதால், 16 நகர்ப்புற சமுதாய நலமையங்கள் (UCHC) மற்றும் மூன்று 24 மணிநேர மகப்பேறு மருத்துவமனைகள் (EOC) ஆக மொத்தம் 19 மருத்துவமனைகளுக்கும் தலா ஒரு கருவி வீதம் 19 எண்ணிக்கையில் Fetal Pulse Oximeter - High End with detachable hand held front panel, கருவிகள் தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் (TNMSC) மூலமாக ரூ.23 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியதாகும்.

அறிவிப்பு-70: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெயரும் தொழிலாளர்கள், வீடில்லாத நபர்கள் / குடும்பங்கள் (Family Homeless) தற்காலிகமாக தங்குவதற்கு 200 தற்காலிக / இடைநிலை தங்குமிடங்கள் (Container - Temporary Homes) ரூ.12 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பிற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிவிப்பினை பார்க்கின்ற போது, எதிரே அமர்ந்திருக்கும் எதிர்க்கட்சியினரும் திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைந்து விடுவார்கள் எனும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

அறிவிப்பு 69: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் 6 இடங்களில் வீடற்றோர்கள் தங்குவதற்கான அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய இரவு காப்பகம் (தரைதளம் மற்றும் முதல் தளம்) மொத்தம் ரூ.9 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என்கிற அறிவிப்பிற்கு நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களுக்கான மருத்துவ பரிசோதனை குறித்து தாங்கள் அறிவித்திருந்தீர்கள். இங்கு பணியாற்றும் அனைத்து மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் ஒருமித்த குரலாக, எங்களுக்கான முழு உடல் பரிசோதனை ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என நான் கேட்டு கொள்கிறேன். ஏனெனில், அனைத்து விதமான இன்னல்கள், இடையூறுகள், சிக்கல்கள் ஆகியவற்றை நேரடியாக எதிர்கொள்வது மாமன்ற உறுப்பினர்களே. எனவே,மாமன்ற

உறுப்பினர்களுக்கான முழு உடல் பரிசோதனை ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என நான் கேட்டு கொள்கிறேன்.

*99*வது வார்டு பூந்தமல்லி நெடுஞ்சாலையை ஒட்டி ஒரு பல்நோக்கு கட்டிடம் உள்ளது. அதை *24* மணி நேரமும் இயங்கும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மருத்துவமனையாக மாற்றி தர வேண்டும் என கடந்த மாதம் பேசும் போது, இந்த நிதிநிலை அறிக்கை அறிவிப்பில் சேர்க்குமாறு கேட்டிருந்தேன். தாங்கள் இதனை பரிசீலனை செய்வதாக கூறியிருந்தீர்கள். எனவே, இதனை பரிசீலனை செய்ய வேண்டுமென மீண்டும் கேட்டு கொள்கிறேன்.

ஒட்டுமொத்தமாக இந்த நிதிநிலை அறிக்கையினை பற்றி சொல்ல வேண்டுமெனில், *The latest* ***Windows 11 version 25H2 (2025 Update)*** *focuses on performance, security, and new features like Xbox Mode and Wi-Fi 7.* ***Android 16 "Baklava" (API level 36)*** *launched in June 2025* ஆகியவற்றை போல, பெருநகர சென்னை மாநகராட்சியின் *2026-2027*ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை *"*சிங்கார சென்னை*-2.0"* என மாறி, *"*சிங்கார சென்னை*-3.0"* நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என்று ஒரே சொல்லில் கூறலாம்.

இதற்கு முன்னர் பேசிய மாமன்ற உறுப்பினர், திரு. சிவராஜசேகரன், மிக சிறந்த பேச்சாளர் என்பதை இன்று உணர்ந்தேன். திராவிட முன்னேற்ற கழகத்தை சார்ந்தவர்கள் என்றுமே கலைஞரின் உடன்பிறப்புகள்; உறவுக்கு நாங்கள் கை கொடுப்போம், உரிமைக்கு நாங்கள் குரல் கொடுப்போம். எங்களுடைய கொள்கையில் ஒரே கொள்கை – மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுய ஆட்சி. அதில் ஒருபோதும் திராவிட முன்னேற்ற கழகம் பிறழாது என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

நம்பிக்கை என்னும் கை எங்களுடன் இருக்கும் வரை, *200* தொகுதிகளுக்கும் மேலாக திராவிட முன்னேற்ற கழக கூட்டணி, எங்களுடைய திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்னும் மகத்தான தலைவரின் தலைமையில் வெற்றி பெறும். ஸ்டாலின் தொடர்வார், தி.மு.க. வெல்லும். எதிர்கட்சியினரும் ஓரிரு நாட்கள் அல்லது ஓரிரு வாரங்களில் திராவிட முன்னேற்ற கழக தலைமையிலான கூட்டணியில் இணைந்து கொள்வார்கள்

என இந்தத் தருணத்தில் தெரிவித்து கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய தலைவர், நிலைக்குழு (பணிகள்) திரு. நே. சிற்றரசு அவர்கள் / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.110.

திரு. நே. சிற்றரசு

பெருநகர சென்னை மாநகராட்சியின் 2026-2027ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதம் குறித்த இந்தக் கூட்டத்தினை தலைமையேற்று நடத்தி கொண்டிருக்கின்ற மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, சக மாமன்ற உறுப்பினர்களே, பத்திரிகை மற்றும் ஊடக துறையினை சார்ந்த நண்பர்களே, பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து துறை அதிகாரிகளே அனைவருக்கும் முதற்கண் எனது காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

இது வரலாற்று சிறப்பு மிக்க ஒரு நிதிநிலை அறிக்கை. திராவிட மாடல் ஆட்சி அமைந்த நாள் முதல் இன்று வரையில் கிட்டத்தட்ட ஐந்தாண்டுகள் நிறைவடையும் நிலையில், 2.0 இப்படி தான் இருக்கும் என்பதற்கு இந்த நிதிநிலை அறிக்கை நமது மாண்புமிகு மேயர் அவர்கள் ஒரு டிரெய்லர் காண்பித்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையினை பொறுத்தமட்டில் நமது திராவிட மாடல் அரசின் நாயகர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நம்முடைய இளம் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களும் தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன தேவை என்பதை எண்ணி, பல தரப்பு மக்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளை பெற்று சிறப்பாக வடிவமைத்து இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையினை தாக்கல் செய்திருக்கிறார்கள்.

நேற்றைய தினம் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் தமிழ்நாட்டின் கடன்களை பற்றி எல்லாம் பேசினார். அவர்கள் காலத்தில் வாங்கிய கடன்களுக்கு தான் இன்றைக்கு நமது

திராவிட மாடல் அரசு வட்டி செலுத்தி கொண்டிருக்கிறது. அதனை தோலுரித்து காட்டுகின்ற வகையில் நமது பொதுப்பணி துறை அமைச்சர் அவர்கள் எத்தனை கோடி கடன்களுக்கு வட்டி செலுத்தப்படுகிறது என்பதை பதிவு செய்தார். இப்படிப்பட்ட நிதி நிலைமை உள்ள சூழ்நிலையிலும் சிறப்பான நிதிநிலை அறிக்கை தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலுள்ள அனைத்து மாநகராட்சிகளிலும் நம் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பான மாநகராட்சி என்பதற்கு இந்த நிதிநிலை அறிக்கை சான்றாக விளங்கி கொண்டிருக்கிறது. இவ்வாறான நிதிசுமை இருக்கின்ற போது கூட, ஒன்றிய அரசானது நமது தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய நிதியினை தராமல் உள்ளது. இருந்த போதிலும், நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உலகமே வியந்து பார்க்கும் வகையில் ஒரு சிறப்பான ஆட்சியினை தமிழ்நாட்டு மக்களுக்கு தந்து கொண்டிருக்கிறார். எந்தத் துறையாக இருந்தாலும் அதில் முதன்மையாக விளங்குவது நமது தமிழ்நாடு தான் என்பதை அனைவரும் அறிவார்கள். ஆசியா கண்டத்திலேயே ஒரு மாநிலம் எப்படி சிறந்து விளங்க வேண்டும் என்பதற்கு முழு உதாரணமாக நமது தமிழ்நாடு அரசு விளங்கி கொண்டிருக்கிறது என்பதை ஒன்றிய அரசால் தொடர்ந்து வெளியிடப்படும் அறிக்கைகள் வெளிப்படுத்தி கொண்டிருக்கின்றன.

திராவிட கொள்கைகளையும், திராவிட சித்தாந்தங்களையும் தொடர்ந்து தமிழ்நாட்டு மக்கள் புரிந்து வைத்துள்ளார்கள் என்பதற்கான உதாரணம் தான் நம்முடைய கழக தலைவர் அவர்கள் தலைவராக பொறுப்பேற்ற நாள் முதல் இன்று வரையில் தொடர்ந்து அனைத்து தேர்தல்களிலும் திராவிட முன்னேற்ற கழக தலைமையிலான கூட்டணி வென்று கொண்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கை அனைத்து தரப்பு மக்களுக்குமான நிதிநிலை அறிக்கை, திராவிட மாடல் கொள்கை சித்தாந்தம் என்பது எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பது தான். இதில் நமது தலைவர் அவர்கள் அதிக கவனமாக இருந்து வருகிறார். பெருநகர சென்னை மாநகராட்சியில் எத்தகைய திட்டங்கள் தீட்டப்பட்டாலும் அந்தத் திட்டங்கள் இறுதி வரையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்றடைகிறதா என்பதை நமது மாண்புமிகு மேயர் அவர்களும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களும் மற்றும் ஆணையர் அவர்களும் தொடர்ந்து கண்காணித்து கொண்டிருக்கிறார்கள்.

நாம் அனைவரும் மாமன்ற உறுப்பினர்களாக பொறுப்பேற்று தற்பொழுது தேர்தலை சந்திக்கும் இந்த வேளையில், பல தரப்பட்ட விவாதங்கள் நடைபெற்ற போதிலும், அவற்றையெல்லாம் சவாலாக எடுத்து கொண்டு, எல்லோருக்கும் எல்லாம் கிடைத்ததை 134வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. உமா ஆனந்தன் அவர்கள் 134வது வார்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சி என்ன பணிகள் செய்தது என்பதை உண்மையாக எடுத்துரைத்தமைக்காக அவருக்கு இந்த மன்றத்தின் சார்பில் நன்றி தெரிவித்து கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாம் பொறுப்பேற்ற நாள் முதல் சொல்லி வருவது என்னவென்றால், நமக்கு வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்து இந்த அரசு உழைக்க வேண்டும் என்று சொன்னார். அதே போல நமக்கு வாக்களிக்காத அந்த வார்டு மக்களுக்கும், அந்த வார்டு மக்கள் பிரதிநிதிக்கும் அனைத்தையும் இந்த சென்னை மாநகராட்சி செய்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வி, மருத்துவம் ஆகிய இரண்டும் இரு கண்கள் என்று சொல்வார். அதே வகையில், நமது பெருநகர சென்னை மாநகராட்சி கல்விக்கும், மருத்துவத்திற்கும் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

அறிவிப்பு 5 : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள 206 தொடக்கப்பள்ளி, 130 நடுநிலைப்பள்ளி, 46 உயர்நிலைப்பள்ளி மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 417 பள்ளிகளில் பயிலும், மாணவ-மாணவியர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி மின் வசதிகள், மோட்டார் மற்றும் பம்பு போன்றவைகளில் ஏற்படும் பழுதுகளை சரிபார்ப்பதற்கும், வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் ஆண்டுக்கு ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் வட்டார துணை ஆணையர்களின் மேற்பார்வையில், மின் துறையின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறேன்.

மாநகராட்சி கட்டிடங்களை மேம்படுத்த வேண்டுமென பல தீர்மானங்கள் பணிகள் நிலைக்குழுவில் நிறைவேற்றப்பட்டு, மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட புறநகரில் உள்ள பள்ளி கட்டிடங்களை மேம்படுத்த மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர் ஆகியோர்களால் ஆய்வு

மேற்கொள்ளப்பட்டு, ஆணையர் அவர்களால் தொடர்ந்து பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட இன்றைய தினம் தனியார் பள்ளிக்கு நிகராக சென்னை பள்ளிகள் உள்ளன என்பதை தாண்டி சென்னை பள்ளிகளை போன்று தனியார் பள்ளிகள் திகழ்கின்றன என்கிற பெருமையை சேர்த்துள்ளோம். **(கைதட்டல்)**

அண்மையில் ஷெனாய் நகரில் உள்ள சென்னை பள்ளியில் மாணவ, மாணவியர்களுக்கு சுத்தமான மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய திறன்மிகு தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரத்தை *(Smart Water ATM)* தொடங்கி வைக்கப்பட்டது. பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் சுத்தமான மற்றும் சுகாதாரமான குடிநீரினை பருகுவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி வழிவகை செய்துள்ளது. தொடர்ந்து பள்ளிகளின் பாதுகாப்பினை கருதி சுற்றுச்சுவர் அமைக்கப்படுவதற்கான வழி வகைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், பள்ளிகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்காக எனது பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 41: *2026-27* ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட *955* பூங்காக்களில் முதற்கட்டமாக *200* பூங்காக்கள் அறிவியல் பூர்வமாக பொலிவேற்றம் செய்யப்படும். அதற்காக, உரிய தாவர அமைப்புகள், பொலிவான வருகையாளர் ஓய்விடங்கள் மற்றும் இருக்கைகள், மரங்களில் பறவைகள் வாழ்விட அமைப்புகள், இயற்கை சூழலை மக்கள் பூங்காக்களில் உணரும் வண்ணம் மரங்களில் செயற்கையான பறவைகளின் ஒலிகள் வழங்கும் அமைப்புகள் அமைத்தல், சிறார்களை கவரும் வண்ணம் சிறு குளங்கள் மற்றும் நீர்ப்பறவைகள் போன்ற அமைப்புகள், தற்காலத்திற்கேற்றவாறு நடைபாதைகள் மற்றும் ஒளிவிளக்குகள் போன்ற அமைப்புகளை ஏற்படுத்த ரூ.*60* கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

கடந்த *4* ஆண்டுகளில் பூங்காக்கள் குறித்து மன்றத்தில் அதிகம் விவாதிக்கப்பட்டு தற்போது பூங்காக்களை மாநகராட்சியே எடுத்து நடத்த வேண்டும் என்கிற கருத்தினை அனைத்து மன்ற உறுப்பினர்களும் வரவேற்றார்கள். அடித்தட்டு மக்கள், மூத்த குடிமக்கள், சிறார்கள் பயன்படுத்தும் பூங்காக்கள் அவசியமான ஒன்று. அரசின் செயல்பாடுகளை தீர்மானிக்கும் மிகப்

பெரிய சக்தியாக விளங்குபவை பூங்காக்கள், சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர் மற்றும் மின்சாரம் இத்தகைய அடிப்படை தேவைகளை முறையாக அளித்தாலே அரசினை அனைத்து தரப்பு மக்களும் பாராட்டுவார்கள். ஆரம்பத்தில் பூங்கா ஒப்பந்ததாரர்கள் பணிகளை சரிவர மேற்கொள்வதில்லை என மன்றத்தில் மாமன்ற உறுப்பினர்கள் பதிவு செய்த காரணத்தினால், அவற்றை முறையாக ஆய்வு செய்து பூங்காக்களுக்காக ரூ.60.00 கோடி நிதியினை ஒதுக்கீடு செய்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கு இந்த மன்றத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்து கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்த தலைமுறையினருக்காக நிலத்தடி நீரை பாதுகாப்பது குறித்து பல்வேறு கூட்டங்களில் வலியுறுத்தி வந்தோம். உதாரணமாக, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள் வசிக்கும் ரேஸ் கோர்ஸ் பகுதியில், நீண்டகால சட்ட போராட்டங்களுக்கிடையே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிக பெரிய குளங்களை அமைத்துள்ளார். இதன் விளைவாக, சுற்றுப்புறங்களில் ஐந்து முதல் ஆறு கிலோமீட்டர் வரை நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

மக்கள் தொகை அதிகரிப்பினால் சென்னை மாநகர பகுதியில் போக்குவரத்தை மேம்படுத்த அமைக்கப்பட்ட மெட்ரோ ரயில் 80 அடி ஆழத்தில் செல்கின்ற காரணத்தினால், நிலத்தடி நீரோட்டம் பாதிக்கப்படுகிறது. அத்தியாவசியமான குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய மாநகராட்சி பூங்காக்களில் நிலத்தடி நீரை சேமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அறிவிப்பு 43 : 2026-2027 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்கள் உள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டத்தினை அதிகரிக்கும் வகையிலும், பருவமழை காலங்களில் கிடைக்கும் நீரினை முழுமையாக சேமிக்கும் வகையிலும், முதற்கட்டமாக 1,000 சதுர மீட்டருக்கு மேல் உள்ள 25 எண்ணிக்கையிலான பூங்காக்களில், ஒரு பூங்காவிற்கு ரூ.20 இலட்சம் வீதம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் நீர் உறிஞ்சுதல் (Sponge Park) அமைப்பு அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு - 44: 2026-2027 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில், முதற்கட்டமாக 200 பூங்காக்களில் நிலத்தடி நீர்மட்டத்தினை அதிகரிக்கும் வகையிலும் பூங்காவிற்கு வரும் மக்களிடம் மழை நீர் சேகரிப்பை கொண்டு சேர்க்கும் விதத்திலும், ஒரு

பூங்காவிற்கு ரூ.10 இலட்சம் வீதம் ரூ.20 கோடி மதிப்பீட்டில் மழை நீர் சேகரிப்பு (Rain Water Harvesting) திட்டம் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு மாண்புமிகு மேயர் அவர்களுக்கு மன்ற உறுப்பினர்கள் சார்பாக நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 46 : 2026-27ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுடன் இணைந்து பசுமைப் பரப்பை பெருமளவில் அதிகரிக்க மாடம்பாக்கம், கைலாசபுரம் (மயிலாப்பூர்) (மண்டலம்-9) மற்றும் சாத்தாங்காடு (மண்டலம்-2) ஆகிய இடங்களில் நாற்றங்கால் பண்ணைகள் ஏற்படுத்தி அங்கு வனத்துறையின் உதவியுடன் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து, பொது மக்களுக்கு விலையில்லாமல் வழங்குவதோடு அவர்கள் உள்ளார்ந்த பங்கேற்புடன், சென்னை மாநகராட்சி பகுதிகளில் பசுமைப்பரப்பை அதிகரிக்க இம்மரக்கன்றுகளை நடவு செய்து, சென்னையை பசுமை மிக்க நகரமாக மாற்ற ரூ.10 கோடி மதிப்பீட்டில் **"பசுமை சென்னை திட்டம்"** என்கிற திட்டம் அறிமுகம் செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

வருங்காலத்தில் ஆக்சிஜனை விலை கொடுத்து கொள்முதல் செய்ய வேண்டிய சூழ்நிலை வரும் என்கிறார்கள். ஆக்சிஜனை அதிகப்படுத்த அதிக அளவில் மரங்களை வளர்க்க வேண்டும் என்பதற்காக வருங்கால சந்ததியினருக்கு பயனளிக்கும் வகையிலான மேற்கண்ட அறிவிப்பிற்கு மாண்புமிகு மேயர் அவர்களுக்கு பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்து கொள்கிறேன்.

விளையாட்டு துறையில் இந்திய அளவில் நமது தமிழ்நாடு தான் முதன்மை மாநிலம் என்கிற பாராட்டினை பெற்றுள்ளது. நமது மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து விளையாட்டு துறைக்காக செய்து கொண்டிருக்கின்ற சாதனைகளை எல்லாம் நாம் பார்த்து கொண்டிருக்கிறோம். அதற்கு மேலும் சென்னை பள்ளி மாணவர்களின் விளையாட்டு திறனை ஊக்குவிக்கின்ற வகையிலே -

அறிவிப்பு 47: 2026-2027 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட இடங்களில் உள்ள 50 விளையாட்டு திடல்களை மேம்படுத்தவும் மற்றும் புதிய விளையாட்டு உபகரணங்களை ரூ.20.00 கோடி

மதிப்பீட்டில் கொள்முதல் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *48*: *2026-2027* ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட மண்டங்களில் அதிக பரப்பளவு உள்ள விளையாட்டு திடல்களான:

1. மண்டலம்-*1*, கோட்டம்-*4*, ஜோதி நகர்.
2. மண்டலம்-*2*, கோட்டம்-*16*, பர்மா நகர்.
3. மண்டலம்-*2*, கோட்டம்-*16*, எம்.ஆர்.பி.நகர், மணலி நியு டவுன்.
4. மண்டலம்-*2*, கோட்டம்-*22*, வழுதலைமேடு சின்ன சேக்காடு.
5. மண்டலம்-*13*, கோட்டம்-*173*, கெனால் பேங்க் ரோடு, காந்தி நகர், அடையாறு,

ஆகிய 5 விளையாட்டு திடல்கள் *ECO BLOC*-ஐ பயன்படுத்தி நீர் உறிஞ்சும் வகையில் மழைநீர் சேமிப்பு தொட்டிகள் *(ECO BLOC based Sponge Park)* ரூ.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பிற்கு நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அதே போல, நமது மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் முதன் முதலில் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியின் சிறந்த சட்டமன்ற உறுப்பினராக மாண்புமிகு திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளங்கி கொண்டிருக்கிறார் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

அறிவிப்பு *61*: சுற்றுலாவை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மெரினா கடற்கரையை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்காக கலங்கரை விளக்கம் *(Light House)* முதல் அண்ணா நினைவிடம் வரை கயிறு வழித்தட *(Rope way car)* வசதி அறிமுகப்படுத்த திட்டமிட்டப்பட்டுள்ளது. இந்த கயிறு வழித்தடங்கள், நகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்வதுடன், சுற்றுலா பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்துகின்றன. இந்த கயிறு வழித்தடங்கள் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் அழகை ரசிக்க வைக்கும் பரந்த காட்சிகளை *(Panoramic views)* வழங்குவதோடு மறக்க முடியாத அனுபவங்களையும் உருவாக்கும் வகையில் பொது-தனியார் பங்களிப்பு *(PPP)*

முறையில் கயிறு வழித்தடங்கள் *(Rope way car)* அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

இன்றைய நிலையில், தமிழ்நாட்டில் சுற்றுலா தலங்களை அதிக அளவில் மேம்படுத்த வேண்டும் என்பதற்காக நம் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் சுற்றுலா துறையின் மூலம் பல்வேறு திட்டங்களை உருவாக்கி வருகின்றார். சென்னை மாநகரம் என்றாலே நினைவுக்கு வருவது மெரினா கடற்கரை தான். அந்த மெரினா கடற்கரையில் "ப்ளூ பீச்" உருவாக்கப்பட்டு, அதிக அளவில் மக்கள் வருகை தருகின்றனர். இப்பொழுது அந்த "ப்ளூ பீச்" கடற்கரையை பார்ப்பதற்காகவே மக்கள் பெருமளவில் வருகிறார்கள் என்பதை இந்நேரத்தில் பதிவு செய்ய வேண்டிய கடமை எமக்கு உண்டு. "ப்ளூ பீச் – *II*"யும் தயாராகி வருகின்றது; விரைவில் துவங்கப்பட உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் ரோப் கார் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இது சென்னை மாநகராட்சியின் *Mile Stone* திட்டம் என்று சொல்லலாம். இதற்காக அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் சார்பாக இந்த நேரத்தில் மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *64*: விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே வட அகரத்திலுள்ள பாலம் மிகவும் வலுவிழந்துள்ளதாலும், பொதுமக்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டும், இப்பாலத்தினை முற்றிலுமாக இடித்து விட்டு மூலதன நிதியிலிருந்து ரூ.*5.00* கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை மாநகராட்சியில் மேயராக இருந்த காலகட்டத்தில் சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்க வேண்டி பல பாலங்களை கட்டினார். அதனை தொடர்ந்து தற்போது அறிவிக்கப்பட்டுள்ள *64*வது அறிவிப்பிற்கு நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 74 : போக்குவரத்து சிக்னலில் காத்திருப்போர் மற்றும் வாகனத்தில் அந்த சந்திப்பை கடந்து செல்பவர்கள் சிரமமின்றி எளிதாக பாதுகாப்பாக பயணிப்பதற்கும் அவர்களின் மனநிலையை மாற்றவும், அவர்களின் காத்திருப்பு நேரத்தை மறந்திடும் வகையிலும், மாநகராட்சியில் உள்ள *100* முக்கிய பிரதான சாலை சந்திப்புகளை அழகுற மேம்படுத்தும் பணி ரூ.*10.00* கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பிற்கு நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 77: பெருநகர சென்னை மாநகராட்சி சாலைகளில் ஏற்படும் ஒட்டுப்பணிகள் தார்கலவை அல்லது சிமெண்ட் கான்கிரீட் கலவை மூலம் மேற்கொள்ளப்படுகிறது. நவீன மறுசுழற்சி சாலை பழுதுபார்க்கும் இயந்திரத்தின் மூலம் ஒட்டுப்பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்கனவே சேதமடைந்த பகுதிகளை அகச்சிவப்பு *(Infrared)* வெப்பமானி மூலம் சூடாக்கி தார்கலவையுடன் கலந்து சீரமைக்கப்படும், இதனால் சாலை ஒட்டுப்பணி மேற்கொள்ளும் பகுதி, சாலைப்பகுதியுடன் சரிசமமாக *(Seamless)* இணைக்கப்படுவதால் எவ்வித மேடு பள்ளம் இல்லாமல் சீராக அமையும் என்பதால், *2026-27* ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி பேருந்து தட சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகளில் ஏற்படும் ஒட்டுப்பணிகளுக்கு நவீன மறுசுழற்சி சாலை பழுது பார்க்கும் நடமாடும் இயந்திரங்கள் *(Infra Red Recycling Road repair mobile machines)* கொள்முதல் செய்து முதற்கட்டமாக பத்து எண்ணிக்கையிலான நவீன மறுசுழற்சி சாலை பழுது பார்க்கும் நடமாடும் கனகர வாகனங்கள் ரூ.*15* கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும். இந்த மறுசுழற்சி சாலை பழுது பார்க்கும் நடமாடும் கனகர வாகனங்கள் மூன்று வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு ஒப்பந்ததாரர் மூலம் சாலை பழுதுபார்க்கும் பணிகள் ஒட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதிநிலை அறிவிப்புகள் முத்தாய்ப்பான நிதிநிலை அறிக்கை. அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கை இன்னும் சிறப்பாக இருக்கும் என தெரிவித்து கொள்கிறேன்.

2026 ஆம் ஆண்டில் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைய போகிறது. நமது மாண்புமிகு மேயர் அவர்கள் அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை

சமர்ப்பிக்கும் போதும், இதைவிட அதிகமான திட்டங்களை வழங்குவார். அனைத்து தரப்பினருக்கும் நன்மைகள் கிடைத்து வரும் திராவிட மாடல் ஆட்சியில், மாண்புமிகு மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் பணிகள் பாராட்டத்தக்கவை.

மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, இந்தத் தேர்தலில் மிகுந்த உழைப்பை செலுத்தி, சென்னை மாநகருக்கு பெருமை சேர்க்க வேண்டும். சென்னை மாநகரின் அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் திராவிட முன்னேற்ற கழக கூட்டணியினை வெற்றி பெற வைக்க வேண்டும்.

அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு அளித்து வரும் அதிகாரிகளுக்கு நன்றியை தெரிவித்து கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.டி.வி.செம்மொழி அவர்கள், வார்டு எண்.*104*.

திரு.டி.வி.செம்மொழி

மாண்புமிகு மேயர் அவர்களே, *2026-2027* ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் உரையாற்றுவதற்கு அனுமதி வழங்கிய ஆளுங்கட்சி தலைவர் அருமை அண்ணன் திரு. ந. இராமலிங்கம் அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

முத்தமிழிறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, இந்திய அளவிலேயே அல்லாது உலகளவில் போற்றப்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். இந்திய துணைக்கண்டத்திலும் உலக அரங்கிலும் விளையாட்டு துறையில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி, இன்றைய தினம் தமிழ்நாடு துணை முதலமைச்சராக பொறுப்பேற்று பல்வேறு சாதனைகளை படைத்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

சென்னை மாநகரின் கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழக செயலாளரும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வெற்றியழகன் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

ரோப்கார் திட்டம் குறித்து நான் பதிவியேற்ற நாளிலிருந்தே தொடர்ந்து பேசி கொண்டிருக்கிறேன். இதனை பத்திரிகைகளிலும் ஊடகவியல்களிலும் தொடர்ந்து வெளிப்படுத்திய பத்திரிகைகள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு இந்த நேரத்தில் என் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் இத்திட்டம் குறித்து அடிக்கடி பேசும் போது, தலைவர் அவர்கள் "இதையே அடிக்கடி பேசி கொண்டிருக்கிறீர்களே" என்று கூறுவார்கள். ஆனால், இன்று அவர் மட்டுமல்லாது இங்கு உரையாற்றிய அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் இதை ஒரு சிறந்த திட்டம் என்று பாராட்டி உரையாற்றும் தருணத்தில் தான், அதன் பெருமை என்ன என்பதை உணர முடிகிறது.

சென்னை மாநகரின் இன்னொரு அடையாளமாக திகழவிருக்கும் ரோப்கார் திட்டம் என்கிற அறிவிப்பிற்கு நன்றி தெரிவித்து, இதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து அதிகாரிகளுக்கும் இந்த நேரத்தில் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்களே, பணிகள் நிலைக்குழு தலைவர் திரு. நே. சிற்றரசு அவர்கள் "நீலக்கொடி கடற்கரை" குறித்து குறிப்பிட்டார். நீலக்கொடி கடற்கரை என்பது சென்னையில் இதுவரை, எனக்கு தெரிந்தவரையில், வயதானவர்கள் யாரும் மணற்பரப்பில் உட்கார முடியாத இடமாக இருந்தது. ஒரு காலத்தில் கார் வைத்திருந்தவர்கள் மட்டும் *Chair*-ஐ காரில் கொண்டு வந்து அதில் அமர்ந்து கடலின் இயற்கை அழகை ரசித்தார்கள்.

ஆனால், இன்றைக்கு "நீலக்கொடி கடற்கரை" என்கிற திட்டம் கொண்டு வந்த பின், வயதானவர்களும் சிறிது தூரம் நடந்து சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள குடிலில் அமர்ந்து, மணற்பரப்பையும் கடற்பரப்பையும் காணும் அழகை அனுபவித்து வருகின்றனர்.

அதே போல், கடற்கரைக்கு வரும் குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் பயன்படுத்தும் வகையில் நவீன முறையில் கழிவறைகள் அமைக்கப்பட்டால் அது இன்னும் சிறப்பாக அமையும். நீலக்கொடி கடற்கரை விரிவாக்கம் செய்யப்படும் போது, திரு. நே. சிற்றரசு அவர்கள் கூறியது போல்,

அதிகளவில் சுற்றுலா பயணிகள் மற்றும் உலகம் முழுவதும் உள்ள மக்கள் பயன் பெறுவார்கள் என்பதை இந் நேரத்தில் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு 13: பெருநகர சென்னை மாநகராட்சியில் *417* சென்னை பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில் *1,13,398* மாணவ-மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள சென்னை பள்ளிகளுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்தி கொடுத்திடும் பொருட்டு, மணலி, மாதவரம், சோழிங்கநல்லூர் பகுதியில் உள்ள சென்னை பள்ளிகளுக்கு ஏற்கனவே *4* பேருந்துகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இத்திட்டம் பெற்றோர் மற்றும் மாணவ-மாணவியர்களிடையே அமோக வரவேற்பு பெற்றுள்ளதால், இத்திட்டத்தை மேலும் விரிவுப்படுத்தி மாணவர்களைப் பள்ளிக்கு அழைத்து வரவும், கல்விச் சுற்றுலா அழைத்து செல்லவும் கூடுதலாக *11* பேருந்துகள் இயந்திரப் பொறியியல் துறையின் மூலம் கொள்முதல் செய்வதற்கு ரூ. *4* கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அதே நேரத்தில், தனியார் பள்ளி மாணவர்களை எவ்வாறு வேன்களில் அழைத்து செல்கிறார்களோ, அதே போன்று குறுகிய சாலைகளில் செல்லும் வகையில் வேன் வசதி ஏற்படுத்தப்பட்டால், குழந்தைகளை அழைத்து செல்ல ஏற்றதாக இருக்கும் என்பதை இந்நேரத்தில் தெரிவித்து கொள்கிறேன்.

***2025-2026* நிதிநிலை அறிக்கை**

அறிவிப்பு *26* : செல்ல பிராணிகளை அடக்கம் செய்வது என்பது இந்திய துணைக்கண்டத்தில் வேறு எங்கும் இல்லாத புதிய முயற்சியாகும். அந்த வகையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வட சென்னையில், மூலக்கொத்தளம் மயான பூமியில் இறந்த செல்ல பிராணிகளை அடக்கம் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

சாலையில் இறந்து கிடக்கும் நாய், பூனை போன்றவற்றை எடுத்து குப்பையில் போடுவது வழக்கமாக இருந்தது. ஆனால், செல்லப் பிராணிகளையும் உயிராக மதித்து, அவற்றை நல்லடக்கம் செய்ய வேண்டும் என்கிற முறையை கொண்டு வந்து, அதற்கான இடத்தையும் ஒதுக்கி வழங்கியதற்கு மாண்புமிகு

மேயர் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த அத்துணை பேர்களுக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

(மாண்புமிகு மேயர் இருக்கையில் மதிப்பிற்குரிய துணை மேயர் அமர்தல்)

மூலக்கொத்தளம் பகுதி வடசென்னையில் அமைந்துள்ளது. அதே போன்று, தென் சென்னை, மத்திய சென்னை போன்ற பகுதிகளிலும் செல்லப் பிராணிகளை நல்லடக்கம் செய்யும் மயான பூமி ஏற்படுத்தி தர வேண்டும் என கேட்டு கொள்கிறேன். இதனால் செல்லப் பிராணிகளை வளர்ப்பவர்கள் மகிழ்ச்சி அடையும் நிலை உருவாகும் என்பதை இந்நேரத்தில் எடுத்து கூறுவது என் கடமையாகும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

ஏற்கனவே அதற்கான இடம் கண்ணம்மா பேட்டையில் உள்ளது.

திரு.டி.வி.செம்மொழி

***2025-2026* நிதிநிலை அறிக்கை**

அறிவிப்பு : *46*

பெருநகர சென்னை மாநகராட்சி நுழைவாயில்கள் மற்றும் முக்கிய சந்திப்புகளில் *10* இடங்களை தேர்வு செய்து, அங்கு மின் ஒளியுடன் கூடிய செயற்கை நீருற்றுகள் ரூபாய் *5.00* கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று சென்ற நிதி ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

ஏற்கனவே செயற்கை நீரூற்றுகள் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், அவை சீரமைக்கப்படாமல், தண்ணீர் இல்லாமல் பயன்பாட்டில் இல்லாமல் உள்ளன. குறிப்பாக, மண்டலம்-*8*, அண்ணா நகர் பகுதியில் பல இடங்களில் இந்நிலை காணப்படுகிறது. எனவே, அந்த நீரூற்றுகளை சீரமைத்து, அவற்றிற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டும் என இந்நேரத்தில் கேட்டு கொள்கிறேன்.

கொசு தொல்லையை கட்டுப்படுத்துவதற்காக, கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் கால்வாய் போன்ற இடங்களில் கொசு மருந்துகள் தெளிக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஆனால், அதே நேரத்தில், மழைநீர் வடிகால்வாய்களில் தேங்கி நிற்கும் நீரை அகற்றுவதற்கான

சிறந்த வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என இந்நேரத்தில் கேட்டு கொள்கிறேன்.

சென்னை மாநகரில் மின்சார வாகனங்களுக்கான சார்ஜிங் நிலையங்கள் பல முக்கிய இடங்களில் அமைக்கப்படும் என அறிவித்துள்ளீர்கள். இது பாராட்டத்தக்க விஷயம். கடந்த ஆறு மாதங்களுக்கு முன் இதே மன்றத்தில் சார்ஜிங் நிலையம் அமைக்க வேண்டும் என கோரிக்கை வைத்தேன். அந்த அடிப்படையில் அறிவித்துள்ளீர்கள்; நன்றி. ஆனால் அது கட்டணமா? அல்லது இலவசமா?

மதிப்பிற்குரிய துணை மேயர்

இலவசம் கிடையாது; கட்டணம் தான்.

திரு.டி.வி.செம்மொழி

***2026-2027* நிதிநிலை அறிக்கை**

அறிவிப்பு *58*

முக்கிய போக்குவரத்து சந்திப்புகளில் ஏற்படும் நெரிசலையும், பயண நேரத்தையும் கணிசமாக குறைக்கவும், சென்னையின் பொது போக்குவரத்து வலையமைப்பை வலுப்படுத்தவும் மற்றும் நிலையான, மகிழ்ச்சியான, பாதுகாப்பான போக்குவரத்து பயணத்தை மக்களுக்கு ஏற்படுத்தவும், மின்ட் சாலை – வண்ணாரப்பேட்டை மெட்ரோ மற்றும் சேப்பாக்கம் – மெரினா ஆகிய இடங்களில் மெட்ரோ இரயில், புறநகர் இரயில், பேருந்துகள், பாதசாரிகள், மிதிவண்டி பயணிகள் மற்றும் கடைசி மைல் இணைப்பு சேவைகளை *(Last-Mile Services)* தடையின்றி இணைக்கும் போக்குவரத்து மையங்கள் ரூ.*40* கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

திரு அருட்பிரகாச வள்ளலார் அவர்களை கௌரவிக்கும் வகையில், 'மின்ட் பகுதி' "வள்ளலார் நகர்" என முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இங்குள்ள அனைத்து பேருந்துகளிலும் "வள்ளலார் நகர்" என்று இருப்பதை காணலாம்.

அது மட்டுமல்லாது, இந்த மெட்ரோ வழித் தடத்தில், *NEW WASHERMENPET* என்று பெயர் கொண்ட வேறு ஒரு ஸ்டேஷன் ஒன்று உள்ளது. ஒரே வழி தடத்தில், இரு வேறு ஸ்டேஷன்கள், ஒன்று போல இருக்கின்ற காரணத்தினால் மக்கள் குழப்பமடைகின்றனர்.

எனவே, இது தொடர்பாக மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் பேசி வண்ணாரப்பேட்டை மெட்ரோ *(WASHERMENPET METRO)* என்று பெயரிடப்பட்டுள்ள மெட்ரோ ரயில் நிலையத்திற்கு "வள்ளலார் நகர் மெட்ரோ"(***VALLALAR NAGAR METRO***)என்று பெயர் மாற்றம் செய்து தருமாறு கேட்டு கொள்கிறேன்.

சென்னை திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு "வள்ளலார் நெடுஞ்சாலை" என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த பெயர் மாற்றத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

அண்ணாசாலையில் இருக்கும் அரசினர் தோட்டத்திற்கு, "ஓமந்தூரார் அரசினர் தோட்டம்" *(Omandurar Government Estate)* என்று முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் பெயர் வைத்து தற்போதும் அவை புழக்கத்தில் இருந்து வருகிறது. தற்போதும் கூட, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள மருத்துவமனை, "ஓமந்தூரார் அரசு பல் நோக்கு மருத்துவமனை" என்றும், தோட்டத்தின் உள்ளே அமைந்துள்ள மருத்துவ கல்லூரி "ஓமந்தூரார் மருத்துவ கல்லூரி" என்றும் பெயரிட்டு வழக்கத்தில் இருந்து வருகிறது. ஆனால், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தினர், அந்தக் குறிப்பிட்ட இரயில் நிலையத்திற்கு "அரசினர் தோட்டம்" *(Government Estate)* என்று மட்டுமே பெயரிட்டுள்ளனர்.

எனவே, இது தொடர்பாக மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் பேசி, "அரசினர் தோட்டம்" என்று பெயரிடப்பட்டுள்ள இந்த மெட்ரோ இரயில் நிலையத்திற்கு "ஓமந்தூரார் அரசினர் தோட்டம்" *(Omandurar Government Estate)* என்று மாற்றம் செய்து தரும்படி அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

அறிவிப்பு *69*

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் 6 இடங்களில் வீடற்றோர்கள் தங்குவதற்கான அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய இரவு

காப்பகம் (தரைதளம் மற்றும் முதல் தளம்) மொத்தம் ரூ.9 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என்கிற அறிவிப்பிற்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

சாலைகளில் சிக்னலில் நிற்கும் வாகனங்களில் கையேந்தி உதவி கேட்பவர்களை கட்டுப்படுத்த வேண்டும். அவர்களை தடுத்து, காப்பகங்களுக்கு அழைத்து சென்று, தேவையான உதவிகளை வழங்க வேண்டும் என இந்நேரத்தில் கேட்டு கொள்கிறேன்.

பூங்காக்களில் இசை மைதானம் அமைத்தல் அவசியம். இரண்டு, மூன்று வயது குழந்தைகள் நடக்கும் போது கால்களில் காலணியை அணிவர். அவர்கள் நடக்கும் போது எழும் ஒலி, குழந்தைகளை மேலும் நடக்க தூண்டும். அது போன்று, பூங்காவில் அரை கிரவுண்டு அல்லது ஒரு கிரவுண்டு பரப்பளவில் இசை மைதானம் அமைத்தால், குழந்தைகள் நடக்கும் பொழுது இனிய ஒலி எழுந்து அவர்களுக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளிக்கும். இதனை பார்ப்போர், பெற்றோர்களும் ஆனந்தம் அடைவார்கள். குறிப்பாக, வார்டு-104 இல் இப்படிப்பட்ட வசதி ஏற்படுத்தி வழங்கினால் சிறப்பாக இருக்கும் என்பதை இந்நேரத்தில் தெரிவித்து கொள்கிறேன்.

சென்னை மாநகரில் உள்ள முக்கிய மத்திய, மாநில, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகங்கள், மருத்துவமனைகள், பள்ளி, கல்லூரி வளாகங்கள், விளையாட்டு திடல்கள், பூங்காக்கள், குறிப்பாக கழிவறைகள் ஆகியவை எங்கு அமைந்துள்ளன என்பது பொதுமக்களுக்கு தெளிவாக தெரியவில்லை. இன்றைய நவீன உலகில் பல்வேறு செயலிகள் உருவாக்கப்பட்டுள்ள நிலையில், இத்தகைய தகவல்களை ஒருங்கிணைத்து, பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் ஒரு செயலி உருவாக்கப்பட வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

ஏற்கனவே அதற்கான செயலி உள்ளது. அதை பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி கொள்ளலாம்.

திரு. டி.வி. செம்மொழி

அந்தச் செயலியை பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளத்தில் கொண்டு வர வேண்டும் என்பதே என்னுடைய கோரிக்கை.

சென்னை மாநகராட்சியில் அறிவிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கை என்பது திருவொற்றியூர் முதல் வேளச்சேரி வரை, ஆலந்தூர் முதல் மதுரவாயல் வரை உள்ள *22* சட்டமன்ற தொகுதிகளை உள்ளடக்கியதாகும். இவ் அறிவிப்பு, வரவிருக்கும் தேர்தலில் *22* சட்டமன்ற தொகுதிகளிலும் வெற்றி நிச்சயம் என்கிற அளவிற்கு மாநகராட்சியின் நிதிநிலை வலிமையாக இருப்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்து கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை தயாரித்த திருமதி சர்பஜெயாதாஸ் அவர்களுக்கும், மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும், அனைத்து துறை அதிகாரிகளுக்கும், ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்கி, உரையை நிறைவு செய்கிறேன், **நன்றி, வணக்கம்.**

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. பாத்திமா அஹமத் அவர்கள், வார்டு எண்.*61*.

திருமதி பாத்திமா அஹமத்

மாண்புமிகு மேயர் அவர்கள், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர், ஆளுங்கட்சி தலைவர், நிலைக்குழு தலைவர்கள், வார்டு குழு தலைவர்கள், சக மாமன்ற உறுப்பினர்கள், பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகள் அனைவரின் மீதும் ஏக இறைவனின் சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக.

ரமலான் மாத நோன்பினை ஆரம்பித்து பல்வேறு பள்ளிவாசல்களில் நோன்பு கஞ்சி அளிக்கும் வழக்கத்தை எப்போதும் நாங்கள் கோரிக்கையாக வைத்து, அரசாங்கம் அதற்கு வேண்டிய பச்சரிசியை இலவசமாக வழங்குவது வழக்கம். ஆனால், திராவிட மாடல் அரசு ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து

நாங்கள் கோரிக்கை வைக்காமலேயே, ரமலான் மாதம் நோன்பு ஆரம்பிப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னதாகவே அனைத்து பள்ளிவாசல்களுக்கும் *8700* மெட்ரிக் டன் பச்சரிசியை வழங்கியதற்காக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி சார்பாக திராவிட மாடல் *Hero* நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினையும், ரம்ஜான் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்வதில் பெருமையடைகின்றோம்.

அடுத்து, பெண்கள் அனைவரும் எப்படி முன்னேற வேண்டும், அவர்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டுமென்று இந்தியாவிலேயே பெண்கள் பாதுகாப்புடன் இருக்க கூடிய மாநிலமான தமிழ்நாட்டில் தாயுள்ளம் கொண்ட, தந்தையாக இருக்க கூடிய தலைமகன், திராவிட மாடல் நல்லாட்சி வழங்கி கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் அனைத்து மகளிருக்கும் கிடைக்க வேண்டிய மகளிர் உரிமை தொகையை தடுத்து நிறுத்த சிலர் முற்பட்ட பொழுது, நீங்கள் ரூ.*1000/-* னை தடுக்கலாம், நான் ரூ.*5000/-*ஆக தருவேன் என அனைத்து மகளிருக்கும் ரூ.*5000/-* உரிமை தொகையினை *3* மாத தவணையுடன், கோடை கால சிறப்பு தொகுப்பு ரூ.*2000/-*சேர்த்து வழங்கியமைக்கு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மகளிர் சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை இந்த மன்றத்தின் வாயிலாக தெரிவித்து கொள்கிறேன்.

ஐந்தாவது நிதிநிலை அறிக்கையினை இந்த மன்றத்தில் மிக சிறப்பாக சமர்ப்பித்திருக்கின்றார்கள். *2022*-ஆம் ஆண்டில் நாமெல்லாம் பொறுப்பேற்றதிலிருந்து தற்போது வரையிலும் மிக சிறப்பாக நிதிநிலை அறிக்கையினை சமர்ப்பித்துள்ள மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர் மற்றும் அனைத்து அதிகாரிகளுக்கும், உறுதுணையாக இருந்த நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த பாராட்டினை தெரிவித்து கொள்வதோடு, அடுத்த ஆண்டிலும் வெற்றிகரமான சாதனைகளை படைக்க இருக்க கூடிய நிதிநிலை அறிக்கையினை தருவதற்கான ஓர் அஸ்திவாரமாக இது அமைய வேண்டுமென பிரார்த்திக்கிறேன். பல மாமன்ற உறுப்பினர்கள் இந்த நிதிநிலை

அறிக்கையினை பாராட்டி நன்றி தெரிவித்தார்கள். எனவே, அதனை நான் மீண்டும் தெரிவிக்கவில்லை.

தமிழ்நாட்டின் பெருமைமிகு மெரினா கடற்கரையை, உலக தரம் வாய்ந்த மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த ***Blue Flag*** **சான்றிதழ்** பெற்ற கடற்கரையாக மேம்படுத்தி, நவீன வசதிகளுடன் ஆகஸ்ட் 2025-ல் திறந்து வைத்த மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு *61:* சுற்றுலாவை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மெரினா கடற்கரையை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்காக கலங்கரை விளக்கம் *(Light House)* முதல் அண்ணா நினைவிடம் வரை கயிறு வழித்தட *(Rope way car)* வசதி அறிமுகப்படுத்த திட்டமிட்டப்பட்டுள்ளது. இந்த கயிறு வழித்தடங்கள், நகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்வதுடன், சுற்றுலா பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்துகின்றன. இந்த கயிறு வழித்தடங்கள் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் அழகை ரசிக்க வைக்கும் பரந்த காட்சிகளை *(Panoramic views)* வழங்குவதோடு மறக்க முடியாத அனுபவங்களையும் உருவாக்கும் வகையில் பொது-தனியார் பங்களிப்பு *(PPP)* முறையில் கயிறு வழித்தடங்கள் *(Rope way car)* அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

ரிப்பன் மாளிகை அருகில் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்த விக்டோரியா பப்ளிக் ஹாலினை புனரமைக்க முயற்சி எடுத்து அல்லும் பகலும் அதற்காக பாடுபட்ட மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சரரும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும தலைவருமான திரு. பி.கே. சேகர்பாபு அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் வணக்கத்திற்குரிய மேயராக இருந்த கால கட்டத்தில் குத்தகை

காலம் முடிவடைந்த பிறகும் தனியார் வசம் இருந்த விக்டோரியா பப்ளிக் ஹாலினை மீட்டெடுத்து, அதற்காக சட்ட போராட்டங்களை நடத்தியும், மேலும், உள்ளாட்சி துறை அமைச்சராகவும், துணை முதலமைச்சராகவும் பொறுப்பு வகித்த காலங்களிலும் இதனை தொடர்ந்து கண்காணித்து தற்போது முதலமைச்சராக பொறுப்பேற்ற நேரத்தில் விக்டோரியா பப்ளிக் ஹாலினை பழமை மாறாமல் புனரமைத்து அதனை அவரே திறந்தும் வைத்துள்ளார்.

திருமதி. பாத்திமா அஹமத்

சென்னை மாநகரின் மைய பகுதியில் சென்ட்ரல் இரயில் நிலையம் அருகில் அழகுற விக்டோரியா பப்ளிக் ஹாலினை அர்ப்பணித்தமைக்கு மனமார்ந்த பாராட்டினை இந்த மன்றத்தின் வாயிலாக தெரிவித்து கொள்கிறேன்.

மன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு புகைப்படத்தினை அழகாக ஆவணப்படுத்தியதற்கும், *நம்ம சென்னை* என்கிற புத்தகத்தை அனைத்து துறைகளின் *Report Card* போன்று சமர்ப்பித்ததற்கும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி சார்பாக மனமார்ந்த பாராட்டினை தெரிவித்து கொள்கிறேன். புத்தகத்தின் முகப்பில் மன்ற உறுப்பினர்கள் படங்களை வெளியிட்டிருப்பது மகிழ்ச்சியாக உள்ளது. அனைத்து மன்ற உறுப்பினர் அலுவலகங்களிலும் இந்தப் படங்களை வைக்க உள்ளோம். எனவே, இதன் *Soft copy* வழங்குமாறு கேட்டு கொள்கிறேன்.

அடுத்து, சென்னை பெருநகரை *டிஜிட்டல் சென்னை*யாக மாற்றி கொண்டிருக்கிறோம். இந்த வரவு செலவு திட்டத்தினை ஆதரித்து, வரவேற்று பேசும் நேரத்தில் மன்றத்தில் ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். டெல்லி மாநகரில் பல முக்கிய பகுதிகளில் *Free Wi-Fi* வசதி அளித்து வருகிறார்கள். அதே போன்று, சென்னை மாநகரின் பல்வேறு மையப்பகுதிகளில் *Free Wi-Fi* வசதி வழங்கினால், மக்களுக்கு பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

ஏற்கனவே இது குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றிருக்கிறோம். பூங்காக்கள், கடற்கரை பகுதி, பேருந்து நிறுத்தங்கள் போன்ற இடங்களில் இலவச *Wi-Fi* வசதியினை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி பாத்திமா அஹமத்

இந்த வசதி அளிக்கப்பட்டால் மிகவும் பயனுள்ளதாக அமையும்.
அடுத்ததாக, மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி *60.00* லட்சம் என்பது போதுமானது அல்ல. இதனை ஒரு கோடி ரூபாயாக உயர்த்தி அளிக்க வேண்டுமென்று அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் சார்பாக கேட்டு கொள்கிறேன். ***(கைதட்டல்)***

மதிப்பிற்குரிய துணை மேயர்

எதிர்காலத்தில் கண்டிப்பாக மன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி ஒரு கோடி ரூபாயாக உயர்த்தி தரப்படும்.

திருமதி பாத்திமா அஹமத்

எதிர்காலத்தில் உயர்த்தி தரப்படும் என்பது மகிழ்ச்சி. ஆனால், அது நம் காலத்திலேயே உயர்த்தப்பட வேண்டும் என்பதே எங்களின் கோரிக்கை.
அடுத்ததாக, வரும் ரமலான் நோன்பு தொழுகைக்கான இடம் குறைவாக உள்ள பல்வேறு பள்ளிவாசல்களில், மாநகராட்சியின் விளையாட்டு திடல்களை கோருகின்ற போது உடனடியாக அனுமதி வழங்குமாறு முன் கூட்டியே கேட்டு கொள்கிறேன்.

மூன்று நாட்களுக்கு முன்னதாகவே, இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தேசிய தலைவர் பேராசிரியர் திரு. காதர் மொய்தீன் அவர்கள் இந்தக் கருத்தினை பதிவு செய்துள்ளார்கள். அனைவரும் ஒன்றிணைந்து வெல்வோம் என்கிற எண்ணத்தோடு செயலாற்றி கொண்டிருக்கும் நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சியே மீண்டும் வர வேண்டும் என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம்.

தேர்தலிலும், அரசியலிலும் உண்மையான ஹீரோ, திராவிட மாடல் அரசின் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மட்டுமே.

இதே ஆட்சி தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் என்கிற கருத்தினை பதிவு செய்து, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி,வணக்கம்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.வி.வி.கிரிதரன் அவர்கள், வார்டு எண்.*148*.

திரு.வி.வி.கிரிதரன்

மாண்புமிகு மேயர் அவர்களே, வரலாற்று சிறப்பு மிக்க மன்றத்திற்கு வணக்கம். டாக்டர் புரட்சி தலைவி அம்மா அவர்களின் வழியில் எங்களை வழிநடத்தி கொண்டிருக்கும் மக்கள் செல்வர், அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் பொது செயலாளர் அண்ணன் திரு.டி.டி.வி. தினகரன் அவர்களை வணங்கி எனது உரையை தொடங்குகிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நியமனக்குழு உறுப்பினர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, சக மாமன்ற உறுப்பினர்களே, துறை சார்ந்த அதிகாரிகளே உங்கள் அனைவருக்கும் *148*-ஆவது வார்டு பொதுமக்கள் சார்பாக வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

***2025-2026*-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை**

அறிவிப்பு எண்.*16*

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பள்ளிகளில் நடத்தப்பட்டு வரும் மழலையர் வகுப்புகளில் *(LKG* மற்றும் *UKG)* குழந்தைகள் மகிழ்ச்சியாக மற்றும் ஆரோக்கியமான சூழலில் கல்வி கற்க ஏதுவாக அவ்வகுப்பறைகளின் சுவற்றில் வர்ணம் பூசுதல், விளக்கப்படங்கள், மரச்சாமான்கள் பொருத்துதல், சுவற்றில் வண்ணப்படங்கள் வரைதல் மற்றும் குழந்தைகள் அமர்வதற்காக பல வண்ணங்களில் வட்ட மேசைகள் மற்றும் நாற்காலிகள் அமைத்து கொடுக்கப்படும் என்கிற அறிவிப்பு அறிவிக்கப்பட்டு,

அவை 148-ஆவது வார்டில் உள்ள துவக்கப்பள்ளிக்கு அமைத்து கொடுத்ததற்கு நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

2026-2027ல் 90 அறிவிப்புகள் மாண்புமிகு மேயர் அவர்கள் அறிவித்தார்கள். அனைத்தும் சிறப்பான அறிவிப்புகள்.

2025-2026-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை

அறிவிப்பு எண்.13

சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காட்சி வழியாக பாடங்களை விளக்குவதற்கு பெரிய அளவிலான மின்னணு பலகைகள் (Display) நிறுவுதல் என்கிற அறிவிப்பு அறிவிக்கப்பட்டு, அதன்படி, பெரிய அளவிலான மின்னணு பலகைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், அவற்றை இயக்குவதற்கு தொழில்நுட்ப உதவி தேவைப்படுகின்றது என்றும், WIFIல் சிக்கல் உள்ளதாகவும், மேலும் தேவையான வகுப்பறைகளில் பெரிய அளவிலான மின்னணு பலகைகள் நிறுவப்படவில்லை என்றும் ஆசிரியர்கள் தெரிவித்து வருகின்றனர்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

இது தொடர்பாக தலைமை பொறியாளர் (பொது) அவர்கள் ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2025-2026-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை

அறிவிப்பு எண்.19

முதியோர்களின் நலன் பேணும் வகையில் முதற்கட்டமாக, வடக்கு வட்டாரத்தில் பி.ஆர்.என் கார்டன், மத்திய வட்டாரத்தில் செம்பியம் மற்றும் தெற்கு வட்டாரத்தில் துரைப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் தலா மையத்திற்கு ரூபாய் 30.00 இலட்சம் வீதம் 3 மையத்திற்கு ரூபாய் 90.00 இலட்சம் செலவில் முதியோர்களுக்கென தனிப் பிரிவு புதியதாக தொடங்கப்படும். இப்பிரிவில் ஒரு மருத்துவ ஆலோசகர், ஒரு இயன்முறை சிகிச்சை நிபுணர் மற்றும் இரண்டு உதவியாளர்கள் பணியிலமர்த்தப்படுவார்கள். இது சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பாகும். இதனை தொடர்ந்து, முதியோர்களுக்கான ஒரு தனி பிரிவு வடக்கு

மண்டலத்தில் மட்டும் செயல்பாட்டிற்கு வந்துள்ளது என தெரிவித்திருக்கின்றீர்கள்.

148-வது வார்டில் UPHC-ல் முதியோர்களுக்கான ஒரு தனி பிரிவு அமைக்க வேண்டும் என கடந்த மன்றக்கூட்டத்தில் கோரிக்கையினை முன் வைத்திருந்தேன்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இது தொடர்பான அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை. இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என தெரிவித்து கொள்கிறேன்.

2026-2027 நிதிநிலை அறிக்கை

அறிவிப்பு எண்.7

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 206 தொடக்க மற்றும் 130 நடுநிலைப்பள்ளிகளில் LKG முதல் 5 ஆம் வகுப்பு வரை உள்ள 2,563 வகுப்பறைகளின் வெளிப்புறத்தில் காலணி வைப்பு அறை ரூ.90 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் 46 உயர்நிலை மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு வகுப்பறைக்கும் தலா ஒரு நாற்காலி, மேசை என்ற விகிதத்தில் 3,303 மேசைகள் மற்றும் 3,303 நாற்காலிகள் ரூ.2.60 கோடி மதிப்பீட்டிலும் கொள்முதல் செய்து உரிய பள்ளிகளுக்கு வழங்கப்படும். இதற்காக மொத்தம் ரூ.3.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்துள்ளமைக்கு நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன். இவை உடனடியாக நிறைவேற்றி தர வேண்டும்.

148-ஆவது வார்டில் உள்ள ஆரம்ப பள்ளியில் சத்துணவு உணவு கூடம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், அது இன்னும் செயல்பாட்டிற்கு வரவில்லை. தற்போது 147-வது வார்டில் சமைத்து 148-வது வார்டில் உள்ள ஆரம்ப பள்ளிக்கு கொண்டு வருகிறார்கள். அங்கு பெண் பணியாளர்கள் இருப்பதால் உணவை எடுத்து வருவதில் சிரமம் ஏற்படுகிறது. 2 கி.மீ. தூரம் சென்று எடுத்து வரும் நிலை உள்ளது. ஏற்கனவே இங்கு சமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டிருந்தது. இக் கட்டிடம் இடிக்கப்பட்ட காரணத்தினால் சமையல் செய்வது நிறுத்தப்பட்டது.

எனவே, 148-ஆவது வார்டிலேயே சத்துணவு சமைக்கும் நடைமுறையை கொண்டு வர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டு கொள்கிறேன்.

அறிவிப்பு எண்.9

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை பள்ளிகளில் 130 நடுநிலை பள்ளிகள், 46 உயர்நிலை பள்ளி மற்றும் 35 மேல்நிலை பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவியர்கள் தமிழ், ஆங்கிலத்தில் இலக்கண பிழை இல்லாமல் எழுதுவதற்கும் மாணவர்களிடையே உரையாடலை எளிமையாக்குவதற்கும், அதிக அளவில் தமிழ், ஆங்கில சொற்களை கற்று கொள்வதற்கும், மேலும், அவர்களின் ஆங்கில மொழி திறனை மேம்படுத்தும் நோக்கிலும், 8ஆம் வகுப்பில் பயிலும் 8,892 மாணவ-மாணவியர்கள், 9-ஆம் வகுப்பில் பயிலும் 7,934 மாணவ-மாணவியர்கள் மற்றும் 10-ஆம் வகுப்பில் பயிலும் 7,292 மாணவ-மாணவியர்கள் என மொத்தம் 24,118 மாணவ-மாணவியர்களுக்கு தமிழ்–ஆங்கில அகராதி (Dictionary) ரூ.37 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து மாணவ-மாணவியர்களுக்கு வழங்கப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

இதே போன்று, ஆரம்ப பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் அகராதி வழங்கினால் அது மிகுந்த பயனளிக்கும். குறிப்பாக, "Children's Visual Dictionary" அல்லது "Kids Dictionary for Pictures" போன்ற காட்சி வழி அகராதிகள் வழங்கப்பட்டால், குழந்தைகள் சொற்களை எளிதில் புரிந்து கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து கொள்கிறேன்.

அறிவிப்பு எண்.12

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் – 9, ஆயிரம் விளக்கு பகுதியில் தசைத்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் தசைச்சிதைவு நோயால் (Muscular Dystrophy) பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்புக்கல்வி கற்பித்தல் மற்றும் குறைந்த நடமாடும் திறன் கொண்ட குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதில் மாணவ-மாணவியர்களுக்கான வீல்சேர், ஸ்டாண்டிங் ஃபிரேம், பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள், சாய்தள

வசதியுடன் கூடிய கழிவறை, பாதுகாப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பள்ளியை போன்று இதர 14 மண்டலங்களிலும் வட்டார துணை ஆணையர் அவர்களின் மேற்பார்வையில் பொது-தனியார் பங்களிப்பு *(Public-Private Partnership)* மற்றும் அரசு சாரா நிறுவனம் *(Non Governmental Organization)* மூலம் சிறப்பு பள்ளிகள் நிறுவப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

தனியார் மருத்துவமனைகளில் இதற்காக அதிக பணம் வசூல் செய்யப்படுகிறது. வார்டு-148ல் உள்ள மக்கள் 4 கி.மீ தூரத்தில் உள்ள கே.கே.நகர் போன்ற இடங்களுக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, அனைத்து மண்டலங்களிலும் இந்த அறிவிப்பினை நடைமுறைப்படுத்தினால், பொதுமக்கள் பாராட்டும் வகையில் சிறந்த திட்டமாக அமையும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

எதிர்காலத்தில் சிறப்பு குழந்தைகளின் பொழுதுபோக்குக்கும் கல்விக்குமான வசதிகளுக்கும் மாநகராட்சி சார்பில் அதிக கவனம் செலுத்த உள்ளோம். அதனை ஒவ்வொரு கட்டமாக கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. வி.வி. கிரிதரன்

தற்போது இந்தக் குறைபாடு அதிகமாக உள்ளது. இதற்காக மக்கள் கோயம்புத்தூரில் சிகிச்சை பெறும் நிலை உள்ளது. இது ஒரு சிறப்பு அறிவிப்பு. இதனை விரைவில் செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அறிவிப்பு எண்.15

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 19 மாநகர சமுதாய நல மையங்கள், 200 மாநகர நல வாழ்வு மையங்கள் மற்றும் 1 தொற்று நோய் மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இந்த 360 சுகாதார மையங்களில் புற்று நோய்க்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பெண்களை பெரிதும் பாதிக்கும் கருப்பை வாய் புற்றுநோய் ***HPV DNA*** என்னும் நுண்கிருமியால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால் ***HPV*** வைரஸ் மூலம் உண்டாக்கும் கருப்பை வாய்

புற்றுநோயை கண்டறியும் விதமாக 360 சுகாதார மையங்களிலும் இந்த பரிசோதனை செய்யப்பட்டு, அதன் மாதிரிகளை தொற்று நோய் மருத்துவமனையிலுள்ள ***RTPCR*** கூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. இன்றைய காலகட்டத்திற்கு இது அவசியமான ஒன்று.

148-வது வார்டில் UPHC-ல் **இளம் பருவ சுகாதார மையம்** அமைக்க வேண்டும் என்று கேட்டிருந்தேன். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அதையும் சேர்த்து செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

அறிவிப்பு எண்.*40*

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் காற்று மாசினை தடுக்கும் பொருட்டு காற்றில் பரவும் தூசியினை தண்ணீர் புகை கொண்டு படியவைக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக கனரக அடிச்சட்டத்தில் பொருத்தப்பட்ட CANON Mist Blower Machine Mounted on HMV Truck (CNG) இயந்திரம் இரண்டு எண்ணிக்கையிலும் மற்றும் இலகுரக அடிச்சட்டத்தில் பொருத்தப்பட்ட CANON Mist Blower Machine Mounted on LMV Truck (CNG) இயந்திரம் ஆறு எண்ணிக்கையிலும் ரூ.3.56 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்கிற அறிவிப்பினை பாராட்டுகிறேன்.

மேற்படி இயந்திரம், மண்டலத்திற்கு ஒன்று என 15 இயந்திரம் கொள்முதல் செய்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அனைத்து மண்டலங்களிலும் தூசி அதிகமாக உள்ளது. எனவே, மண்டலத்திற்கு ஒன்று என 15 இயந்திரம் கொள்முதல் செய்ய வேண்டும்.

அறிவிப்பு எண்.*45*

2026-27ஆம் நிதியாண்டில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில் மக்கள் அதிகம் கூடும் பூங்காக்களான

1. மண்டலம்-2,கோட்டம்-15, மணலி நியு டவுன், Block No.26, CPS-10 பூங்கா.
2. மண்டலம்-5, கோட்டம்-53, தங்கசாலை பூங்கா.

3. மண்டலம்-7, கோட்டம்-83, மதனகுப்பம் பூங்கா.

4. மண்டலம்-8, கோட்டம்-103, டாக்டர். விஸ்வேஸ்வரைய்யா டவர் பூங்கா.

5. மண்டலம்-13, கோட்டம்-123, ராஜிவ் காந்தி சாலை பூங்கா

ஆகிய 5 பூங்காக்களில், சிறப்பு குழந்தைகளுக்கான உபகரணங்கள் உள்ளடக்கிய *(Inclusive Parks for Special Children)* சிறப்பு அம்சங்கள் கொண்ட பூங்காக்களாக ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்கிற அறிவிப்பிற்கு நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன். இதில் மண்டலம்-11 விடுபட்டுள்ளது, அவற்றையும் சேர்த்து கொள்ள வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

அறிவிப்பு எண். 54 - *MRTS* நிலையங்களுக்கு அருகில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட பசுமைப்பகுதி மாற்றங்களின் தொடர்ச்சியாக கஸ்தூரிபாய் நகர் சந்திப்பின் வடக்கு முனையிலிருந்து திருவான்மியூர் தெற்கு பகுதி வரையிலான பக்கிங்ஹாம் கால்வாய் வழித்தடத்தை ஒளிமயமான மற்றும் அழகான பொது இடமாக மாற்றவும், இந்த வழித்தடத்தில் வசிக்கும் மக்களுக்கு உயர்தர பொழுதுப்போக்கு வசதிகளையும் காலநிலை மாற்றத்தை சமாளிக்கும் திறனை வளர்க்கவும் இப்பாதையில் தொடர்ச்சியான நடைபாதை, மிதிவண்டிப்பாதை, மியாவாக்கி குறுங்காடுகள், மற்றும் இருக்கை வசதிகள் அமைத்தல், நாட்டு மரக்கன்றுகள் நடுதல் மற்றும் இயற்கை சார்ந்த வடிகால் அமைப்புகள் மூலம் பல்லுயிர் பெருக்கம் மற்றும் வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகள் நகர்ப்புற பசுமையாக்கல் திட்டத்தின் *(Urban Greening)* மூலம் ரூ.45 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

மண்டலம்-11, வார்டு-148ல் விருகம்பாக்கம் கால்வாய் அருகில் ஆறரை கிலோ மீட்டர் இடம் உள்ளது. அதில் நடைபாதை, மிதிவண்டி பாதை, மியாவாக்கி குறுங்காடுகள், குழந்தைகளுக்கு விளையாடும் உபகரணங்கள், இருக்கை வசதிகள் போன்றவை அமைத்து தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தொடங்கிய திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதனுடன் இணைத்து மேற்கண்ட பணிகளும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

முதற்கட்டமாக வீராங்கல் ஓடையின் இருபுறமும் தடுப்பு சுவர் அமைப்பது, கால்வாய்களை மேம்படுத்துவது போன்ற பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது. அடுத்த கட்டமாக மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படும்.

***2025-2026* நிதிநிலை அறிக்கை**

அறிவிப்பு எண்.*52*

சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில், மின்தடை ஏற்படும் நேரங்களில் மாணவ மாணவியர்களின் கல்வி தடைபடாமல் இருக்க மின்னாக்கி ***(Generator)*** அமைப்பது அவசியமாகிறது. **இது சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பாகும்.**

148-வது வார்டில் உள்ள ஆரம்ப பள்ளியில் மின்னாக்கி ***(Generator)*** அமைப்பது இன்னும் செயல்பாட்டிற்கு வரவில்லை என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். இதனை உடடினடியாக நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும்.

***2025-2026* நிதிநிலை அறிக்கை**

அறிவிப்பு எண்.*58*

பெருநகர சென்னை மாநகராட்சியில் குப்பை கொட்டும் வளாகங்களில் கண்காணிப்பு கேமராக்கள் ஏற்கனவே பொருத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இவை போதுமானதாக இல்லாததன் காரணமாக திடக்கழிவுப் பணிகளை கண்காணிக்க இயலாத நிலை உள்ளதால். கூடுதல் எண்ணிக்கையிலான கண்காணிப்பு கேமராக்களை பொருத்த வேண்டியது அவசியமாகிறது.*148*-வது வார்டிலும் மேற்படி பணி மேற்கொள்ள வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பேருந்து, இரயில், ஆகாய விமானங்களில் பயணம் செய்வதற்கு இலவச பாஸ் வழங்கப்படுவதை போன்று மாமன்ற உறுப்பினர்களுக்கு *Metro rail Pass*

வழங்கப்பட வேண்டும் என அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் சார்பாக கேட்டு கொள்கிறேன்.

கோடை காலத்தில் முக்கிய சந்திப்புகளில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக குடிநீர் வழங்க ஆவன செய்ய வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

148வது வார்டில் 40ற்கும் மேற்பட்ட மழைநீர் வடிகால்வாய் அமைக்க வேண்டியுள்ளன. இந்த நிதியாண்டில் மழைநீர் வடிகால்வாய்க்கு ரூ.693 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டில் ரூ.1290 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியாண்டில் பாதி அளவு தான் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மதிப்பிற்குரிய துணை மேயர்

அனைத்து பணிகளும் ஓரளவிற்கு முடிவடைந்துவிட்டது. Suburban ஏரியாவில் தான் பணிகள் நடைபெற்று வருகின்றன. அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரத்தில் மழைநீர் வடிந்துவிடும் இடங்களில் மழைநீர் வடிகால்வாய் அமைப்பது அவசிமில்லை.

திரு.வி.வி. கிரிதரன்

30 வருடங்களுக்கு முன்பு பஞ்சாயத்தாக இருந்த இடங்களில் அமைக்கப்பட்ட மழைநீர் வடிகால்வாய்கள் செங்கற்களால் கட்டப்பட்டவை. அவை அனைத்தும் தற்போது மிகவும் சிதிலமடைந்துள்ளன.

மதிப்பிற்குரிய துணை மேயர்

நிறைய இடங்களில் மழைநீர் வடிகால்வாய் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதால், அவசியமாக தேவைப்படும் இடங்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு.வி.வி. கிரிதரன்

வார்டு-148க்கு தேவையான மழைநீர் வடிகால்வாய் பணிகள் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட வேண்டும் என தாழ்மையுடன் கேட்டு கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. உமா ஆனந்தன் அவர்கள், வார்டு எண்.134.

திருமதி உமா ஆனந்தன்

மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆளுங்கட்சி தலைவர், ஆணையர், துணை ஆணையர்கள், வட்டார துணை ஆணையர்கள், மாநகராட்சி அதிகாரிகள், சக மாமன்ற உறுப்பினர்கள், ஊடக துறையினை சார்ந்த நண்பர்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

முதலில் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் ***RSS*** இயக்கத்திற்கு என் வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன். **(அவையில் சலசலப்பு)**

ஒரு வேண்டுகோள். இது மாநகராட்சி கூட்டம். ஆனால், போகிற போக்கில் பார்த்தல் *DMK* பொது கூட்டம் போல் ஆகி கொண்டிருக்கிறது.

மதிப்பிற்குரிய துணை மேயர்

தேவையில்லாத கருத்துக்களை பேச வேண்டாம். ஒரு விஷயத்தை மன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்துகிறேன். **(அவையில் சலசலப்பு)** அமைதியாக இருங்கள். நான் பேசுகிறேன். மன்ற உறுப்பினர் அவர்கள், உங்கள் கருத்தை சொல்லுங்கள். இத்தகைய கருத்துக்களை மாமன்றத்தில் பதிவு செய்ய வேண்டாம். அவரவர்களுக்கு உரிய நேரத்தில் தங்கள் கருத்துக்களை பதிவு செய்கிறார்கள். தற்போது நீங்கள் *RSS* இயக்கத்திற்கு வாழ்த்து தெரிவித்தீர்கள். நாங்கள் ஏதாவது தெரிவித்தோமா.?

திருமதி. உமா ஆனந்தன்

இதற்கு எதிர்ப்பினை பார்த்தீர்களா? என்ன *Reaction* வருகிறது என்று பார்ப்பதற்காக *Purpose* ஆக தான் நான் அதை தெரிவித்தேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மற்றவர்கள் பேசுவதை குறை சொல்ல கூடாது. **(அவையில் சலசலப்பு)**

திருமதி. உமா ஆனந்தன்

நிதிநிலை அறிக்கை விவரங்களை நோக்கினால்:

- ***Estimated deficit*** ரூ.*378* கோடி என கூறப்பட்டுள்ளது. ஆனால், ***Revised*** கணக்கில் ரூ.*1669* கோடி என உள்ளது. இது கிட்டத்தட்ட ***341%*** அதிகப்படியான செலவாகும்.
- ***Zonal Budget***-இல் *Capital expenses* ரூ.*200* கோடி என இருந்தது. ஆனால்,*Revised*-இல் ரூ.*986* கோடி என உயர்ந்துள்ளது. இதனால் ரூ.*706* கோடி வித்தியாசம் ஏற்பட்டுள்ளது.
- **பக்கம் *5***-இல் *State Government Capital Receipts* பட்ஜெட்டில் ரூ.*1359* கோடி என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வந்துள்ள நிதி ரூ.*833* கோடி மட்டுமே. அதாவது ரூ.*566* கோடி, சுமார் ***39%*** **நிதி வரவில்லை**.

மதிப்பிற்குரிய துணை மேயர்

இங்கு முக்கியமாக கவனிக்க வேண்டியது, ஒன்றிய அரசு, மாநில அரசிற்கு வழங்க வேண்டிய நிதியையையும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்க வேண்டிய நிதியையும் வழங்கவில்லை என்பதே.

திருமதி உமா ஆனந்தன்

மாநில அரசு வழங்க வேண்டிய நிதி பற்றியே நான் பேசுகிறேன்.

கடந்த ஆண்டின் ***Capital Expenses***, மதிப்பீட்டை காட்டிலும் மிக அதிகமாக செலவிடப்பட்டுள்ளது. குறிப்பாக, **சிங்கார சென்னை *2.0*** திட்டத்திற்காக ரூ.*700* கோடிக்கு மேல் செலவிடப்பட்டுள்ளது. அதே போல், நான் குறிப்பிடுவது *Zonal development*. ஆனால், இவை குறித்து மாநில அரசின் பட்ஜெட்டில் எந்தவித குறிப்பும் இல்லை.

நான் முன்பு கூறியபடி, மதிப்பீட்டுக்கும், நிஜ செலவுக்கும் இடையே *340%* வித்தியாசம் உள்ளது.

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், ***Revenue Account***-ல் பற்றாக்குறையும், மூலதன கணக்கில் மிகுதியும் இருந்தது. நிகர பற்றாக்குறை ரூ.*300* கோடி கூடுதலாக இருந்தது. ஆனால், திருத்திய கணக்கில் ரூ.*1600* கோடிக்கு மேல் உள்ளது. இது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல.

Estimated Deficit ரூ.*378* கோடி என்றும், ***Revised Estimate*** ரூ.*1669* கோடி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. செலவுகள் எவ்வாறு இவ்வளவு அதிகமாக உயர்ந்துள்ளன என்பது கவனிக்க வேண்டிய விஷயம்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மன்ற உறுப்பினர் அவர்களே, இந்தப் பற்றாக்குறை சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பல பகுதிகளில் மிக விரைவாக மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி பணிகளின் காரணமாக செலவினங்கள் ஏற்பட்டுள்ளது. அதற்கான தெளிவான விவரங்கள் எங்களிடம் உள்ளன.

திருமதி உமா ஆனந்தன்

கிட்டத்தட்ட *90* சதவிகித மழைநீர் வடிகால்வாய் பணிகள் முடிவடைந்து விட்டதாக தெரிவித்திருந்தாலும், மேலும், மழைநீர் வடிகால்வாய்கள் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு *600* கோடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம் என்ன?

மதிப்பிற்குரிய துணை மேயர்

Core City பகுதிகளில் இன்னும் மேற்கொள்ளப்பட வேண்டிய மழைநீர் வடிகால்வாய் பணிகள் உள்ளன. அவற்றை படிப்படியாக செயல்படுத்துவதற்காகவே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருமதி உமா ஆனந்தன்

சிங்கார சென்னை *2.0* திட்டத்தில் மாநில அரசின் மானியம் பெறும் மூன்று திட்டங்களிலும் ரூ.*90* கோடிக்கு மேல் செலவிடப்பட்டதாக கூறப்படுகிறது. நிதிநிலை அறிக்கையில் ரூ.*500* கோடிக்கும் அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், இதற்காக மாநில அரசிடமிருந்து மானியம் வந்ததாக தெரியவில்லை. இவ்வாண்டிலும் மானியம் வரப்பெறும் என நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

இதனால் *39* சதவிகிதம் வரவில்லை; அதன் விளைவாக *20* சதவிகிதம் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. *Revenue Account* மற்றும் *Capital Account* சேர்த்து கிட்டத்தட்ட ரூ.*500* கோடி பற்றாக்குறை என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, மாநில அரசின் சுமைகளை மாநகராட்சி சுமக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள மொத்த மூலதன செலவினங்களை விட, தனித்தனியான பொருட்களின் கூட்டு தொகை ரூ.200 கோடிக்கு மேல் வருகிறது. இது போன்ற பற்றாக்குறை ஏற்படுகிறது என கடந்த நான்கு நிதிநிலை அறிக்கை கூட்டங்களிலும் நான் வலியுறுத்தியுள்ளேன். ஆனால், இதற்கு முறையான பதில் எனக்கு கிடைக்கவில்லை.
மழைநீர் வடிகால்வாய் பணிகள் முடிவடைந்த நிலையிலும், தற்போது இந்த ஆண்டு மழைநீர் வடிகால்வாய் பணிகளை மேற்கொள்வதற்காக 600 கோடி நிதி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாநில அரசு மாநகராட்சிக்கு தாய் வீடு போன்றது. நாம் கேட்கும் போதெல்லாம் உடனடியாக நிதி வழங்க அவர்கள் தயாராக உள்ளார்கள். **(கைதட்டல்)** எனவே, அதனை கேட்டு பெறலாம். ஆனால், ஒன்றிய அரசிடமிருந்து மாநகராட்சிக்கு ரூ.250 கோடி நீண்ட நாட்களாக வராமல் உள்ளது. அதை ஒன்றிய அரசின் நிதியமைச்சரிடம் கேட்டு பெற்று தாருங்கள். உங்களிடம் கணக்கு விவரங்களை வழங்குகிறோம்.

திருமதி உமா ஆனந்தன்

இந்த நிதிநிலை அறிக்கையில் 60% அளவில் தெளிவும், வெளிப்படை தன்மையும் இல்லை.

நாகேஸ்வரராவ் பூங்கா போன்ற பல பூங்காக்களில் மேம்பாட்டு பணிகளில் ஏராளமான மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. காட்டில் வளரும் மரங்கள் நகர்புறங்களில் வைக்கப்பட்டுள்ளதால் அதில் விஷ பூச்சிகள் உள்ளன என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

நாங்கள் மரங்களை வெட்டுவதற்கு அனுமதி வழங்குவதில்லை. ஒரு சில நேரங்களில் தவிர்க்க முடியாமல் திட்டங்களை நிறைவேற்றும் பணிகளில் ஒரு மரம் வெட்டப்பட்டால், அதற்கு ஈடாக பத்து மரங்களை வெவ்வேறு இடங்களில் நட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

திருமதி உமா ஆனந்தன்

மெரினா ரோப் *way* கார் போன்ற திட்டங்களுக்கு ***Private and Public Partnership*** முறையில் தனியார் பங்களிப்பு எவ்வளவு என்பதை தெளிவாக எடுத்து சொல்ல வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

அந்தத் திட்ட அறிக்கை மாநில அரசின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான முடிவு அரசால் எடுக்கப்படும்.

திருமதி உமா ஆனந்தன்

அத்தியாவசிய திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக கல்விக்கான மூலதன செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு கல்வி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றிற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்காக அப்போது நான் பாராட்டு தெரிவித்தேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

அது தொடரும். ஏற்கனவே அறிவித்த அறிவிப்புடன், இந்த நிதிநிலை அறிக்கையில், கல்விக்கு என *14* புதிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

திருமதி உமா ஆனந்தன்

Sanitation - பட்ஜெட்டில் கணக்கிடப்பட்ட தொகையை விட அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும், நிஜத்தில் வழங்கப்பட்ட தொகை

குறைக்கப்பட்டுள்ளது. இது கேள்விக்குரியதாகும். குறிப்பாக, தூய்மை பணியாளர்கள் ஊதியம் அதிகரிக்க வேண்டும் என்று போராட்டம் நடத்திய நிலையில், ஏற்கனவே அதிகமாக மதிப்பீடு செய்து ஒதுக்கீடு செய்திருந்தும், ஏன் குறைக்கப்பட்டது என்பது தெளிவாக விளக்கப்பட வேண்டும்.

அடுத்ததாக, ***Major Section***-ல் மிக பெரிய வித்தியாசம் உள்ளது. *What is actual? What is estimated?* என்கிற தெளிவு இல்லை. நிதிநிலை அறிக்கையில் விலைவாசி உயர்வு, *Time Gap* போன்ற காரணங்களால் செலவுகள் அதிகரிப்பது நமக்கே தெரியும். ஆனால், இந்த முறை நிதிநிலை அறிக்கையில் வித்தியாச தொகை மிக அதிகமாக உள்ளது.

முக்கிய துறைகளில் மதிப்பீட்டு தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், ***Receipts Estimated*** *versus* ***Expenditure Estimates*** ஒப்பிடும் போது *20* சதவீத பற்றாக்குறை இருப்பது தெளிவாக தெரிகிறது. இத்தகைய நிலையில், மதிப்பீட்டை காட்டிலும் ***341*** **சதவீதம் அதிகமாக செலவிடுவது** எவ்வாறு நியாயப்படுத்தப்படும்*?*

அறிவிப்பு *12* *:* பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் - *9*ல் ஆயிரம் விளக்கு பகுதியில் தசைத்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் தசைச்சிதைவு நோயால் *(Muscular Dystrophy)* பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்புக்கல்வி கற்பித்தல் மற்றும் குறைந்த நடமாடும் திறன் கொண்ட குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதில் மாணவ-மாணவியர்களுக்கான ஹைட்ராலிக் தூக்கிகள் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள், சாய்தள வசதியுடன் கூடிய கழிவறை, பாதுகாப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பள்ளியை போன்று இதர *14* மண்டலங்களிலும் வட்டார துணை ஆணையர் அவர்களின் மேற்பார்வையில் பொது-தனியார் பங்களிப்பு *(Public-Private Partnership)* மற்றும் அரசு சாரா நிறுவனம்*(Non Governmental Organization)* மூலம் சிறப்பு பள்ளிகள் நிறுவப்படும் என்கிற அறிவிப்பிற்கு வரவேற்பிற்குரியதாகும்.

10, 11, 12 ஆம் வகுப்புகளில் ஆங்கில உரையாடல் பயிற்சி அளிப்பதை விட, முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பிலிருந்தே ஆங்கில உரையாடல் பயிற்சி

தொடங்கினால் சிறந்த பலன் கிடைக்கும். பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி. வணக்கம்.

திருமதி சர்ப ஜெயாதாஸ், தலைவர், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)

மாண்புமிகு மேயர் அவர்கள் வாயிலாக மரியாதைக்குரிய மன்ற உறுப்பினர் அவர்களுக்கு தெரிவிப்பது என்னவெனில், இந்த நிதியாண்டில் அதிக அளவிலான வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் தான் இந்த சுமை ஏற்பட்டுள்ளது. இந்த அதிகப்படியான சுமை அடுத்த நிதியாண்டிற்கு எடுத்து செல்லப்பட்டாலும், அதற்கான திட்டங்கள் ***Municipal Bonds***, ***Property Tax***, ***Commercial Buildings Re-Assessment*** போன்ற வழிமுறைகளின் மூலம் மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர், துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) ஆகியோர்களுடன் கலந்தாலோசித்து, நிதிசுமையை ஈடு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும், நன்றி.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.சு. ஜீவன் அவர்கள், மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.35.

திரு.சு. ஜீவன்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய துணை ஆணையர் அவர்களே, இம்மன்றத்தில் வீற்றிருக்கும் நிலைக்குழு தலைவர்களே, வார்டு குழு தலைவர்களே, துறை சார்ந்த அதிகாரிகளே, சக மாமன்ற உறுப்பினர்களே, நியமனக்குழு உறுப்பினர்களே, பத்திரிகை மற்றும் ஊடக துறையினை சார்ந்த அனைவருக்கும் முதற்கண் எனது நன்றியையும், வணக்கத்தையும் உரித்தாக்கி கொள்கிறேன்.

ஒரு விஷயத்தை மாமன்ற உறுப்பினர் திருமதி உமா ஆனந்தன் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். தாங்கள் RSS நூற்றாண்டு விழாவிற்கு வாழ்த்து தெரிவித்த போது, நாங்கள் அனைவரும் அமைதியாக இருந்தோம்.

(மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. உமா ஆனந்தன் அவர்கள் அவையில் எழுந்து நின்று ஏதோ பேசுதல்)

திரு. சு. ஜீவன்

அமருங்கள். இந்த மன்றக் கூட்டம் திராவிட முன்னேற்ற கழகத்தின் பிரச்சார கூட்டம் போல நடைபெறுகிறது என்று தாங்கள் கூறிய போது தான் எங்கள் தரப்பில் இருந்து குரல் எழுந்தது. திராவிட முன்னேற்ற கழகத்தின் தோழமை கட்சியில் இருக்கும் நாங்கள் அனைவரும் நாகரீகத்தை கடைபிடிக்கின்றோம். ஆனால், தாங்கள் ஒருவர் மட்டும் பத்திரிகை விளம்பரத்திற்காக, சுய விளம்பரத்திற்காக அவ்வப்போது எழுந்து கத்தி, குரல் கொடுத்து, கலாட்டா செய்து பத்திரிகையில் செய்தியாக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்.

தயவு செய்து நான் கூறுவது என்னவென்றால், நாம் பதவியேற்று நான்கு ஆண்டுகள் கடந்து விட்டன; இன்னும் ஓராண்டில் எட்டு, ஒன்பது மாதங்கள் மாமன்ற உறுப்பினர்களாக செயல்பட இருக்கிறோம். அந்தக் காலகட்டங்களில் சபை நாகரீகத்தோடு நடந்து கொள்ள முயற்சி செய்வது நல்லது என்று நான் உங்களிடம் கோரிக்கையாக வைக்கிறேன்.

உங்களுக்கு எவ்வாறு ஒரு விஷயத்திற்கு வாழ்த்து சொல்ல உரிமை இருக்கிறதோ, அதே போல் எங்களுக்கும் இன்னொரு விஷயத்திற்கு வாழ்த்து சொல்லவோ, பாராட்டி பேசவோ உரிமை இருக்கிறது. அதை தடுக்கவோ, குறுக்கிடவோ உங்களுக்கு உரிமையில்லை. ஆகவே, நீங்கள் நீங்களாக இருங்கள்; நாங்கள் நாங்களாக இருப்போம். நாங்கள் எங்கள் தத்துவங்களையும் சித்தாந்தங்களையும் பேசுகிறோம்; நீங்கள் உங்கள் தத்துவங்களையும் சித்தாந்தங்களையும் பேசுங்கள்.

மாண்புமிகு மேயர் அவர்களே, *2026-2027*ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட *90* அறிவிப்புகளில் *66*ஆம் அறிவிப்பு, *35*வது வார்டை சார்ந்ததாகும். ஐந்தாவது முறையாக நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்விவாதத்தின் மீது மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அதற்காக, *139*ஆம்

வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. ப. சுப்பிரமணி அவர்கள் ஐந்து முறையும் வாய்ப்பை விட்டு கொடுத்ததற்காக, நான் எனது நன்றியை அவருக்கு உரித்தாக்கி கொள்கிறேன். குறைகளை முகத்திற்கு நேராக சொல்வோம்; நிறைகளை மக்கள் மத்தியில் எடுத்துரைப்போம் என்கிற மனநிலையுடன் மாண்புமிகு மேயர் அவர்கள் அறிவித்த 90 அறிவிப்புகளையும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் முழுமையாக வரவேற்கிறது, பாராட்டுகிறது, மனநிறைவோடு உங்களை வாழ்த்துகிறது.

அதே நேரத்தில், விட்டு போன இரண்டு கோரிக்கைகள் உள்ளன என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். வரிவிதிப்பு மற்றும் நிதிநிலைக்குழு தலைவர் திருமதி சர்பஜெயாதாஸ் அவர்கள், மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி 2026-2027ஆம் நிதியாண்டிலும் தொடர்ச்சியாக தொடர ஏதுவாக ரூ.120.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அறிவித்துள்ளார். சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வழங்கியதையே இவ்வாண்டும் அறிவித்துள்ளீர்கள். 2025-2026ஆம் ஆண்டில் விற்ற தங்கத்தின் விலை தற்பொழுது இல்லை; நான் இரும்பு, கம்பி, சிமெண்டு, ஜல்லி குறித்து சொல்லவில்லை. தங்கத்தின் விலை இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது. 2023-2024ஆம் நிதியாண்டில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி 35 இலட்சத்தில் நான் இரண்டு பல்நோக்கு கட்டிடங்களை கட்டினேன். ஆனால், இன்று அதனுடைய மதிப்பீடு ஒரு கட்டிடத்திற்கு 22 இலட்சம்; 4 இலட்சம் கூடுதலாக ஆகி விட்டது. 2026-2027ஆம் ஆண்டில் அதே கட்டுமானத்திற்கு கிட்டத்தட்ட 25 முதல் 26 இலட்சம் ஆகிவிடும். இதில் GST தனியே வரும். அப்பொழுது தாங்கள் ஒதுக்கீடு செய்துள்ள இந்த 60 இலட்சம் நிதி எவ்வாறு போதுமானதாக இருக்கும்? GSTயுடன் வழங்கினால் எங்களுக்கு 1 கோடி வழங்க வேண்டும்; GST நீக்கி வழங்கினால் ரூ.80 இலட்சம் வழங்க வேண்டும். இன்னும் எங்களுக்குரிய பதவி ஒன்பது மாதங்கள் மட்டுமே உள்ளது. எனவே, மக்களுக்கு திருப்தியளிக்கும் வகையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். மாண்புமிகு மேயர் அவர்கள் 2027-2028ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையையும் வாசிக்க வேண்டும் என நான் ஆசைப்படுகிறேன். ஆகவே, GSTயுடன் வழங்க போகிறீர்களா, GST இல்லாமல் வழங்க போகிறீர்களா என்பதை தாங்களே முடிவு செய்ய வேண்டும்.

அதே போல், இந்நிதிநிலை அறிக்கையில் ஒரு முக்கியமான விஷயம் விடுபட்டுள்ளது. ஒரு மாமன்ற உறுப்பினர் இயற்கை எய்தினால், அவர்களின் குடும்பத்திற்கு ஐந்து இலட்சம் வழங்கப்படும் என கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இவ்வாண்டு அதற்கான அறிவிப்போ, கூடுதல் தொகையோ அறிவிக்கப்படவில்லை. எனவே, மாமன்ற உறுப்பினர் பதவிக்காலத்தில் இயற்கை எய்தினால், இருபத்தைந்து இலட்சம் வழங்குமாறு கேட்டு கொள்கிறேன்.

(மாண்புமிகு மேயர் அவர்கள் மீண்டும் இருக்கையில் அமர்தல்)

மேலும், ஒரு முக்கியமான கோரிக்கை. நாடாளுமன்ற உறுப்பினருக்கும், சட்டமன்ற உறுப்பினருக்கும் பதவிக்காலத்திற்கு பிறகு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. ஆனால், மாமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதில்லை. எங்களுக்கு ஆயிரமோ, இலட்சமோ தேவையில்லை. நாங்கள் மாமன்ற உறுப்பினராக இருந்ததற்கான அடையாளமாக ஒரு ரூபாய் ஓய்வூதியம் வழங்கினால், வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியுடன் இருப்போம். சட்டமன்ற உறுப்பினருக்கு பேருந்து பாஸ் உள்ளது; நாடாளுமன்ற உறுப்பினருக்கு விமான டிக்கெட்டில் சலுகை உள்ளது; ஆனால், மாமன்ற உறுப்பினர்களுக்கு எதுவும் இல்லை. எனவே, எங்களுக்கும் ஓய்வூதியம் வழங்க வழிமுறைகளை அரசுக்கு பரிந்துரை செய்து, நடைமுறைப்படுத்துமாறு கேட்டு கொள்கிறேன்.

*2026*ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்ற கழகத்தின் ஆட்சி, அண்ணன் தளபதி அவர்களின் தலைமையில் மீண்டும் அமையும். அப்படி அமையும் போது, இன்றைய பத்து ஆயிரம் மதிப்பூதியம், ஐம்பது ஆயிரமாக உயரும் என்கிற நம்பிக்கை எனக்கு உள்ளது.

என்னுடைய உரையின் நிறைவில், மார்ச் மாதம் முதலாம் நாள் தன்னுடைய எழுபத்திமூன்றாவது பிறந்த நாளை காண இருக்கின்ற தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களுக்கு, என் சார்பிலும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் பொது செயலாளர் உயிரினும் மேலான அண்ணன் வை. கோ. அவர்கள் சார்பிலும், *35*வது வார்டு மக்கள்

சார்பிலும் பிறந்த நாள் வாழ்த்துக்களை உரித்தாக்கி கூறுகிறேன். பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை தொடர்பாக ஆணையர் அவர்களுடன் கலந்தாலோசனை செய்து, சாத்திய கூறுகள் இருப்பின் அவை நிறைவேற்றி தரப்படும்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி மோ.ரேணுகா அவர்கள், வார்டு எண்.*42*.

திருமதி மோ. ரேணுகா

ஒன்றிய அரசு எவ்வளவு இடையூறு செய்தாலும், அதனை தகர்த்தி முன்னேறி செல்கிறது தமிழ்நாடு அரசு. இத்தகைய சூழலில் தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன் கூட்டியே மகளிர் உரிமை தொகை ரூ.*5000/-* வழங்கி நலிவடைந்த நிலையில் உள்ள பெண்கள் மற்றும் குடும்பங்களுக்கு பேருதவி செய்துள்ளார். அதனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போற்றி வரவேற்கிறோம்.

மாட்சிமை பொருந்திய இம்மாமன்றத்தில் *2026-2027*ஆம் ஆண்டிற்கான தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாமன்ற உறுப்பினர் என்கிற முறையில் பங்கு கொள்வதை பெருமையாக கருதுகிறேன்.

முதலில் இந்த *2026-2027*ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தயார் செய்து இம்மாமன்றத்தில் தாக்கல் செய்த மாண்புமிகு மேயர், வரிவிதிப்பு மற்றும் நிதிநிலைக்குழு தலைவர், ஆணையர் மற்றும் துணை நின்று உதவி புரிந்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.

தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு மேயர் அவர்களின் தொடக்க உரையில் *90* அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. சென்ற வருட நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு மேயர் அவர்களால் *62* அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டு, அதன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விவரமும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, *28* பணிகள் முடிவுற்றதாக சமர்ப்பிக்கப்பட்டு, பிற பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதிநிலை அறிக்கையின் மூலம் பல்வேறு நல்ல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில், குறிப்பாக கல்வி தொடர்பாக

அறிவிப்பு *10*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவியர்களிடையே, வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப மாணவ-மாணவியர்களின் அறிவியல் ஆர்வத்தைத் தூண்டி, அவர்களை இளம் விஞ்ஞானிகளாக உருவாக்க வழிகாட்டும் வகையில் உயிரியல், வேதியியல், இயற்பியல், பொறியியல் மற்றும் கணினி அறிவியல் போன்ற பாடங்களில் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்திடவும் தனியார் பள்ளிகளுக்கு நிகராக ஆய்வகங்கள் அமைத்திடவும், நவீன முறையில் ஒரு புதிய நவீன அறிவியல் மையம் *(Modern Science Centre)* பொது-தனியார் பங்களிப்புடன் நிறுவப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு *9*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை பள்ளிகளில் *130* நடுநிலைப் பள்ளிகள், *46* உயர்நிலை பள்ளி மற்றும் *35* மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவியர்கள் தமிழ், ஆங்கிலத்தில் இலக்கணப் பிழை இல்லாமல் எழுதுவதற்கும் மாணவர்களிடையே உரையாடலை எளிமையாக்குவதற்கும், அதிக அளவில் தமிழ், ஆங்கிலச் சொற்களை கற்றுக்கொள்ளவதற்கும், மேலும், அவர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தும் நோக்கிலும், *8*ஆம் வகுப்பில் பயிலும் *8,892* மாணவ-மாணவியர்கள், *9*-ஆம் வகுப்பில் பயிலும் *7,934* மாணவ-மாணவியர்கள் மற்றும் *10*-ஆம் வகுப்பில் பயிலும் *7,292* மாணவ-மாணவியர்கள் என மொத்தம் *24,118* மாணவ-மாணவியர்களுக்கு தமிழ்–ஆங்கில அகராதி

(Dictionary) ரூ.*37* இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து மாணவ-மாணவியர்களுக்கு வழங்கப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு *12*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் - *9*ல் ஆயிரம் விளக்கு பகுதியில் தசைத்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் தசைச்சிதைவு நோயால் *(Muscular Dystrophy)* பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்புக்கல்வி கற்பித்தல் மற்றும் குறைந்த நடமாடும் திறன் கொண்ட குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதில் மாணவ-மாணவியர்களுக்கான ஹைட்ராலிக் தூக்கிகள் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள், சாய்தள வசதியுடன் கூடிய கழிவறை, பாதுகாப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பள்ளியைப் போன்று இதர *14* மண்டலங்களிலும் வட்டார துணை ஆணையர் அவர்களின் மேற்பார்வையில் பொது-தனியார் பங்களிப்பு *(Public-Private Partnership)* மற்றும் அரசு சாரா நிறுவனம் *(Non Governmental Organization)* மூலம் சிறப்பு பள்ளிகள் நிறுவப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு *14*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பள்ளி செல்லாத மாணவ-மாணவியர்கள், இடை நின்ற மாணவ-மாணவியர்கள் மற்றும் இடம் பெயர்ந்த மாணவ-மாணவியர்கள் ஆகியோர்களை கண்டறிந்து அனைவருக்கும் அடிப்படை கல்வியைக் கற்பிக்கும் நோக்கத்தில் வட்டாரத்திற்கு ஒரு பள்ளி என *3* பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து, அப்பள்ளியில் மாணவ-மாணவியர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப வகுப்பறைகளை ஒதுக்கி இணைப்பு பாடப்பயிற்சியை *(Bridge Course)* தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களை கொண்டு நடத்தப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு *13*: பெருநகர சென்னை மாநகராட்சியில் *417* சென்னை பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில் *1,13,398* மாணவ-மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள சென்னை பள்ளிகளுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்தி கொடுத்திடும் பொருட்டு, மணலி, மாதவரம், சோழிங்கநல்லூர் பகுதியில் உள்ள சென்னை பள்ளிகளுக்கு

ஏற்கனவே 4 பேருந்துகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இத்திட்டம் பெற்றோர் மற்றும் மாணவ-மாணவியர்களிடையே அமோக வரவேற்பு பெற்றுள்ளதால், இத்திட்டத்தை மேலும் விரிவுப்படுத்தி மாணவர்களைப் பள்ளிக்கு அழைத்து வரவும், கல்விச் சுற்றுலா அழைத்து செல்லவும் கூடுதலாக 11 பேருந்துகள் இயந்திர பொறியியல் துறையின் மூலம் கொள்முதல் செய்வதற்கு ரூ. 4.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு 49: பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அம்பத்தூர் ஏரி (மண்டலம்- 7), மஞ்சம்பாக்கம் ஏரி (மண்டலம்-2), மற்றும் மண்டலம்-15ல் உள்ள புல்லக்கேணி குளம், வையாபுரி குளம், சாலிமார் கார்டன் குளம் என முக்கியமான மற்றும் பயன்பாட்டிற்கு அதிகம் தேவையான 30 நீர்நிலைகளை புனரமைத்து, அதன் கொள்ளளவை அதிகரிக்கவும், மழைநீர் சேமிக்கும் திறனை அதிகரிக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் ரூ.100 கோடி மதிப்பீட்டில் நீர்நிலைகளை புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு 51: பேருந்து பணிமனைகளின் சேவைத் தரத்தை மேம்படுத்தவும், வணிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் பொருளாதார ஆற்றலை வெளிக்கொணரவும், பொதுப்போக்குவரத்து உள்கட்டமைப்பை நவீன மயமாக்கவும், பொது நிதி மீதான சுமையைக் குறைக்கவும், பொதுமக்களின் அதிக பயன்பாட்டில் உள்ள ஜார்ஜ் டவுன் (மண்டலம்-4), கத்திவாக்கம் (மண்டலம்-1), துரைப்பாக்கம், பள்ளிக்கரணை (மண்டலம்-15), இராமாபுரம், ஸ்ரீ ராம் நகர் (மண்டலம்-11), நங்கநல்லூர் (மண்டலம்-12), என்.ஜி.ஓ காலனி ஆதம்பாக்கம் (மண்டலம்-13) மற்றும் மடிப்பாக்கம் (மண்டலம்-14) ஆகிய முக்கிய இடங்களில் உள்ள பேருந்து பணிமனைகள் பொது-தனியார் கூட்டாண்மை (PPP) / வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் (EPC) முறையில் ரூ.110.00 கோடி மதிப்பீட்டில் மறுவடிவமைப்பு செய்யப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு 24: பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது பெரம்பூர் (கோட்டம்-72) வில்லிவாக்கம் (கோட்டம்-95), கள்ளிக்குப்பம் (கோட்டம்-83)

மற்றும் சைதாப்பேட்டை (கோட்டம்-168) ஆகிய இடங்களில் இறைச்சிக் கூடங்கள் இயங்கி வருகின்றன. பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப இறைச்சி பயன்பாடு தேவையை கருத்தில் கொண்டு வடக்கு வட்டாரத்தில் ஒரு இறைச்சிக் கூடம் ரூ.25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். மேலும், பொது மக்களின் கோரிக்கைக்கு இணங்க தெற்கு வட்டாரத்தில் இறைச்சிக் கூடம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு 61: சுற்றுலாவை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மெரினா கடற்கரையை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்காக கலங்கரை விளக்கம் (Light House) முதல் அண்ணா நினைவிடம் வரை கயிறு வழித்தட (Rope way car) வசதி அறிமுகப்படுத்த திட்டமிட்டப்பட்டுள்ளது. இந்த கயிறு வழித்தடங்கள், நகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்வதுடன், சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்துகின்றன. இந்த கயிறு வழித்தடங்கள் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் அழகை ரசிக்க வைக்கும் பரந்த காட்சிகளை (Panoramic views) வழங்குவதோடு மறக்க முடியாத அனுபவங்களையும் உருவாக்கும் வகையில் பொது-தனியார் பங்களிப்பு (PPP) முறையில் கயிறு வழித்தடங்கள் (Rope way car) அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு 43: 2026-27 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்கள் உள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டத்தினை அதிகரிக்கும் வகையிலும், பருவமழை காலங்களில் கிடைக்கும் நீரினை முழுமையாக சேமிக்கும் வகையிலும், முதற்கட்டமாக 1,000 சதுர மீட்டருக்கு மேல் உள்ள 25 எண்ணிக்கையிலான பூங்காக்களில், ஒரு பூங்காவிற்கு ரூ.20 இலட்சம் வீதம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் நீர் உறிஞ்சுதல் (Sponge Park) அமைப்பு அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு 46: 2026-27ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுடன் இணைந்து பசுமைப் பரப்பை பெருமளவில் அதிகரிக்க மாடம்பாக்கம், கைலாசபுரம் (மயிலாப்பூர்) (மண்டலம்-9) மற்றும் சாத்தாங்காடு (மண்டலம்-2) ஆகிய இடங்களில்

நாற்றங்கால் பண்ணைகள் ஏற்படுத்தி அங்கு வனத்துறையின் உதவியுடன் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து, பொது மக்களுக்கு விலையில்லாமல் வழங்குவதோடு அவர்கள் உள்ளார்ந்த பங்கேற்புடன், சென்னை மாநகராட்சி பகுதிகளில் பசுமைப்பரப்பை அதிகரிக்க இம்மரக்கன்றுகளை நடவு செய்து, சென்னையை பசுமை மிக்க நகரமாக மாற்ற ரூ.10 கோடி மதிப்பீட்டில் **"பசுமைச் சென்னை திட்டம்"** என்ற திட்டம் அறிமுகம் செய்யப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு 52: சென்னையின் 5 சதுர கி.மீ பரப்பளவிலான நுங்கம்பாக்கம், கல்லூரிசாலை, கிரீம்ஸ்சாலை மற்றும் அண்ணா சாலையை உள்ளடக்கிய பகுதியை, செயற்கை நுண்ணறிவு (AI) தொழில் நுட்பத்துடன் கூடிய ஒரு டிஜிட்டல் ட்வின் (Digital Twin) திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. நகர்ப்புற தரவு களஞ்சிய திட்டம் (Urban Data Observatory). சென்னை நகர மேம்பாட்டின் அனைத்துத் துறைகளிலும் 'data-driven' திட்டமிடலை வலுப்படுத்தும் ஒரு முன்னோடியான திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய (ICCC) தரவுகள், ஐஓடி (IoT) சென்சார்கள், புவிசார் (GIS), 3D/4D உருவகப்படுத்துதல் ஆகியவற்றை ஒருங்கிணைத்து வெள்ள அபாயம், போக்குவரத்து நெரிசல் மற்றும் அவசர கால நிகழ்வுகளை திட்டமிட்டு அதற்கான நடவடிக்கை மேற்கொள்ள பயனுள்ளதாக அமையும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு 56: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மெரினா, பெசன்ட் நகர், திருவான்மியூர் கடற்கரைகளை இணைக்கும் வகையிலும், MRTS, மெட்ரோ நிலையம், பேருந்து நிறுத்தங்கள் மற்றும் புறநகர் இரயில் நிலையங்களை இணைக்கும் வகையில் சாத்தியமுள்ள வழித்தடங்களில் நடை பாதை மற்றும் மிதிவண்டிப்பாதை (Non- Motorised Transport Corridor) 25 கி.மீ துரத்திற்கு அமைப்பதுடன், இதில் அகலமான நடைபாதைகள், பிரத்யேக மிதிவண்டி பாதைகள், நிழல் தரும் இருக்கைகள் மற்றும் பொதுப் போக்குவரத்துடன் இணைக்கும் வசதிகளுடன் இடம்பெறும். பாதுகாப்பான

நடை பாதை மற்றும் மிதிவண்டிப் பாதைகள் ரூ.*50* கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு *57*: தண்டையார்பேட்டை, இராயபுரம், வண்ணாரப்பேட்டை மற்றும் கே.கே.நகர் ஆகிய பள்ளி மண்டலங்கள் உள்ள பகுதிகளில் தலா *10* கி.மீ தூரத்திற்கு வாகன வேகத்தைக் குறைக்கும் நடவடிக்கைகள், அகலமான நடைபாதைகள், பாதுகாப்பான சாலைக் கடப்புகள் *(Crossings)*, உயர் தர மின் விளக்குகள் மற்றும் வழிகாட்டி பலகைகள் அமைப்பது போன்ற பணிகள் ரூ.*200* கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு *70*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெயரும் தொழிலாளர்கள், வீடில்லாத நபர்கள் / குடும்பங்கள் *(Family Homeless)* தற்காலிகமாக தங்குவதற்கு *200* தற்காலிக / இடைநிலை தங்குமிடங்கள் *(Container - Temporary Homes)* ரூ.*12* கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு *69*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் *6* இடங்களில் வீடற்றோர்கள் தங்குவதற்கான அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய இரவு காப்பகம் (தரைதளம் மற்றும் முதல் தளம்) மொத்தம் ரூ.*9* கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு *61* :சுற்றுலாவை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மெரினா கடற்கரையை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்காக கலங்கரை விளக்கம் *(Light House)* முதல் அண்ணா நினைவிடம் வரை கயிறு வழித்தட *(Rope way car)* வசதி அறிமுகப்படுத்த திட்டமிட்டப்பட்டுள்ளது. இந்த கயிறு வழித்தடங்கள், நகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்வதுடன், சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்துகின்றன. இந்த கயிறு வழித்தடங்கள் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் அழகை ரசிக்க வைக்கும் பரந்த காட்சிகளை *(Panoramic views)* வழங்குவதோடு மறக்க முடியாத அனுபவங்களையும் உருவாக்கும் வகையில் பொது-தனியார் பங்களிப்பு *(PPP)* முறையில் கயிறு வழித்தடங்கள் *(Rope way car)* அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. மெரினா கடற்கரையில் *Rope way car* திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது, அங்குள்ள மீனவர்கள் மற்றும் வியாபாரிகளின்

வாழ்வாதாரம் பாதிக்காதவாறு இத்திட்டத்தினை செயல்படுத்துமாறு கேட்டு கொள்கிறோம்.

இந்த நிதிநிலை அறிக்கையில், பேருந்து போக்குவரத்து துறைக்கு 725 கோடி ரூபாய் இரட்டிப்பாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மண்டலம்-4 திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தற்பொழுது 'வள்ளலார் நெடுஞ்சாலை' என அழைக்கப்படும் பகுதியில் நடைபாதைகள் மற்றும் Rail guard அமைக்கப்பட்டு, மேலும் சிறப்பாக மேம்படும் என நம்புகிறோம்.

கல்வி, சுகாதாரம், சிறப்பு திட்டங்கள், பூங்காக்கள், பாலங்கள் போன்ற பல முக்கிய துறைகளுக்கான நிதி, கடந்த ஆண்டை விட குறைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு தேவையான சாய்வு மேஜைகள், ஆய்வக உபகரணங்கள் கொள்முதல் செய்தல், பள்ளிகளுக்கு தேவையான கணிப்பொறி, மின்னணு பலகைகள் கொள்முதல் செய்தல் போன்றகளுக்காக சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கல்வி துறைக்கு ரூபாய் 5.00 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்திய திட்ட மதிப்பீட்டில் ரூ.26.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.11.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மண்டலங்களுக்கான நிதி ஒதுக்கீடும் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக பெருநகர சென்னை மாநகராட்சியின் மொத்த நிதி பற்றாக்குறை மிக அதிகமாக உயர்ந்துள்ளது. 2024-2025ஆம் ஆண்டுகளில் ரூபாய் 600 கோடி பற்றாக்குறை இருந்த நிலையில், 2026-2027ஆம் ஆண்டில் அது ரூபாய் 2000 கோடியாக, அதாவது மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. 2025-2026 நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 68.00 கோடி பற்றாக்குறை என கணிக்கப்பட்டது. ஆனால், பின்னர் திருத்திய மதிப்பீட்டில் அது ரூபாய் 756 கோடியாக உயர்ந்தது. இது பத்து மடங்கு அதிகமாகும். 2024-2025 தொடக்கத்தில் ரூபாய் 500 கோடி அதிகப்படியான (surplus) தொகை இருந்தது. தற்போது 2026-2027 ஆண்டில் பற்றாக்குறை ரூபாய் (-)1600 கோடியாக உள்ளது. பழைய நிதி பற்றாக்குறை வருடா வருடம் சேர்ந்து வருகிறது.

மாநகராட்சி வருவாயில் பெரும் பங்கு வரி வருவாய் மூலம் வருகிறது. மாநகராட்சியின் பெரும்பான்மையான நிதி ஆதாரம் சொத்து வரி மற்றும் தொழில் வரிகளை நம்பியே உள்ளது. வரிகளை மட்டுமே உயர்த்தி, வருவாயை பெருக்க நினைத்தால், அடித்தட்டு மக்கள் தான் பாதிப்புக்கு உள்ளாவர்கள். வரி உயர்த்தாமல் வருவாயை உயர்த்த நாம் முயற்சிகள் செய்ய வேண்டும். மாநகராட்சியின் *Non Tax Revenue* உயர்த்த நாம் முயற்சி செய்ய வேண்டும். மாநகராட்சி சொத்துக்களை முறையாக செயல்படுத்தினால் பெரிய *Non Tax Revenue* செய்ய முடியும் என்று நம்புகிறோம்.

அதே போல், *ISP-Internet service provider* நிறுவனங்கள் கணக்கின்றி தங்கள் கம்பங்களை *(Pole)* நிறுவி வருகிறார்கள். அதனை முறைப்படுத்த வேண்டும். சென்ற மாத மன்றக் கூட்டத்தில் பொருள் எண்.*48*ன் மூலம், மன்ற தீர்மான எண்.*595/2024*, *30.12.2024*ல் நிறைவேற்றப்பட்ட அனுமதி பெறாமல் நடப்பட்ட கம்பங்களின் நிறுவனங்களுக்கு கம்பம் ஒன்றுக்கு ரூ.*1.00* இலட்சம் அபராத தொகையை வசூலிக்கும் விதியை மாற்றி, பழைய முறைப்படி ரூபாய் *2000* அபராதம் விதித்து பெரிய நிறுவனங்களுக்கு சலுகை ஏன் வழங்கப்பட்டது என்று விளக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் தொழிலாளர் நலன் சார்ந்த கோரிக்கைகள், மாநராட்சி பணியாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் பணி நிரந்தரம், போன்ற முக்கிய அறிவிப்புகள் இல்லாதது ஏமாற்றம் அளிக்கிறது. வருவாய் செலவினங்கள் அதிகரித்தும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டங்களுக்கு நிதி குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வியும், சுகாதாரமும் தனது இரண்டு கண்கள் என்று கூறியதற்கு இணங்க கல்வி மற்றும் சுகாதார துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மக்களின் நலன் சார்ந்து தாக்கல் செய்யப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் *2026-2027* ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்று அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. கோ. கோபிநாத் அவர்கள், வார்டு எண்.*45*.

திரு. கோ. கோபிநாத்

வரலாற்று சிறப்புமிக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் *2026-2027* ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து, அதன் மீதான விவாதத்தை தலைமையேற்று நடத்தி வருகின்ற மாநகராட்சியின் மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, மன்றச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் பெருமக்களே, பணியாளர்களே, இந்த மாமன்றத்தை அலங்கரித்து நிற்கும் நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, நம்முடைய ஆளுங்கட்சி தலைவர் உள்ளிட்ட சக மாமன்ற உறுப்பினர்களே உங்களுக்கெல்லாம் என்னுடைய பணிவான வணக்கத்தினை தெரிவித்து கொண்டு, சிறப்பான நிதிநிலை அறிக்கையை வெளியிட்டு இருக்கிறீர்கள்.

திராவிட மாடல் ஆட்சியில், ஒரு பெண் மேயராக இருந்து இந்த நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதும், அதே போல் வரிவிதிப்பு மற்றும் நிதிநிலைக்குழு தலைவரும் பெண்ணாக இருந்து, இரு பெண்கள் இணைந்து வரலாற்று சிறப்புமிக்க இந்தியாவின் புகழ்பெற்ற மாநகராட்சிக்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து, மாநகராட்சியை வழிநடத்தி வருகின்றனர் என்பது திராவிட மாடல் ஆட்சியின் மகத்தான சிறப்பு. இந்தச் சிறப்பு தந்தை பெரியாருக்கும், பேரறிஞர் அண்ணாவுக்கும், கலைஞருக்கும், தொடர்ந்து தமிழ்நாட்டை வழிநடத்தி வரும் தளபதி ஆகியோரையே சேரும் என்பதை இந்நேரத்தில் பதிவு செய்யும் கடமையை நான் உணர்கிறேன்.

புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார், மாமேதை கார்ல் மார்க்ஸ் ஆகியோரின் மகத்தான கோட்பாடுகளோடு, சனாதனத்தை எதிர்த்து நடைபெறும் சமர்களத்தில் இந்தியாவின் இரும்பு மனிதராக சமரசமின்றி எங்களையும், விடுதலை சிறுத்தைகள் கட்சியையும் வழிநடத்தி வரும்

எங்களின் மகத்தான தலைவர் எழுச்சி தமிழர் அவர்களுக்கு இந்நேரத்தில் நன்றியை தெரிவித்து கொண்டு என் உரையை தொடங்குகிறேன்.

இந்த நேரத்தில் எங்களுக்கு உற்ற துணையாக இருந்து, எங்களை வழிநடத்தி வரும் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையதுறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களுக்கும், எங்களுடைய மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கலாநிதி வீராசாமி அவர்களுக்கும், எங்களுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. *R.D.* சேகர் அவர்களுக்கும், *4*வது மண்டல வார்டுகுழு தலைவர் திரு. உ. கணேசன் *(எ)* நேதாஜி உ. கணேசன் அவர்களுக்கும், *4*வது மண்டலத்தை சார்ந்த அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும், மேலும் என்னோடு இந்நிதிநிலை அறிக்கையில் பங்கேற்று சிறப்பித்து நிற்கும் என்னுடைய கட்சியை சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் திரு. அம்பேத்வளவன் *(எ)* குமாரசாமி, திருமதி சாந்தி *(எ)* யாழினி, திருமதி தி. கிரண் ஷர்மிலி ஆகியோரின் சார்பாகவும், என்னுடைய நன்றியை மீண்டும் தெரிவித்து கொள்கிறேன்.

முதல் இரண்டு ஆண்டுகளில் *45*வது வார்டுக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்று குறைகளை நான் நேரடியாக கூறியிருந்தேன். ஆனால், கடந்த ஒரு ஆண்டில் நாங்கள் கேட்ட அனைத்து பணிகளையும் செய்து கொடுத்து, எங்களுக்கு உற்ற துணையாக, எங்களோடு தோளோடு தோள் இணைந்து, அனைத்து நிலைகளிலும் எங்களுக்கு ஆதரவாக இருந்து, *45*வது வார்டுக்கு தேவையான அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றி வழங்கியதற்காக, வார்டுகுழு தலைவர் மற்றும் பணிகள் நிலைக்குழு தலைவர் திரு. நே. சிற்றரசு ஆகியோர்களுக்கு இந்நேரத்தில் நன்றியினை தெரிவித்து கொள்வது என் கடமையாகும்.

*45*வது வார்டு மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான **சமுதாய நலக்கூடம்** *45*வது வார்டு மக்கள் அனைவரும் போற்றக்கூடிய வகையில் பிரம்மாண்டமாக கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்வது என் கடமையாகும்.

அதே போல் **பூங்கா**, **விளையாட்டு திடல்கள்** மற்றும் வட சென்னையின் குறுகிய தெருக்களில் குடிசை பகுதிகளில் *35* ஆண்டுகளாக மாற்ற முடியாமல்

இருந்த *150mm* குடிநீர், கழிவுநீர் குழாய்களை *250mm* குழாய்களாக மாற்றியமைத்து, *45*வது வார்டு மக்களுக்கு மட்டுமல்லாமல் வட சென்னை பகுதியின் குடிசை வாழ் ஏழை மக்களுக்கும் பெரும் நன்மை செய்ததற்காக, *45*வது வார்டு மக்கள் சார்பாகவும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாகவும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கும், மாண்புமிகு மேயர் உள்ளிட்ட அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

சாஸ்திரி நகரில் *40* ஆண்டுகளாக தீர்க்க முடியாத பிரச்சினையாக இருந்து வந்த **மீன் மார்க்கெட்** தொடர்பான சிக்கலை, இரண்டு மாதங்களுக்கு முன்பு *4*வது வார்டுகுழு தலைவர் திரு. உ. கணேசன் *(எ)* நேதாஜி உ. கணேசன் அவர்களின் ஒத்துழைப்புடன், *4*வது மண்டல அலுவலர், செயற் பொறியாளர், உதவி செயற் பொறியாளர் ஆகியோரின் ஒத்துழைப்போடு தீர்வு காணும் வகையில் ஒரு பொதுவான இடம் தேர்வு செய்யப்பட்டு, அந்த இடத்தில் மீன் மார்க்கெட் கட்டப்படும் என ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக, *45*வது வார்டு மக்கள் சார்பாக என் மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன். இந்த ஒப்புதல் தற்போது மாமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, அடுத்த நிதிநிலை அறிக்கையில் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்து, *40* ஆண்டுகளாக நீடித்து வந்த இந்தப் பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு கேட்டு கொள்கிறேன். இதை நிறைவேற்றி தந்தால், இந்த **திராவிட மாடல் அரசுக்கு** மக்கள் மத்தியில் இன்னும் பெருமை சேர்க்கும் என்பதால், இந்தக் கோரிக்கையை வலியுறுத்துகிறேன்.

கணேசபுரம் *FFC* மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள நேதாஜி கால்பந்து மைதானத்தின் கேலரி போன்று, மற்றொரு மைதானத்திலும் அதே போல் கேலரி அமைத்து கொடுத்தால், இந்த இரண்டு விளையாட்டு திடல்களும் மிக பிரம்மாண்டமான விளையாட்டு திடல்களாக மாறும். எனவே, இதற்கான நிதியினை மேயர் சிறப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டு, மேலும் சிறப்பு சேர்க்குமாறு பணிவுடன் கேட்டு கொள்கிறேன்.

அதே போல், இந்த நிதிநிலை அறிக்கையில் எங்களுக்கும் சில எதிர்பார்ப்புகள் உள்ளன. ஆனால், அனைவராலும் குறை சொல்ல முடியாத நிதிநிலை அறிக்கை இது. சில எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை என்பதை தவிர,

அனைத்து மக்களுக்கும் - கடைசி மனிதனுக்கும் பயன்பட கூடிய மிக பெரிய நிதிநிலை அறிக்கையாகும்.

குறிப்பாக, **தூய்மை பணியாளர்களின் வேலை வாய்ப்பு, சம்பள உயர்வு, பணி நிரந்தரம்** போன்ற சில கோரிக்கைகள் நிறைவேற வேண்டும் என்று எதிர்பார்த்தேன். அந்த எதிர்பார்ப்பை தாங்கள் கூடிய விரைவில் ஒரு அறிக்கையாக வெளியிட வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த போது மாநில அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டு, மாநிலம் முழுவதும் ஒரு வழிகாட்டியாக இருந்தது **கலைஞர் கண்ணொளி திட்டம்**. ஆனால், அந்தத் திட்டம் கடந்த ஆட்சியில் கைவிடப்பட்டதால், அதை மீண்டும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக **"கலைஞர் விரிவான கண்ணொளி திட்டம்"** என்கிற பெயரில் செயல்படுத்த வேண்டும் என ஏற்கனவே நான் கோரிக்கை வைத்திருந்தேன். இதன் மூலம் சுமார் *25* இலட்சம் மாணவ, மாணவியர்கள் பயன் பெறுவார்கள் என்பதால், இந்தத் திட்டத்தை மீண்டும் தொடங்குமாறு பணிவுடன் கேட்டு கொள்கிறேன்.

மேலும், ஒவ்வொரு மயானத்திற்கும் இரண்டு **அமரர் ஊர்திகள்** பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் கொள்முதல் செய்து வழங்கினால், பொதுமக்களுக்கு மிகுந்த பயனாக இருக்கும். எனவே, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்நேரத்தில் பணிவுடன் கேட்டு கொள்கிறேன்.

தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்படும் உணவு வெகு தூரத்திலிருந்து கொண்டு வரப்படுவதால் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, அந்த உணவை நேரடியாக **அம்மா உணவகங்களில்** தயாரித்து வழங்கினால், சூடான சுவையான உணவை குறித்த நேரத்தில் வழங்க முடியும். இது அம்மா உணவக பணியாளர்களுக்கும் உதவியாக இருக்கும்; மேலும் மூத்த ஏழை குடிமக்கள் உணவு உண்ண வசதியாக இருக்கும்.

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, **வள்ளுவர் கோட்டத்தில்** கலைஞர் அவர்களுக்கு சிலை எழுப்ப வேண்டும் என்பது எனது நீண்ட நாள் கோரிக்கை. எனவே, அந்த இடத்தில் கலைஞர் அவர்களின் சிலையை அமைத்து அவருக்கு

மேலும் சிறப்பு சேர்க்குமாறு, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாக இந்தக் கோரிக்கையை முன் வைக்கிறேன்.

மேலும், **முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்** அவர்கள் வட சென்னை மக்களுக்காக **குடிசை மாற்று வாரியம்**, **அம்பேத்கர் கலைக்கல்லூரி** ஆகியவற்றை நிறுவி, அந்த மக்களின் வாழ்வாதாரத்தையே மாற்றியமைத்தவர். எனவே, வட சென்னையில் **சமத்துவ பெரியார் கலைஞர்** அவர்களுக்காக ஒரு கோட்டம் அமைத்து, அந்த மக்கள் கொண்டாடும் வகையில் ஏற்பாடு செய்யுமாறு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாக கேட்டு கொள்கிறேன்.

தற்போது உள்ள **நேரு விளையாட்டு அரங்கம்**, முன்னாள் மேயர் தந்தை சிவராஜ் அவர்களால் குறுகிய காலத்தில் மக்கள் விளையாட்டு அரங்கமாக கட்டப்பட்டது. வட சென்னை மக்கள் விளையாட்டில் முன்னோடியாக திகழ வேண்டும் என்கிற உயர்ந்த எண்ணம் கொண்ட அந்த மாபெரும் தலைவரின் பெயரை, இனி புதிதாக கட்டப்பட உள்ள விளையாட்டு அரங்கிற்கு சூட்டுமாறு பணிவோடு கேட்டு கொள்கிறேன்.

மேலும், **தங்கசாலை பூங்காவில்** அவருடைய சிலையை நிறுவுவதற்கான ஒப்புதலும், சிலையும், நிறுவ இடமும் தயாராக உள்ளன. இந்தத் தேர்தலுக்கு முன்னதாகவே அந்தச் சிலையை நிறுவி திறந்து வைத்தால், அவருக்கு பெருமை சேர்க்கும் நிகழ்வாக அமையும்.

அதே போல், **ஓட்டேரி பிரிக்ளைன் சாலைக்கு** தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பெயரை சூட்டுமாறு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாக முதன் முதலில் கோரிக்கை வைக்கப்பட்டது. மாமன்ற உறுப்பினர் திரு. அம்பேத்வளவன் அவர்கள், சம்பந்தப்பட்ட மண்டல அலுவலரிடம் அதற்கான கடிதங்களை வழங்கியுள்ளார். இதற்கான வழிமொழிதலையும் மாமன்ற உறுப்பினர் திரு. பரிதி இளம் சுருதி அவர்கள் வழங்கியுள்ளார். எனவே, விரைவில் இதனை திறக்க நடவடிக்கை எடுக்குமாறும், திறக்கும் சமயத்தில் எங்களுக்கெல்லாம் அழைப்பு விடுக்குமாறும் கேட்டு கொள்கிறேன்.

சேத்துபட்டில் உள்ள *School Road* மற்றும் *Naval Hospital Road* ஆகியவற்றை "**சொல்லின் செல்வர் சக்திதாஸ் சாலை**" மற்றும் "**பௌத்த பெரியார் சுந்தரனார் சாலை**" என்று பெயர் மாற்றி அமைக்க உத்தரவிடுமாறு கேட்டு கொள்கிறேன்.

தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டியது எங்களுடைய விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர், எழுச்சி தமிழர் திரு. திருமாவளவன் அவர்கள். எனவே, ஓட்டேரி பிரிக்ளைன் சாலைக்கு தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பெயரை சூட்டி, அச்சாலை திறந்து வைத்திடும் பொழுது எங்களுடைய தலைவர், எழுச்சி தமிழர் திரு. திருமாவளவன் அவர்களை அழைக்க வேண்டுமென்கிற கோரிக்கையினையும் முன் வைக்கிறேன்.

கன்னிகாபுரம் விளையாட்டு திடல் பணி மிகவும் சிறப்பாக முடிவடைந்துள்ளது. கன்னிகாபுரம் விளையாட்டு திடல், கணேசபுரம் பாலம், கல்யாணபுரம் பாலம் ஆகியவற்றிற்கெல்லாம் வடசென்னையில் வாழ்ந்து வந்த பெரிய தலைவர்களின் பெயரை சூட்டலாம். இவர்களெல்லாம் **திராவிட மாடல் ஆட்சியின் முன்னோடிகள்**. உதாரணமாக, **அம்பேத்கர் பாலம்** என்று பெயர் சூட்டலாம்.

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியினை ஒரு கோடியாக உயர்த்தி வழங்குமாறு கேட்டு கொள்கிறேன்.

நிலைக்குழு தலைவர்கள் மற்றும் **வார்டுகுழு தலைவர்களுக்கு** வாகனம் அளிக்க ஆவன செய்யுமாறு கேட்டு கொள்கிறேன். மேலும், **மாமன்ற உறுப்பினர்களுக்கும் இருசக்கர வாகனம்** வழங்குமாறும் கோரிக்கையை முன் வைக்கிறேன்.

மாமன்ற உறுப்பினர்கள் இயற்கை எய்தினால், தற்போது வழங்கப்படும் ஐந்து இலட்சம் நிதியுதவியை **இருபத்தைந்து இலட்சமாக உயர்த்தி** தர வேண்டும்.

அறிவிப்பு *14*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பள்ளி செல்லாத மாணவ-மாணவியர்கள், இடை நின்ற மாணவ-மாணவியர்கள் மற்றும் இடம் பெயர்ந்த மாணவ-மாணவியர்கள் ஆகியோர்களை கண்டறிந்து அனைவருக்கும் அடிப்படை கல்வியைக் கற்பிக்கும் நோக்கத்தில் வட்டாரத்திற்கு ஒரு பள்ளி என 3 பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து, அப்பள்ளியில் மாணவ-மாணவியர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப வகுப்பறைகளை ஒதுக்கி

இணைப்புப் பாடப்பயிற்சியை (*Bridge Course*) தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களை கொண்டு நடத்தப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

தமிழ்நாட்டில் பெரியார் மண்ணில், பேரறிஞர் அண்ணா மண்ணில், முத்தமிழறிஞர் கலைஞர் மண்ணில், பக்குவப்படுத்தப்பட்ட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழிநடத்தும் இந்த மண்ணில், விடுதலை சிறுத்தைகள் பக்க துணையாக நாங்கள் உங்களோடு தோளோடு தோள் நின்று கொண்டிருக்கிறோம். இந்த மண்ணில் ஒருபோதும் **சனாதன சக்திகளை வளர விடமாட்டோம்**. அதற்காக நாங்கள் எந்த சமரசமும் செய்து உங்களோடு பயணிப்போம். **சமத்துவத்தை நிலைநாட்டும் சமூக நீதி வெல்லும், தமிழ்நாடு வெல்லும்** என்று கூறி பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், **நன்றி, வணக்கம்.**

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.இர. ஜெயராமன் அவர்கள், வார்டு எண்.*4*.

திரு. இரா. ஜெயராமன்

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும், நிலைக்குழு தலைவர்களுக்கும், சக மாமன்ற உறுப்பினர்களுக்கும், உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கும் என் வணக்கத்தையும் வாழ்த்துகளையும் உரித்தாக்குகிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சி *2026-2027* ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு மேயர் அவர்கள் முன்வைத்துள்ள தொண்ணூறு திட்டங்களும் அறிவிப்புகளும் சிறப்பாக அமைந்துள்ளன. இதனை தயார் செய்த மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர், அனைத்து துறை அலுவலர்கள், நிலைக்குழு தலைவர்கள் அனைவருக்கும் என் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்து கொள்வது என் கடமையாகும்.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நிதி வழங்காமல் தாமதம் செய்து வந்தாலும், இத்தகைய நெருக்கடியான

சூழ்நிலையிலும் சிறப்பான நிதிநிலை அறிக்கையினை அறிவித்திருப்பதற்காக பாராட்டுகிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்கள் அறிவித்துள்ள தொண்ணூறு அறிவிப்புகளை நிறைவேற்ற ரூ.1358 கோடி தேவைப்படுகிறது. அதற்கான நிதி ஒதுக்கீடும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், வரிவிதிப்பு நிதிநிலை குழுத் தலைவர் அவர்களின் அறிக்கையில் துறை வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி, கடந்த ஆண்டை விட குறைவாகவே உள்ளது. சில துறைகளுக்கு பாதியாக குறைக்கப்பட்டுள்ளன. இதன் காரணம் புரியவில்லை. கல்வி மற்றும் சுகாதாரம் மிக அடிப்படையான தேவைகள். அவற்றுக்காக மாண்புமிகு மேயர் அவர்கள் பல நல்ல திட்டங்களை அறிவித்துள்ளார். கல்வி துறையின் பதினான்கு அறிவிப்புகளையும் வரவேற்கிறோம். ஆனால், கல்வி துறையில் 2025-2026 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் ரூ.26.3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில், 2026-2027 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அது ரூ.11.13 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகர பள்ளி மாணவர்களின் தரம் உயர, கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது அவசியம்.

அதே போல, சுகாதார துறைக்கு 11 திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு எண்.20

சென்னை மாவட்டத்தில் காசநோய் திட்டம் 1998-ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டு, இதற்காக மண்டலம்-6ல் புளியந்தோப்பு பகுதியில் காசநோய் மருத்துவமனை 2001 முதல் இயங்கி வருகிறது. இந்த காசநோய் மருத்துவமனையில் மாவட்ட திட்ட அலுவலகம், ஊடுகதிர் (X-Ray) வசதி மற்றும் பயிற்சி வசதிகள் உள்ளன. தற்போது, இந்தக் கட்டடம் பழுதடைந்து ஒரு சில இடங்களில் சிதிலமடைந்து காணப்படுகிறது. இந்தப் பழுதடைந்த காச நோய் மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டுவது அவசியமாகிறது. எனவே, பழைய கட்டடத்திற்கு பதிலாக புதிய கட்டடம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு எண்.*21*

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் புறநோயாளிகளுக்கு தேவையான அனைத்து மருத்துவ சேவைகள் சிறப்பாகவும், தரமானதாகவும், *30* வருடங்களுக்கு மேலான பழைய மருத்துவ கட்டடத்தில் சிசிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்தக் கட்டடம் முற்றிலும் பழுதடைந்து காணப்படும் நிலையிலும், நாள் ஒன்றுக்கு *400* மேற்பட்ட புறநோயாளிகள் சிகிச்சைக்கு வருவதாலும் போதுமான இடவசதி, ஆய்வக வசதி, மற்றும் கழிப்பறை வசதி இல்லாத நிலையிலும் பழுதடைந்த இந்தப் பழைய கட்டடத்திற்கு பதிலாக புதிய கட்டடம் கட்டும் பணிகள் ரூ.*6* கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு எண்.*24*

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது பெரம்பூர் *(கோட்டம்-72)* வில்லிவாக்கம் *(கோட்டம்-95)*, கள்ளிக்குப்பம் *(கோட்டம்-83)* மற்றும் சைதாப்பேட்டை *(கோட்டம்-168)* ஆகிய இடங்களில் இறைச்சி கூடங்கள் இயங்கி வருகின்றன. பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப இறைச்சி பயன்பாடு தேவையை கருத்தில் கொண்டு வடக்கு வட்டாரத்தில் ஒரு இறைச்சி கூடம் ரூ.*25* கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். மேலும், பொது மக்களின் கோரிக்கைக்கு இணங்க தெற்கு வட்டாரத்தில் இறைச்சி கூடம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை *(DPR)* தயாரிக்கப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

வடக்கு வட்டாரத்தில், குறிப்பாக திருவொற்றியூர், மணலி, மாதவரம் மண்டல பகுதிகளில் இறைச்சி கடை வியாபாரிகள் சங்கம் நீண்டகாலமாக கோரிக்கை வைத்து எதிர்பார்த்திருந்த இறைச்சி கூடம் ரூ.*25* கோடி மதிப்பில் நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. இந்த அறிவிப்பு வடக்கு வட்டார இறைச்சி விற்பனையாளர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெறும். அந்தப் பகுதி வியாபாரிகள் மற்றும் மக்கள் சார்பாக என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

அறிவிப்பு எண்.27

பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறையின் கீழ்வரும் மகப்பேறு மருத்துவமனைகள், அவசர சிகிச்சை பிரிவுகள் மற்றும் அறுவை சிகிச்சை அரங்குகளில் அனுமதிக்கப்படும் குழந்தைகளின் இரத்தத்தில் உள்ள ஆக்ஸிஜன் அளவையும், இதய துடிப்பையும் *(Pulse Rate,Blood Pressure,Heart Rate, SPO2)* அளவிட பயன்படும் *Fetal Pulse Oximeter* கருவியின் மூலம் நுரையீரல் நோய்கள், இதய நோய்கள் மற்றும் ஆக்ஸிஜன் அளவு குறைவாக உள்ள குழந்தைகளின் உடல் நிலையினை தொடர்ந்து கண்காணிக்கவும் *Fetal Pulse Oximeter* கருவிகள் அவசியமாக உள்ளதால், *16* நகர்ப்புற சமுதாய நலமையங்கள் *(UCHC)* மற்றும் மூன்று *24* மணிநேர மகப்பேறு மருத்துவமனைகள் *(EOC)* ஆக மொத்தம் *19* மருத்துவமனைகளுக்கும் தலா ஒரு கருவி வீதம் *19* எண்ணிக்கையில் *Fetal Pulse Oximeter - High End with detachable hand held front panel*, கருவிகள் தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம் *(TNMSC)* மூலமாக ரூ.*23.00* இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு எண்.32

பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் பயோ மைனிங் மூலம் மீட்டெடுக்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியில் *1,000* மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட காற்றுப்புகும் வகையில் பதனம் செய்யும் உரம் தயாரிக்கும் நிலையத்தை *20* ஏக்கர் பரப்பளவில் *(Windrow Compost Plant)* பொது-தனியார் பங்களிப்பு *(PPP)* நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு எண்.33

குப்பை கொட்டும் வளாகத்தில் ஈரக்கழிவுகளை கொட்டுவதை தவிர்க்க மண்டலம்-*2*, வார்டு-*22* மணலியில், *2* எண்ணிக்கையிலான தலா *50* மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்ட காற்றுப்புகும் வகையில் உரம் தயாரிக்கும் நிலையம் *(Windrow Composting Plant)* ரூ.*15* கோடி மதிப்பீட்டில் மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு எண்.35

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து நிரந்தர, தற்காலிக மற்றும் வெளிமுகமை தூய்மைப் பணியாளர்களுக்கும் கோடைக் காலங்களில் ஏற்படும் வெயில் தாக்கத்தை போக்கவும் நீர்ச்சத்தை பராமரிக்கவும் உடல் வெப்பத்தை தணிக்கவும் கோடை காலம் முழுவதும் தூய்மைப் பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

கோடைக்காலத்தில் தூய்மை பணியாளர்களுக்காக மோர் வழங்குதல், மதிய உணவு மற்றும் இரவு உணவு ஏற்பாடு செய்தல், ஓய்வறைகள் அமைத்தல் போன்ற பல நல்ல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் பாராட்டத்தக்கவை.

ஆனால், தூய்மை பணியாளர்கள் நீண்டகாலமாக பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைத்து போராட்டம் செய்து வருகின்றனர். அவர்களின் இம்முக்கியமான கோரிக்கை இந்நிதிநிலை அறிக்கையில் இடம் பெறாதது வருத்தமளிக்கிறது. குறைந்தபட்சம் "சம வேலைக்கு சம ஊதியம்" என்கிற அடிப்படையில் அவர்களின் ஊதியத்தை உயர்த்துவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்கிற கோரிக்கையை இங்கே முன் வைக்கிறேன்.

மேலும், ஒப்பந்த முறையில் பணியாற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், களப் பணியாளர்கள் ஆகியோரை நிரந்தர பணியாளர்களாக மாற்றுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் எனவும் கேட்டு கொள்கிறேன்.

அறிவிப்பு எண்.2

2025-26ஆம் கல்வியாண்டில் முதற்கட்டமாக 141 உடற்கல்வி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் உடல் ஆரோக்கியம், ஒழுக்கம் மற்றும் விளையாட்டு திறனை மேம்படுத்தும் வகையில் இரண்டாம் கட்டமாக 2026-27ஆம் கல்வியாண்டில் தொடக்கப்பள்ளிகளுக்கு 101 ஆசிரியர்கள், நடுநிலைப்பள்ளிகளுக்கு 29 ஆசிரியர்கள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு 50 ஆசிரியர்கள் என மொத்தம் 180 தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள், ஜூன் 2026 முதல் மார்ச் 2027 வரை தொகுப்பூதிய அடிப்படையில் 10 மாதங்களுக்கு பெற்றோர் ஆசிரியர்

கழகம்/பள்ளி மேலாண்மைக் குழு *(PTA / SMC)* மூலம் பணியமர்த்தப்படுவார்கள். இதற்காக ரூ.*3.65* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பினை வரவேற்கிறோம்.

ஆனால், *SMC* மூலம் தற்காலிக நியமனம் செய்வது ஏற்கத்தக்கதல்ல. அவர்களையும் நிரந்தர பணியாளர்களாக நியமிக்க வேண்டும். மேலும், ஆசிரியர் தகுதி தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றவர்களில் தகுதியானவர்களை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் எனவும் கேட்டு கொள்கிறேன்.

அறிவிப்பு எண்.*51*

பேருந்து பணிமனைகளின் சேவை தரத்தை மேம்படுத்தவும், வணிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் பொருளாதார ஆற்றலை வெளிக்கொணரவும், பொது போக்குவரத்து உள்கட்டமைப்பை நவீன மயமாக்கவும், பொது நிதி மீதான சுமையை குறைக்கவும், பொதுமக்களின் அதிக பயன்பாட்டில் உள்ள ஜார்ஜ்டவுன் *(மண்டலம்-4)*, கத்திவாக்கம் *(மண்டலம்-1)*, துரைப்பாக்கம், பள்ளிக்கரணை *(மண்டலம்-15)*, இராமாபுரம், ஸ்ரீ ராம் நகர் *(மண்டலம்-11)*, நங்கநல்லூர் *(மண்டலம்-12)*, என்.ஜி.ஓ காலனி ஆதம்பாக்கம் *(மண்டலம்-13)* மற்றும் மடிப்பாக்கம் *(மண்டலம்-14)* ஆகிய முக்கிய இடங்களில் உள்ள பேருந்து பணிமனைகள் பொது-தனியார் கூட்டாண்மை *(PPP) /* வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் *(EPC)* முறையில் ரூ.*110* கோடி மதிப்பீட்டில் மறுவடிவமைப்பு செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

பேருந்து நிலையங்களை மேம்படுத்துவது சரியான நடவடிக்கையாகும். அதே வேளை, *பொது-தனியார் கூட்டாண்மை* என்ற பெயரில் பொருளாதார ஆற்றலை வெளிக்கொணர்வது, தனியார் நிறுவனங்கள் லாபம் பெறுவதற்கான திட்டமாக மாறிவிடக் கூடாது. எனவே, மாநகராட்சியே இத்திட்டத்தை செயல்படுத்தினால், மாநகராட்சிக்கே வருவாய் கிடைக்கும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) கருதுகிறது.

அறிவிப்பு எண்.*61*

சுற்றுலாவை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மெரினா கடற்கரையை ஒட்டி சுற்றுலா பயணிகளுக்காக கலங்கரை விளக்கம் *(Light*

House) முதல் அண்ணா நினைவிடம் வரை கயிறு வழித்தட *(Rope way car)* வசதி அறிமுகப்படுத்த திட்டமிட்டப்பட்டுள்ளது. இந்தக் கயிறு வழித்தடங்கள், நகரத்தை ஒரு தனித்துவமான கோணத்தில் பார்க்க வழிவகை செய்வதுடன், சுற்றுலா பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்துகின்றன. இந்தக் கயிறு வழித்தடங்கள் நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் அழகை ரசிக்க வைக்கும் பரந்த காட்சிகளை *(Panoramic views)* வழங்குவதோடு மறக்க முடியாத அனுபவங்களையும் உருவாக்கும் வகையில் பொது-தனியார் பங்களிப்பு *(PPP)* முறையில் கயிறு வழித்தடங்கள் *(Rope way car)* அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

இந்தத் திட்டத்தில் *பொது-தனியார் பங்களிப்பு முறை* எனும் போது, தனியார் லாபத்திற்காக கூடுதல் கட்டணங்கள் வசூலிக்கப்படும் அபாயம் உள்ளது. சாதாரண ஏழை, எளிய மக்கள் பொழுதுபோக்கிற்காக செல்லும் சுற்றுலாதலமான மெரினா கடற்கரையை தனியார் லாபம் பெறும் இடமாக மாற்றிவிட கூடாது. ஏழை, எளிய மக்கள் மெரினா கடற்கரைக்கு வருவதை தவிர்க்க வேண்டிய நிலை உருவாகி விட கூடாது.

தற்போது மெரினா கடற்கரையில் *3000*-க்கும் மேற்பட்ட சிறு கடை விற்பனையாளர்கள் உள்ளனர். அவர்களை அங்கிருந்து அகற்றினால், அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். எனவே, இப்படிப்பட்ட ஏழை, எளிய மக்கள், சிறு கடை வியாபாரிகள், மீனவ பகுதி மக்கள் போன்றவர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாத வகையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

மாநகராட்சி வரவு-செலவு திட்டத்தில் *2026-2027* வருவாய் கணக்கில் வரவு ரூ.*6040.97* கோடியாகவும், செலவு ரூ.*6146.29* கோடியாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. மூலதன வரவு ரூ.*2517.34* கோடியாகவும், செலவு ரூ.*2254.05* கோடியாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் சுமார் ரூ.*341* கோடி பற்றாக்குறை உள்ளது. இதை எவ்வாறு சரி செய்யப் போகிறோம்?

தற்போது சென்னை மாநகரம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் முறையான பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் இல்லாமல் வீடுகளை கட்டி நீண்டகாலமாக வசித்து வருகின்றனர். அவர்களுக்கு குறைந்தபட்சம் தற்காலிக சொத்து வரி அவர்கள் வசிக்கும் வீடுகளுக்கு மதிப்பீடு செய்யலாம் என மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதன் மூலம்

மாநகராட்சிக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும். சொத்து வரி மதிப்பீடு செய்யாத காரணத்தினால், அந்த மக்களுக்கு மின் இணைப்பு, பாதாள சாக்கடை இணைப்பு, குடிநீர் இணைப்பு போன்ற அடிப்படை வசதிகள் மறுக்கப்படுகின்றன. இதனால் ஏழை, எளிய மக்கள் அடிப்படை வசதிகள் இல்லாமல் அவதிக்குள்ளாகின்றனர். எனவே, இவர்களுக்கு தீர்வு கிடைக்க தற்காலிக சொத்து வரி மதிப்பீடு செய்து தர வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

கொடுங்கையூரில் செயல்பட்டு வரும் 50 டன் எரி உலை ஆலையால் மக்களின் உயிருக்கும், ஆரோக்கியத்திற்கும் மிக பெரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. வட சென்னை குடியிருப்போர் நல சங்கங்களின் கூட்டமைப்பும், சுற்றுச்சூழல் வல்லுநர்களும் வெளியிட்ட ஆய்வறிக்கையில், அந்த ஆலையை நடத்தும் நிறுவனத்தின் விதிமீறல்கள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன. மாசு கட்டுப்பாட்டு வாரியமும் மாநகராட்சியும் கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும். இந்த எரி உலை ஆலையை உடனடியாக மூட வேண்டும். விதிமீறலுக்காக அந்த நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், சட்ட விதிகள் மீறப்பட்டதையும், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார பாதிப்புகளையும் ஆய்வு செய்ய நிபுணர் குழு அமைக்கப்பட வேண்டும்.

கொடுங்கையூர் எரி உலை ஆலை தினசரி 50 டன் எரிக்கும் சிறிய அளவிலான ஆலை. இதில் மட்டுமே இவ்வளவு ஆபத்துக்கள் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்ட நிலையில், 2100 டன் எரி உலை ஆலை திட்டத்தை கொடுங்கையூரில் நிறைவேற்ற கூடாது. வடசென்னை மக்களின் ஆரோக்கியத்திற்கும் உயிருக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் இந்தத் திட்டத்தை கைவிட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

பள்ளிக்கரணை சதுப்புநிலத்தை சுற்றி நான்கு பக்கமும் ஒரு கிலோமீட்டர் சுற்றளவிற்கு எந்தக் கட்டுமானமும் செய்ய கூடாது என பசுமை தீர்ப்பாயம் தடை விதித்துள்ளது. இதனால் இப்பகுதியில் உள்ள 17 வருவாய் கிராமங்களில் வசிக்கும் 2 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். எனவே, அந்தத் தடையை நீக்க நாம் முயற்சி செய்ய வேண்டும்.

மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்புகளையும் திட்டங்களையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) வரவேற்கிறது, சிறப்பாக பாராட்டுகிறது. அதே வேளை, *தனியார்-பொது கூட்டாண்மை, தனியார்மயம், தொகுப்பு ஊதியம், ஒப்பந்த முறை* என்கிற பெயரில் உழைக்கும் மக்களை பாதிக்கும் சில திட்டங்கள் இருப்பதை சுட்டிக்காட்டி, அந்த மக்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்கிற கோரிக்கையுடன் நிதிநிலை அறிக்கையை வரவேற்று நிறைவு செய்கிறேன், **நன்றி, வணக்கம்.**

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. ஜே. ஜான் அவர்கள் , வார்டு எண்.*84*.

திரு. ஜே. ஜான்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, சக மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மாலை வணக்கத்தினை தெரிவித்து கொண்டு, *2026-2027* ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டு – அறிவிப்பு *1*ல்

அறிவிப்பு *1* : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட *35* மேல்நிலைப்பள்ளிகள், *46* உயர்நிலைப்பள்ளிகள், *15* மையப்பள்ளிகள் மற்றும் உயர்கல்விக்கான சிறப்பு பயிற்சி அளிக்கும் *4* வட்டார பள்ளிகள் என மொத்தம் *100* பள்ளிகளுக்கு, உயர்தர தொழில்நுட்ப வசதியுடன் கூடிய பன்முகசெயல்பாட்டு அச்சுப்பொறி இயந்திரம் *(MULTI FUNCTIONAL PRINTER)* ரூ.*60* இலட்சம் மதிப்பீட்டில் தகவல் தொழில்நுட்ப துறையின் மூலம் கொள்முதல் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. உயர் கல்வி பயில செல்லும் அரசு பள்ளி மாணவர்களுக்கு லேப் டாப் வழங்கும்படி இந்த மன்றத்தில் கேட்டு கொள்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் *லிப்ட்* அமைப்பது வரவேற்கத்தக்க ஒன்று. குறிப்பாக, *84*வது வார்டில் உள்ள மருத்துவமனைக்கு வயதானவர்களும்,

ஊனமுற்றவர்களும் அதிக எண்ணிக்கையில் வருகை தருகின்றனர். எனவே, 84வது வார்டு பகுதியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போது மருத்துவர் இல்லாத நிலை உள்ளது. எனவே, இங்கு உடனடியாக மருத்துவர் பணியிலமர்த்தப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

அறிவிப்பு 11: 2025-26 கல்வியாண்டில் முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 35 மேல்நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்ட 10 உளவியல் ஆலோசகர்கள் இன்றைய சூழலில் வளர் இளம் பருவ மாணவ-மாணவியர்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளுக்கு நல்ல முறையில் உளவியல் ஆலோசனை வழங்கி வருகிறார்கள். அதை தொடர்ந்து இரண்டாம் கட்டமாக 2026-27ஆம் கல்வியாண்டில் 46 சென்னை உயர்நிலை பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவியர்களுக்கு தகுந்த உளவியல் ஆலோசனை வழங்கி படிப்பில் கவனம் செலுத்துவதற்கும் மாநகராட்சியில் உள்ள பள்ளிகள் அதிக தேர்ச்சி சதவீதம் பெறுவதற்கு ஏதுவாக 17 உளவியல் ஆலோசகர்களுக்கு தொகுப்பூதிய அடிப்படையில் 10 மாதங்களுக்கு ரூ.59.50 இலட்சம் செலவினத்தில் நியமிக்கப்படுவார்கள். இந்த உளவியல் ஆலோசகர்களின் நியமனங்கள் பாலின ஆய்வகத்தின் (Gender Lab) மேற்பார்வையின் மூலம் செயல்படுத்தப்படும் என்கிற அறிவிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்க விஷயமாகும்.

அறிவிப்பு 12: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் - 9ல் ஆயிரம் விளக்கு பகுதியில் தசைத்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான சிறப்பு பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் தசைச்சிதைவு நோயால் (Muscular Dystrophy) பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்புக்கல்வி கற்பித்தல் மற்றும் குறைந்த நடமாடும் திறன் கொண்ட குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. இதில் மாணவ-மாணவியர்களுக்கான ஹைட்ராலிக் தூக்கிகள் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள், சாய்தள வசதியுடன் கூடிய கழிவறை, பாதுகாப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பள்ளியை போன்று இதர 14 மண்டலங்களிலும் வட்டார துணை ஆணையர் அவர்களின் மேற்பார்வையில் பொது-தனியார் பங்களிப்பு (Public-Private Partnership) மற்றும் அரசு சாரா

நிறுவனம் *(Non Governmental Organization)* மூலம் சிறப்பு பள்ளிகள் நிறுவப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில், அனைத்து மண்டலங்களிலும் ஒவ்வொரு பள்ளிக்கும் சிறப்பு குழந்தைகளுக்கான ஆசிரியர் நியமனம் செய்யப்படும் என அறிவித்தீர்கள். ஆனால், அது நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்தது. தற்போது மீண்டும் அறிவிப்பு *12*ல் அறிவிக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. கால்நடை பராமரிப்பு, சாலை, மழைநீர் வடிகால்வாய்கள் போன்ற துறைகளில் கோடிக்கணக்கான நிதி செலவிடப்படுகின்ற நிலையில், இத்தகைய சிறப்பு குழந்தைகளின் கல்வி மற்றும் வளர்ச்சிக்கும் மாநகராட்சி கவனம் செலுத்துவது பாராட்டத்தக்கவை.

அறிவிப்பு *2*: *2025-26*ஆம் கல்வியாண்டில் முதற்கட்டமாக *141* உடற்கல்வி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் உடல் ஆரோக்கியம், ஒழுக்கம் மற்றும் விளையாட்டு திறனை மேம்படுத்தும் வகையில் இரண்டாம் கட்டமாக *2026-27*ஆம் கல்வியாண்டில் தொடக்கப்பள்ளிகளுக்கு *101* ஆசிரியர்கள், நடுநிலைப்பள்ளிகளுக்கு *29* ஆசிரியர்கள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு *50* ஆசிரியர்கள் என மொத்தம் *180* தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள், ஜூன் *2026* முதல் மார்ச் *2027* வரை தொகுப்பூதிய அடிப்படையில் *10* மாதங்களுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகம்/பள்ளி மேலாண்மைக் குழு *(PTA / SMC)* மூலம் பணியமர்த்தப்படுவார்கள். இதற்காக ரூ.*3.65* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதற்கு எனது பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறேன்.

இதில் ஒன்றை கவனிக்க வேண்டியது அவசியம். அரசு பள்ளி மாணவர்களே அடுத்த தலைமுறையை நிர்ணயிக்க கூடியவர்கள். அவர்களின் எதிர்காலம் சிறப்புற இருக்க வேண்டி, சென்னை பள்ளி மாணவர்களுக்கு நிரந்தர ஆசிரியர்களை பணியிலமர்த்த வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

அறிவிப்பு *46*: *2026-27*ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுடன் இணைந்து பசுமைப் பரப்பை பெருமளவில் அதிகரிக்க மாடம்பாக்கம், கைலாசபுரம் *(மயிலாப்பூர்)*

(மண்டலம்-9) மற்றும் சாத்தாங்காடு *(மண்டலம்-2)* ஆகிய இடங்களில் நாற்றங்கால் பண்ணைகள் ஏற்படுத்தி அங்கு வனத்துறையின் உதவியுடன் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து, பொது மக்களுக்கு விலையில்லாமல் வழங்குவதோடு அவர்கள் உள்ளார்ந்த பங்கேற்புடன், சென்னை மாநகராட்சி பகுதிகளில் பசுமைப்பரப்பை அதிகரிக்க இம்மரக்கன்றுகளை நடவு செய்து, சென்னையை பசுமை மிக்க நகரமாக மாற்ற ரூ.*10* கோடி மதிப்பீட்டில் "பசுமைச் சென்னை திட்டம்" என்ற திட்டம் அறிமுகம் செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

இதன் மூலம் ஆக்சிஜன் அதிக அளவில் உருவாகும். ஆனால், சுற்றுச்சூழல் மாசுபாடு எவ்வாறு உருவாகிறது என்றால், குறிப்பாக வட சென்னையில் எண்ணூர், மணலி போன்ற பகுதிகளில் இயங்கும் பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் மாசுக்கள் மக்களின் உடல்நலத்திற்கும் வாழ்விற்கும் தீங்கு விளைவிக்க கூடியதாக இருக்கின்றன. எனவே, முதலில் அவற்றை தடுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வெறும் செடிகளை மட்டும் நட்டால் போதுமானதல்ல. மாசு விளைவிக்கும் சில தொழிற்சாலைகளை மூடி சீல் வைத்தாலன்றி, இந்தக் காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்த முடியாது. பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம் *(கைதட்டல்)*

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய திரு. ம. சாமுவேல் திரவியம் அவர்கள், வார்டு எண்.6.

திரு. ம. சாமுவேல் திரவியம்

பெருந்தலைவர் காமராஜர் ஐயாவை வணங்குகிறேன். இந்திய திருநாட்டின் ஒப்பற்ற தலைவர் திரு. ராகுல்காந்தி அவர்களையும் வணங்குகிறேன்.

தமிழ்நாட்டு மக்களுக்காக *24x7* என்கிற முறையில் தன்னுடைய உடல்நலத்தையும் பொருட்படுத்தாமல் ஓடோடி உழைத்து பல திட்டங்களை நிறைவேற்றியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களையும், தேசிய தளபதி மாணிக்கம் தாகூர் அவர்களையும் வணங்குகிறேன்.

இந்தப் பதவியில் என்னை அமரவைத்து அழகு பார்த்த மதிப்பிற்குரிய ஐயா திரு. கே.எஸ். அழகிரி அவர்களையும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் திரு.கு. செல்வப்பெருந்தகை அவர்களையும், தமிழ்நாடு சட்டமன்றத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற குழு தலைவர் திரு.எஸ். ராஜேஷ்குமார் அவர்களையும் வணங்குகிறேன்.

2026-2027 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை சிறப்பாக அறிவித்துள்ள பெருநகர சென்னை மாநகரத்தின் மேயராக, சென்னை மக்களால் "இரும்பு மங்கை" என்று போற்றப்படுகின்ற மாண்புமிகு மேயர் அவர்களையும், அமைதி பூங்கா போலவும், சிங்கம் போல் இங்கே அமர்ந்து மன்றத்தை துணையாக வழிநடத்தி கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களையும், மரியாதைக்குரிய ஆணையர், துணை ஆணையர்கள், இணை ஆணையர்கள், வட்டார துணை ஆணையர்கள், ஆளுங்கட்சி தலைவர் மற்றும் சக மாமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றம் என்பது பெரிய வரலாறு கொண்டது. இங்கு *2026-2027*-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை சிறப்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது எந்தச் சூழ்நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை நாம் கவனிக்க வேண்டும். மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய நிதியினை தரவில்லை என்பது நாடறிந்த விஷயமாகும்.

இக்கால பகுதியில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும், பெருநகர சென்னை மாநகராட்சி தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும், மக்களின் நலனை கருத்திற் கொண்டு, பல்வேறு இடையூறுகளை கடந்து நிறைவேற்றப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி *2025-2026*ஆம் ஆண்டிற்கான சிறப்பு நிதி, மத்திய அரசால் "பெருநகர மாநகரம்" என்கிற அடிப்படையில் வழங்கப்பட்டது. இந்தியாவில் தகுதி பெற்றுள்ள நகரங்கள் நான்கு மட்டுமே: டெல்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை. அவற்றுள் ஒன்றாகிய சென்னை, இத்திட்டத்தின் கீழ் வர பெறுகிறது.

2025-2026 ஆம் நிதி ஆண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மத்திய அரசால் ரூ.300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், நடப்பு நிதி ஆண்டில் ரூ.100 கோடி மட்டுமே வழங்கப்பட்டு, மீதமுள்ள ரூ.200 கோடி வழங்கப்படவில்லை.

Metropolitan City திட்டம் இந்திய தேசிய காங்கிரஸ் ஆட்சி காலத்தில் தொடங்கப்பட்டது. மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதே இத்திட்டத்தின் நோக்கம். ஒவ்வொரு ஆண்டும் நிதி உயர்த்தப்பட வேண்டும் என்பதே இதன் அடிப்படை.

2026-2027 ஆம் நிதி ஆண்டில் ரூ.100 கோடி கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், 2025-2026 ஆண்டிற்கான நிதி இன்னும் வழங்கப்படாத நிலையில், மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், அதிகாரிகள் அனைவரும் இணைந்து சிறப்பான நிதிநிலை அறிக்கையினை தாக்கல் செய்துள்ளனர்.

நாம் அனைவரும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒத்துழைப்பாக இருந்து, இந்த நிதியை பெற்று தருவது நம்முடைய கடமையாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சி என்பது மிகப்பெரிய மாநகராட்சி ஆகும். பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு அவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நான்கு ஆண்டுகளுக்கு முன்னதாக, கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியின் 10 ஆண்டு காலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி எவ்வாறு இருந்தது என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு உரிய நிதியை வழங்கவில்லை. இதுகுறித்து, தமிழ்நாட்டில் எதிர்க்கட்சியாக இருக்கும் அ.இ.அ.தி.மு.க. அரசு நிதி கோரி வலியுறுத்தவில்லை. இத்தகைய சவால்களுக்கிடையில், திராவிட மாடல் ஆட்சியின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியின் மாண்புமிகு மேயர் அவர்கள் சிறப்பான நிதிநிலை அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

134வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி உமா ஆனந்தன் அவர்கள் கடந்த மாமன்ற கூட்டத்தில் தமிழ்நாடு அரசையும், பெருநகர சென்னை மாநகராட்சியையும் குறித்து உயர்வாக பேசியிருந்தார். ஆனால், தாம் பெருநகர சென்னை மாநகராட்சியில் மாமன்ற உறுப்பினராக இருப்பதையும், வார்டுகளில்

செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விவரங்களைப் பற்றியும் மத்திய அரசிற்கு ஏதேனும் கடிதம் அனுப்பியிருக்கிறாரா? எனினும், இம்மாமன்ற கூட்டத்தில் RSS நூற்றாண்டு விழாவிற்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இதனை தி.மு.க.வின் பொதுக்கூட்டம் என கூறினார். இத்தகைய குறிப்புகள் சபை பதிவிலிருந்து நீக்கப்பட வேண்டும். நாம் அனைவரும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒத்துழைப்பாக இருந்து, உரிய நிதியை பெற்று தருவது நம்முடைய கடமையாகும்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. ராகுல்காந்தி அவர்கள் பல இடங்களில், பலமுறை மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையை பற்றியும், மத்திய அரசு, தமிழ்நாட்டிற்கு அளிக்க வேண்டிய நிதியினை அளிக்காததை கண்டித்தும் பல இடங்களில் வலியுறுத்தி உள்ளார். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி தலைவர்களும் இதனை பலமுறை வலியுறுத்தியுள்ளனர்.

ஆனால், அ.இ.அ.தி.மு.க. கட்சியினர் தமிழ்நாட்டு மக்களின் வாக்குகளை பெறுகின்றனர். ஆனால், மக்களுக்காக போராடுவதில்லை. திராவிட முன்னேற்ற கழக அரசு செய்யும் எந்த நல்ல செயலையும் குறை கூறுவதே அவர்களின் வழக்கம். ஆதலால், தமிழ்நாட்டில் நடைபெறவிருக்கும் 2026-ஆம் ஆண்டிற்கான தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட கூடிய நிலையில் உள்ளது. மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முனையாமல், தமிழ்நாடு அரசுக்கு வர வேண்டிய நிதியை பெற்று தர முடியாத நிலையில் இருக்கும் அ.இ.அ.தி.மு.க.வை வன்மையாக கண்டிக்கிறேன்.

ஒரு மாமன்ற உறுப்பினராக சிறப்பாக செயல்படுவதற்கு உறுதுணையாக இருந்து வரும் மாண்புமிகு திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், கொடை வள்ளல், அருமை சகோதரர், உடன்பிறவா சகோதரர் திரு. கே.பி. சங்கர் அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்கி கொள்கிறேன்.

பல சவால்களும், புயல்களும் வந்த போதிலும் உறுதியுடன் எங்களை தாங்கி, 1வது மண்டலத்தை சிறப்பாக வழி நடத்தி வரும் 1வது மண்டல வார்டுகுழு தலைவர் திரு.மு. தனியரசு அவர்களுக்கும், வார்டில் முழு ஒத்துழைப்புடன் பணியாற்றி வரும் திராவிட முன்னேற்ற கழக நிர்வாகிகளுக்கும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாகி சகோதரர் திரு. A.P. ஆறுமுகம் அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாமன்றத்தில் பேசிய மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நிதிநிலை அறிக்கையினை பற்றி சிறப்பான கருத்துகளை முன் வைத்து நன்றியையும் தெரிவித்தனர். மாமன்ற உறுப்பினர்கள் திரு. வே. ராஜன் மற்றும் திரு. ஆர்.ஜி. ராஜேஷ் சேகர் ஆகியோர் மாமன்றத்தில் சிறப்பான கருத்துக்களை முன் வைத்தனர். அவர்களின் கருத்துகளை முன்மொழிந்து நன்றியை உரித்தாக்குகிறேன்.

மாமன்ற உறுப்பினர் திரு. டி.வி. செம்மொழி அவர்களின் நீண்டகால கோரிக்கையான *Rope way Car* திட்டத்தை நிறைவேற்றியதற்காக நன்றியை உரித்தாக்குகிறேன்.

பணிகள் நிலைக்குழு தலைவர் திரு. நே. சிற்றரசு அவர்கள் இங்கு ஒரு முக்கிய குறிப்பு ஒன்றினை தெரிவித்தார். மாமன்ற உறுப்பினர்கள் எவ்வளவு சிறப்பாக பணியாற்றுகிறார்கள் என்பதை தெரிவித்தார். மாமன்ற உறுப்பினர்களின் சேவை மக்களுக்கு மிகவும் தேவையானது. நடைபெறவிருக்கும் *2026* சட்டமன்ற தேர்தலில் மாமன்ற உறுப்பினர்களை முன்னிலைப்படுத்த வேண்டும் என கூறினார். ஏனெனில் தூக்கமின்றி, மக்கள் நலனுக்காக ஓடோடி உழைக்கும் முதல் பிரதிநிதிகள் மாமன்ற உறுப்பினர்களே. அதன் பின்பே மாண்புமிகு சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள். ஆகையால், மாமன்ற உறுப்பினர்களுக்கு உரிய மரியாதை வழங்கப்பட வேண்டும் என்பதை நான் இங்கு பதிவு செய்கிறேன்.

நம்ம சென்னை” என்கிற பெயரில் ஒரு நூல் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டும் இதே நூல் வெளியிடப்பட்டது. அந்த நூலில் மாமன்ற உறுப்பினர்களின் புகைப்படம் இடம் பெறவில்லை என்று மாமன்ற உறுப்பினர், வழக்கறிஞர் திரு. சிவராஜசேகரன் அவர்கள் கோரிக்கையினை முன் வைத்தார். அந்தக் கோரிக்கையை மாண்புமிகு மேயர் அவர்கள் ஏற்று, அடுத்த மன்ற கூட்டத்தில் புகைப்படம் எடுத்து, இன்றைய தினம் வெளியிடப்பட்டுள்ள நூலின் இரண்டாவது பக்கத்தில் பிரசுரித்துள்ளார். இதனால் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அதே போல், மாமன்ற உறுப்பினர் திருமதி பாத்திமா அஹமது அவர்கள் பேசியது போன்று, புகைப்படத்தின் ***Hard Copy***யை வழங்கி, எங்கள் அலுவலகத்தில் அந்தப் புகைப்படத்தை வைக்க வழிவகை செய்ய வேண்டும்.

6வது வார்டில் உள்ள பிரச்சனைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டுள்ளன. இதனால் மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர், வட்டார துணை ஆணையர்கள், மண்டல அலுவலர்கள் உட்பட அனைத்து அதிகாரிகளும் முழு ஒத்துழைப்புடன் சிறப்பாக பணியாற்றினர். அனைவருக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

6வது வார்டில் அரசு நிலம் எதுவும் இல்லை. 64 ஏக்கர் நிலத்தை ஆணையர் அவர்கள் பார்வையிட்டு, அதற்கான நடவடிக்கை எடுப்பதாக கூறியிருந்தார். எனவே, அதையும் ஆய்வு செய்து செயல்படுத்த வேண்டும்.

வார்டு-6, அம்பேத்கர் நகரில் வண்ணார்குளம் உள்ளது. அதற்காக ரூ.9.00 கோடியில் ***DPR*** தயார் செய்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை எந்தப் பணியும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் வார்டு பொதுமக்கள் மிகுந்த வருத்தம் தெரிவிக்கின்றனர்.

சென்னை மாநகரில் சாலைகள் வெட்டப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது மகிழ்ச்சியானது. ஆனால் சாலை இல்லாத இடங்களில் புதிய சாலை அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் ***Drainage Pipe Line*** அமைக்க வேண்டியுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரி ***Road Cut*** அனுமதி கேட்கிறார். இத்தகைய சிறிய பிரச்சனைகளை கருத்தில் கொண்டு, சாலை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. சிவராஜசேகரன் அவர்கள் பேசியது போன்று, **"உறவுக்கு கைகொடுப்போம், உரிமைக்கு குரல் கொடுப்போம்"** என்று கூறி, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம், **ஜெய்ஹிந்த்.**

மாண்புமிகு மேயர்

மரியாதைக்குரிய ஆளுங்கட்சி தலைவர் அவர்கள்.

திரு.ந. இராமலிங்கம்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, துணை ஆணையர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டு குழு தலைவர்களே, நியமனக்குழு உறுப்பினர்களே,

அனைத்து கட்சிகளின் தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே, அனைத்து துறைகளின் அதிகாரி பெருமக்களே, பத்திரிகை மற்றும் ஊடக பிரிவு துறையை சார்ந்த நண்பர்களே உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

பெருமைமிக்க இம்மாநகராட்சியில் நமது நிர்வாகம் பொறுப்பேற்றது முதல் 5வது முறையாக நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்யும் வரிவிதிப்பு மற்றும் நிதிநிலைக்குழு தலைவர் திருமதி.சர்பஜெயாதாஸ் அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்களே, மகிழ்ச்சியில் பெரு மகிழ்ச்சியே அடுத்தவரை மகிழ வைத்து பார்ப்பது தான் என்பார்கள். அந்த வகையில், பொங்கல் பரிசு தொகை ரூ.3 ஆயிரம் கிடைத்த மகிழ்ச்சியில் உள்ள மக்களுக்கு இன்ப அதிர்ச்சியாக கலைஞர் மகளிர் உரிமை தொகை பெறும் 1 கோடியே 31 இலட்சம் மகளிரின் வங்கி கணக்கிற்கு கடந்த வெள்ளிக்கிழமையன்று காலை ரூபாய் ஐந்தாயிரம் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டதை அறிந்த மக்கள் மிகவும் சந்தோஷமடைந்தனர். இத் திட்டத்தை நீதிமன்றம் மூலம் முடக்க நினைத்தவர்கள் வாயடைத்து போகும் வகையில், மாண்புமிகு தளபதி அவர்கள், மக்கள் மனம் குளிரும் வகையில் மக்களை மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தினார். பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிடுவதை போல், "ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம்" என்பதை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்தது என்றால், அது மிகையாகாது. எல்லோருக்கும் எல்லாம் என்பதை தாரக மந்திரமாக கொண்டு செயல்படும் மாண்புமிகு தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசை அனைத்து கட்சி தலைவர்களும், பத்திரிகைகளும் போற்றி பாராட்டுகிறார்கள் என்பது கழக அரசுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். இம்மாபெரும் திட்டத்தை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இம்மாமன்றத்தில் ஆளுங்கட்சி தலைவர் என்கிற முறையிலும், மாமன்ற

உறுப்பினர்களின் சார்பிலும் எனது மனமார்ந்த நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

அதே போல், தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையில், உலக அளவில் வளர்ந்து வரும் சென்னை மாநகரில் அதிகரித்து வரும் மக்கள் தொகையை கருத்திற் கொண்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின், அனைத்து நீர் பகிர்மான நிலையங்களையும் இணைத்து, சென்னை மாநகரில் சமச்சீரான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்திடும் வகையில், "முதன்மை சுற்று சூழல் திட்டம்" 3 ஆயிரத்து 109 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது மிகவும் பாராட்டிற்குரியது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக தளபதி அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ்நாடு அரசு மூலம் கடந்த 5 ஆண்டுகளில் 1 லட்சத்து 55 ஆயிரத்து 131 நபர்களுக்கு அரசு வேலை வழங்கி சாதனை படைத்துள்ளது. அதே போல், கடந்த 5 ஆண்டுகளில் 23 லட்சத்து 56 ஆயிரத்து 623 பேருக்கு வீட்டுமனை பட்டா வழங்கி சாதனை படைத்துள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன்.

சென்னை மாநகரின் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் சார்பில், தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைந்துள்ள பகுதியான ராஜீவ் காந்தி சாலை, சர்தார் பட்டேல் சாலை ஆகியவைகளை இணைக்கும் வகையில், மத்திய கைலாஷ் பகுதியில் ரூபாய் 60 கோடியே 68 இலட்சம் செலவில் "எல்" வடிவ மேம்பாலம், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கொருக்குப்பேட்டை - மணலி சாலையில் இரயில்வே சந்திக்கடவில் 96 கோடி செலவில் மேம்பாலம் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும். இப்பணிகளை விரைந்து முடிக்க உரிய உத்தரவுகளை பிறப்பித்த, மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் திரு.கே.என். நேரு அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு பொதுப்பணி,

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் **திரு. எ.வ. வேலு** அவர்களுக்கும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு அவர்களுக்கும், மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் உள்ளிட்ட அதிகாரி பெருமக்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, நேற்றைக்கு முன்தினம் இம்மாமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட *2026-2027* நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு மேயர் அவர்கள் சென்னை மாநகரின் வளர்ச்சிக்காக பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள்.

அறிவிப்பு *9*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சென்னை பள்ளிகளில் *130* நடுநிலைப் பள்ளிகள், *46* உயர்நிலை பள்ளி மற்றும் *35* மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ-மாணவியர்கள் தமிழ், ஆங்கிலத்தில் இலக்கணப் பிழை இல்லாமல் எழுதுவதற்கும் மாணவர்களிடையே உரையாடலை எளிமையாக்குவதற்கும், அதிக அளவில் தமிழ், ஆங்கிலச் சொற்களை கற்றுக்கொள்ளவதற்கும், மேலும், அவர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தும் நோக்கிலும், *8*ஆம் வகுப்பில் பயிலும் *8,892* மாணவ-மாணவியர்கள், *9*-ஆம் வகுப்பில் பயிலும் *7,934* மாணவ-மாணவியர்கள் மற்றும் *10*-ஆம் வகுப்பில் பயிலும் *7,292* மாணவ-மாணவியர்கள் என மொத்தம் *24,118* மாணவ-மாணவியர்களுக்கு தமிழ்–ஆங்கில அகராதி *(Dictionary)* ரூ.*37* இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து மாணவ-மாணவியர்களுக்கு வழங்கப்படும் என்கிற அறிவிப்பு பாராட்டிற்குரியது.

அறிவிப்பு *13*: பெருநகர சென்னை மாநகராட்சியில் *417* சென்னை பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில் *1,13,398* மாணவ-மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள சென்னை

பள்ளிகளுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்தி கொடுத்திடும் பொருட்டு, மணலி, மாதவரம், சோழிங்கநல்லூர் பகுதியில் உள்ள சென்னை பள்ளிகளுக்கு ஏற்கனவே 4 பேருந்துகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இத்திட்டம் பெற்றோர் மற்றும் மாணவ-மாணவியர்களிடையே அமோக வரவேற்பு பெற்றுள்ளதால், இத்திட்டத்தை மேலும் விரிவுப்படுத்தி மாணவர்களைப் பள்ளிக்கு அழைத்து வரவும், கல்விச் சுற்றுலா அழைத்து செல்லவும் கூடுதலாக 11 பேருந்துகள் இயந்திர பொறியியல் துறையின் மூலம் கொள்முதல் செய்வதற்கு ரூ. 4 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பு மிகவும் பாராட்டிற்குரியது.

அறிவிப்பு 25: பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு மக்களின் நலனை பாதுகாக்க நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பூச்சிகள் மற்றும் கொசுத் தொல்லையை கட்டுப்படுத்த சென்னையில் உள்ள நீர்வழிப்பாதைகள் (கூவம் ஆறு, அடையாறு ஆறு, பக்கிம்காம் கால்வாய் மற்றும் சிறிய கால்வாய்கள்) மற்றும் மழைநீர் வடிகால் கால்வாய்கள் என கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அவ்விடங்களில் தரமான பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் மேம்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி கொசுப்புழு அடர்த்தியை நிகழ்நேர கண்காணிப்பை (Real time Monitoring) மூன்று ஆண்டுகள் மேற்கொண்டு பூச்சிகள் மற்றும் கொசுத்தொல்லைகளைக் கட்டுப்படுத்த ஆண்டொன்றிற்கு சுமார் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு மிகவும் பாராட்டிற்குரியது.

அறிவிப்பு 28: பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் 24 மணிநேரம் செயல்பட்டுவரும் சமுதாய மகப்பேறு மருத்துவமனைகள், பேறுகால பின் கவனிப்பு மையம் மற்றும் அறுவை சிகிச்சை பின் கவனிப்பு மையங்களான திருவொற்றியூர், இராயபுரம், பாடி, ஷெனாய் நகர் மற்றும் அடையாறு ஆகிய 5 இடங்களில் உள்ள மையங்களுக்கு வார்டுக்கு 2 வீதம் 10 எண்ணிக்கையிலான மையப்படுத்தப்பட்ட குளிர்சாதன (Centralized AC) வசதி ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு மிகவும் பாராட்டிற்குரியது.

அறிவிப்பு *35*: பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து நிரந்தர, தற்காலிக மற்றும் வெளிமுகமை தூய்மைப் பணியாளர்களுக்கும் கோடைக் காலங்களில் ஏற்படும் வெயில் தாக்கத்தை போக்கவும் நீர்ச்சத்தை பராமரிக்கவும் உடல் வெப்பத்தை தணிக்கவும் கோடை காலம் முழுவதும் தூய்மைப் பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்கிற அறிவிப்பு மிகவும் பாராட்டிற்குரியது.

அறிவிப்பு *49*: பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அம்பத்தூர் ஏரி *(மண்டலம்- 7)*, மஞ்சம்பாக்கம் ஏரி *(மண்டலம்-2)*, மற்றும் மண்டலம்-*15*ல் உள்ள புல்லக்கேணி குளம், வையாபுரி குளம், சாலிமார் கார்டன் குளம் என முக்கியமான மற்றும் பயன்பாட்டிற்கு அதிகம் தேவையான *30* நீர்நிலைகளை புனரமைத்து, அதன் கொள்ளளவை அதிகரிக்கவும், மழைநீர் சேமிக்கும் திறனை அதிகரிக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் ரூ.*100* கோடி மதிப்பீட்டில் நீர்நிலைகளை புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு மிகவும் பாராட்டிற்குரியது.

அறிவிப்பு *50*: மக்களின் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தடுப்புச்சுவர் இல்லாத *44* நீர்வழிக் கால்வாய் இடங்களில் புதிதாக வெள்ளப் பாதுகாப்பு தடுப்புச்சுவர் *(Flood Protecting Retaining Wall)* அமைத்து, அதன் மேல் சங்கிலி இணைப்பு வேலி *(Chain Link Fencing)* உள்ளிட்ட பணிகள் ரூ.*55* கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு மிகவும் பாராட்டிற்குரியது.

அறிவிப்பு *62*: சேத்துபட்டு, டாக்டர் குருசாமி பாலத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ளதால் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகிறார்கள். போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு, சேத்துப்பட்டு மெக்னிக்கல்ஸ் சாலை பகுதியிலிருந்து ஈ.வெ.ரா. பெரியார் சாலையை எளிதில் சென்றடையும் வகையில் இரயில்வே இருப்புப்பாதையின் குறுக்கே ரூ.*25* கோடி மதிப்பீட்டில் இலகுரக வாகனங்கள் செல்லும் வகையில் ஒரு வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை *(3.60* மீட்டர்*)* அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு மிகவும் பாராட்டிற்குரியது.

அறிவிப்பு *69*: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் *6* இடங்களில் வீடற்றோர்கள் தங்குவதற்கான அனைத்து வசதிகளுடன் கூடிய

புதிய இரவு காப்பகம் (தரைதளம் மற்றும் முதல் தளம்) மொத்தம் ரூ.9 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என்கிற அறிவிப்பு மிகவும் பாராட்டிற்குரியது.

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுக்குழு தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே, மாண்புமிகு தளபதி அவர்கள் பொறுப்பேற்றது முதல் கடந்த 5 ஆண்டுகளிலும், நமது நிர்வாகம் இம்மாநகராட்சியில் பொறுப்பேற்று, கடந்த 4 ஆண்டுகளிலும் எண்ணற்ற பணிகள் சென்னை மாநகரம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு வார்டிலும், ஏறக்குறைய 80 முதல் 90 சதவிகித பணிகள் மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கும் பணிகள், சாலை பணிகள், திருமண மண்டபங்கள், சமுதாய கூடங்கள், அங்கன்வாடி மையங்கள், பல்நோக்கு கட்டிடங்கள், பள்ளி கட்டிடங்கள், மகளிர் உடற்பயிற்சி கூடங்கள், பூங்காக்கள், நடைபாதைகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் நடைபெற்றுள்ளது என்பதை அறிவோம். மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்களது வார்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளை துண்டு பிரசுரங்களாக அச்சிட்டு பொதுமக்களுக்கு வழங்கிடுமாறு அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

நம்முடைய பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட 22 சட்டமன்ற தொகுதிகளிலும் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள், ஒவ்வொரு வார்டிலும் குறைந்தபட்சம் 10 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெறுகின்ற அளவிற்கு நம்முடைய செயல்பாடுகள் இருக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன். **(கைதட்டல்)**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், தமிழ்நாட்டை, தலைசிறந்த தமிழ்நாடாக, மிக சிறந்த தமிழ்நாடாக, உன்னதமான தமிழ்நாடாக, உயர்வான தமிழ்நாடாக, இந்தியாவின் முதன்மை தமிழ்நாடாக உலகம் திரும்பி பார்க்கும் தமிழ்நாடாக உயர்த்தி வருகிறார்கள். மேலும் உயர்த்துவார்கள் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை.

தமிழ்நாட்டு மக்கள் வேண்டும் ஸ்டாலின், மீண்டும் ஸ்டாலின் என்பதை முடிவு செய்து விட்டார்கள். வெல்வோம் *200*, படைப்போம் வரலாறு என தெரிவித்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் நல்லதொரு வரவு செலவு திட்ட நிதிநிலை அறிக்கையை பொதுமக்களுக்கு அளித்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும், இந்த வரவு செலவு திட்ட நிதிநிலை அறிக்கையை அருமையாக தயாரித்து வழங்கிய அன்புக்குரிய சகோதரி திருமதி. சர்ப ஜெயாதாஸ் அவர்களுக்கும் என்னுடைய அன்பு கலந்த நன்றியையும், வணக்கத்தையும் மாமன்றத்தின் சார்பாக தெரிவித்து கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

நன்றி. மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாண்புமிகு மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, இணை ஆணையர் அவர்களே, துணை ஆணையர் அவர்களே, வட்டார துணை ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே, ஊடகத்துறை மற்றும் பத்திரிகை துறையினை சார்ந்த நண்பர்களே, மாநகராட்சி மற்றும் அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் வணக்கம்.

பிப்ரவரி மாதம் *13*ஆம் நாள், *2026*ஆம் ஆண்டு காலை நேரத்திலேயே, தாய்மார்களுக்கு இன்ப அதிர்ச்சி அளிக்கும் வகையில், பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று தவணைகளும், கோடைக்கால சிறப்பு நிதியும் சேர்த்து, ரூ. *5000/-* மகளிர் உரிமை தொகையை பெறும் அனைத்து பயனாளிகளின் வங்கி கணக்குகளில் வரவு வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு, இம்மாமன்றத்தின் வாயிலாகவும், அனைவரின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியையும், பணிவான வணக்கத்தையும் தெரிவித்து கொள்கிறோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கிணங்கவும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்களின் வழிகாட்டுதலின்படியும், பெருநகர சென்னை மாநகராட்சியின் *2026-2027*ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், இதுவரை இல்லாத அளவில் மாநகர மக்களுக்கு பயனளிக்கும் வகையில் முத்தான தொண்ணூறு அறிவிப்புகளை மாண்புமிகு மேயர் அவர்கள் வெளியிட்டுள்ளார். அதற்காக மாண்புமிகு மேயர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் உரித்தாக்கி கொள்கிறேன்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் வரலாற்றில் தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த முதல் பெண் மேயர் என்கிற பெருமையை மாண்புமிகு மேயர் அவர்கள் பெற்றுள்ளார். அவருக்கு என்னுடைய வாழ்த்துக்களை உரித்தாக்கி கொள்கிறேன்.

அதே போன்று, இந்த ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக மாண்புமிகு மேயர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றி கொண்டிருக்கின்ற வரிவிதிப்பு மற்றும் நிதிநிலைக்குழு தலைவர் திருமதி சர்பஜெயாதாஸ் அவர்களுக்கு என்னுடைய வணக்கங்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்து கொள்கிறேன். அவர்கள் அறிவித்த தொண்ணூறு அறிவிப்புகள் அனைத்தும் முத்தான அறிவிப்புகளாக இருந்தாலும், அவற்றில் சில அறிவிப்புகளை மட்டும் இங்கு எடுத்துரைப்பது எனது கடமையாகும்.

அறிவிப்பு *13*: பெருநகர சென்னை மாநகராட்சியில் *417* சென்னை பள்ளிகள் இயங்கி வருகின்றன. அதில் *1,13,398* மாணவ-மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள சென்னை பள்ளிகளுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்தி கொடுத்திடும் பொருட்டு, மணலி, மாதவரம், சோழிங்கநல்லூர் பகுதியில் உள்ள சென்னை பள்ளிகளுக்கு ஏற்கனவே *4* பேருந்துகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இத்திட்டம் பெற்றோர் மற்றும் மாணவ-மாணவியர்களிடையே அமோக வரவேற்பு பெற்றுள்ளதால், இத்திட்டத்தை மேலும் விரிவுப்படுத்தி மாணவர்களைப் பள்ளிக்கு அழைத்து வரவும், கல்விச் சுற்றுலா அழைத்து செல்லவும் கூடுதலாக

11 பேருந்துகள் இயந்திர பொறியியல் துறையின் மூலம் கொள்முதல் செய்வதற்கு ரூ. 4.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு 16: பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 140 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் (UPHC), 19 மாநகர சமுதாய நல மையங்கள் (UCHC), 200 மாநகர நல வாழ்வு மையங்கள் (HWC) மற்றும் 1 தொற்று நோய் மருத்துவமனை (CDH) ஆகியவை செயல்பட்டு வருகின்றன. களப்பணியின்போது மருத்துவப் பதிவேடுகளை உடனுக்குடன் சேகரிப்பதற்கும், அதனை தலைமையிடத்திற்கு அனுப்புவதற்கும் கணினிமயமாக்கம் (Computerisation) செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக செவிலியர்கள், மருத்துவப் பரிசோதனை செய்யும்போது பெறப்படும் தகவல்களான இரத்த அழுத்தம், நாடி துடிப்பு விகிதம், உயரம் மற்றும் எடை போன்ற தரவுகளின் குறிப்புகளை பகிரச் செய்ய தனியாக Tablet கீழ்கண்டுள்ள மையங்களுக்கு தேவைப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 360 மருத்துவமனைகளில் உள்ள 520 செவிலியர்கள் மற்றும் 200 காச நோய் களப்பணியாளர்கள் பயன்பாட்டிற்கு இணையதள வசதியுடன் கூடிய 720 Tablet ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு 17: பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள மக்களைத்தேடி மருத்துவத் திட்டம், பெண் தன்னார்வ களப்பணியாளர்களைக் கொண்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பெண் தன்னார்வலர்கள், பிசியோதெரபிஸ்ட் மற்றும் செவிலியர்கள் என 600 களப்பணியாளர்கள் களப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் களப்பணிக்கு தேவையான இரத்த அழுத்தமானி, இரத்த சர்க்கரை அளவிடும் கருவி, ஊசிகள், சுத்தமான பஞ்சுப் பெட்டி, பயன்படுத்தப்பட்ட பஞ்சுப் பெட்டி, அளவிடும் நாடா, கையுறைகள், டார்ச் லைட், மின்னணு எடை இயந்திரம், கோப்புகள் மற்றும் கோப்புறைகள் எடுத்து செல்ல ஒரே மாதிரியான மருத்துவம் சார்ந்த உடைமைகள் வைக்கும் பை (Medical Kit Bag) அளிப்பது அவசியமாகிறது. இதன் மூலம் இந்த களப் பணியாளர்கள் களப்பணிக்கு தேவையான அனைத்துப் பொருட்களையும் ஒரே பையில் எடுத்துச் சென்று

சிறப்பாக செயலாற்ற இயலும் என்பதால் 600 களப்பணியாளர்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் மருந்து உபகரணங்கள் வைக்கும் பை கொள்முதல் செய்து வழங்கப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு 25: பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு மக்களின் நலனை பாதுகாக்க நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பூச்சிகள் மற்றும் கொசுத் தொல்லையை கட்டுப்படுத்த சென்னையில் உள்ள நீர்வழிப்பாதைகள் (கூவம் ஆறு, அடையாறு ஆறு, பக்கிம்காம் கால்வாய் மற்றும் சிறிய கால்வாய்கள்) மற்றும் மழைநீர் வடிகால் கால்வாய்கள் என கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அவ்விடங்களில் தரமான பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் மேம்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி கொசுப்புழு அடர்த்தியை நிகழ்நேர கண்காணிப்பை (Real time Monitoring) மூன்று ஆண்டுகள் மேற்கொண்டு பூச்சிகள் மற்றும் கொசுத்தொல்லைகளைக் கட்டுப்படுத்த ஆண்டொன்றிற்கு சுமார் ரூ.25 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு 28: பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் 24 மணி நேரம் செயல்பட்டுவரும் சமுதாய மகப்பேறு மருத்துவமனைகள், பேறுகால பின் கவனிப்பு மையம் மற்றும் அறுவை சிகிச்சை பின் கவனிப்பு மையங்களான திருவொற்றியூர், இராயபுரம், பாடி, செனாய்நகர் மற்றும் அடையாறு ஆகிய 5 இடங்களில் உள்ள மையங்களுக்கு வார்டுக்கு 2 வீதம் 10 எண்ணிக்கையிலான மையப்படுத்தப்பட்ட குளிர்சாதன (Centralized AC) வசதி ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு 30 : பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக வரும் மருத்துவ பயனாளிகளுக்கு, கதிரியக்க சாதனம் வழியாக நோய்களை கண்டறிவதும் அவசரக் காலங்களில் உடனடியாக எடுக்க வேண்டிய ஸ்கேன், ஊடுகதிர், Mamogram போன்ற சேவைகள் அளிப்பதற்கும், மேலும், மருத்துவச் சேவைகளை சிறப்பான முறையில் வழங்குவதற்கும், முதலாவதாக, மூன்று 24 மணி நேர அவசர மகப்பேறு மையங்கள் மற்றும் 16 நகர்ப்புற சமுதாய சுகாதார மையங்கள் என மொத்தம் 19 மையங்களுக்கு 19 எண்ணிக்கையிலான கதிரியக்க நிபுணர்கள்

(RADIOLOGIST) தொகுப்பூதிய அடிப்படையில் பணியமர்த்தப்படுவார்கள் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு *35*: பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து நிரந்தர, தற்காலிக மற்றும் வெளிமுகமை தூய்மைப் பணியாளர்களுக்கும் கோடைக் காலங்களில் ஏற்படும் வெயில் தாக்கத்தை போக்கவும் நீர்ச்சத்தை பராமரிக்கவும் உடல் வெப்பத்தை தணிக்கவும் கோடை காலம் முழுவதும் தூய்மைப் பணியாளர்களுக்கு குளிர்ச்சியான மோர் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்கிற அறிவிப்பினை மனதார வரவேற்கிறேன்.

அறிவிப்பு *42ல்* : *2026-27* ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட *955* பூங்காக்களில் முதற்கட்டமாக *200* பூங்காக்கள் அறிவியல் பூர்வமாக பொலிவேற்றம் செய்யப்படும். அதற்காக, உரிய தாவர அமைப்புகள், பொலிவான வருகையாளர் ஓய்விடங்கள் மற்றும் இருக்கைகள், மரங்களில் பறவைகள் வாழ்விட அமைப்புகள், இயற்கை சூழலை மக்கள் பூங்காக்களில் உணரும் வண்ணம் மரங்களில் செயற்கையான பறவைகளின் ஒலிகள் வழங்கும் அமைப்புகள் அமைத்தல், சிறார்களைக் கவரும் வண்ணம் சிறுகுளங்கள் மற்றும் நீர்ப்பறவைகள் போன்ற அமைப்புகள், தற்காலத்திற்கேற்றவாறு நடைபாதைகள் மற்றும் ஒளிவிளக்குகள் போன்ற அமைப்புகளை ஏற்படுத்த ரூ.*60* கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு *45* : *2026–27*ஆம் நிதியாண்டில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில் மக்கள் அதிகம் கூடும் பூங்காக்களான

1. மண்டலம்-*2*,கோட்டம்-*15*, மணலி நியு டவுன், *Block No.26*, *CPS-10* பூங்கா.
2. மண்டலம்-*5*, கோட்டம்-*53*, தங்கசாலை பூங்கா.
3. மண்டலம்-*7*, கோட்டம்-*83*, மதனகுப்பம் பூங்கா.
4. மண்டலம்-*8*, கோட்டம்-*103*, டாக்டர். விஸ்வேஸ்வரய்யா டவர் பூங்கா.
5. மண்டலம்-*13*, கோட்டம்-*123*, ராஜிவ் காந்தி சாலை பூங்கா

ஆகிய *5* பூங்காக்களில், சிறப்பு குழந்தைகளுக்கான உபகரணங்கள் உள்ளடக்கிய *(Inclusive Parks for Special Children)* சிறப்பு அம்சங்கள்

கொண்ட பூங்காக்களாக ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு 51: பேருந்து பணிமனைகளின் சேவைத் தரத்தை மேம்படுத்தவும், வணிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் பொருளாதார ஆற்றலை வெளிக்கொணரவும், பொதுப்போக்குவரத்து உள்கட்டமைப்பை நவீன மயமாக்கவும், பொது நிதி மீதான சுமையைக் குறைக்கவும், பொதுமக்களின் அதிக பயன்பாட்டில் உள்ள ஜார்ஜ்டவுன் (மண்டலம்-4), கத்திவாக்கம் (மண்டலம்-1), துரைப்பாக்கம், பள்ளிக்கரணை (மண்டலம்-15), இராமாபுரம், ஸ்ரீ ராம் நகர் (மண்டலம்-11), நங்கநல்லூர் (மண்டலம்-12), என்.ஜி.ஓ காலனி ஆதம்பாக்கம் (மண்டலம்-13) மற்றும் மடிப்பாக்கம் (மண்டலம்-14) ஆகிய முக்கிய இடங்களில் உள்ள பேருந்து பணிமனைகள் பொது-தனியார் கூட்டாண்மை (PPP) / வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் (EPC) முறையில் ரூ.110 கோடி மதிப்பீட்டில் மறுவடிவமைப்பு செய்யப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

அறிவிப்பு 53: சென்னை உயர் நீதிமன்றம் முதல் செயின்ட் ஆண்ட்ரூஸ் தேவாலயம் வரையிலான 3.3 கிலோ மீட்டர் நீளமுள்ள நகரத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க முக்கிய பாதையினை, அதன் தொன்மை மாறாமல் சூழலுக்கு ஏற்ற பாதையாக வடிவமைத்தல் மற்றும் அனைவரையும் கவரும் வகையில் வண்ண மயமான அலங்கார விளக்குகள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

நான் கடந்த ஆண்டு ஆம்ஸ்டர்டாம் எனும் ஊருக்கு சென்றிருந்த போது, கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நாட்களில் அந்தப் பகுதி விளக்கொளியில் மியூசிக்கலின் தொன்மை மாறாமல், வண்ணமயமான அலங்கார விளக்குகளால் ஒளிர்ந்திருந்ததை கண்டேன். அதனை முன்னுதாரணமாக கொண்டு, பாண்டி பஜார், அண்ணாநகர் போன்ற முக்கிய இடங்களில் பண்டிகை காலங்களில் அழகுபடுத்தப்பட வேண்டும் என கேட்டிருந்தேன். இதற்காக 53வது அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதற்காக எனது நெஞ்சார்ந்த நன்றியையும், வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் உரித்தாக்கி கொள்கிறேன்.

இதே போன்று எல்லா வகையிலும் முத்தான திட்டங்களாக தொண்ணூறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளீர்கள். இவற்றை வருங்காலத்தில் செயல்படுத்த வேண்டும் என உறுதியேற்றியுள்ள மாண்புமிகு மேயர் அவர்களுக்கும்,

அனைத்து துறை சார்ந்த அலுவலர்களுக்கும், அதற்கு உறுதுணையாக நிற்கும் அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கி கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு கழக தலைவர் தளபதி அவர்களை இரண்டாவது முறையாக அரியணையில் ஏற்றுவதற்கு அயராது பாடுபடுவோம் என உறுதியேற்று, திராவிட மாடல் 2.0 ஆட்சியில் மீண்டும் சந்திப்போம் என கூறி, அனைவருக்கும் எனது வணக்கத்தையும் வாழ்த்துகளையும் தெரிவித்து கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

நன்றி, இன்றைய வரவு செலவு திட்ட விவாத கூட்டத்தில் 36 மாமன்ற உறுப்பினர்கள் சற்றேறக்குறைய 6 மணி நேரம் தங்கள் மேலான கருத்துக்களை தெரிவித்துள்ளார்கள். அவர்களின் ஆலோசனைகள், கோரிக்கைகள் மற்றும் கருத்துக்களை உரிய முறையில் பரிசீலனை செய்து, நிர்வாக ரீதியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆலோசனைகள் மற்றும் அறிவுறுத்தல்களின்படி இந்த வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டது. மேலும், இந்த வரவு செலவு திட்டம் தயாரிக்க இரவு பகல் பாராது உழைத்த மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் அவர்களுக்கும், இணை ஆணையர் (சுகாதாரம்), இணை ஆணையர் (கல்வி), துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) துணை ஆணையர் (பணிகள்), தலைமை பொறியாளர்கள், நிதி ஆலோசகர், தலைமை கணக்கு அலுவலர் (வரவு மற்றும் செலவு), மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அதிகாரிகள் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் மாமன்றத்தின் சார்பாக எனது மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து கொள்கிறேன்.

இந்த வரவு செலவு திட்டம் மற்றும் நிதிநிலை அறிக்கைகளை நிறைவேற்ற தக்க முன்மொழிவுகளை இந்த அவையின் முன் வைக்க

தலைவர், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) அவர்களை கேட்டு கொள்கிறேன்.

தலைவர், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)

2025 - 2026 ஆம் நிதி ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டிற்கும் *2026 - 2027* ஆம் நிதி ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்திற்கும் மற்றும் தொடக்க கல்வி நிதி *2025 - 2026* ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டிற்கும், தொடக்க கல்வி நிதி *2026 - 2027* ஆம் நிதி ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டி முன் மொழிகிறேன் **(கைதட்டல்)**

மாண்புமிகு மேயர்

தலைவர், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) அவர்கள் முன்மொழிந்த *2025 - 2026* ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டிற்கும், *2026- 2027* ஆம் நிதி ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்திற்கும் ஒப்புதல் அளித்து, மன்ற தீர்மான எண் *119 / 2026* ஆகவும், தொடக்க கல்வி நிதி *2025-2026*-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டிற்கும், *2026 – 2027* ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்திற்கும் ஒப்புதல் அளித்து மன்றத்தின் தீர்மான எண். *120 / 2026* ஆகவும் பதிவு செய்ய

தீர்மானத்தை ஏற்போர்ஆம் என்க; எதிர்ப்போர் இல்லை என்க;

ஏற்போரே அதிகம்

“இதற்கு மன்றம் ஒப்புதல் அளித்து தீர்மானங்கள் நிறைவேறியது”

***

தற்பொழுது மன்றத்தில் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட வேண்டிய பொருள்கள் எடுத்து கொள்ளப்படும்.

நநி.நி.பி.ந.க.எண்.பி1/2635/2025

தீர்மான எண்:119/2026 **பொருள் எண்.01**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிதி நிர்வாக பிரிவு - வரவு செலவு திட்டம் 2026-2027க்கும், 2025-2026-ஆம் ஆண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதி.

வரலாற்று சிறப்பு மிக்க பெருநகர சென்னை மாநகராட்சி, வளர்ந்து வரும் மாநகரத்தில் வசிக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளை முன்னிறுத்தி பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. மக்களின் தேவைகளை தொடர்ந்து செயல்படுத்தும் வண்ணம் *2026-2027*-ஆம் நிதியாண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, செயல் திட்டங்கள் மற்றும் அவைகளுக்கான நிதி ஆதாரங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

நிதிநிலை

2026-2027-ஆம் நிதியாண்டின் வருவாய் கணக்கு தலைப்பில், வருவாய் வரவு ரூ.*6040.97* கோடியாகவும், வருவாய் செலவினம் ரூ.*6146.29* கோடியாகவும் இருக்கும். மூலதன வரவு ரூ.*2517.34* கோடியாகவும், மூலதனச் செலவு ரூ.*2754.05* கோடியாக இருக்கும்.

வருவாய் கணக்கு

2025-2026-ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி ரூ.*5145.52* கோடியாக இருந்த வருவாய் கணக்கின் வரவுகள், இதே ஆண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டின்படி ரூ.*5511.77* கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், *2026-2027*-ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு ரூ.*6040.97* கோடியாக இருக்கும்.

2025-2026-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.*5214.09* கோடியாக நிர்ணயிக்கப்பட்ட வருவாய் இனங்களின் செலவு, திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*6268.48* கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் வருவாய் இனங்களின் செலவு ரூ.*6146.29* கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

வருவாய் வரவினங்கள்

- **சொத்துவரி:** பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாய் இனங்களில் முதன்மையான பங்கு வகிப்பது சொத்துவரியாகும். *2025-2026*-ஆம் நிதியாண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*2300.00* கோடியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

2026-2027-ஆம் நிதியாண்டில் இந்த வருவாய் ரூ.2450.00 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **தொழில்வரி**: 2025-2026-ஆம் நிதியாண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.600.00 கோடியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 2026-2027-ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்டத்திலும் தொழில்வரியின் வருவாய் ரூ.600.00 கோடியாகவே இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

அரசு ஒதுக்கீடு செய்யும் வருவாய்

- **முத்திரைத்தாள் மீதான கூடுதல் வரி**: பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் முத்திரைத்தாள் மீதான கூடுதல் வரி வருவாய் 2025-2026-ஆம் நிதியாண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.400.00 கோடியாக நிர்ணயிக்கப்பட்டு, 2026-2027 ஆம் நிதியாண்டில் இவ்வினத்தின் மீதான வருவாய் ரூ.450.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

- **மாநில நிதிக் குழு மானியம்**: 2025-2026-ஆம் நிதியாண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டின்படி மாநில நிதிக்குழு மானியம் அரசின் வரித்தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் வருவாய் ரூ.1200.00 கோடி என நிர்ணயிக்கப்பட்டு, 2026-2027-ஆம் நிதியாண்டில் இவ்வினத்தின் மீதான மான்ய வருவாய் ரூ.1350.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதர வருவாய்

2025-2026-ஆம் நிதியாண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டின்படி, தொழில் உரிமக் கட்டணம், கட்டட உரிமக் கட்டணம், மத்திய மற்றும் மாநில அரசிடமிருந்து பெறப்படும் மானியங்கள், அங்காடி உரிமக் கட்டணம், வாகன நிறுத்தக் கட்டணம், நிறும வரி, கேளிக்கை வரி மற்றும் ஏனைய வருவாய் இனங்களின் மூலமாக ரூ.1011.77 கோடி வருவாய் இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், இந்த வருவாய் 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.1190.97 கோடி அளவிற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

வருவாய் செலவினங்கள்

- **பணியாளர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம்**: மாதாந்திர சம்பளம், ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியப் பயன்கள், பிற ஓய்வூதியப் பயன்கள், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு மாநகராட்சியின் பங்களிப்புத் தொகை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியால் நேரடியாக நியமிக்கும் தற்காலிகப் பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும் பிற

செலவினங்கள் *2025-2026*-ஆம் நிதியாண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டின்படி ரூ.*2258.22* கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இச்செலவினங்கள் *2026-2027*-ஆம் நிதியாண்டில் ரூ.*2437.40* கோடியாக இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

- **நிர்வாகச் செலவு:** இச்செலவினத்திற்கென *2025-2026*-ஆம் நிதியாண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*329.73* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.*328.21* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி செலவினங்கள்:** பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு, இயக்கச் செலவுகள், துப்புரவு பணிகளுக்கான செலவினம், திட்டச் செலவுகள், எரி பொருள் கொள்முதல் மற்றும் வாகனங்களுக்கு தேவையான உதிரி பாகங்கள் கொள்முதல், வாகனங்களுக்கான காப்பீடு போன்ற பல்வேறு செலவினங்களுக்காக *2025-2026*-ஆம் நிதியாண்டு திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*2504.07* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.*2232.70* கோடி அளவிற்கு செலவினம் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

- **கடனுக்கான வட்டி செலுத்துதல்:** மூலதனப்பணிகளை மேற்கொள்ளுவதற்காக பெறப்பட்ட கடன்களுக்கு செலுத்த வேண்டிய வட்டிக்காக *2025-2026*-ஆம் நிதியாண்டு திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*74.11* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் இச்செலவினத்திற்கென ரூ.*95.20* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மூலதன வரவுகள்

2025-2026-ஆம் நிதியாண்டு நிதி நிலை அறிக்கையின்படி மூலதன வரவு திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*3364.75* கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் வரவு ரூ.*2517.34* கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

மூலதனச் செலவு

பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு துறைகள் மேற்கொண்டு வரும் மூலதனப் பணிகளுக்காக *2025-2026*-ஆம் நிதியாண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*3915.34* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் இத்தலைப்பின் கீழ் செலவினம் ரூ.*2754.05* கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

துறைவாரியாக *2026-2027* ஆம் நிதியாண்டில்

செயல்படுத்தப்படவுள்ள மூலதனத் திட்டங்கள்

- **பேருந்துசாலைகள்** : தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு நிதி *(TURIF)*, சிங்கார சென்னை *2.0* திட்டம், நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் *(NSMT)*, ஆகிய தமிழ்நாடு அரசின் மான்யம் மூலமாக சாலைகளை புதியதாக அமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி மூலம் பேருந்து நிறுத்தங்களை தரம் உயர்த்துதல், நடைபாதைகளை மேம்படுத்துதல் மற்றும் பல்வேறு விதமான பணிகள் பேருந்து சாலை துறையின் மூலம் மேற்கொள்ள ஏதுவாக *2025-2026*-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*311.60* கோடியும், *2026-2027*-ஆம் நிதியாண்டிற்கு ரூ.*725.06* கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **மழைநீர் வடிகால்வாய்கள்** : கொசஸ்தலையார் பகுதி – ஆசிய வளர்ச்சி வங்கி நிதி *(ADB)*, கோவளம் பகுதி – ஜெர்மன் வங்கி நிதி *(KfW)*, மாநில பேரிடர் தடுப்பு நிதி, மற்றும் பல்வேறு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்காக மழைநீர் வடிகால் துறையின் கீழ் *2025-2026*-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*1290.05* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் ரூ.*693.05* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **திடக்கழிவு மேலாண்மை**: தூய்மை இந்தியா திட்டம் *2.0* மூலம் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தினை அகழ்ந்தெடுக்கும் பணி, துப்புரவு பணிக்கு தேவையான தளவாட பொருட்களை கொள்முதல் செய்தல், குப்பை கொட்டும் கிடங்குகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளுதல் மற்றும் இதர பணிகளுக்காக *2025-2026*-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*272.52* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் ரூ.*323.00* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **பாலங்கள்:** உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி மற்றும் மூலதன நிதி ஆகியவற்றின் மூலமாக புதிய பாலங்கள் கட்டுமான பணிகள் மற்றும் பாலங்கள் விரிவுபடுத்தும் பணிகளுக்காக *2025-2026*-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*160.00* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் ரூ.*130.03* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **கட்டடம் :** பெருநகர சென்னை மாநகராட்சியில், *NUHM* திட்டம், சிங்கார சென்னை – *2.0* திட்டம், வடசென்னை வளர்ச்சி திட்டம் மற்றும் மூலதன நிதி ஆகியவற்றினை கொண்டு நகர்புர சுகாதார மையங்கள், கழிப்பறைகள், வாகன இயக்கூர்தி நிலையங்கள் கட்டுதல், பழுதடைந்த பள்ளி கட்டடங்களுக்கு பதிலாக புதிய பள்ளிகூடங்களை கட்டுதல், பள்ளிகளுக்கு தேவையான கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், வணிக வளாகங்கள் கட்டுதல், சமூக நலக்கூடங்கள் கட்டுதல், மாட்டுத் தொழுவம் அமைத்தல், அம்மா உணவகங்கள் மேம்படுத்தும் பணி மற்றும் பிற பணிகளுக்காக *2025-2026*-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*475.00* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் ரூ.*400.00* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **தகவல் தொழில் நுட்பம்:** அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான கணிப்பொறி, அச்சு கருவிகள், டிஜிட்டல் சர்வர்கள் மற்றும் வலைதள அமைப்பு உபகரணங்கள் ஆகியவற்றினை கொள்முதல் செய்வதற்காக *2025-2026*-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*18.47* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் ரூ.*12.31* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **மின்சாரம் :** பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியினை கொண்டு புதிய தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைக்கும் பணி, மின்வடங்கள் புதியதாக மாற்றுதல், தகன மேடைகள் மற்றும் பள்ளிகளுக்கு தேவையான மின் ஆக்கிகள் *(Generator)* கொள்முதல் மற்றும் இதர பணிகளுக்காக *2025-2026*-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*81.74* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் ரூ.*41.34* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம்:** புதியதாக வீடியோ திரை அமைத்தல், மாநகரில் கூடுதலாக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல், வட்டார

அலுவலகங்களில் கட்டுப்பாட்டு மையங்களை உருவாக்குதல் போன்ற பணிகளுக்காக 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.5.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **இயந்திரப்பொறியியல்** : சென்னை பெருநகர துப்புரவு பணிக்கு தேவையான கனரக வாகனங்கள் கொள்முதல், அலுவலர்களுக்கான மகிழுந்துகள் (Car), கடற்கரையை தூய்மைப்படுத்தும் இயந்திரம், மரம் வெட்டும் உபகரணங்கள் போன்றவைகளுக்காக 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.69.33 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.25.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **கல்வி**: பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு தேவையான சாய்வு மேஜைகள், ஆய்வக உபகரணங்கள் வாங்குதல், பள்ளிகளுக்கு தேவையான கணிப்பொறி, மின்னணு பலகைகள் கொள்முதல் செய்தல் போன்றகளுக்காக 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.26.30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.11.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **சுகாதாரம்**: பெருநகர சென்னை மாநகராட்சி பரிசோதனை கூடங்களை நவீனப்படுத்துதல் மற்றும் கொசு ஒழிப்பு பணியை மேற்கொள்ள ஏதுவாக கையில் எடுத்து செல்லத்தக்க புகைபரப்பும் இயந்திரம் மற்றும் வாகனத்தில் பொருத்தக்கூடிய புகைபரப்பும் இயந்திரம் கொள்முதல் செய்ய 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.4.85 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.4.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **மருத்துவ சேவைகள் துறை** : நவீனப்படுத்தப்பட்ட மகப்பேறு மருத்துவமனைகளுக்கு கூடுதலாக தேவைப்படும் அறுவை சிகிச்சை அரங்க உபகரணங்கள் மற்றும் இதர உபகரணங்கள் கொள்முதல் செய்ய 2025-2026-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.1.51 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2026-2027-ஆம் நிதியாண்டில் ரூ.1.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **சிறப்பு திட்டங்கள்** : உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி, சிட்டீஸ் திட்டம், சிங்கார சென்னை 2.0 திட்டம், நீலக் கடற்கரை பணிகள், சென்னை மாநகர பங்களிப்பு (உலக

வங்கி நிதி) போன்ற பல்வகை நிதி ஆதாரங்களை கொண்டு மூலதனப் பணிகளை மேற்கொள்ள *2025-2026*-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*157.53* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் ரூ.*85.03* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்:** பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலங்களில் பூங்காக்கள், பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல், விளையாட்டுத்திடல்களை அமைத்தல், உடற்பயிற்சி கூடங்களை அமைத்தல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்தல் போன்ற பணிகளுக்காக *2025-2026*-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*54.36* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் ரூ.*28.24* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **மண்டலங்கள்:** தமிழ்நாடு நகர்ப்புற சாலை உள்கட்டமைப்பு நிதி *(TURIF)*, சிங்கார சென்னை *2.0* திட்டம், நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் *(NSMT)* போன்ற தமிழ்நாடு அரசு மான்யத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு விதமான பணிகள் மற்றும் இதர மூலதனப் பணிகளுக்காக மண்டலம் *1* முதல் *15* வரை அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள அனைத்து மண்டலங்களுக்கும் சேர்த்து ஒட்டு மொத்தமாக *2025-2026*-ஆம் நிதியாண்டில் திருத்த திட்ட மதிப்பீட்டில் ரூ.*984.36* கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. *2026-2027*-ஆம் நிதியாண்டில் ரூ.*267.11* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்டம்** : *2026-2027*ஆம் நிதியாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெற ஏதுவாக ரூ.*120.00* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **மாண்புமிகு மேயர் சிறப்பு மேம்பாட்டுத் திட்டம்** : *2026-2027*ஆம் நிதியாண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெற ஏதுவாக ரூ.*4.00* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2026-2027-ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்திற்கும், *2025-2026*-ஆம் ஆண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டிற்கும், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

”ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 17.02.2026 அன்று தீர்மான எண்.

77/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கின்றது".

******

நி.நி.பி.ந.க.எண்.பி1 / 2635-அ / 2025

தீர்மான எண்:120 / 2026 **பொருள் எண்.02**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிதி நிர்வாகப்பிரிவு - தொடக்கக் கல்வி நிதி - வரவு செலவு திட்டம் 2026-2027க்கும், 2025-2026-ஆம் ஆண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதி.

தமிழ்நாடு தொடக்கக் கல்வி சட்டம் *38*-ன்படி தொடக்கக் கல்வி நிதியின் *2026-2027*-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் மற்றும் *2025-2026*-ஆம் ஆண்டிற்கான திருத்த திட்ட மதிப்பீட்டிற்கான அனுமதி கோரப்படுகிறது. இதன் சுருக்கம் *(Abstract)* கீழே கொடி "க"-வில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்:*702*, கல்வித்துறை, நாள்: *23.05.1996*-ல் சென்னை மாநகராட்சியின் கல்வித்துறையில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாதவர்களை அரசு ஊழியர்களாக மாற்றம் செய்ய ஆணையிட்டது. அரசாணை எண்: *131*, கல்வித்துறை, நாள்:*01.02.1991*-ல் சென்னை மாநகராட்சி ஆணையர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்கள் மாநகராட்சிப் பள்ளிகளை நடத்தி மற்றும் பராமரித்திட ஆணையிட்டது. சென்னை மாநகர

தொடக்கப்பள்ளி, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் அரசே *01.04.1990* முதல் மாத சம்பளத்தை அரசாணை எண்:*347*, கல்வித்துறை, நாள்:*09.03.1990*-ன்படி வழங்கி வருகிறது. அதேபோல், *01.04.1990*-க்குப் பின் கல்வித்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள் அனைவருக்கும் *01.10.2002* முதல் மாத ஓய்வூதியத்தினை அரசு வழங்கி வருகிறது.

அரசு இப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாதவர்களுக்கு மாத சம்பளம் மற்றும் சில்லறை செலவினங்களை மட்டுமே வழங்கி வருகிறது. மழலைப் பள்ளி ஆசிரியர்களின் சம்பளம், மாநகராட்சி தொடக்கப்பள்ளிகளுக்கு ஆகும் செலவினங்கள், பள்ளி கட்டடங்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல், பள்ளிகளின் சுற்றுபுறப் பகுதிகளில் தேவைப்படும் அடிப்படை வசதிகளை உருவாக்கி பராமரித்தல், ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் நிர்வாக செலவுகள் இந்த தொடக்கக் கல்வி நிதியிலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்தொடக்கக் கல்வி நிதிக்கான முக்கிய ஆதாரம் சொத்து வரியோடு வசூலிக்கப்படும் தொடக்கக் கல்வி வரியேயாகும். மாநகராட்சி பள்ளிகளுக்கு கட்டடங்களை கட்டுதல், தளவாடங்கள் வாங்குதல், கணினிகள் வாங்குதல் போன்ற பல பணிகளை மாநகராட்சியே மேற்கொண்டு அதற்குரிய செலவுகளை இந்த நிதியிலிருந்து மேற்கொண்டு வருகிறது. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் பழுதுபார்க்கும் பணிகள் மற்றும் பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் கல்வி செலவினங்களுக்கும் தொடக்கக் கல்வி வரியினை கொண்டே மேற்கொள்ளப்படுகிறது. மேற்கூறியவற்றை கருத்திற்கொண்டு திருத்த திட்ட மதிப்பீடு *2025-2026* மற்றும் வரவு செலவு திட்டம் *2026-2027* தயாரிக்கப்பட்டுள்ளது.

திருத்த திட்ட மதிப்பீடு *2025-2026*

2025-2026-ஆம் ஆண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டின்படி தொடக்கக் கல்வி நிதிக்கு வரவு ரூ.*463.71* கோடி மற்றும் செலவு ரூ.*463.70* கோடி ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வரவு செலவு திட்டம் *2026-2027*

2026-2027-ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி தொடக்கக் கல்வி நிதிக்கு வரவு ரூ.*493.95* கோடி மற்றும் செலவு ரூ.*493.94* கோடி ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாணை (நிலை) எண்: 65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:02.03.1999-ல் அரசு தொடக்கக் கல்வி வரி மூலம் வசூலிக்கப்படும் தொகையை தொடக்கப் பள்ளிகள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் மேம்பாட்டிற்கு செலவழிக்க ஆணையிட்டுள்ளது. அதன்படி பல முக்கிய பணிகளை மாநகராட்சி இப்பள்ளிகளில் நிறைவேற்றி வருகிறது. மாநகராட்சி பள்ளிகளின் கல்வி தரம் உயர்த்தும் நோக்கோடு பல நற்பணிகளையும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் புதிய வகுப்பறைகளை மாணவர்களின் எண்ணிக்கைக்கு தகுந்தவாறு மாநகராட்சி கட்டுதல், ஏனைய மூலதனப் பணிகளும், கல்வி துறை சம்மந்தப்பட்ட பணிகளும் மேற்கொள்ள இந்த நிதியாண்டிலும் நிதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

2026-2027-ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்திற்கும், 2025-2026-ஆம் ஆண்டின் திருத்த திட்ட மதிப்பீட்டிற்கும் நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 09.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 17.02.2026 அன்று தீர்மான எண்.11/2026ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."
>
> "ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 17.02.2026 அன்று தீர்மான எண். 78/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

“இதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கின்றது”.

* * * * * *

TVKNGR/15/2026-ADMIN(ENGINEERING)-E1

தீர்மான எண்: 121/2026 **பொருள் எண்.01**

பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம்-6, கோட்டம்-74, பாஷ்யம் 1வது தெருவில் Pickle Ball Court அமைக்கும் பணிக்கு 2025–26ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17, கோட்டம்-74, பாஷ்யம் 1வது தெருவில் Pickle Ball Court அமைக்கும் பணிக்கு கீழ்கண்டவாறு அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்	கோட்டம் எண்.	பணி/சாலையின் பெயர்	பணியின்விவரம்	மதிப்பீடுதொகை (ரூ)
1.	74	பாஷ்யம் 1வது தெரு	Pickle Ball Court அமைக்கும் பணி.	ரூ. 1,52,00,000.00
மொத்தம்				**ரூ.1,52,00,000.00**

2	பரிந்துரை செய்தவரின் விவரம்	:	செயற்பொறியாளர்/மண்டலம்-6
3	எந்ததுறைக்காக செயலாக்கம்	:	மண்டலம்-6
4	சமந்தப்பட்ட துறையால் அனுமதி	:	ஆம்
5	தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த செயல்முறை ஆணை எண் மற்றும் நாள்	:	தலைமை பொறியாளர் (பொது) அவர்களின் T.S.No.22/2026, நாள்-08.01.2026
6	மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைபட்டியல் முன்வைத்து தயாரிக்கபட்டது	:	2025–26ஆம் ஆண்டின்அலுவலக விலைபட்டியலின்படி தயாரிக்கபட்டது
7	மதிப்பீட்டு தொகை	:	**ரூ. 1,52,00,000.00**

(அ)	பணி செலவீனம் மட்டும்	:	ரூ.1,22,74,382.18
(ஆ)	சரக்கு மற்றும் சேவை வரி18%	:	ரூ. 22,09,388.79
(இ)	தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 1%	:	ரூ. 1,22,743.82
(ஈ)	தரக்கட்டுப்பாட்டுசெலவு1%	:	ரூ. 1,22,743.82
(உ)	மற்ற எதிர்பாராசெலவு 2.5%	:	ரூ. 2,25,253.39
(ஊ)	ஆலோசனை கட்டணம்	:	ரூ. 2,45,488.00
(எ)	மதிப்பீட்டின்மொத்ததொகை	:	**ரூ.1,52,00,000.00**
8	மழைநீர்வடிகால் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலைப்பகுதியா அதன் அளவு குறிப்பிடவும்	:	இல்லை
9	ஒரு சதுரமீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு	:	பொருந்தாது
10	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	:	ஆம்
11	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி	:	வார்டுகுழு மண்டலம்-6ன் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.
12	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	:	புதியதாக அமைக்கப்பட உள்ளது
13	கள ஆய்வு செய்யப்பட்டுள்ளதா? அதன் ஆய்வு விவரம் குறிப்பிடுக	:	ஆம்
14	நிதியின்மூலதன்மை	:	மூலதன நிதி 20-21-07/412-400-100 – Play Ground
(அ)	வரவுசெலவுஒதுக்கீடு	:	ரூ.
(ஆ)	மதிப்பீடுகளுக்குஇதுவரைஒதுக்கபட்ட நிதி	:	ரூ.

(இ)	மீதமுள்ளநிதி	:	ரூ.
	இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு தேவைப்படும் நிதி	:	ரூ.1,52,00,000.00

எனவே,

1. மேற்கண்ட மண்டலம்-6, பகுதி-17, கோட்டம்-74, பாஷ்யம் 1வது தெருவில் Pickle Ball Court அமைக்கும் பணிக்காக மதிப்பீட்டு தொகை ரூ.1,52,00,000/க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட பணிக்கு 2025-26ஆம் ஆண்டின் கணக்குஎண்.20-21-07/412-400-100 – Play Ground என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,
3. மேற்கண்ட பணிக்கான நிதியினை நிதி நிர்வாக பிரிவின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

TVKNGR/9/2026-ADMIN(ENGINEERING)-E1

தீர்மான எண்: 122/2026 **பொருள் எண்.02**

பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம்-6, கோட்டம்-76, செல்லப்பா தெருவில் ஆரம்ப சுகாதார மையத்தில் கூடுதல் தளம் (முதல் தளம்) கட்டிடம் கட்டும் பணிக்கு 2025–26ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17, கோட்டம்-76, செல்லப்பா தெருவில் ஆரம்ப சுகாதார மையத்தில் கூடுதல் தளம் (முதல் தளம்) கட்டிடம் கட்டும் பணிக்கு கீழ்கண்டவாறு அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்	கோட்டம் எண்.	பணி/சாலையின் பெயர்	பணியின் விவரம்	மதிப்பீடுதொகை (ரூ)
1.	76	செல்லப்பா தெரு	ஆரம்ப சுகாதார மையத்தில் கூடுதல் தளம் (முதல் தளம்) கட்டிடம் கட்டும் பணி	ரூ. 1,73,00,000.00
மொத்தம்				**ரூ.1,73,00,000.00**

2	பரிந்துரை செய்தவரின் விவரம்	:	செயற்பொறியாளர்/மண்டலம்-6
3	எந்ததுறைக்காக செயலாக்கம்	:	மண்டலம்-6
4	சமந்தப்பட்ட துறையால் அனுமதி	:	ஆம்
5	தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த செயல்முறை ஆணை எண் மற்றும் நாள்	:	கண்காணிப்பு பொறியாளர் (மத்தியம்) அவர்களின் T.S.No.03 /2026, நாள்-08.01.2026
6	மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைபட்டியல் முன்வைத்து தயாரிக்கபட்டது	:	2025–26ஆம் ஆண்டின் அலுவலக விலைபட்டியலின்படி தயாரிக்கபட்டது
7	மதிப்பீட்டு தொகை	:	**ரூ. 1,73,00,000.00**

(அ)	பணி செலவீனம் மட்டும்	:	ரூ.1,38,50,572.77
(ஆ)	சரக்கு மற்றும் சேவை வரி18%	:	ரூ. 24,93,103.10
(இ)	தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 1%	:	ரூ. 1,38,505.73
(ஈ)	தரக்கட்டுப்பாட்டுசெலவு1%	:	ரூ. 1,38,505.73
(உ)	மற்ற எதிர்பாராசெலவு 2.5%	:	ரூ. 3,38,514.75
(ஊ)	ஆலோசனை கட்டணம்	:	ரூ. 3,40,797.92
(எ)	மதிப்பீட்டின்மொத்ததொகை	:	**ரூ.1,73,00,000.00**
8	மழைநீர் வடிகால் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலைப்பகுதியா அதன் அளவுகுறிப்பிடவும்	:	இல்லை
9	ஒரு சதுர மீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு	:	பொருந்தாது
10	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	:	ஆம்
11	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி	:	வார்டுகுழு மண்டலம்-6ன் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.
12	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	:	புதியதாக அமைக்கப்பட உள்ளது
13	கள ஆய்வு செய்யப்பட்டுள்ளதா? அதன் ஆய்வுவிவரம் குறிப்பிடுக	:	ஆம்
14	நிதியின்மூலதன்மை	:	மூலதன நிதி 20-21-07/412-400-301 – Health Department Building
(அ)	வரவுசெலவுஒதுக்கீடு	:	ரூ.
(ஆ)	மதிப்பீடுகளுக்குஇதுவரைஒதுக்கபட்ட நிதி	:	ரூ.

(இ)	மீதமுள்ளநிதி	:	ரூ.
	இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு தேவைப்படும் நிதி	:	ரூ.1,73,00,000.00

எனவே,

1. மேற்கண்ட மண்டலம்-6, பகுதி-17, கோட்டம்-76, செல்லப்பா தெருவில் ஆரம்ப சுகாதார மையத்தில் கூடுதல் தளம் (முதல் தளம்) கட்டிடம் கட்டும் பணிக்காக மதிப்பீட்டு தொகை ரூ.1,73,00,000/க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட பணிக்கு 2025-26ஆம்ஆண்டின்கணக்குஎண்.20-21-07/412-400-301–Health Department Building என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,
3. மேற்கண்ட பணிக்கான நிதியினை நிதி நிர்வாக பிரிவின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

TVKNGR/14/2026-ADMIN(ENGINEERING)-E1

தீர்மான எண்: 123/2026 **பொருள் எண்.03**

பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம்-6, கோட்டம்-78, வி வி கோயில் தெருவில் ஆரம்ப சுகாதார மையத்தில் கூடுதல் தளம் (முதல் தளம்) கட்டிடம் கட்டும் பணிக்கு 2025–26ஆம்

ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17, கோட்டம்-78, வி வி கோயில் தெருவில் ஆரம்ப சுகாதார மையத்தில் கூடுதல் தளம் (முதல் தளம்) கட்டிடம் கட்டும் பணிக்கு கீழ்கண்டவாறு அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்	கோட்டம் எண்.	பணி/சாலையின் பெயர்	பணியின்விவரம்	மதிப்பீடுதொகை (ரூ)
1.	78	வி வி கோயில் தெரு	ஆரம்ப சுகாதார மையத்தில் கூடுதல் தளம் (முதல் தளம்) கட்டிடம் கட்டும் பணி	ரூ. 1,72,00,000.00
மொத்தம்				**ரூ.1,72,00,000.00**

2	பரிந்துரை செய்தவரின் விவரம்	:	செயற்பொறியாளர்/மண்டலம்-6
3	எந்த துறைக்காக செயலாக்கம்	:	மண்டலம்-6
4	சமந்தப்பட்ட துறையால் அனுமதி	:	ஆம்
5	தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த செயல்முறை ஆணை எண் மற்றும் நாள்	:	கண்காணிப்பு பொறியாளர் (மத்தியம்) அவர்களின் T.S.No.02/2026 நாள்-08.01.2026
6	மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைபட்டியல் முன்வைத்து தயாரிக்கபட்டது	:	2025–26ஆம் ஆண்டின் அலுவலக விலைபட்டியலின்படி தயாரிக்கபட்டது
7	மதிப்பீட்டு தொகை	:	**ரூ. 1,72,00,000.00**
(அ)	பணி செலவீனம் மட்டும்	:	ரூ.1,38,50,572.77
(ஆ)	சரக்கு மற்றும் சேவை வரி18%	:	ரூ. 24,93,103.10
(இ)	தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல	:	ரூ. 1,38,505.73

	வாரிய நிதி 1%		
(ஈ)	தரக்கட்டுப்பாட்டுசெலவு1%	:	ரூ. 1,38,505.73
(உ)	மற்ற எதிர்பாராசெலவு 2.5%	:	ரூ. 2,38,514.75
(ஊ)	ஆலோசனை கட்டணம்	:	ரூ. 3,40,797.92
(எ)	மதிப்பீட்டின்மொத்ததொகை	:	**ரூ.1,72,00,000.00**
8	மழைநீர் வடிகால் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலைப்பகுதியா அதன் அளவு குறிப்பிடவும்	:	இல்லை
9	ஒரு சதுரமீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு	:	பொருந்தாது
10	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	:	ஆம்
11	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி	:	வார்டுகுழு மண்டலம்-6ன் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.
12	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	:	புதியதாகஅமைக்கப்படஉள்ளது
13	கள ஆய்வு செய்யப்பட்டுள்ளதா? அதன் ஆய்வு விவரம் குறிப்பிடுக	:	ஆம்
14	நிதியின்மூலதன்மை	:	மூலதன நிதி 20-21-07/412-400-301 – Health Department Building
(அ)	வரவுசெலவுஒதுக்கீடு	:	ரூ.
(ஆ)	மதிப்பீடுகளுக்குஇதுவரைஒதுக்கபட்ட நிதி	:	ரூ.
(இ)	மீதமுள்ளநிதி	:	ரூ.
	இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு தேவைப்படும்நிதி	:	ரூ.1,72,00,000.00

எனவே,

1. மேற்கண்ட மண்டலம்-6, பகுதி-17, கோட்டம்-78, வி வி கோயில் தெருவில் ஆரம்ப சுகாதார மையத்தில் கூடுதல் தளம் (முதல் தளம்) கட்டிடம் கட்டும் பணிக்காக மதிப்பீட்டு தொகை ரூ.1,72,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட பணிக்கு 2025-26ஆம்ஆண்டின்கணக்குஎண்.20-21-07/412-400-301 – Health Department Building என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,
3. மேற்கண்ட பணிக்கான நிதியினை நிதி நிர்வாக பிரிவின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

ம.அ.11.ந.க.எண்.இ1/10199/2025

தீர்மான எண்: 124/2026 **பொருள் எண்.04**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 11, வார்டு 152ல் ஆற்காடு சாலையில் உள்ள மண்டல அலுவலகம் – 11ல் கூடுதல் கட்டிடம் மற்றும் பழுதுபார்த்தல் பணிக்கு 2025-2026ஆம் ஆண்டு அலுவலக விலைப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11, வார்டு 152ல் ஆற்காடு சாலையில் உள்ள மண்டல அலுவலகம் 11ல் தற்போதுள்ள நிலையில் அலுவலகத்தில் உள்ள கலந்தாய்வு கூடம், துறைகளுக்கான அறைகள் போதுமானதாக இல்லாத நிலையில் மண்டல அலுவலக கட்டிடம் அருகில் காலியாக உள்ள இடத்தில் கூடுதல் கட்டிடம் மற்றும் ஏற்கனவே உள்ள மண்டல அலுவலகத்தில் கூடுதல் அறைகள் மற்றும் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மேற்படி ஆற்காடு சாலையில் உள்ள மண்டல அலுவலக கட்டிடத்தினை ஆய்வு செய்து அருகில் உள்ள வாகன நிறுத்தும் இடத்தில் கூடுதல் கட்டிடம் மற்றும் ஏற்கனவே உள்ள கட்டிடத்தில் கூடுதல் அறைகள் மற்றும் பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்ளும் பணிக்காக *2025-2026*ஆம் ஆண்டு அலுவலக விலைப்படி ரூ.*1,67,75,000/-* க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புல் வேண்டப்படுகிறது.

எனவே,

1. மேற்கண்ட வார்டு-152ல் ஆற்காடு சாலையில் உள்ள மண்டல அலுவலக கட்டிடத்தின் அருகில் வாகன நிறுத்தும் இடத்தில் கூடுதலாக கட்டிடம் மற்றும் ஏற்கனவே உள்ள கட்டிடத்தினை பழுதுபார்த்தல் பணிக்காக தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையின்படி மதிப்பீட்டு தொகையான ரூ.1,67,75,000/- க்கு அனுமதியும்,
2. மேற்கண்ட மண்டல அலுவலக கட்டிடத்தின் அருகில் வாகன நிறுத்தும் இடத்தில் கூடுதலாக கட்டிடம் மற்றும் ஏற்கனவே உள்ள கட்டிடத்தினை பழுதுபார்த்தல் பணிக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ. 1,67,75,000/-க்கு நிர்வாக அனுமதியும்,
3. மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகையான ரூ.1,67,75,000/- ஐ பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் இருந்து கட்டிடத்துறை மூலம் மேற்கொள்ள அனுமதியும்,
4. வார்டு-152ல் ஆற்காடு சாலையில் உள்ள மண்டலம் 11 அலுவலகத்தின் அருகில் புதிய கூடுதல் கட்டிடம் மற்றும் பழைய மண்டல அலுவலகத்தினை பழுது பார்த்தல் பணியினை பெருநகர சென்னை மாநகராட்சி, கட்டிடத்துறை மூலம் ஒப்பங்கள் கோரி பணியினை மேற்கொள்ள அனுமதியும்,
5. மேற்கண்ட செலவினத்தொகையான ரூ.1,67,75,000/ஐ கட்டிடத் துறைக்கான மூலதன கணக்கு தலைப்பில் கூடுதல் ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம். மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. வே. ராஜன் அவர்கள்.

திரு. வே. ராஜன்

மாண்புமிகு மேயர் அவர்களே, மண்டலம் - 11, வார்டு - 152 ஆற்காடு சாலையில் உள்ள மண்டல அலுவலகம் – 11ல் கூடுதல் கட்டிடம் மற்றும் பழுதுபார்த்தல் பணிக்கு 2025-2026ஆம் ஆண்டு அலுவலக விலைப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதற்காக எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

தீர்மானத்தை ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”

******

ம.அ.13.ந.க.எண்.சி1/4940/2025(24)

தீர்மான எண்: 125/2026 **பொருள் எண்.05**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-13, வார்டு-180, திருவான்மியூர் கடற்கரை அருகே உள்ள Water land Drive சாலையில் Interlocking Paver Blocks அமைக்கும் பணிக்கு மூலதன நிதியில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-38, வார்டு-180க்கு உட்பட்ட திருவான்மியூர் கடற்கரைக்கு அருகாமையிலுள்ள WaterlandDrive சாலையானது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் கடற்கரைக்கு வரும் பொது மக்களும் இப்பகுதியில் நடைபயிற்சி மேற்கொள்வோரும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, ஏற்கனவே சிதலமடைந்த தார் சாலையை செப்பனிட்டு புதிதாக சாலை அமைத்து தருமாறு மாநகராட்சி பணிகள் குழு (Works Committee) மற்றும் 13வது மண்டல வார்டு குழுவில் வார்டு-180 மாமன்ற உறுப்பினர் திருமதி.விசாலாட்சி கபிலன் அவர்களும் பொது மக்கள் மற்றும் குடியிருப்போர் நலச் சங்கங்களும் தொடர்ந்து கோரிக்கை வைத்துள்ளனர்.

மேலும், அச்சாலையானது Coastal Regulation, Zone-II (CRZ-II)ன் எல்லைக்குள் வருவதால் கடற்கரை ஒழுங்கு முறை ஆணையத்தின் அனுமதி பெற வேண்டி கடந்த 31.08.2023 அன்று சென்னை மாவட்ட தலைவர் தலைமையில் நடைபெற்ற District Coastal Zonal Management Authority Meeting யிலும் 29.12.2023 அன்று நடைபெற்ற State Level Committee யிலும் விரிவான திட்ட அறிக்கையுடன் விண்ணப்பம் அளிக்கப்பட்டு தற்பொழுது வரை நிலுவையிலுள்ளது.

இந்நிலையில் இதில் Inter locking Paver Blocks கொண்டு சாலை அமைத்து தருமாறு கடந்த 25.07.2025 அன்று துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற மாநகராட்சி பணிகள் குழு (Works Committee) கூட்டத்தில் வார்டு-180 மாமன்ற உறுப்பினர் திருமதி. விசாலட்சி கபிலன் அவர்கள் மீண்டும் கோரிக்கை வைத்ததின் அடிப்படையில் திருவான்மியூர் கடற்கரை அருகே உள்ள Water land Drive சாலையில் Inter locking Paver Blocks கொண்டு சாலை அமைக்க 2024-25ஆம் ஆண்டு விலைப்பட்டியல் மூலதன நிதியின் கீழ் மேற்கொள்ளும் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

பணியின் பெயர்:

வ. எண்.	வார்டு எண்	பணியின் விவரம்	மதிப்பீட்டுத் தொகை(ரூ)

1	180	மண்டலம்-13, பகுதி-38, வார்டு-180, Water land Drive சாலையில் Inter locking Paver Blocks அமைக்கும் பணி. Est No.NN/2025-26/10000	ரூ. 1,15,19,000
		மொத்தம்	ரூ. 1,15,19,000

2.	பணியினை மேற்கொள்வதற்கான காரணங்கள்		:	
3.	எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம்		:	மண்டலம்-13
4.	தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல் முறை ஆணை எண் மற்றும் தேதி		:	மேற்பார்வை பொறியாளர்(தெற்கு) எண்:94/2024, நாள்.25.07.2025
5.	மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது.		:	2024-2025ம் ஆண்டு
6.	மதிப்பீடு இணைக்கப்பட்டுள்ளதா?		:	ஆம்
7.	விரிவான மதிப்பீடு (Detailed Estimate) இணைக்கப்பட்டுள்ளதா?		:	ஆம்
8.	தொழில் நுட்ப அனுமதி இணைக்கப்பட்டுள்ளதா?		:	ஆம்
9.	Key Plan இணைக்கப்பட்டுள்ளதா?		:	ஆம்
10.	அனைத்து அளவுகளுடன் கூடிய பணி குறித்த வரைபடம் Sketch இணைக்கப்பட்டுள்ளதா?		:	ஆம்
11.	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த அதிகாரி / வார்டு குழு தீர்மானம் மற்றும் நாள்		:	வார்டு குழு ஒப்புதல் பெறப்பட்டது தீர்மான எண் 374/2025 நாள் 13.08.2025
12	மதிப்பீட்டின் தொகை :		:	ரூ 1,15,19,000.00
	(அ)	பணியின் செலவீனம் மட்டும்	:	ரூ. 94,80,360.27
	(ஆ)	மேலான மேற்பார்வை செலவுகள்	:	
	(இ)	சிறு மேற்பார்வை செலவுகள்	:	

	(ஈ)	தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் சேமநலநிதி 1%	:	ரூ. 94,803.60
	(உ)	தரக்கட்டுப்பாடு 1%	:	ரூ.
	(ஊ)	மற்றைய எதிர்பாராத செலவுகள் 2.5%	:	ரூ. 2,37,371.28
	(எ)	GST 18%	:	ரூ. 17,06,464.85
		மொத்தம்	:	ரூ.1,15,19,000.00
13	நில வகைப்பாடு விவரம்		:	பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானது
14	பட்டா/அடங்கல்/அ-பதிவேடு இணைக்கப்பட்டுள்ளதா?		:	வ.எண் 13ல் குறிப்பிட்டுள்ளவாறு
15	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது?		:	வ.எண் 13ல் குறிப்பிட்டுள்ளவாறு
16	சொத்துக் குறியீட்டு எண்		:	வ.எண் 13ல் குறிப்பிட்டுள்ளவாறு
17.	*Budget Appropriation* இணைக்கப்பட்டுள்ளதா?		:	ஆம்
18.	நிதி விபரங்கள்			
	(a)	நிதியின் மூலத்தன்மை	:	மூலதன நிதி
	(b)	பிரிவு எண் / கணக்கு குறியீட்டு எண் / கணக்கு தலைப்பு	:	202-107 / 412-403-000 Others – Missalineance
	(c)	வரவு செலவு ஒதுக்கீடு (2024-25)	:	பேருந்து சாலை துறை
	(d)	2024-25 (Spill Over) பணிகள் மதிப்பீடு தொகை	:	ரூ.
	(e)	*2024-25* பணி மதிப்பீடுகளுக்கு இது வரை ஒதுக்கப்பட்ட நிதி (Current year works estimate)	:	ரூ.
	(f)	மீதம் உள்ள நிதி (c-(d+e))	:	ரூ.

	(g)	இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	:	ரூ1,15,19,000.00

மேற்குறிப்பிட்ட பணிக்கு மூலதன நிதியின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,15,19,000.00க்கு (ரூபாய், ஒரு கோடியே பதினைந்து இலட்சத்து பத்தொன்பதாயிரம் மட்டும்) மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

இ.பொ.து.ம.வா.ப.ந.க.எண். சி1 / 001 / 2026

தீர்மான எண்: 126/2026 **பொருள் எண்.06**

பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய வாகன பணிமனை - இயந்திர பொறியியல் துறை - மண்டலம் - 7 லாரி நிலையத்தில் உள்ள வாகனங்கள் இயக்குவதற்கு - 57 எண்ணிக்கையிலான தனியார் ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது - ஒப்பந்தம் 16.04.2026 அன்றுடன் நிறைவுபெறுகிறது - துப்புரவு பணியினை தொய்வின்றி மேற்கொள்ள தற்பொழுது தேவைப்படும் 72 எண்ணிக்கையிலான தனியார் ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் 210 நாட்களுக்கு பணியமர்த்த நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறை, மத்திய வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம்-6 முதல் 10 வரை உள்ள லாரி நிலையங்களில் துப்புரவு, கட்டிடகழிவுகள், சுகாதாரத்துறை, பூங்கா துறை மற்றும் இன்னபிற பணிகளை மேற்கொள்ள மொத்தம் 258 கனரக, இலகுரக வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவை பராமரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் வாகனங்கள் மூன்று வேளைகளிலும் இயக்க துறை சார்ந்த ஓட்டுநர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதையொட்டி தேவைக்கேற்ப அந்தந்த மண்டல லாரி நிலையங்களுக்கு ஒப்பந்ததாரர் மூலம் ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி மண்டலம்-7 லாரி நிலையத்தில் துப்புரவு, கட்டிடகழிவுகள், சுகாதாரத்துறை மற்றும் இன்னபிற பணிகளை மேற்கொள்ள ஓட்டுநர் பற்றாக்குறைகளை களைய 57 எண்ணிக்கையிலான தனியார் ஓட்டுநர்கள் 28.11.2025 நாளிட்ட ஆணையின்படி பணியமர்த்தப்பட்டனர். இந்த ஆணை வரும் 16.04.2026 அன்றுடன் முடிவு பெறுகிறது.

காலை, மதியம் மற்றும் இரவு வேளைகளில் ஏற்கனவே அனுப்பப்பட்டுக் கொண்டிருந்த வாகனங்களின் அடிப்படையிலும், அயல் பணிகள் செய்வதற்காகவும் சேர்த்து மொத்தம் 113 ஓட்டுநர்கள் ஒரு நாளைக்கு தேவைப்படுகின்றனர். இதில் 20 நிரந்தர ஓட்டுநர்களும், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஒப்பந்ததாரர் மூலம் 18 ஓட்டுநர்களும் உள்ளனர். மேலும், 04 ஓட்டுநர்கள் அயல் பணியிலும் மாற்று பணி அடிப்படையில் உள்ளனர் . எனவே, 24 நிரந்தர ஓட்டுநர்களில் 20 ஓட்டுநர்கள் மட்டுமே லாரி நிலையத்தில் பணி செய்கின்றனர். மேலும், நிரந்தர ஓட்டுநர்கள் அனுமதிக்கப்பட்ட வார விடுப்பு, தற்செயல் விடுப்பு, ஈட்டிய விடுப்பு மற்றும் மருத்துவ விடுப்பில் செல்லும்போது அவ்விடத்தில் தற்காலிக மாற்று ஓட்டுநர்களை பணிக்கு அமர்த்த வேண்டி உள்ளது. இவை அனைத்தையும்

கருத்தில் கொண்டு மண்டலம்-7லாரி நிலையத்திற்கு தேவையான ஓட்டுநர்களை கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ZONE - VII LORRY STATION MARCHOUT ABSTRACT As On : 08.01.2026											
SL.NO	TYPE OF VEHICLE	DAILY MARCHOUT OF VEHICLES FOR 3 SHIFT				AVALIABLE DRIVERS			REQUIRMENT OF HIRING DRIVERS	Total	Remarks
		AM SHIFT	PM SHIFT	NIGHT SHIFT	TOTAL	GCC DRIVER	O&M DRIVER	HIRING DRIVERS			
1	HMV Compactor	7	5	8	20	1	0		19	20	
2	LMV Compactor	10	6	4	20	1	0		19	20	
3	HMV Tipper	8	1	2	11	3	0		8	11	
4	Track Mounted Crane	2	0	0	2	0	2		0	2	
5	Mechanical Sweeper	2	0	2	4	0	4		0	4	
6	Jatayu	3	0	0	3	0	3		0	3	
7	Skid Steer Loader	5	1	1	7	0	7		0	7	
8	Taurus	3	0	3	6	0	0		6	6	
9	Cattle Catcher	2	1	0	3	1	0		2	3	
10	Dog Van	2	0	0	2	1	0		1	2	
11	LCV CNG Tipper	1	0	0	1	0	0		1	1	
12	She-toilet	1	0	0	1	0	1		0	1	
13	Tata Ace	2	0	0	2	2	0		0	2	
14	Ambulance	2	0	0	2	0	0		2	2	
15	Tree Pruning Mechine	1	0	0	1	0	1		0	1	
19	Brake Down	1	1	1	3	2	0		1	3	

20	Metrial purchase	1	1	0	2	1	0		1	2	
21	Lorry Station Parking	0	1	1	2	1	0		1	2	
22	Enforchment Jeep	3	3	3	9	0	0	9	0	9	Already hired LOA issued with effect from (26.12.25 to 20.11.26)
23	Inspection Jeep (Zonal Office)	5	5	0	10	5	0		5	10	
24	Inspection Jeep (HQ)	1	1	0	2	2	0		0	2	
TOTAL		62	26	25	113	20	18	9	66	113	

A	DAILY MARCHOUT OF VEHICLES FOR 3 SHIFT	113
B	PERMANENT DRIVERS AVAILABLE	20
C	O&M DRIVERS AVAILABLE	18
D	HIRING DRIVERS AVAILABLE	9
E	TOTAL NO OF HIRING DRIVERS REQUIRMENT A-(B+C+D)(113-47)	66
F	NO.OF. PERMANENT DRIVERS AT L/S	20
G	WEEKLY OFF(20/7)	3
H	OTHER LEAVE 15 %	3
I	REQUIRMENT OF DRIVER'S(F+H+I)	26
J	AVAILABLE OF PERMANENT DRIVERS	20
K	SHORTAGE OF DRIVER'S(K-J)	6
L	TOTAL SHORTAGE OF DRIVERS(E+L) (66+6)	72
	PERMANENT DRIVERS DETAILS	
	LORRY STATION	20
	TAX COLLECTOR	4
	TOTAL DRIVERS	24

மேற்கண்ட கணக்கீட்டின்படி, மண்டலம்-7 லாரி நிலையத்தில் அனைத்து பணிகளையும் தொய்வில்லாமல் மேற்கொள்ள கூடுதலாக 72 ஓட்டுநர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் தற்போது மேற்கண்ட ஓட்டுநர்கள் தேவையை பூர்த்தி செய்ய நிரந்த ஓட்டுநர்கள் இல்லாத நிலையில் தற்காலிக ஓட்டுநர்களை தமிழக அரசின் பொதுப்பணி துறையின் 2025-26 விலைவிவர பட்டியலின்படி குறைந்தபட்ச ஊதியத்தின் அடிப்படையில் மின்னணு ஒப்பம் கோரி பணி அமர்த்தலாம் என கருதப்படுகின்றது. அதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்தப்படவுள்ள தனியார் ஓட்டுநர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதியம் கீழ்வருமாறு:

Rate of Schedule of PWD for the year 2025-26			Administrative Charges (5%) (Rs.)	Total (Rs.)	GST 18% (Rs.)	Rate per day per driver
Basic rate per day per driver (Rs.)	Additional wages for Chennai City (10%) (Rs.)	Total (Rs.)				Grand Total (Rs.)
A	B	C	D	E	F	G
A	(A x 10%)	(A+B)	(C x 5%)	(C+D)	(E x 18%)	(E+F)
965	96.5	1061.5	53.075	1114.575	200.62	1,315.20

Rate of Schedule of PWD for the year 2025-26		
Rate per day per driver (Rs.)	:	1,315.20
Rate per day for 72 drivers (1,315.20 x 72) (Rs.)	:	94694.40
Rate for 72 drivers for 210 days (1,315.20 x 72 x 210) (Rs.)	:	1,98,85,824.00

எனவே 72 எண்ணிகையிலான ஓட்டுநர்களுக்கு நாளொன்றுக்கு ஆகும் செலவீனம் ரூ.94,694.40/- ஆகும். அதன்படி 210 நாட்களுக்கு 72 ஓட்டுநர்களுக்கு ஆகும் தோராய மொத்த செலவீனம் ரூ.1,98,85,824/-(ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று எட்டு இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று இருபத்து நான்கு மட்டும்) (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) இச்செலவீனம் 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மத்திய வாகன பணிமனை 40-41-09 – கணக்கு எண். 230-800-400 "Hire Charges" என்னும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

BUDGET HEAD	
Function Centre	40 – 41 – 09

Head of Account code:	230-800-400
Budget allotment for the year 2025-2026	Rs.18,17,00,000/-
So far incurred	Rs.15,35,70,278/-
Balance	Rs.2,81,29,722/-
Expenditure in this bill	Rs.1,98,85,824/-
Balance Amount	Rs.82,43,898/-

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறை, மத்திய வட்டாரம், மண்டலம்-7 லாரி நிலையத்தில் இயக்கப்படும் கனரக / இலகுரக காம்பாக்டர் வாகனங்கள் மற்றும் இன்ன பிற வாகனங்களையும் 210 நாட்களுக்கு இயக்குதல் பணிகளை காலை / மதியம் / இரவு வேளைகளில் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 72 எண்ணிகையிலான தற்காலிக ஓட்டுநர்களை நாளொன்றுக்கு ஒரு ஓட்டுநருக்கு ரூ.1,315.20/- (சரக்கு மற்றும் சேவை வரி 18%உட்பட) வீதம் 72 ஓட்டுநர்களுக்கு 210 நாட்களுக்கு (Rs. 1,315.20/- x 72 Drivers x 210 Days) ரூ.1,98,85,824/- (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று எட்டு இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று இருபத்து நான்கு மட்டும்) செலவீனத்தில் மின்னணு ஒப்பம் கோரி தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள அனுமதியும்,
2. இதற்கான செலவீனமான ரூ.1,98,85,824/- (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று எட்டு இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று இருபத்து நான்கு மட்டும்) (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) இச்செலவீனத்தினை மத்திய மண்டலத்தின் (Central Region) கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மத்திய வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் .40-41-09 மற்றும் கணக்கு தலைப்பு எண் 230-800-400 என்னும் தலைப்பின்கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”

******

ம.அ.4.ந.க.எண்.பி3/0214/2026

தீர்மான எண்: 127/2026 **பொருள் எண்.07**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 4, வார்டு – 40, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் RTO அலுவலகம் அருகில் உள்ள பேருந்து நிழற்கூரையை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–4, பகுதி–10, வார்டு–40 திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் RTO அலுவலகம் அருகில் உள்ள பேருந்து நிழற்கூரை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்.	பொருள்	விவரம்
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் RTO அலுவலகம் அருகில் உள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பேருந்து நிழற்கூரை.
2	இக்கட்டிடம் எப்போது கட்டப்பட்டது	1993 ஆம் ஆண்டு
3	இக்கட்டிடத்தின் பரப்பளவு	134.55 ச.அடி
4	பழைய கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.8533.38
5	பழைய கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	பயன்பாட்டில் உள்ளது.
6	பழைய கட்டிடம் இடிப்பதற்கு காரணம்	மிகவும் பழுதடைந்து, அபாயகரமாக உள்ளது.
7	அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	பேருந்து நிழற்கூரையை இடித்து விட்டு புதிய பேருந்து நிழற்கூரை கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
8	பழைய கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ?	மாவட்ட வருவாய் அலுவலர் / உதவி ஆணையர் - 4
9	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண்.(ம) நாள்:	எண்.27, நாள் : 14.11.2025

எனவே, மண்டலம்–4, பகுதி –10, வார்டு–40, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் RTO அலுவலகம் அருகில் உள்ள நிழற்கூரை மிகவும் பழுதடைந்து உடையும் தருவாயில் உள்ளது. மேலும், இக்கூரையானது பழுதடைந்துள்ள காரணத்தினால் அங்கு வரும் பயணிகளால் நிழற்கூரையை உபயோகிக்க இயலவில்லை, ஆகையால் இந்நிழற்கூரையை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"13.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.24/2026, நாள்.13.02.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.8.ந.க.எண்.இ1/5887/2025

தீர்மான எண்: 128/2026 **பொருள் எண்.08**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 8, வார்டு – 108, பிள்ளையார் கோயில் தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள டோபிகானா கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–8, பகுதி–23, வார்டு–108, பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள டோபிகானா கட்டிடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இந்த கட்டிடத்தை இடிப்பதற்கு ஆணை வேண்டப்படுகிறது.

இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்

1.	இடிக்கப்படவுள்ள கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	1976ஆம் ஆண்டு
2.	இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் புத்தக மதிப்பு	ரூ.30,768.36
3.	இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் பரப்பளவு	3443.47மீ
4.	கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா	இல்லை
5.	கட்டிடம் இடித்த பின்பு எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும்.	டோபிகானா கட்டிடம்

எனவே, மண்டலம்–8, பகுதி–23, வார்டு–108, பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள டோபிகானா கட்டிடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இந்த கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "13.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.23/2026, நாள்.13.02.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ந.து.நி.க.எண்.D1/LA/SD/WDCN03/00033/2026

தீர்மான எண்: 129/2026 **பொருள் எண்.09**

தானப்பத்திரம்

மண்டலம்-03, கோட்டம்-28ல் Mr. Hemant Kumar Pandia & Mr.R.Sripal Pandia அவர்கள் Old S.No.849/2, T.S.No.12/4, Block No.49, Ward - C of Madhavaram Village, Madhavaram Taluk, Chennai Districtல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN03/00033/2026, நாள்:12.01.2026ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்:09.12.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் Mr.Hemant Kumar Pandia & Mr.R.Sripal Pandia என்பவர்கள் மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

(அ) சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டத்தில் இந்த நிலம் நிறுவனப் பயன்பாட்டு மண்டலத்தில் வருகிறது, தமிழ்நாடு அரசின் 27.03.2020 நாளிட்ட அரசிதழ் எண் 13-ன்படி T.S.No.12/4-ல் உள்ள நிலம் குடியிருப்புப் பயன்பாட்டு மண்டலமாக மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இந்த மனைப்பிரிவில் சாலைக்கென 854.04சதுர மீட்டர் நிலம், TANGEDCOவிற்கு 15.65சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 15.38சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) Mr.Hemant Kumar Pandia & Mr.R. Sripal Pandia என்பவர்கள் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவர்களாக அறியப்படுகிறார்கள், மனை உரிமையாளர்கள் பட்டாவினை, தனி வட்டாட்சியர், மாதவரம் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(ஈ) விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது, மனைக்கு அணுகு சாலையாக 7.20மீ அகல சாலை அமைந்துள்ளது, விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் உள்ள விதிகளின்படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCOவிற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். Mr. Hemant Kumar Pandia & Mr. R. Sripal Pandia அவர்கள் அதற்கேற்றவாறு 15.38ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்கள். மேலும் 15.65ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCOவிற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

"16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.25/2026,நாள்.16.02.2026ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ந.து.நக.எண்.D1/SD/WDCN15/00075/2026

தீர்மான எண்: 144/2026 **பொருள் எண்.24**

தானப்பத்திரம்

மண்டலம்-15, கோட்டம்-194ல் M/s. Ocean inspirations LLP Rep by its Designated partner Mr.A. Sekar அவர்கள் Spring Dale Road, Chennai - 600115 comprised in As per patta New S.No.165/175A1B & 1/12B, Injambakkam Village, Sholinganallur Taluk, Chennaiல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி SD/WDCN15/00075/2026, நாள்:06.02.2026ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைஉட்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்:09.12.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் M/s.Ocean inspirations LLP Rep by its Designated partner Mr.A.Sekar அவர்கள் மனைஉட்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

(அ) M/s. Ocean inspirations LLP Rep by its Designated partner Mr.A. Sekar அவர்கள் Spring Dale Road, Chennai - 600115 comprised in As per patta New S.No.165/175A1B & 1/12B, Injambakkam Village, Sholinganallur Taluk, Chennai, Division-194, Zone-15ல் அமைந்துள்ள மனையில் சாலைக்காக 1895.96ச.மீ. பரப்பளவு நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக விண்ணப்பதாரரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

(ஆ) M/s.Ocean inspirations LLP Rep by its Designated partner Mr.A.Sekar என்பவர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்.

(இ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 9.0மீ அகல சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர் சமர்ப்பித்த மனைஉட்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 220.00ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ன்படி 10,000ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது

அதற்கு ஈடான தொகையாகவோ செலுத்தலாம். மனைப்பிரிவு 10,000 சதுர மீட்டருக்குள் இருப்பதால் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு ஈடாக தொகையை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்.

(உ) மனைஉட்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் M/s.Ocean inspirations LLP Rep by its Designated partner Mr.A.Sekar அவர்கள் அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கான 1895.56சதுர மீட்டர் நிலத்தை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(ஊ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department dated16.07.2022ன்படி, சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தியாளரே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், அபிவிருத்தியாளர் தாங்களே சாலை மற்றும் தெரு விளக்கு அமைக்க கேட்டுக் கொண்டார்.

(ஐ) உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளதால் M/s. Ocean inspirations LLP Rep by its Designated partner Mr.A.Sekar அவர்களிடம் இருந்து தானப்பத்திரத்தில் உள்ளவாறு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே, Spring Dale Road, Chennai - 600115 comprised in As per patta New S.No.165/175A1B & 1/12B, Injambakkam Village, Sholinganallur Taluk, Chennai, Division-194, Zone-15ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைஉட்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான 1895.56 சதுர மீட்டர் நிலத்தை M/s. Ocean inspirations LLP Rep by its Designated partner Mr. A. Sekar அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.26/2026,நாள்.16.02.2026ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

பொ.து.நக.எண்.ஈ3/32838/2025

தீர்மான எண்: 145/2026 **பொருள் எண்.25**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - அயற்பணியில் பணியேற்ற அலுவலர்களின் விவரம் மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு.

மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை அ1/001/2025, நாள்: 03.11.2025 மற்றும் காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை Rc.No.51/NGB III(3)/2025, நாள்.22.08.2025ன்படி, கீழ்காணும் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்.	பெயர் மற்றும் பதவி	செயல்முறை ஆணை எண். மற்றும் நாள்.	அயற்பணியில் சேர்ந்த நாள்.
1,	திருமதி.ர.ராதிகா, தனி வட்டாட்சியர், (நிலம் மற்றும் உடைமைத்துறை), வட்டார அலுவலகம் (மத்தியம்),	மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை. அ1/001/2025,	19.11.2025 மு.ப.

வ. எண்.	பெயர் மற்றும் பதவி	செயல்முறை ஆணை எண். மற்றும் நாள்.	அயற்பணியில் சேர்ந்த நாள்.
	பெருநகர சென்னை மாநகராட்சி	நாள்.03.11.2025.	
2.	திரு.S.முருகானந்தம், தலைமை காவலர், (HC29535) விழிப்புக்குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி	காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை Rc.No.51/NGB III(3)/2025. நாள்.22.08.2025.	17.12.2025 மு.ப.

"இதனை நியமனக்குழு பதிவு செய்து, மன்றத்தின்

தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பிக்கின்றது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

சகு.நக.எண்.சகு.1/7079/2023

தீர்மான எண்: 146/2026 **பொருள் எண்.26**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - சட்டக்குழுமம் - ஒரு நிலை வழக்குரைஞரின் பணிக்காலத்தை நீட்டிப்பு செய்தமைக்கும், தொடர் கட்டணம் (Retainer Fees) வழங்கவும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

மன்ற தீர்மான எண்.*326/2022*, நாள். *30.07.2022*, மன்ற தீர்மான எண்.*358/2022*, நாள். *30.08.2022*, மன்ற தீர்மான எண்.*710/2022*, நாள். *28.11.2022*, மன்ற தீர்மான எண்.*575/2023*, நாள். *31.10.2023* மற்றும் மன்ற தீர்மான எண்.*035/2024*, நாள். *31.01.2024* ஆகிய மன்ற தீர்மானங்களின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக நீதிமன்ற வழக்குகளை கையாளுவதற்காக ஐந்து கட்டங்களாக ஓராண்டு காலத்திற்கு நிலைவழக்குரைஞர்களை நியமித்து ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி நியமிக்கப்பட்ட நிலை வழக்குரைஞர்களில் *23* நிலை வழக்குரைஞர்களின் பணி நீட்டிப்பு காலமானது மன்ற தீர்மான எண்.*369/2024* நாள்.*30.09.2024*ன்படி, *01.02.2024* முதல் *31.01.2025* வரை பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக ஓராண்டு காலத்திற்கு நடைமுறை விதிகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு ஒதுக்கப்படும் வழக்குகளை கையாளவும் மாதாந்திர தொடர் கட்டணம் வழங்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அட்டவணை - I

வ. எண்	நிலை வழக்குரைஞர்களின் பெயர்திரு/திருமதி	பதிவு எண்	பணி ஒதுக்கீடு
1	*G.T.*சுப்ரமணியன்	Ms.998/1989	உயர்நீதிமன்றம்
2	*A.C.*மணிபாரதி	Ms.936/1999	உயர்நீதிமன்றம்
3	*G.*ஸ்ரீராம்	Ms.1018/1993	நகரஉரிமையியல் நீதிமன்றம்
4	*D.*புவனசுந்தரம்	Ms.405/1993	நகரஉரிமையியல் நீதிமன்றம்
5	*P.*சின்னராஜா	Ms.757/2005	நகரஉரிமையியல் நீதிமன்றம்
6	*J.*சீனிவாசன்	Ms.3191/2007	நகரஉரிமையியல் நீதிமன்றம்
7	*A.*அருண்பாபு	Ms.98/1997	உயர்நீதிமன்றம்

8	S. கோபிநாதன்	Ms.8481/1991	உயர்நீதிமன்றம்
9	P. T .ரமாதேவி	Ms.1732/2000	உயர்நீதிமன்றம்
10	K. அஸ்வினிதேவி	Ms.1049/2009	உயர்நீதிமன்றம்
11	D.B.R. பிரபு	Ms.2187/2005	உயர்நீதிமன்றம்
12	E.C. ரமேஷ்	Ms.355/2004	உயர்நீதிமன்றம்
13	M. மணிவேலன்	Ms.226/2016	நகரஉரிமையியல் நீதிமன்றம்
14	S. சந்தோஷ்	Ms.1290/2007	நகரஉரிமையியல் நீதிமன்றம்
15	S.S.தேன்மொழி	Ms.2157/2006	நகரஉரிமையியல் நீதிமன்றம்
16	R.ஸ்ரீதர்	Ms.1049/2006	உயர்நீதிமன்றம்
17	ப்பி.பிரித்வி சோப்டா	Ms.2817/15	உயர்நீதிமன்றம்
18	எம்.சுரேஷ்குமார்	Ms.727/1994	நகரஉரிமையியல்நீதிமன்றம்
19	எஸ்.வனிதாஜாய்ஸ்ராணி	Ms.1414/2007	நகரஉரிமையியல்நீதிமன்றம்
20	ஜெ. ஜென்னி	E.777/2005	நகரஉரிமையியல்நீதிமன்றம்
21	என்.ஆர். ரமேஷ்கண்ணா	Ms.1476/1994	தேசிய பசுமை தீர்ப்பாயம்
22	எம்.பி.சிவஞானம்	Ms 4027/2012	நகரஉரிமையியல்நீதிமன்றம்
23	எம். புருஷோத்தமன்	Ms. 87/2018	நகரஉரிமையியல்நீதிமன்றம்
24	B.ரகுராமன்	MS400/2016	நகரஉரிமையியல்நீதிமன்றம்
25	J. கண்ணன்	MS3801/2018	நகரஉரிமையியல்நீதிமன்றம்
26	A. நிர்மலா ஜெயராணி	MS4148/2019	நகரஉரிமையியல்நீதிமன்றம்

மன்றத்தீர்மானஎண்.450/2024, நாள்.30.10.2024ன்படி, திரு.சி.கணேஷ்பாண்டியன், நிலை வழக்குரைஞர் அவர்களை 01.11.2024 முதல் 30.11.2025 வரை ஓராண்டு காலத்திற்கு கால நீடிப்பு செய்து தொடர் கட்டணம் வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், மன்றத்தீர்மான எண்.*220/2025*, நாள்.*28.02.2025*ன்படி, *26* நிலை வழக்குரைஞர்களின் பணிக்காலமானது *31.01.2025* வரை முடிவடைந்ததால் *01.02.2025* முதல் *31.01.2026* வரை பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக ஓராண்டு காலத்திற்கு நடைமுறை விதிகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு ஒதுக்கப்படும் வழக்குகளை கையாளவும் மாதாந்திர தொடர் கட்டணம் வழங்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி திரு.சி.கணேஷ் பாண்டியன், நிலை வழக்குரைஞர் அவர்களின் பணிக்காலம் *30.11.2025* அன்றுடன் முடிவடைவதால் தனியரை *31.01.2026* வரை பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக *2* மாத காலத்திற்கு நடைமுறை விதிகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு ஒதுக்கப்படும் வழக்குகளை கையாளவும் மாதாந்திர தொடர் கட்டணம் வழங்கவும் ஆணையாளர் அவர்களின் *21.12.2025* நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது.

ஆகவே, திரு. சி. கணேஷ் பாண்டியன், நிலை வழக்குரைஞர் அவர்களை *31.01.2026* வரை *2* மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்தமைக்கும், தொடர் கட்டணம் வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து,

மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

பொ.து.நு.க.எண்.இ10/035752/2026

தீர்மான எண்: 147/2026 **பொருள் எண்.27**

<u>பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி- பொதுத்துறை - 2021 முதல் 2026 வரை கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>

அரசாணை (நிலை) எண்.18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1) துறை, நாள்.23.01.2020 மற்றும் அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (Q1) துறை, நாள்- 08.03.2023 மற்றும் அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணைகள் மற்றும் தெளிவுரைகளை பின்பற்றி, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து பணியிடை காலமான பணியாளர்களின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்களுக்கு அவர்களின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானம் பெற்று கருணை அடிப்படையில் Group-D பதவிகளில் (சாலைப்பணியாளர், பூங்கா பணியாளர், மலேரியா பணியாளர், காவலர், ஆயா, அரங்க உதவியாளர், பெண் உதவியாளர் மற்றும் தொழிலாளி) பணியமர்வு செய்யப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, நான்காம் நிலை பணியாளர்கள், முன்களப் பணியாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் அன்றாடம் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து சாலைகள் மற்றும் தெருக்களை தூய்மையாக பராமரிக்க குப்பைகளை அகற்றும் பணி, சாலைகளை செப்பனிடும் பணி, வீடுதோறும் குப்பைகளை சேகரிக்கும் பணி, கொசு மருந்து தெளிக்கும் மற்றும் புகை அடிக்கும் பணி, மழைநீர் வடிகால்களை தூர்வாரும் பணி மற்றும் கால்நடைகள் பிடிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் உடல்நலமின்மையால் பல வகையான நோய்கள் தாக்கம் ஏற்பட்டு பணியிடை காலமானவர்களின் விகிதம் அதிகமாக உள்ளது.

பணியாளரின் குடும்ப உறுப்பினர்கள் பணியாளரின் வருமானத்தை நம்பி குடும்பம் நடத்தி வருகின்றனர். பணியாளர் காலமானவுடன், அக்குடும்பத்தில் உள்ள வாரிசுகள் வருமானம் இல்லாமலும், தொடர்ந்து கல்வி பயில இயலாத நிலை ஏற்பட்டும், உரிய மருத்துவ வசதி பெற முடியாத காரணங்களால், கடன் பெற்று குடும்பம் வழி நடத்தும் சூழலுக்கு உள்ளாகின்றனர். இதனால் காலமான பணியாளரின் வாரிசுதாரர்கள் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகும் நிலை உள்ளது. மேலும், இப்பணியாளர்களின் குடும்பங்கள் எவ்வித வாழ்வாதாரம் இன்றி மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் ஜீவனம் செய்து வருகின்றனர்.

அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (Q1) துறை, நாள். 08.03.2023ன்படி **மூன்றாம் நிலை பதவிகளில்** கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்படும் போது மொத்த ஒப்பளிப்பு பணியிடத்தில் 5 % (சதவீதம்) மிகாமல் பணி நியமனம் செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த அரசாணையில் கருணை அடிப்படை பணி நியமனத்திற்கு *Group-D* பிரிவில் *"No such ceiling"* என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது கருணை அடிப்படையில் மூன்றாம் வகுப்பு பதவிக்கான கல்வித்தகுதிகள் பெற்ற வாரிசுதாரர்களுக்கு *Group-C*ல் உள்ள பதவிகள் வழங்கப்படின், கடந்த காலங்களில் *Group-D* பதவியில் பணிநியமனம் பெற்றவர்கள் இதனை மேற்கோள் காட்டி மூப்பு நிலை பதவி உயர்வு மற்றும் பணப்பயன்கள் கோர வழிவகை செய்யும். இதன் தொடர்ச்சியாக பல்வேறு நீதிமன்ற வழக்குகள் தொடரும் நிலையும் உருவாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மான எண்.*700/2017*, நாள்.*26.10.2017*ல் கடந்த காலங்களில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்தவர்களில் அவர்கள் பணி நியமனம் நாளில் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு *(Diploma)* பொறியியல் பட்டப்படிப்பு ஆகியவற்றில் ஏதாவது ஒரு கல்வித்தகுதியை பெற்று நான்காம் நிலை பதவிகளில் பணியமர்த்தப்பட்டு தற்போது நான்காம் நிலை பதவிகளில் பணிபுரிபவர்களுக்கு வகுப்பு *3*ன்கீழ் வரும் பதவிகளில் அவர்களின் கல்வித்தகுதிக்கு ஏற்றவாறு உரிய பதவியில் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் நான்காம் நிலை *(Group-D)* பணியாளர்கள் பணியிடங்களே பெரும்பாலும் காலியாக உள்ளன. இதனால் காலமானவர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படை பணி நியமனத்தில் நான்காம் நிலை *(Group-D)* பதவி மட்டுமே வழங்கப்படும் நிலை உள்ளது.

எனவே, காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்கள் குடும்பங்களின் துயர் களையும் பொருட்டும், குடும்ப வறிய சூழ்நிலை மற்றும் வாழ்வாதாரம் ஆகியவற்றினை கவனத்திற்கொண்டும், அரசாணை எண்.*33*-ல் *Group-D* பதவியில் உள்ள காலிப்பணியிடங்கள் நிரப்ப வரம்புகள் ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலும், ஏற்கனவே பெருநகர சென்னை மாநகராட்சியில் பின்பற்றி வந்துள்ள நான்காம் நிலை *(Group-D)* பணியிடங்களில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு வருகிறது.

01.04.2021 to 15.02.2026 வரை கருணை அடிப்படையில் பணி வழங்கப்பட்ட பதவி/துறைகளின் விவரம்

நாள்	சாலை பணியாளர் *(BRR)*	மலேரியா பணியாளர் *(Health)*	ஆயா *(MSD)*	காவலர்	பூங்கா பணியாளர் *(Park)*	அலுவலக உதவியாளர் *(MSD)*	தூய்மை பணியாளர்	துலக்குநர்	பெண் உதவியாளர் *(MSD)*	தொழிலாளி	மொத்தம்

01.04.2021 to 31.03.2022	61	25	4	4	11	0	37	22	10	21	195
01.04.2022 to 31.03.2023	10	0	1	0	0	2	1	0	0	0	14
01.04.2023 to 31.03.2024	227	0	0	0	0	0	0	0	0	0	227
01.04.2024 to 31.03.2025	322	166	0	0	39	0	0	0	0	50	577
01.04.2025 to 15.02.2026	0	118	12	0	0	0	0	0	13	0	143
மொத்தம்	620	309	17	4	50	2	38	22	23	71	1156

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து பணியில் இருக்கும் போது காலமானஅலுவலர்கள் / பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு *2021* முதல் *2026* வரை கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்ட விவரங்கள் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பதிவு செய்து,

மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பிக்கின்றது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

****

பொ.து.ந.க.எண்.பி15/0011/2026

தீர்மான எண்: 148/2026 **பொருள் எண்.28**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை (ஓய்வூதியப்பிரிவு) - பொங்கல் பண்டிகை 2026 - ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பரிசு வழங்குதல் அரசாணை வெளியிடப்பட்டது - பெருநகர சென்னை மாநகராட்சி ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகை ரூ.1000 / - வழங்கப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

அரசாணை எண்.2, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 01.01.2026-ன்படி C மற்றும் D பிரிவு பணியாளர்களாக இருந்து ஓய்வு பெற்ற மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) உட்பட அனைத்து C மற்றும் D பிரிவு அரசு ஓய்வூதியதாரர்கள் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் *(Ad-hoc Pensioners of all categories)* மற்றும் அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்கள் அதாவது ஓய்வூதியதாரர்கள் எந்த பணியாளர் பிரிவில் ஓய்வு பெற்றிருந்தாலும் / பணியாளர்கள் பணியிடை மரணம் அடைந்திருந்தாலும், ஒட்டு மொத்த பொங்கல் பரிசுத் தொகையாக ரூ.1000/- (ரூபாய் ஓராயிரம் மட்டும்) வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

2) மேற்படி பரிசுத் தொகை ஏற்கனவே தற்காலிக ஓய்வூதியம் பெற்று வரும் C மற்றும் D பிரிவு ஓய்வூதியதாரர்களுக்கும் பொருந்தும் என்றும், 01.01.2026 நாளன்றோ அல்லது அதற்கு பின்னரோ பணியிலிருந்து ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது. தற்காலிக ஓய்வூதியம் பெறுபவர்களின் C and D பிரிவு ஓய்வூதியதாரர்கள் எவரும் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

3) மேலும் 01.10.2024 நாளன்று வரையிலான கால அளவில் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள / பணியிலிருக்கையில் இறந்துவிட்டவர்களைப் பொருத்தவரையில் மேலே படிக்கப்பட்ட அரசாணையின்படி அவர்களுக்கு தற்காலிக மிகை ஊதியம் வழங்கப்பட்டிருக்குமேயாயின், அவர்கள் இந்தப் பொங்கல் பரிசுத் தொகை பெற தகுதியுடையவர்கள் ஆக மாட்டார்கள். இதற்காக இந்த ஓய்வூதியதாரர்களுக்கு தொகை வழங்குவதற்கு முன் சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து தொகை வழங்கப்படவில்லை என்பது குறித்து சான்றிதழைப் பெறப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கெள்ளப்படுகிறது.

4) மேலும் இந்த ஆணை பின்வரும் வகையிலான ஓய்வூதியதாரர்களுக்குப் பொருந்தாது எனவும் குறிப்பிட்டுள்ளது.

அ. உலேமா உதவித்தொகைகள், மாநில சுதந்திர போரட்ட வீரர்களுக்கான உதவித்தொகை பெறுபவர்கள், புகழ்பெற்ற அறிஞர்கள் மற்றும் சிறந்த மனிதர்களுக்கான சமூக உதவித் தொகைகள் போன்ற சிறப்பு ஓய்வூதியதாரர்கள்.

ஆ. பணியில் இருக்கும் பணியாளர்களுக்கு பொருந்தக்கூடியவறான தற்காலிக மிகை ஊதியம் *(Ad-hoc Bonus)* / சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் *(Special Ad-hoc Bonus)* பெறுகின்ற கருணை அடிப்படையில் நியமனம் பெற்றுள்ள குடும்ப

ஓய்வூதியதாரர்கள்.

இ. *A* மற்றும் *B* பிரிவு பதவிகளிலிருந்து ஓய்வு பெற்ற அனைத்து அரசு ஓய்வூதியதாரர்கள், அனைத்திந்திய பணி அலுவலர்கள், பல்கலைக்கழக மானியக்குழு/ அனைத்திந்திய தொழில்நுட்ப கல்விக்குழு / இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் ஆகியவற்றின் கட்டுபாட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அலுவலர்கள் உட்பட.

பெருநகர சென்னை மாநகராட்சியில் *2025* டிசம்பர் மாத கணக்கின்படி ஓய்வூதியர்கள் *8560*, குடும்ப ஓய்வூதியர்கள் *7712* மொத்தம் *16272* நபர்கள் உள்ளனர். இவர்களுக்கு அரசாணைப்படி பொங்கல் பரிசுத் தொகை பெற தகுதியான *C* மற்றும் *D* பிரிவு ஓய்வூதியதாரர்கள் *7188* நபர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் *6185* நபர்கள் மொத்த நபர்கள் *13373* என கணக்கிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள *C* மற்றும் *D* பிரிவு ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகையாக **ரூ.*1000/-*** வீதம் *13,373* நபர்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.*1,33,73,000/-* (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து மூன்று இலட்சத்து எழுபத்து மூன்றாயிரம் மட்டும்) செலவிடப்பட்டது.

மேற்படி அரசாணை அனுமதிக்கப்பட்ட *2025* ஆம் ஆண்டிற்கான பொங்கல் பரிசாக ரூ.*1000/-* (ரூபாய் ஓராயிரம் மட்டும்) பெற்று வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளதால் பெருநகர சென்னை மாநகராட்சியில் தகுதியான *C* மற்றும் *D* பிரிவு ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு ஜனவரி *2026* மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்கப்பட்டமைக்கு ஆணையர் அவர்களின் *09.01.2026* நாளிட்ட ஆணை பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்பொழுது நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.71/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1 / 0183 / 2026

தீர்மான எண்: 149/2026 **பொருள் எண்.29**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் – 1 மற்றும் மண்டலம் – 4, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புதிய அறிவிப்பு - திருவொற்றியூர் நெடுஞ்சாலையை வள்ளலார் நெடுஞ்சாலை என பெயர் மாற்றம் செய்வதற்கு அரசாணை வேண்டி அரசிற்கு கடிதம் அனுப்பியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9 அவர்களின் செய்தி வெளியீடு எண்.256, நாள்.01.02.2026-ன் கடிதத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள புதிய அறிவிப்பில்,

- வள்ளலார் பிறந்தநாள் தனிப்பெரும் கருணை நாள்
- ஓராண்டு தொடர்கொண்டாட்டமாக வள்ளலார் முப்பெரும் விழா
- வள்ளலார் வாழ்ந்த மருதூர் இல்லம் புனரமைப்பு என

வள்ளலாரின் புகழைப் போற்றுவதன் தொடர்ச்சியாக, அயல்நாட்டினரிடமும் வள்ளலாரின் உயரிய கருத்துகளைக் கொண்டு சேர்த்திட வரும் பிப்ரவரி 15-ஆம் நாள் சென்னை கீழ்ப்பாக்கம் ஏகாம்பரநாதர் பள்ளி வளாகத்தில் அனைத்துலக வள்ளலார் மாநாடு 2026 நடத்தப்படும் என்றும், மேலும், வள்ளலார் நெறியாளர்களின் கோரிக்கையை ஏற்று, திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு வள்ளலார் நெடுஞ்சாலை எனப் பெயர் சூட்டப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை, நாள்.11.07.2022-ன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட) நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு சொந்தமான இடங்களில் உள்ள சாலைகள், கட்டடங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் போன்றவற்றிற்கு பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றுவது தொடர்பான முன்மொழிவுகளை முதன்மைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநர் / பேரூராட்சிகளின் ஆணையாளர் ஆகியோர் வழியாக அரசிற்கு அனுப்பப்பட வேண்டும் எனவும், அரசின் அனுமதி பெற்ற பின்னரே நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களுக்கு பெயரிடுவது மற்றும் பெயர் மாற்றம் குறித்த தீர்மானங்கள்

சம்பந்தப்பட்ட மன்றங்கள் / மாமன்றங்களில் ஒப்புதலுக்கு வைக்கப்பட வேண்டும் என அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அறிவுறுத்தி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-*1* மற்றும் மண்டலம்-*4* ஆகியவற்றில் அமைந்துள்ள திருவொற்றியூர் நெடுஞ்சாலையை **வள்ளலார் நெடுஞ்சாலை** என பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு அரசாணை வேண்டி அரசு முதன்மைச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு இவ்வலுவலக *02.02.2026* நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-*1* மற்றும் மண்டலம்-*4* ஆகியவற்றில் அமைந்துள்ள திருவொற்றியூர் நெடுஞ்சாலையை **"வள்ளலார் நெடுஞ்சாலை"** என பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு அரசாணை வேண்டி அரசிற்கு கடிதம் அனுப்பியமைக்கு, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.62/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

****

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ 6/260/2026

தீர்மான எண்: 150/2026

பொருள் எண்.30

பெருநகர சென்னை மாநகராட்சி-நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-4 வார்டு-44 கடை எண்.633 A. இராணி அம்மையார் தெரு, வியாசர்பாடி சென்னை 39 பெரம்பூர் கிராமம் பிளாக் எண்.42 சார்வே எண்.779/2ல், பிளாட் எண் 296 மூலதன நிதியில் (Capital Fund) ரூ.18.70 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 387 சதுர அடி (அல்லது) 35.95 ச.மீ பரப்பளவு கொண்ட கட்டிடத்தை நியாயவிலை கடை (எண்.02CF010NC) நடத்த டாக்டர் அம்பேத்கர்

<u>கூட்டுறவு பண்டகசாலை லிட் எக்ஸ்.என்.சி.567 கூட்டுறவு சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்து - வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி.</u>

கூட்டுறவு சார்பதிவாளர்/ செயலாட்சியர் டாக்டர் அம்பேத்கர் கூட்டுறவு பண்டகசாலை லிட் எக்ஸ்.என்.சி.567 அவர்களின் 05.02.2026 நாளிட்ட கடிதத்தில், பெரம்பூர், மண்டலம்-4, வார்டு-44ல் உள்ள நியாயவிலைக் கடை முகவரி எண்.633A, இராணி அம்மையார் தெரு, வியாசர்பாடி, சென்னை-39 அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் புதிய பல்நோக்கு கட்டிடத்தினை நியாயவிலை கடை (எண்.02CF010NC) நடத்துவதற்கு ஏதுவாக புதிய கட்டிடத்தினை டாக்டர் அம்பேத்கர் கூட்டுறவு பண்டகசாலை லிட் எக்ஸ்.என்.சி.567க்கு ஒதுக்கீடு செய்து தருமாறு கோரப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4 முதுநிலை வருவாய் அலுவலர் அவர்களின் 11.02.2026 நாளிட்ட குறிப்பில், கட்டிடம் அளவீடு செய்யப்பட்டதில், தரை தளம் 387 சதுர அடிகளாக உள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய்துறை, அடிப்படை தெரு விலையின் படி (கணினி பதிவேட்டின்) வரிவிதிப்பு வணிக பகுதி சதுர அடிக்கு ரூ.7.50/- பைசா என உள்ளது. இதனை 387X 7.50 = 2902.50 (Rounded off Rs.2905) என நிர்ணயம் செய்யலாம் எனவும், மேற்படி இடத்தில், கட்டப்பட்டுள்ள கட்டிடத்தினை டாக்டர் அம்பேத்கர் கூட்டுறவு பண்டகசாலை லிட் எக்ஸ்.என்.சி.567க்கு வாடகை நிர்ணயம் வணிகபகுதி சதுர அடிக்கு ரூ.7.50/- பைசா என(கணினி பதிவேட்டின் படி) உள்ளது. 387X 7.50 2902.50 (Rounded off Rs. 2905)-(MRV) ஒதுக்கீடு செய்வதற்கு மண்டலம்-4ன் வார்டு குழுவின் பின்னேற்பு தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

மேலும், மண்டலம்-4, வார்டு-44 எண். 633 A, இராணி அம்மையார் தெரு, வியாசர்பாடி, சென்னை 39, பெரம்பூர் கிராமம், பிளாக் எண்.42 சார்வே எண்.779/2ல், பிளாட் எண்.296 மூலதன நிதியில் (Capital Fund) ரூ.18.70 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 387 சதுர அடி (அல்லது) 35.95 ச.மீ பரப்பளவு கட்டிடத்தை நியாயவிலை கடை (எண்.02CF010NC) நடத்த டாக்டர் அம்பேத்கர் கூட்டுறவு பண்டகசாலை லிட் எக்ஸ்.என்.சி.567 சங்கம் கோரியதின் அடிப்படையில் பொது மக்கள் நலன் கருதி வியாபாரம் மற்றும் லாப நோக்கமின்றி செயல்படும் டாக்டர். அம்பேத்கர் கூட்டுறவு சங்கத்திற்கு, ஒதுக்கீடு செய்யவும், சதுர அடி 387 X 7.50 = 2902.50 (Round off ரூ.2905/+ GST 18% ரூ.523/- ஆக மொத்தம் ரூ.3,428/- வாடகையாக (MRV) நிர்ணயம் செய்து மன்றத்தின் அனுமதி பெற்று தருமாறு குறிப்பு அனுப்பப்பட்டது.

எனவே, மேற்குறிப்பிடப்பட்டுள்ள மண்டலம்-4, வார்டு-44 எண். 633 A, இராணி அம்மையார் தெரு, வியாசர்பாடி, சென்னை 39, பெரம்பூர் கிராமம், பிளாக் எண்.42 சர்வே எண்.779/2ல், பிளாட் எண்.296 மூலதன நிதியில் (Capital Fund) ரூ.18.70 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 387 சதுர அடி (அல்லது) 35.95 ச.மீ பரப்பளவு கட்டிடத்தை நியாயவிலை கடை (எண்.02CF010NC) நடத்த டாக்டர் அம்பேத்கர் கூட்டுறவு பண்டகசாலை லிட் எக்ஸ்.என்.சி.567 சங்கத்திற்கு மாத வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால், THE TAMIL NADU URBAN LOCAL BODIES RULES, 2023,

[G.O. Ms. No. 45, Municipal Administration and Water Supply (Election) Department, 12th April 2023-விதிகளின் படி கட்டிடத்தில் தரைத்தளம் *(387* சதுர அடி*)* கொண்ட கட்டிடத்தினை மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பரிந்துரைக்கப்படுகிறது.

1. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதி 2023 பிரிவு 316ன்படி மூன்றாண்டு காலத்திற்கு மட்டுமே ஒதுக்கீடு பொருந்தும். 387 சதுரடி பரப்பளவுள்ள கட்டிடத்திற்கு மாத வாடகை ரூ.2905/ + GST 18% ரூ.523/- ஆக மொத்தம் ரூ.3.428 /- (ரூ.2905/-ன் தொகையை 12 மாதத்திற்கு முன் பணமாக ரூ.34860/-) செலுத்த வேண்டும் என்றும்,
2. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைத் தொகையில் 15 சதவீதம் உயர்த்தப்படும்,
3. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும்.
4. மாத வாடகையினை ஒவ்வொரு மாதமும் மாதத்தின் 5ஆம் தேதிக்குள் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ல் செலுத்த வேண்டும்.
5. பின்வரும் காலங்களில் மாநகராட்சிக்கு தேவை ஏற்படின் உடனடியாக மூன்று மாதத்திற்குள் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன்

மேற்படி உள்ள கட்டிடத்தினை டாக்டர் அம்பேத்கர் கூட்டுறவு பண்டகசாலை லிட் எக்ஸ்.என்.சி.567 சங்கத்திற்கு மாத வாடகை அடிப்படையில் நிர்ணயம் செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.60/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/2558-1/2025

தீர்மான எண்: 151/2026 **பொருள் எண்.31**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-4 -கோட்டம் 48 மற்றும் மண்டலம்- 5 ல் கோட்டம்-50,52,53, மற்றும் 54ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் தற்போது இயங்கி வரும் கூட்டுறவு பண்டக சாலைகள் மற்றும் நியாய விலைக்கடைகளுக்கு மாத வாடகை மறுநிர்ணயம் மற்றும் வாடகையில்லா கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி.

துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) அவர்களின் கடிதத்தில், தலைவர் வரி விதிப்பு (ம) நிதி அவர்கள் *25.08.2025* அன்று நடைப்பெற்ற கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் அரசின் கூட்டுறவு பண்டகசாலைகள் மற்றும் பல நியாயவிலைக்கடைகள் வாடகை நிர்ணயம் செய்யப்படாமலும் மற்றும் குறைவான வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாலும், இதனை முறைப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை இராயபுரம் மண்டலத்தில் பெறப்பட்ட பட்டியலில் மண்டலம்-*4* -கோட்டம் *48*, மண்டலம் *5*- கோட்டம்-*50*, *52*, *53*, மற்றும் *54*ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் இயங்கி வரும் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் நியாய விலைக்கடைகளுக்கு மாத வாடகை மறுநிர்ணயம் மற்றும் வாடகையில்லா கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்ய, *THE TAMIL NADU URBAN LOCAL BODIES RULES, 2023, [G.O. Ms. No. 45, Municipal Administration and Water Supply (Election) Department, 12th April 2023*-விதிகளின் படி கீழ்கண்ட கட்டிடங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

வ எண்,	மண்டலம்	வார்டு	கடை முகவரி	கடை பெயர்	கடை எண்	தளம்	சதுர அடி	மாத வாடகை	*GST 18%*	*12* மாத வாடகை
1	4	48	*1*, பார்த்தசாரதி தெரு, சென்னை-*21*	Nomco	02BE017 NC	G F	600	3600	648	43200
2	4	48	*1*, பார்த்தசாரதி தெரு, சென்னை-*21*	Nomco	02BE018 NC	G F	600	3600	648	43200
3	4	48	கன்னிகோவில் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, செ-*21*	Washermenpet Co-operative	02BF025 NC	G F	200	1200	216	14400
4	4	48	கன்னிகோவில் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, செ-*21*	Washermenpet Co-operative	02BF031 NC	G F	200	1200	216	14400

5	5	49	பாஷ்யம் தெரு, சென்னை-21	TNCSC	02BA005 NC	G F	240	1440	259	17280
6	5	49	91/2, ஜி.எ.ரோடு சென்னை-21	Washermenpet Co-operative	02BF007 NC	G F	200	1200	216	14400
7	5	50	52,எம்.எஸ் கோவில் தெரு, இராயபுரம், சென்னை-13	Washermenpet Co-operative	02BF002 NC	G F	450	2700	486	32400
8	5	50	எம்.எஸ் கோவில் தெரு, இராயபுரம்,சென்னை-13	Washermenpet Co-operative	02BF027 NC	G F	450	2700	486	32400
9	5	50	26, கிழக்குமாதா தெரு, இராயபுரம்,சென்னை-13	Fishermen Co-operative	02BH001 NC	G F	1200	14400	2592	172800
10	5	50	26, கிழக்குமாதா தெரு, இராயபுரம்,சென்னை-14	Fishermen Co-operative	02BH003 NC	G F	1200	14400	2592	172800
11	5	52	மசூதி தெரு, இராயபுரம்,சென்னை-13 (ஹாடம்ஸ் தெரு)	TNCSC	02BA004 NC	G F	200	1200	216	14400
12	5	52	47 எ, பழைய ஆட்டு தொட்டி ஓ.எச்.சாலை, சென்னை-21	Nomco	02BE001 NC	G F	658	3948	711	47376
13	5	53	சீனிவாசபுரம், 1வது தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-21	Nomco	02BE002 NC	G F	1200	7200	1296	86400
14	5	53	சீனிவாசபுரம், 1வது தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-21	Nomco	02BE003 NC	G F	1552	9312	1676	111744

எனவே, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, இராயபுரம் மண்டலத்தில் பெறப்பட்ட பட்டியலில் மண்டலம்-4 -கோட்டம் 48, மண்டலம் 5- கோட்டம்-50, 52, 53 மற்றும் 54ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் இயங்கி வரும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் நியாய விலைக்கடைகளுக்கு மாத வாடகை மறுநிர்ணயம் மற்றும் வாடகையில்லா கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்ய கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு,

1. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதி 2023 பிரிவு 316ன்படி மூன்றாண்டு காலத்திற்கு மட்டுமே ஒதுக்கீடு பொருந்தும்.
2. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைத் தொகையில் 15 சதவீதம் உயர்த்தப்படும்,
3. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும்.
4. மாத வாடகையினை ஒவ்வொரு மாதமும் மாதத்தின் 5ஆம் தேதிக்குள் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4 (ம) மண்டலம் 5ல் செலுத்த வேண்டும்.
5. பின்வரும் காலங்களில் மாநகராட்சிக்கு தேவை ஏற்படின் உடனடியாக மூன்று மாதத்திற்குள் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன்

மேற்படி உள்ள கட்டிடங்களில் நியாயவிலைக்கடைகளுக்கு மாத வாடகை அடிப்படையில் நிர்ணயம் செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.64/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.6.வ.து.ந.க.எண்.ஆர்1/0026/2026

தீர்மான எண்: 152/2026 **பொருள் எண்.32**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 6, கோட்டம் – 74, சந்திரயோகி சமாதி தெரு, சென்னை – 600 012ல் புதிதாக கட்டப்பட்ட சமுதாயக் கூடத்திற்கு - மன்றத்தின்

பின்னேற்பு அனுமதிக்கு உட்பட்டு வாடகை நிர்ணயம் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அனுமதிக்கப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 6, கோட்டம் – 74, பகுதி 17, சந்திரயோகி சமாதி தெரு, சென்னை – 600 012ல் 29764 ச.அடி கொண்ட மனையில் தரைதளம் 8634 ச.அடி (stilt floor), முதல் தளம் 8971 ச.அடி, இரண்டாம் தளம் 8922 ச.அடி, மூன்றாம் தளம் 1652 ச.அடி, மொட்டை மாடியில் 2035 ச.அடி, மொத்தம் 31114 ச.அடி கொண்ட பரப்பளவுடன் புதிதாக சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டுள்ளது. தரைதளத்தில் வாகனம் நிறுத்தும் இடம் மற்றும் சமையல் கூடம், முதல் தளத்தில் உணவு அருந்தும் கூடம் (சுமார் 175 நபர்கள் அமர்ந்து உணவருந்தும் வசதியுடன்) இரண்டாம் தளத்தில் திருமண நிகழ்ச்சி செய்யும் இடமாகவும் (சுமார் 500 பேர் அமரும் வசதியுடன்) மணமக்கள் அறைகளுடன் குளிர்சாதன வசதியுடன் உள்ளது மூன்றாம் தளத்தில் விருந்தினர்கள் தங்கும் அறைகள் மற்றும் கழிப்பிடங்கள் உள்ளது. இந்த சமுதாய நல கூடத்திற்கு அண்ணல் டாக்டர்அம்பேத்கர் திருமண மாளிகை என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்த சமுதாய நல கூடம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் நிதியிலிருந்து ரூ. 21.50 கோடி செலவினத்திலும் இந்த சமுதாய நல கூடம் குளிர்சாதன வசதியுடன் கட்டப்பட்டுள்ளது. தரைதளம் வாகன நிறுத்தம் மற்றும் சமையல் கூடம், முதல் தளம் உணவு அருந்தும் கூடம், இரண்டாம் தளம் நிகழ்ச்சி நடத்தும் இடம், மூன்றாம் தளம் விருந்தினர் அறைகள், மின்சார இணைப்பு, மின் தூக்கிகள் (goods lift 1 nos , public lift 1nos) மின் விளக்கு, கழிவறை, மின் விசிறி, ஜெனரேட்டர், குடிநீர் இணைப்பு மற்றும் சமையல் அறை, போன்ற அத்தியாவசிய வசதிகள் அமைய பெற்றுள்ளன. இந்த சமுதாய நல கூடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29-01-2026 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இது குறித்து சமர்ப்பிப்பது, முதல் அரையாண்டு 2022-2023 சொத்து வரி பொது சீராய்வின் படி மேற்கண்ட சமுதாய நலக்கூடம் அமைந்துள்ள இடத்திற்கு வணிக பயன்பாட்டிலான அடிப்படை தெரு கட்டணம் ரூ. 7.50 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மேற்கண்ட சமுதாய நல கூடத்திற்கு கீழ்கண்ட கணக்கீட்டின் படி வாடகை நிர்ணயம் செய்ய ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டுள்ளது.

கணக்கீட்டு விவரம்

கட்டிடத்தின் விவரம்

தளம்	பரப்பளவு
தரைதளம் (stilt floor)	8634 ச.அடி
முதல் தளம்	8971ச.அடி

இரண்டாம் தளம்	8922 ச.அடி
3வது தளம்	1652 ச.அடி
மொட்டை மாடி கட்டுமானம்	2935 ச.அடி
மொத்த பரப்பளவு	31114 ச.அடி

கட்டிடத்தின் மொத்த சதுரடி 31114. ச.அடி x7.50x12 =ரூ.70006 (அ) ரூ. 70,000/-

ஆண்டுக்கு 40 நிகழ்ச்சிகள்

ஒரு நாள் வாடகை ரூ.70,000/- (சரக்கு மற்றும் சேவை வரி தனியே)

அரைநாள் வாடகை ரூ. 35,000/- (சரக்கு மற்றும் சேவை வரி தனியே)

நிகழ்ச்சி ஒன்றுக்கு முன்வைப்பு தொகையாக ரூ. 20,000/- நிர்ணயம் செய்யலாம்.

<u>பிற நிபந்தனைகள்.</u>

1. அரசியல் நிகழ்ச்சிகள், வணிக ரீதியான நிகழ்ச்சிகள் போன்றவைகளுக்கு அனுமதி கிடையாது.
2. பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டிற்காக அலுவலர் கூட்டங்கள் இயற்கை இடர்பாடுகளின் போது பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் தேர்தல் பணிகள் போன்ற தவிர்க்க முடியாத அவசர நிகழ்வுகளில் சமுதாய நல கூடம் தேவைப்படின் மனுதாரருக்கு வழங்கப்படும் முன்பதிவானது ரத்து செய்யப்படும்.
3. ஒதுக்கீடு பெற்ற நிகழ்ச்சிக்காக மட்டுமே சமுதாய நல கூடம் பயன்படுத்திட வேண்டும்.
4. சமுதாய நல கூடத்திற்குள் உள்ள பொருட்களை சேதப்படுத்தினால் அதற்குரிய தண்டத் தொகை வசூலிக்கப்பட்டு முன்வைப்புத் தொகையிலிருந்து நேர் செய்யப்படும்.
5. சமூக நல கூட ஒதுக்கீட்டிற்கான பொதுவான அனைத்து நிபந்தனைகள்

மேற்கண்ட சமுதாயநலக்கூடம் மாண்புமிகு முதலைமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. எனவே, கோட்டம் – 74, பகுதி 17, சந்திரயோகி சமாதி தெரு, சென்னை – 600 012ல் புதிதாக கட்டப்பட்டுள்ள அண்ணல் டாக்டர் அம்பேத்கர் திருமண மாளிகை சமுதாய நலக் கூடத்திற்கு ஒரு நாள் வாடகை ரூ.70,000/- (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) (சரக்கு மற்றும் சேவை வரி தனியே) எனவும், அரை நாள் வாடகை ரூ. 35,000/- (ரூபாய் முப்பத்து ஐந்தாயிரம் மட்டும்) எனவும் (சரக்கு மற்றும் சேவை வரி தனியே) GST நிர்ணயம் செய்யவும் முன்வைப்புத் தொகையை ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) ஆக நிர்ணயம் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தமைக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.65/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

****

நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ1/0271/2026

தீர்மான எண்: 153/2026 **பொருள் எண்.33**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் – 4, வார்டு– 41ல் சுண்ணாம்பு கால்வாய் பகுதியில் நடைபெற்று வரும் பல்வகை விளையாட்டுகளை உள்ளடக்கிய மாபெரும் விளையாட்டு வளாக அரங்கத்திற்கு "கலைஞர் நூற்றாண்டு விளையாட்டு வளாகம் " என பெயர் சூட்டுவதற்கு அரசின் ஒப்புதலை எதிர் நோக்கி மன்றத்தின் அனுமதி.

திரு. ஜே. ஜே. எபினேசர், ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் *12.02.2026* நாளிட்ட கடிதத்தில், ஆர். கே. நகர் சட்டமன்ற தொகுதி மண்டலம் – *4*, பகுதி – *10*, வார்டு – *41*, சுண்ணாம்பு கால்வாய் பகுதியில் நடைபெற்று வரும் பல்வகை விளையாட்டுகளை உள்ளடக்கிய மாபெரும் விளையாட்டு வளாகம் கட்டும் பணிகள் அனைத்தும் முடிவடைந்து திறப்பு விழாவிற்கு தயாராகி வருவதாகவும், இவ்விளையாட்டு அரங்கத்திற்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு புகழ்சேர்க்கும் வண்ணம் "கலைஞர் நூற்றாண்டு விளையாட்டு வளாகம்"என பெயர் சூட்ட ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை, நாள்.11.07.2022-ன்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட) நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு சொந்தமான இடங்களில் உள்ள சாலைகள், கட்டடங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் போன்றவற்றிற்கு பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றுவது தொடர்பான முன்மொழிவுகளை முதன்மைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநர் / பேரூராட்சிகளின் ஆணையாளர் ஆகியோர் வழியாக அரசிற்கு அனுப்பப்பட வேண்டும் எனவும், அரசின் அனுமதி பெற்ற பின்னரே நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களுக்கு பெயரிடுவது மற்றும் பெயர் மாற்றம் குறித்த தீர்மானங்கள்

சம்பந்தப்பட்ட மன்றங்கள் / மாமன்றங்களில் ஒப்புதலுக்கு வைக்கப்பட வேண்டும் என அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அறிவுறுத்தி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 4, பகுதி - 10, வார்டு - 41, சுண்ணாம்பு கால்வாய் பகுதியில் பல்வகை விளையாட்டுகளை உள்ளடக்கிய மாபெரும் விளையாட்டு வளாகம் கட்டும் பணிகள் அனைத்தும் முடிவடையும் தருவாயில் உள்ளதால், இவ்விளையாட்டு அரங்கத்திற்கு **"கலைஞர் நூற்றாண்டு விளையாட்டு வளாகம்"** என பெயரினை சூட்டுவதற்கு அரசின் ஒப்புதலை எதிர் நோக்கி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.59/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம். மரியாதைக்குரிய 4வது மண்டல வார்டுகுழு தலைவர் திரு.உ. கணேசன் (எ) நேதாஜி உ. கணேசன் / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.38.

திரு.உ. கணேசன் (எ) நேதாஜி உ. கணேசன்

மண்டலம் – 4, வார்டு– 41ல் சுண்ணாம்பு கால்வாய் பகுதியில் நடைபெற்று வரும் பல்வகை விளையாட்டுகளை உள்ளடக்கிய மாபெரும் விளையாட்டு வளாக அரங்கத்திற்கு "கலைஞர் நூற்றாண்டு விளையாட்டு வளாகம்" என பெயர் சூட்டுவதற்கு அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி மன்றத்தின் அனுமதி வேண்டி இப் பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும் மண்டலம்-4ன் சார்பாக நன்றியினை தெரிவித்து கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

தீர்மானத்தை ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ1/0273/2026

தீர்மான எண்: 154/2026 **பொருள் எண்.34**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்- 9, வார்டு எண் - 112ல் மத்திய நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் வெள்ளாளர் தெருவில் புதியதாக சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டு தற்போது திறக்கப்பட உள்ள மாளிகைக்கு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் மறைந்த "பேரறிஞர் அண்ணா திருமண மாளிகை" என அவர்களின் பெயரினை சூட்ட மன்றத்தின் அனுமதி.

உதவி ஆணையர் (முதுநிலை) அவர்களின் 14.02.2026 நாளிட்ட குறிப்பில், மண்டலம் – 9, பகுதி-26, வார்டு-112, மத்திய நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் வெள்ளாளர் தெருவில் புதிதாக சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டு தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் பராமரிக்கப்படவுள்ளது. இச்சமுதாய நலக்கூடம் விரைவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட உள்ளதாகவும், மண்டலம்-9 வார்டு குழு பரிந்துரை தீர்மானம் மற்றும் மாமன்ற உறுபினர் வார்டு 110 (ம) தலைவர், நிலைக்குழு பணிகள் மற்றும் பொதுமக்களின் பரிந்துரையினை ஏற்று தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் இச்சமுதாய நலக்கூடத்திற்கு "பேரறிஞர் அண்ணா திருமண மாளிகை" என பெயர் சூட்டி, அவரது புகழினை பறைசாற்றும் வகையில் அவர் ஆற்றிய தொண்டினை பெருமைப்படுத்தும் வகையில் சமுதாய நலக்கூடத்திற்கு "பேரறிஞர் அண்ணா திருமண மாளிகை " என பெயர் சூட்ட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மண்டலம்-9 வார்டு குழு ஒப்புதல் பொருள் எண்.33 தீர்மானம் எண்.269ல் மத்திய நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் வெள்ளாளர் தெருவில் புதியதாக சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டு தற்போது திறக்கப்பட உள்ள மாளிகைக்கு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் மறைந்த "பேரறிஞர் அண்ணா திருமண மாளிகை" என அவர்களின் பெயரினை சூட்ட மன்றத்தின் அனுமதி பெற பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-9 வார்டு குழு பரிந்துரை தீர்மானம் மற்றும் தலைவர். நிலைக்குழு (பணிகள்) வார்டு-110 மாமன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்களின் பரிந்துரையின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்- 9, பகுதி -26, வார்டு எண் - 112ல் வெள்ளாளர் தெருவில் புதியதாக சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டு தற்போது திறக்கப்பட உள்ள திருமண மாளிகைக்கு "பேரறிஞர் அண்ணா திருமண மாளிகை" என பெயர் சூட்டுவதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.68/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நி.ம.உ.து.நா.க.எண்.எல்.இ1/0272/2026

தீர்மான எண்: 155/2026 **பொருள் எண்.35**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்- 9, வார்டு எண் - 120ல் மாநிலங்களவை உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் டாக்டர் பெசன்ட் சாலையில் புதியதாக சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டு திறக்கப்பட உள்ள மாளிகைக்கு மறைந்த அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகை"என அவர்களின் பெயரினை சூட்ட மன்றத்தின் அனுமதி.

உதவி ஆணையர் (முதுநிலை) அவர்களின் 14.02.2026 நாளிட்ட குறிப்பில், மண்டலம்-9, பகுதி-27, வார்டு-120ல் மாநிலங்களவை உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் டாக்டர் பெசன்ட் சாலையில் புதியதாக சமுதாய நலக்கூடம் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் பராமரிக்கப்படவுள்ளது. தற்போது இச்சமுதாய நலக்கூடம் விரைவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட உள்ளதாகவும், மண்டலம்-9 வார்டு குழு பரிந்துரை தீர்மானம் மற்றும் மாமன்ற உறுப்பினர் வார்டு-110 (ம), தலைவர், நிலைக்குழு பணிகள் மற்றும் பொதுமக்களின் பரிந்துரையினை ஏற்று நாட்டு மக்களுக்கும். அனைத்து தரப்பு மக்களின் முன்னேற்றத்திற்கும் இந்திய அரசியல் சட்டத்தினை படைத்தவருமான சட்ட வல்லுநர் பொருளாதார நிபுணர் மற்றும் சமுக சீர்திருத்தவாதியான அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சேவையை போற்றும் வகையிலும், அவரின் புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையிலும் இச்சமுதாய நலக்கூடத்திற்கு "அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகை" என பெயர் சூட்டி பறைசாற்றும் வகையில் அவர் ஆற்றிய அவரது புகழினை பெருமைப்படுத்தும் வகையில் சமுதாய நலக்கூடத்திற்கு "அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகை" என பெயர் சூட்ட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது

மண்டலம்-9 வார்டு குழு ஒப்புதல் பொருள் எண்.33 தீர்மானம் எண்.269,ல் மாநிலங்களவை உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் டாக்டர் பெசன்ட் சாலையில் புதியதாக சமுதாய நலக்கூடம் கட்டப்பட்டு திறக்கப்பட உள்ள மாளிகைக்கு மறைந்த "அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகை"என அவர்களின் பெயரினை சூட்ட மன்றத்தின் அனுமதி பெற பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-9 வார்டு குழு பரிந்துரை தீர்மானம் மற்றும் தலைவர். நிலைக்குழு (பணிகள்) வார்டு-110 மாமன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்களின் பரிந்துரையின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, பகுதி-27, வார்டு -120ல் டாக்டர் பெசன்ட் சாலையில் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்திற்கு "அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகை" என பெயர் சூட்டுவதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.67/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ1/0234/2026

தீர்மான எண்: 156/2026 **பொருள் எண்.36**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் – 13, வார்டு - 169ல் சின்னமலை, வெங்கடாபுரம் பகுதியில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாக கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ள சமூக நலக் கூடத்திற்கு "கலைஞர் மு. கருணாநிதி திருமண மண்டபம்" என அவர்களின் பெயரினை சூட்டுவதற்கு அரசின் ஒப்புதலை எதிர் நோக்கி மன்றத்தின் அனுமதி.

திரு. சைதை. மு. மகேஷ் குமார், துணை மேயர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 02.02.2026 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, தனது வார்டு - 169ல், சின்னமலை, வெங்கடாபுரம் பகுதியில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி ரூபாய். 3.10 கோடி

மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ள சமூக நலக் கூடத்திற்கு "கலைஞர் மு. கருணாநிதி திருமண மண்டபம்" என பெயர் சூட்டுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை, நாள்.11.07.2022-ல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மேற்குறிப்பிட்ட சட்டப் பிரிவுகளுக்குட்பட்டு, மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு சொந்தமான சாலைகள், தெருக்கள், பேருந்து நிலையங்கள், கட்டடங்கள், பூங்காக்கள், விளையாடுமிடங்கள் முதலியவற்றிற்கு பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றுவது தொடர்பான முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர் / பேரூராட்சிகள் ஆணையாளர் வழியாக அரசிற்கு அனுப்பப்பட வேண்டும் எனவும், அரசின் அனுமதி பெற்ற பின்னரே பெயரிடுவது மற்றும் பெயர் மாற்றம் குறித்த தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட மாமன்றங்களின் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட) நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு சொந்தமான இடங்களில் உள்ள சாலைகள், கட்டடங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் போன்றவற்றிற்கு பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றுவது தொடர்பான முன்மொழிவுகளை முதன்மைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநர் / பேரூராட்சிகளின் ஆணையாளர் ஆகியோர் வழியாக அரசிற்கு அனுப்பப்பட வேண்டும் எனவும், அரசின் அனுமதி பெற்ற பின்னரே நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களுக்கு பெயரிடுவது மற்றும் பெயர் மாற்றம் குறித்த தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட மன்றங்கள் / மாமன்றங்களில் ஒப்புதலுக்கு வைக்கப்பட வேண்டும் என அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அறிவுறுத்தி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, வார்டு - 169-ல் சின்னமலை, வெங்கடாபுரம் பகுதியில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாக கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ள சமூக நலக் கூடத்திற்கு **"கலைஞர் மு. கருணாநிதி திருமண மண்டபம்"** என பெயரினை சூட்டுவதற்கு அரசின் ஒப்புதலை எதிர் நோக்கி, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.61/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/0174/2026

தீர்மான எண்: 157/2026 **பொருள் எண்.37**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் – 11, வார்டு - 150ல் மவுண்ட் பூந்தமல்லி டிரங்க் ரோடு,, மதுரவாயல் வட்டம், காரம்பாக்கம் கிராமம், சர்வே எண். 50/1A 2A1 - மொத்த விஸ்தீரணம் 97 சதுரடி தனியார் பட்டா நிலத்தில் பேரறிஞர் பெருந்தகை C.N அண்ணாதுரை மற்றும் முத்தமிழறிஞர், டாக்டர் கலைஞர் மு கருணாநிதி அவர்களின் திருவுருவ வெண்கல சிலைகள் அமைத்திட மாவட்ட அளவிலான குழுவில் உள்ள உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்று தொடர் நடவடிக்கையாக அரசின் ஒப்புதல் பெற வேண்டி வருவாய் நிர்வாக ஆணையருக்கு உரிய முன்மொழிவு அனுப்பப்பட்டது - மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

காரம்பாக்கம் திரு. க. கணபதி, மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் *28.01.2026* நாளிட்ட மனுவில், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றி வருவதாகவும், சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டம், காரம்பாக்கம் கிராமம், சர்வே எண். *50/1A2A*,பட்டா எண் *2935*, *97* சதுரடி அளவுக் கொண்ட நிலத்தை, *M*. விஜயலட்சுமி அவர்களிடமிருந்து சரியான பிரதிபலனுக்கு சுத்த கிரையம் பெற்று, அந்த கிரைய பத்திரமானது, சைதாப்பேட்டை இணை - சார் பதிவு அலுவலகத்தில் *23.01.2026* அன்று பத்திர எண். *673/2026*, ஆக பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் மூலம் கிரையம் பெற்று, தனது பெயரில் முறையாக பட்டா, பட்டா எண். *2935* ஆக வழங்கப்பட்டு தனது சுவாதீனத்தில் அனுபவித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

தமிழ்நாட்டின் முதலமைச்சராக மக்கள் பணியாற்றி வரும் நம் மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் பெற்று தந்தவரும், சமூக நீதிக்காகவும் தமிழ்நாட்டின் மக்களின் வளர்ச்சிக்காவும், தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் பாடுபட்ட, பேரறிஞர் பெருந்தகை *C.N* அண்ணாதுரை மற்றும் தமிழ்நாட்டின் ஐந்து முறை முதலமைச்சராக மக்கள் பணியாற்றியவரும், உலகம் முழுவதுள்ள தமிழர்களின் ஒப்பற்ற தலைவரான, தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து பெற்று தந்த தன் வாழ்நாள் முழுவதும் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காகவும், வளர்ச்சிக்காவும் பாடுபட்ட நவீன தமிழகத்தின் சிற்பி, முத்தமிழறிஞர், டாக்டர் கலைஞர் மு கருணாநிதி அவர்களின் திருவுருவ வெண்கல சிலைகளை, தனக்கு சொந்தமான பட்டா நிலத்தில், அரசு வகுத்துள்ள விதிமுறைகளுக்குட்பட்டு, தன் சொந்த

செலவில் நிறுவி, தன் சொந்த செலவில் பாதுகாத்து பராமரித்துக் கொள்ள அனுமதி வேண்டப்பட்டுள்ளது

மேற்படி சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டம், "காரம்பாக்கம் கிராமம்", பழைய சர்வே எண்.50, பழைய பட்டா எண்.347, பட்டாப்படி சப்-டிவிஷன் பழைய சர்வே எண்.50/1A1 பார்ட், புதிய பட்டா எண்.2935, பட்டாப்படி புதிய சர்வே எண்.50/1A2A-க்கு சம்மந்தப்பட்ட "மவுண்ட்- பூந்தமல்லி டிரங்க் ரோடு", மொத்த வீஸ்தீரணம் 2016 சதுரடியில் சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட்-ன் நிறுவனம் மெட்ரோ ரயில் திட்டத்திற்கு எடுத்து கொண்டது போக மிகுதியுள்ள விஸ்தீரணத்தில் ஒரு பகுதியான முக்கோண வடிவிலான விஸ்தீரணம் 97 சதுரடி உள்ள காலி நிலத்தில் சிலைகள் நிறுவபடுவதால் போக்குவரத்திற்கு பாதிப்போ, பாதசாரிகளுக்கு இடைஞ்சலோ ஏற்பட வாய்ப்பில்லை என்றும், சிலை நிறுவுவதன் மூலம் எந்த விதமான சட்டம் ஒழுங்கு பிரச்சனையும் ஏற்படுவதற்கு துளியும் வாய்ப்பில்லை எனவும், அரசு நிலமோ, சாலையோரமோ எந்த வகையிலும் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை எனவும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் சிலை அமைப்பது தொடர்பாக, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நில அகற்றல் பிரிவு, நாள்.16.09.2025 அரசாணை (நிலை) எண்.629-ன் படி புதியதாக சிலைகள் மற்றும் கொடி கம்பங்கள் நிறுவுதல், ஏற்கனவே உள்ள சிலைகள் மற்றும் கொடி கம்பங்களை மாற்றுதல் / இடம் மாற்றம் செய்தல் தொடர்பாக நிலையான செயல்பாட்டு நடைமுறையை (SOP) வெளியிட்டுள்ளது. அதன் படி ஒவ்வொரு மாவட்ட அளவிலான குழுவானது மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைவராகவும், சென்னை மாவட்டத்திற்கு மட்டும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் தலைவராகவும் கீழ்கண்ட அலுவலர்கள் உறுப்பினர்களாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

<u>உறுப்பினர்கள்:</u>

1. காவல் துறை கூடுதல் ஆணையர் (சென்னை நகரம்)
2. காவல்துறை துணை ஆணையர், சம்மந்தப்பட்ட காவல் துறை மாவட்டம்
3. வட்டார துணை ஆணையர், சம்மந்தப்பட்ட மண்டலம் பெருநகர சென்னை மாநகராட்சி
4. உதவி ஆணையர், சம்மந்தப்பட்ட மண்டலம் பெருநகர சென்னை மாநகராட்சி
5. கோட்டப்பொறியாளர், மாநில நெடுஞ்சாலை துறை
6. செயற்பொறியாளர், பொதுப்பணி துறை

காரம்பாக்கம். திரு. க. கணபதி, மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் மனுவில் தெரிவித்துள்ளவாறு, மாநகராட்சி மண்டலம் – 11, வார்டு -150 ல் மவுண்ட் பூந்தமல்லி டிரங்க் ரோடு, சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டம், "காரம்பாக்கம் கிராமம்", பழைய சர்வே எண்.50, பழைய பட்டா எண்.347, பட்டாப்படி சப்-டிவிஷன் பழைய சர்வே எண்.50/1A1 பார்ட், புதிய பட்டா எண்., 2935 மொத்த வீஸ்தீரணம் 2016சதுர அடியில் சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட்- நிறுவனம் மெட்ரோ ரயில் திட்டத்திற்கு எடுத்து கொண்டது போக

மிகுதியுள்ள விஸ்தீரணத்தில் ஒரு பகுதியான முக்கோண வடிவிலான தற்போதைய புதிய பட்டா எண். 4234ன்படி புதிய சர்வே எண்.50/1A2A1ல் மொத்த விஸ்தீரணம் 97 சதுரடி உள்ள நிலத்தில் பேரறிஞர் பெருந்தகை C.N அண்ணாதுரை மற்றும் முத்தமிழறிஞர். டாக்டர் கலைஞர் மு கருணாநிதி அவர்களின் திருவுருவ வெண்கல சிலைகள் அமைக்கப்படவுள்ள இடமானது தனியரின் பட்டா நிலம் என தெரியவருகிறது. சிலைகள் அமையவுள்ள இடமானது போக்குவரத்திற்கோ, பொது மக்களுக்கோ பாதிப்பு ஏற்படுத்தாது என்றும், சட்டம்-ஒழுங்கு பிரச்சனை எழ வாய்ப்பு இல்லை என்றும், தெரியவருகிறது. எனவே, மேற்படி சிலையினை அமைக்க குழுவில் ஒப்புதல் வழங்கலாம் என மாவட்ட அளவிலான குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 11, வார்டு -150 ல் மவுண்ட் பூந்தமல்லி டிரங்க் ரோடு, சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டம், "காரம்பாக்கம் கிராமம்", பழைய சர்வே எண்.50, பழைய பட்டா எண்.347, பட்டாப்படி சப்-டிவிஷன் பழைய சர்வே எண்.50/1A1 பார்ட், புதிய பட்டா எண். 2935 மொத்த வீஸ்தீரணம் 2016சதுர அடியில் சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் நிறுவனம் மெட்ரோ ரயில் திட்டத்திற்கு எடுத்து கொண்டது போக மிகுதியுள்ள விஸ்தீரணத்தில் ஒரு பகுதியான முக்கோண வடிவிலான தற்போதைய புதிய பட்டா எண். 4234ன்படி புதிய சர்வே எண்.50/1A2A1ல் மொத்த விஸ்தீரணம் 97 சதுரடி உள்ள நிலத்தில் பேரறிஞர் பெருந்தகை C.N அண்ணாதுரை மற்றும் முத்தமிழறிஞர். டாக்டர் கலைஞர் மு கருணாநிதி அவர்களின் திருவுருவ வெண்கல சிலைகள் நிறுவுவதற்கு மாவட்ட அளவிலான குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு உரிய முன்மொழிகள் வருவாய் நிர்வாக ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் அவர்களுக்கு 02.02.2026 அன்று இவ்வலுவலக கடிதம் அனுப்பப்பட்டது.

எனவே, மண்டலம் – 11, வார்டு -150 ல் மவுண்ட் பூந்தமல்லி டிரங்க் ரோடு, மதுரவாயல் வட்டம், காரம்பாக்கம் கிராமம், சர்வே எண். 50/1A 2A1 - மொத்த விஸ்தீரணம் 97 சதுரடி தனியார் பட்டா நிலத்தில் பேரறிஞர் பெருந்தகை C.N அண்ணாதுரை மற்றும் முத்தமிழறிஞர். டாக்டர் கலைஞர் மு கருணாநிதி அவர்களின் திருவுருவ வெண்கல சிலைகள் நிறுவுவதற்கு வருவாய் நிர்வாக ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் அவர்களுக்கு கடிதம் அனுப்பியதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.63/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம். மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. வே. ராஜன் அவர்கள்.

திரு. வே. ராஜன்

மாண்புமிகு மேயர் அவர்களே, தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், உடன்பிறப்பே என்று ஒற்றை வார்த்தையின் மூலமாக உலக தமிழர்களை எல்லாம் ஒன்றிணைத்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொண்டு, எங்கள் மாண்புமிகு மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. க. கணபதி அவர்களின் முயற்சியில் மண்டலம் – 11, வார்டு -150 மவுண்ட் பூந்தமல்லி டிரங்க் ரோடு,, மதுரவாயல் வட்டம், காரம்பாக்கம் கிராமம், சர்வே எண். 50/1A 2A1 - மொத்த விஸ்தீரணம் 97 சதுரடி தனியார் பட்டா நிலத்தில் பேரறிஞர் பெருந்தகை C.N அண்ணாதுரை மற்றும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் திருவுருவ வெண்கல சிலைகள் அமைத்திட மாவட்ட அளவிலான குழுவில் உள்ள உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்று தொடர் நடவடிக்கையாக அரசின் ஒப்புதல் பெற வேண்டி வருவாய் நிர்வாக ஆணையருக்கு உரிய முன்மொழிவு அனுப்பப்பட்டது – மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி இப் பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக நான் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்து கொள்வது யாதெனில், வெண்கல சிலை அமைப்பதற்காக போரூர் நாற்சந்தி நடுவில் 97 சதுர அடி நிலத்தை தன்னுடைய சொந்த நிதியில் கிரயம் பெற்றும், அதே போன்று அமைக்கப்பட உள்ள அண்ணாவின் சிலையையும், கலைஞர் அவர்களுடைய சிலையையும் தன்னுடைய சொந்த செலவில் பராமரிப்பதற்காக கோரிக்கை வைத்துள்ள மாண்புமிகு மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அதற்கு அனுமதி வழங்கிய இந்த மன்றத்திற்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு.க. கணபதி அவர்களின் சார்பிலும், எனது சார்பிலும் இந்த மன்றத்திற்கு நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

தீர்மானத்தை ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ1/0215/2026

தீர்மான எண்: 158/2026 **பொருள் எண்.38**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-13, கோட்டம் - 169, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு சென்னை சைதாப்பேட்டை திரு. M.C. ராஜா சமூக நீதி மாணவர் விடுதியில் மதிப்பிற்குரிய திரு. M.C. ராஜா அவர்களின் திருவுருவச்சிலையினை நிறுவிட மாவட்ட அளவிலான குழுவில் உள்ள உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்று தொடர் நடவடிக்கையாக அரசின் ஒப்புதல் பெற வேண்டி வருவாய் நிர்வாக ஆணையருக்கு உரிய முன்மொழிவுகள் அனுப்ப மன்றத்தின் அனுமதி.

மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களின் *27.01.2026* நாளிட்ட கடிதத்தில், இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை அவர்கள் *2025*-ஆம் ஆண்டு அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த தின விழா *(14.04.2025)* அன்று சென்னையில் பத்து தளங்களுடன் *480* மாணவர்கள் தங்கக்கூடிய வகையில் புதியதாக கட்டப்பட்ட *M.C.* ராஜா நவீன முன்மாதிரி மாணவர் விடுதியை திறந்துவைத்து உரையாற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "சென்னை சைதாப்பேட்டை *M.C.* ராஜா சமூக நீதி மாணவர் விடுதி வளாகத்தினுள் மதிப்பிற்குரிய திரு. *M.C.* ராஜா அவர்களின் திருவுருவச்சிலை விடுதி வளாகத்தினுள் நிறுவப்படும்" என்ற அறிவிப்பினை அறிவித்துள்ளார் என்றும், அவ்வறிவிப்பின்படி சென்னை புதிய *M.C.* ராஜா மாணவர் விடுதி வளாகத்தினுள் மதிப்பிற்குரிய திரு. *M.C.*ராஜா அவர்களின் திருவுருவச்சிலை அமைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார் என்றும், இந்நேர்வில் சென்னை சைதாப்பேட்டை *M.C.* ராஜா சமூக நீதி மாணவர் விடுதி வளாகத்தினுள் மதிப்பிற்குரிய திரு. *M.C.* ராஜா அவர்களின் திருவுருவச் சிலையினை நிறுவிட ஏதுவாக, உச்சநீதிமன்ற வழக்கு எண் *SLP*

(C) எண்.8519/2006-ன் தீர்ப்புக்கு உட்பட்டு உரிய இடத்தினைத் தேர்வு செய்து, அரசுக்கு அனுப்பி அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

வட்டாட்சியர் கிண்டி அவர்களின் 06.02.2026 நாளிட்ட கடிதத்தில், சென்னை மாவட்டம், கிண்டி வட்டம், அரசுப்பண்ணைகிராமம், பிளாக் எண்.18, நகர புல எண் 2ல் (பழையபுல எண் 4/2A1PT) ரயத்துமனை வகைப்பாடு கொண்ட நிலத்தில் சைதாப்பேட்டை திரு. M.C. ராஜா சமூக நீதி மாணவர் விடுதி வளாகத்தில் வெளிப்புறத்தின் முன்பக்கப் பகுதியில் காலியாக உள்ள இடத்தில் மதிப்பிற்குரிய திரு. M.C.ராஜா அவர்களின் திருவுருவச்சிலை அமைக்கும் இடமாக தேர்வு செய்யலாம் என கீழ்கண்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

	கணினி பதிவேட்டின் பதிவுகள்	நிரந்தர நிலப்பதிவேட்டின் பதிவுள்
கிராமம்	அரசுப்பண்ணை	அரசுப்பண்ணை
பிளாக் எண்	18	18
நகரபுலஎண்	2	2
பழையபுலஎண்	4/2A1PT	4/2A1PT
வகைப்பாடு	ரயத்துமனை	ரயத்துமனை
பரப்பு	0 ஹெக்டேர் 65 ஏர்ஸ் 17.0 ச.மீ	0 ஹெக்டேர் 65 ஏர்ஸ் 17.0 ச.மீ
அடங்கல்	சீனிவாச முதலியார்	சீனிவாச முதலியார்
நிலத்தின் பயன்பாடு	கட்டிடம்	கட்டிடம்
குறிப்புரை	TR.NO/2022/0158/018826 DT.28.26.2016	அரசாங்க மாணவர் விடுதி

சிலை அமைப்பது தொடர்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நில அகற்றல் பிரிவு, நாள்.16.09.2025 அரசாணை (நிலை) எண்.629-ன் படி புதியதாக சிலைகள் மற்றும் கொடி கம்பங்கள் நிறுவுதல், ஏற்கனவே உள்ள சிலைகள் மற்றும் கொடி கம்பங்களை மாற்றுதல் / இடம் மாற்றம் செய்தல் தொடர்பாக நிலையான செயல்பாட்டு நடைமுறையை (SOP) வெளியிட்டுள்ளது. அதன்படி ஒவ்வொரு மாவட்ட அளவிலான குழுவானது மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைவராகவும், சென்னை மாவட்டத்திற்கு மட்டும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் தலைவராகவும் கீழ்கண்ட அலுவலர்கள் உறுப்பினர்களாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

<u>உறுப்பினர்கள்:</u>

1. காவல் துறை கூடுதல் ஆணையர் (சென்னை நகரம்)
2. காவல்துறை துணை ஆணையர், சம்மந்தப்பட்ட காவல் துறை மாவட்டம்
3. வட்டார துணை ஆணையர், சம்மந்தப்பட்ட மண்டலம் பெருநகர சென்னை மாநகராட்சி

4. உதவி ஆணையர், சம்மந்தப்பட்ட மண்டலம் பெருநகர சென்னை மாநகராட்சி
5. கோட்டப்பொறியாளர், மாநில நெடுஞ்சாலை துறை
6. செயற்பொறியாளர், பொதுப்பணி துறை

பெருநகர சென்னை மாநகராட்சி கோட்டம்- 169 , மண்டலம்-13,ல் சென்னை மாவட்டம், கிண்டி வட்டம், அரசுப்பண்ணை கிராமம், பிளாக் எண்.18, நகர புல எண் 2ல் (பழையபுல எண் 4/2A1PT) ரயத்துமனை வகைப்பாடு கொண்ட நிலத்தில் சைதாப்பேட்டை திரு. M.C. ராஜா சமூக நீதி மாணவர் விடுதி வளாகத்தில் வெளிப்புறத்தின் முன்பக்கப் பகுதியில் காலியாக உள்ள இடத்தில் மதிப்பிற்குரிய திரு. M.C.ராஜா அவர்களின் திருவுருவச்சிலை அமையவுள்ள இடமானது விடுதி வளாகத்தினுள் உள்ளதால், போக்குவரத்திற்கோ, பொது மக்களுக்கோ பாதிப்பு ஏற்படுத்தாது என்றும், சட்டம்-ஒழுங்கு பிரச்சனை எழ வாய்ப்பு இல்லை என்றும் தெரியவருகிறது. எனவே, மேற்படி சிலையினை அமைக்க குழுவில் ஒப்புதல் வழங்கலாம் என மாவட்ட அளவிலான குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கோட்டம்- 169, மண்டலம்-13,ல் சென்னை மாவட்டம், கிண்டி வட்டம், அரசுப்பண்ணை கிராமம், பிளாக் எண்.18, நகர புல எண் 2ல் (பழையபுல எண் 4/2A1PT) ரயத்துமனை வகைப்பாடு கொண்ட நிலத்தில் சைதாப்பேட்டை திரு. M.C. ராஜா சமூக நீதி மாணவர் விடுதி வளாகத்தில் வெளிப்புறத்தின் முன்பக்கப் பகுதியில் காலியாக உள்ள இடத்தில் மதிப்பிற்குரிய திரு. M.C.ராஜா அவர்களின் திருவுருவச்சிலை நிறுவிட அரசின் ஒப்புதல் பெற வேண்டி வருவாய் நிர்வாக ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் அவர்களுக்கு உரிய முன்மொழிவுகள் அனுப்புவதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.66/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."
****

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ7/2664/2025

தீர்மான எண்: 159/2026 **பொருள் எண்.39**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - நிலமாற்றம் - சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், நீலாங்கரை கிராமம், புல எண்கள். 51/10 மற்றும் 52/20 - இராஜீவ் காந்தி சாலை மற்றும் கிழக்கு கடற்கரை சாலை இணைப்பு சாலை பணி - நெடுஞ்சாலைத் துறைக்கு நில மாறுதல் கோரியது - பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்றினை வழங்க மன்றத்தின் அனுமதி.

மாவட்ட வருவாய் அலுவலர், சென்னை மாவட்டம் அவர்களின் *28.07.2025* நாளிட்ட கடிதத்தில் (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள். 25.11.2025.) சென்னை மாவட்டம் - சோழிங்கநல்லூர் வட்டம், நீலாங்கரை கிராமம் பின்வரும் சர்வே எண்கள் ராஜீவ் காந்தி சாலை மற்றும் கிழக்கு கடற்கரை சாலை இணைப்பு சாலை அமைக்கும் பணிகளுக்காக நெடுஞ்சாலைத்துறைக்கு நிலமாறுதல் செய்யுமாறு கோரப்பட்டது.

வ. எண்	புல எண்	வகைபாடு	பரப்பு ஹெ. ஏர்ஸ். ச. மீ	அடங்கல்	குறிப்பு	நில மாறுதல் கோருதல் பரப்பு ஹெ. ஏர்ஸ். ச. மீ
1.	51/10	அ.புற	0.47.50	------	கசம்	0.09.00
2.	52/20	அ.புற	0.64.00	------	கசம்	0.05.16

சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் மற்றும் தென் சென்னை வருவாய் கோட்டாட்சியர் மேற்படி புலங்களில் குறிப்பிட்டுள்ள விஸ்தீரணத்திற்கு இராஜீவ் காந்தி சாலை மற்றும் கிழக்கு கடற்கரை சாலை இணைப்பு சாலை அமைக்கும் பணிக்காக நெடுஞ்சாலைத் துறைக்கு நிலமாறுதல் செய்ய பரிந்துரை செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும், மேற்படி புல எண்கள் வருவாய் ஆவணங்களில் கசம் என குறிப்பு களத்தில் உள்ளதாகவும், சோழிங்கநல்லூர் வட்டம், நீலாங்கரை கிராமம், மேற்படி புல எண்களில் குறிப்பிடப்பட்டுள்ள பரப்பளவு நிலத்தினை நெடுஞ்சாலைத்துறைக்கு நில மாறுதல் செய்வது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நில நிர்வாக ஆணையர் அவர்களின் *05.12.2025* நாளிட்ட கடிதத்தில், உத்தேச புலங்களானது அரசு புறம்போக்கு கசம் என வகைபாடு கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என மாவட்ட வருவாய் அலுவலர், சென்னை மாவட்டம் அவர்கள் தெரிவித்துள்ளதாகவும், அரசாணை நிலை எண்.*101*, நீர்வளத் துறை

நாள்.30.09.2024-ன்படி உத்தேச புலங்களுக்கான தவிர்க்க இயலாமை சான்றினை (Inevitability Certificate) வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவி ஆணையர், மண்டலம்-15, அவர்களின் 04.02.2026 நாளிட்ட கடிதத்தில், மேற்படி புலத்தினை மண்டலம் -15 செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், பகுதி 44, இளநிலை பொறியாளர், கோட்டம்-192, நெடுஞ்சாலைத்துறை உதவி பொறியாளர், இளநிலை பொறியாளர் (ம) தெற்கு வட்டார துணை ஆணையர் அலுவலக நில அளவையர் மூலம் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது எனவும், களஆய்வின் முடிவில் மேற்படி திட்டமானது அத்தியாவசிய திட்டமாக உள்ளதால் இராஜீவ்காந்தி சாலை (ம) கிழக்கு கடற்கரை இணைப்பு சாலை அமைக்கும் பணிக்காக சோழிங்கநல்லூர் வட்டாட்சியர் (ம) தென் சென்னை வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் தெரிவித்துள்ளவாறு மேற்படி புலத்தினை நெடுஞ்சாலைத்துறைக்கு நிலமாற்றம் செய்ய தடையின்மைச்சான்று வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மண்டலம்-15, வார்டு-192, சோழிங்கநல்லூர் வட்டம், நீலாங்கரை கிராமம், புல எண். 51/10 அரசு புறம்போக்கு கசம் வகைப்பாடு மொத்தப் பரப்பளவு 0.47.50 ச. மீட்டரில் 0.09.00 சமீ நிலம் (ம) புல எண் 52/2அரசு புறம்போக்கு கசம் வகைப்பாடு மொத்தப்பரப்பளவு 0.54.00 ச.மீட்டரில் 0.05.16 ச.மீட்டர் நிலம் இராஜீவ் காந்தி சாலை மற்றும் கிழக்கு கடற்கரை சாலை இணைப்பு சாலை அமைக்கும் பணிக்காக நெடுஞ்சாலைத்துறைக்கு நிலமாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்றினை வழங்க, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.58/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.5.ந.க.எண்.இ1/106/2026

தீர்மான எண்: 160/2026 **பொருள் எண்.40**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 5, வார்டு - 62, சிங்கண்ண தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக திருமண மாளிகை கட்டிடம் கட்டப்பட்டு, தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் திறந்துவைக்கப்பட உள்ள மாளிகைக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பெயர் சூட்ட மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி , மண்டலம் – 5, பகுதி – 14, வார்டு - 62 சிங்கண்ண தெருவில் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக தரை தளத்தில் 30 எண்ணிக்கையிலான இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடமும் மற்றும் 12 எண்ணிக்கையிலான நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடமும் மற்றும் 5 எண்ணிக்கையிலான பொது கழிப்பறைகள், முதல் தளத்தில் 175 எண்ணிக்கையிலான இருக்கைகள் கொண்டு உணவு அருந்தும் இடம், இரண்டாம் தளத்தில் 300 எண்ணிக்கையிலான இருக்கைகள் கொண்டு திருமண மண்டபம் மற்றும் மணமகன், மணமகள் அறைகள் அமைத்து மற்றும் மூன்றாம் தளத்தில் உறவினர்கள் தங்கும் வசதிகள் கொண்ட 4 எண்ணிக்கையிலான அறைகள் மற்றும் கழிப்பறைகள் கொண்டு திருமண மாளிகையினை பெருநகர சென்னை வளர்ச்சி குழுமம் மூலம் கட்டப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் பராமரிக்கப்படவுள்ளது. தற்போது இத்திருமண மாளிகையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட உள்ளது.

மாமன்ற உறுப்பினர் வார்டு – 62 அவர்களின் 13.02.2026 நாளிட்ட கடிதத்தில், அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி அவர்களின் சேவையை போற்றும் வகையிலும் அவரின் புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையிலும் இத்திருமண மண்டபத்திற்கு "முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருமண மாளிகை" என பெயர் சூட்டி, அவரது புகழினை பறைசாற்றும் வகையில் அவர் ஆற்றிய தொண்டினை பெருமைப்படுத்தும் வகையில் அமையும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, மண்டலம்-5, பகுதி – 14, வார்டு-62ல் சிங்கண்ண தெருவில் கட்டப்பட்ட திருமண மாளிகைக்கு "முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருமண மாளிகை" என பெயர் சூட்ட அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்ப, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.70/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.5.வ.து.ந.க.எண்.ஆர்1/0040 /2026

தீர்மான எண்: 161/2026 **பொருள் எண்.41**

பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை- சேவை வரி- மண்டலம்-5, கோட்டம்-50ல் அமைந்துள்ள இந்தியன் கோஸ்ட்கார்டு நிர்வாகத்திற்கு சொந்தமான கட்டிடத்திற்கான சேவை வரி நிலுவை செலுத்தாதது- தண்ட தொகையை நீக்கம் செய்து தர கோரியது- விதிகளின் படி மாமன்றத்தின் தீர்மானம் வேண்டுதல்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, கோட்டம்-50ல் அமைந்துள்ள இந்திய அரசாங்கத்திற்கு சொந்தமான கோஸ்ட்கார்டு நிர்வாகத்தின் கட்டிடங்கள் அமைந்துள்ளன இக்கட்டிடங்களுக்கு சேவை வரி விதிக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் பின் வரும் அட்டவணையில் கண்டவாறு.

DIV - 50 INDIAN COAST GUARD

S.NO	PROPERTY ID	TOTAL TAX DUE	LATE PANALTY	TAX TO BE PAID
1	05-050-12841-000	335297	39681	295616
2	05-050-10701-000	52223	6157	46066
3	05-050-10742-000	52620	0	52620
4	05-050-12843-000	8600	0	8600
5	05-050-12844-000	8060	0	8060
6	05-050-10712-000	11105	0	11105
7	05-050-12842-000	10360	0	10360
8	05-050-10706-000	147518	16878	130640
9	05-050-10707-000	60042	7050	52992
10	05-050-10704-000	136174	16095	120079

11	05-050-10644-000	25062	2922	22140
12	05-050-10702-000	55546	6587	48959
13	05-050-10709-000	7805	0	7805
14	05-050-10705-000	54542	6453	48089
15	05-050-10662-000	30208	3549	26659
16	05-050-10703-000	58105	6899	51206
17	05-050-10646-000	9166	1076	8090
18	05-050-10721-000	1768109	209173	1558936
19	05-050-10722-000	83185	0	83185
20	05-050-10647-000	9166	1076	8090
TOTAL		**2922893**	**323596**	**2599297**

மேற்கண்ட அட்டவணையில் உள்ள பல்வேறு கட்டிடங்களுக்கான சேவை வரியில் மொத்த நிலுவை ரூ.*29,22,893/-* மாநராட்சிக்கு செலுத்திட வேண்டும். ஆனால் மேற்குறிப்பிட்ட தொகை நிர்வாகத்தால் இது நாள் வரை செலுத்தபடாமல் உள்ளது. இது குறித்து உரிய நிலுவை விவரங்களை தெரிவித்து அதனை செலுத்த கோரி அந்நிர்வாகத்திடம் பலமுறை நேரில் அணுகிய நிலையில் மத்திய அரசாங்கத்தின் நிர்வாகம் என்பதால் இதற்கான தண்ட தொகைகளை *(Penalty)* நீக்கம் செய்து செலுத்த வேண்டிய சரியான நிலுவை விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டதுடன் கடிதம் அளித்துள்ளனர்.

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு *(திருத்தம்)* சட்டம் *2022* மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் *2023* உட்பிரிவு *268 (4) (a)* படி மத்திய மற்றும் மாநில அரசுக்கு சொந்தமான கட்டிடங்கள் விதிக்கப்படும் அரை ஆண்டு சேவை வரியினை செலுத்தாமல் நிலுவை வைத்து இருக்கும் இனங்களுக்கு விதிக்கப்படும் தண்ட தொகையினை நீக்கம் செய்வதற்கு மாமன்றத்தின் தீர்மானம் பெறப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே போல் தற்போது மேற்குறிப்பிட்ட சட்டம் மற்றும் விதிகளில் அரசு இதழ் எண்.*5* நாள்:*06.01.2025 (Tamil Nadu Act 25 -2024)*திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது. அதன் படி அரசு கட்டிடங்களுக்கு *(*மத்திய மற்றும் மாநில*)* வழங்கப்படும் ஊக்க தொகை மற்றும் நிலுவை தொகைக்காக விதிக்கப்படும் தண்ட தொகை வசூலிப்பதிலிருந்து விலக்களித்து திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு வருவாய் துறை தலைமை இடம் மூலம் அரசு இதழ்

வெளியிடப்பட்ட நாள் முதல் நடைமுறைப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

இந்நிகழ்வில் மத்திய அரசுக்கு சொந்தமான கோஸ்ட்கார்ட் நிர்வாகத்திற்கு விதிக்கப்பட்ட *20* எண்ணிக்கையிலான சேவை வரிகள் அரசு இதழ் வெளியிடப்பட்ட நாளுக்கு முன்பு இருந்து விதிக்கப்பட்ட தண்ட தொகைகளை நீக்கம் செய்திட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் *2023* உட்பிரிவு *268 (4) (a)* ன்படி பின் வரும் இனங்கள் மீது மாமன்றத்தின் தீர்மானம் வேண்டப்படுகிறது.

அ. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-*5*, கோட்டம்-*50*ல் அமைந்துள்ள மத்திய அரசுக்கு சொந்தமான கோஸ்ட்கார்டு நிறுவனத்திற்கு விதிக்கப்பட்ட *20* எண்ணிக்கையிலான சேவை வரிகளில் நிலுவைக்காக விதிக்கப்படும் தண்ட தொகையினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் *2023* உட்பிரிவு *268 (4) (a)* ல் தெரிவித்துள்ளபடி முதல் அரை ஆண்டு *2024-2025* வரை உள்ள தண்ட தொகைகளை நீக்கம் செய்திட மாமன்றத்தின் தீர்மானம் வேண்டியும்,

ஆ. இனம் 'அ' வை ஏற்கும் பட்சத்தில் அரசு இதழ் எண்.*5* நாள்: *06.01.2025*ன்படி இரண்டாவது அரை ஆண்டு *2024-2025* முதல் தண்ட தொகை விதிப்பதற்கு விலக்களித்துள்ளதால் அதனை நடைமுறைபடுத்திட தீர்மானம் வேண்டியும்,

மேற்கண்ட இனம் 'அ' மற்றும் 'ஆ' வின் மீது நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.69/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

அ.து.ந.க.எண்.அ3/159/2026

தீர்மான எண்: 162/2026 **பொருள் எண்.42**

பெருநகர சென்னை மாநகராட்சி - அரங்கத்துறை - 25-26ஆம் ஆண்டு மூலதன நிதியின் கீழ் - மண்டலம்-15, கோட்டம்-195ல் அமைந்துள்ள குமரன்குடில் 3வது குறுக்குத் தெருவில் (OSR Landல்) புதியதாக உள்விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி மற்றும் மின்னணு ஒப்பம் கோருவதற்கு அனுமதி.

மண்டலம்-15, கோட்டம்-195ல் அமைந்துள்ள குமரன்குடில் 3வது குறுக்குத்தெருவில் உள்ள *OSR Land*-ல் புதியதாக உள்விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5,91,00,000/-க்கு தலைமை பொறியாளர் (பூ, (ம) வி) அவர்களின் 27.01.2026 நாளிட்ட தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது.

அதனடிப்படையில், மண்டலம்-15, கோட்டம்-195ல் அமைந்துள்ள குமரன்குடில் 3வது குறுக்குத்தெருவில் உள்ள *OSR Land*-ல் புதியதாக உள்விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு உரிய அலுவலரின் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, கீழ்கண்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

Sl. No	Dn. no	Estimate No	Name of the work	Estimate Amount
1	195	NQ/2025 – 26 / 24392	Proposed construction of Indoor Stadium in OSR Land at Kumarankudil 3rd Cross Street in Zone–15, Dn–195	Rs.5,91,00,000/-

எனவே,

1. மண்டலம்–15, கோட்டம்–195ல் அமைந்துள்ள குமரன்குடில் 3வது குறுக்குத்தெருவில் உள்ள OSR Land-ல் புதியதாக உள்விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணிக்கு ரூ.5,91,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும் மற்றும் மின்னணு ஒப்பம் கோருவதற்கும்,
2. மேற்காணும் பணிக்குண்டான செலவீனங்களை பெருநகர சென்னை மாநகராட்சி, மூலதனநிதி, Function 60–62–00, கணக்கு குறியீடு எண். 412-400-100 (Play Grounds) என்ற தலைப்பில் பட்டி தீர்வு செய்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"09.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.09/2026, நாள்.09.02.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வவிமநி) கூட்டத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் இவ்வினத்தில் திறந்தவெளி நிலத்தினை சட்ட விதிகளின்படியும், பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினால் வரையறுக்கப்பட்டுள்ள விதிகளின் அடிப்படையிலும் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்ற நிபந்தனையுடன் இதற்கு தீர்மான எண். 54/2026, நாள்.16.02.2026ன்படி நிலைக்குழு (வவிமநி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.நீ.வ.து.ந.க.எண்.பி1/3796/2025

தீர்மான எண்: 163/2026 **பொருள் எண்.43**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர்வடிகால்துறை - மண்டலம் – 8, வார்டு-101 கீழ்ப்பாக்கம் கார்டன் சாலையில் உள்ள திறந்தவெளி கால்வாயில் கான்கீரிட் கால்வாய் கட்டுமான பணிகள் நடைப்பெறுகிறது - மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் ஆய்வு - சாலையின் கீழ் உள்ள வாய்க்கால் பாலம் புதியதாக அமைக்க

மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டது - அவசரம் மற்றும் அவசியம் கருதி ஒப்பம் கோரப்பட்டது - திட்ட மதிப்பீட்டிற்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 8, பகுதி - 23, வார்டு-101 கீழ்ப்பாகம் கார்டன் சாலையில் உள்ள திறந்தவெளி கால்வாயில் கான்கீரிட் கால்வாய் அமைக்க ஆணையர் அவர்களின் 04.01.2026 நாளிட்ட ஆணை பெறப்பட்டு மழைநீர் வடிகால்துறை மூலம் ஒப்பம் கோரப்பட்டு திருவாளர் R.V.S. Constructions அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது.

இப்பணிகள் மொத்தம் 260 மீட்டர் நீளம் கொண்ட திறந்த வெளி கால்வாயானது மூன்று சாலைகளை கடந்து ஒட்டேரி நல்லா கால்வாயில் சேருகின்றது. தற்போது பகுதி வாரியாக பணிகள் இரண்டு எண்ணிக்கை கொண்ட மூன்று மீட்டர் அகலத்தில் கட்டுமான பணிகள் நடைப்பெற்று வருகின்றது. இதில் மூன்று எண்ணிக்கைகள் கொண்ட வாய்க்கால் பாலம் சாலையின் கீழ் குறுகலாக அமைந்துள்ளது.

இந்நிலையில், மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களால் 13.10.2025 அன்று ஆய்வு மேற்கொண்டு மேற்கண்ட மூன்று எண்ணிக்கைகள் கொண்ட சாலையின் (சென்ரல் தெரு, பூங்கா தெரு மற்றும் கால்வாய் தெரு ஆகியவற்றின்) கீழ் உள்ள கால்வாய்களை புதியதாக அமைக்க அறிவுரை வழங்கியதன் அடிப்படையில் மதிப்பீடுகள் தயார் செய்து மத்திய வட்டார துணை ஆணையர் வாயிலாக நிர்வாக அனுமதி பெறுவதற்காக மண்டல அலுவலர்-8 அவர்களின் கடிதம் பெறப்பட்டது. இப்பணியின் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,59,00,000/- ஆகும்.

மேற்கண்ட இப்பணிக்கு அவசரம் மற்றும் அவசியம் கருதியும், பருவ மழைக்கு முன்னர் பணியினை தொடங்குவதற்காகவும், ஒப்பம் கோரப்பட்டதற்கு ஆணையர் அவர்களின் 04.01.2026 நாளிட்ட பின்னேற்பு நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

மேலும், இப்பணிக்காக தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு அவசரம் மற்றும் அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறாமல் ஒப்பம் கோரப்பட்டது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு விதிகளின்படி (TNULB ACT 1988) இப்பணியின் திட்ட மதிப்பீட்டிற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் பின்னேற்பு நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநரகாட்சி, மண்டலம்-8, கோட்டம் 101ல் மூன்று எண்ணிக்கைகள் கொண்ட சாலையின் (சென்ரல் தெரு, பூங்கா தெரு மற்றும் கால்வாய் தெரு ஆகியவற்றின்) கீழ் உள்ள கால்வாய்களை புதியதாக அமைக்க தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,59,00,000/-ல் இப்பணியினை மேற்கொள்ள பின்னேற்பு நிர்வாக அனுமதியும்,
2. இப்பணிக்குண்டான செலவினத்தை நிதி ஆலோசகர் அவர்கள் மூலம் மூலதன நிதி கணக்கு குறியீட்டு எண் 412-401-100 (Stormwater Drain and Culverts) கூடுதல் நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

****

மி.து.ந.க.எண்.சி.பி.மே2/பி1/175/2026

தீர்மான எண்: 164/2026 **பொருள் எண்.44**

பெருநகர சென்னை மாநகராட்சி - மின்துறை - மின்னணு ஏலம் - வேப்பேரி கிடங்கில் வைக்கப்பட்டுள்ள பயனற்ற கழிவு மற்றும் உபயோகப்படுத்த முடியாத பொருட்களில் 18589 கி.கி, அச்சு உருவார்பு அலுமினியம், 12578 கி.கி அலுமினியம், 12 கி.கி பித்தளை, 1192 கி.கி செம்பு, 223190 கி.கி இரும்பு, 5248 கி.கி வார்ப்பிரும்பு மற்றும் 3171 கி.கி பிளாஸ்டிக் ஆகியவை அடங்கிய தொகுப்பு - இதற்காக குழுமத்தால் பரிந்துரைக்கப்பட்ட மதிப்பிற்கு நிர்ணயம் செய்து மற்றும் மின்னணு ஏலம் மூலம் விற்பனை செய்ய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

1	பணியின் பெயர்	மண்டலம் 1 முதல் 15 ல் உள்ள பல்வேறு மின்துறை பிரிவுகளிலிருந்து சேகரிக்கப்பட்டு வேப்பேரி முற்றத்தில் வைக்கப்பட்டுள்ள பயனற்ற கழிவு மின்னணு ஏலம் மூலம் விற்பனை இதற்கான குழுமத்தால் பரிந்துரைக்கப்பட்ட ஏற்று மதிப்பு நிர்ணயம் செய்ய.
2	வேப்பேரி முற்றத்தில் வைக்கப்பட்டுள்ள பயனற்ற கழிவு	பயனற்ற கழிவு மற்றும் உபயோகப்படுத்த முடியாத பொருட்களில் துருப்பிடித்த மற்றும் பழுதடைந்த தெருவிளக்கு வெளிகூடு, கம்பம் மற்றும் பிராகட்ஸ், சோக், சோக் பாக்ஸ், ஸ்டார்டர், டைமர் பாக்ஸ், பில்லர் பாக்ஸ், ஏசி யூனிட், பழுதடைந்த மின்விசிறி மற்றும் பிளேடு முதலியன சேகரிக்கப்பட்டது.

3	வேப்பேரி முற்றத்தில் வைக்கப்பட்டுள்ள பயனற்ற கழிவு தொகுப்பில் அடங்கும் பொருட்கள்	இந்த பயனற்ற 18589 கி.கி, அச்சு உருவார்பு அலுமினியம், 12578 கி.கி அலுமினியம், 12 கி.கி பித்தளை, 1192 கி.கி செம்பு, 223190 கி.கி இரும்பு, 5248 கி.கி வார்ப்பிரும்பு மற்றும் 3171 கி,கி பிளாஸ்டிக் பொருட்கள் அடங்கும்.
4	பயனற்ற கழிவுகளின் மதிப்பு நிர்ணயம் செய்வதற்காக அமைக்கப்பட்ட குழு	முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.06.2021 நாளிட்ட ஆணையின் படி பயனற்ற கழிவுகளின் மதிப்பு நிர்ணயம் செய்வதற்காக குழு அமைக்கப்பட்டது.
5	மதிப்பீட்டு குழு உறுப்பினர்கள் விவரம்	(1) தலைமைப் பொறியாளர் / மின்சாரம் - ஒருங்கிணைப்பாளர் (2) மேற்பார்வை பொறியாளர் / மின்சாரம் – உறுப்பினர் (3) நிதி ஆலோசகர் – உறுப்பினர் (4) செயற் பொறியாளர் / இயந்திரம் – உறுப்பினர் (5) செயற் பொறியாளர்(மின்சாரம்) / தலைமையிடம் – உறுப்பினர் (6) செயற் பொறியாளர் (மின்சாரம்) /தெற்கு – உறுப்பினர் (7) செயற் பொறியாளர் (மின்சாரம்) / மையம் – உறுப்பினர் (8) செயற் பொறியாளர் (மின்சாரம்) / வடக்கு – உறுப்பினர்
6	பயனற்ற கழிவுகளின் மதிப்பு நிர்ணயம் செய்ய குழு கூடியதின் விவரம்	28.01.2026 அன்று தலைமைப் பொறியாளர் / மின்சாரம் அவர்களின் அலுவலகத்தில் இக்குழு கூடியது.

7 குழுவின் பார்வைக்காக வைக்கப்பட்ட விவரம்:

இணையதளத்திலிருந்தும் தற்போதைய சந்தையிலிருந்தும் பெறப்பட்ட அச்சு உருவார்பு அலுமினியம், அலுமினியம், பித்தளை, செம்பு, இரும்பு, வார்ப்பிரும்பு, பிளாஸ்டிக் மற்றும் கழிவு பொருட்களின் துறையால் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் குழுவின் பார்வைக்காக வைக்கப்பட்டது.

a இணையதளத்திலிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளி குழுவின் பார்வைக்காக வைக்கப்பட்டது.

Sl. No.	**ITEMS**	**SOURCE**	**LATEST DATE**	**HIGHEST RATE Rs Per Kg (A)**
1	Die Cast Aluminium	recycleinme.com	23.01.2026	193.75
2	Aluminium	recycleinme.com	23.01.2026	166.75
3	Brass	recycleinme.com	23.01.2026	508.50
4	Copper	recycleinme.com	23.01.2026	617.50
5	Iron MS	recycleinme.com	23.01.2026	25.50
6	Cast Iron Items	recycleinme.com	23.01.2026	27.50
7	Plastic	recycleinme.com	23.01.2026	40.00

b தற்போதைய சந்தை விலைப்புள்ளிகளின் அதிகப்படியான விலை புள்ளி குழுவின் பார்வைக்காக வைக்கப்பட்டது.

Sl. No.	ITEMS	SOURCE	E-mail Dated	HIGHEST RATE Rs Per Kg (B)
1	Die Cast Aluminium	M/s.Thariq Enterprises	20.01.2026	120.00
2	Aluminium	M/s.A.K STEEL	20.01.2026	126.00
3	Brass	M/s.A.K STEEL	20.01.2026	325.00
4	Copper	M/s. A.K STEEL	20.01.2026	602.00

		5	Iron MS	M/s.Thariq Enterprises	20.01.2026	24.00
		6	Cast Iron Items	M/s.Thariq Enterprises	20.01.2026	24.00
		7	Plastic	M/s.Thariq Enterprises	20.01.2026	3.00

8

இணையதள மற்றும் சந்தை விலைப்புள்ளியின் அதிகப்படியான மற்றும் சராசரி விலைகள் குழுவின் ஆய்வுக்காக வைக்கப்பட்டது.

இணையதள விகிதத்தின் அடிப்படையில் பயனற்ற கழிவுகளின் மதிப்பு

Sl. No.	**Description**	**Weight in Kgs**	**Online Rate Rs per Kg (A)**	**Amount in Rs.**
1	Die Cast Aluminium	18589	193.75	36,01,618.75
2	Aluminium	12578	166.75	20,97,381.50
3	Brass	12	508.50	6,102.00
4	Copper	1192	617.50	7,36,060.00
5	Iron MS	223190	25.50	56,91,345.00
6	Cast Iron Items	5248	27.50	1,44,320.00
7	Plastic Weight	3171	40.00	1,26,840.00
	Total Amount			**1,24,03,667.25**

அதிகப்படியான சந்தை விலைப்புள்ளியின் அடிப்படையில் பயனற்ற கழிவுகளின் மதிப்பு

Sl. No.	Description	Weight in Kgs	Highest Current Market Rate Rs per Kg (B)	Amount in Rs.
1	Die Cast Aluminium	18589	120.00	22,30,680.00
2	Aluminium	12578	126.00	15,84,828.00
3	Brass	12	325.00	3,900.00
4	Copper	1192	602.00	7,17,584.00
5	Iron MS	223190	24.00	53,56,560.00

6	Cast Iron Items	5248	24.00	1,25,952.00
7	Plastic Weight	3171	3.00	9,513.00
	Total Amount			**1,00,29,017.00**

அதிகப்படியான இணையதள மற்றும் சந்தை விலைப்புள்ளியின் சராசரி பயனற்ற கழிவுகளின் மதிப்பு

Sl. No.	Description	Weight in Kgs	Average Rate (A+ B) /2 Rs per Kg	Amount in Rs.
1	Die Cast Aluminium	18589	156.875	29,16,149.38
2	Aluminium	12578	146.375	18,41,104.75
3	Brass	12	416.75	5,001.00
4	Copper	1192	609.75	7,26,822.00
5	Iron MS	223190	24.75	55,23,952.50
6	Cast Iron Items	5248	25.75	1,35,136.00
7	Plastic Weight	3171	21.5	68,176.50
	Total Amount			**1,12,16,342.13**

a	Value of Scrap Lot Based on Highest Online Rate	Rs. 1,24,03,667.25
b	Value of Scrap Lot Based on Highest Market Rate	Rs.1,00,29,017.00
c	Value of Scrap Lot Based on Average of Highest of Online Rate and Market Rate	Rs. 1,12,16,342.13

9	குழு பயனற்ற கழிவுகளின் மதிப்பு நிர்ணயம் செய்ய எடுத்த முடிவுகள்.	இதன் அடிப்படையில் *28.01.2026* அன்று தலைமைப் பொறியாளர் / மின்சாரம் , அவர்கள் அலுவகத்தில் கூட்டப்பட்ட குழு, பயனற்ற கழிவுகளின் மதிப்பு நிர்ணயம் செய்ய கலந்தாலோசித்து கீழ்க்கண்ட முடிவுகள் எடுத்தது.
		www.recycleinme.com இணையதளத்திலிருந்து

23.01.2026 அன்று பயனற்ற கழிவுகளின் அதிகபட்ச விலைகள் எடுத்துக்கொண்டு கீழ்க்கண்டவாறு கழிவு பொருட்களின் மதிப்பு நிர்ணயம் செய்ய பரிந்துரை செய்தது.

Sl. No.	Description	Weight in Kgs	Tentative Rate in Rs. Per kg
1	Die Cast Aluminium	18589	193.75
2	Aluminium	12578	166.75
3	Brass	12	508.50
4	Copper	1192	617.50
5	Iron MS	223190	25.50
6	Cast Iron Items	5248	27.50
7	Plastic Weight	3171	40.00

10 வேப்பேரி கிடங்கில் உள்ள பயனற்ற உபயோகப்படுத்த முடியாத கழிவுகள் மொத்த மதிப்பு விவரம்

Sl. No.	**Description**	**Weight in Kgs**	**Tentative Rate in Rs. Per kg**	**Total Amount in Rs.**
1	Die Cast Aluminium	18589	193.75	36,01,618.75
2	Aluminium	12578	166.75	20,97,381.50
3	Brass	12	508.50	6,102.00
4	Copper	1192	617.50	7,36,060.00
5	Iron MS	223190	25.50	56,91,345.00
6	Cast Iron Items	5248	27.50	1,44,320.00
7	Plastic Weight	3171	40.00	1,26,840.00

			Total Amount in Rs.	**1,24,03,667.25**
			Total Amount in Rs. (Rounded off)	**1,24,03,700.00**
		மேற்குறிப்பிட்ட கழிவுப்பொருட்களின் தோராய மதிப்பு **ரூ.1,24,03,700/-(**வரிகள் நீங்கலாக**)** பரிந்துரை செய்தது.		

இயந்திர பொறியியல் துறையால் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள பயனற்ற வாகனங்கள் மற்றும் அனைத்து விதமான கழிவு பொருட்களான மற்றும் அனைத்து துறைகளில் (மின்துறை தவிர்த்து) உள்ள கழிவு பொருட்களை திருவாளர். *M/s.Metal Scrap Trading Corporation (M/s.MSTC) (*மத்திய அரசு நிறுவனம்*)* நிறுவனத்தாரின் வலைதளம் மின்னணு ஏலம் மூலம் விற்பனை மேற்கொள்ள ஆணையர் அவர்களின் *03.12.2024* நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் திருவாளர்கள். MSTC Ltd. நிறுவனத்தாரின் *06.11.2024* நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் வழங்கப்படும் சேவை தொகையான *3%* (மொத்த ஏலத் தொகையில்) வழங்குவதிலிருந்து **விலக்கு அளித்து** சேவைத் தெரிவித்து தொகையினை ஏலதாரர்களிடமே பெற்றுக்கொள்வதாக தெரிவித்து கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் திருவாளர்கள் MSTC Ltd என்பது ஒரு மத்திய நிறுவனம் என்பதால் இதில் *3* இலட்சத்திற்கும் அதிகமான ஏலதாரர்கள் பதிவு செய்து ஏலத்தில் கலந்து கொள்வதாலும் ஏல மதிப்பிலானது நிர்ணய தொகையைவிட அதிக சதவீதத்தில் ஏலம் கிடைக்கப்பெற வாய்ப்புள்ளது.

எனவே, வேப்பேரி கிடங்கில் வைக்கப்பட்டுள்ள பயனற்ற கழிவுகள் குழு பரிந்துரையின்படி ரூ.**1,24,03,700/- (**வரிகள் நீங்கலாக**)** மதிப்பில் நிர்ணயம் செய்ய மற்றும் M/s.Metal Scrap Trading Corporation நிறுவனத்தின் இணையதளம் மூலம் மின்னணு ஏலம் கோர மாண்புமிகு மேயர் அவர்களின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

எனவே,

1. மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள பல்வேறு மின்துறை பிரிவுகளிலிருந்து சேகரிக்கப்பட்டு வேப்பேரி கிடங்கில் வைக்கப்பட்டுள்ள பயனற்ற கழிவு மற்றும் உபயோகப்படுத்த முடியாத பொருட்களில் துருப்பிடித்த மற்றும் பழுதடைந்த தெருவிளக்கு வெளிகூடு, கம்பம் மற்றும் பிராகட்ஸ், சோக், சோக் பாக்ஸ், ஸ்டார்டர், டைமர் பாக்ஸ், பில்லர் பாக்ஸ், ஏசி யூனிட், பழுதடைந்த மின்விசிறி மற்றும் பிளேடு முதலியன அடங்கிய தொகுப்புகளில் உள்ள கழிவில் 18589 கி.கி, அச்சு உருவார்பு அலுமினியம், 12578 கி.கி அலுமினியம், 12 கி.கி பித்தளை, 1192 கி.கி செம்பு, 223190 கி.கி இரும்பு, 5248 கி.கி வார்ப்பிரும்பு மற்றும் 3171 கி,கி பிளாஸ்டிக் பெருட்கள் கொண்ட தொகுப்பின் மதிப்பு ரூ. 1,24,03,700/-

(வரிகள் நீங்கலாக) (ரூபாய் ஒரு கோடியே இருபத்து நான்கு இலட்சத்து மூன்றாயிரத்து எழுநூறு மட்டும்) என நிர்ணயம் செய்யவும்,

2. மேற்குறிப்பிட்ட கழிவு தொகுப்பினை ஏல முறையில் விற்பனை செய்ய திருவாளர்கள். *M.S.T.C. Ltd.*, (மத்திய அரசு நிறுவனம்) நிறுவனத்தாரின் வலைதளம் மூலம் மின்னணு ஏலம் எந்தவொரு சேவை கட்டணமும் இன்றி விற்பனை செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

****

ம.அ.1.ந.க.எண்.பி1/0192/2026

தீர்மான எண்: 165/2026 **பொருள் எண்.45**

பெருநகர சென்னை மாநகராட்சி - மதிப்பீடு - 2025-26 ஆம் ஆண்டு - மண்டலம் 1, பகுதி 1, வார்டு 7 - மூலதன நிதி Proposed new formation of Chain Link Fence Pathway, Compound Wall and Childrens Play Area at Kargil Nagar Pond 2025-26 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

கீழ்குறிப்பிட்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

பணியின் பெயர்:-

வ. எண்	வார்டு எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை இலட்சம்
1	7	Proposed new formation of Chain Link Fence Pathway, Compound Wall and Childrens Play Area at Kargil Nagar Pond	ரூ.160

1	பரிந்துரை செய்தவரின் விவரம்	மேற்பார்வை பொறியாளர் (வடக்கு)
2	எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம்	மண்டலம் -1
3	சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி	மண்டலம் -1
4	தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண், மற்றும் தேதி	மேற்பார்வை பொறியாளர் (வடக்கு) எண்:10/2025-26
5	மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2025-26
6	மதிப்பீட்டுத் தொகை	ரூ.1,60,00,000/-
	அ) பணியின் செலவீனம்	ரூ.1,31,15,970.66
	ஆ) மேலான மேற்பார்வை செலவு	ரூ.
	இ) சிறு மேற்பார்வை செலவு	ரூ.
	ஈ) தரக் கட்டுப்பாடு செலவு	ரூ. 1,31,159.71
	உ) மற்ற எதிர்பாரா செலவு	ரூ. 2,10,835.21
	எ) தமிழ்நாடு பணியாளர் நல வாரிய நிதி	ரூ 1,31,159.71
	ஏ) G.S.T	ரூ 23,60,874.72
	மொத்தம்	ரூ.1,60,00,000.00
7	அ) மழைநீர் வடிகால் கட்டுவது நடைபாதை பகுதியாக அல்லது சாலை பகுதியா? ஆ) அதன் அளவு குறிப்பிடவும்	இல்லை
8	ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு	ரூ.

9	வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா ?	ஆம்
10	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர், தீர்மான எண் மற்றும் நாள்?	பின்னர் பெறப்படும்
11	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது?	பொருந்தாது
12	நிதியின் மூலத்தன்மை அ)வரவு செலவு ஒதுக்கீடு ஆ)மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி இ)மீதமுள்ள நிதி (அ-ஆ) ஈ)இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	மூலதன நிதி ரூ. ரூ. ரூ. ரூ.1,60,00,000/-

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,60,00,000/- (ரூபாய் ஒரு கோடியே அறுபது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மின்னணு ஒப்பம் கோர மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

TVKNGR/49/2026-ADMIN (ENGINEERING) –E2

தீர்மான எண்: 166/2026 **பொருள் எண்.46**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, கோட்டம்-69, ஜம்புலிங்கம் பிரதான சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில் பல்வேறு கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் பணிக்கு 2025–26ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-15, கோட்டம்-69, ஜம்புலிங்கம் பிரதான சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில் பல்வேறு கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் பணிக்கு கீழ்கண்டவாறு அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்	கோட்டம் எண்.	பணி/சாலையின் பெயர்	பணியின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ)
1.	69	ஜம்புலிங்கம் பிரதான சாலை	பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில் பல்வேறு கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் பணி	ரூ.1,99,95,000.00
			மொத்தம்	ரூ.1,99,95,000.00

2	பரிந்துரை செய்தவரின் விவரம்	:	மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்)
3	எந்ததுறைக்காக செயலாக்கம்	:	மண்டலம்-6
4	சமந்தப்பட்ட துறையால் அனுமதி	:	ஆம்
5	தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த செயல்முறை ஆணை எண் மற்றும் நாள்	:	மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) அவர்களின் T.S.No. /2026, நாள்-
6	மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைபட்டியல் முன்வைத்து தயாரிக்கபட்டது	:	2025-26ஆம் ஆண்டின் அலுவலக விலைபட்டியலின்படி தயாரிக்கபட்டது

7	மதிப்பீட்டு தொகை	:	ரூ. 1,99,95,000.00
(அ)	பணி செலவீனம் மட்டும்	:	ரூ. 1,63,76,625.98
(ஆ)	சரக்கு மற்றும் சேவை வரி18%	:	ரூ. 29,47,792.68
(இ)	தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 1%	:	ரூ. 1,63,766.26
(ஈ)	தரக்கட்டுப்பாட்டுசெலவு1%	:	ரூ. 1,63,766.26
(உ)	மற்ற எதிர்பாராசெலவு 2.5%	:	ரூ. 3,43,048.82
(ஊ)	மதிப்பீட்டின் மொத்த தொகை	:	ரூ.1,99,95,000.00
8	மழைநீர் வடிகால் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலைப் பகுதியா அதன் அளவு குறிப்பிடவும்	:	இல்லை
9	ஒரு சதுர மீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு	:	பொருந்தாது
10	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	:	ஆம்
11	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி	:	வார்டுகுழு மண்டலம்-6ன் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது
12	ஏற்கனவேஎப்போதுசெய்யப்பட்டது	:	புதியதாக அமைக்கப்பட உள்ளது
13	கள ஆய்வு செய்யப்பட்டுள்ளதா? அதன் ஆய்வு விவரம் குறிப்பிடுக	:	ஆம்
14	நிதியின் மூலதன்மை	:	
(அ)	வரவு செலவு ஒதுக்கீடு	:	ரூ.
(ஆ)	மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கபட்ட நிதி	:	ரூ.
(இ)	மீதமுள்ளநிதி	:	ரூ.
	இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு	:	ரூ.1,99,95,000.00

	தேவைப்படும் நிதி		

எனவே,

1. மண்டலம்-6, பகுதி-15, கோட்டம்-69, ஜம்புலிங்கம் பிரதான சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில் பல்வேறு கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் பணிக்காக மதிப்பீட்டு தொகை ரூ.1,99,95,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட பணிக்கு 2025-26ஆம் ஆண்டின் கணக்கு எண். என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,
3. மேற்கண்ட பணிக்கான நிதியினை நிதி நிர்வாக பிரிவின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

க.து.ந.க.எண்.பி1/0406/2026

தீர்மான எண்: 167/2026 **பொருள் எண்.47**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - Additional Construction of Administrative Office Building at "D" Depot in Aadithanar Salai, Pudupet in Div - 63, Zone - 05 கட்டும் பணிக்கு 2025-2026ஆம் ஆண்டின் விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

Additional Construction of Administrative Office Building at "D" Depot in Aadithanar Salai, Pudupet in Div - 63, Zone - 05 கட்டும் பணியினை மேற்கொள்ள வேண்டி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது, விவரம் பின்வருமாறு:

1	பணியின் பெயர்	Construction of Administrative Office Building at “D” Depot in Aadithanar Salai, Pudupet in Div - 63, Zone-05 கட்டும் பணி.
2	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் - 05.
3	மதிப்பீட்டின் தொகை விவரம்	
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 1,60,49,382.71
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 28,88,888.88
	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 1,60,493.82
	(ஈ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 4,01,234.59
	மொத்தம் (Rounded Off)	ரூ. 1,95,00,000.00
4	நிதியின் தன்மை	M E Department Building (20 - 28 - 00 / 412 - 400 - 506)
5	இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	ரூ. 1,95,00,000.00

மேற்குறிப்பிட்டுள்ள Additional Construction of Administrative Office Building at “D” Depot in Aadithanar Salai, Pudupet in Div - 63, Zone - 05 கட்டும் பணியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளின் செலவீனத்தை M E Department Building (20 - 28 - 00 / 412 - 400 - 506) நிதியில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டடத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட வேண்டும்.

எனவே,

1. மேற்குறிப்பிட்டுள்ள பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,95,00,000/- (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று ஐந்து இலட்சம் மட்டும்)க்கு திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும்,

2. **மேற்கண்டுள்ள பணிக்கு ஏற்படும் செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண்**: M E Department Building (20 - 28 - 00 / 412 - 400 - 506)**-ன் நிதியில் ஒதுக்கீடு அளிக்கவும்,**
3. **மேற்கண்டுள்ள பணிக்கு கட்டடத்துறை மூலம் ஒப்பம் கோரவும்,**

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

****

க.து.ந.க.எண்.பி1/0544/2026

தீர்மான எண்: 168/2026 **பொருள் எண்.48**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - Construction of Temporary Shelter for Homeless at Marina Beach in Zone-9 பணி – 2025 2026 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சியில் Construction of Temporary Shelter for Homeless at Marina Beach in Zone-9 பணி மேற்கொள்ளவேண்டியுள்ளது.

இதனை தொடர்ந்து 2025-2026 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியலின்படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

1	பணியின் பெயர்	Construction of Temporary Shelter for Homeless at Marina Beach in Zone-9
2	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் – 09
3	மதிப்பீட்டின் தொகை விவரம்	

	(அ) பணி செலவு	ரூ. 1,6032216.49
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 28,85,798.97
	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 1,60,322.16
	(ஈ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 61,662.37
	மொத்தம்(Rounded Off)	ரூ. 1,91,40,000.00
4	நிதியின் தன்மை	Miscellaneous (20 - 28 - 00 / 412 - 403 - 000)
5	இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	ரூ. 1,91,40,000.00

எனவே,

1. Construction of Temporary Shelter for Homeless at Marina Beach in Zone-9 பணிக்கு ரூ. 1,91,40,000.00 மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்டுள்ள பணிக்கு ஏற்படும் செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண்: Miscellaneous (20 - 28 - 00 / 412 - 403 - 000) நிதியில் மேற்கொள்வதற்கு அனுமதி வேண்டியும்,
3. மாண்புமிகு மேயர் அவர்களின் நிர்வாக அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

****

இ.பொ.து.ந.க.எண்.எம்1/0333/2026

தீர்மான எண்: 169/2026 **பொருள் எண்.49**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சாலையோர மரங்களை பராமரித்தல், கிளைகளை வெட்டுதல், பருவ நிலை மாறுபாடுகளின் காரணமாக ஏற்படுகின்ற பேரிடர் நிகழ்வுகளால் சாலைகளில்

விழும் மரங்களை துண்டாக்கி அகற்றுதல் – பொதுமக்களிடம் மரங்கள் சம்மந்தமான புகார் அதிகமாக உள்ளதால் கூடுதலாக 5 எண்ணிக்கையில் Hydraulic Aerial Lift (9 மீ.உயரம்) பொருத்தப்பட்ட சிறிய வகை வாகனங்கள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சாலையோர மரங்களின் பராமரிப்பு பணிகளான கிளைகளை வெட்டுதல் மற்றும் பருவ நிலை மாறுபாடுகளின் காரணமாக ஏற்படுகின்ற பேரிடர் நிகழ்வுகளால் சாலைகளில் விழும் மரங்களை துண்டாக்கி அகற்றுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. இப்பணிகளை மேற்கொள்ள ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரம் அறுக்கும் இயந்திரம் (Hydraulic Operated Self-Propelled Tree Pruning Machine) 15 எண்ணிக்கையில் கொள்முதல் செய்யப்பட்டு மண்டலத்திற்கு ஒன்று வீதம் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இவற்றில், 6 எண்ணிக்கையிலான இயந்திரங்கள் கடந்த 2018-ஆம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டு கடந்த 8 வருடங்களாக இயக்கப்பட்டு வருவதால் அடிக்கடி பழுது ஏற்படுவதால் கூடுதலாக 5 எண்ணிக்கையில் Hydraulic Aerial Lift (9 மீ.உயரம்) பொருத்தப்பட்ட சிறியவகை வாகனங்களை மின்னணு ஒப்பம் கோரி கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, இவ்வகை வாகனத்தின் தோராய விலை ஒரு வாகனத்திற்கு ரூ.22,00,000/- (GST 18% உட்பட) வீதம் 5 எண்ணிக்கையில் Hydraulic Aerial Lift (9 மீ.உயரம்) பொருத்தப்பட்ட சிறிய வகை வாகனங்கள் ரூ.1,10,00,000/- (GST 18% உட்பட) (ரூபாய். ஒரு கோடியே பத்து இலட்சம் மட்டும்) தோராய மதிப்பீட்டில் மின்னணு ஒப்பம் கோரி கொள்முதல் செய்வதற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்படல் வேண்டும்.

இக்கொள்முதலுக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை மூலதன நிதி கணக்கு குறியீட்டு எண் 40-41-01 / 410-50-01-00 லாரிகள் என்னும் தலைப்பின் கீழ் 2026-27 ஆம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், இந்த வாகனங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியினை சம்மந்தப்பட்ட வட்டார இயந்திர பொறியியல் துறை மூலமே மேற்கொள்ளவும் மற்றும் மரக்கிளைகளை வெட்டும் பணியினை பூங்காத்துறை பணியாளர்களை வாகனத்தில் பணியமர்த்தி பணி மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சாலையோர மரங்களை பராமரித்தல், கிளைகளை வெட்டுதல், பருவ நிலை மாறுபாடுகளின் காரணமாக ஏற்படுகின்ற பேரிடர் நிகழ்வுகளால்

சாலைகளில் விழும் மரங்களை துண்டாக்கி அகற்றுதல் மற்றும் பொதுமக்களிடம் மரங்கள் சம்மந்தமான புகார் அதிகமாக உள்ளதால் கூடுதலாக 5 எண்ணிக்கையில் Hydraulic Aerial Lift (9 மீ.உயரம்) பொருத்தப்பட்ட சிறிய வகை வாகனங்கள் ஒரு வாகனத்தின் விலை ரூ.22,00,000/- (GST 18% உட்பட) வீதம் 5 எண்ணிக்கையிலான வாகனங்களை ரூ.1,10,00,000/- (GST 18% உட்பட) (ரூபாய். ஒரு கோடியே பத்து இலட்சம் மட்டும்) தோராய மதிப்பீட்டில் மின்னணு ஒப்பம் கோரி கொள்முதல் செய்ய ஆணை வேண்டியும்,

2. இக்கொள்முதலுக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை மூலதன நிதி கணக்கு குறியீட்டு எண் 40-41-01 / 410-50-01-00 லாரிகள் என்னும் தலைப்பின் கீழ் 2026-27 ஆம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

வ.து.(தேர்தல்) ந.க.எண்.05842/2011

தீர்மான எண்: 170/2026 **பொருள் எண்.50**

தேர்தல்கள் - பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய்துறை - சாதாரண உள்ளாட்சி தேர்தல் 2011 - 17.10.2011 வாக்குப்பதிவு நாளன்று நடைபெற்றது - தேர்தல் பயன்பாட்டிற்காக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து கொண்டு வரும் பணிகளை மேற்கொள்ள இயந்திர பொறியியல் துறைக்கு ஆணை வழங்கப்பட்டது - முன்பணம் ரூ.8,00,000/- வழங்கப்பட்டது - பல்வேறு தேடுதலுக்கு பின் முன்பணம் நேர் செய்யும் கோப்புகள் கிடைக்கப்பெறாத காரணத்தினால் சிறப்பினமாக கருதி மன்றத்தின் அனுமதி பெற்று நேர் செய்திடுமாறு மேற்பார்வை பொறியாளர்(இயந்திரம்) அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது - தேர்தல் முன்பணங்களை நேர் செய்ததாக கருதி தணிக்கை தடையை நீக்கம் செய்ய அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற சாதாரண உள்ளாட்சி தேர்தலில் வாக்குப்பதிவு நாளான 17.10.2011 அன்று, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.09.2011 நாளிட்ட ஆணையின்படி, உள்ளாட்சி தேர்தல் 2011ன் தேர்தல் பயன்பாட்டிற்காக 6420 எண்ணிக்கை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் 6420 எண்ணிக்கை கட்டுப்பாட்டு கருவிகளை காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து கொண்டு வரும் பணியை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) இயந்திர பொறியியல் துறை அவர்களுக்கு வாகனங்கள் மற்றும் மின்னணு இயந்திரங்களை ஏற்றி இறக்கும் பணிகளுக்கு கீழ்கண்டவாறு முன்பணங்கள் வழங்கப்பட்டது.

Sl. No.	BPV No.	Date	Description	Total Advance for 2011 LB Election Expenditure	Advance Pending
1	A/171 /2011	28.09.2011	Local body election-2011, Advance to Transportation of EVMs shifting from Thiruvallur .	3,00,000/-	SE/Mech.
2	A/176 /2011	12.10.2011	Local body election-2011, Advance to Transportation of EVMs shifting from Kanchipuram.	5,00,000/-	SE/Mech.
			Total	Rs.8,00,000/-	

மேற்கூறியவாறு 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி தேர்தல் செலவினங்களுக்காக வழங்கப்பட்ட முன்பணங்கள் நேர் செய்யப்பட்டது போக, மீதமுள்ள முன்பணங்கள் நீண்ட காலமாக நேர் செய்யப்படாமல் உள்ளதால் பகுதி கணக்கு குழுமம் (வருவாய்துறை தலைமையிடம்) மூலம் 29.12.2020 நாளிட்ட நிதிநிர்வாக பிரிவின் சுற்றறிக்கை மற்றும் முதுநிலை கணக்கு அலுவலர் (வருவாய்) அவர்களின் 10.11.2025 நாளிட்ட கடிதத்தில் உள்ளாட்சி தேர்தல் 2011 தேர்தல் செலவினங்களுக்காக பெறப்பட்ட முன்பணத் தொகை நிலுவைப்பட்டியலில் காணும் இனங்களை விரைந்து நேர் செய்திடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வினம் தொடர்பாக, மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்), இயந்திர பொறியியல் துறை அவர்களின் 12.02.2026 நாளிட்ட கடிதத்தில், மேற்காணும் முன்பணங்கள் 2011 உள்ளாட்சி தேர்தல் செலவினங்களுக்கு பெறப்பட்டு செலவிடப்பட்டுள்ளதாலும், மேலும், செலவினப்பட்டிகள் நேர்செய்திட கோப்புகள் தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த நிலையில், வார்டு மறுவரையறையின்படி, மண்டல அலுவலகங்கள்/இயந்திர பொறியியல் துறை இடமாற்றம் செய்யப்பட்ட போது இருப்பு வைக்கப்பட்டிருந்த கோப்புகள் இடமாற்றம் செய்யப்பட்ட காரணத்தினாலும், மேலும், மேற்படி கோப்புகள் 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டு கோப்புகள் ஏதும் கிடைக்கப் பெறாததாலும், மேலும், இப்பணிகளை மேற்கொண்ட பெரும்பாலான அலுவலர்கள் ஓய்வு பெற்றுவிட்ட

காரணத்தினாலும், மேலும், பல உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் இறந்து விட்டதாலும், இயந்திர பொறியியல் துறை மூலமாக, 2011 தேர்தல் செலவினங்களுக்காக பெறப்பட்ட முன்பணங்கள் தேர்தல் பணிகளுக்காக மட்டுமே செலவிடப்பட்டுள்ளதாலும், தேர்தல் சுமுகமாக நடத்தி முடிக்கப்பட்டதாலும், இவ்வினத்தில் நிலுவைப்பட்டிகள் ஏதும் இல்லாததாலும், மேற்காணும் முன்பணங்கள் நீண்ட காலமாக நிலுவையிலுள்ள காரணத்தினால், இம்முன்பணங்களை சிறப்பினமாக கருதி, மன்றத்தின் அனுமதி பெற்று நேர் செய்திடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற சாதாரண உள்ளாட்சி தேர்தலில் வாக்குப்பதிவு நாளான 17.10.2011 அன்று, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.09.2011 நாளிட்ட ஆணையின்படி, உள்ளாட்சி தேர்தல் 2011ன் தேர்தல் பயன்பாட்டிற்காக 6420 எண்ணிக்கை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் 6420 எண்ணிக்கை கட்டுப்பாட்டு கருவிகளை காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து கொண்டு வரும் பணியை மேற்கொள்ள மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) இயந்திர பொறியியல் துறை அவர்கள் மேற்கொள்ள வாகனங்கள் மற்றும் மின்னணு இயந்திரங்களை ஏற்றி இறக்கும் கூலி மற்றும் இதர தேர்தல் செலவினங்களுக்காக பெறப்பட்ட முன்பணம் தேர்தல் பணிகளுக்கு மட்டும் செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், மேலும், செலவினப்பட்டிகள் நேர்செய்திட கோப்புகள் தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த நிலையில், வார்டு மறுவரையறையின்படி, மண்டல அலுவலகங்கள்/துறைகளில் இருப்பு வைக்கப்பட்டிருந்த கோப்புகள் இடமாற்றம் செய்யப்பட்ட காரணத்தினாலும், மேலும், மேற்படி கோப்புகள் 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டு கோப்புகள் ஏதும் கிடைக்கப் பெறாததாலும், மேலும், இப்பணிகளை மேற்கொண்ட பெரும்பாலான அலுவலர்கள் ஓய்வு பெற்றுவிட்ட காரணத்தினால் இயந்திர பொறியியல் துறை மூலமாக, 2011 தேர்தல் செலவினங்களுக்காக பெறப்பட்ட முன்பணங்கள் தேர்தல் பணிகளுக்காக மட்டுமே செலவிடப்பட்டுள்ளதாலும், தேர்தல் சுமுகமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளதாலும், இவ்வினத்தில் நிலுவைப்பட்டிகள் ஏதும் இல்லாததால், மேற்காணும் முன்பணங்கள் நீண்ட காலமாக நிலுவையிலுள்ள காரணத்தினால், இம்முன்பணங்களை நேர் செய்ததாக கருதி, நீக்கம் செய்திடவும், மேற்சொன்ன முன்பணங்கள் தொடர்பாக நிலுவையில் உள்ள தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்திடவும், நிலைக்குழு (கணக்கு மற்றும் தணிக்கை)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு(கணக்கு மற்றும் தணிக்கை) கூட்டத்தில் தீர்மான எண்.02/2026, நாள்.17.02.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (கணக்கு மற்றும் தணிக்கை) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.4.ந.க.எண்.பி3/0213/2026

தீர்மான எண்: 171/2026 **பொருள் எண்.51**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 4, வார்டு – 40, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் RTO அலுவலகம் எதிரில் உள்ள பேருந்து நிழற்கூரையை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 4, பகுதி - 10, வார்டு - 40, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் RTO அலுவலகம் அருகில் உள்ள பேருந்து நிழற்கூரையை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்.	பொருள்	விவரம்
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் RTO அலுவலகம் அருகில் உள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பேருந்து நிழற்கூரை.
2	இக்கட்டிடம் எப்போது கட்டப்பட்டது	2000 ஆம் ஆண்டு
3	இக்கட்டிடத்தின் பரப்பளவு	134.55ச.அடி.
4	பழைய கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ.10,188/-
5	பழைய கட்டிடம் இப்போது	பயன்பாட்டில் உள்ளது.

	பயன்பாட்டில் உள்ள தா?	
6	பழைய கட்டிடம் இடிப்பதற்கு காரணம்	மிகவும் பழுதடைந்து, அபாயகரமாக உள்ளது.
7	அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	பேருந்து நிழற்கூரையை இடித்து விட்டு புதிய பேருந்து நிழற்கூரை கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
8	பழைய கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்?	மாவட்ட வருவாய் அலுவலர்/உதவி ஆணையர் - 4
9	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண்.(ம) நாள்:	தீர்மான எண். 27, நாள்: 14.11.2025

எனவே, மண்டலம் – 4, பகுதி – 10, வார்டு – 40, திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் RTO அலுவலகம் எதிரில் உள்ள நிழற்கூரை மிகவும் பழுதடைந்து உடையும் தருவாயில் உள்ளது. மேலும், இக்கூரையானது பழுதடைந்துள்ள காரணத்தினால் அங்கு வரும் பயணிகளால் நிழற்கூரையை உபயோகிக்க இயலவில்லை. எனவே, இந்நிழற்கூரையை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"13.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.31/2026, நாள்.13.02.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.4.ந.க.எண்.பி3/0277 /2026

தீர்மான எண்: 172/2026 **பொருள் எண்.52**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 4, வார்டு – 47, ஜெ.ஜெ.நகர் எ1 தெருவில் உள்ள பல்நோக்கு கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - *4*, பகுதி - *11*, வார்டு - *47*ல் ஜெ.ஜெ.நகர் எ*1* தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பல்நோக்கு கட்டிடம் இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்	மண்டலம்-*4*	வார்டு எண். *47*
1.	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	ஜெ.ஜெ.நகர் எ*1* தெருவில் உள்ள பல்நோக்கு கட்டிடம்.
2.	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது	*1992* ஆம் ஆண்டு
3.	அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு?	பல்நோக்கு கட்டிடம் தரை தளம் - *55.25* ச.மீ
4.	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	ரூ. *11680.44*
5.	அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	பழுதடைந்து பயனற்ற இடிந்து விழும் நிலையில் உள்ள கட்டிடம்.
6.	கட்டிடம் இடிப்பதற்கு காரணம்	இக்கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்காக.
7.	அந்த பழைய கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
8.	பல்நோக்கு கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை	செயற் பொறியாளர், மண்டலம்-*4*

	செய்தது	
9.	வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண். (ம) நாள்:	வார்டு குழு தீர்மான எண். 55, நாள்: 15.10.2025

மேலே குறிப்பிட்டுள்ள பகுதி-11, வார்டு-47, ஜெ.ஜெ.நகர் எ1 தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பல்நோக்கு கட்டிடம் மிகவும் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது. அக்கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-4, வார்டு-47, ஜெ.ஜெ நகர் எ1 தெருவில் உள்ள பல்நோக்கு கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.032/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.13.ந.க.எண்.சி1/0119/2026

தீர்மான எண்: 173/2026 **பொருள் எண்.53**

பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம் -13, கோட்டம்- 178ல் தரமணி 5சி பேருந்து நிலையம் அருகில் உள்ள பல்நோக்கு மையக்கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி – 39, கோட்டம்- 178 க்குட்பட்ட தரமணி 5சி பேருந்து நிலையம் அருகில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பல்நோக்கு மையக்கட்டிடத்தை இடித்து அகற்றி இவ்விடத்தில் புதிய நவீன பல்நோக்கு மையக்கட்டிடம் கட்டுவதற்கு 13வது மண்டல வார்டு குழு கூட்டத்தில் தீர்மான எண் 448, நாள் 14.10.2025ன்படி பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று பகுதி – 39, கோட்டம்-178க்குட்பட்ட தரமணி 5சி பேருந்து நிலையம் அருகில் உள்ள பழுதடைந்த நிலையில் உள்ள பல்நோக்கு மையக் கட்டிடத்தை இடிக்க வேண்டியது அவசியமாகிறது

அதன் விவரம்

வ எண்	வார்டு எண்	இடம்	கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	கட்டிடத்தின் பரப்பளவு	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா
1	178	5சி பேருந்து நிறுத்தம் பல்நோக்கு மைய கட்டிடம்	2014.2015	137.7 ச.மீ	9,36,000	ஆம்

எனவே, மண்டலம்-13, பகுதி – 39, கோட்டம்-178க்குட்பட்ட தரமணி 5சி பேருந்து நிறுத்தம் அருகில் பழுதடைந்த நிலையில் உள்ள பல்நோக்கு மையக்கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "13.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.29/2026, நாள்.13.02.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.1.ந.க.எண்.பி1 / 5728 / 2025

தீர்மான எண்: 174/2026 **பொருள் எண்.54**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 1, பகுதி 1, வார்டு 1, 2 (ம) 4 வரை உள்ள பகுதிகளில் - பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் தூர்வாரி வெளியேற்றிட 13 எண்ணிக்கையிலான பணியாளர்கள் சுய உதவிகுழுவின் (SHG) கீழ் - 01.05.2024 முதல் 30.04.2025 வரை நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிக்காலம் 30.04.2025 அன்று முடிவடைகிறது - 04.05.2026 முதல் 03.05.2027 வரை தற்காலிக பணியாளர்கள் பணி அமர்த்தி தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்ய அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் *1*, பகுதி *1, 2* (ம) *3* வார்டு *1* முதல் *14* வரை உள்ளடக்கிய கோட்டங்களாகும். இப்பகுதிகள் *26.96* ச.கி.மீ பரப்பளவு உள்ளடக்கியது ஆகும். வார்டு *1* முதல் *14* வரை உள்ள பகுதிகள் மொத்த சாலைகள் *1577* இதில் குடியிருப்பு வீடுகளின் எண்ணிக்கை *87,418* ஆகும். சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் *25.10.2011*ல் திருவொற்றியூர் மற்றும் கத்திவாக்கம் நகராட்சிகள் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது. நகராட்சியாக செயல்பட்ட போது மேற்கு பகுதிகளில் வார்டு எண் *1* முதல் *7* வரை உள்ள பகுதிகள் பாதாள சாக்கடை கட்டமைப்பு இல்லாததாலும் மற்றும் வார்டு எண் *8* முதல் *14* வரை உள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை கட்டமைப்பு ஒரு சில பகுதிகளை தவிர தேவையான அளவு உள்ளதாலும் தற்போது மண்டலம்-*1*ல் பயன்பாட்டிலுள்ள பக்க கால்வாய்கள் எண்ணிக்கை *360 (54.15*கி.மீ*)* அமைக்கப்பட்டு மழைநீர் சிறு பாலங்கள் வழியாக பொதுப்பணித்துறை பக்கிங்காம் கால்வாய் வழியே கடலில் சென்று அடைகிறது.

மண்டலம் *1*, வார்டு *1, 2* (ம) *4* வரை உள்ள பகுதிகளில் பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் சேர்ந்துள்ளதால் மழை நீர் தேக்கம் அடைந்து, சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இவற்றை தவிர்த்திட போர்க்கால அடிப்படையில் பக்க கால்வாய்களில் சேர்ந்துள்ள மண் மற்றும் கழிவுகளால் கொசு உற்பத்தி ஆகாமல் தடுத்திடவும் அக்கால்வாய்களில் தூர்வாரி அகற்றிட தேவைப்படும் பணியாளர்களை சுய உதவிகுழுவின் கீழ் தினக்கூலி அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு *(01.05.2025* முதல் *30.04.2026)* ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று பணிகள் நடைபெற்று வரும் நிலையில் *30.04.2026* தேதியில் பணிக்காலம் முடிவடைகிறது.

கோட்டம் 1, 2 (ம) 4வரை பணிபுரியும் தற்காலிக பக்க கால்வாய் பணியாளர்கள் 01.05.2026 முதல் 30.04.2027 வரை பணிபுரிய மண்டலக்குழு ஒப்புதல் பெறப்பட்டது. அதனை ரத்து செய்து தற்காலிக பக்க கால்வாய் பணியாளர்கள் தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதிக்காமல் 04.05.2026 முதல் 03.05.2027 வரை பணிபுரிய மண்டலக்குழுவின் பின்னேற்பு அனுமதி பெறப்படும் என பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

திடக்கழிவு மேலாண்மை துறை அவர்களின் சுற்றறிக்கையில் 2025-26 ஆம் ஆண்டு 05.12.2025 முதல் தினக்கூலி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.761/-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் தினக்கூலி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.753ல் இருந்து உயர்த்தி ஊதியம் ரூ.761/- வழங்குவதற்கு மண்டல குழுவின் பின்னேற்பு அனுமதி பெறப்படும் என பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மேற்படி தேவைப்படும் பணியாளர்களின் விவரம் கீழ்வருமாறு (நகல் இணைப்பு)

வ. எண்	வார்டு எண்	தெருக்களின் எண்ணிக்கை	தெருக்களின் நீளம் மீ	கால்வாய்களின் எண்ணிக்கை	பக்க கால்வாயின் நீளம்	முழுமையாக பக்க கால்வாய் / தூர்வாரும் பணிக்கு தேவைப்படும பணியாளர்கள்	ஒரு நாளைக்கு ஒரு நபர் வீதம் தூர்வாரும் பணி நீளம்
1	1	119	18779	61	10869	5 நபர்கள் (3 நாட்களுக்கு ஒருமுறை) சுழற்சி முறையில்	தோராயமாக 650 மீ முதல் 750மீ வரை (கடற்கரை ஒட்டிய குடியிருப்பு குறைவான பகுதி
2	2	127	12130	94	11884	6 நபர்கள் (3 நாட்களுக்கு ஒருமுறை) சுழற்சி முறையில்	தோராயமாக 600 மீ முதல் 650 மீ வரை குடியிருப்பு அடர்த்தியான பகுதி
3	4	189	26850	14	5530	2 நபர்கள் (3 நாட்களுக்கு ஒருமுறை) சுழற்சி முறையில்	தோராயமாக 500மீ முதல் 600 மீ வரை குடியிருப்பு அடர்த்தியான பகுதி
மொத்தம்		435	57759	169	28283	13	

மேற்படி பட்டியலில் குறிப்பிட்டுள்ள அட்டவணையின் படி வார்டு 1, 2 மற்றும் 4 வரையிலான 435 தெருக்களில் உள்ள பக்க கால்வாய்களின் நீளம் 28283 உள்ளது. இக்கால்வாய்களில் உள்ள மண் மற்றும் சேரும் கழிவுகள் அகற்றிட சுய உதவிகுழு (SHG)ன் கீழ் தினக்கூலி அடிப்படையில் 04.05.2026 முதல் 03.05.2027 வரையிலான ஒரு வருட காலத்திற்கு பணி அமர்த்தி பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

எனவே,

1. மண்டலம் 1, பகுதி 1, வார்டு 1, 2 (ம) 4 வரை உள்ள பகுதிகளில் பக்க கால்வாய்களில் சேரும் மண் மற்றும் கழிவுகள் தூர்வாரி வெளியேற்றிட சுய உதவிகுழு (SHG)ன் கீழ், ஒரு வருட காலத்திற்கு 13 தற்காலிக பணியாளர்களை பணி அமர்த்தி பணிகள் மேற்கொள்ள திடக்கழிவு மேலாண்மை துறை அவர்களின் சுற்றறிக்கையில் 2025-26ஆம் ஆண்டு 01.04.2025 முதல் தினக்கூலி ரூ.761/- என குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ.761/- வீதம் (ரூ.761 x 13 நபர்கள் X ஒரு வருட காலத்திற்கு = ரூ.36,10,945/- (முப்பத்தி ஆறு இலட்சத்து பத்தாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி ஐந்து மட்டும்) 04.05.2026 முதல் 03.05.2027 வரை ஒரு வருட காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள ஆணை வேண்டியும்,
2. மேற்குறிப்பிட்ட பணிக்கு ரூ.36,10,945/- (முப்பத்தி ஆறு இலட்சத்து பத்தாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி ஐந்து மட்டும்) ரூ.36.11 இலட்சம் நிதி ஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு வேண்டியும்,
3. இப்பணிக்கு பிரிவு எண் 40-41-03, கணக்கு குறியீட்டு எண் 210-100-601ல் பட்டிகள் தீர்வு செய்திடவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"13.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.34/2026, நாள். 13.02.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.72/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.1.ந.க.எண்.பி2 / 5727 / 2025

தீர்மான எண்: 175/2026 **பொருள் எண்.55**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 1, பகுதி 1, 2 (ம) 3, வார்டு 1 முதல் 14 வரை உள்ள கோட்டங்கள் மற்றும் மண்டல அலுவலகம் - பணிபுரியும் 15 எண்ணிக்கையிலான புள்ளிவிவர குறிப்பாளர்கள் - சுய உதவிகுழு (SHG)ன் கீழ் 01.05.2025 முதல் 30.04.2026 வரை நிர்வாக அனுமதி பெறப்பட்டது - 30.04.2026 பணிக்காலம் முடிவடைகிறது - 04.05.2026 முதல் 03.05.2027 வரை தற்காலிக புள்ளிவிவர குறிப்பாளர்கள் பணி அமர்த்தி தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-*1* கோட்டம் *1* முதல் *14* வரை உள்ள பகுதிகளில் ஒப்ப பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்தல், கணினியில் பதிவேற்றம் செய்தல், நகரமைப்பு பிரிவில் கட்டிடம் தொடர்பான பதிவுகள் *(Building plan permission)* மழை மற்றும் புயல் போன்ற பேரிடர் காலங்களில் தினசரி அறிக்கைகள் அனுப்புதல், ஆய்வு கூட்டங்களுக்கு அறிக்கை தயாரித்தல் மற்றும் கணினியில் பதிவேற்றம் செய்தல், புள்ளிவிவர குறிப்புகள் அனுப்புதல் போன்ற பணிகள் தொய்வு இல்லாமல் இப்பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மண்டல அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-*1* பகுதி-*1, 2 (ம) 3* கோட்டம்-*1* முதல் *14* வரை உள்ள கோட்டங்கள், மண்டல அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகத்தில் பணிபுரிய *15* எண்ணிக்கையிலான தற்காலிக புள்ளி விவர குறிப்பாளர்கள் *Data Entry Operators 01.05.2025* முதல் *30.04.2026* வரை ஒரு வருட காலத்திற்கு ஆணையர் அவர்களின் ஆணை மற்றும் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் தொடர்ந்து தொய்வில்லாமல் நடைபெற்று வருகிறது. மேலும் மன்ற தீர்மானத்தில் தற்காலிக புள்ளி விவர குறிப்பாளர்களின் பணிக்காலம் முடிவடைந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதிக்காமல் இடைவெளி விட்டு பின்னர் தற்காலிக பணியாளர்களை பணிபுரிய அனுமதிக்கலாம் என்ற நிபந்தனையுடன்

தீர்மான எண்.160/2025 நாள்.25.04.2025ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கோட்டம் 1 முதல் 14 வரை பணிபுரியும் தற்காலிக புள்ளிவிவர குறிப்பாளர்கள் 01.05.2026 முத 30.04.2027 வரை தொடர்ச்சியாக பணிபுரிய மண்டலக்குழு ஒப்புதல் பெறப்பட்டது. அதனை ரத்து செய்து தற்காலிக புள்ளிவிவர குறிப்பாளர்கள் தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதிக்காமல் 04.05.2026 முதல் 03.05.2027 வரை பணிபுரிய மண்டல குழுவின் பின்னேற்பு அனுமதி பெறப்படும் என பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

திடக்கழிவு மேலாண்மை துறையின் சுற்றறிக்கையில் 2025-26 ஆம் ஆண்டு 05.12.2025 முதல் தினக்கூலி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.761/-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் தினக்கூலி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.753ல் இருந்து உயர்த்தி ஊதியம் ரூ.761/- வழங்குவதற்கு மண்டல குழுவின் பின்னேற்பு அனுமதி பெறப்படும் என பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1 2025 ஆம் ஆண்டு பகுதி அலுவலகங்கள் 1, 2 (ம) 3க்கு, மற்றும் மண்டல அலுவலகத்தில் பணிபுரிய 15 எண்ணிக்கையிலான தற்காலிக புள்ளி விவர குறிப்பாளர்கள் (Data Entry Operators) சுய உதவிகுழு (SHG)ன் கீழ் 04.05.2026 முதல் 03.05.2027 வரை ஒரு வருட காலத்திற்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.761/- வீதம் (ரூ.761 X 15 X 365= ரூ.41,66,475/- (ரூபாய் நாற்பத்தி ஒரு இலட்சத்து அறுபத்தி ஆறாயிரத்து நானூற்று எழுபத்தி ஐந்து மட்டும்) பணி அமர்த்தி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மண்டலம்-1க்கு 2026-27 ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் பிரிவு எண் 20-21-06, கணக்கு குறியீட்டு எண் 220-110-314ல் தற்காலிக புள்ளி விவர குறிப்பாளர்களுக்கு (Data Entry Operators) பட்டிகள் தீர்வு செய்திட ரூ.41,66,475/-ஐ நிதி ஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு வேண்டியும்,
3. 2026-27 ஆம் ஆண்டு சுற்றறிக்கையின் படி தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்படும் குறைந்த பட்ச மாத ஊதியத்தொகைக்கு ஊதியம் வழங்கிட அனுமதியும்,
4. மண்டலம் 1ல் 04.05.2026 முதல் 03.05.2027 வரை ஒரு வருட காலத்திற்கு தற்காலிக புள்ளி விவர குறிப்பாளர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"13.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.35/2026, நாள். 13.02.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.74/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.2.ந.க.எண்.சி1/5130/2025

தீர்மான எண்: 176/2026 **பொருள் எண்.56**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 2 (மணலி)- வார்டு-15 முதல் 22 வரைக்குட்பட்ட பகுதிகளில் அண்டை வீட்டு சுய உதவி குழுக்கள் (SHG) மூலம் (SHG) 25 இருளர் சமுதாயத்தை சேர்ந்த நபர்களை தற்காலிக தினக்கூலி பணியாளர்களாக புதியதாக பணியில் சேர்த்துக்கொண்டு சாலைப் பணிகள் மேற்கொள்ள அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-2, பகுதி 4 மற்றும் 5, வார்டு-15 முதல் 22 வரை 43.93 சதுர கி.மீ பரப்பளவுள்ள 8 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 10 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1344 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

Municipal Administration and Water Supply G.O. No.95 நாள் 14.10.2012 ன்படி ஒரு வார்டுக்கு 8 என்ற வீதத்தில் மண்டலம்-2ற்கு அனுமதிக்கப்பட்ட நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம் 64 ஆகும். மண்டலம்-2ல் நிரந்தர சாலை பணியாளர்கள் 56 நபர்கள் மட்டுமே உள்ளனர்.

மேல்குறிப்பிட்டுள்ள 56 சாலை பணியாளர்களில் மாற்றுப்பணி அடிப்படையில் 17 சாலைப் பணியாளர்கள் தலைமையிடத்திலும், 6 சாலைப்பணியாளர்கள் மண்டல அலுவலகம்-

2லும் (ம) 6 சாலைப்பணியாளர்கள் வரிவசூலிப்பாளர்களாக ('பொறுப்பு) வருவாய்துறையிலும் பணிபுரிந்து வருவது போக மீதமுள்ள 27 நபர்கள் மட்டுமே களத்தில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் SHG முலம் 28 தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள் சாலைப்பணியாளர்களின் அன்றாட பணிகளை கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

1 Road Patch work / pot hole attended
2. Removal of Debris
3. Clearing of unauthorized encroachment
4. Storm water Drain Silt catch pit cleaning & Chute pipe Cleaning
5. Water table cleaning
6. Filling of Road cut made by service department
7. Road Sectioning
8. Desilting of SWD & open Canal
9. Removing the storm water
10. Clearing the tree branches on the road to prevent the traffic block
11. Clearing the tree branches on the road tree prunning & branches cutting , Fallen tree removing

12.All other related road works

Hot mix patch attended.
CC patch work attended
Cold mix patch attended

13.In Rainy Season

Diesel pump operation
Food distribution work
Relief centre work etc.

14. Election work

Defacing
Flag removing
Poster & Banners removing.
Flag post & Flag pole removing etc..

வார்டு வாரியாக மண்டலம்-2ல் பணிபுரியும் நிரந்தர சாலைப்பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் தற்காலிக சாலைப் பணியாளர்களின் எண்ணிக்கை கீழ்கண்டவாறு அட்டவணையிடப்படுகிறது.

வ.எண்	வார்டு எண்	அனுமதிக்கப்பட்ட பணியிடம்	தற்போது பணிபுரியும் நிரந்தர சாலைப் பணியாளர்களின் எண்ணிக்கை	SHG தற்காலிக பணியாளர்களின் எண்ணிக்கை	தற்போது தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை
1.	15	8	8	3	3
2.	16	8	5	3	4
3.	17	8	5	3	3
4.	18	8	6	3	3
5.	19	8	9	1	3
6.	20	8	9	3	3
7.	21	8	9	3	3
8.	22	8	5	9	3
மொத்தம்		64	56	28	25

அரசாணை (நிலை) எண் 2D, எண் 36, தொழிலாளர் நலன் மற்றும் திறன் வளர்ச்சி (J1) துறை, நாள் 16.06.2023ன்படி திருத்திய குறைந்தபட்ச ஊதியம் for employment under

any local authority of different classes of employees அனைத்து மாநகராட்சிகள், நகராட்சி, பஞ்சாயத்து ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு வெவ்வேறு சராசரி குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு, இதன் பொருட்டான அரசாணையில், தெரிவிக்கப்பட்ட விவரங்கள் தமிழ்நாடு அரசின் அரசிதழ் வெளியிடும் *(Gazette Publication)* நாள்.*05.07.2023* முதல் அமுல்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து ஆணையர் அவர்களின் *29.07.2024* நாளிட்ட சுற்றறிக்கையின் படி நாளொன்றுக்கான ஊதியம் ரூ *687/-* லிருந்து ரூ.*753* ஆக உயர்த்தி வழங்க அனுமதி அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் *05.12.2025* நாளிட்ட சுற்றறிக்கையின்படி, திடக்கழிவு மேலாண்மைத்துறையின் கீழ் வரும் அனைத்து மண்டலங்களிலும் அண்டை வீட்டு குழுவின் வழியாக பணியமர்த்தப்பட்டுள்ள தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு *(Unskilled worker)* நாள் ஒன்றிற்கு *01.04.2025* முதல் தினக்கூலி ரூ.*753/-* லிருந்து ரூ.*761/-* ஆக உயர்த்தி மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் ஆணை பெறப்பட்டுள்ளது.

அதன்படி மண்டலம்-*2* இருளர் சமுதாய மக்கள் வசிக்கும் பகுதியில் தலைமை செயலாளர் தமிழக அரசு, ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி, மற்றும் செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, ஆகியோர்கள் ஆய்வு செய்த பொழுது இருளர் சமுதாய மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தரவேண்டும் என்று அறிவுறுத்தியதின் பேரில் இருளர் சமுதாய மக்கள் மொத்தம் *45* குடும்பங்கள் வசித்து வருகின்றார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு அவர்களுக்கு முன்னுரிமை அளித்து *SHG* அண்டை வீட்டு குழு மூலம் தினக்கூலி பணியாளர்களாக பணியமர்த்துமாறு அறிவுறுத்தியதை தொடர்ந்து கடந்த ஆண்டில் இருளர் சமுதாயத்தை சேர்ந்த *10* நபர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு தற்காலிக தினக்கூலி சாலை பணியாளர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் தற்போது கோட்டம் *16*ல் உள்ள இருளர் சமுதாய மக்களின் அடிப்படை வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு மீண்டும் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் *25* நபர்களை *SHG* அண்டை வீட்டு குழு மூலம் சாலை பணியில் ஈடுபடுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

துணை ஆட்சியர் *(நி)* வடக்கு அவர்களின் *22-12-2025* நாளிட்ட கடிதத்தில், தெரிவிக்கப்பட்டுள்ள குறைகள் நிவர்த்தி செய்து, ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம் *-2* (மணலி), பகுதி *4* மற்றும் *5* க்கு உட்பட்ட பகுதிகளில் சாலை பணிகள் தொய்வின்றி மேற்கொள்ள அவசரம் மற்றும் அவசியம் கருதி இருளர் சமுதாயத்தை சேர்ந்த மக்களுக்கு முன்னுரிமை அளித்து *25* நபர்களை

தற்காலிக தினக்கூலி பணியாளர்களாக *01.01.2026* முதல் *31.12.2026* வரை *(365* நாட்கள்*)* அண்டை வீட்டு குழு *(SHG)* மூலம் பணியில் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. மேற்கண்ட பணிக்காக ஆகும் செலவின தொகை ரூ.*69,44,125/-* (ரூபாய் அறுபத்தி ஒன்பது இலட்சத்து நாற்பத்தி நான்காயிரத்து நூற்றி இருபத்தி ஐந்து மட்டும்) *(25* நபர்கள்*x*ரூ.*761x365* நாட்கள்*)* ஐ நிதி ஆலோசகர் மூலம் கூடுதலாக நிதி ஒதுக்கிடு பெற நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. இச்செலவீனத்தை கணக்கு குறியீட்டு எண்*20-21-07*கணக்கு தலைப்பு எண் *210-100-603* கீழ் மேற்கொள்ளவும்

மேற்கண்ட இனம் 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"13.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.32/2026, நாள். 13.02.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.72/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

பொ.சு.பூ.த.து.நு.க.எண்.எம்.1/338/2025

தீர்மான எண்: 177/2026 **பொருள் எண்.57**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரம் - பூச்சி தடுப்பு துறை - நிர்வாக அனுமதிக்கான அதிகாரம் மற்றும் நிதி பங்கீட்டு அதிகாரம் (Delegation of Power) வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரம், பூச்சி தடுப்பு துறையின் மூலம் கொசுக்களினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்கன்குனியா, யானைக்கால், மூளைக் காய்ச்சல் மற்றும் விலங்குகளிடம் உள்ள ஒட்டுண்ணிகள் *(Zoonotic Disease)* மூலம் பரவக் கூடிய லெப்டோஸ்பைரோஸிஸ் *(எலிகாய்ச்சல்)*, ஸ்க்ரப்டைபஸ் *(Scrubtyphus)* ஆகிய நோய்களை பரவாமல் கட்டுப்படுத்தும் பணிகளை மண்டலம் *1* முதல் *15* வரை உள்ள 200 கோட்டங்களில் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்துறையின் கீழ் *5*- முதுநிலை பூச்சியில் வல்லுநர்கள், *(0*-காலிப்பணியிடங்கள்*)*, *6*-நிரந்தர இளநிலை பூச்சியியல் வல்லுநர்கள், *8* - தற்காலிக இளநிலை பூச்சியியல் வல்லுநர்கள், *(2* - காலிப்பணியிடங்கள்*)*, *35*-களப்பணியாளர்கள், *(5*-காலிப்பணியிடங்கள்*)*, *42* - அடிப்படை சுகாதாரப் பணியாளர்கள் *(181* - காலிப்பணியிடங்கள்*)*, பணிபுரிந்து வருகின்றனர். மேலும், இத்துறையின் முக்கிய பணி மண்டலம் *1* முதல் *15* வரைக்குட்பட்ட பகுதியில் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்வதாகும், பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது சுகாதாரம், பூச்சி தடுப்பு துறையின் கீழ் கொசு ஒழிப்பு பணிக்கென *1142* நிரந்தர கொசுஒழிப்பு பணியாளர்களும், *2450* ஒப்பந்த பணியாளர்களும் மொத்தம் *3592* பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். சென்னையில் உள்ள சுமார் *17* இலட்சம் வீடுகளின் பகுதிகளை சிறுவட்டங்களாக *(Sectors)* பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டத்திற்கும் சுமார் *500* வீடுகள் கொண்ட தெருக்களில் வாரந்தோறும் டெங்கு, சிக்கன்குனியா, மலேரியா போன்ற நோய்களை பரப்பக்கூடிய கொசு புழு உற்பத்தியாகக்கூடிய இடங்களான மேல்நிலை / கீழ்நிலைத் தொட்டி, கிணறு, நீர் தேக்கி வைத்துள்ள டிரம்கள் மற்றும் தேவையற்ற பொருள்கள் *(*டயர்கள், உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் தேவையற்றப்பொருட்கள்*)* ஆகியவற்றை கண்டறிந்து நோய்களை பரப்பக்கூடிய கொசு புழு உற்பத்தி இருப்பின் அதனை உடனுக்குடன் அகற்றி கொசு உற்பத்தி ஆகாதவண்ணம் பணிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், கொசு ஒழிப்பு பணிக்கென *521* எண்ணிக்கையிலான கைத்தெளிப்பான்கள், *49* எண்ணிக்கையிலான அதிவேக திறன்கொண்ட மோட்டார் மூலம் இயங்கக்கூடிய கைத்தெளிப்பான்கள், *132* எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயங்கக்கூடிய கைத்தெளிப்பான்கள், *15* எண்ணிக்கையிலான வாகன மூலம் பொருத்தி இயக்கக்கூடிய கைத்தெளிப்பான்கள், *272* எண்ணிக்கையிலான கையினால் எடுத்துச் செல்லப்பட்டு இயக்கக்கூடிய புகைப்பரப்பும் இயந்திரங்கள் *200* சிறியரக புகைப்பரப்பும் இயந்திரங்கள் மற்றும் *92* வாகனம் மூலம்

பொருத்தி இயக்கக்கூடிய அதிவேக திறன்கொண்ட புகைப்பரப்பும் இயந்திரங்கள் கொண்டும் தீவிர கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர்.

நிர்வாக நலன் கருதி ஆணையர் அவர்களின், *29.07.2025* நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, ஒப்புதல் பெறும் கோப்புகளை இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களுக்கு தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் அவர்கள் நேரடியாக கோப்புகளை சமர்ப்பிக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின், *06.08.2025* நாளிட்ட சுற்றறிக்கையின்படி, பொறியியல் அல்லாத பதவிகளுக்கு நிதி பங்கீட்டு அதிகாரம் *(Purchase and Sanctioned of Advance)* ரூ.*8,00,000/-* லிருந்து ரூ.*10,00,000/-* பூச்சி தடுப்பு துறைக்கு உயர்த்தப்பட்டது.

பொது சுகாதாரம், பூச்சி தடுப்பு துறையில் கொசு ஒழிப்பு பணிக்கு செலவீனங்கள் கீழ்கண்டவாறு மேற்கொள்ளப்படுகிறது.

வ.எண்	கொசு ஒழிப்பு பணிக்கு தேவையான மருந்துகளின் விவரம்
1	LARVICIDES i) Temephos 50 % E.C (TNMSC) ii) Mosquito Larvicide Oil (TENDER) iii) Bio-Larvicide (TNMSC)
2	INSECTICIDES i) Pyrethrum 2 % Extract (TNMSC) ii) Malathion Technical 95% Grade (TNMSC) iii) Propoxur E.C, (TENDER) iv) Propoxur Granules (TENDER) v) Lemon Grass Oil (TENDER)
3	Vector Control Kits
4	Head Quarters Rat Control Activity
5	JSB Stain 1 & 2 (use to malaria test)
6	Filaria Patient Welfare
7	Fogging Machines, Sprayers Procured And Vector Control Logistics Annual Maintenance And Accessories

மேலும், பூச்சி தடுப்புத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பணியிடமாற்றம், கொசு ஒழிப்பு பணிக்கு தேவையான பூச்சி கொல்லி மருந்துகள், கைத்தெளிப்பான்கள் மற்றும் சிறிய

புகைப்பரப்பும் இயந்திரங்கள் போன்றவற்றை கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்த அனுமதி அளிக்கும் அதிகாரம் தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

ஆணையர் அவர்களின், *08.10.2025* நாளிட்ட ஒப்புதலின்படி கீழ்காணும் இனங்களை தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் மூலம் மேற்கொள்வதற்கு ஆணை பெறப்பட்டுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் *1* முதல் *15* வரையில் உள்ள பகுதிகளுக்கு கொசு ஒழிப்பு பணிக்கு தேவைப்படும் மேற்கண்ட பூச்சி கொல்லி மருந்துகள், கைத்தெளிப்பான்கள் மற்றும் சிறிய புகைப்பரப்பும் இயந்திரங்கள் போன்றவற்றை ஒப்பந்த அடிப்படையில் கொள்முதல் செய்வதற்கு உரிய நிர்வாக அனுமதியும்,
2. நிதி வரம்பு அதிகாரம் ரூ.*10,00,000/-* (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) வழங்கவும்,
3. ஒப்பந்தப்புள்ளி *(Tender)* செயல்பாட்டிற்கு தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் மற்றும் தலைமை கால்நடை மருத்துவ அலுவலரின் ஒப்பந்தப்புள்ளி *(Tender)* சாவியைப் பயன்படுத்தவும்,
4. தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் அவர்களின் அளவிலேயே ரூ.*9,99,999/-* வரையிலான அனைத்து ஒப்பந்தப்புள்ளி *(Tender)* அழைப்பது மற்றும் ரூ. *9,99,999/-* வரையிலான அனைத்து பட்டிகளை தேர்ச்சி செய்வது,
5. பூச்சி தடுப்பு துறைக்கான ஒப்பந்தப்புள்ளி *(Tender)* அழைக்கும் அதிகாரியாக தலைமை பூச்சி தடுப்பு அலுவலரை நியமித்தல்,
6. பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, பணியிடை காலமான அலுவலர்கள் / பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலை வழங்கும் திட்டத்தில் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று பொதுத்துறை மூலமாக பணி நியமனம் செய்யப்பட்ட மலேரியா பணியாளர்களை மண்டலம் / துறைகள் வாரியாக உள்ள காலிப்பணியிடங்களில் பணியமர்வு செய்யும் அதிகாரம் வரம்பினை *(Delegation of Power)* தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் அவர்களின் பதவிக்கு வழங்கவும்,
7. தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் அவர்களின் அளவிலேயே தொழிலாளர்களுக்கு பணியிடமாற்றம் அதிகார வரம்பினை *(Delegation of Power)* தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் அவர்களின் பதவிக்கு வழங்க ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டியும்,
8. பூச்சி தடுப்பு துறை சார்பில் ஏற்படுத்தப்படும் கோப்புகள் மற்றும் அறிக்கைகளை தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் மூலமாக நேரடியாக துணை / இணை / கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) அவர்கள் மூலமாக ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கவும் ,

மேற்கண்ட *1* முதல் *8* வரை உள்ள இனங்களுக்கு ஆணையர் அவர்களின் *08.10.2025* நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டமைக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.031/2026 ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

****

இ.பொ.து.நு.க. எண்.எம்1/0217/2026

தீர்மான எண்: 178/2026 **பொருள் எண்.58**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல்துறை - கல்வி துறையில் பணிபுரிந்து வரும் கல்வி அலுவலர்கள் மற்றும் உதவி கல்வி அலுவலர்கள் என 14 அலுவலர்களுக்கு புதியதாக 14 எண்ணிக்கையில் Mahindra Bolero B6 (OPT) AC BS-VI வகை வாகனங்களை வாகன உற்பத்தியாளர்களான திருவாளர்கள். Mahindra & Mahindra Limited நிறுவனத்தாரிடமிருந்து Mahindra Bolero B6 (OPT) AC BS-VI வகை வாகனங்களை அரசு "இ" மார்க்கெட் (GeM Price) விலையில் கொள்முதல் செய்வதற்கு நிர்வாக அனுமதிஅளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

கல்வி அலுவலர் அவர்களின் *28.01.2026* நாளிட்ட குறிப்பில், பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் தற்போது *2* கல்வி அலுவலர்கள் மற்றும் *15* உதவி கல்வி அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்வதற்கு முன்பு பழைய *10* மண்டலங்களில் உள்ள *279* பள்ளிகளுடன் புதிதாக விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளான சோழிங்கநல்லூர், அம்பத்தூர், திருவொற்றியூர், மணலி, ஆலந்தூர் மற்றும் பெருங்குடி ஆகியவற்றிலிருந்து *138* பள்ளிகள் பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வி துறையின் கீழ்

இணைக்கப்பட்டு ஆக மொத்தம் 417 பள்ளிகளாக உயர்த்தப்பட்டு தற்போது மண்டலங்களுக்கு ஒருவர் வீதம் 15 உதவி கல்வி அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

கல்வி துறையில் பணிபுரியும் கல்வி அலுவலர்கள் மற்றும் உதவி கல்வி அலுவலர்களுக்கென 2013 - 2014 ஆம் ஆண்டு முதல் வாகனம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாகனங்கள் வழங்கப்பட்டு 13 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தி வருவதால், அடிக்கடி பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் கள ஆய்வு பணிகள், ஆய்வு கூட்டங்களுக்கு குறித்த நேரத்திற்கு செல்ல இயலாத நிலை ஏற்படுவதுடன், கள ஆய்வு பணிகளில் தொய்வு ஏற்படுகிறது.

இந்நிலையில், கல்வித்துறையில் பணிபுரிந்து வரும் உதவி கல்வி அலுவலர்கள் அனைவரும் தங்களுக்கு புதியதாக வாகனம் வழங்கக் கோரி குறிப்பு அளித்ததைத் தொடர்ந்து, கல்வி துறை பணிகளின் அவசியம் கருதியும், அலுவலர்களின் நலன் கருதியும், 2 கல்வி அலுவலர்கள் மற்றும் 15 உதவி கல்வி அலுவலர்கள் என 17 அலுவலர்களுக்கும் புதிய வாகனம் வழங்க வேண்டிய நிலையில், தற்போது 3 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள 14 அலுவலர்களுக்கு 14 புதிய வாகனம் இயந்திர பொறியியல் துறை மூலம் கொள்முதல் செய்து வழங்க கல்வி துறை மூலம் ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டு கோப்பு பெறப்பட்டது.

அதன்படி, இவ்வகை வாகன தயாரிப்பாளர்களான திருவாளர்கள். Mahindra & Mahindra Limited நிறுவனத்திடமிருந்து அரசு "இ ′ ′ மார்க்கெட் விலையில் 30.01.2026 நாளிட்ட விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

திருவாளர்கள். Mahindra & Mahindra Limited நிறுவனத்தார் Mahindra Bolero B6 (OPT) AC BS-VI வகை வாகனங்களுக்கான அரசு "இ ′ ′ மார்க்கெட் விலையின் படி ஒரு வாகனத்தின் விலை ரூ.8,21,420/- (Gem Price: Rs.7,99,260/- + Transportation Charger Rs.22,160/-) (மத்திய அரசு விற்பனைவரி மற்றும் போக்குவரத்து செலவு உட்பட) வீதம் 14 எண்ணிக்கையிலான வாகனங்கள் கொள்முதல் செய்ய மொத்த செலவு ரூ.1,14,99,880/- ஆகும். மேலும், திருவாளர்கள். Mahindra & Mahindra Limited நிறுவனத்தார் இவ்விலை மாறக்கூடியது என்றும் ஆதலால் வாகனங்கள் கொள்முதல் செய்யப்படும் நாளில் நடப்பில் உள்ள அரசு "இ ′ ′ மார்க்கெட் விலைக்கே வாகனங்கள் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்கள்.

இவ்வாகனங்களுக்கான சாலைவரி, நிரந்தர பதிவு, காப்பீடு மற்றும் இதர செலவீனங்களுக்கு ஒரு எண்ணிக்கையிலான Mahindra Bolero B6 (OPT) AC BS-VI வகை வாகனத்திற்கு ரூ.1,60,000/- வீதம் 14 எண்ணிக்கையிலான வாகனங்களுக்கு ரூ.22,40,000/- செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. இத்தொகையினை முன்பணமாக உதவி செயற்பொறியாளர் (இ) ஆய்வு வாகன பணிமனை அவர்களின் பதவியின் பெயரில் காசோலையாக பெற்று இச்செலவீனத்தின் அசல் ரசீதுகள் பெறப்பட்டவுடன் இத்தொகை நேர் செய்யப்படும் என

தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இச்செலவீனத்தினை ஆய்வு வாகன பணிமனையில் *2025-26 / 2026-27* ஆம் நிதியாண்டில் வாகனங்களுக்கான சாலைவரி காப்பீடு என்னும் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து நேர் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட குறிப்பின்படியும், ஏற்கனவே பெருநகர சென்னை மாநகராட்சியில் *Bolero* வகை ஆய்வு வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் திருப்திகரமாக இயங்கி வருகின்ற நிலையிலும் மற்றும் ஆய்வு வாகனங்களின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டும் தற்போது இதே வகையிலான வாகனங்களை *14* எண்ணிக்கையில் ஒப்பம் கோராமல் நேரிடையாக அரசு "இ ' ' மார்க்கெட்டில் கொள்முதல் செய்யலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இக்கொள்முதலுக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை கணக்கு குறியீட்டு எண் *40-41-01* மூலதன கணக்கு குறியீட்டு எண் *410-50-08-00* ஜீப்புகள் என்னும் தலைப்பின் கீழ் ஆய்வு வாகனம் கொள்முதல் பணிக்கென ஒதுக்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டின் கீழ் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. **பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையில் பணிபுரிந்து வரும் உதவி கல்வி அலுவலர்கள் அனைவரும் தங்களுக்கு புதியதாக வாகனம் வழங்கக் கோரி குறிப்பு அளித்ததைத் தொடர்ந்து, கல்வி துறை பணிகளின் அவசியம் கருதியும், அலுவலர்களின் நலன் கருதியும், 2 கல்வி அலுவலர்கள் மற்றும் 15 உதவி கல்வி அலுவலர்கள் என 17 அலுவலர்களுக்கும் புதிய வாகனம் வழங்க வேண்டிய நிலையில், தற்போது 3 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள 14 அலுவலர்களுக்கு 14 எண்ணிக்கையிலான வாகனம் ஒரு வாகனத்தின் விலை ரூ.8,21,420/- வீதம் 14 எண்ணிக்கையிலான** Mahindra Bolero B6 (OPT) AC BS-VI **வகை வாகனங்கள் ரூ.1,14,99,880/- மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,**

2. **இனம் -1 ஏற்பின்,** Bolero **வகை வாகன தயாரிப்பாளர்களான திருவாளர்கள்.** Mahindra & Mahindra Limited **நிறுவனத்தார் அளித்துள்ள** Mahindra Bolero B6 (OPT) AC BS-VI **வகை வாகனங்களுக்கான அரசு "இ" மார்க்கெட் விலையின்படி ஒரு வாகனத்தின் விலை ரூ.8,21,420/- (மத்திய அரசு விற்பனைவரி மற்றும் போக்குவரத்து செலவு உட்பட) வீதம் 14 எண்ணிக்கையிலான வாகனங்கள் கொள்முதல் செய்ய மொத்த செலவு ரூ.1,14,99,880/- (ரூபாய். ஒரு கோடியே பதிநான்கு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எண்ணூற்று எண்பது மட்டும்) அல்லது கொள்முதல் செய்யும் நாளில் நடப்பில் உள்ள அரசு "இ" மார்க்கெட் விலைக்கு**

(GeM Price) திருவாளர்கள் Mahindra & Mahindra Limited நிறுவனத்தாரிடமிருந்து அரசு "இ" மார்க்கெட் (GeM)ல் கொள்முதல் செய்யவும் மற்றும் அதற்கான கொள்முதல் ஆணை வழங்கவும்,

3. திருவாளர்கள். Mahindra & Mahindra Limited., நிறுவனத்தார் வாகன தயாரிப்பாளர்கள் என்பதால் இந்நிறுவனத்திடமிருந்து மொத்த ஒப்ப தொகையில் 2% பாதுகாப்பு தொகை பெறுவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கவும்,

4. இவ்வாகனங்களுக்கான சாலைவரி, நிரந்தர பதிவு, காப்பீடு மற்றும் இதர செலவீனங்களுக்கு ஒரு எண்ணிக்கையிலான Mahindra Bolero B6 (OPT) AC BS-VI வகை வாகனத்திற்கு ரூ.1,60,000/- வீதம் 14 எண்ணிக்கையிலான வாகனங்களுக்கு ரூ.22,40,000/- (ரூபாய். இருபத்தி இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) முன்பணமாக உதவி செயற்பொறியாளர் (இ) ஆய்வு வாகன பணிமனை அவர்களின் பதவியின் பெயரில் காசோலையாக பெற்று இச்செலவீனத்தின் அசல் ரசீதுகள் பெறப்பட்டவுடன் இத் தொகையினை நேர் செய்யவும்,

5. வாகன கொள்முதலுக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை கணக்கு குறியீட்டு எண் 40–41–01 மூலதன கணக்கு குறியீட்டு எண் 410–50–08–00 ஜீப்புகள் என்னும் தலைப்பின் கீழ் ஆய்வு வாகனம் கொள்முதல் பணிக்கென ஒதுக்கப்பட்டுள்ள கணக்கு குறியீட்டின் கீழ் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளவும்,

6. சாலைவரி காப்பீடு ஆகியவற்றிற்கான செலவீனத்தினை ஆய்வு வாகன பணிமனையில் 2025-26 / 2026-27 ஆம் நிதியாண்டில் வாகனங்களுக்கான சாலைவரி காப்பீடு என்னும் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து நேர் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

****

வ.அ.(தெ).இ.பொ.து.ந.க.எண். S1 / 30 / 2026

தீர்மான எண்: 179/2026 **பொருள் எண்.59**

பெருநகர சென்னை மாநகராட்சி - தெற்கு வட்டாரம் - இயந்திர பொறியியல் துறை, - TN04 AX 3115 என்ற பதிவு எண் கொண்ட ரோபோட்டிக் பல்நோக்கு எக்ஸவேட்டர் உபகரணம் (Robotic Multipurpose Excavator) - நடப்பிலுள்ள இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு (O & M) பணியினை - மேலும் ஒரு வருட காலத்திற்கு (365 உபகரண வேலை நாட்களுக்கு) இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு (Operation & Comprehensive Maintenance) பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சி, தெற்கு வட்டாரம், மண்டலம் *11* முதல் *15* வரையுள்ள பகுதிகளில் உள்ள பெரிய மற்றும் சிறிய கால்வாய்களில் வெள்ளப்பெருக்கைத் தவிர்க்கவும், கொசு தொல்லையைக் கட்டுப்படுத்தவும், பொது சுகாதாரத்தைப் பேணவும், கால்வாய்களில் தடையின்றி தண்ணீர் ஓட்டத்தை உறுதி செய்வதற்காகவும் பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் *3.5* மீட்டருக்கும் குறைவான அகலம் கொண்ட கால்வாய்கள் ரோபோட்டிக் பல்நோக்கு எக்ஸவேட்டர் உபகரணம் *(Robotic Multipurpose Excavator)* பயன்படுத்தி சுத்தம் செய்யப்படுகின்றன.

இந்த ரோபோட்டிக் பல்நோக்கு எக்ஸவேட்டர் உபகரணம் *2020* ஆம் ஆண்டு ஐரோப்பாவின் *M/s Kaiser AG., Liectenstein* நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டது. இந்த இயந்திரம் உயர் தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டதால், *GCC*-யில் தொழில்நுட்ப ரீதியாக பயிற்சி பெற்ற துறை ஊழியர்கள் யாரும் இல்லாததாலும், சிறந்த பராமரிப்பு மற்றும் தடை இல்லாத செயல்பாட்டிற்காகவும் மற்றும் சிறந்த பயன்பாட்டைப் பெறவும் இந்த உபகரணம் *M/s.Kaiser AG., Liectenstein* நிறுவனத்திடம் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. சமீபத்திய பருவமழைக் காலத்தில், துறை சார்ந்த ரோபோட்டிக் பல்நோக்கு எக்ஸவேட்டர் *(Robotic Multipurpose Excavator)* உபகரணத்தை பயன்படுத்தி கால்வாய்களில் வண்டல் நீக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்போது இவ்வுபகரணம் *TN 04 AX 3115* க்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு ஒப்பந்தம் *03/01/2024* நாளிட்ட பணி ஆணையின்படி, *05/01/2026*ல் முடிவடைவதால், இடைக்கால கோப்பு மூலம் பணிகளை மேலும் *03* மாத காலத்திற்கு தொடர

மின்னணு ஒப்பந்தம் மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது. இதன்பிறகு வரவிருக்கும் தேர்தலை எதிர்நோக்கி *TN04 AX 3115 (Robotic Multipurpose Excavator)* க்கு ஓராண்டிற்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை தொடர்வது அவசியமாகிறது.

TN04 AX 3115 (Robotic Multipurpose Excavator) இயந்திரம் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய செயல்பாட்டை கொண்டதாலும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உபகரணமாக இருப்பதாலும், இத்தகைய உபகரணத்தின் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பில் முந்தைய ஆண்டுகளில் அனுபவமுள்ள உபகரண உற்பத்தியாளரின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து மின்னணு ஒப்பம் கோருவதன் மூலம் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பினை *(Operation & Comprehensive Maintenance)* சிறந்த முறையில் மேற்கொள்ள முடியும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. அதன் அடிப்படையில் *TN04 AX 3115* உபகரணத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை மேலும் ஒரு வருட காலத்திற்கு *(365* பணி உபகரண வேலை நாட்கள்*)* மேற்கொள்வது அவசியமாகிறது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள *TN04 AX 3115 (Robotic Multipurpose Excavator)* இயந்திரத்தின் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான விலை நிர்ணயம் இயந்திரப் பொறியியல் துறை தலைமையகத்தால் நிர்ணயிக்கும் பணிகள் நடைப்பெற்று கொண்டிருக்கிறது. எனவே *TN04 AX 3115 (Robotic Multipurpose Excavator)* இயந்திரத்தின் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான விலை ஏற்கனவே பின்பற்றப்பட்ட பணிஆணையில் உள்ள இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு விலையை பின்பற்றி கணக்கிடுவது அவசியமாகிறது. மேலும் நடக்கவிருக்கும் சட்டமன்ற தேர்தல் *2026* ன் போது பின்பற்றப்படும் மாதிரி நடத்தை விதிகள் *Model code of conduct (MCC)* ஐ கருத்தில் கொண்டு, மேற்குறிப்பிடப்பட்ட பணியினை குறுகியக் கால மின்னணு ஒப்பந்தம் கோரி மேலும் ஓர் ஆண்டிற்கு இப்பணியைத் தொடர்வது அவசியமாகிறது.

03/01/2024 நாளிட்ட பணி ஆணையில் உள்ள இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான விலைகளை பின்பற்றி, இயக்குதல் பணிக்கு *(Rs.5596.76/- Operation rate per shift of 8 hours)* மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கு *Rs.38,808.88/- (Comprehensive Maintenance rate per day)* மேற்கண்ட *TN04 AX 3115 Robotic Multipurpose Excavator* உபகரணத்திற்கு ஒரு வருட காலத்திற்கு *(365* பணி உபகரண வேலை நாட்கள்*)* இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்குகீழ்கண்ட மதிப்பீடு கணக்கிடபட்டுள்ளது. இதன் விபரங்கள் பின்வருமாறு:-

Table-1

SI. NO	Operation Cost (per shift of 8 hours) (without GST (Rs.)	Maintenance Cost/day (without GST) (Rs.)	Total O & M cost per day per vehicle (without GST) (Rs.)	Total O & M amount for 365 days (with 18% GST) (Rs.)

	(A)	(B)	(C) = A+B	(D) = C x 365 days
1	5596.79	38,808.88	44,405.67	1,62,08,069.55
			GST @ 18%	29,17,452.52
Total O & M Cost for 365 working days (Including 18% GST)				1,91,25,522.07 rounded to Rs.1,91,25,522

மேற்கண்ட விபரங்களின் படி, *01* எண்ணிக்கையிலான ரோபோட்டிக் பல்நோக்கு எக்ஸவேட்டர் *TN04 AX 3115* உபகரணத்தின் ஒரு வருடத்திற்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புக்கான *(Operation & Comprehensive Maintenance)* தோராயமான செலவீனம் ரூ.*1,91,25,522/-* *(*ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்றி ஒன்று இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரத்து ஐநூற்றி இருபத்தி இரண்டு மட்டும்*) (18% GST* உட்பட*)* எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட இதற்கான செலவீனத்தினை *2026 - 2027* மற்றும் *2027 - 2028* ஆம் நிதி ஆண்டுகளுக்கான, பிரிவு குறியீட்டு எண் *40-41-05* ன் கீழ் தெற்கு வட்டாரம், இயந்திரப் பொறியியல் துறையின் கணக்கு குறியீட்டு எண் *230-80-03-00* ன் கீழ் மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. தெற்கு வட்டாரம், இயந்திர பொறியியல் துறையின் TN04 AX 3115 ரோபோட்டிக் பல்நோக்கு எக்ஸவேட்டர் (Robotic Multipurpose Excavator) உபகரணத்திற்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிகளை ஒரு ஆண்டுக்கு (365 உபகரண வேலை நாட்கள்) கீழ்கண்ட அட்டவணையில் மதிப்பிடப்பட்ட, செலவீனம் ரூ.1,91,25,522/- (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்றி ஒன்று இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரத்து ஐநூற்றி இருபத்தி இரண்டு மட்டும்) (18% GST உட்பட) (as in Table 1 below) தொகையில் இவ்வகை உபகரணங்களைப் பராமரிப்பதில் முந்தைய அனுபவம் உள்ள உபகரண உற்பத்தியாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலம் மேற்கொள்ள குறுகியக் கால மின்னணு ஒப்பம் கோர நிர்வாக அனுமதி வேண்டியும்.

Table-1

SI.NO	Operation Cost (per shift of 8 hours) (without GST (Rs.)	Maintenance Cost/day (without GST) (Rs.)	Total O & M cost per day per vehicle (without GST) (Rs.)	Total O & M amount for 365 days (with 18% GST)

				(Rs.)
	(A)	(B)	(C) = A+B	(D) = C x 365 days
1	5596.79	38,808.88	44,405.67	1,62,08,069.55
			GST @ 18%	29,17,452.52
Total O & M Cost for 365 working days (Including 18% GST)				1,91,25,522.07 rounded to Rs.1,91,25,522

2. இதற்கான செலவீனத்தினை 2026 - 2027 மற்றும் 2027 - 2028 ஆம் நிதி ஆண்டுகளுக்கான, பிரிவு குறியீட்டு எண் 40-41-05 ன் கீழ் வட்டார அலுவலகம் (தெற்கு), இயந்திரப் பொறியியல் துறையின் கணக்கு குறியீட்டு எண் 230-80-03-00 ன் கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

****

க.து.ந.க.எண்.பி1/0232/2026

தீர்மான எண்: 180/2026 **பொருள் எண்.60**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 02, வார்டு - 21, Dr. அம்பேத்கர் தெருவில் உள்ள சமுதாய கூடத்தில் கட்டுமான பணிகளான முன்பதிவு அலுவலக அறை, கட்டட முகப்பு வேலைகள், வாகன நிறுத்துமிடத்தில் ILB பதிக்கும் பணிகள், குழாய் பதிப்பு பணிகள், மின்சாரப் பணிகள் மற்றும் பிற உள்கட்டமைப்பு பணிகளுக்கு 2025-2026ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

மண்டலம் - 02, வார்டு - 21, Dr. அம்பேத்கர் தெருவில் உள்ள சமுதாய கூடத்தில் கட்டுமான பணிகளான முன்பதிவு அலுவலக அறை, கட்டட முகப்பு வேலைகள், வாகன நிறுத்துமிடத்தில் ILB பதிக்கும் பணிகள், குழாய் பதிப்பு பணிகள், மின்சாரப் பணிகள் மற்றும் பிற

உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டி மண்டலம் - 02-ன் மூலம் 2024-2025 ஆம் ஆண்டின் விலைப்பட்டியலின் படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

விவரம் பின்வருமாறு :

1	பணியின் பெயர்	மண்டலம் - 02, வார்டு - 21, Dr. அம்பேத்கர் தெருவில் உள்ள சமுதாய கூடத்தில் கட்டுமான பணிகளான முன்பதிவு அலுவலக அறை, கட்டட முகப்பு வேலைகள், வாகன நிறுத்துமிடத்தில் ILB பதிக்கும் பணிகள், குழாய் பதிப்பு பணிகள், மின்சாரப் பணிகள் மற்றும் பிற உள்கட்டமைப்பு பணிகள்.
2	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் - 02.
3	மதிப்பீட்டின் தொகை விவரம்	
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 3,32,29,359.88
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 59,81,284.78
	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 3,32,293.60
	(ஈ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 3,32,293.60
	(உ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 1,24,768.14
	மொத்தம் (Rounded Off)	ரூ. 4,00,00,000.00
4	நிதியின் தன்மை	Miscellaneous (20 - 28 - 00 / 412 - 403 - 000)
5	இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	ரூ. 4,00,00,000.00

மேற்குறிப்பிட்டுள்ள மண்டலம் - 02, வார்டு - 21, Dr. அம்பேத்கர் தெருவில் உள்ள சமுதாய கூடத்தில் கட்டுமான பணிகளான முன்பதிவு அலுவலக அறை, கட்டட முகப்பு வேலைகள், வாகன நிறுத்துமிடத்தில் ILB பதிக்கும் பணிகள், குழாய் பதிப்பு பணிகள், மின்சாரப் பணிகள் மற்றும் பிற உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளின் செலவீனத்தை Miscellaneous (20 - 28 - 00 / 412 - 403 - 000) நிதியில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டடத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட வேண்டும்.

எனவே,

1. மண்டலம்-02, வார்டு-21, Dr.அம்பேத்கர் தெருவில் உள்ள சமுதாய கூடத்தில் கட்டுமான பணிகளான முன்பதிவு அலுவலக அறை, கட்டட முகப்பு வேலைகள், வாகன நிறுத்துமிடத்தில் ILB பதிக்கும் பணிகள், குழாய் பதிப்பு

பணிகள், மின்சாரப் பணிகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.4,00,00,000/- (ரூபாய் நான்கு கோடி மட்டும்)க்கு திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. மேற்கண்டுள்ள பணிக்கு ஏற்படும் செலவீனத்தினை Miscellaneous (20 - 28 - 00 / 412 - 403 - 000)-ல் நிதி ஒதுக்கீடு அளிக்கவும்,

3. மேற்கண்டுள்ள பணிக்கு கட்டடத்துறை மூலம் ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"13.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.33/2026, நாள்.13.02.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

க.து.நு.க.எண்.பி1 / 3573 / 2025

தீர்மான எண்: 181/2026 **பொருள் எண்.61**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - Construction of Zonal Office Building Zone-02 at Paadasalai Street in Div - 21, Zone - 02 கட்டும் பணிக்காக திருவாளர். Thomas Iyadurai Infrastructure Pvt Ltd., அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி

1	பணியின் பெயர்	Construction of Zonal Office Building Zone-02 at Paadasalai Street in Div - 21, Zone - 02 கட்டும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : 22.11.2025.

		2. மன்ற தீர்மானம் எண் : 1237/2025, நாள் : 19.12.2025.
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் - 02.
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2025-2026 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	**மதிப்பீட்டின் தொகை**	
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 7,76,59,774.00
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 1,39,78,759.32
	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 7,76,597.74
	(ஈ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 7,76,597.74
	(உ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 18,08,271.20
	மொத்தம் (Rounded Off)	ரூ. 9,50,00,000.00
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் **25.12.2025**. 2. தினமலர் **20.12.2025**. 3. டெக்கான் க்ரானிக்கல் **20.12.2025**.
7	ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	30.12.2025
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	Zonal Office Building (20 - 28 - 00 / 412 - 400 502)
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து **15/30** நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	மூன்று (e-Tender) ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டது

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு 31.12.2025 அன்று மூன்று ஒப்பங்கள் பெறப்பட்டன. ஒப்பத்தில் பங்கேற்றவர்களில் திருவாளர். Sun Max Corporation., அவர்கள் ஒப்ப நிபந்தனைகளின்படி தகுதி இல்லாத காரணத்தினால் நிராகரிக்கப்பட்டு மற்ற இரு ஒப்பந்ததாரர்கள் ஒப்ப நிபந்தனைகளுக்கு ஏற்ப தகுதி வாய்ந்தவர்கள் என்று அறியப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு :

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ***2025-2026*** (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	***2025-2026***ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	Pearl Construction	7,76,59,774.00	8,47,26,813.43	(+) 9.10 % அதிகம்
2	Thomas Iyadurai Infrastructure Pvt Ltd	7,76,59,774.00	8,25,44,573.78	(+) 6.29 % அதிகம்

இவ்வொப்பத்தில் திருவாளர், *Thomas Iyadurai Infrastructure Pvt Ltd.*, அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் *L1* ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார், விவரம் பின்வருமாறு

வ. எண்	மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம்	*L1* ஒப்பந்ததாரர் ***2025-2026***ஆம் ஆண்டு ***SOR***-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம்
1	முதற் கட்ட விலை குறைப்பு நாள். *09.01.2026*	ரூ. *8,15,03,932.81 (+) 4.95 %* அதிகம்
2	இரண்டாம் கட்ட விலை குறைப்பு நாள். *09.01.2026*	ரூ. *8,13,79,677.17 (+) 4.79 %* அதிகம்

இதன்படி, *Construction of Zonal Office Building Zone-02 at Paadasalai Street in Div - 21, Zone - 02* கட்டும் பணிக்காக *2025-2026*ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட *(+) 4.79%* அதிகம், ஒப்பத் தொகை ரூ.*8,13,79,677.17* மற்றும் *18%* சரக்கு மற்றும் சேவை வரி ரூ.*1,46,48,341.89*ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.*9,60,28,019.00*-க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு *2025-2026*ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

வ. எண்.	மதிப்பீட்டின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூபாய்) *(A)*	தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் *(+) 4.79 %* சேர்த்து (ரூபாய்) *(B)*
1	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. *7,76,59,774.00*	ரூ. *8,13,79,677.17*
2	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி *18%*	ரூ. *1,39,78,759.32*	ரூ. *1,46,48,341.89*
3	(இ) த.நா.க.தொ. ந.வா. *1%*	ரூ. *7,76,597.74*	ரூ. *7,76,597.74*
4	(ஈ) தரக்கட்டுப்பாடு *1%*	ரூ. *7,76,597.74*	ரூ. *7,76,597.74*

5	(உ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 18,08,271.20	ரூ. 18,08,271.20
	மொத்தம் (Rounded Off)	ரூ. 9,50,00,000.00	ரூ. 9,93,89,486.00
		கூடுதல் தொகை (B- A)	ரூ. 43,89,486.00

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+)4.79%, 2025-26ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.9,93,89,486.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.5,55,38,889.00-க்கு நிர்வாக அனுமதியும்,
2. Construction of Zonal Office Building Zone-02 at Paadasalai Street in Div - 21, Zone - 02 கட்டும் பணிக்காக 2025-2026 ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.79% அதிகம், ஒப்பத் தொகை ரூ.8,13,79,677.17 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1,46,48,341.89ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.9,60,28,019.00-க்கு (ரூபாய் ஒன்பது கோடியே அறுபது இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து பத்தொன்பது மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். Thomas Iyadurai Infrastructure Pvt Ltd., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,
3. மேலும் மேற்கண்ட பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி ஒப்பந்ததாரரான திருவாளர். Thomas Iyadurai Infrastructure Pvt Ltd., அவர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதியும்,
4. இப்பணிக்கான மொத்த செலவீனத் தொகையான ரூ.9,93,89,486.00-னை கணக்கு குறியீட்டு எண் : Zonal Office Building (20 - 28 - 00 / 412 - 400 502) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"13.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.27/2026, நாள்.13.02.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.56/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

க.து.ந.க.எண்.பி1/1854/2025

தீர்மான எண்: 182/2026 **பொருள் எண்.62**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 15, வார்டு - 200, செம்மஞ்சேரியில் சென்னை நடுநிலைப்பள்ளியில் 18 வகுப்பறைகள், 3 பணியாளர் அறைகள், 2 கணினி ஆய்வகங்களை சேர்த்து ஆடிட்டோரியம் கட்டும் பணிக்காக திருவாளர். Thomas Iyadurai Infrastructure Pvt Ltd., அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி

1	பணியின் பெயர்	மண்டலம் - 15, வார்டு - 200, செம்மஞ்சேரியில் சென்னை நடுநிலைப்பள்ளியில் 18 வகுப்பறைகள், 3 பணியாளர் அறைகள், 2 கணினி ஆய்வகங்களை சேர்த்து ஆடிட்டோரியம் கட்டும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : 22.07.2025. 2. மன்ற தீர்மானம் எண் : 920/2025, நாள் : 30.07.2025.
3	எந்த துறைக்காக இந்த பணி	மண்டலம் - 15.

	செயலாக்கம்	
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	*2024-2025* ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 7,95,02,000.00
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 1,43,10,360.00
	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 7,95,020.00
	(ஈ) தரக்கட்டப்பாடு 1%	ரூ. 7,95,020.00
	(உ) மின்சார செலவு	ரூ. 69,000.00
	(ஊ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 19,18,600.00
	மொத்தம் (Rounded Off)	ரூ. 9,73,90,000.00
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் *31.07.2025*. 2. தினமலர் *01.08.2025*. 3. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் *01.08.2025*.
7	ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	18.08.2025
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	Middle School (20 - 28 - 00 / 412 - 400 - 402)
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து *15/30* நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	ஒன்று *(e-Tender)* ஒப்பப்படிவம் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு *19.08.2025* அன்று ஒரு ஒப்பம் பெறப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு :

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ***2024-2025*** (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	***2024-2025***ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	Thomas Iyadurai Infrastructure Pvt Ltd	7,95,02,000.00	8,02,09,567.80	(+) 0.89 % அதிகம்

இவ்வொப்பத்தில் திருவாளர், *Thomas Iyadurai Infrastructure Pvt Ltd.*, அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார், இவ்வொப்பந்ததாரரிடம் மீண்டும் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் *L1* ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார், விவரம் பின்வருமாறு :

வ, எண்	மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம்	*L1* ஒப்பந்ததாரர் *2024-2025*ஆம் ஆண்டு *SOR*-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம்
1	முதற் கட்ட விலை குறைப்பு நாள், *04.09.2025*	ரூ, *8,02,09,567.80 (+) 0.89 %* அதிகம்
2	இரண்டாம் கட்ட விலை குறைப்பு நாள், *12.11.2025*	ரூ, *8,02,09,567.80 (+) 0.89 %* அதிகம்
3	மூன்றாம் கட்ட விலை குறைப்பு நாள், *13.11.2025*	ரூ, *8,01,30,065.80 (+) 0.79 %* அதிகம்

இதன்படி, மண்டலம்-*15*, வார்டு-*200*, செம்மஞ்சேரியில் சென்னை நடுநிலைப் பள்ளியில் *18* வகுப்பறைகள், *3* பணியாளர் அறைகள், *2* கணினி ஆய்வகங்களை சேர்த்து ஆடிட்டோரியம் கட்டும் பணிக்காக *2024-2025* ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட *(+)0.79%* அதிகம், ஒப்பத் தொகை ரூ,*8,01,30,065.80* மற்றும் *18%* சரக்கு மற்றும் சேவை வரி ரூ,*1,44,23,411.84*ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ,*9,45,53,478.00*- க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்,

இப்பணிகளுக்கு *2024-2025*ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது,

வ , எண்,	மதிப்பீட்டின் விவரம்	மதிப்பீடு தொகை *(ரூபாய்) (A)*	தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் *(+)0.79 %* சேர்த்து *(ரூபாய்) (B)*
1	*(அ)* கட்டுமான பணி செலவு	ரூ, *7,95,02,000.00*	ரூ, *8,01,30,065.80*
2	*(ஆ)* சரக்கு மற்றும் சேவை வரி *18%*	ரூ, *1,43,10,360.00*	ரூ, *1,44,23,411.84*
3	*(இ)* த,நா,க,தொ, ந,வா, *1%*	ரூ, *7,95,020.00*	ரூ, *7,95,020.00*
4	*(ஈ)* தரக்கட்டுபாடு *1%*	ரூ, *7,95,020.00*	ரூ, *7,95,020.00*
5	*(உ)* மின்சார செலவு	ரூ, *69,000.00*	ரூ, *69,000.00*
6	*(ஊ)* எதிர்பாரா செலவு *2.50%*	ரூ, *19,18,600.00*	ரூ, *19,18,600.00*
	மொத்தம் *(Rounded Off)*	ரூ, *9,73,90,000.00*	ரூ, *9,81,31,118.00*
		கூடுதல் தொகை *(B- A)*	ரூ, *7,41,118.00*

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட *(+)0.79%, 2024-25* ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.*9,81,31,118.00*-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.9,81,31,118.00-க்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)0.79% அதிகம், ஒப்பத் தொகை ரூ.8,01,30,065.80 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1,44,23,411.84ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.9,45,53,478.00-க்கு (ரூபாய் ஒன்பது கோடியே நாற்பத்து ஐந்து இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து நானூற்று எழுபத்து எட்டு மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். Thomas Iyadurai Infrastructure Pvt Ltd., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,
3. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண் : Middle School (20 - 28 - 00 / 412 - 400 - 402) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"13.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.28/2026, நாள். 13.02.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.57/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

க.து.ந.க.எண்.பி1/0772/2025

தீர்மான எண்: 183/2026 **பொருள் எண்.63**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மாண்புமிகு மேயர் அறிவிப்புகள் (அறிவிப்பு எண்.51) நீத்தார் உடல் பாதுகாப்பு மையம் - பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) முறையில் வடிவமைப்பு கட்டுமானம் நிதி இயக்குதல் (ம) பராமரித்தல் மாதிரியில் உள்கட்டமைப்பை (DBFOT) (10 இறந்த நபர்களின் உடல்கள் வைப்பதற்கு) அமைக்க சலுகையாளர் தேர்வு - Dn -174, மண்டலம் - 13 ல் பெசன்ட் நகர் மயான பூமி சவக்கிடங்கு சேமிப்பு வசதி அமைக்க மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு M/s. Flying squad Ambulance Service அவர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்பட்டது -நிர்வாக காரணங்களால், மேற்கண்ட இடத்திற்கு பதிலாக மண்டலம் – 10 வார்டு-139க்குட்பட்ட மேற்கு ஜோன்ஸ் சாலை, சைதாப்பேட்டையில் இத்திட்டத்தை நிறைவேற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி பல்வேறு மண்டலங்களில் உள்ள 203 மயான பூமிகளில் பயோகேஸ், மின்தகன மேடை, எல்பிஜி போன்ற பல்வேறு வகையான தகன மேடைகளை கொண்டுள்ளது. நகரங்கள் வேகமாக விரிவடைந்து வருவதால், அடுக்குமாடி கலாச்சாரமும் பன்மடங்கு வளர்ந்து வருகிறது. எந்த ஒரு மரணம் நடந்தாலும், இறந்தவர்களுக்கு உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அஞ்சலி செலுத்துவதற்கு, இறந்தவரின் உடலை ஓரிரு நாட்களுக்கு மேல் வைத்திருக்க, குடியிருப்புகளை பராமரிக்கும் சங்கங்கள் அனுமதிப்பதில்லை.

இந்நிலையில், வீட்டில் யாராவது இறந்தால், தொலைதூரத்திலோ, வெளியூர்களிலோ வசிக்கும் உறவினர்கள் உடனடியாக வீட்டிற்கு வந்து சேர இயலாத நிலை உள்ளது. இந்நிலையில், இறந்தவரின் உடலை, இரண்டு, மூன்று நாட்கள் பாதுகாப்பாக வைக்க வேண்டியுள்ளது.

சமூகத்தில் உள்ள மேற்கண்ட நிலையினை கருத்தில் கொண்டு 8 முதல் 10 உடல்களை வைக்க, இறந்தவர்களின் உடல்களை (சவக்கிடங்கு) சேமித்து வைக்க, டீப் ஃப்ரீசர்

(Deep Freezer) பெட்டிகளை அமைக்க மாண்புமிகு மேயர் அவர்கள் *2025 – 2026* ஆம் ஆண்டு நிதி நிலையில் அறிவிப்பு வெளியிட்டார்கள். எனவே, மண்டலம் *-13* பெசன்ட் நகரில் உள்ள மயான பூமியை ஒட்டி, *2400* சதுர அடி பரப்பளவில் நீத்தார் உடல் பாதுகாப்பு மையம் தனியார் பங்களிப்பு *(PPP)* முறையில் செயல்படுத்த கண்டறியப்பட்டு இதற்கு மன்றத்தீர்மானம் எண். *479/2025*, நாள் *: 30.04.2025*ன்படி, இத்திட்டத்திற்கான நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் திறந்த வெளி ஒப்பம் கோரப்பட்டு ஒப்ப விதிமுறைகளின் படி, *M/s. Flying squad Ambulance Service* அவர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் *01.08.2025* அன்று வழங்கப்பட்டது.

இந்நிலையில் இத்திட்டத்தினை மேற்கண்ட இடத்தில் நிறைவேற்ற நிர்வாக காரணங்களால் இயலவில்லை. ஆதலால், மேற்கூறிய இடத்திற்கு பதிலாக மண்டலம் – *10* வார்டு-*139*க்குட்பட்ட மேற்கு ஜோன்ஸ் சாலை, சைதாப்பேட்டையில் அமைந்துள்ள மயான பூமியில் இத்திட்டத்தை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம்–10, வார்டு-139க்குட்பட்ட மேற்கு ஜோன்ஸ் சாலை, சைதாப்பேட்டையில் பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) முறையில் வடிவமைப்பு, கட்டுமானம், நிதி, இயக்குதல் (ம) பராமரித்தல் மாதிரியில் உள்கட்டமைப்பை (DBFOT) (10 இறந்த நபர்களின் உடல்கள் வைப்பதற்கு) அமைக்கும் பணியினை M/s. Flying squad Ambulance Service அவர்கள் மூலம் மேற்கொள்வதற்கு அனுமதியும்,
2. ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட இடத்திற்கு பதிலாக மண்டலம் – 10 வார்டு-139க்குட்பட்ட மேற்கு ஜோன்ஸ் சாலை, சைதாப்பேட்டையில் பணி மேற்கொள்வதற்கு திருத்திய ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"13.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.36/2026, நாள்.13.02.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.75/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

க.து.ந.கஎண்.பி1/1097/2025

தீர்மான எண்: 184/2026 **பொருள் எண்.64**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 3, (மாதவரம்) - முதல்வரின் படைப்பகம் மூலச்சத்திரம் பிரதான சாலை, வார்டு - 27ல் அமைக்க பணி ஆணை வழங்கப்பட்டது - மாற்று இடமாக திருவள்ளுவர் தெரு, புத்தகரம், வார்டு-32ல் தேர்வு செய்யப்பட்டதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – *3* (மாதவரம்), வார்டு – *27*, மூலச்சத்திரம் பிரதான சாலையில் தமிழ்நாடு அரசின் அறிவிப்பின்படி முதல்வரின் படைப்பகம் அமைக்கும் பணி மேற்கொள்ள திரு.*V*.கருத்திருமன் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு *01.08.2025* நாளன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து பணிகளை மேற்கொள்ள தொடர் நிகழ்வாக, உள்நுழைவு அனுமதி கோரி நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் அவர்கள் *31.12.2025* நாளிட்ட கடிதத்தில், முதல்வரின் படைப்பகம் அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் தங்களுக்கு சொந்தமானதாக இருப்பதால் அவ்விடத்தின் மதிப்பாக ரூ.*1,10,22,240.00* ஐ (ரூபாய்.ஒரு கோடியே பத்து இலட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து இருநூற்று நாற்பது மட்டும்) செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து, நிதி நிலைமையை கருத்தில் கொண்டு மண்டலம்-3ல் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை மீண்டும் கள ஆய்வு செய்து கண்டறியுமாறு அறிவுறுத்தப்பட்டது. இதன் அடிப்படையில், கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், வார்டு -32ல் திருவள்ளூர் தெரு புத்தகரத்தில், புதிய அலுவலக கட்டிடத்திற்கு அருகிலேயே பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான காலி இடம் உள்ளது கண்டறியப்பட்டது.

இதற்கிடையில், ஆணையர் அவர்கள் 13.01.2026 அன்று மண்டலம்-3ல் அமைந்துள்ள மாதவரம் ஏரியினை கள ஆய்வு செய்யும் போது, மேற்குறிப்பிட்ட புதியதாக கண்டறியப்பட்ட வார்டு 32 புதிய அலுவலக கட்டிடத்திற்கு அருகில் உள்ள காலி இடத்திலேயே முதல்வரின் படைப்பகம் அமைக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

எனவே, மண்டலம்-3, வார்டு – 32ல் திருவள்ளூர் தெரு புத்தகரத்தில், புதிய அலுவலக கட்டிடத்திற்கு அருகில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 12,000 சதுர அடி அளவுள்ள காலி இடத்தில் மேற்கண்ட முதல்வரின் படைப்பகம் கட்டிடம் கட்டுவதற்கு ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

1. ஏற்கனவே, வழங்கப்பட்ட பணி ஆணையினை திருத்தம் செய்யவும்,
2. மண்டலம்-3 வார்டு-32ல் புத்தகரத்தில் வார்டு-32 புதிய அலுவலக கட்டிடத்திற்கு அருகில் உள்ள காலி இடத்திலேயே , முதல்வர் படைப்பகம் CM Space கட்டிடம் கட்டுவதற்கு அனுமதியும்.

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும்நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"13.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.37/2026, நாள். 13.02.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.76/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/1762/2023

தீர்மான எண்: 185/2026 **பொருள் எண்.65**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் - 9, வார்டு-125ல் அமைந்துள்ள லூப் சாலை எனும் பெயரை மாற்றி "சிந்தனை சிற்பி சிங்காரவேலர் சாலை" என பெயர் மாற்றம் செய்ய அரசின் ஒப்புதலை எதிர் நோக்கி மன்றத்தின் அனுமதி வேண்டுவது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, வார்டு-125ல் அமைந்துள்ள லூப் சாலை எனும் பெயரை மாற்றி "சிந்தனை சிற்பி சிங்காரவேலர் சாலை" எனும் பெயர் வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை, நாள்.11.07.2022-ன்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட) நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு சொந்தமான இடங்களில் உள்ள சாலைகள், கட்டடங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் போன்றவற்றிற்கு பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றுவது தொடர்பான முன்மொழிவுகளை முதன்மைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநர் / பேரூராட்சிகளின் ஆணையாளர் ஆகியோர் வழியாக அரசிற்கு அனுப்பப்பட வேண்டும் எனவும், அரசின் அனுமதி பெற்ற பின்னரே நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களுக்கு பெயரிடுவது மற்றும் பெயர் மாற்றம் குறித்த தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட மன்றங்கள் / மாமன்றங்களில் ஒப்புதலுக்கு வைக்கப்பட வேண்டும் என அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அறிவுறுத்தி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, வார்டு-125ல் அமைந்துள்ள லூப் சாலை எனும் பெயரை "சிந்தனை சிற்பி சிங்காரவேலர் சாலை" என பெயர் மாற்றம் செய்வதற்கு

அரசின் ஒப்புதலை எதிர் நோக்கி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.80/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம். மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி அ. ரேவதி அவர்கள், மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.125.

திருமதி. அ. ரேவதி

மண்டலம்-9, வார்டு-125ல் அமைந்துள்ள லூப் சாலை எனும் பெயரை மாற்றி "சிந்தனை சிற்பி சிங்காரவேலர் சாலை" என பெயர் மாற்றம் செய்ய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி மன்றத்தின் அனுமதி வேண்டி இப் பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான முயற்சிகளை எடுத்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும், 125-ஆவது வார்டு மீனவர் கிராம சபை சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன். இது பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். இதற்காக இன்றைக்கு மீனவ மக்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

தீர்மானத்தை ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

பொ.சு.பூ.த.து.நு.க.எண்.எம்.1/047/2026

தீர்மான எண்: 186/2026 **பொருள் எண்.66**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரம் - பூச்சி தடுப்பு துறை - வட்டார துணை ஆணையர் அலுவலகங்களுக்கு (வடக்கு, மத்தியம், தெற்கு) முதுநிலை பூச்சியியல் வல்லுநர்களை (Senior Entomologists) வட்டார பூச்சியியல் வல்லுநர்கள் (Regional Entomologists) நியமிக்க மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, பூச்சி தடுப்பு துறை, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் *1* முதல் *15* வரை உள்ள *200* கோட்டங்களில் கொசுக்களினால் பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. ஒரு மண்டலத்திற்கு இளநிலை / முதுநிலை பூச்சியியல் வல்லுநர் அவர்கள் தலைமையில் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் நோய் தடுப்பு பணி கண்காணிக்கப்பட்டு வருகிறது.

1. மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா, யானைக்கால், மூளைக்காய்ச்சல் மற்றும் விலங்குகளிடம் உள்ள ஒட்டுண்ணிகள் *(Zoonotic Disease)* மூலம் பரவக் கூடிய லெப்டோஸ்பைரோஸிஸ் *(Leptospirosis)* ஸ்கரப்டைபஸ் *(Scrubtyphus)* ஆகிய நோய்களை பரவாமல் கண்காணிக்கப்படுகிறது.
2. டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையாக தீவிர மூலக் குறைப்பு *(Source Reduction)* பணிகள் தினசரி கண்காணிக்கப்படுகின்றன.
3. கொசு மாதிரி *(Mosquito Pool)* சேகரிப்புகள் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவ இயக்குநரகம் *(DPH)* ஆய்வகத்திற்கு அனுப்பப்படுகின்றன.
4. முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த உட்புற மீதி தெளிப்பு *(Indoor Residual Spray)* மற்றும் வெளிப்புற தெளிப்பு *(Space Spray)* பணிகள் கண்காணிக்கப்படுகின்றன.
5. முக்கிய பிரமுகர்கள் *(VIP / VVIP)* வசிக்கும் பகுதிகளில் பூச்சி தடுப்பு நடவடிக்கைகளை கண்காணிக்க சிறப்பு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.
6. தேசிய மலேரியா ஒழிப்பு – *2030* இலக்கை முன்னிட்டு, தேசிய நோய்க்கிருமிகளால் பரவும் நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் *(NCVBDC)* வழிகாட்டுதலின்படி, மாதாந்திர காய்ச்சல் கண்காணிப்பு மற்றும் தினசரி அறிக்கை அளித்தல்.
7. மலேரியா மாதாந்திர தொழில்நுட்ப அறிக்கை பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குநரகம் *(DPH)* மற்றும் மண்டல சுகாதார அலுவலகம் *(ROH)* அனுப்பி, மலேரியா ஸ்லைடுகள் சரிபார்ப்பு மேற்கொள்ளப்படுகிறது.

8. எலி கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் – கிருமிநாசினி தெளிப்பு மற்றும் எலிக்கொல்லி பயன்படுத்தப்படுகிறது.
9. ஈ கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
10. கொசு மற்றும் பிற பூச்சி தொடர்பான புகார்களுக்கு தீர்வு அளிக்கப்படுகிறது.
11. ஆறுகள் மற்றும் கால்வாய்களில் *Amphibian Water Master*, *Amphibian Excavator*, *Mini Amphibian* மற்றும் *Robotic Excavator* போன்ற சிறப்பு இயந்திரங்கள் மூலம் தினசரி தெளிப்பு, ஆகாய தாமரை இலைகளை அகற்றுதல் மற்றும் மிதக்கும் கழிவுகள் அகற்றப்படுகின்றன.
12. மழைநீர் வடிகால்களில் (*Storm Water Drains*) தெளிப்பு மற்றும் புகைமூட்டல் (*Fogging*) பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன; *Super Suction Lorry* மூலம் தேங்கிய நீர் அகற்றப்படுகிறது.
13. வீடு தோறும் கையினால் எடுத்து செல்லும் புகை பரப்பும் இயந்திரம் மற்றும் வாகனத்தில் பொருத்தப்பட்டு இயக்க கூடிய புகை பரப்பும் இயந்திரங்களை தினசரி கண்காணிக்கப்படுகிறது.
14. ஆறுகள் மற்றும் கால்வாய்களில் கைத்தெளிப்பபான்கள் மற்றும் வாகனம் மூலம் பொருத்தி இயக்க கூடிய தெளிப்பு பணிகளும் தினசரி மேற்கொள்ளப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.
15. அணுக இயலாத நீர்வழிகளில் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் *Drone* மூலம் தெளிப்பு பணிகள் கண்காணிக்கப்படுகின்றன.
16. நீர்வழிகளில் லார்வா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக *Fiber Boats* பயன்படுத்தப்படுகின்றன.
17. *Larvicides / Adulticides* கையிருப்பு நிலை பராமரிக்கப்பட்டு, மண்டலத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் விநியோகம் செய்யப்படுகிறது.
18. லாஜிஸ்டிக்ஸ் மேலாண்மை மேற்கொள்ளப்படுகிறது.
19. பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பொதுமக்கள் இடங்களில் கொசுக்களினால் ஏற்படும் நோய்கள் தொடர்பான *IEC (Information, Education and Communication)* விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.
20. தினசரி அறிக்கைகள் சேகரிக்கப்பட்டு, மண்டல அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்திற்கு புதுப்பிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன.

வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு வட்டாரங்களில் உள்ள கண்காணிப்பு பொறியாளர்கள், இயந்திர பொறியாளர்களுடன் வட்டார பூச்சியியல் வல்லுநர்கள் இணைந்து ஆகாய தாமரை செடிகள் அகற்றும் பணியில் சிறப்பு இயந்திரங்களை பணியமர்த்தவும், மழைநீர் வடிகால் கால்வாய்களில் நீர் தேக்கங்களை அகற்றி கொசு புழு வளர்ச்சியை கட்டுப்படுத்தவும், வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு வட்டாரங்களில் தனித்தனி வட்டார பூச்சியியல் வல்லுநர்களை *(Regional Entomologists)* நியமிக்க ஆணையர் அவர்களால் *07.02.2026* அன்று நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், வட்டார அளவிலான பூச்சி தடுப்பு பணிகளை ஒருங்கிணைத்து கண்காணிப்பதற்காக 3 வட்டார பூச்சியியல் வல்லுநர்களை பணியமர்த்தி, அவர்கள் அந்தந்த வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில் அறிக்கை சமர்ப்பித்து பணியாற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி, அவர்களுக்கு ஆய்வு வாகனங்கள் (*Inspection Vehicles*) ஓட்டுநருடன் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மேலும், தற்காலிக புள்ளி விவரப் பதிவாளர் *(Data Entry Operator)* மற்றும் அலுவலக உதவியாளர் (*Office Assistant)* போன்ற தேவையான மனித வள வசதிகளும் வழங்கப்பட வேண்டும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியில் வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு வட்டார துணை ஆணையர் அலுவலகங்களில் 3 வட்டார பூச்சியியல் வல்லுநர்களை (Regional Entomologists) நியமிக்க அனுமதியும்,
2. பெருநகர சென்னை மாநகராட்சியில் வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு வட்டார துணை ஆணையர் அலுவலகங்களில் 3 வட்டார பூச்சியியல் வல்லுநர்களுக்காக ஆய்வு மேற்கொள்ள இயந்திர பொறியியல் துறையின் மூலம் ஓட்டுநருடன் 3 ஆய்வு வாகனங்களை ஒதுக்கீடு செய்ய அனுமதியும்,
3. பெருநகர சென்னை மாநகராட்சியில் வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு வட்டார துணை ஆணையர் அலுவலகங்களில் 3 வட்டார பூச்சியியல் வல்லுநர்களுக்காக அலுவலக இடம், மேசை, நாற்காலி மற்றும் மேசை கணினி வசதிகளுடன் வழங்க அனுமதியும்,
4. பெருநகர சென்னை மாநகராட்சியில் வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு வட்டார துணை ஆணையர் அலுவலகங்களில் 3 வட்டார பூச்சியியல் வல்லுநர்களுக்கு தலா தற்காலிக ஒரு புள்ளி விவரப் பதிவாளர் (Data Entry Operator) மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் (Office Assistant) ஆகிய மனிதவளத்தை வட்டார துணை ஆணையர் அலுவலகங்களில் உள்ள பொறியியல் துறை மூலமாக பணியமர்த்த அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.037/2026- ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை

உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

கா.ந.ம.து.ந.க.எண்.அ2/0112/2026

தீர்மான எண்: 187/2026 **பொருள் எண்.67**

பெருநகர சென்னை மாநகராட்சி - கால்நடை மருத்துவத்துறை - சவாரி குதிரைகளுக்கு உரிமம் வழங்கி முறைப்படுத்துதல் - மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மெரினா, பெசன்ட் நகர், உள்ளிட்ட கடற்கரை பகுதிகளில் சுற்றுலாப் பயணிகள் சவாரி செய்வதற்காக சவாரிக்குதிரைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு சவாரிக்காக பயன்படுத்தப்படும் பெரும்பான்மையான குதிரைகள் சரிவர பராமரிக்கப்படாமலும், உரிய இருப்பிட வசதி, தீவனம், குடிநீர் அளிக்கப்படாமல் துன்புறுத்தப்படுவதாக புகார்கள் பெறப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தமிழ்நாடு விலங்குகள் நலவாரியத்தின் *(TNAWB)* 12.02.2026 நாளிட்ட கோரிக்கையின்படி, குதிரைகள், கழுதைகள், ஆகியவற்றின் உரிமையாளர்கள் உள்ளாட்சி நிர்வாகங்களிடமிருந்து உரிமம் பெற வேண்டும் மற்றும் தமிழ்நாடு விலங்குகள் நலவாரியத்திடம் *(TNAWB)* பதிவு செய்திருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குதிரைகள் மற்றும் கழுதைகளின் உரிமையாளர்கள் அவற்றிற்கு அனைத்து தடுப்பூசிகளையும் செலுத்தி பதிவு பெற்ற கால்நடை மருத்துவரிடம் உடற்தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் குதிரைகளை பகல் *10* மணி முதல் *4* மணி வரை சவாரிக்கு பயன்படுத்தக்கூடாது எனவும், ஒவ்வொரு குதிரைக்கும் தலா *144* சதுர அடி *(12*அடி நீளம் மற்றும் *12* அடி அகலம்) இடவசதி உள்ள கொட்டில்கள் அமைக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்கண்ட சவாரி குதிரைகள் வளர்ப்பினை முறைபடுத்தவும், குதிரைகள் துன்புறுத்தப்படுவதை கட்டுபடுத்தவும் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் வளர்க்கப்படும் குதிரைகளின் உரிமையாளர்களுக்கு உரிமம் வழங்கவும்,
2. இதற்கென பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து கொள்ள அனுமதியும்,
3. உரிமம் வழங்கப்படும் போது குதிரைகளுக்கு மைக்ரோசிப் செலுத்துவதற்கும்,
4. உரிமம் பெறுவதற்காக 45 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்பட்டு 28.03.2026 க்குள் குதிரைகளின் உரிமையாளர்களுக்கு உரிமம் பெற காலக்கெடு அளிக்கவும்,
5. 29.03.2026 முதல் உரிமம் பெறாத குதிரைகளை சவாரிக்கு பயன்படுத்துவதை காவல்துறையினரின் பங்கேற்புடன் தடை செய்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.045/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.5.ந.க.எண்.எ1/1523/2026

தீர்மான எண்: 188/2026 **பொருள் எண்.68**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 5 - பொதுமக்களின் வசதிக்காக அமைக்கப்பட்ட தற்காலிக பேருந்து நிலையம் (இப்ராஹிம் சாஹிப் சாலை மற்றும் சென்னை தீவுத்திடல்) - தற்காலிக பேருந்து நிலையத்தில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்ட தற்காலிக பங்க் கடைகள் - பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்தல் - பங்க் கடைக்கான வாடகை நிர்ணயம் செய்திட அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்பு குழுவின் அறிக்கை பெறப்பட்டது - வாடகை நிர்ணயம் செய்து தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஒதுக்கீடு ஆணை வழங்கிட மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, கோட்டம் – 59 எல்லைக்குட்பட்ட பிராட்வே, *N.S.C BOSE* சாலையில் இயங்கி வந்த மாநகர போக்குவரத்து பணிமனை மற்றும் அருகாமையிலிருந்த குறளகம் கட்டிடம் ஆகியவை தற்போது முற்றிலுமாக அகற்றப்பட்டு அவ்விடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் *CMAML* மூலமாக *Multi Model Speciality Complex (MMFC)* பணிகளை மேற்கொள்ள *Municipal Administration and water supply (MCI) Department G.O.(MS) No.133, Dated : 14-09-2023*ல் அரசாணை வெளியிடப்பட்டதை தொடர்ந்து அவ்விடத்தில் இயங்கி வந்த மாநகர போக்குவரத்து பேருந்து நிலையம் பொதுமக்களுக்கு சிரமம் இன்றி செயல்படுத்திட ஏதுவாக தற்காலிக பேருந்து நிலையம் இப்ராஹிம் சாஹிப் சாலையில் கோட்டம் – *60* மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ஒரு முனையமும் அதே போல் கோட்டம் – *59* எல்லைக்குட்பட்ட தமிழ்நாடு சுற்றுலா துறைக்கு சொந்தமான *(TTDS)* சென்னை தீவுத்திடலில் *(Island Ground)* மாநகராட்சிக்கு மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட இடத்தில் மற்றொரு பேருந்து முனையமும் இயங்குவதற்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் பெருநகர சென்னை மாநகராட்சி பேருந்து சாலைகள் துறை மூலமாக மேற்கொள்ளப்பட்டது.

மேலும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இப்ராஹிம் சாஹிப் சாலையில் அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் மற்றும் சென்னை தீவுத்திடலில் உருவாக்கப்பட்ட பேருந்து நிலையத்தில் பொதுமக்களின் வசதிக்காகவும் அத்தியாவசிய தேவைகளுக்காகவும் முறையே பத்து எண்ணிக்கையிலான பங்க் கடை இப்ராஹிம் சாஹிப் சாலை பேருந்து நிலையத்திலும், *18* எண்ணிக்கையிலான பங்க் கடைகள் சென்னை தீவுத்திடலிலும் பேருந்து சாலைகள் துறை மூலமாக கட்டமைக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன. அதேபோல் பொதுமக்களின் அத்தியாவசிய தேவையை கருத்தில் கொண்டு இரண்டு தற்காலிக பேருந்து நிலையத்திலும் ஆவின் நிர்வாகத்திற்கு பங்க் அமைத்துக்கொள்ள சிறப்பு அனுமதி பேருந்து சாலைகள் துறை மூலமாக அனுமதி பெற்று வழங்கப்பட்டுள்ளது.

தற்காலிக பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட இரண்டு இடங்களிலும் பழைய பேருந்து நிலையத்தில் கடை அமைத்திருந்த வியாபாரிகள் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் தற்போது அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள பங்க் கடைகளை ஒதுக்கீடு செய்து தரவேண்டி மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் பெருநகர வளர்ச்சி குழும தலைவர் அவர்களிடம் அளித்துள்ள கோரிக்கை மனுக்கள் மற்றும் மண்டல அளவில் பெறப்பட்ட கோரிக்கை மனுக்களை ஆணையர் அவர்களின் 10.02.2026 நாளிட்ட நிர்வாக அனுமதிக்கு இணங்க உதவி ஆணையர் நிலை (I) மண்டலம் – 5 அவர்கள் விதிகளுக்கு உட்பட்டு தேர்வு செய்த பயனாளிகளின் விவரம் பின்வருமாறு.

1) கோட்டம் - 60, இப்ராஹிம் சாஹிப் சாலை தற்காலிக பேருந்து முணையம்

வ. எண்	பயனாளியின் பெயர்	அடையாள அட்டை விவரம் (ம) கைபேசி	அமைக்கவுள்ள கடையின் பெயர்	பங்க் கடையின் மொத்த பரப்பளவு	மாத வாடகை விவரம்	முன்பணத் தொகை விவரம்
1	ஆவின் நிர்வாகம்	-	ஆவின் பார்லர்	100	ரூ.690/-	ரூ.8280/-
2	மணிமாறன் M	7292 89256992/ 9840240040	டீபன் கடை	100	ரூ.690/-	ரூ.8280/-
3	D சுதாகர்	5596 27385075/ 9940034076	தேனீர் கடை	100	ரூ.690/-	ரூ.8280/-
4	பரமேஸ்வரி.S	4823 0165 6948/ 9841917127	ஜீஸ் கடை	100	ரூ.690/-	ரூ.8280/-
5	ராஜேஷ் M	7941 00559531/ 8939128955	டீபன் கடை	100	ரூ.690/-	ரூ.8280/-
6	லீலாவதி	7756 06486324/ 9094544159	டீபன் கடை	100	ரூ.690/-	ரூ.8280/-
7	M சாந்தி	3511 35390166/ 7299715499	பழக் கடை	100	ரூ.690/-	ரூ.8280/-
8	பச்சையம்மாள்	9119 95047937/ 7299181407	தேனீர் கடை	100	ரூ.690/-	ரூ.8280/-
9	மகருப் A	2498 81100725/ 9840567555	பிரியாணி கடை	100	ரூ.690/-	ரூ.8280/-
10	கருப்பையா M	8770 63770563/ 9444113246	உணவு கடை	100	ரூ.690/-	ரூ.8280/-
11	கண்ணன் S	7546 03481659/ 7904206512	தேனீர் கடை	100	ரூ.690/-	ரூ.8280/-

2) கோட்டம் - 59, சென்னை தீவுத்திடல் (அண்ணா சாலை முகப்பு):

வ. எண்	பயனாளியின் பெயர்	அடையாள அட்டை விவரம் (ம) கைபேசி	அமைக்கவுள்ள கடையின் பெயர்	பங்க் கடையின் மொத்த பரப்பளவு	மாத வாடகை விவரம்	முன்பணத் தொகை விவரம்
1	ஆவின் நிர்வாகம்	-	ஆவின் பார்லர்	100	ரூ.1370/-	ரூ.16,440/-
2	V உமாதேவி	6360 44636717/ 98848483452	பொறிகடலை	100	ரூ.1370/-	ரூ.16,440/-
3	சுமதி	3033 12958654/ 7871637778	பல பொருள் கடை	100	ரூ.1370/-	ரூ.16,440/-
4	கவியரசன் .R	4581 13324737/ 9380457770	தேனீர்கடை	100	ரூ.1370/-	ரூ.16,440/-
5	பச்சையம்மாள்	911995047937/ 7299181407	ஸ்நாக்ஸ் மற்றும் தேனீர் கடை	100	ரூ.1370/-	ரூ.16,440/-
6	லலிதா கௌட்	4947 64359794/ 9087720668	தேனீர் கடை	100	ரூ.1370/-	ரூ.16,440/-
7	அமல கீர்த்தி K.J	9191 01086833/ 9043762809/	ஸ்நாக்ஸ் மற்றும் சாட்ஸ்,கபே கடை	100	ரூ.1370/-	ரூ.16,440/-
8	S மஞ்சுளா	9317 19253654/ 7299992230	ஜீஸ் ஜஸ்கிரிம் கடை	100	ரூ.1370/-	ரூ.16,440/-
9	பாமா	3244 56397549/ 9884998356	தேனீர் கடை	100	ரூ.1370/-	ரூ.16,440/-
10	லதா S	6157 32504747/ 8124818878	தேனீர கடை	100	ரூ.1370/-	ரூ.16,440/-
11	S பிரசாந்த்	7448 89974991/ 6383437775	டீபன் கடை	100	ரூ.1370/-	ரூ.16,440/-
12	S நந்தினி	2937 40642709/ 9551640914	டீபன் கடை	100	ரூ.1370/-	ரூ.16,440/-
13	பூவிழி	5774 84963936/ 7338851510	உணவகம் கடை	100	ரூ.1370/-	ரூ.16,440/-

14	R பவித்ரா	5443 02652593/ 9094480356	தேனீர் கடை	100	ரூ.1370/-	ரூ.16,440/-
15	புவன்	5692 85261493/ 9840115857 / 8122015857	தேனீர் கடை	100	ரூ.1370/-	ரூ.16,440/-
16	பானு S	4349 92952536/ 9941158962	குளிர்பானம் கடை	100	ரூ.1370/-	ரூ.16,440/-
17	S. ராஜலட்சுமி	6903 66597637/ 9551334084	-	100	ரூ.1370/-	ரூ.16,440/-
18	C. சரண்யா	9508 55717906/ 8838112291	தேனீர் கடை/ டீபன் கடை	100	ரூ.1370/-	ரூ.16,440/-

மேற்கண்டவாறு தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 12/02/2026 நாளிட்ட உதவி ஆணையர் நிலை (I) அவர்களின் செயல்முறை ஆணைப்படி உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்பு குழுவின் 13/02/2026 நாளிட்ட அறிக்கையின்படி மாத வாடகை நிர்ணயம் செய்திட பரிந்துரைக்கப்பட்ட அட்டவணையில் கண்ட வாடகையினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதிகள் 2023 உட்பிரிவு 316-ன் படி ஏலம் மற்றும் ஒப்பம் முறையில் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் பிப்ரவரி மாத இறுதி அல்லது மார்ச் மாதம் முதல் வாரத்தில் தமிழ்நாடு சட்டப்பேரவைக்கான தேர்தல் தேதி அறிவிக்கப்படவுள்ளதால் தேர்தல் நடத்தை விதிகளின் பொருட்டு ஏலம் விட போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால் ஏலம் விடுவதிலிருந்து விலக்களித்திட இப்பொருளின் அவசர அவசியம் கருதி பெருநகர சென்னை மாநகராட்சி வருவாயினை கருத்தில் கொண்டு வாடகையை நிர்ணயம் செய்து தற்காலிக ஒதுக்கீடு ஆணை வழங்கிட 16-02-2026 அன்று நடைபெற்ற மண்டலம் – 5 வார்டு குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பின்வரும் இனங்கள் மீது மாமன்றத்தின் தீர்மானம் வேண்டப்படுகிறது.

அ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, கோட்டம் – 60, இப்ராஹிம் சாஹிப் சாலையில் அமைந்துள்ள தற்காலிக பேருந்து நிலையத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள 10 பங்க் கடைகளையும் அதேபோல் கோட்டம் – 59 சென்னை தீவுத்திடல் (அண்ணா சாலை முகப்பு) அமைந்துள்ள தற்காலிக பேருந்து நிலையத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள 17 எண்ணிக்கையிலான பங்க் கடைகளுக்கு 10/02/2026 நாளிட்ட ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு இணங்க குலுக்கல் முறையில் உதவி ஆணையர் நிலை (I) அவர்கள் நிலையில் தேர்வு செய்திட பெறப்பட்ட நிர்வாக அனுமதியின் அடிப்படையிலும் உதவி ஆணையர் நிலை (I) அவர்களின் செயல்முறை ஆணைப்படி அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்பு குழுவால்

பரிந்துரைக்கப்பட்ட மாத வாடகையின் அடிப்படையிலும் முறையே மாத வாடகை ரூ. 690/- மற்றும் 18 விழுக்காடு (சரக்கு மற்றும் சேவை வரி அவ்வப்பொழுது மாற்றத்திற்குட்பட்டது) இத்துடன் 12 மாத வாடகை முன்பணம் என இப்ராஹிம் சாஹிப் சாலையில் அமைக்கப்பட்ட தற்காலிக பேருந்து நிலையத்தில் உள்ள பங்க் கடைகளுக்கும் அதேபோல் மாத வாடகை ரூ. 1370/- மற்றும் 18 விழுக்காடு (சரக்கு மற்றும் சேவை வரி அவ்வப்பொழுது மாற்றத்திற்குட்பட்டது) இத்துடன் 12 மாத வாடகை முன்பணம் என சென்னை தீவுத்திடல் (அண்ணாசாலை முகப்பு) அமைக்கப்பட்ட தற்காலிக பேருந்து நிலையத்திலுள்ள பங்க் கடைகளுக்கும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 உட்பிரிவு 316ன்படி ஏலம் மற்றும் ஒப்பம் முறையில் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் பிப்ரவரி மாத இறுதி அல்லது மார்ச் மாத முதல் வாரத்தில் தமிழ்நாடு சட்டப்பேரவைக்கான தேர்தல் தேதி அறிவிக்கப்படவுள்ளதால் தேர்தல் நடத்தை விதிகளின் பொருட்டு ஏலம் விட போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால் நிர்வாக நலன் கருதியும் பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாயினை கருத்தில் கொண்டும் ஏலம் விடுவதிலிருந்து விலக்களித்திட இப்பொருளின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட அட்டவணையில் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாடகை நிர்ணயம் செய்து தற்காலிக ஒதுக்கீடு ஆணை வழங்கிட 16/02/2026 அன்று நடைபெற்ற மண்டலம் – 5 வார்டு குழுவில் தீர்மானம் பெறப்பட்டதன் அடிப்படையில் மாமன்றத்தின் தீர்மானம் வேண்டியும்,

ஆ) அதேபோல் சென்னை தீவுத்திடல் (TTDC) / அண்ணாசாலை முகப்பில் தற்காலிக கடை அமைத்துக்கொள்ள ஆவின் நிறுவனத்திற்கு சிறப்பு அனுமதி வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு மாத வாடகையாக ரூ.1370/- 18 விழுக்காடு சரக்கு மற்றும் சேவைவரி (அவ்வப்பொழுது மாற்றத்திற்குட்பட்டது) மற்றும் இப்ராஹிம் சாஹிப் சாலையில் தற்காலிக கடை அமைத்துக்கொள்ள ஆவின் நிறுவனத்திற்கு சிறப்பு அனுமதி வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு மாத வாடகையாக ரூ.690/- 18 விழுக்காடு சரக்கு மற்றும் சேவைவரி (அவ்வப்பொழுது மாற்றத்திற்குட்பட்டது) என நிர்ணயம் செய்து 12 மாத வாடகை முன்பணம் பெற்றுக்கொண்டு தற்காலிக ஒதுக்கீடு ஆணை வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 'அ' மற்றும் 'ஆ' ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.79/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.5.ந.க.எண்.149 /2026

தீர்மான எண்: 189/2026 **பொருள் எண்.69**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 5, பகுதி– 13, வார்டு –57 துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கல்யாண புரம், ஜட்கா புரம், ஆதி ஆந்திரா காலனி மற்றும் வுட்வார்ப் ஆகிய பகுதிகளில் ஆக்கிரமிப்பில் உள்ள குடும்பங்களுக்கு கணக்கீடு மேற்கொள்ளப்பட்டது - தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் குடியமர்வு செய்வது - பயனாளிகளின் மூன்றில் ஒரு பங்கு தொகை செலுத்துவது - மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -5, பகுதி-13, வார்டு -57 துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கல்யாணபுரம், ஜட்கா புரம், ஆதி ஆந்திரா காலனி மற்றும் வுட்வார்ப் ஆகிய பகுதிகளில் பல ஆண்டுகளாக அரசுக்கு சொந்தமான நிலத்தில் ஆக்கிரமித்து (பொதுப்பணி துறை, நீர்வள துறை, தென்னக இரயில்வே மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி) பல குடும்பங்கள் குடிசைகள் அமைத்து வாழ்ந்து வருகின்றனர். இந்த ஆக்கிரமிப்பாளர்கள் கல்வி சமூக பொருளதாரத்தில் பின்தங்கிய நிலையில் தினக்கூலிகளாக மூட்டைதூக்குதல், தள்ளு வண்டி இழுத்தல், வீட்டு வேலை மற்றும் துப்புரவு பணி ஆகிய வேலைகள் செய்து வருகின்றனர். மேற்படி

ஆக்கிரமிப்பில் உள்ள அரசுக்கு சொந்தமான நிலமானது அரசின் பல்வேறான திட்ட பணிகளுக்காக தேவைப்படும் என்பதால் இங்கு வசிக்கும் ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுவது அவசியமாகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு தமிழக துணைமுதல்வர், மாண்புமிகு இந்துசமய (ம) அறநிலைத்துறை அமைச்சர் மற்றும் தலைவர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்கள் மற்றும் மாண்புமிகு மேயர் அவர்கள், பெருநகர சென்னை மாகராட்சி அவர்களால் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கல்யாணபுரம், ஜட்காபுரம், ஆதி ஆந்திரா காலனி மற்றும் வுட்வார்ப் ஆகிய பகுதிகளில் பல்வேறு நாட்களில் நேரடி களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் சம்மந்தப்பட்ட ஆக்கிரமிப்பாளர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்திற்காக தமிழக அரசின் குடியிருப்புகளில் தங்களுக்கு வீடு ஒதுக்கி தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதனடிப்படையில் இவர்கள் தங்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் குடியிருப்புகளில் மாற்று இடம் ஒதுக்கீடு செய்து தரும்படி மாநகராட்சியை அணுகி கேட்டுக்கொண்டதின் தொடர்ச்சியாக மண்டலம் – 5, பகுதி– 13 – துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கல்யாணபுரம், ஜட்காபுரம், ஆதி ஆந்திரா காலனி மற்றும் வுட்வார்ப் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களை கடந்த வருடத்திலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, பகுதி– 13, வார்டு –57 தண்ணீர் தொட்டி தெருவில் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் மூலம் 700 எண்ணிக்கை கொண்ட தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளது, கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டதில் தகுதி வாய்ந்த நபர்களுக்கு முதற்கட்டமாக குடியிருப்பு ஒதுக்கீடு வழங்கிடவும்,

மேலும், இதே இடத்தில் கூடுதலாக 144 குடியிருப்புகள் கட்டப்பட உள்ளதால் இரண்டாம் கட்டமாக மீதமுள்ள நபர்களுக்கு தகுதியின் அடிப்படையில் குடியிருப்பு ஒதுக்கீடு வழங்கிடவும்,

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, பகுதி– 13 , வார்டு –55 துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு ஸ்டான்லி மருத்துவமனை (ஏழுகிணறு) திட்டப்பகுதியில் 776 குடியிருப்புகளில் ஏற்கனவே துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சாலையோரம் வசித்து வரும் 692 குடும்பங்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் குடியிருப்பு ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டு வீடுகளில் குடியமர்த்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 84 குடியிருப்புகளில் மேற்காணும் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கல்யாணபுரம், ஜட்காபுரம், ஆதி ஆந்திரா காலனி மற்றும் வுட்வார்ப் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் குடியிருப்பு ஒதுக்கீடு ஆணை வழங்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் மூலம் கட்டப்பட்டுள்ள தண்ணீர் தொட்டி தெரு திட்டப்பகுதியில் திருத்திய அரசாணையின்படி பயனாளி பங்குத் தொகை விவரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

வ.எண்	திட்டப்பகுதியின் பெயர்	பயனாளி பங்குத் தொகை (ஒரு குடியிருப்புக்கு) ரூ.
1	பயனாளிகள் 3.33 -1000 x 333 மாசம்	3,33,000/-
2	பெருநகர சென்னை மாநகராட்சி	1,67,000,/-

வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை அரசு இணை செயலாளர் அவர்களின் 09.08.2024 நாளிட்ட கடிதத்தில், ஏழைகளுக்கு வீடு கொடுக்கும் திட்டத்தில் பயனாளி பங்குத்தொகை குறைப்பினை தொடர்புடைய உள்ளாட்சி நிர்வாகம் தான் ஏற்க வேண்டும். மேலும், அரசு நிதியில் இருந்து எந்த செலவையும் ஈடுகட்ட இயலாத நிலை உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 5, பகுதி- 13, வார்டு -57 துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கல்யாணபுரம், ஜட்காபுரம், ஆதி ஆந்திரா காலனி மற்றும் வுட்வார்ப் ஆகிய பகுதிகளில் வசித்து வரும் குடும்பதாரர்களுக்கு வீடுகள் வழங்கப்பட வேண்டுமென்றால் நிர்ணயிக்கப்பட்ட பயனாளிகளின் பங்குத்தொகை கட்டப்பட வேண்டும். எனவே பல ஆண்டுகளாக அரசுக்கு சொந்தமான நிலத்தில் ஆக்கிரமித்து (பொதுப்பணி துறை, நீர்வள துறை, தென்னக இரயில்வே மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி) பல ஆண்டுகளாக வாழ்ந்து வரும் மக்களின் சமூக பொருளாதாரத்தின் நிலையினை கருத்தில் கொண்டு இந்த முழுத்தொகையை கட்டுவதனை தளர்த்தி அத்தொகையில் குறைந்தபட்சம் ரூ. 3.33 இலட்சம் மூன்றில் இரண்டு பங்கு அங்குள்ள பயனாளிகளும் (333 மாதங்கள் என மாதம் 1000 வீதம்), மீதத்தொகை அதாவது ரூ. 1.67 இலட்சத்தினை சென்னை மாநகராட்சி பயனாளிகளின் பங்கீட்டு தொகையாக தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.1,67,000x 928 = 15,49,76,000 என வழங்குவது குறித்து, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.81/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின்

மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.4.ந.க.எண்.சி2/0867/2026

தீர்மான எண்: 190/2026 **பொருள் எண்.70**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -4, கோட்டம் 34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிக்கு போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் அண்டை வீட்டு குழுக்கள் (SHG) ன் கீழ் 1147 தூய்மை பணியாளர்கள் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர் - தற்பொழுது இப்பணியாளர்களும் போதுமானதாக இல்லாத காரணத்தினால் மண்டலம்-5 ல் இருந்து 550 தற்காலிக (SHG) தூய்மை பணியாளர்கள் மண்டலம் -4 ல் 23.01.2026 முதல் 28.02.2026 வரை பணியமர்வு செய்வதற்கும், ஊதியம் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -4ற்குட்பட்ட பகுதிகள் சென்னையின் பழமை வாய்ந்த பெரம்பூர், ஆர்.கே.நகர், வியாசர்பாடி மற்றும் இராயபுரம் போன்ற பகுதிகளை உள்ளடக்கியதாகும். மேலும், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்ப்பேட்டை நெடுஞ்சாலை ஆகிய நெடுஞ்சாலைகளை உள்ளடக்கிய 35.5 கி.மீ நீளமுள்ள 49 பேருந்து சாலைகள் மற்றும் 393.65 கி.மீ நீளமுள்ள 2846 உட்புறச் சாலைகளை, பெருநகர சென்னை மாநகராட்சியின் பணியாளர்களைக் கொண்டு தனியாக தினமும் தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும். இது தவிர பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -4க்குட்பட்ட பகுதிகளில் அரசு சின்ன ஸ்டான்லி மருத்துவமனை, தண்டையார்ப்பேட்டை ரயில் நிலையம், காசிமேடு சுடுகாடு, முல்லை நகர் சுடுகாடு, சீதாராம் நகர்

சுடுகாடு, பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், ஓட்டல்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் இலவச பொதுக்கழிப்பிடங்கள், மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை சேகரித்து தரம் பிரிக்கும் பணிகள, சாலைகளில் உள்ள பேனர்களை அகற்றும் பணி, BOV வாகனங்களை ஓட்டுவதற்கும் மற்றும் சாலைகளில் அதிகமாக உள்ள மணல்களை அகற்றுவது ஆகியவற்றை சீரிய முறையில் சுத்தமாக பராமரித்திட வேண்டும். மேற்கண்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகமாகவும் அடர்த்தியாகவும் வசிப்பதாலும் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டியுள்ளது.

மண்டலம் - 4 2011 ஆம் ஆண்டு		மண்டலம் - 4 2026 ஆம் ஆண்டு		மண்டலம் - 4 வித்தியாசம்	
மொத்த மக்கள் தொகை	மொத்த குடியிருப்புகள்	மொத்த மக்கள் தொகை	மொத்த குடியிருப்புகள்	மொத்த மக்கள் தொகை	மொத்த குடியிருப்புகள்
838283	209571	1056237	251985	217954	42414

இந்நிலையில் தற்போது மண்டலம் -4 , கோட்டம் - 34 முதல் 48 வரை , கே.டி.ஜியில் 1714 நிரந்தர பணியாளர்கள் மற்றும் மண்டலம் -5 ல் இருந்து 420 பணியாளர்களும் ஆக மொத்தம் 2134 இப்பணியாளர்களில் (ஓய்வு , பணியிடமாற்றம், பதவி உயர்வு மற்றும் இறப்பு காரணமாக) 1268 பணியாளர்கள் போக மீதம் உள்ள 866 பணியாளர்கள் மற்றும் 1147 அண்டை வீட்டு குழுக்கள் (SHG) பணியாளர்களை மட்டுமே கொண்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது பெரம்பூர், ஆர்.கே.நகர், வியாசர்பாடி மற்றும் இராயபுரம் போன்ற பகுதிகளில் மக்கள் தொகை அதிகமாக உள்ளதால் இப்பணியாளர்களை கொண்டு தூய்மை பணி மேற்கொள்வதற்கு சிரமமாக உள்ளதால் மண்டலம் - 5 ல் இருந்து 550 தற்காலிக (SHG) தூய்மை பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அட்டவணை

துப்புரவு பணியாளர் தேவைப்பட்டியல் கணக்கீடு

வ.எண்	கோட்டம்	மொத்தம் அனுமதி பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை	தற்போது பணிபுரியும் நிரந்திர பணியாளர்களின் எண்ணிக்கை	மன்றத்தீர்மானம் பெறப்பட்ட SHG பணியாளர்கள் எண்ணிக்கை	மண்டலம் -5 ல் இருந்து மண்டலம் -4ற்கு அனுப்பப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை	தலைமை பொறியாளர் (PWM) அவர்களின் சுற்றறிக்கை நாள் :10.08.2023 (தி.க.மே.துநு.க.எண்.அ3/3974/2023)	தோராய செலவினம் ரூ.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1.	34	165	45	132	41	ரூ.761/-	ரூ.761/- x 550 (SHG தாய்மை பணியாளர்கள்) x 37 நாட்கள் = ரூ.1,54,86,350/- (23.01.2026 முதல் 28.02.2026 வரை)
2	35	150	57	107	36		
3	36	130	42	107	35		
4	37	140	56	114	32		
5	38	103	47	69	41		
6	39	87	56	51	41		
7	40	93	53	52	33		
8	41	101	63	47	33		
9	42	102	73	48	41		
10	43	100	58	68	41		
11	44	94	41	69	36		
12	45	114	56	84	36		
13	46	99	43	77	35		
14	47	88	66	52	33		
15	48	93	81	38	36		
16	KDG	55	22	32			
மொத்தம்		1714	859	1147	550		

ஆகையால் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 8,38,283 மக்கள் தொகையும் மற்றும் 2,09,571 குடியிருப்புகள் என நிர்ணயம் செய்யப்பட்டு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது 2026 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 10,56,237 மக்கள்தொகையும் மற்றும்

2,51,985 குடியிருப்புகள் அதன் வித்தியாசம் 2,17,954 மக்கள் தொகையும் மற்றும் 42,414 குடியிருப்புகள் உள்ளன. தூய்மைப்பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாதததால் மண்டலம் – 5லிருந்து 550 தற்காலிக தூய்மை பணியாளர்ளை (SHG) புதிதாக மண்டலம் – 4ல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, மண்டலம் -4, கோட்டம் -34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிகளை மேற்கொள்ள அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக மண்டலம் -5 ல் இருந்து 550 தற்காலிக (SHG) தூய்மை பணியாளர்களை பணிக்கு எடுத்துக்கொள்ள (23.01.2026 முதல் 28.02.2026 வரையுள்ள காலத்திற்கு) நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

மண்டலம்-4ல் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்களில் (SHG) 60 வயதை கடந்த பணியாளர்கள் எவரும் பணிபுரியவில்லை என சான்றளிக்கப்படுகிறது.

எனவே,

(அ)	மண்டலம் -4, கோட்டம் -34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிகள் மேற்கொள்ள மண்டலம் -5 ல் இருந்து அனுப்பப்பட்டுள்ள 550 தற்காலிக (SHG) தூய்மை பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக பணியமர்வு செய்வதற்கும் மற்றும் 23.01.2026 முதல் 28.02.2026 வரை காலத்திற்கு ஊதியம் வழங்குவதற்கு அனுமதியும்.
(ஆ)	ஆணையர் அவர்களின் 05.12.2025 நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள ஒரு நாளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.761/- வீதம் 550 நபர்கள் x 37 நாட்கள் x ரூ.761/- = ரூ.1,54,86,350/- (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து நான்கு இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து ஐம்பது மட்டும்) அனுமதியும்
(இ)	தூய்மை பணியில் ஈடுபட்டு வரும் SHG தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை ஆணையர் அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்ய அனுமதியும்,
(ஈ)	தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் அரசாணை / சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் ஊதியம் வழங்க அனுமதியும்,
(உ)	நிதி ஆலோசகர் மூலமாக ரூ.1,54,86,350/- (தலைப்பு எண்: 40-41-03 payment to casual staff conservancy works , கணக்கு குறியீடு எண்.210-100-601) நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும்.

மேற்கண்ட அ முதல் உ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.042/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.93/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.7ந.க.எண்.எஸ்3/024/2026

தீர்மான எண்: 191/2026 **பொருள் எண்.71**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 7 - அம்பத்தூர் - பகுதி – 18 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அண்டை வீட்டு குழுவின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 15.04.2026 உடன் முடிவடைகிறது - 413எண்ணிக்கை கொண்ட தூய்மை பணியாளர்களை கொண்டு 16.04.2026 முதல் 14.07.2026 வரை (90 நாட்கள்) பணியினை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி- 18, வார்டு- 79 முதல் வார்டு 83 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.08சதுரகி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 14எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1638 எண்ணிக்கையிலான உட்புறசாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி-18இன் கீழ் உள்ள 79 முதல் 83 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2015ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 1,56,255. இருப்பினும், நகர மயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்குநாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7 அம்பத்தூர் பகுதி -18இல் வார்டு-79 முதல் 83 வரையுள்ள 5 வார்டுகளில் தோராயமாக 105மெட்ரிக் டன் குப்பைகள் தினந்தோறும் தூய்மை பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர தூய்மை தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால், தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தினக்கூலி தூய்மைப் பணியாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் தூய்மை பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 18இல் (வார்டு – 79 முதல் 81 – வரை) போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால், இன்றைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப தூய்மை பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் அண்டை வீட்டு குழுவின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் நியமிக்கப்பட்ட *Chennai EnviroSolution private Limited* அவர்களுக்கு வார்டு82,83 மற்றும் 85இல் பணியாணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

பகுதி - 18இல் 79,80,81,ஆகிய கோட்டங்களில் நிரந்தர தூய்மை பணியாளர்கள் எவரும் இல்லாத பட்சத்தில் அண்டை வீட்டுகுழுவின் வழியாக பணிபுரியும் 413எண்ணிக்கை கொண்ட தூய்மை பணியாளர்களை வைத்து பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்துவரும் பகுதி மற்றும் மக்கட்தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் தூய்மை பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதாலும் அதற்கேற்ப அண்டைவீட்டு குழுவின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்ற தீர்மான எண். 1044/2025, நாள்.30.09.2025-ன்படி அண்டை வீட்டு குழுவின் வழியாக வார்டு 79, 80, 81ல் 413 பணியாளர்களை பணியமர்த்தி தூய்மை பணிகளை மேற்கொள்ள 16.10.2025 முதல் 15.04.2026 வரை (182நாட்கள்) ஆறு மாதகாலத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது தூய்மை பணி நடைப்பெற்றுவருகிறது. பகுதி-18ல் கோட்டம்- 79 முதல் 81 வரை உள்ள கோட்டங்களில் 22அண்டைவீட்டு குழுவின் வழியாக இப்பணியாளர்களுக்கு தினக்கூலியானது மாதாமாதம் அண்டை வீட்டு குழுக்களின் வங்கி கணக்கிற்கு RTGS மூலமாக பணபரிவர்த்தனை செய்யப்பட்டு குழுக்களின் வங்கிகணக்கிலிருந்து அக்குழுவில் உள்ள ஒவ்வொரு பணியாளர்களுக்கும் தனித்தனியாக RTGS மூலமாக பணம்பட்டுவாடா செய்யப்பட்டு வரப்படுகிறது.

மண்டலம்-7, பகுதி – 18ல் அண்டை வீட்டு குழுவின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை வைத்து தொடர்ந்து 16.04.2026 முதல் 14.07.2026 வரை 90 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், பகுதி – 18 வார்டு – 79,80,81 ஆகிய மூன்று கோட்டங்களில் தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு அண்டை வீட்டு குழுவின் வழியாக தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை 16.04.2026 முதல் 14.07.2026 வரை (90 நாட்களுக்கு) பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 413 தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள், தூய்மை பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-18க்கு, தேவை என கணக்கிட்டு 16.04.2026 முதல் 14.07.2026 வரை (90 நாட்களுக்கு) எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7இல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின், 05.12.2025 நாளிட்ட திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.761/- வீதம் 413 பணியாளர்களுக்கு 16.04.2026 முதல் 14.07.2026 வரை (90 நாட்களுக்கு) ஆகும் செலவு ரூ.2,82,86,370/- (ரூபாய். இரண்டு கோடியே எண்பத்தியிரண்டு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து முந்நூற்றெழுபது மட்டும்)க்கு என மூன்று மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

வ.எண்	பகுதி எண்	துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை	தோராய செலவினம்
1	*18*	*413*	ரூ.*761 x 413 x 90* (நாட்கள்) = ரூ. *2,82,86,370/-*
மொத்தம்			ரூ. *2,82,86,370/-*

எனவே,

1. 16.04.2026 முதல் 14.07.2026 வரை (90 நாட்களுக்கு) அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – 7இல் குப்பைகளை அகற்ற Chennai EnviroSolution private Limited மூலம் 3 வார்டுகளை எடுத்து (Takeover) தூய்மை பணிகளை மேற்கொள்ளும் நாள்வரை, எது முன்னர் வருகிறதோ (Whichever be earlier) என்ற அடிப்படையில் தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு அண்டை வீட்டு குழுவின் வழியாக 413 எண்ணிக்கையிலான தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணியை மேற்கொள்ளவும்,
2. மேற்கண்ட 413 தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.761/-வீதம், 16.04.2026 முதல் 14.07.2026 வரை 90 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.2,82,86,370/- (ரூபாய். இரண்டு கோடியே எண்பத்தியிரண்டு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து முந்நூற்றெழுபது மட்டும்)க்கு நிருவாக அனுமதி வேண்டியும்,
3. இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40- 41-03 கணக்கு தலைப்பு எண்210 –100 - 601 கீழ் 2026 – 27ஆம் நிதி ஆண்டிற்கு ரூ. 3,00,00,000/- (ரூபாய் மூன்று கோடி மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.043/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.94/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.7.ந.க.எண்.எஸ்2/029/2026

தீர்மான எண்: 192/2026 **பொருள் எண்.72**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 7 - அம்பத்தூர் - பகுதி – 19 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அண்டை வீட்டு குழுவின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 15.04.2026 உடன் முடிவடைகிறது – 485 எண்ணிக்கை கொண்ட தூய்மை பணியாளர்களை கொண்டு 16.04.2026 முதல் 14.07.2026 வரை (90 நாட்கள்) பணியினை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி - 19, வார்டு – 84 முதல் 88 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 13.79 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 5 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 917 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி-19ன் கீழ் உள்ள 84 முதல் 88 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,90,760 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7 அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 360 மெட்ரிக் டன் குப்பைகள் வார்டு-79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் தூய்மை பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால், தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் தூய்மை பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 19 (வார்டு – 84, 86, 87, 88) இல் போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும், இன்றைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப தூய்மை பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் அண்டை வீட்டு குழு (SHG) வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution private Limited அவர்களுக்கு வார்டு 82, 83 மற்றும் 85ல் பணியாணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பகுதி - 19 வார்டு 84,86,87,88 இல் போதிய நிரந்தர தூய்மை பணியாளர்கள் எவரும் இல்லாத பட்சத்தில் அண்டை வீட்டு குழு (SHG)வின் வழியாக பணிபுரியும் 485 எண்ணிக்கை கொண்ட தூய்மை பணியாளர்களை வைத்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் தூய்மை பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதாலும் அதற்கேற்ப அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்ற தீர்மான எண்.1045/2025, நாள்.30.09.2025-ன்படி அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள் 485 பணியாளர்களை பணியமர்த்தி தூய்மை பணிகளை மேற்கொள்ள 16.10.2025 முதல் 15.04.2026 வரை (182 நாட்கள்) ஆறு மாத காலத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது தூய்மை பணி நடைப்பெற்று வருகிறது. பகுதி-19இல் கோட்டம்-84, 86, 87, 88 ஆகிய கோட்டங்களில் 26 அண்டை வீட்டு குழுவின் வழியாக இப்பணியாளர்களுக்கு தினக்கூலியானது மாதாமாதம் அண்டை வீட்டு குழு(SHG)களின் வங்கிகணக்கிற்கு RTGS மூலமாக பணபரிவர்த்தனை செய்யப்பட்டு குழுக்களின் வங்கி கணக்கிலிருந்து அக்குழுவில் உள்ள ஒவ்வொரு பணியாளர்களுக்கும் தனித்தனியாக RTGS மூலமாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டுவருகிறது.

மண்டலம்-7, பகுதி-19இல், அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை வைத்து தொடர்ந்து 16.04.2026 முதல் 14.07.2026 வரை 90 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், பகுதி-19 (வார்டு-84, 86, 87, 88)இல் தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை 16.04.2026 முதல் 14.07.2026 வரை (90 நாட்களுக்கு) பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 485 தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள், தூய்மை பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-19க்கு, தேவை என கணக்கிட்டு 16.04.2026 முதல் 14.07.2026 வரை (90 நாட்களுக்கு) எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம் 7இல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின், 29.07.2024 நாளிட்ட திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான சுற்றறிக்கையின்படி, அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி, நாள் ஒன்றுக்கு ரூ.761/- வீதம் 485 பணியாளர்களுக்கு 16.04.2026 முதல் 14.07.2026 வரை (90 நாட்களுக்கு) ஆகும் செலவு ரூ.3,32,17,650/- (ரூபாய். மூன்று கோடியே

முப்பத்தியிரண்டு இலட்சத்து பதினேழாயிரத்து அறுநூற்றைம்பது மட்டும்)க்கு என மூன்று மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

வ.எண்	பகுதி எண்	தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை	தோராய செலவினம்
1	*19*	*485*	ரூ.*761 x 485 x 90* (நாட்கள்) = ரூ. *3,32,17,650/-*
மொத்தம்			ரூ. *3,32,17,650/-*

எனவே,

1. 16.04.2026 முதல் *1*4.07.2026 வரை (90 நாட்களுக்கு*)* அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – 7இல் குப்பைகளை அகற்ற Chennai Enviro Solution private Limited மூலம் பகுதி -19 ல் உள்ள 4 வார்டுகளை எடுத்து (Take over) தூய்மை பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை, எது முன்னர் வருகிறதோ (Whichever be earlier) என்ற அடிப்படையில் தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக 485 எண்ணிக்கையிலான தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணியை மேற்கொள்ளவும்,
2. மேற்கண்ட 485 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.761/- வீதம், 16.04.2026 முதல் 14.07.2026 வரை 90 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.3,32,17,650/- (ரூபாய், மூன்று கோடியே முப்பத்தியிரண்டு இலட்சத்து பதினேழாயிரத்து அறுநூற்றைம்பது மட்டும்)க்கு நிருவாக அனுமதி வேண்டியும்.
3. இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40-41-03 கணக்கு தலைப்பு எண்-210–100-601 கீழ் 2026-27ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.4,00,00,000/- (நான்கு கோடி மட்டும்*)* ஒதுக்கீடு செய்வதற்கு நிர்வாக அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.044/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம்

பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.95/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ9. ந.க.எண்.எச்.3/00078/2026

தீர்மான எண்: 193/2026 **பொருள் எண்.73**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-9-சுகாதாரத்துறை-பகுதி-24 முதல் 27 வரையுள்ள கோட்டம்- 109 முதல் 126 வரை அண்டை வீட்டு குழு (SHG) கீழ் பணியமர்த்தப்பட்ட சுகாதார பணியாளர்களின் பணிக்காலம் 31.03.2026ல் முடிவடைகிறது. மேலும் 01.04.2026 முதல் 31.03.2027 வரை ஒரு வருட காலத்திற்கு அண்டை வீட்டு குழு (SHG) கீழ் பணியமர்த்தப்பட்ட 114 சுகாதாரப் பணியாளர்களை பணியமர்த்த மன்றத்தின் நிர்வாக அனுமதி.

கொசு தடுப்பு மற்றும் ஒழிப்பு பணியை மேற்கொள்ளும் ஒப்பந்த தொழிலாளர்களை அந்தந்த மண்டலத்திலேயே அண்டை வீட்டு குழு *(SHG)* குழுக்கள் அமைத்து அதன் மூலம் *365* நாட்களுக்கு தற்காலிக சுகாதார தொழிலாளர்களை கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்த அந்தந்த மண்டல அலுவலர்கள் ஆணையரிடம், *26.02.2025* நாளிட்ட நிர்வாக அனுமதி பெற்று பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மாமன்ற தீர்மானத்தில், மண்டலம்-9, பகுதி-24,25,26 (ம) 27, கோட்டம்-109 முதல் 126 வரை உள்ள 18 கோட்டங்களில் சுமார் 10 இலட்சம் மக்கள் தொகையும், 226557 வீடுகளும், 63 அரசு கட்டிடங்களும், 231 பள்ளிகளும், 92 குடிசை பகுதிகளும் உள்ளடங்கியுள்ள இப்பகுதிகளில் மலேரியா, டெங்கு மற்றும் இதர தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பு நடவடிக்கை பணிகளான, மழைநீர் வடிகால்வாயில் கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணி, கால்வாயில் கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணி, வீடுகளில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் கொசுப்புழு கொல்லி மருந்து போடுதல், கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணிகள், எலிக்கொல்லி மருந்து வைக்கும் பணிகள் மேற்கொள்ள ஒரு பணியாளருக்கு ஒரு நாளைக்கு ரூ. 753/- வீதம் 114 தொழிலாளர்களை தற்காலிகமாக அண்டை வீட்டு குழு (SHG) திட்டத்தின் மூலம் 01.04.2025 முதல் 31.03.2026 வரை ஓராண்டிற்கு தற்காலிகமாக பணியமர்த்த மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது.

மேற்படி வழங்கப்பட்ட ஆணை 31.03.2026 அன்றுடன் முடிவடைவதால், இப்பணிக்கு 109 முதல் 126 வரையிலான கோட்டங்களில் உள்ள 500 வீடுகள் 1 செக்டார் பணியாளர் என கணக்கிட்டு 1 செக்டாருக்கு 1 பணியாளர் என 160 செக்டார்களுக்கு 160 பணியாளர்கள் வீடுகளில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் கொசு கொல்லி மருந்து இடும் பணிகளுக்காகவும், sector worker 160 , கொசு கொல்லி புகை பரப்பும் பணிகள் மேற்கொள்ள கோட்டம், வாரியாக தலா 1 பணியாளர் என 18 கோட்டங்களுக்கு 18 பணியாளர்களும், கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணிகளுக்காக 23 பணியாளர்களும், மழைநீர்வடிகால்வாயில் கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணிகளுக்காக 36 பணியாளர்களும், கால்வாயில் கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணிகளுக்காக 22 பணியாளர்களும், இதர பணிகளுக்காக 5 பணியாளர்களும் என கணக்கிட்டு மொத்தம் 264 பணியாளர்கள் தேவைப்படும் சுகாதாரப் பணியாளர்களின் தேவை குறித்த அட்டவணை கீழ்கண்டவாறு.

S.NO	DN	NO OF SETOR WORKERS	FOGGING WORKERS	NO OF SPRAY WORKERS	NO.OF SWD WORKERS	NO OF CANAL WORKERS	TOTAL WORKERS
1	109	9	1	1	2	0	13
2	110	8	1	1	3	2	15
3	111	8	1	1	7	2	19
4	112	7	1	1	1	0	10
5	113	11	1	1	1	0	14
6	114	7	1	1	2	1	12
7	115	7	1	1	2	0	11
8	116	9	1	2	3	0	15

9	117	8	1	1	2	8	20
10	118	9	1	1	1	0	12
11	119	8	1	1	1	0	11
12	120	8	1	1	2	2	14
13	121	7	1	1	1	2	12
14	122	10	1	1	2	0	14
15	123	14	1	2	1	1	19
16	124	11	1	2	1	4	19
17	125	12	1	2	2	0	17
18	126	7	1	2	2	0	12
TOTAL WORKERS		160	18	23	36	22	259
19	WATER WAYS , VM FOGG AND DATA ENTRY OPERATORS						05
GRAND TOTAL							264

மண்டலம்-9க்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரத்துறையில் பணிபுரிய *264* பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இவர்களில் *150* நிரந்தர பணியாளர்கள் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். எனவே, மண்டலம்-*9* பொது சுகாதாரத்துறையில் பணிபுரிய தேவைப்படும் *264* சுகாதாரப் பணியாளர்களில் *150* நிரந்தர பணியாளர்கள் போக மீதம் *114* சுகாதாரப் பணியாளர்கள் அண்டை வீட்டு குழு *(SHG)* கீழ் பொதுமக்களின் நலன் கருதி *01.04.2026* முதல் *31.03.2027* வரை மேலும் ஒருவருட காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்த அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துறை சுற்றறிக்கையின் படி நபர் ஒன்றுக்கு குறைந்த பட்ச தினசரி ஊதியம் ரூ.761/-வீதம் ஒரு வருட காலத்திற்கு 365 நாட்கள் (365X 114 X 761) ரூ.3,16,65,210/-என்ற மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும்,
2. 114 தற்காலிக சுகாதார பணியாளர்களை 01.04.2026 முதல் 31.03.2027 வரை 1 வருட காலத்திற்கு (365 நாட்கள்) அண்டை வீட்டு குழு (SHG) மூலம் பணியமர்த்தி பணி மேற்கொள்ளவும் ஒப்பந்த புள்ளி நடைமுறையில் இருந்து விலக்கு அளிக்கவும்,
3. ஒரு வருடகாலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்த கீழ்காணும் இனங்களில் கூடுதலாக மேற்கண்ட சுய உதவி குழு (SHG) பணியாளர்களின் ஊதியம் சென்னை

மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதி ஆண்டுகளில் உயர்த்தி வழங்கும் பொழுது அதனடிப்படையில் தினக்கூலியினை உயர்த்தி வழங்கவும்,

4. இப்பணிக்கு தேவையான நிதி ரூ.3,16,65,210/- (114 workers x per day Rs.761x365days) 30-32-02/210-100-602 என்ற கணக்கு தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.036/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.84/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.14.பொ.சு.து.ந.க.எண்.எச்2/00463/2026

தீர்மான எண்: 194/2026 **பொருள் எண்.74**

பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம்-14 -பகுதி-41, 42, மற்றும் 43-கோட்டம்-181 முதல் 191 வரை தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட 181 சுய உதவி குழுக்களின் உறுப்பினர்களின் பணிக்காலம் 31.03.2026 அன்றுடன் முடிவடைவது-மீண்டும் 01.04.2026 முதல் 31.03.2027 வரை ஒரு வருட காலத்திற்கு 181 தற்காலிக பணியாளர்களை சுய உதவி குழுக்களின் மூலம் பணியமர்த்தி பணி மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-*14* (பெருங்குடி), பகுதி-*41*, *42*, மற்றும் *43*, கோட்டம்-*181* முதல் *191* வரை *11* கோட்டங்களை உள்ளடக்கிய பகுதிகளில் 181 தற்காலிக சுய உதவி குழுக்களின் தற்காலிக பணியாளர்களை மற்றும் 23 நிரந்தர பணியாளர்கள் மொத்தம் 204 பணியாளர்களை கொண்டு கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் புதிதாக வரையறுக்கப்பட்டுள்ளபடி, இந்த மண்டலம் தோராயமாக *62,939* வீடுகளும், சுமார் *3.86* இலட்சம் மக்கள் தொகையும் கொண்ட பகுதியாகும். மேலும், பக்கிங்காம் கால்வாய், வீராங்கல் ஓடை, ஆகிய நீர்வழிப்பாதைகள் செல்கின்றன மற்றும் *178.27*கி.மீ நீளம் கொண்ட மழைநீர் வடிகால் பக்க கால்வாய் மற்றும் 30 நீர்நிலைகள் கொண்ட வளர்ந்து வரும் பகுதியாகும். இதில் பணிபுரியும் *181* தற்காலிக சுய உதவி குழு பணியாளர்களின் பணிக்காலம் *31.03.2026* அன்றுடன் முடிவடைகிறது.

- மண்டலம்-*14*, *34.74* சதுர கி.மீ பரப்பளவு கொண்ட பகுதியாகும். கடந்த ஆண்டு *62,939* வீடுகளுக்கு *123* செக்டார் பணியாளர்களை நியமித்து, பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

- மண்டலம்-*14* புறநகர் பகுதியாக உள்ளதால் பாதாள சாக்கடை திட்டம் இல்லாத காரணத்தால் அனைத்து வீடுகளிலும் கழிவு நீர் தொட்டி அமைத்தும், வீடுகளில் ஏற்படும் மற்ற கழிவு நீரை பக்க கால்வாய் வழியாக வெளியேற்றியும் வருகின்றனர். மேலும், பள்ளிக்கரணை சதுப்பு நில பகுதியை ஒட்டி அமைந்துள்ளதால் தண்ணீர் செல்லும் பாதைகளில் அடிக்கடி ஆகாய தாமரை வளர்வதால் அதை அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. புறநகர் பகுதி என்பதால் இந்த மண்டலத்தில் *30* நீர் நிலைகளான ஏரி மற்றும் குளம் அமைந்துள்ளது. இதில் வளரும் ஆகாய தாமரை மற்ற செடிகள் தொடர்ந்து முறையாக அகற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மேலும், *2800* காலிமனை உள்ளது. இதில் நீர், குப்பை அதிகளவு தேங்கியுள்ளது. அதை அகற்றி கொசு மருந்து அடிக்க தேவையான ஆட்கள் பற்றாக்குறையாக உள்ளது.

- ஏற்கனவே, *178* கி.மீ அளவு மழைநீர் வடிகால், பக்ககால்வாய் கெனால் உள்ள காரணத்தால் *57* தற்காலிக சுய உதவி குழுக்களின் பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இம்மண்டலத்தில் வசிக்கும் பொதுமக்களின் நலன் கருதி செக்டார் பணி, மழைநீர் வடிகால் மற்றும் கால்வாய் நீர் நிலைகளை சுத்தம் செய்ய மொத்தம் *181* தற்காலிக சுய உதவி குழுக்களின் பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

S. NO	NEW DIV	TOTAL HOUSES	TOTAL SECTOR (500 Houses 1 labour)	FOGGING WORK	SWD CLOSE / OPEN DRAIN LENGTH (OLD) (KMS)	TOTAL NO OF SWD / SIDE DRAIN WORKERS 3 KM/1 LABOUR	CANAL/ RIVER WORK	VEHICLE MOUNTED FOGGING	TOTAL AVAILABLE		
									TOTAL WORKERS	NULM WORKERS	PERMANENT WORKERS
1	181	4244	12	1	9.392	5	0	1	19	18	1
2	182	6254	11	1	25.916	6	0	0	18	16	2
3	183	4174	9	1	13.875	6	0	0	16	14	2
4	184	9650	17	1	19.912	4	0	0	22	18	4
5	185	3239	7	1	24.553	10	4	0	22	20	2
6	186	5728	10	1	23.147	4	1	0	16	13	3
7	187	2425	5	1	7.769	4	0	0	10	9	1
8	188	9204	16	1	33.012	10	2	0	29	26	3
9	189	6012	12	1	5.927	4	2	0	19	16	3
10	190	5885	12	1	1.255	2	1	0	16	15	1
11	191	6124	12	1	13.518	2	1	1	17	16	1
Total		62939	123	11	178.276	57	11	2	204	181	23

எனவே, மேற்கண்ட அட்டவணைப்படி,

- மண்டலம்-*14*, கோட்டம்-*181* முதல் *191* வரை *123* பணியாளர்களை கொண்டே வாரந்தோறும் அனைத்து வீடுகளுக்கும் பணி செய்ய தேவைப்படுகிறது.
- கை புகைப்பரப்பும் இயந்திரம் இயக்க *11* நபர்களும், வாகனம் மூலம் புகைப்பரப்பும் பணிக்கு *2* நபர்களும் தேவைப்படுகிறது.
- மண்டலம்-*14*ல் உள்ள *178.276* கி.மீ பக்க கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால்வாய்களில் குப்பைகளை அகற்றி, கைத்தெளிப்பான் மருந்து அடிக்க *57* நபர்கள் தேவைப்படுகிறார்கள்.
- மண்டலம்-*14*ல் உள்ள *B Canal*, வீராங்கல் ஓடை, பள்ளிக்கரணை சதுப்புநிலம் ஆகிய நீர்வழிப் பாதைகளில் ஆகாயத் தாமரையை அகற்றி கொசு மருந்து தெளிக்க *11* நபர்கள் தேவைப்படுகிறார்கள்.

- மேற்கண்ட அனைத்து சுகாதார பணியாளர்களை கொண்டு மேற்கண்ட பணிகளோடு அனைத்து சுகாதார பணிகளையும் மேற்கொள்ள தேவைப்படுகிறார்கள்.

மண்டலம்-14, கோட்டம்-181 முதல் 191 வரை 181 சுய உதவி குழுக்களின் தற்காலிக பணியாளர்களை பணியமர்த்தி நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்து சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த பணியானது வரும் 31.03.2026 அன்று முடிவடைகிறது. மீண்டும் ஒரு வருட காலத்திற்கு (365 நாட்கள்) 181 தற்காலிக சுய உதவி குழுக்களின் உறுப்பினர்களை நியமனம் செய்து கொசு ஒழிப்பு மற்றும் நோய்த் தடுப்பு பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

அ)	மண்டலம்-14, மொத்தம் 181 நபர்களை சுய உதவிகுழுக்கள் மூலம் பணியமர்த்தி கொசு ஒழிப்பு மற்றும் நோய்த் தடுப்பு பணிகளை மேற்கொள்ள அனுமதி வேண்டியும்,
ஆ)	மண்டலம்-14, பகுதி-41, 42, மற்றும் 43, கோட்டம்-181 முதல் 191 வரை 181 தற்காலிக சுய உதவி குழுக்களின் பணியாளர்களை ஒரு வருட காலத்திற்கு (01.04.2025 முதல் 31.03.2026 வரை) பணியமர்த்தி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,
இ)	மேற்கண்ட 181 தற்காலிக சுய உதவி குழுக்களின் பணியாளர்களுக்கு தி.க.மே.து.ந.க.எண்.அ3/5150/2025, நாள்.05.12.2025ன்படி, நபர் ஒன்றுக்கு நாளொன்றிக்கு ஊதியம் ரூ.761/- வீதம் (181 நபர்கள் x 365 நாட்கள் x ரூ.761/-) ரூ.5,02,75,465/- (ரூபாய் ஐந்து கோடியே இரண்டு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரத்து நானூற்று அறுபத்தி ஐந்து மட்டும்) ஊதியம் வழங்கும் செலவீனம் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதியும்,
ஈ)	மேற்படி செலவீனத்திற்கு பிரிவு குறியீட்டு எண்.30-32-02. கணக்கு தலைப்பு எண்.210-10-06-02 (Payment to Casual Health Works) என்ற கணக்கு தலைப்பில் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து ஊதியம் வழங்க அனுமதியும்,
உ)	சுய உதவி குழுக்களின் தற்காலிக பணியாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட வட்டார துணை ஆணையர்(தெ) மூலம் சம்மந்தப்பட்ட உறுப்பினரை குழுவிலிருந்து நீக்கம் செய்வதற்கும், அதற்கு

	பதிலாக புதிய நபரை பணியில் சேர்த்துக் கொள்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட அ முதல் உ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.029/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண். 82/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.15.பொ.சு.து.ந.க.எண்.எச்.2/005/2026

தீர்மான எண்: 195/2026 **பொருள் எண்.75**

பெருநகர சென்னை மாநகராட்சி- பொது சுகாதாரத்துறை- மண்டலம்-15-பகுதி 44 மற்றும் 45-கோட்டம் 192 முதல் 200 வரை- கொசு ஒழிப்பு மற்றும் சுகாதாரப் பணியினை மேற்கொள்ள சுய

உதவிக்குழு வழியாக பணியமர்த்தப்பட்ட 160 தற்காலிக சுகாதாரக் களப்பணியாளர்களின் பணிக்காலம் 01.04.2026 அன்றுடன் முடிவடைகிறது - 03.04.2026 முதல் 02.042027 வரை ஒரு வருட காலத்திற்கு சுய உதவிக்குழு வழியாக 160 தற்காலிக சுகாதாரக் களப்பணியாளர்களை பணியில் அமர்த்தி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-15, சோழிங்கநல்லூர் பகுதியானது 192 முதல் 200 வரையிலான 9 கோட்டங்களை உள்ளடக்கியது. இதில் தோராயமாக 2,492 சாலைகள்/ தெருக்களும், 84,639 வீடுகளும், 1,16,509 குடியிருப்புகளும் சுமார் 3.37 இலட்சம் மக்கள் தொகையும் கொண்ட பகுதியாகும். மண்டலம்-15-ல் 90 பூங்காக்கள், 139 அரசு அலுவலக கட்டிடங்கள், 82 அரசு மற்றும் தனியார் பள்ளிகள், 181 வழிபாட்டுத்தலங்கள், 352 புதிய கட்டிடங்கள் மற்றும் 17 அம்மா உணவகங்கள் உள்ளன. மேலும், பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் ஒக்கியம் மடு ஆகிய நீர்வழிப்பாதைகளில் உருவாகும் ஆகாயத்தாமரைகளை அகற்றி தடையற்ற நீரோட்டத்தை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடுகள் ஏற்படாமல் இருக்க மற்றும் கொசு உற்பத்தியாகாமல் தடுக்கவும், மேலும், 103.14 கி.மீ நீளம் கொண்ட மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் பக்கவாட்டு கால்வாய்களில் உருவாகும் கொசு உற்பத்தியை தடுக்க சிறிய புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொது சுகாதாரத்துறையில் நோய்கள் தடுப்பு பணிகளான மழை நீர் தேங்கும் வகையில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றுதல், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யும் பணிகள், பருவமழை காலங்களில் கொசு உற்பத்தி தடுக்கும் பணிகளான மருந்து தெளித்தல், புகைப்பரப்பும் பணிகள் மேற்கொள்வது அவசியமாகிறது. மேலும், பேரிடர் காலங்களில் அனைத்து பொது சுகாதார பணியினை மேற்கொள்ளுதல் போன்ற எண்ணற்ற பொது சுகாதாரத்துறையைச் சார்ந்த அனைத்து பணிகளையும் மேற்கொள்ள தற்காலிக சுகாதாரப் பணியாளர்களை பணியில் அமர்த்துவது மிகவும் அவசியமாகும்.

மன்றத் தீர்மான எண்.471/2025, நாள்.30.04.2025-ன்படி, மண்டலம்-15, பொது சுகாதாரத்துறை, கோட்டம்- 192 முதல் 200 வரை கொசு ஒழிப்பு மற்றும் சுகாதாரப் பணியினை மேற்கொள்ள சுய உதவிக்குழு வழியாக 159 தற்காலிக சுகாதாரக் களப்பணியாளர்களை 02.04.2025 முதல் 01.04.2026 வரை ஓராண்டு காலத்திற்கு பணியமர்த்தி பணி மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

Honourable High Court Contempt Petition No.3810 of 2024 in W.M.P No.31563 of 2022 ன் 13.11.2022 நாளிட்ட தீர்ப்பாணையின்படியும், இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 12.09.2025

நாளிட்ட கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளபடியும், ஆணையர் அவர்களின், 18.11.2025 நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டு, மண்டலம்- 15, கோட்டம் – 194-ல் திரு.கிருஷ்ணகுமார் என்பவரை வைரம் குழுவில் உறுப்பினராக 17.09.2025 முதல் பணியில் சேர்க்கவும், கோட்டம்- 198-ல் பணிபுரியும் ஒரு பணியாளர் நீண்ட காலமாக பணிக்கு வராததால் அவரது காலிப்பணியிடத்தில் கோட்டம் 198-ல் திரு.தென்னவன் என்பவரை நீலம் குழுவில் உறுப்பினராக 17.09.2025 முதல் பணியில் சேர்த்து பணிபுரிந்து வருகின்றனர்.

மண்டலம்- 15-ல் பணிபுரிந்து வரும் 160 தற்காலிக சுகாதார களப்பணியாளர்களில் எவரும் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் இல்லை எனவும் அப்பணியாளர்கள் பணிபுரியும் விவரம் கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

வ. எண்	கோட்டம்	குழு எண் / பெயர்	பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை
1	192	15-192-001-PAVALAM	18
2	193	15-193-002-MUTHU	18
3	194	15-194-006-VAIRAM	23
4	195	15-195-003-KOMATHAGAM	16
5	196	15-196-004-MARAGATHAM	19
6	197	15-197-009-MANICKAM	16
7	198	15-198-007-NEELAM	17
8	199	15-199- PUTPARAGAM	14
9	200	15-200-010-VAIDURIAM	19
மொத்தம்			160

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின், சுற்றறிக்கை எண். தி.க.மே.து.ந.க.எண்.அ3/5150/2025, நாள்.05.12.2025-ன்படி அண்டை வீட்டு குழுவின் வழியாக மண்டலங்களில் பணியமர்த்தப்பட்டுள்ள தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு தொழிலாளர் ஆணையர் அவர்களின் 26.08.2025 நாளிட்ட கடிதத்தின்படி, தொழிலாளர்களுக்கான தினக்கூலியாக ரூ.500/- மற்றும் திருத்திய அகவிலைப்படி ரூ.261/- சேர்த்து ரூ.761/-ஐ 01.04.2025 முதல் உயர்த்தி வழங்க மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு நடைமுறைப்படுத்த ஆணை பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதனைத் தொடர்ந்து ரூ.761/-ஐ தினக்கூலியாக வழங்க உதவி ஆணையர்

(முதுநிலை)/ம- 15 அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு மண்டலம்- 15-ல் சுய உதவிக்குழுக்கள் மூலம் பணிபுரியும் பணியாளர்களுக்கு தினக்கூலியாக வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, மண்டலம்-15 வார்டு குழு தீர்மானத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு 03.04.2026 முதல் 02.04.2027 வரை ஓராண்டு காலத்திற்கு சுய உதவிக்குழுக்கள் மூலமாக 160 தற்காலிக சுகாதார களப்பணியாளர்களை பணியில் அமர்த்த அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

அ)	மண்டலம்-15, பகுதி 44 மற்றும் 45-க்குட்பட்ட கோட்டங்களான 192 முதல் 200 வரையிலான 9 கோட்டங்களிலும் கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு பணிக்காக நாளொன்றிற்கு ரூ.761/- வீதம் சுய உதவிக்குழு மூலம் 160 தற்காலிக மலேரியா பணியாளர்களை 03.04.2026 முதல் 02.04.2027 வரை பணியில் ஈடுபடுத்திக் கொள்ளவும்,
ஆ)	இப்பணிக்கான செலவினம் 160 x 365 x 761 = 4,44,42,400/- (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்து நான்கு இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து நானூறு மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,
இ)	இப்பணிக்கான செலவினத்தை பிரிவு குறியீடு 30-32-04 மற்றும் கணக்கு குறியீடு 210-10-06-02 (payment to casual health works) என்ற தலைப்பில் பட்டியை தீர்வு செய்யவும்,
ஈ)	ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் சுற்றறிக்கை எண். தி.க.மே.து.ந.க.எண்.அ3/5150/2025, நாள்.05.12.2025-ன்படி, ரூ.761/- வழங்குவதற்கும் 2026 - 2027 ஆம் நிதியாண்டில் இத்தொகை உயர்த்தப்படும் பட்சத்தில் உயர்த்தப்பட்ட தினக்கூலியை அப்பணியாளர்களுக்கு வழங்குவதற்கு அனுமதியும், இதற்குரிய கூடுதல் தொகையினை மேற்கண்ட "இ" இனத்தில் குறிப்பிட்டுள்ள கணக்கு குறியீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யவும்,
உ)	இப்பணிக்கு ஒப்பம் கோருவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கையில் இருந்து விலக்கு அளிக்கவும் ,

மேற்கண்ட அ முதல் உ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம் மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.030/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.83/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ந.து.ந.க.எண்.D1/LA/SD/WDCN03/00076/2026

தீர்மான எண்: 196/2026 **பொருள் எண்.76**

தானப்பத்திரம்

மண்டலம்-03, கோட்டம்-25ல் (1) M/s. VR Livin Ventures LlP represented by its Designated Partners Mr.Vimal Kummar Jain and & Mr. D. Rupesh Jain (2) Mr.D.Rakesh Jain (3) Mrs.Neeta Jain represented by their Power of Attorney VR Livin Ventures LLP represented by its Designated Partners Mr.Vimal Kummar Jain Mr.D.Rupesh Jain அவர்கள் T.S.No.102/9, 102/10 & 102/11, 102/12, Block No.23, Ward - B of Madhavaram Village, Madhavaram Talukல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN03/00076/2026, நாள்:07.02.2026ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்: 09.12.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் (1) M/s. VR Livin Ventures LlP represented by its Designated Partners Mr.Vimal Kummar Jain and & Mr.D.Rupesh Jain (2) Mr. D. Rakesh Jain (3)Mrs.Neeta Jain represented by their Power of Attorney VR Livin Ventures LLP represented by its Designated Partners Mr.Vimal Kummar Jain Mr.D.Rupesh Jain என்பவர்கள் மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

(அ) மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் சாலைக்கென 673.80ச.மீ நிலம், TANGEDCOவிற்கு 19.20ச.மீ நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 19.20ச.மீ நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) (1) M/s. VR Livin Ventures LlP represented by its Designated Partners Mr.Vimal Kummar Jain and & Mr.D.Rupesh Jain (2) Mr.D. Rakesh Jain (3) Mrs.Neeta Jain represented by their Power of Attorney VR Livin Ventures LLP represented by its Designated Partners Mr.Vimal Kummar Jain Mr.D.Rupesh Jain என்பவர்கள் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், மாதவரம் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ) விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 6.00மீ & 7.20மீ

அகல சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 220.00ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் உள்ள விதிகளின்படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCOவிற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். (1) M/s. VR Livin Ventures LlP represented by its Designated Partners Mr. Vimal Kummar Jain and & Mr. D. Rupesh Jain (2)Mr.D.Rakesh Jain (3) Mrs. Neeta Jain represented by their Power of Attorney VR Livin Ventures LLP represented by its Designated Partners Mr.Vimal Kummar Jain Mr.D. Rupesh Jain அவர்கள் அதற்கேற்றவாறு 19.20ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்கள். மேலும் 19.20ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCOவிற்கு ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ன்படி 10,000ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகையாகவோ செலுத்தலாம். மனைப்பிரிவு 10,000சதுர மீட்டருக்குள் இருப்பதால் விண்ணப்பதாரர்கள் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு ஈடாக தொகையை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(ஊ) மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர்கள் (1) M/s. VR Livin Ventures LlP represented by its Designated Partners Mr.Vimal Kummar Jain and & Mr.D.Rupesh Jain (2) Mr.D.Rakesh Jain (3) Mrs.Neeta Jain represented by their Power of Attorney VR Livin Ventures LLP represented by its Designated Partners Mr. Vimal Kummar Jain Mr. D. Rupesh Jain என்பவர்கள் அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவர்களாக கருதுவதாலும் சாலைக்கான 673.80சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 19.20சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(எ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department dated16.07.2022ன்படி, சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தியாளர்களே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், அபிவிருத்தியாளர்கள் தாங்களே சாலை மற்றும் தெரு விளக்கு அமைக்க கேட்டுக் கொண்டார்கள்.

(ஏ) அபிவிருத்தியாளர்கள் தங்களின் கடிதத்தில், மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் தாங்களே செய்து கொள்வதாக தெரிவித்துள்ளார்கள்.

(ஐ) **எனவே** (1) M/s. VR Livin Ventures LlP represented by its Designated Partners Mr.Vimal Kummar Jain and & Mr.D.Rupesh Jain (2) Mr. D. Rakesh Jain (3) Mrs. Neeta Jain represented by their Power of Attorney VR Livin Ventures LLP represented by its Designated Partners Mr.Vimal Kummar Jain Mr.D.Rupesh Jain **ஆகியோர்களிடமிருந்து தானப்பத்திரத்தில் உள்ளவாறு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.**

எனவே,

(1) T.S.No.102/9, 102/10 & 102/11, 102/12, Block No.23, Ward - B of Madhavaram Village, Madhavaram Taluk, Division - 25, Zone - 03**ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான** 673.80**சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான** 19.20**சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை (**1) M/s. VR Livin Ventures LlP represented by its Designated Partners Mr. Vimal Kummar Jain and & Mr. D. Rupesh Jain (2) Mr. D. Rakesh Jain (3)Mrs.Neeta Jain represented by their Power of Attorney VR Livin Ventures LLP represented by its Designated Partners Mr. Vimal Kummar Jain Mr. D. Rupesh Jain **ஆகியோர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,**

(2) **மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலத்தில் மனை உரிமையாளர்கள் / அபிவிருத்தியாளர்கள் உள்கட்டமைப்புகளான சாலை, வடிகால் மற்றும் தெருவிளக்கு ஆகியவற்றை தரநிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டவுடன் அவற்றை எடுத்துக் கொள்வதற்கும்.**

மேற்கண்ட 1 **மற்றும்** 2 **ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

> "ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 19.02.2026 அன்று தீர்மான எண்.31/2026ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."
****

ந.து.நக.எண்.D1/LA/SD/WDCN03/0078/2026

தீர்மான எண்: 197/2026 **பொருள் எண்.77**

தானப்பத்திரம்

மண்டலம்-03, கோட்டம்-30ல் (1) M/s.Stepsstone Promoters Private Limited, represented by its Managing Director Mr.K.Mothish Kumar (2) M/s.Smart Ideal Infra LLP represented by its Designated Partner Mr.K.Sharfudeen அவர்கள் Sastri Nagar Annex, Madhavaram, Chennai - 600110 comprised in Old S.No.1361/1 Part, 1364/1B Part, 1365/1A Part, As per patta T.S.No.50, Block No.50, Ward - D of Madhavaram Village, Madhavaram Talukல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN03/0078/2026, நாள்:09.02.2026ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்:09.12.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் (1) M/s. Stepsstone Promoters Private Limited, represented by its Managing Director Mr. K. Mothish Kumar (2) M/s. Smart Ideal Infra LLP represented by its Designated Partner Mr.K.Sharfudeen என்பவர்கள் மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

(அ) மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, நிலத்தின் மொத்தப் பரப்பளவு 8367.35 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 2127.00ச.மீ நிலம், TANGEDCOவிற்கு 34.82ச.மீ நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 38.38ச.மீ நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) (1) M/s. Stepsstone Promoters Private Limited, represented by its Managing Director Mr. K. Mothish Kumar (2) M/s. Smart Ideal Infra LLP represented by its Designated Partner Mr.K.Sharfudeen என்பவர்கள் மனையினை அபிவிருத்தி செய்ய

உரிமையுள்ளவர்களாக அறியப்படுகிறார்கள். மனை உரிமையாளர்கள் பட்டாவினை, வட்டாட்சியர், மாதவரம் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ) விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 7.20மீ அகல சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCOவிற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். (1) M/s. Stepsstone Promoters Private Limited, represented by its Managing Director Mr. K. Mothish Kumar (2) M/s. Smart Ideal Infra LLP represented by its Designated Partner Mr. K. Sharfudeen என்பவர்கள் அதற்கேற்றவாறு 38.38ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்கள். மேலும் 34.82ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCO விற்கு ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ன்படி 10,000ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகையாகவோ செலுத்தலாம். மனைப்பிரிவு 10,000சதுர மீட்டருக்குள் இருப்பதால் விண்ணப்பதாரர்கள் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு ஈடாக தொகையை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(ஊ) மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர்கள் (1) M/s. Stepsstone Promoters Private Limited, represented by its Managing Director Mr. K. Mothish Kumar (2) M/s.Smart Ideal Infra LLP represented by its Designated Partner Mr.K.Sharfudeen என்பவர்கள் அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவர்களாக கருதுவதாலும் சாலைக்கான 2127.00சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 38.38சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(எ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department dated16.07.2022ன்படி, சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தியாளர்களே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், அபிவிருத்தியாளர்கள் தாங்களே சாலை மற்றும் தெரு விளக்கு அமைக்க கேட்டுக் கொண்டார்கள்.

(ஐ) **எனவே** (1) M/s. Stepsstone Promoters Private Limited, represented by its Managing Director Mr.K.Mothish Kumar (2) M/s.Smart Ideal Infra LLP represented by its Designated Partner Mr.K.Sharfudeen **ஆகியோரிடம் இருந்து தானப்பத்திரத்தில் உள்ளவாறு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.**

எனவே,

(1) Sastri Nagar Annex, Madhavaram, Chennai - 600110 comprised in Old S.No.1361/1 Part, 1364/1B Part, 1365/1A Part, As per patta T.S.No.50, Block No.50, Ward - D of Madhavaram Village, Madhavaram Taluk, Division - 30, Zone-03ல் **அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான** 2127.00**சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான** 38.38 **சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை** (1) M/s. Stepsstone Promoters Private Limited, represented by its Managing Director Mr.K.Mothish Kumar (2) M/s.Smart Ideal Infra LLP represented by its Designated Partner Mr.K.Sharfudeen **ஆகியோரிடம் இருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,**

(2) **மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலத்தில் மனை உரிமையாளர் / அபிவிருத்தியாளர் உள்கட்டமைப்புகளான சாலை, வடிகால் மற்றும் தெருவிளக்கு ஆகியவற்றை தரநிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டவுடன் அவற்றை எடுத்துக் கொள்வதற்கும்,**

மேற்கண்ட 1 **மற்றும்** 2 **ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

"ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு)வின் கூட்டம் 16.02.2026 **அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு** 19.02.2026 **அன்று தீர்மான எண்.**32/2026**ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."**

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

பூ.து.நி.க.எண்.பி2/0774/2025

தீர்மான எண்: 198/2026 **பொருள் எண்.78**

பெருநகர சென்னை மாநகராட்சி - பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல் துறை - மண்டலம்-1 முதல் 15 வரையுள்ள 781 எண்ணிக்கையிலான பூங்காக்களை ஒரு வருட காலத்திற்கு பராமரிக்கும் பணிகளுக்கு ஏற்கனவே கோரப்பட்ட ஒப்பத்தினை நிராகரித்து உடன்படிக்கையினை இரத்து செய்வதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது - இப்பராமரிப்பு பணிகளை மேற்பார்வையிட திட்ட கலந்தாளுநர் திருவாளர் M/s. ITCOT Limited அவர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் அளிக்கப்பட்டு பணிகள் மேற்பார்வையிடப்பட்டது - 31.12.2025 முதல் இப்பணிகள் நிறுத்தப்பட்டது - தினக்கூலி அடிப்படையில் SHG தொழிலாளிகளை கொண்டு 781 எண்ணிக்கையிலான பூங்காக்களை பராமரிக்க அனுமதி பெறப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன - இப்பணிகளை மேற்பார்வையிட திட்ட கலந்தாளுநர் திருவாளர் M/s.ITCOT Limited அவர்கள் தொடர்ந்து திட்ட கலந்தாளுநர் பணி மேற்கொண்டு வருவதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம்-1 முதல் 15 வரை 781 எண்ணிக்கையிலான பூங்காக்களை ஒரு வருடத்திற்கு பராமரிக்க தனித்தனியாக திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பங்கள் கோருவதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது. ஆணையர் அவர்களின் 12.05.2025 நாளிட்ட அனுமதியில் (Request for Proposal) 22 சிப்பங்களாக ஒப்பங்கள் கோருவதற்கு அனுமதி பெறப்பட்டது. இவ்வனுமதியில், வடக்கு வட்டாரத்திற்கு 5 சிப்பங்களாகவும், மத்திய வட்டாரத்திற்கு 9 சிப்பங்களாகவும், தெற்கு வட்டாரத்திற்கு 8 சிப்பங்களாகவும் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பங்கள் கோரப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனங்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதங்கள் 05.07.2025 மற்றும் 01.09.2025 அன்று வழங்கப்பட்டது. அதன் விவரங்கள் கீழ்வருமாறு:

Package Nos	L1 Bidder	Work Order Date	Period of Contract
Package - 1	M.Mahesh - 4.50%	01.09.2025	08.09.2025 to 07.09.2026
Package – 2,14,15	Black cat Solution - 4.50%	01.09.2025	08.09.2025 to 07.09.2026
Package – 3,16,17	CISB(P) Ltd - 4.79 %	05.07.2025	15.07.2025 to 14.07.2026
Package – 4	MVK Murugan - 4.50%	01.09.2025	08.09.2025 to 07.09.2026
Package – 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13,18,19,20,21,22	Padmavathi Hospitality and Facilities Management Service - 2 %	05.07.2025	15.07.2025 to 14.07.2026

மேற்குறிப்பிட்ட *22* சிப்பங்களில் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு வரும் நிறுவனங்கள் ஒப்ப உடன்படிக்கையில் தெரிவித்துள்ளவாறு, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பூங்கா பணியாளர்களுக்கான ஊதியம் அந்தந்த பணியாளர்களின் வங்கி கணக்கில் மாதந்தோறும் *07*ஆம் தேதிக்குள் செலுத்தப்பட வேண்டுமெனவும், ஒப்பந்ததாரர் வங்கியில் செலுத்தியதற்கான அத்தாட்சி நகலையும், மற்றும் *ESI*, *EPF* இணைத்து செலவினப்பட்டிகளை மாதந்தோறும் *10* ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பராமரிப்பு பணிகளை மேற்பார்வையிட திட்ட மேலாண்மை கலந்தாளுநர் *(PMC) M/s. ITCOT Ltd.*, அவர்களுக்கு *22.09.2025* நாளிட்ட ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்பட்டது. இப்பராமரிப்பு பணிகளை மேற்கொண்டதற்கு ஒப்பந்ததாரர்கள் பகுதி செலவினப்பட்டிகளை வழங்க கோரி கடிதம் பெறப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, *M/s. ITCOT Ltd.*, அவர்களின் கடிதத்தின்படி, இப்பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களின் பகுதி செலவினப்பட்டிகளை ஆய்வு செய்ததில், ஒப்ப விதிகளின்படி இவ்வொப்பந்ததாரர்கள் பராமரிப்பு பணிகள் செய்யும் பூங்கா பணியாளர்கள்/ தொழிலாளர்களின் ஊதியம் சரியாக வழங்கப்படவில்லை என்பதும், அந்தந்த ஊழியர்களின் வங்கி கணக்கில் செலுத்தியுள்ள ஊதியம் ஒப்ப உடன்படிக்கையில் நிர்ணயம் செய்த ஊதியத்தை விட வேறுபாடு உள்ளதாக தெரிவித்துள்ளனர். மேலும், பூங்காக்களை ஆய்வு செய்ததில் சில இடங்களில் பராமரிப்பு பணிகள் சரியாக மேற்கொள்ளப்படாதது தெரிய வருகிறது. மேலும் இது குறித்து அக்டோபர் மாத மன்றக்கூட்டத்தில் பல வார்டு குழு உறுப்பினர்கள் மற்றும் மண்டல குழுத் தலைவர்கள் *(Zone*

Chairman) ஆகியோர் தெரிவித்தனர். ஆணையர் அவர்கள் மன்ற கூட்டத்தில் மேற்கண்ட ஒப்பந்ததாரர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதாகவும், பூங்கா பணியாளர்களுக்கு தகுந்த ஊதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

பணிகளின் *Scope of Works* மாற்றம் செய்ய ஒப்பந்ததாரர்களின் இசைவு தெரிவிக்க வேண்டி ஒப்பந்ததாரர்களுக்கு கடிதம் அனுப்ப *03.12.2025* நாளிட்ட ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

பணிகளின் *Scope of Works* மாற்றம் செய்ய ஒப்பந்ததாரர்கள் விருப்பமின்மை தெரிவித்து *09.12.2025* நாளிட்ட கடிதங்கள் பெறப்பட்டது.

மண்டலம்-*1* முதல் *15* வரையில் உள்ள *781* எண்ணிக்கையிலான பூங்காக்களில் ஒரு வருட காலத்திற்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்பட்டு தற்போது நடைபெற்று வரும் பராமரிப்பு பணிகளை *(சிப்பங்கள் 1* முதல் *22* வரை*) 19.12.2025* நாளிட்ட மன்றத்தீர்மான எண்.*1263/2025*ன்படி நிறுத்தம் செய்ய நிலைக்குழு *(*கல்வி, பூங்கா *(*ம*)* விளையாட்டு திடல*)* மூலமாக மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, இப்பராமரிப்பு பணிகளை *31.12.2025* அன்றுடன் நிறுத்தம் செய்து, அந்தந்த மண்டல *AE/JE* வசம் பூங்காக்களை ஒப்படைப்பு செய்யுமாறு தெரிவித்து, ஒப்பந்ததாரர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

மன்றத்தீர்மான எண்.*53/2026*, நாள்.*30.01.2026*ன்படி, பொது மக்களின் நலன் கருதி மண்டலம்-*1* முதல் *15* வரையில் உள்ள *781* எண்ணிக்கையிலான பூங்காக்களை ஆறு மாதக் காலத்திற்கு பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ள தினக்கூலி பணியாளர்களை பணியமர்த்தி இப்பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே, தினக்கூலி பணியாளர்களை கொண்டு மண்டலம்-*1* முதல் *15* வரையில் உள்ள *781* எண்ணிக்கையிலான பூங்காக்களை நடைபெற்று வரும் பராமரிக்கும் பணிகளை மேற்பார்வையிட திட்ட மேலாண்மை கலந்தாளுநர் *(PMC) M/s. ITCOT Ltd.*, அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்ப ஏற்பு கடிதத்தின் அடிப்படையில் இப்பராமரிப்பு பணிகளை தொடர்ந்து *01.01.2026* முதல் *01.09.2026* வரை பணி அமர்த்தப்பட்டுள்ளது.

எனவே,

1. தினக்கூலி பணியாளர்களை கொண்டு மண்டலம் -1 முதல் 15 வரையில் உள்ள 781 எண்ணிக்கையிலான பூங்காக்களை நடைபெற்று வரும் பராமரிக்கும் பணிகளை மேற்பார்வையிட திட்ட மேலாண்மை கலந்தாளுநர் (PMC) M/s. ITCOT Ltd., அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்ப ஏற்பு கடிதத்தின் அடிப்படையில் இப்பராமரிப்பு பணிகளை தொடர்ந்து 01.01.2026 முதல் 01.09.2026 வரை பணி அமர்த்தப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்,
2. திட்ட மேலாண்மை கலந்தாளுநர் (PMC) M/s. ITCOT Ltd., அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்ப ஏற்பு கடிதத்தின் அடிப்படையில் பட்டிகளை தீர்வு செய்ய அனுமதியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 09.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 17.02.2026 அன்று தீர்மான எண்.10/2026ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.91/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

இ.பொ.து.ம.வா.ப.ந.க.எண்.சி1/052/2026

தீர்மான எண்: 199/2026 **பொருள் எண்.79**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மத்திய சென்னை வாகன பணிமனை - மண்டலம்- 8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு 2025-26 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய - இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

சென்னை மாநகராட்சி, மன்றத் தீர்மானம் எண்.180/78, நாள்.26.02.78-ன்படி, சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரிப்பொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து

விலக்கு அளித்து, இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து 1978-79ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. அன்றைய கால கட்டத்தில், தென்சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கூர்தி நிலையம் (1 முதல் 10 வரை) அமைக்கப்பட்ட பின்னர், இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள், மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன, சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பின் 2013 முதல் தென் சென்னை, வடசென்னை மற்றும் மத்திய சென்னை என பிரிக்கப்பட்டன. பெருநகர சென்னை மாநகராட்சியாக உருவெடுத்தப்பிறகு, மத்திய வட்டாரமாக மண்டலம்-6 முதல் 10 வரை பிரித்து அளிக்கப்பட்டது.

இயந்திர பொறியியல் துறை, மத்திய சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கிவரும் மண்டலம்-6 முதல் 10 வரை உள்ள லாரி நிலையத்தில் அசோக்லைலேண்ட், சுவராஜ் மஸ்தா, டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறியவகை முன்பளு தூக்கிகள், முன்பளு தூக்கிகள், மின்துறை வாகனங்கள், பொகிலைன்கள், புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகுரக காம்பேக்டரகள் போன்ற வாகனங்கள் 256 எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும் மின்வெட்டின் காரணமாக மண்டலங்களில் உள்ள சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜென்ரேட்டர் ஆகியவற்றிற்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இறைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

அதன்படி, மொத்த கொள்முதல் விலை சந்தை விலைக்கு சமமாக குறையும் வரை மத்திய ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலையில் எரிபொருள் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் 16.05.2024 முதல் மொத்த கொள்முதல் விலை சந்தை விலையை காட்டிலும் குறைந்துள்ளதால், அன்றிலிருந்து மொத்த கொள்முதல் விலையில் நேரடியாக M/s. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் இடம் கொள்முதல் செய்யப்படுகிறது.

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து அல்லது அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து தேவையான டீசல் 1060 கிலோ லிட்டர் கொள்முதல் செய்ய ரூ.9,79,07,960/- (ரூபாய் ஒன்பது கோடியே எழுபத்து ஒன்பது இலட்சத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) ஆணை பெறப்பட்டது.

தற்போது வரை மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு வாங்கிய டீசல் பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு

2025-26	தொகை ரூ.	கிலோ லிட்டர்
2025-26 ஆம் ஆண்டிற்கு வரையப்பட்ட கூடுதல் நிர்வாக அனுமதி ஆணை	4,89,52,390.00	530
முன்கூட்டியே வரையப்பட்டது	99,75,096.00	108
இருப்பு	3,89,77,294.00	422

மேலே குறிப்பிட்ட அட்டவணையின்படி, இருப்பு மொத்தம் டீசல் (27.01.2026 நிலவரப்படி) 422KL கொள்முதல் செய்ய ரூ.3,89,77,294/- மட்டுமே உள்ளது. இவை வரவிருக்கும் நாட்களுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. இந்நிலையில், மண்டலம் 6 தனியார் மயமாக்கப்பட்டதால், அங்குள்ள டீசல் பங்க் அதற்கு சொந்தமான M/s. பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமே ஒப்படைக்கப்படவுள்ளது. இதனால் மண்டலம் 6 (துப்புரவு அல்லாத பணிகள்), மண்டலம் 7, 8, 9 மற்றும் 10 லாரி நிலையங்களுக்கு மண்டலம் 8 லாரி நிலைய பங்கிலேயே எரிபொருள் நிரப்பும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால் மீதம் இருக்கும் 2 மாதங்களுக்கு கையிருப்பு தொகை போதுமானதாக இல்லாத நிலை உள்ளது. மேலும், பருவமழை காலங்களில் நீர் இறைக்கும் பணிக்காக பணியமர்த்தப்பட்ட மோட்டார் பம்புகள், புதிதாக கொள்முதல் செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் மண்டலம் 6 முதல் 10க்குட்பட்ட மண்டலங்களின் அன்றாட பணிக்காக இயக்கப்படும் வாகனங்கள் என அனைத்து பணிகளுக்கும் டீசல் கூடுதலாக தேவைப்படுகிறது. எனவே மண்டலம் 8 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2025-26 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டப்படுகின்றது.

மண்டலம் 6 முதல் 10 க்குட்பட்ட லாரி நிலையங்களுக்கு 2 மாதத்திற்கு தேவைப்படும் டீசல் அளவு (A)	866 kl
தற்பொழுதுள்ள தொகை (Rs.)	3,89,77,294
மீதம் இருக்கும் தொகையில் (B) டீசல் அளவு	422 kl
கூடுதலாக தேவைப்படும் டீசல் அளவு (A - B)	444 kl

இயந்திர பொறியியல் துறை, மத்திய சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கி வரும், மண்டலம்-7, 8 லாரி நிலைய வாகனங்கள் மற்றும் மண்டலம் – 7 முதல் 10 வரைக்கு உட்பட்ட புகைபரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் சிறப்பு பிரத்யேக வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட்டு வருகின்றது.

நிறுவனங்களின் பெயர்	சேமிப்பு தொட்டியுள்ள இடம்	டீசல் விநியோகிக்கப்படும் மண்டலம்
இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்	மண்டலம் 8 லாரி நிலையம், எண்.5C, ப்ரூவரி சாலை, செனாய் நகர், சென்னை – 600 030	மண்டலம் – 6 முதல் 10 வரைக்கு உட்பட்ட புகைபரப்பும் வாகனம், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் சிறப்பு பிரத்யேக வாகனங்களுக்கும் (மாற்றங்களுக்கு உட்பட்டது)

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் எரிபொருள் கிடங்கை பராமரிக்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், டீசல் எரிபொருட்களின் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிறுவனத்தில் அளித்த விலைப்புள்ளிகள் கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நிறுவனம்	பொருள் விவரம்	1 KL க்கான தொகை (அனைத்து வரிகள் உட்பட)	மொத்த தேவை கிலோ லிட்டர் (2025-2026) ஆம் ஆண்டிற்கு
இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம்	டீசல்	ரூ.92,362/-	444
மொத்தம் தொகை (அனைத்து வரிகள் உட்பட)	444 கி.லி. x ரூ.92,362 = ரூ.4,10,08,728/- (ரூபாய் நான்கு கோடியே பத்து இலட்சத்து எட்டாயிரத்து எழுநூற்று இருபத்து எட்டு மட்டும்)		

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனை தெரிவித்துள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை வழங்கி வருவதால், இந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம்.

மேலும், மண்டலம் 8 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2025-2026ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய தோராயமாக, 444 கிலோ லிட்டர் டீசலை பெறுவதற்கு மொத்த தொகையான ரூ. 4,10,08,728/- (ரூபாய் நான்கு கோடியே பத்து இலட்சத்து எட்டாயிரத்து எழுநூற்று இருபத்து எட்டு மட்டும்) தேவைப்படுகின்றது. இச்செலவினம் 2025-26 ஆம் ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மத்திய வாகன பணிமனை 40-41-09 - கணக்கு எண்.230-20-03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும். மேலும், இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் என்பதால் பிணை வைப்புத்தொகை மற்றும் பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் எரி பொருள் கிடங்கு மூலம் தேவையான எரிபொருள், மேற்கண்ட மத்திய அரசு நிறுவனங்களிடமிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து அவர்கள் அளித்த விலைப்புள்ளிகளின்படி, அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலையில் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டீசல் கொள்முதல் செய்ய, 2001-02ஆம் ஆண்டிற்கு மன்றத் தீர்மான எண்.180/78, நாள்.26.02.1978 அனுமதியின்படி, அரசின் பின் ஏற்பிணை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண்.102 நாள்.07.08.2000, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்துகொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிடப்பட்டுள்ளது,

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத் தீர்மான எண். 486/01, நாள்.18.09.2001.-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி, நடப்பு நிதியாண்டில் 2025-26ஆம் ஆண்டிற்கு, மண்டலம் 8 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு தேவைப்படும் கூடுதல் டீசல் கொள்முதல் செய்திட மன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மத்திய வட்டாரம், இயந்திர பொறியியல் துறை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம்-6 முதல் 10 வரையிலான லாரி நிலையங்களின் வாகனங்கள், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் புகை பரப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு தேவைப்படும்

எரிபொருள் (டீசல்) மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்ப அனுமதியும்,

2. மத்திய சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்கிற்கு தேவையான எரிபொருள் 2025-26ஆம் ஆண்டிற்கு கூடுதல் 444 கிலோலிட்டர் டீசலை கொள்முதல் செய்வதற்கு மொத்த தொகையான ரூ.4,10,08,728/- (ரூபாய் நான்கு கோடியே பத்து இலட்சத்து எட்டாயிரத்து எழுநூற்று இருபத்து எட்டு மட்டும்) செலவீனத்தில் அல்லது கொள்முதல் செய்யும் போது நடைமுறையில் உள்ள விலைக்கு திருவாளர்கள். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து தேவைகேற்ப கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,

3. மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்கிற்கு தேவையான எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது மேற்பார்வை பொறியாளர் (மத்தியம்) அவர்களின் ஆணை பெற்று இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு RTGS மூலம் முன்பணமாக காசோலை செலுத்தி டீசல் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

4. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் இந்திய அரசு நிறுவனங்கள் என்பதால், அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்தும், பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

5. இந்திய அரசு நிறுவனங்கள் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் கோரியபடி, தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வப்போது RTGS மூலமாக அளிக்கவும்,

6. இதற்கான செலவீனத்தை 2025-2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மத்திய வாகன பணிமனை 40-41-09– கணக்கு எண். 230-20- 03-06 எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

7. ஒவ்வொரு ஆண்டும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசலை, இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ளலாம் என அரசு நிரந்தர ஆணை அளித்துள்ளதால், அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல்செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.038/2026 ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.92/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு(ம) நிதி) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

இ.பொ.நு.க.எண்.எம்1/2635/2025

தீர்மான எண்: 200/2026 **பொருள் எண்.80**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி - சாலைகள் மற்றும் மத்திய தடுப்புகளில் சேகரமாகும் மண் துகள்கள் மற்றும் தூசி ஆகியவற்றை தூய்மை படுத்தும் பணிக்கென வடக்கு மற்றும் மத்திய வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் கூடுதலாக கொள்முதல் செய்யப்பட்ட 20 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணம் (Sl. No. GCC – ROS – 021 to GCC – ROS – 040) - 2 ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்பட்டது - இவ்வொப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி அளித்த தகுதியான ஒப்பந்ததாரர் திருவாளர்கள். Ourland Engineering Works Pvt. Ltd., நிறுவனத்தின் மூலம் 20 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணங்களுக்கு (Ride on Sweeper) 2 ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, உட்புற சாலைகள், பிரதான சாலைகள் மற்றும் பேருந்து வழித்தடங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள், பேருந்து முனையங்கள் மற்றும் ரயில் நிலையங்களில் வளாகத்திற்கு வெளியே உள்ள பகுதிகள் போன்ற பொதுமக்கள் கூடும் பிற இடங்களின் தூய்மை பணிகளை பராமரித்து வருகிறது. இவற்றினை சாலையின் மத்திய தடுப்பு பணியில் ஈடுபடுத்தும் போது போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொது மக்களுக்கு இடையூறாக அமைகிறது. இதனை தவிர்க்கவும் உட்புற சாலைகளில் சேகரமாகும் தூசி மற்றும் மண் துகள்களை துரிதமாக அகற்றிட வழக்கமான முறையில் பணியாளர்களை பணியமர்த்தி பணி மேற்கொள்வதை தவிர்த்து இவ்வகை பணிகளை மேற்கொள்வதற்கான பிரத்யேகமாக தயாரிக்கப்படும் உபகரணங்களான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணங்கள் *(Ride on Sweeper vehicles)* கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டது.

மின்னணு ஒப்பம் கோரப்பட்டு, தகுதியான ஒப்பந்ததாரரான திருவாளர். *M/s. Roots Multiclean* நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு உட்புற சாலைகள் மற்றும் பேருந்து வழித்தட சாலைகளில் தூய்மை பணி மேற்கொள்ள *20* எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணங்கள் *(Ride on Sweeper vehicles - Sl. No. GCC – ROS – 021 to GCC – ROS – 040)* கொள்முதல் செய்யப்பட்டன. இவ்வாகனங்கள் பிரத்தியேகமான பணிக்கென தயாரிக்கப்படுவதால் இவ்வகை வாகனம் சிறப்பு வகையைச் சார்ந்தவை மற்றும் இவ்வாகனங்களின் உதிரி பாகங்கள் பிரத்தியேகமாக

தயாரிக்கப்படுகின்றன. மேலும் இவ்வாகனங்களின் உதிரி பாகங்கள் சந்தையில் கொள்முதல் செய்ய இயலாது.

இவ்வாகனங்களை சரியான கால இடைவேளையில் இயக்கிய மணி நேரத்திற்கேற்ப தேவையான உதிரி பாகங்களை மாற்றி பராமரிக்கப்பட வேண்டும். இதனால் உபகரணங்களின் பயன்பாடு முழுமையடைவதோடு இவ்வுபகரணங்களின் ஆயுட்காலம் நீடித்திருக்கும். இவ்வகை உபகரணங்கள் சிறப்பு தொழில்நுட்பம் வாய்ந்ததால் இவற்றினை இயக்கி பராமரிக்க மாநகராட்சியில் போதிய பணியாட்கள் இல்லாத காரணத்தினால் இப்பணியினை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்வது அவசியமாகிறது.

மேலும் இவ்வகை இயந்திரங்கள் சிறப்பு பயன்பாட்டிற்காக தயாரிக்கப்படுவதுடன் உயரிய தொழில்நுட்பம் வாய்ந்ததால் இவ்வியந்திரங்களை உற்பத்தியாளரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் மட்டுமே பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இவ்வியந்திரங்கள் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள ஆண்டு முழுவதும் இயக்கப்பட வேண்டிய காரணத்தினால் இவ்வியந்திரங்களை உபகரண உற்பத்தியாளரின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் மூலம் மின்னணு ஒப்பம் கோரி இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை (எரிபொருள் தவிர்த்து) மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், ஒரு உபகரணம் ஒரு ஆண்டிற்கு தோராயமாக பராமரிப்பு பணி மற்றும் மழைக்காரணமாக வாகனம் நிறுத்தி வைக்கும் நாட்களை தவிர்த்து மொத்த பணி நாட்களான *300* நாட்களுக்கு ஒரு வேளை பணிபுரியும் எனவும் மற்றும் இதர அவசர தேவைகளுக்கு ஒரு ஆண்டில் *60* நாட்கள் இரண்டு வேளை *(2 Shifts)* பணிபுரியும் என கருத்தில் கொண்டு மொத்தம் ஒரு ஆண்டிற்கு *360 Shifts* என்ற விகிதத்தில் இயக்குதலுக்கான தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் ஒப்பம் கோரும் பணி மட்டும் மேற்கொள்ள ஆணையர் அவர்களின் *06.01.2026* நாளிட்ட ஆணை பெறப்பட்டு குறுகிய கால மின்னணு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு ஒப்பம் *23.01.2026* திறக்கப்பட்டது. இவ்வொப்பத்தில் ஒரே ஒரு ஒப்பந்ததாரர் திருவாளர்கள். *Ourland Engineering Works Pvt. Ltd.*, நிறுவனத்தார் ஒப்ப முன்வைப்புத் தொகையினை மின்னணு மூலம் செலுத்தி ஒப்பத்தில் கலந்து கொண்டனர். திருவாளர்கள். *Ourland Engineering Works Pvt. Ltd.*, நிறுவனத்தாரின் ஒப்ப ஆவணங்கள் தொழில் நுட்ப தகுதி பெற்றதால், அவர்களது தொழில்நுட்ப ஒப்பம் ஏற்கப்பட்டு, நிதி ஒப்பம் *27.01.2026* அன்று திறக்கப்பட்டது.

20 எண்ணிக்கையில் சிறிய வகை இயந்திர பெருக்கி *(Ride on Sweeper)* உபகரணங்களுக்கு *2* ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள திருவாளர்கள். *Ourland Engineering Works Pvt. Ltd.*, நிறுவனத்தார் வழங்கியுள்ள விலைப்புள்ளி விவரம் பின்வருமாறு;

Sl. No.	Description of work	Shift (1shift = min 8 hrs)	Estimate Rate				Quoted by M/s. Ourland Engineering Works Pvt. Ltd.				Remarks
			Operation Cost per shift per unit (Excl. GST) (Rs.)	GST @ 18%	Total Amount per unit (Rs.)	Total Amount for 20 nos. (Rs.)	Operation Cost per shift per unit (Excl. GST) (Rs.)	GST @ 18%	Total Amount per unit (Rs.) (Incl GST)	Total Amount for 20 nos. (Rs.)	
I	Operation	(A)	(B)	(C=0.18*B)	D=360*(B+C)	E=20 D	(B)	(C=0.18*B)	D=360*(B+C)	E=20 D	
1.1	Operation Cost per shift (8 Hour) for 1st year	360 Shift	1,250.00	225.00	5,31,000.00	1,06,20,000.00	1227.04	220.87	5,21,247.60	1,04,24,952.00	1.84 % Less
1.2	Operation Cost per shift (8 Hour) for 2nd year	360 Shift	1,311.86	236.14	5,57,280.00	1,11,45,600.00	1227.04	220.87	5,21,247.60	1,04,24,952.00	6.47 % Less
Sub Total (I)						2,17,65,600.00				2,08,49,904.00	4.21 % Less
Sl. No.	Description of work	Days	Basic Rate per unit (Excl. GST) (Rs.)	GST @ 18%	Total Amount per unit (Rs.)	Total Amount for 20 nos. (Rs.)	Basic Rate per unit (Excl. GST) (Rs.)	GST @ 18%	Total Amount per unit (Rs.)	Total Amount for 20 nos. (Rs.)	
II	Comprehensive Maintenance	(A)	(B)	(C=0.18*B)	D=300*(B+C)	E=20 D	(B)	(C=0.18*B)	D=300*(B+C)	E=20 D	Remarks
2.1	Maintenance Cost per day for 1st year	300 days	2,250.00	405.00	7,96,500.00	1,59,30,000.00	2,208.62	397.55	7,81,851.00	1,56,37,020.00	1.84 % Less
2.2	Maintenance Cost per day for 2nd year	300 days	2,528.81	455.19	8,95,200.00	1,79,04,000.00	2,208.62	397.55	7,81,851.00	1,56,37,020.00	12.66 % Less
Sub Total (II)						3,38,34,000.00				3,12,74,040.00	7.57 % Less
Over All Total						5,55,99,600.00				5,21,23,944.00	6.25 % Less

மேற்கண்ட அட்டவணையின்படி, திருவாளர்கள். *Ourland Engineering Works Pvt. Ltd.*, நிறுவனத்தார் *20* எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணங்களுக்கு *2* ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.*5,21,23,944/-* என விலைப்புள்ளி வழங்கியுள்ளார். இந்நிறுவனத்தார் வழங்கியுள்ள இறுதி விலைப்புள்ளியான ரூ.*5,21,23,944/-* ஆனது தோராய மதிப்பீட்டுத் தொகையான ரூ.*5,55,99,600/-*ஐ விட *6.25%* குறைவாக உள்ளதால், இந்நிறுவனத்தாரை *30.01.2026* நாளிட்ட கடித வாயிலாக மின்னணு ஒப்ப தளம் மூலம் விலை குறைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. திருவாளர்கள். *Ourland Engineering Works Pvt. Ltd.*, நிறுவனத்தார் மின்னணு ஒப்பம் வாயிலாக விலை குறைப்பும் செய்யாமல் முன்னர் வழங்கிய விலைப்புள்ளியினையே வழங்கியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:

Sl. No.	Description of work	Shift (1shift = min 8 hrs)	Estimate Rate				Quoted by M/s. Ourland Engineering Works Pvt. Ltd.				Remarks
			Operation Cost per shift per unit (Excl. GST) (Rs.)	GST @ 18%	Total Amount per unit (Rs.)	Total Amount for 20 nos. (Rs.)	Operation Cost per shift per unit (Excl. GST) (Rs.)	GST @ 18%	Total Amount per unit (Rs.) (Incl GST)	Total Amount for 20 nos. (Rs.)	
I	Operation	(A)	(B)	(C=0.18* B)	D=360*(B+ C)	E=20 D	(B)	(C=0.18* B)	D=360* (B+C)	E=20 D	
1.1	Operation Cost per shift (8 Hour) for 1st year	360 Shift	1,250.00	225.00	5,31,000.00	1,06,20,000.00	1227.04	220.87	5,21,247.60	1,04,24,952.00	1.84 % Less
1.2	Operation Cost per shift (8 Hour) for 2nd year	360 Shift	1,311.86	236.14	5,57,280.00	1,11,45,600.00	1227.04	220.87	5,21,247.60	1,04,24,952.00	6.47 % Less
Sub Total (I)						2,17,65,600.00				2,08,49,904.00	4.21 % Less
Sl. No.	Description of work	Days	Basic Rate per unit (Excl. GST) (Rs.)	GST @ 18%	Total Amount per unit (Rs.)	Total Amount for 20 nos. (Rs.)	Basic Rate per unit (Excl. GST) (Rs.)	GST @ 18%	Total Amount per unit (Rs.)	Total Amount for 20 nos. (Rs.)	Remarks
II	Comprehensive Maintenance	(A)	(B)	(C=0.18* B)	D=300*(B+ C)	E=20 D	(B)	(C=0.18* B)	D=300*(B+C)	E=20 D	
2.1	Maintenance Cost per day for 1st year	300 days	2,250.00	405.00	7,96,500.00	1,59,30,000.00	2,208.62	397.55	7,81,851.00	1,56,37,020.00	1.84 % Less
2.2	Maintenance Cost per day for 2nd year	300 days	2,528.81	455.19	8,95,200.00	1,79,04,000.00	2,208.62	397.55	7,81,851.00	1,56,37,020.00	12.66 % Less
Sub Total (II)						3,38,34,000.00				3,12,74,040.00	7.57 % Less
Over All Total						5,55,99,600.00				5,21,23,944.00	6.25 % Less

மேற்கண்ட அட்டவணையின்படி, திருவாளர்கள். *Ourland Engineering Works Pvt. Ltd.*, நிறுவனத்தார் *20* எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணங்களுக்கு *2* ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள அளித்திருந்த

விலைப்புள்ளி ரூ.5,21,23,944/- (Inclu. GST @ 18%) ஆனது தோராய மதிப்பீட்டுத் தொகையான ரூ.5,55,99,600/-ஐ விட 6.25% குறைவாக உள்ளதால், இந்நிறுவனத்தாரிடமிருந்து 20 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணங்களுக்கு 2 ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி ரூ.5,21,23,944/- (Inclu. GST @ 18%) (ரூபாய். ஐந்து கோடியே இருபத்தோரு இலட்சத்து இருபத்தி மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி நான்கு மட்டும்) செலவீனத்தில் பணி மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

20 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி (Sl. No. GCC – ROS – 021 to GCC – ROS – 040) உபகரணத்திற்கு 2 ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வ(ம)நி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பம் கோரும் பணி மட்டும் மேற்கொண்டதற்கு மன்றத் தீர்மான எண்.103/2026, நாள்.31.01.2026ன்படி மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் ஒப்பங்கள் ஏற்கும் குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு, அக்குழுமத்தின் 09.02.2026 நாளிட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது.

இவ்வுபகரணங்களின் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை வடக்கு மற்றும் மத்திய வட்டார இயந்திர பொறியியல் துறையில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று வட்டார இயந்திர பொறியியல் துறையின் மூலமாக மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வடக்கு மற்றும் மத்திய வட்டாரத்திற்குட்பட்ட சாலைகள் மற்றும் மத்திய தடுப்புகளில் சேகரமாகும் மண் துகள்கள் மற்றும் தூசி ஆகியவற்றை தூய்மைப்படுத்தும் பணிக்கென கொள்முதல் செய்யப்பட்ட 20 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணங்கள் 2 ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள கோரப்பட்ட குறுகிய கால ஒப்பத்தில் கலந்து கொண்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். Ourland Engineering Works Pvt. Ltd., நிறுவனத்தார் வழங்கியுள்ள இறுதி விலைப்புள்ளி ரூ.5,21,23,944/- (Inclu. GST 18%) (ரூபாய். ஐந்து கோடியே இருபத்தோரு இலட்சத்து இருபத்தி மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி நான்கு மட்டும்) (தோராய மதிப்பீட்டுத் தொகையான ரூ.5,55,99,600/-ஐ விட 6.25% குறைவு) செலவீனத்தில் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆணை வேண்டியும்,
2. இனம்.1 ஏற்பின், திருவாளர்கள். Ourland Engineering Works Pvt. Ltd., நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்க ஆணை வேண்டியும்,

3. திருவாளர்கள். Ourland Engineering Works Pvt. Ltd., நிறுவனத்தாரிடமிருந்து மொத்த ஒப்பத் தொகை ரூ.5,21,23,944/-ல் 2% தொகை ரூ.10,42,500/- பாதுகாப்புத் தொகையாக பெற்றுக் கொண்டு இந்நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளவும்,
4. இவ்வுபகரணங்களின் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை வடக்கு மற்றும் மத்திய வட்டார இயந்திர பொறியியல் துறையில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று வட்டார இயந்திர பொறியியல் துறையின் மூலமாக மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.033/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.88/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

இ.பொ.து.ந.எண்.எம்1/1923/2024 Pkg-3,4,5 & 7

தீர்மான எண்: 201/2026 **பொருள் எண்.81**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - 2024ம் ஆண்டின் வடகிழக்கு பருவமழை - மண்டலம்- 6 முதல் 10 & 13 -க்குட்பட்ட பகுதிகளில் தேவையின் அடிப்படையில் வெள்ள நீரிணை வெளியேற்றும் பணிக்கென 226 எண்ணிக்கையில் டிராக்டர் மூலம் இயக்கப்படும் பம்புகள் (Suction & Delivery size 4"X4") 300 மணி நேரத்திற்கு 742.4 இலட்சம் தோராய மதிப்பீட்டில் அக்டோபர் -2024 முதல் டிசம்பர் –2024 வரையிலான காலத்திற்கு தேவையின் அடிப்படையில் வாடகை முறையில் பணியமர்த்த மாண்புமிகு மேயர் அவர்களின் பின்னேற்பு நிர்வாக அனுமதி பெறப்பட்டு இவ்வொப்பத்தில் கலந்து கொண்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள், Sri Deva Enterprises நிறுவனத்தாருக்கு பணியாணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டது - பம்புகளின் பணிக்காலம் (300 hrs per pump & 30 Days Idle charges) அக்டோபர் மாதம் முதல் அவ்வபோது பெய்த தொடர் மழை காரணமாக மேற்கண்ட பணி காலம் முன்னதாகவே முடிவுற்ற நிலையில் பருவமழையை எதிர்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகளின்படி (Chapter IV Rule 14(9) of TamilNadu transparency in tenders act 2000) மொத்த ஒப்பந்தத் தொகையில் 25 % மிகாமல் மொத்த ஒப்பத் தொகையில் (24.74%) குறைவாக மொத்தம் ரூ.1,37,41,100/- செலவீனத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டற்கு நிலைக்குழு (சுகாதாரம்) வின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்டு பட்டி தீர்வு செய்யப்பட்டுள்ளது - அவசர அவசியம் கருதி தொடர்ந்து இப்பம்புகளை தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பவிதி 1998, Sec 16(a) படி இயற்கை பேரிடர் காரணமாக ஒப்பம் கோர விலக்களித்து ஏற்கனவே ஒப்பம் கோரி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்ததாரரிடம் ஒப்ப விலையின் அடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்ட 59 எண்ணிக்கையிலான பம்புகளை பணியமர்த்தி கூடுதலாக பணிமேற்கொண்டமைக்கும் பணிமேற்கொள்ளபட்ட பம்புகளில் 59 எண்ணிக்கையிலான பம்புகளுக்கான ரூ.3,23,73,680/- பட்டி தொகையினை சம்மந்தப்பட்ட மண்டலம் மூலம் தீர்வு செய்வதற்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பருவ மழைக்காலங்களில் வெள்ள நீர் தேங்கி பாதிப்பு ஏற்படுவதை தடுத்திட பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துவரப்படுகிறது. இவற்றில் முக்கியபணியாக பேருந்து வழித்தடசாலை உட்புறசாலை மற்றும் சுரங்கப்பாதைகளில் வெள்ள நீர்தேங்காமல் பார்த்துக்கொள்வதுடன் போக்குவரத்து பாதிப்பு மற்றும் தாழ்வான பகுதிகளில் குடியிருக்கும் மக்களின் வீடுகளில் வெள்ள நீர் புகாமல்தடுத்திட வேண்டும்.

இதன்படி, வட்டார துணை ஆணையர் அவர்கள் மூலம் 2024 ம் ஆண்டின் வடகிழக்கு பருவ மழைக்கு தேவைப்படும் உயர் திறன் பம்புகள் மற்றும் டிராக்டர் மூலம் இயக்கப்படும் பம்புகளின் விவரம் பெறப்பட்டுள்ளது. இதில் அதிக கன மழை காரணமாக மண்டலம்- 6 முதல் 10 & 13 வரையுள்ள பகுதிகளுக்கு தேவைப்படும் 226 எண்ணிக்கையிலான Suction and Delivery size 4" X 4" கொண்ட பம்புகள் வாடகை முறையில் கடந்த ஆண்டு குறைந்த விலை புள்ளி அளித்த ஒப்ப விலையில் 5% கூடுதலாக சேர்த்து அடிப்படை விலையாக கொண்டு ஒரு பம்பிற்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.925/- வீதம் 300 மணி நேரத்திற்கும் மற்றும் பம்புகள் இயக்கப்படாத நாட்களுக்கு ஒரு ஷிப்டிற்கு ரூ850/- ம் மொத்தம் 226 பம்புகளுக்கு தோராய மதிப்பீடாக ரூ.7,42,41,000/- மாண்புமிகு மேயர் அவர்களின் பின்னேற்பு நிர்வாக அனுமதி பெறப்பட்டு மின்னணு ஒப்பம் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். Sri Deva Enterprises நிறுவனத்தாருக்கு 17.10.2024 அன்று கீழ்கண்ட ஒப்ப விலையின் அடிப்படையில் பணி ஆணை வழங்கி இந்நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், தோராய மதிப்பீடு கணக்கீட்டில் மழை பொழியும் நாட்களுக்கு மட்டும் கடந்த ஆண்டு கணக்கீட்டினை அடிப்படையாக கொண்டு பம்புகள் இயக்கப்படாத நாட்களுக்கு ஒரு ஷிப்டிற்கு ரூ845/- வீதம் ஒரு நாட்களுக்கு இரண்டு ஷிப்டிற்கு (1 Shift = 8 Hrs) (Idle Charges) வீதம் 30 நாட்களுக்கு (60 ஷிப்டிற்கு) என்ற அடிப்படையில் ஒப்பம் கோரப்பட்டது. ஒப்பம் கோரி பம்புகளை பணியமர்த்தியபோது ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மண்டல உயர் அதிகாரிகள் மழை பொழியாத நேரங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பம்புகளை 24 மணி நேரம் பம்புகள் நிறுவிய இடத்தில் பம்புகளை தயார் நிலையில் வைத்திருக்குமாறு கோரியதன் அடிப்படையில் பணியாணை வழங்கி பணிகள் துவங்கிய நாள் 17.10.2024 முதல் பணிகள் நிறைவடைந்த நாள் 31.12.2024 வரை 76 நாட்களுக்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இப்பணிக்கான ஒப்பத் தொகை மற்றும் 25% கூடுதலாக பயன்படுத்தியதற்கு பின்னேற்பு அனுமதி பெறப்பட்ட தொகையின் விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை - I

Work Order No	Zone	Qty	Sanctioned Amount	Extension Period Amount	Total
M.E.D.C.No.M1/1923/2024 Pkg-3	VI & VII	60	1,96,02,000	48,49,800	2,44,51,800
M.E.D.C.No.M1/1923/2024 Pkg-4	VIII & IX	60	1,96,02,000	48,49,800	2,44,51,800
M.E.D.C.No.M1/1923/2024 Pkg-5	X	50	1,63,35,000	40,41,500	2,03,76,500
M.E.D.C.No.M1/1923/2024 Pkg-7	XIII	56	1,82,95,200	-	1,82,95,200

Total	226	7,38,34,200	1,37,41,100	8,75,75,300

அவ்வப்போது தொடர் மழை பெய்த காரணமாக ஒரு டிராக்டர் பம்புக்கு நிர்ணயிக்கப்பட்ட *300 operation Hrs / Pump* மற்றும் *30* நாட்களுக்கு *60* ஷிப்டு *(Idle Charges)* பருவ மழை காலம் முடிவடைவதற்கு முன்பே முடிவடைந்ததால் மீண்டும் ஒப்பம் கோரி டிராக்டர் பம்புகளை பணியமர்த்த ஏற்படும் காலதாமத்தினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி ஒப்ப விதி *TamilNadu transparency in tenders act 1998, Sec 16(a) " Provisions of this act not to apply in certain cases, (a) during natural calamities and emergencies declared by the Government"* படி ஒப்பம் கோரி பணிமேற்கொள்வதிலிருந்து விலக்களித்து பருவ மழை தொடங்குவதற்கு முன்பாக மண்டலம் *6 to 10 & 13* வரை கோரப்பட்ட மின்னணு ஒப்பத்தில் கலந்து கொண்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் *Sri Deva Enterprises* நிறுவனத்தார் மூலம் *59* எண்ணிக்கையில் பணியமர்த்தப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி மற்றும் ஒப்புதல் ஆணை மற்றும் பணியமர்த்தப்பட்ட பம்புகளில் *59* பம்புகளுக்கான பட்டி தீர்வு செய்வதற்கான ஆணை பெறப்படல் வேண்டும் அதன் விவரம் பின்வருமாறு.

அட்டவணை - *II- (Sri Deva Enterprises*, சமர்பித்த பட்டியின் விவரம்)

S.NO	TRACTOR REG.NO.	zone	Div	Location	START DATE	END DATE	TOTAL DAYS ENGAGED	OPERATED HOURS		IDLE	Operation cost @ Rs.920/Hr Inclu. GST	Idle cost @ Rs. 845/Shift Inclu. GST	Total Cost P= (N+O)
1	TN 49 AD 3553	1	12	Railway Culvett No,36	12.11.2024	31.12.2024	50	398	0	80	366160	67600	433760
2	TN 73 Y 2085	2	19	MMDA 3rd Main Road	01.12.2024	31.12.2024	31	192	0	62	176640	52390	229030
3	TN 18 BQ 5998	3	29	Thanigasalam Nagar	30.11.2024	30.12.2024	31	309	0	30	284280	25350	309630
4	TN 25 Q 9217	5	50	East Mada Charch Street	26.11.2024	27.12.2024	32	226	0	59	207920	49855	257775
5	TN 32 BA 4432	5	50	Snehetty West	26.11.2024	28.12.2024	33	284	0	56	261280	47320	308600
6	TN 25 AW 1013	5	54	Wall Tax Road	16.11.2024	31.12.2024	46	393	0	74	361560	62530	424090
7	TN 32 L 8917	5	54	Sababathi Street	16.11.2024	31.12.2024	46	378	30	76	348220	64220	412440
8	TN 51 T 4899	6	76	Angalamman Kovil St	11.11.2024	30.11.2024	20	172	0	34	158240	28730	186970
9	TN 32 AO 7108	6	76	Kannappa Street	12.12.2024	27.12.2024	16	269	0	5	247480	4225	251705

10	TN 32 AM 9421	6	76	Thiruvika Street	08.12.2024	31.12.2024	24	264	0	28	242880	23660	266540
11	TN 25 AA 7792	6	77	Rajathottam	13.11.2024	31.12.2024	49	474	0	69	436080	58305	494385
12	TN 19 V 0972	6	77	Market Street	17.10.2024	31.12.2024	76	634	0	129	583280	109005	692285
13	TN 25 U 9735	6	78	Thana 2nd Street	17.10.2024	31.12.2024	76	708	0	124	651360	104780	756140
14	TN 16 Z 0298	6	78	Sulai High Road	17.10.2024	31.12.2024	76	800	0	110	736000	92950	828950
15	TN 16 X 9372	6	78	NewManikkam Street	17.10.2024	31.12.2024	76	764	0	119	702880	100555	803435
16	TN 73 BZ 1470	7	79	Ambathur	17.10.2024	30.12.2024	75	622	0	130	572240	109850	682090
17	TN 25 AR 7913	7	79	Ambathur	17.10.2024	30.12.2024	75	624	0	129	574080	109005	683085
18	TN 32 AS 5854	7	84	TNHB 61th St	17.10.2024	31.12.2024	76	866	0	97	796720	81965	878685
19	TN 25 BV 3767	7	84	TNHB 21th St	17.10.2024	31.12.2024	76	900	0	88	828000	74360	902360
20	TN 20 AF 0299	7	84	TNHB 20th St	20.10.2024	31.12.2024	73	846	0	90	778320	76050	854370
21	TN 32 BF 5083	7	84	North Avenue	20.10.2024	31.12.2024	73	864	30	93	795340	78585	873925
22	TN 25 J 5268	7	84	TNHB 69th St	17.10.2024	31.12.2024	76	889	0	93	817880	78585	896465
23	TN 32 AP 6412	7	84	TNHB 21th St	17.10.2024	31.12.2024	76	857	0	98	788440	82810	871250
24	TN 97 W 3918	7	84	TNHB 49th Street	17.10.2024	31.12.2024	76	829	0	103	762680	87035	849715
25	TN 32 AS 7155	7	84	TNHB 57th st	17.10.2024	31.12.2024	46	847	0	103	779240	87035	866275
26	TN 32 BE 3079	7	85	Mangalapuram	17.10.2024	31.12.2024	76	862	30	95	793500	80275	873775
27	TN 16 X 0733	7	85	Samsariyam Nagar	16.11.2024	31.12.2024	46	617	30	38	568100	32110	600210
28	TN 32 AR 4965	7	87	Childrens Park	17.10.2024	31.12.2024	76	579	0	141	532680	119145	651825
29	TN 25 AX 9831	7	87	ESI Hospital	17.10.2024	31.12.2024	76	630	0	131	579600	110695	690295
30	TN 19 E	7	90	Balaji Nagar	17.10.2024	31.12.2024	76	543	0	147	499560	124215	623775

	7470												
31	TN 20 BE 6124	7	90	Golden Jublee	17.10.2024	30.12.2024	75	660	0	126	607200	106470	713670
32	TN 56 AC 5566	7	92	Venugopal Street Pond	17.10.2024	31.12.2024	76	840	0	97	772800	81965	854765
33	TN 25 Q 8125	8	96	Periyar Street	16.12.2024	30.12.2024	15	150	0	22	138000	18590	156590
34	TN 23 CD 2873	8	98	Aspiran Garden 1st Street	16.11.2024	26.12.2024	41	329	30	71	303140	59995	363135
35	PY 01 1369	8	98	Palaniyappa Street	16.11.2024	26.12.2024	41	396	0	64	364320	54080	418400
36	TN 20 U 8527	8	99	Police Quaters	26.11.2024	31.12.2024	36	396	0	46	364320	38870	403190
37	TN 73 B 6431	8	99	Osan Kulam	26.11.2024	30.12.2024	36	390	0	48	358800	40560	399360
38	TN 73 AC 1577	8	99	Sri Boobathy Nagar	26.11.2024	31.12.2024	36	397	0	48	365240	40560	405800
39	TN 73 BE 5625	8	99	CSIR Road	30.10.2024	28.12.2024	60	736	0	72	677120	60840	737960
40	TN 73 V 6541	8	99	MGR Nagar NSK St	30.10.2024	31.12.2024	63	761	0	77	700120	65065	765185
41	TN 73 AK 2104	8	102	Anna Nagar S Block	15.11.2024	31.12.2024	47	425	0	73	391000	61685	452685
42	PY 01 N 4822	8	103	Anna Nagar S Block	08.12.2024	28.12.2024	51	435	0	83	400200	70135	470335
43	TN 32 BE 7573	8	107	Vinobaji Street	01.12.2024	31.12.2024	31	219	0	60	201480	50700	252180
44	TN 29 BJ 3174	9	109	Amev John Street	16.11.2024	31.12.2024	46	360	0	77	331200	65065	396265
45	TN 25 AD 3910	9	109	Raja Veethi	16.11.2024	31.12.2024	46	347	0	84	319240	70980	390220
46	TN 73 M 2243	9	112	Puliyur Main School	09.11.2024	13.12.2024	35	171	0	70	157320	59150	216470
47	TN 25 U 3979	9	113	Krishna Bai Street	26.11.2024	31.12.2024	36	319	0	49	293480	41405	334885
48	TN 32 BC 0840	9	118	Ponnusamy Street	12.11.2024	30.12.2024	49	372	0	85	342240	71825	414065
49	TN 16 V 1661	9	121	P.S.Sivasamy Salai	06.11.2024	31.12.2024	56	572	0	79	526240	66755	592995
50	TN 31 AE 9023	9	122	Raja Annamalai	01.11.2024	30.12.2024	60	669	0	80	615480	67600	683080

				Puram									
51	TN 20 AB 2516	9	122	Austin Nagar	01.12.2024	30.12.2024	30	337	0	41	310040	34645	344685
52	TN 32 AS 9497	11	149	Balaji Nagar	21.10.2024	20.12.2024	61	711	0	74	654120	62530	716650
53	TN 25 K 7903	11	149	Balaji Nagar 4TH Street	21.10.2024	27.12.2024	68	700	0	91	644000	76895	720895
54	TN 32 AC 7063	11	149	Brinthavanam Road	19.10.2024	27.12.2024	70	691	0	97	635720	81965	717685
55	TN 77 M 8231	11	149	Brinthavanam Road	21.10.2024	15.11.2024	26	430	0	12	395600	10140	405740
56	TN 97 C 3363	11	150	Sai karcha Villa	22.10.2024	29.12.2024	69	336	0	150	309120	126750	435870
57	TN 16 A 0389	11	151	Kamala Nagar	16.11.2024	20.12.2024	35	155	0	83	142600	70135	212735
58	TN 16 B 2413	11	152	Thirukuralar Street	31.10.2024	29.12.2024	60	546	30	96	502780	81120	583900
59	TN 97 V 5612	11	152	Bharathi Dhasan Street	22.10.2024	27.12.2024	67	243	0	162	223560	136890	360450
Total								30733	180 (Min)	4848	28277120	4096560	32373680
								30736					

மேலும், ஆணையர் மற்றும் மண்டல உயர் அதிகாரிகளின் அறுவுறுத்தலின்படி *17.10.2024* முதல் *31.12.2024* வரை பம்புகளை பருவ மழையினை எதிர்கொள்ள தயார் நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டது. மேலும் ஒரு டிராக்டர் பம்புக்கு நிர்ணயிக்கப்பட்ட *300 operation Hrs / Pump* மற்றும் *30* நாட்களுக்கு *60* ஷிப்டு *(Idle Charges)* பருவமழை காலம் முடிவடைவதற்கு முன்பே முடிவடைந்ததால் மீண்டும் ஒப்பம் கோரி டிராக்டர் பம்புகளை பணியமர்த்த ஏற்படும் காலதாமத்தினை கருத்தில் கொண்டும். மேலும், அவ்வப்போது இந்திய வானிலை ஆய்வு மையம் வங்க கடலில் காற்றழுத்த தாழ்வு மையம் உருவாகியுள்ளதாக அறிவிப்பு வெளியிட்ட காரணத்தினாலும் மற்றும் '***Fengal***' புயல் எச்சரிக்கை அறிவிப்பு காரணமாக அவசரம் மற்றும் அவசியம் கருதி மண்டல உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி பருவ மழை தொடங்குவதற்கு முன்பாக கோரப்பட்ட மின்னணு ஒப்பத்தில் கலந்து கொண்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர் *Sri Deva Enterprises*, நிறுவனத்தார் மூலம் அதே ஒப்ப விலையின் அடிப்படையில் தேவைப்படும் கூடுதல் பம்புகள் பருவ மழை காலம் முடியும் வரை பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.034/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம்

பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.86/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

தி.க.மே.து.ந.க.எண்.அ7/9253/2025

தீர்மான எண்: 205/2026 **பொருள் எண்.85**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை -மண்டலம் 15ல் பெரும்பாக்கம் புறநகர் பகுதியில் பகுதி 1, 3, 4, எழில் நகர் மற்றும் லைட் ஹவுஸ் திட்டம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்பு பகுதிகளை திடக்கழிவு மேலாண்மை பணி மற்றும் அதற்கு தேவையான Rotomac Bin மற்றும் 1100 லிட்டர் காம்பேக்டர் குப்பை தொட்டிகள், பணியாளர்கள் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். Jay Kay Trans அவர்கள் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் *18.02.2025* அன்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுத்த முடிவின் படி, இனி வரும் காலங்களில் தமிழ்நாடு நகர்ப்புற

வாழ்விட மேம்பாட்டு வாரியம் *(TNUHDB)* பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளின் *(1)* உட்புற சாலைகள், *(2)* தெரு விளக்குகள், *(3)* திடக்கழிவு மேலாண்மை பணிகள், *(4)* பூங்கா மற்றும் விளையாட்டு திடல் பணிகள், *(5)* திறந்தவெளி முன்பதிவு நிலம், *(6)* ரேஷன் கடை பராமரிப்பு பணிகள் மற்றும் *(7)* மரம் நடுதல் ஆகிய பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி இனி வரும் காலங்களில் மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மான எண்.*22/2025*, நாள்.*26.02.2025*-ன்படி, மண்டலம்-*15* பெரும்பாக்கம் புறநகர் பகுதியில் பகுதி *1*, *3*, *4*, எழில் நகர் மற்றும் லைட் ஹவுஸ் திட்டம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 17396 ஆகும். அதனுடைய மொத்த பரப்பளவு 228189 சதுர மீட்டர் ஆகும்.

மேற்கூறிய குடியிருப்புகளில் உள்ள உட்புற சாலைகள், பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்கள், திறந்த வெளி முன்பதிவு நிலங்கள் மற்றும் இரண்டு குடியிருப்பு இடையில் உள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கூறிய இடத்தில் ஒன்பது மாத காலத்திற்கு போதிய அளவு ஆட்களை ஒப்பந்ததாரர் மூலம் நியமித்து, போதிய குப்பைத் தொட்டிகளை வைத்து அப்பகுதியை தூய்மையாக வைத்துக் கொள்ள, பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்ததாரர் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதனுடைய ஒப்பந்தம் வரும் பிப்ரவரி *2026*ல் முடிவடைய உள்ளதால் புதிய ஒப்பம் கோர உத்தேசிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மண்டல அலுவலர்களிடமிருந்து இதற்கான விவரங்கள் பெற்று பெரும்பாக்கம் புறநகர் பகுதியில் பகுதி *1*, *3*, *4*, எழில் நகர் மற்றும் லைட் ஹவுஸ் திட்டம் இருக்கும் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள **17396** எண்ணிக்கையிலான குடியிருப்புகளில் உட்புற சாலைகள், பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், திறந்தவெளி முன்பதிவு நிலம் மற்றும் இரண்டு குடியிருப்பு இடையில் உள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள ஓராண்டு காலத்திற்கு ஒப்பம் கோருவதற்கு தோராய மதிப்பான ரூ.**7,30,05,048/-**க்கு ஒப்பம் கோர ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று மன்றத்தின் பின்னேற்பு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து மேலே கண்டுள்ள பணிக்கான தொழில்நுட்ப தகுதிக்கான ஒப்பம் ***28.01.2026*** அன்று திறக்கப்பட்டதில் நான்கு ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அதன் விவரம் கீழ்வருமாறு,

வரிசை எண்	ஒப்பந்ததாரரின் பெயர்கள்	தொழில் நுட்ப ஆவணம் தகுதி பெற்றது *(அ)* தகுதி

		பெறவில்லை
1	திருவாளர்கள். Jay Kay Trans	ஒப்பம் தகுதி பெற்றது
2	திருவாளர்கள். Quality Property Management Services Private Limited	ஒப்பம் தகுதி பெற்றது
3	திருவாளர்கள். Ourland Engineering Works Private Limited	ஒப்பம் தகுதி பெற்றது
4	திருவாளர்கள் MVK Murugan	ஒப்பம் தகுதி பெறவில்லை

மேற்கண்டவையின்படி, திருவாளர்கள்.MVK Murugan தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதி பெறாததால் விலைப்புள்ளிக்கான ஒப்பத்தில் (Financial Bid) அனுமதிக்கப்படவில்லை மற்ற ஒப்பந்ததாரர்களான திருவாளர்கள் Jay Kay Trans., திருவாளர்கள். Quality Property Management Services Private Limited மற்றும் திருவாளர்கள்Ourland Engineering Works Private Limited ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப ஆவணங்கள் தகுதி பெற்று விலைப்புள்ளிக்கான ஒப்பத்தில் (Financial Bid) அனுமதிக்கப்பட்டது.

மேலே கண்டுள்ள இப்பணிக்கான விலைப்புள்ளிக்கான ஒப்பம் 05.02.2026 அன்று திறக்கப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

வ எண்	ஒப்பந்ததாரரின் பெயர்கள்	மதிப்பீடு தொகை	ஒப்ப தொகை (GST உட்பட)	ஒப்ப சதவீதம்	ஒப்ப வரிசை
1.	திருவாளர்கள். Jay Kay Trans	ரூ.7,30,05,048/-	ரூ.6,96,81,999.56பை	(-) 4.55% குறைவு	L1
2.	திருவாளர்கள். Quality Property Management Services Private Limited	ரூ.7,30,05,048/-	ரூ.7,00,80,000.58பை	(-) 4.00% குறைவு	L2
3.	திருவாளர்கள் Ourland Engineering Works Private Limited	ரூ.7,30,05,048/-	ரூ.9,09,63,840.00பை	(+) 24.60% அதிகம்	L3

மேற்படி விலைப்புள்ளிக்கான ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி ஒப்பந்ததாரரான திருவாளர்கள் Jay Kay Trans அளித்துள்ள ஒப்ப தொகை ரூ.6,96,81,999.56பை ஆகும். இது அலுவலக தொகையான ரூ.7,30,05,048/- விட (-) 4.55% குறைவு ஆகும்.

திருவாளர்கள் *Jay Kay Trans (L1)* ஒப்பந்தாரரிடம் மின்னணு ஒப்பத்தின் மூலம் விலை குறைப்பு கோரப்பட்டு, *07.02.2026* அன்று திறக்கப்பட்டதில் அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகை கீழ்வருமாறு

வ எண்	ஒப்பந்ததாரரின் பெயர்கள்	மதிப்பீடு தொகை	ஒப்ப தொகை *(GST உட்பட)*	ஒப்ப சதவீதம்
1.	திருவாளர்கள் *Jay Kay Trans*	ரூ.*7,30,05,048/-*	ரூ.*6,96,81,999.56*பை	*(-) 4.55%* குறைவு

மேற்கண்டவையின்படி, ஒப்பந்ததாரர் மேலும் விலைக்குறைப்பு செய்யப்படவில்லை. இதன்படி திருவாளர்கள் *Jay Kay Trans* பேச்சுவார்த்தைக்கு பிறகு அளித்துள்ள இறுதி ஒப்ப தொகைரூ.*6,96,81,999.56*பை ஆகும். இது அலுவலகதொகையானரூ.*7,30,05,048/-* விட *(-) 4.55%* குறைவு ஆகும்.

எனவே,

1. மண்டலம் 15ல் பெரும்பாக்கம் புறநகர் பகுதியில் பகுதி 1, 3, 4, எழில் நகர் மற்றும் லைட் ஹவுஸ் திட்டம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்பு பகுதிகளை திடக்கழிவு மேலாண்மை பணி மற்றும் அதற்கு தேவையான Rotomac Bin மற்றும் 1100 லிட்டர் காம்பேக்டர் குப்பை தொட்டிகள், பணியாளர்கள் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யும் பணிமேற்கொள்ள குறைந்த ஒப்பத்தொகை அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் Jay Kay Trans அவர்களுக்கு ஒப்பத்தொகை (GST உட்பட) ரூ.6,96,82,000/-(ரூபாய் ஆறு கோடியே தொண்ணூற்று ஆறு இலட்சத்து எண்பத்தி இரண்டாயிரம் மட்டும்)க்கு அனுமதி மற்றும் பணி ஆணை வழங்குவதற்கும்,
2. இப்பணிகளை தனிப்பொறியாளர்கள் (Independent Engineer) மூலம் கண்காணிக்கவும், அதற்குரிய KPIல் மதிப்பீடு செய்வதற்கு ஆணை வேண்டியும்,
3. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை நிதி ஆலோசகர் அவர்களால் மண்டல அலுவலகம் – 15ற்கு Budget Head. Code 230-150-100 Privatization Conservancy தலைப்பின் கீழ் SFC நிதி ஒதுக்கி அந்நிதியிலிருந்து பணியை மேற்கொள்ளவும்,
4. பணி ஆணை வழங்கப்பட்ட பின் இப்பணிகளை மண்டல அலுவலர் 15ன் மூலம் கண்காணிக்கவும் மற்றும் மண்டல அலுவலகம் 15ன் மூலம் பட்டியை தீர்க்கவும்.

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.035/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.87/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

தி.க.மே.து.ந.க.எண்.அ7/0986/2025

தீர்மான எண்: 206/2026 **பொருள் எண்.86**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மைத்துறை - மண்டலம் – 5 மற்றும் 6 (Package -6)ல் கூடுதல் பணிகளை மேற்கொள்ள - M/s. CHENNAI ENVIRO SOLUTIONS PACKAGE -6 PVT LTD நிறுவனம் மூலமாக பராமரிப்பதற்காக கூடுதலாக பணியாளர்கள், குப்பை

தொட்டி மற்றும் இதர வாகனங்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.

ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி 1.உயர்நீதிமன்ற வளாகம், 2.தலைமை செயலக வளாகம், 3.கடற்கரையை சுத்தப்படுத்தும் சேவையின் விரிவாக்கம், 4.எலியட்ஸ் கடற்கரையை சுத்தப்படுத்தும் சேவைகள், 5.திருவான்மியூர் கடற்கரையை சுத்தப்படுத்தும் சேவைகள், 6.சென்னை மீன் பிடி துறைமுகம் (காசிமேடு), 7.நேரு ஸ்டேடியம், 8.கலைவாணர் அரங்கம், 9.OCS (Operation Clean Sweep) Zone -6, 10.ரிப்பன் கட்டிட வளாகம், 11.மயான பூமி, 12.இராயபுரம் பேருந்து நிலையம், 13.தீவுத்திடல் பேருந்து நிலையம், 14.ஸ்டான்லி குடியிருப்பு வளாகங்கள், 15.வால் டாக்ஸ் சாலை குடியிருப்புகள் ஆகிய பகுதியின் வளாகங்களை தினசரி தூய்மைப்படுத்த வேண்டியுள்ளது.

இப்பணிகளை மண்டலம் – 5 மற்றும் 6 (Package -6) ல் M/s. CHENNAI ENVIRO SOLUTIONS PACKAGE -6 PVT LTD நிறுவனம் மூலம் பராமரிக்க கூடுதலாக தூய்மை பணியாளர்களை பணியமர்த்தவும், குப்பை தொட்டிகள் வைப்பதற்கும் இதர வாகனங்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

மதிப்பிற்குரிய ஆணையர், மதிப்பிற்குரிய இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில், மேற்கூறிய 15 வளாகங்கள்/இடங்கள் அந்தந்த மண்டலங்களில் தற்போது திடக்கழிவு பணிகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனத்தினர் மூலம் பணிகள் மேற்கொள்ளலாம் என முடிவு எடுக்கப்பட்டதின் அடிப்படையில் மண்டலம் – 5 மற்றும் 6 (Package -6)ல் திடக்கழிவு பணிகளை மேற்கொள்ளும் திருவாளர் சென்னை என்விரோ நிறுவனத்திற்கு இப்பணியை மேற்கொள்ள ஒப்புதலும் மற்றும் ஆகும் செலவினை தெரிவிக்குமாறு அந்நிறுவனத்திற்கு 12.09.2025, 10.10.2025, 11.11.2025, 02.01.2026 மற்றும் 20.01.2026 அன்று கடிதங்கள் அனுப்பப்பட்டது.

அதற்கு திருவாளர் M/s. CHENNAI ENVIRO SOLUTIONS PACKAGE -6 PVT LTD, நிறுவனம் இப்பணியை மேற்கொள்ள நிறுவனத்திற்கு தேவையான கூடுதல் பணியாளர்கள், வாகனங்கள், குப்பைத்தொட்டிகள் மற்றும் ரோடமக் பின்கள் குறித்த பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சுயாதீன பொறியாளர்கள்(Independent Engineer) உடன் கூர்ந்தாய்வுக்குட்பட்டு கீழ்கண்டவாறு மதிப்பீட்டு செலவுகளை சமர்ப்பித்துள்ளனர்.

Package 6 - Change of Scope - Deployment of Additional Manpower and Infrastructure for Conservancy work with Additionalcost details per annum																	
Description		High Court	Secretariat	Marina Beach	Elliots Beach	Thiruvallikeni Beach	Fishing Harbor	Nehru Stadium	Kannagi Arangam	events	Ripon Bulding	Burial Ground	Royapuram Bus Stand	Ice House bus stand	Stanly Tenements	Wall Tax Road tenements	Total
	Area	20 acres	10 acres	322 acres	99 acres	82 acres	20 acres	12.5 acres	4 acres		6 acres	31.15 acres	3.45 acres	7 acres	4 acres	1 acres	
Equipments requirments	BOV	1	1			1	6								3	3	15
	Litter picking vehicles										1						1
	2 ton tipper											2					2
	Compactor						1					0					1
	ATV			3	1												4
	Wheeled bins (120lit)	48	28		46	10	50				25	82	15	20	25	13	362
	RC Bin (1100lit)	20	10				50	10	10		10	25			8	8	151
	Twin bins			116	34	10											160
	Hooka Bins				2		2										4
	Brooms, Shovel wtc	40	20		46	20	60				40	82	15	20	30	30	403
Manpower requirment	Manual sweeper	60	35	198	38	12	60	35	20	50	30	82	15	22	30	20	707
	Drivers				4		2					3					9
	Hepler				2		10					5					17
	IEC staff	0	0		3	1	2								1	1	8
	Supervisor	3	2	7	2	1	2	1	1	1	2	3	1	1	1	0	28
	BOV driver	2	2			2	8				2				4	4	24
Additional cost IAQ (Lakhs)		334.26	202.67	1110.66	299.64	111.75	514.5	180.29	108.69	242.00	211.26	504.57	87.01	120.36	207.93	150.71	4386.3
												Additional IMQ					3,65,52,500.00

மண்டலம் – 5 மற்றும் 6 (Package -6) ஆகிய மண்டலங்களில் தனியார் நிறுவனமான திருவாளர் M/s. CHENNAI ENVIRO SOLUTIONS PACKAGE -6 PVT LTD., நிறுவனம் பணி மேற்கொண்டு வருவதாலும் Project Area என்று சொல்லப்படுகின்ற பகுதிகளில்

1. உயர்நீதிமன்ற வளாகம், 2.தலைமை செயலக வளாகம், 3.கடற்கரையை சுத்தப்படுத்தும் சேவையின் விரிவாக்கம், 4.எலியட்ஸ் கடற்கரையை சுத்தப்படுத்தும் சேவைகள் விரிவாக்கம், 5.திருவான்மியூர் கடற்கரையை சுத்தப்படுத்தும் சேவைகள் விரிவாக்கம், 6.சென்னை மீன் பிடி துறைமுகம் (காசிமேடு), 7.நேரு ஸ்டேடியம், 8.கலைவாணர் அரங்கம், 9.OCS (Operation Clean Sweep) Zone -6, 10. ரிப்பன் கட்டிடம், 11.மயான பூமி, 12 இராயபுரம் பேருந்து நிலையம், 13.தீவுத்திடல் பேருந்து நிலையம், 14. ஸ்டான்லி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய (TNUHDB) குடியிருப்பு வளாகங்கள், 15. வால் டாக்ஸ் சாலை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய (TNUHDB) குடியிருப்புகள் அமைவதால் இப்பணியை இந்நிறுவனத்திற்கு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இப்பகுதியில், கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின்தன்மைகள்:

- அனைத்து 15 வளாகங்கள்/இடங்களிலும் IEC நடவடிக்கைகள் மூலப்பிரிப்பை (Source Segregation) ஊக்குவிப்பதற்கும் பிரிக்கப்பட்ட கழிவுகளை, பிரிக்கப்பட்ட நிலையில் கொள்கலன்களில் வைப்பதற்கும் அட்டவணையின்படி தினசரி அடிப்படையில் சேகரிக்கப்பட வேண்டும்.
- அனைத்து 15 வளாகங்கள்/இடங்களிலும், அனைத்து கட்டிட வளாகங்களிலிருந்தும் பிரிக்கப்பட்டு, சேகரிக்கப்பட்ட கழிவுகளை அதற்குரிய மையங்களுக்கு அனுப்பி குப்பை கிடங்கின் சுமையை குறைக்க வேண்டும்.
- அனைத்து 15 வளாகங்கள்/இடங்களிலும், ஈரமான கழிவுகளை தனித்தனியாக சேகரித்து GCC பரிந்துரையின்படி MCC மையங்கள் மற்றும் Bio-CNG மையங்களுக்கு நேரடியாக கொண்டு செல்ல வேண்டும்.
- அனைத்து 15 வளாகங்கள்/இடங்களிலும், தோட்டக்கழிவுகளை தனித்தனியாக சேகரித்து Garden Waste and Tender Cocnut Processing Plant க்கு கொண்டு செல்ல வேண்டும்,
- அனைத்து 15 வளாகங்கள்/இடங்களிலும், குப்பைகளை சேரிக்கவும், நாள் முழுவதும் வளாகம் முழுவதும் குப்பைகள் இல்லாமல் பராமரிக்க வேண்டும்.
- அனைத்து 15 வளாகங்கள்/இடங்களிலும், தூய்மை பணிக்கான அறிவிப்பு பலகைகளை பொருத்த வேண்டும்.
- அனைத்து 15 வளாகங்கள்/இடங்களிலும் உள்ள சாலைகளின் ஓரங்களில் உள்ள செடி கொடிகளை அகற்ற வேண்டும்.
- அனைத்து 15 வளாகங்கள்/இடங்களிலும், அவசர காலங்களில் தூய்மை பணிகளை தவறாமல் மேற்கொள்ள வேண்டும்.
- அனைத்து 15 வளாகங்கள்/இடங்களிலும், தேவைப்படும் இடங்களில் (RC Bin, Twin Bin & குப்பை சேகரிக்கும் இடம்)திரவ நிலை கிருமி நாசினி பொருட்களை தெளித்தல் மற்றும் பராமரித்தல் வேண்டும்,

- உயர் நீதி மன்றம் மற்றும் தலைமை செயலகத்தில் தினந்தோறும் தூய்மை பணியை மேற்கொள்ள வேண்டும். மேலும் அவ்வளாகங்களில் உருவாகும் திடக்கழிவுகள் மற்றும் தோட்டக்கழிவுகளை குப்பை தொட்டிகள் மற்றும் அதற்குரிய வாகனங்களை கொண்டு தூய்மை பணி மேற்கொள்ள வேண்டும்.

- அனைத்து கடற்கரைகளிலும் (மெரினா, பெசன்ட் நகர் மற்றும் திருவான்மியூர்) தேவையான வாகனங்கள், பணியாளர்கள் மற்றும் உபகரணங்களை கொண்டு *24* மணி நேரமும் தொடர்ச்சியாக தூய்மை பணி மேற்கொள்ள வேண்டும்.

- சென்னை மீன்பிடி துறைமுகம் (காசிமேடு) பகுதிகளில் தினந்தோறும் தூய்மை பணியை மேற்கொள்ளவேண்டும். மேலும் அவ்வளாகங்களில் உருவாகும் அனைத்து திடக்கழிவுகள் மற்றும் மீன் கழிவுகளை குப்பை தொட்டிகள் மற்றும் அதற்குரிய வாகனங்களை கொண்டு தூய்மை பணி மேற்கொள்ள வேண்டும்.

- நேரு ஸ்டேடியம், கலைவாணர் அரங்கம் மற்றும் ரிப்பன் கட்டிட வளாகத்தில் தினந்தோறும் தூய்மை பணியை மேற்கொள்ளவேண்டும். மேலும் அவ்வளாகங்களில் உருவாகும் திடக்கழிவுகள் மற்றும் தோட்டக்கழிவுகளை குப்பை தொட்டிகள் மற்றும் அதற்குரிய வாகனங்களை கொண்டு தூய்மை பணி மேற்கொள்ள வேண்டும். மேலும் நிகழ்ச்சிகள் நடைபெறும் நாட்களில் நிகழ்வுக்கு முந்தைய/பிந்தைய காலங்களில் வளாகங்களை மேம்படுத்த தூய்மை பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

- மயான பூமியில் தினசரி உருவாகும் திடக்கழிவுகள் மற்றும் அனைத்து வகையான குப்பை கழிவுகள் தினந்தோறும் அகற்றப்பட வேண்டும். மயான பூமியில் உள்ள உள்கட்டமைப்பு சாலைகளில் துப்புரவு பணி மற்றும் பெருக்கும் பணி தினந்தோறும் மேற்கொள்ளப்பட வேண்டும். இறுதிச்சடங்குகளில் உருவாகும் பாடை, மாலை, பானை மற்றும் அனைத்து வகையான கழிவுகளை தினந்தோறும் அகற்றப்பட வேண்டும். மயான பூமியில் உள்ள இறுதிச்சடங்கு நடக்கும் இடத்தை தினந்தோறும் சுத்தம் செய்ய வேண்டும். மயான பூமிகளில் படரும் தேவையில்லா செடி, கொடிகளை அகற்றி சுத்தம் செய்ய வேண்டும். சேகரிக்கும் அனைத்து குப்பைகளையும் ரோடமக் பின்கள், வாகனங்கள் மற்றும் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த தொட்டிகள் *(RC Bins)* அமைத்து பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

- இராயபுரம் மற்றும் தீவுத்திடல் பேருந்து நிலையத்தில் தினந்தோறும் *24* மணி நேரமும் தொடர்ச்சியாக ஷிப்ட் முறையில் தூய்மை பணியை மேற்கொள்ளவேண்டும். மேலும் அவ்வளாகங்களில் உருவாகும் திடக்கழிவுகள் மற்றும் தோட்டக்கழிவுகளை குப்பை தொட்டிகள் மற்றும் அதற்குரிய வாகனங்களை கொண்டு தூய்மை பணி மேற்கொள்ள வேண்டும், தாழ்வாரங்கள் பேருந்து நிறுத்துமிடங்கள் மற்றும் திறந்தவெளி பகுதிகளிலும் தூய்மை பணியை மேற்கொள்ளவேண்டும்.

- ஸ்டான்லி மற்றும் வால் டாக்ஸ் சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய *(TNUHDB)* குடியிருப்பு வளாக பகுதிகளில் வீடு வீடாக சென்று குப்பைகளை பேட்டரி மூலம் இயக்கும் மூன்று சக்கர வாகனங்கள் *(BOV)* மூலம் சேகரிக்க வேண்டும், அடுக்குமாடி குடியிருப்பு பின்புறத்தில் கொட்டப்படும் அனைத்து வகையான

குப்பை கழிவுகள் தினந்தோறும் அகற்றப்பட வேண்டும், அவ்வாறு கொட்டப்படுவதை தடுக்கவும் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்படவேண்டும். குடியிருப்பு பகுதியில் உள்ள சாலைகள், பூங்கா, விளையாட்டுத்திடல் மற்றும் நடைபாதைகளில் தூய்மை பணிகளை தினந்தோறும் மேற்கொள்ளப்பட வேண்டும், சேகரிக்கும் அனைத்து குப்பைகளையும் பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் *(BOV)* மற்றும் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த தொட்டிகள் *(RC Bins)* அமைத்து தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், இத்தூய்மை பணிகளை கண்காணிக்கும் தனிப்பொறியாளர்கள்*(IE)* நிறுவனமான திருவாளர் *Infra En* ற்கு இப்பணியினை சேர்த்து தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய *KPI*ல் இணைத்து இப்பணிகளை மதிப்பீடு செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

மேற்கூறிய, பகுதிகளில் கூடுதலாக பராமரிக்க ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ.*3,65,52,500/-* (ரூபாய் மூன்று கோடியே அறுபத்து ஐந்து இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) என கணக்கிடப்பட்டுள்ளது.

இக்கூடுதல் தொகையானது முதல் வருட அங்கீகரிக்கப்பட்ட தொகையான ரூ.*276/-* கோடியில் *25* சதவீதத்திற்கு மிகாமல் உள்ளது.

எனவே,

1. மண்டலம் – 5 மற்றும் 6 (Package -6)ல் திருவாளர்கள் M/s. CHENNAI ENVIRO SOLUTIONS PACKAGE -6 PVT LTD., நிறுவனம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டு வருவதாலும், Project Area என்று சொல்லப்படுகின்ற மண்டலம் 5 மற்றும் 6, மேற்கூறிய 15 வளாகங்கள்/இடங்களை உள்ளடக்கியுள்ளதால் இந்நிறுவனமே தூய்மை பணிகளை மேற்கொள்ளவும்,
2. மண்டலம் – 5 மற்றும் 6 (Package -6)ல் மேற்கூறிய வளாகங்களில் கூடுதலாக மேற்கொள்ளப்படும் தூய்மை பணிகளுக்கு ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ.3,65,52,500/– (ரூபாய் மூன்று கோடியே அறுபத்து ஐந்து இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்). இக்கூடுதல் தொகையானது முதல் வருட அங்கீகரிக்கப்பட்ட தொகையான ரூ.276/- கோடியில் 25 சதவீதத்திற்கு மிகாமல் உள்ளது,
3. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை Budget Head Code 230-150-100 Privatization Conservancy தலைப்பின் நிதியின் கீழ் பணியை மேற்கொள்ளவும்,
4. இப்பணிகளை தற்பொழுது மேற்பார்வையிடும் தனிப்பொறியாளர்களான (IE) Infra En மூலம் தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய KPIல் மதிப்பீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.040/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.97/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

தி.க.மே.து.ந.க.எண்.அ7/1077/2026

தீர்மான எண்: 207/2026 **பொருள் எண்.87**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மைத்துறை - மண்டலம் -7 (Package -1) ல் - உள்ள தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் உள்கட்டமைப்பை - Ms. CHENNAI ENVIRO SOLUTIONS PVT LTD நிறுவனம் மூலமாக பராமரிப்பதற்காக கூடுதலாக பணியாளர்கள், குப்பை தொட்டி, பேட்டரியால் இயக்கப்படும் மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் இதர வாகனங்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 23.05.2025 அன்று வரப்பெற்றுள்ள கடிதத்தில், அம்பத்தூர் மற்றும் கிண்டி பகுதியில் உள்ள தொழில் துறை வளாகத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள சாலை, தெருவிளக்குகள், மழைநீர் வடிகால்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் ஆகியவற்றை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் வேண்டி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் அதிகாரப்பூர்வமாக அம்பத்தூர் மற்றும் கிண்டி பகுதியில் உள்ள தொழில் துறை வளாகத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள சாலைகள், தெருவிளக்குகள், மழைநீர் வடிகால்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்க 30 ஆண்டு காலம் குத்தகை ஒப்பந்தம் மேற்கொள்ள கடிதத்தின் வாயிலாக 13.01.2026 அன்று ஒப்புதல் தெரிவித்துள்ளது.

அதன்படி, மண்டலம்-7, அம்பத்தூரில் உள்ள தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் வளாகத்திற்குட்பட்ட 1167 ஏக்கர் பரப்பளவு கொண்ட TANSIDCO-வின் உள்கட்டமைப்புகளான

Name of the Industrial Estate	Road Length (in kms.)	Street lights (in Nos.)	High Mast lights (in Nos.)	Storm Water Drains (in kms.)	Garbage Collection in Tonne / day
Ambattur	41.383	1558	8	84	40

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள உள்கட்டமைப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் 30 ஆண்டு காலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள மற்றும் பராமரிக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளனதை தொடர்ந்து தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து (TANSIDCO) 03.02.2026 நாளிட்ட கடிதம் பெறப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மண்டலம்-7, கிண்டியில் உள்ள தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் வளாகத்தின் உள்கட்டமைப்பை பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் தினசரி திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதனை தொடர்ந்து, மேற்கூறிய மண்டலம்-7, அம்பத்தூரில் உள்ள தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் உள்ள அந்தந்த மண்டலங்களில் தற்போது திடக்கழிவு பணிகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனத்தினர் மூலம் பணிகள் மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் மண்டலம்-7, (Package1)ல் திடக்கழிவு பணிகளை மேற்கொள்ளும் திருவாளர். Ms. CHENNAI ENVIRO SOLUTIONS PVT LTD நிறுவனத்திற்கு இப்பணியை மேற்கொள்ள ஒப்புதலும் மற்றும் ஆகும் செலவினை தெரிவிக்குமாறு அந்நிறுவனத்திற்கு 07.02.2026 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

அதற்கு திருவாளர். *Ms. CHENNAI ENVIRO SOLUTIONS PVT LTD* நிறுவனம் இப்பணியை மேற்கொள்ள நிறுவனத்திற்கு தேவையான கூடுதல் பணியாளர்கள், வாகனங்கள், குப்பைத்தொட்டிகள் மற்றும் ரோடமக் பின்கள் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்கள்.

Zone		VII
Name of Industrial Estate		Ambattur
Total No. of Road(in Nos.)		128
Total Road Length(in mts)		41.383
Quantity of Garbage Generation (Appx.) TPD.		40
Manpower	No's of Sweepers required	138
	No's of BOV Drivers	13
	HMV Drivers	5
	LMV Drivers	5
	Helpers	20
	IEC Staffs	3
	Supervisors	5
	Total	189
Equipments	No's of BOV required	10
	Wheeled bin 120 ltrs	138
	Hooka bin (20 cum)	2
	Compactor Count (14 Cum)	2
	RC Bins (1100 ltrs)	140
	2T Vehicle	2
	Broom, Shovel and other Consumables	138
IMQ (in Rs.)		87,87,500

மண்டலம்-*7, (Package-1)* மண்டலத்தில் தனியார் நிறுவனமான திருவாளர். *Ms.CHENNAI ENVIRO SOLUTIONS PVT LTD* நிறுவனம் பணி மேற்கொண்டு வருவதாலும் புராஜக்ட் ஏரியா என்று சொல்லப்படுகின்ற பகுதியில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம்

வளாகப்பகுதியில் அமைவதால் இப்பணியை இந்நிறுவனத்திற்கு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் வளாகப்பகுதியில், கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் தன்மைகள்:

i. வளாகத்தில் உள்ள அனைத்து அலுவலகம், கடைகள் மற்றும் சிற்றுண்டிகளில் தொழிற்சாலை கழிவுகளை தவிர இதர அனைத்து வகையான குப்பைக்கழிவுகளையும் பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் *(BOV)* மூலம் தினந்தோறும் சேகரிக்க வேண்டும்.
ii. வளாகத்தில் உருவாகும் அனைத்து வகையான தோட்டக்கழிவுகளை தினந்தோறும் அகற்றப்பட வேண்டும்.
iii. வளாகத்தில் உள்ள சாலைகள், நடைபாதை, பூங்கா, மற்றும் விளையாட்டுத் திடல்களில் துப்புரவு பணி மற்றும் பெருக்கும் பணி தினந்தோறும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
iv. வளாகத்தில் உள்ள பேருந்து செல்லும் சாலைகளை *(BRR)* இயந்திர துப்புரவு வாகனம் *(Mechanical Sweeper)* மூலம் துப்புரவு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.
v. சேகரிக்கும் அனைத்தும் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த தொட்டிகள் *(RC Bins)* அமைத்து மற்றும் அதற்குரிய வாகனங்கள் *(Compactor)* மூலம் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், இத்தூய்மை பணிகளை கண்காணிக்கும் தனிப்பொறியாளர்கள் *(IE)* நிறுவனமான திருவாளர். *Infra En* ற்கு இப்பணியினை சேர்த்து தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய *KPI*ல் இணைத்து இப்பணிகளை மதிப்பீடு செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

மேற்கூறிய மண்டலம்-7ல் உள்ள சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் வளாகப் பகுதியில் *(TANSIDCO)* திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் பராமரிக்க ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ. *87,87,500/-* என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம்-7, (Package –1) திருவாளர்கள் Ms. CHENNAI ENVIRO SOLUTIONS PVT LTD நிறுவனம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டு வருவதாலும், புராஜக்ட் ஏரியா என்று சொல்லப்படுகின்ற இவ்விடத்தில் உள்ள 1167 ஏக்கர் பரப்பளவு கொண்ட TANSIDCO வளாகத்தினை மார்ச் 01, 2026 முதல் இந்நிறுவனமே தூய்மை பணிகளை மேற்கொள்ளவும்,
2. மண்டலம்-7, (Package–1) சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் வளாகப்பகுதியில் (TANSIDCO) உட்புறத்தில் மேற்கொள்ளப்படும் தூய்மை பணிகளுக்கு ஒரு

மாதத்திற்கு ஆகும் செலவு ரூ.87,87,500/- (ரூபாய் எண்பத்தி ஏழு இலட்சத்து எண்பத்தி ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்),

3. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை Budget Head Code .230-150-100 Privatization Conservancy தலைப்பின் கீழ் நிதியில் பணியை மேற்கொள்ளவும்,
4. இப்பணிகளை தற்பொழுது மேற்பார்வையிடும் தனிப்பொறியாளர்களான (IE) Infra En மூலம் தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய KPIல் மதிப்பீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.041/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.98/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

******

தி.க.மே.து.ந.க.எண்.அ7/1030/2026

தீர்மான எண்: 208/2026 **பொருள் எண்.88**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மைத்துறை - மண்டலம் -13 (Package - 5)ல் உள்ள தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் உள்கட்டமைப்பை - Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) V PVT. LTD நிறுவனம் மூலமாக பராமரிப்பதற்காக கூடுதலாக பணியாளர்கள், குப்பை தொட்டி, பேட்டரியால் இயக்கப்படும் மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் இதர வாகனங்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து *23.05.2025* அன்று வரப்பெற்றுள்ள கடிதத்தில், அம்பத்தூர் மற்றும் கிண்டி பகுதியில் உள்ள தொழில் துறை வளாகத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள சாலை, தெருவிளக்குகள், மழைநீர் வடிகால்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் ஆகியவற்றை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் வேண்டி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் அதிகாரப்பூர்வமாக அம்பத்தூர் மற்றும் கிண்டி பகுதியில் உள்ள தொழில் துறை வளாகத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள சாலைகள், தெருவிளக்குகள், மழைநீர் வடிகால்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்க *30* ஆண்டு காலம் குத்தகை ஒப்பந்தம் மேற்கொள்ள *13.01.2026* நாளிட்ட கடிதத்தின் மூலம் ஒப்புதல் தெரிவித்துள்ளது.

அதன்படி, மண்டலம்-*13*, கிண்டியில் உள்ள தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் வளாகத்திற்குட்பட்ட *404.08* ஏக்கர் பரப்பளவு கொண்ட *TANSIDCO*வின் உள்கட்டமைப்புகளான

Name of the Industrial Estate	Road Length (in kms.)	Street lights (in Nos.)	High Mast lights (in Nos.)	Storm Water Drains (in kms.)	Garbage Collection in Tonne / day
Guindy	15.28	344	2	23.5	20

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள உள்கட்டமைப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் *30* ஆண்டு காலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள மற்றும் பராமரிக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து *(TANSIDCO) 03.02.2026* நாளிட்ட கடிதம் பெறப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மண்டலம்-*13*, கிண்டியில் உள்ள தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் வளாகத்தின் உள்கட்டமைப்பு மற்றும் வேளச்சேரி இரயில் நிலைய

சாலையை பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் தினசரி திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதனை தொடர்ந்து, மேற்கூறிய மண்டலம்-13, கிண்டியில் உள்ள தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் உள்ள அந்தந்த மண்டலங்களில் தற்போது திடக்கழிவு பணிகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனத்தினர் மூலம் பணிகள் மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் மண்டலம்-13, (Package-5)ல் திடக்கழிவு பணிகளை மேற்கொள்ளும் திருவாளர். Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) V PVT. LTD நிறுவனத்திற்கு இப்பணியை மேற்கொள்ள ஒப்புதலும் மற்றும் ஆகும் செலவினை தெரிவிக்குமாறு அந்நிறுவனத்திற்கு 07.02.2026 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

அதற்கு திருவாளர். Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) V PVT. LTD நிறுவனம் இப்பணியை மேற்கொள்ள நிறுவனத்திற்கு தேவையான கூடுதல் பணியாளர்கள், வாகனங்கள், குப்பைத்தொட்டிகள் மற்றும் ரோடமக் பின்கள் ஆகியவற்றை தெரிவித்தார்கள். இது குறித்து பொறுப்பு அலுவலர்கள், IE அலுவலர்கள் மற்றும் Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) V PVT. LTD நிறுவன அலுவலர்கள் ஆகியோருடன் கலந்தாய்வு மேற்கொண்டு மறுபரிசீலனை செய்து தேவையான கூடுதல் பணியாளர்கள், வாகனங்கள், குப்பைத்தொட்டிகள் மற்றும் ரோடமக் பின்கள் எண்ணிக்கையை கீழ்க்கண்டவாறு இறுதி செய்யப்பட்டுள்ளது.

Zone		XIII
Name of Industrial Estate		Guindy
Total No. of Road(in Nos.)		82
Total Road Length(in mts)		15.28
Quantity of Garbage Generation (Appx.) TPD.		20
Manpower	No's of Sweepers required	126
	No's of BOV Drivers	12
	HMV / LMV Drivers	7
	Helpers	13
	IEC Staffs	2
	Supervisors	2
	Total	162

Equipments	No's of BOV required	10
	No's of BOV bins	80
	Wheeled bin 120 ltrs	126
	Hook Loaders	1
	Hooka bin (20 cum)	4
	Compactor Count (14 Cum)	1
	RC Bins (1100 ltrs)	80
	2T Vehicle	2
	Mechanical Sweepers	1
IMQ (in Rs.)		83,55,646

மண்டலம்-13, (Package-5) மண்டலத்தில் தனியார் நிறுவனமான திருவாளர். *Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) V PVT. LTD* நிறுவனம் பணி மேற்கொண்டு வருவதாலும் புராஜக்ட் ஏரியா என்று சொல்லப்படுகின்ற பகுதியில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் வளாகப்பகுதியில் அமைவதால் இப்பணியை இந்நிறுவனத்திற்கு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் வளாகப்பகுதியில், கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் தன்மைகள்:

வளாகத்தில் உள்ள அனைத்து அலுவலகம், கடைகள் மற்றும் சிற்றுண்டிகளில் தொழிற்சாலை கழிவுகளை தவிர இதர அனைத்து வகையான குப்பைக்கழிவுகளையும் பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் (BOV) மூலம் தினந்தோறும் சேகரிக்க வேண்டும்.

i. வளாகத்தில் உருவாகும் அனைத்து வகையான தோட்டக்கழிவுகளை தினந்தோறும் அகற்றப்பட வேண்டும்.
ii. வளாகத்தில் உள்ள சாலைகள், நடைபாதை, பூங்கா, மற்றும் விளையாட்டுத்திடல்களில் துப்புரவு பணி மற்றும் பெருக்கும் பணி தினந்தோறும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
iii. வளாகத்தில் உள்ள பேருந்து செல்லும் சாலைகளை (BRR) இயந்திர துப்புரவு வாகனம் (Mechanical Sweeper) மூலம் துப்புரவு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.
iv. வேளச்சேரி இரயில்வே நிலைய சாலையை தினந்தோறும் துப்புரவு செய்ய வேண்டும்.
v. சேகரிக்கும் அனைத்தும் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த தொட்டிகள் (RC Bins) அமைத்து மற்றும் அதற்குரிய வாகனங்கள் (Compactor) மூலம் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், இத்தூய்மை பணிகளை கண்காணிக்கும் தனிப்பொறியாளர்கள் *(IE)* நிறுவனமான திருவாளர், *Infra En* ற்கு இப்பணியினை சேர்த்து தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய *KPI*ல் இணைத்து இப்பணிகளை மதிப்பீடு செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

மேற்கூறிய மண்டலம்-*13*ல் உள்ள சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் வளாகப்பகுதியில் *(TANSIDCO)* திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் பராமரிக்க ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ. *83,55,646/-* என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம்-13, (Package –5) திருவாளர்கள். Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) V PVT. LTD நிறுவனம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டு வருவதாலும், புராஜக்ட் ஏரியா என்று சொல்லப்படுகின்ற இவ்விடத்தில் உள்ள 404.08 ஏக்கர் பரப்பளவு கொண்ட TANSIDCO வளாகத்தினை மார்ச் 01, 2026 முதல் இந்நிறுவனமே தூய்மை பணிகளை மேற்கொள்ளவும்,
2. மண்டலம்-13, (Package –5) சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் வளாகப்பகுதியில் (TANSIDCO) உட்புறத்தில் மேற்கொள்ளப்படும் தூய்மை பணிகளுக்கு ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ. 83,55,646/- (ரூபாய் எண்பத்தி மூன்று இலட்சத்து ஐம்பத்தி ஐந்தாயிரத்து அறுநூற்று நாற்பத்தி ஆறு மட்டும்),
3. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை Budget Head Code 230-150-100 Privatization Conservancy தலைப்பின் கீழ் நிதியில் பணியை மேற்கொள்ளவும்,
4. இப்பணிகளை தற்பொழுது மேற்பார்வையிடும் தனிப்பொறியாளர்களான (IE) Infra En மூலம் தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய KPIல் மதிப்பீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.046/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம்

பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.99/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ஒ.க.ம.க.மை.து.நி.க.எண்.22/2025

தீர்மான எண்: 209/2026 **பொருள் எண்.89**

பெருநகர சென்னை மாநகராட்சி - ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம்- ICCCயால் சென்னையின் 15 மண்டலங்களில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான இடங்களில் 75 சுற்றுச்சூழல் சென்சார்களை வழங்கல், நிறுவுதல் மற்றும் ICCCவுடன் ஒருங்கிணைப்பு, செயல்பாடு மற்றும் பராமரிக்கும் பணிக்கு ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் *ICCC*யால் சென்னையின் *15* மண்டலங்களில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான இடங்களில் *75* சுற்றுச்சூழல் சென்சார்களின் வழங்கல், நிறுவுதல் மற்றும் *ICCC* வுடன் ஒருங்கிணைப்பு, செயல்பாடு மற்றும் பராமரிக்கும் பணிக்காக ஒப்பந்ததாரரை தேர்ந்தெடுப்பதற்கான பணிக்கு ஒப்பம் இரு உறை முறையில் கோரப்பட்டு, ஒப்ப அறிவிப்பு தமிழ் நாளிதழ் தினகரன், *The Times of India* போன்ற நாளிதழ்களிலும், *18.12.2025* அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது, மின்னணு முறையில் *(e-tender)* மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது

ஒப்ப நாளான *02.01.2026* அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது.

ஒப்பத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள்

1. M/s The Acetech Machinery Components India Private Limited
2. M/s. Bloom Electronics pvt Ltd
3. M/s.Engineering and Environmental Solutions Private Limited,
4. M/s. kritilabs Techonologies private Limited,

தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். எனவே, தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் *06.01.2026* அன்று ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறக்கப்பட்டது. ஒப்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்டார். குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு.

அட்டவணை-1

வ. எண்.	துறை	கோப்பு எண்./ சிப்பம் எண்.	பணியின் துறை மதிப்பு (ரூபாய்)	ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள்	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (ரூபாய்)	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையினை துறை விலையுடன் ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம்
1	ICCC	ஒ.க.ம.க.மை. து. ந .க .எண் /22/2025	6,36,61,590.00	M/s The Acetech Machinery Components India Private Limited	6,33,43,282.05	(-)0.50 % குறைவு

குறைந்த விலை விகிதம் அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகையானது (18 சதவீதம் GST சேர்த்து) அலுவலக விலை விவரப்படியான தொகையை விட குறைவு ஆகும்.

ஒப்பந்ததாரரிடம், விலைக்குறைப்பு இரு முறை கோரப்பட்டது. ஒப்பந்ததாரர் இரண்டாவது முறையில் விலைக்குறைப்பு செய்யவில்லை. அதன்படி, ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது

அட்டவணை-II

வ. எண்.	துறை	கோப்பு எண்./ சிப்பம் எண்.	பணியின் துறை மதிப்பு (ரூபாய்)	ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள்	பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பந்ததாரர் அளித்த தொகை (ரூபாய்	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையினை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம்
1	ICCC	ஒ.க.ம.க.மை. து. ந .க .எண் /22/2025	6,36,61,590.00	M/s The Acetech Machinery Components India Private Limited	6,30,38,635.69	(-)0.90 % குறைவு

மேற்கூறப்பட்ட ஒப்பந்ததாரர் பேச்சு வார்த்தைக்குப்பின் அளித்த ஒப்ப விகிதம் ஒப்பிடுகையில் (18 சதவீதம் GST சேர்த்து) அலுவலக விலைப்பட்டியலைவிட குறைவாக உள்ளது.

மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் சென்சார்கள் காற்றின் வேகம், காற்றின் திசை, மழைப்பொழிவு மற்றும் வளிமண்டல அழுத்தத்தை அளவிட கூடுதல் திறன்களைக் கொண்டிருக்கும், சுற்றுச்சூழல் அளவுருக்களைக் கண்காணிப்பதில் உதவுகின்றன. சுற்றுச்சூழல் சென்சார்களின் பயன்பாட்டு நிகழ்வுகள் பின்வருமாறு: காற்று தர குறியீடு (AQI) கண்காணிப்பு, AQI கணிப்பு, மறுமொழி நடவடிக்கை, புகைமூட்டம் கண்காணிப்பு, சுத்தமான

காற்று செயல் திட்டம், வெப்ப அலை, போக்குவரத்து உமிழ்வு கண்காணிப்பு போன்றவற்றிற்காக சுற்றுச்சூழல் சென்சார்கள் பொருத்த வேண்டியுள்ளது

எனவே, இந்த ஒப்பம் சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமத்திற்கு சமர்பிக்கப்பட்டது,

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னணு *(e-tender)* முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும், அலுவலக விலைப்பட்டியலை கருத்தில் கொண்டால் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஒப்பந்தத் தொகையான ரூபாய், *6,30,38,635.69* (ரூபாய் ஆறு கோடியே முப்பது இலட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து அறுநூற்றி முப்பத்தி ஐந்து பைசா அறுபத்தியொன்பது மட்டும்) ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையில் உள்ளது,

2) இவ்வொப்பத் தொகையானது அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் *(-)0.90%* குறைவாக உள்ளது,

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த விலை விகிதம் அளித்த கீழ்க்கண்ட ஒப்பந்ததாரருக்கு பணியை வழங்க *13.01.2026* அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கி உள்ளது,

எனவே, குறைந்த விலைப்புள்ளி அளித்த மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு பணியினை மேற்கொள்வதற்காக ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமத்தின் ஒப்புதல் *(Tender Scrutinizing Committee)* அளிக்கப்பட்ட ஒப்பத் தொகைக்கு பணி ஆணை வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது,

"13.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.25/2026, நாள். 13.02.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"16.02.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ,வி,ம,நி,) கூட்டத்தில் தீர்மான எண்.55/2026, நாள்.16.02.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ,வி,ம,நி,) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

க.து.ந.க.எண்.பி1/0258/2026

தீர்மான எண்: 210/2026 **பொருள் எண்.90**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 04, வார்டு - 43, தொற்றுநோய் மருத்துவமனையில் உள்ள ANM பெண்கள் தங்கும் விடுதியில் கூடுதலாக இரண்டாம் தளம் மற்றும் இதர கட்டுமான பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

1	பணியின் பெயர்	மண்டலம் - *04*, வார்டு -*43*, தொற்றுநோய் மருத்துவமனையில் உள்ள *ANM* பெண்கள் தங்கும் விடுதியில் கூடுதலாக இரண்டாம் தளம் மற்றும் இதர கட்டுமான பணிகள் மேற்கொள்ளும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : *04.01.2026*. 2. மன்ற தீர்மானம் எண் : *113/2026*, நாள் : *30.01.2026*.
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் - *04*.
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	*2025-2026* ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	

	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 3,20,43,154.37
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 57,67,767.79
	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 3,20,431.54
	(ஈ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 3,20,431.54
	(உ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 8,00,214.76
	மொத்தம் (Rounded Off)	ரூ. 3,92,52,000.00
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் *29.01.2026.* 2. தினத்தந்தி *29.01.2026.* 3. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் *29.01.2026.*
7	ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	09.02.2026
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	Miscellaneous (20 - 28 - 00 / 412 - 403 - 000)
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து *15/30* நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	இரண்டு *(e-Tender)* ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு *10.02.2026* அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு :

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ***2025-2026*** (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	***2025-2026*** ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	K S K Engineers	3,20,43,154.00	3,43,50261.09	(+) 7.20 % அதிகம்
2	Valli Saravana Constructions	3,20,43,154.00	3,41,09,937.43	(+) 6.45 % அதிகம்

இவ்வொப்பத்தில் திருவாளர். *Valli Saravana Constructions*., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் *L1* ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு :

வ. எண்	மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம்	*L1* ஒப்பந்ததாரர் ***2025-2026***ஆம் ஆண்டு ***SOR***-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம்
1	முதற் கட்ட விலை குறைப்பு நாள். *12.02.2026*	ரூ. *3,39,62,538.92 (+) 5.99 %* அதிகம்
2	இரண்டாம் கட்ட விலை குறைப்பு நாள் *12.02.2026*	ரூ. *3,36,38,903.07 (+) 4.98 %* அதிகம்

இதன்படி, மண்டலம் - *04*, வார்டு - *43*, தொற்றுநோய் மருத்துவமனையில் உள்ள *ANM* பெண்கள் தங்கும் விடுதியில் கூடுதலாக இரண்டாம் தளம் மற்றும் இதர கட்டுமான பணிகள் மேற்கொள்ளும் பணிக்காக *2025-2026*ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட *(+) 4.98 %* அதிகம், ஒப்பத் தொகை ரூ.*3,36,38,903.07* மற்றும் *18%* சரக்கு மற்றும் சேவை வரி ரூ.*60,55,002.55*ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.*3,96,93,906.00*-க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு *2025-2026* ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

வ. எண்.	மதிப்பீட்டின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூபாய்) *(A)*	தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் *(+) 4.98 %* சேர்த்து *(ரூபாய்) (B)*
1	*(அ)* கட்டுமான பணி செலவு	ரூ. *3,20,43,154.37*	ரூ. *3,36,38,903.07*
2	*(ஆ)* சரக்கு மற்றும் சேவை வரி *18%*	ரூ. *57,67,767.79*	ரூ. *60,55,002.55*
3	*(இ)* த.நா.க.தொ. ந.வா. *1%*	ரூ. *3,20,431.54*	ரூ. *3,20,431.54*
4	*(ஈ)* தரக்கட்டுப்பாடு *1%*	ரூ. *3,20,431.54*	ரூ. *3,20,431.54*
5	*(உ)* எதிர்பாரா செலவு *2.50%*	ரூ. *8,00,214.76*	ரூ. *8,00,214.76*
	மொத்தம் *(Rounded Off)*	ரூ. *3,92,52,000.00*	ரூ. *4,11,34,983.00*
		கூடுதல் தொகை *(B- A)*	ரூ. *18,82,983.00*

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட *(+)4.98%*, *2025-26* ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.*4,11,34,983.00*-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.4,11,34,983.00-க்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்காக 2025-2026ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.98% அதிகம், ஒப்பத் தொகை

ரூ.3,36,38,903.07 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.60,55,002.55ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.3,96,93,906.00-க்கு (ரூபாய் மூன்று கோடியே தொண்ணூற்று ஆறு இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து ஆறு மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். Valli Saravana Constructions., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,

3. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண் : Miscellaneous (20 - 28 - 00 / 412 - 403 - 000) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட இனம் 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் இனம் 1 மட்டும் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.41/2026ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு(பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

****

க.து.ந.க.எண்.பி1 / 0141 / 2026

தீர்மான எண்: 211/2026 **பொருள் எண்.91**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 05, வார்டு - 52 கல்லறை சாலையில் உள்ள சமுதாய நலக்கூடத்திற்கு மின் உபகரணங்கள் மற்றும் மின் இணைப்பு வழங்குதல், HAVC System மற்றும் மின்தூக்கி பொறுத்துதல் மற்றும் சுற்றுசுவர் மற்றும் இதர மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

1	பணியின் பெயர்	1. மண்டலம் - 05, வார்டு - 52 கல்லறை சாலையில் உள்ள சமுதாய நலக்கூடத்திற்கு மின் உபகரணங்கள் மற்றும் மின் இணைப்பு வழங்கும் பணி. 2. மண்டலம் - 05, வார்டு - 52 கல்லறை சாலையில் உள்ள சமுதாய நலக்கூடத்திற்கு HAVC System மற்றும் மின்தூக்கி பொறுத்தும் பணி. 3. மண்டலம் - 05, வார்டு - 52 கல்லறை சாலையில் உள்ள சமுதாய நலக்கூடத்திற்கு சுற்றுசுவர் மற்றும் இதர மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : 06.01.2026, 07.01.2026.
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் - 05.
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2025-2026 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 2,43,07,606.05
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 43,75,369.09
	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 2,43,076.06
	(ஈ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 3,41,948.80
	மொத்தம் (Rounded Off)	ரூ. 2,92,68,000.00
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 29.01.2026. 2. தினதந்தி 29.01.2026. 3. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 29.01.2026.
7	ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	09.02.2026
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	Community Centre (20 - 28 - 00 / 412 - 400 - 603)
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15/30 நாட்கள்	ஆம்

	ஒதுக்கப்பட்டுள்ளதா?	
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	இரண்டு *(e-Tender)* ஒப்பப்படிவங்கள் இணைய தளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு *10.02.2026* அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு *:*

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ***2025-2026*** *(*ரூ*)*	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை *(*ரூ*)*	***2025-2026***ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	RTI Foundation	2,43,07,606.00	2,68,81,781.48	(+) 10.59 % அதிகம்
2	K S K Engineers	2,43,07,606.00	2,60,33,446.03	(+) 7.10 % அதிகம்

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.9,74,02,853.00-க்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்காக 2025-2026ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.99% அதிகம், ஒப்பத் தொகை ரூ.8,02,88,470.40 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1,44,51,924.67ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.9,47,40,395.00-க்கு (ரூபாய் ஒன்பது கோடியே நாற்பத்து ஏழு இலட்சத்து நாற்பதாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். Jayam Engineering and Construction., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,
3. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண் :Slaughter House (20 - 28 - 00 / 412 - 400 - 606) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட இனம் 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.43/2026ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.102/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

க.து.ந.க.எண்.பி1/3064/2025

தீர்மான எண்: 219/2026 **பொருள் எண்.99**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 15, வார்டு - 196, 11 வது நிதி கண்ணகி நகர் 2வது பிரதான சாலையில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் 8 வகுப்பறைகள் மற்றும் மதிய உணவுக்கூடம் (G+2 Floors) கட்டும் பணி மற்றும் விவேகானந்தர் தெருவில் (மூட்டைக்காரன் சாவடி) உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில்

(G+1 Floor), கழிப்பறையுடன் கூடிய 2+2 வகுப்பறைகள் கட்டும் பணி ஆகிய பணிகளுக்காக திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

1	பணியின் பெயர்	1. மண்டலம் - 15, வார்டு - 196, 11 வது நிதி கண்ணகி நகர் 2வது பிரதான சாலையில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் 8 வகுப்பறைகள் மற்றும் மதிய உணவுக்கூடம் (G+2 Floors) கட்டும் பணி. 2. மண்டலம்-15, வார்டு- 196, விவேகானந்தர் தெருவில் (மூட்டைக்காரன் சாவடி) உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் (G+1 Floor), கழிப்பறையுடன் கூடிய 2+2 வகுப்பறைகள் கட்டும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : 05.11.2025. 2. மன்ற தீர்மானம் எண் : 1242 / 2025, நாள் : 19.12.2025.
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் - 15.
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2025-2026 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 3,48,45,626.30
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 62,72,212.73
	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 3,48,456.26
	(ஈ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 2,28,814.01
	(உ) மின்சார கட்டணம்	ரூ. 60,000.00
	(ஊ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 8,44,890.68
	மொத்தம் (Rounded Off)	ரூ. 4,26,00,000.00
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 25.12.2025. 2. தினமலர் 20.12.2025. 3. டெக்கான் க்ரானிக்கல் 20.12.2025.

7	ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	31.12.2025
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	Primary School (20 -28-00 /412 - 400 - 401) Middle School (20 - 28 - 00 / 412 - 400 - 402)
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து *15/30* நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	இரண்டு *(e-Tender)* ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டன.

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு *31.12.2025* அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு *:*

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ***2025-2026*** *(ரூ)*	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை *(ரூ)*	***2025-2026***ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	Pearl Construction	3,48,45,626.00	3,65,53,061.67	*(+) 4.90 %* அதிகம்
2	S Valli	3,48,45,626.00	3,72,84,819.82	*(+) 7.00 %* அதிகம்

இவ்வொப்பத்தில் திருவாளர். *Pearl Construction*., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் *L1* ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு

வ. எண்	மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம்	*L1* ஒப்பந்ததாரர் ***2025-2026***ஆம் ஆண்டு ***SOR***-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம்
1	முதற் கட்ட விலை குறைப்பு நாள் *06.01.2026*	ரூ. *3,65,49,577.11 (+) 4.89 %* அதிகம்
2	இரண்டாம் கட்ட விலை குறைப்பு நாள் *06.01.2026*	ரூ. *3,65,46,092.55 (+) 4.88 %* அதிகம்

இதன்படி, மண்டலம் - *15*, வார்டு - *196*, *11* வது நிதி கண்ணகி நகர் *2*வது பிரதான சாலையில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் *8* வகுப்பறைகள் மற்றும் மதிய உணவுக்கூடம் *(G+2 Floors)* கட்டும் பணி மற்றும் விவேகானந்தர் தெருவில் *(*மூட்டைக்காரன் சாவடி*)* உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் *(G+1 Floor)*, கழிப்பறையுடன் கூடிய *2+2* வகுப்பறைகள் கட்டும் பணி ஆகிய பணிகளுக்காக *2025-2026*ஆம் ஆண்டின் அலுவலக

விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.88% அதிகம், ஒப்பத் தொகை ரூ.3,65,46,092.55 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.65,78,296.65ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.4,31,24,389.00-க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு 2025-2026 ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

வ. எண்.	மதிப்பீட்டின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூபாய்) (A)	தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் (+) 4.88 % சேர்த்து (ரூபாய்) (B)
1	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 3,48,45,626.30	ரூ. 3,65,46,092.55
2	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 62,72,212.73	ரூ. 65,78,296.65
3	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 3,48,456.26	ரூ. 3,48,456.26
4	(ஈ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 2,28,814.01	ரூ. 2,28,814.01
5	(உ) மின்சார கட்டணம்	ரூ. 60,000.00	ரூ. 60,000.00
6	(ஊ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 8,44,890.68	ரூ. 8,44,890.68
	மொத்தம் (Rounded Off)	ரூ. 4,26,00,000.00	ரூ. 4,46,06,550.00
		கூடுதல் தொகை (B- A)	ரூ. 20,06,550.00

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+) 4.88%, 2025-26 ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.4,46,06,550.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, மேற்கண்ட பணிக்கான ஒப்பத்தினை குறைந்த ஒப்பம் அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர். Pearl Construction., அவர்களுக்கு வழங்க TNULB Rules 2023ன் படி ஒப்புதல் வேண்டப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.4,46,06,550.00-க்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்காக 2025-2026 ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.88% அதிகம், ஒப்பத் தொகை ரூ.3,65,46,092.55 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.65,78,296.65ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.4,31,24,389.00-க்கு (ரூபாய் நான்கு கோடியே முப்பத்தோரு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து முந்நூற்று எண்பத்து ஒன்பது மட்டும்) ஒப்பத்தினை

L1 ஒப்பந்ததாரர் திருவாளர். *Pearl Construction*., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,

3. மேலும் மேற்கண்ட பணியின் அவசியம் மற்றும் அவசரம் ஒப்பந்ததாரரான திருவாளர். *Pearl Construction*., அவர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதியும்,
4. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண் : *Primary School (20 - 28 - 00 / 412 - 400 - 401)* மற்றும் *Middle School (20 - 28 - 00 / 412 - 400 - 402)* நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் இனம் *1* மட்டும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.46/2026ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி)வின் பின்னேற்பு அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் *16.02.2026* அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.104/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

****

ம.நீ.வ.து.நி.க.எண்.பி3/099/2026

தீர்மான எண்: 220/2026 **பொருள் எண்.100**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை - மண்டலம் - 02, வார்டு 20க்குட்பட்ட மணலி ஏரியில் கூடுதல் மேம்படுத்தும் பணிக்கு ஒப்பம் கோரியதில் 2024-2025 ஆம் ஆண்டின் அடிப்படையில் அலுவலக விலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு தவறுதலாக 2025-2026 ஆண்டு என நிர்வாக ஒப்புதல் முதல் மன்றத்தீர்மானம் வரை ஒப்புதல் பெறப்பட்டதை 2024-2025ஆம் ஆண்டு என திருத்தியவாறு குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s. GM Infras அவர்களுக்கு ஒப்பம் ஒப்புதல் மற்றும் பணி ஏற்பு கடிதம் வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி மழைநீர் வடிகால் துறை மண்டலம்-*02*, வார்டு *20*க்குட்பட்ட மணலி ஏரியில் கூடுதல் மேம்படுத்தும் பணி *2025-2026* ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ, *4,55,00,000* கோடிக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு நிலைக்குழுவின் (வரிவிதிப்பு மற்றும் நிதி)அனுமதி பெற்று பணியினை செயல்படுத்தும் பொருட்டு ஒப்பந்தபுள்ளி *14.01.2026* அன்று கோரப்பட்டு இவ்வொப்பந்தபுள்ளி *15.01.2026* அன்று ஆங்கில செய்தித்தாளான "நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" தமிழ் செய்திதாளான "தினத்தந்தி" மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தபுள்ளி செய்தி மலரிலும் ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது,

இதனை தொடர்ந்து மின்னணு ஒப்பம் திறப்பு நாளான *29.01.2026* அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பம் திறக்கப்பப்பட்டன. இவ்வொப்பத்தில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர். இதற்கான தொழில்நுட்ப ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட ஒரு ஒப்பந்ததாரர் மட்டும் தகுதி வாய்ந்தவராக தேர்வு செய்யப்பட்டார். அதன் விவரம் பின்வருமாறு:-

அட்டவணை-*I*

வ. எண்	பெயர் திரு/திருவாளர்	பணியின் அலுவலக மதிப்பு *(Incl 18% GST)*	குறிப்பு
1	M/s. GM Infras	4,38,42,710.29	தொழில் நுட்ப ஆவணங்களின் அடிப்படையில்

			தகுதியுடையவர்கள்
2	M/S Thomas Iyadurai Infrastructure Pvt Ltd		தொழில் நுட்ப ஆவணங்களின் அடிப்படையில் தகுதி பெறவில்லை

இதன் தொடர்ச்சியாக, இப்பணிகளுக்கு தொழில் நுட்ப ஆவணத்தில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரின் நிதி ஆவணங்கள் *06.02.2026* அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:-

அட்டவணை-*II*

வ-எண்	ஒப்பத்தில் கலந்துகொண்ட தகுதியுடைய ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை *2024-25* ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல் படி *(18 % GST* சேர்த்து) ரூ	ஒப்பந்ததாரர் அளித்த தொகை *(18 % GST* சேர்த்து) ரூ	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் *2024-25* ஆண்டு அலுவலக விலைப் பட்டியலின்படி
1	M/s. GM Infras	4,38,42,710.29	4,7814,859.84	(+)9.06%

மேற்கண்ட பணிக்கு விலை ஒப்பீட்டு அறிக்கையின்படி குறைந்த விலைப்புள்ளி அளித்த தகுதியான ஒப்பந்ததாரரான *M/s. M/s. GM Infras* அவர்கள் அலுவலக விலையைவிட *(+)9.06%* கூடுதலாக அளித்துள்ளார்.

மேலும், ஒப்பப்புள்ளி அளித்த தகுதியுடைய ஒப்பந்ததாரரான *M/s. GM Infras* அவர்களிடம் *06.02.2026* அன்று விலைக் குறைப்பு செய்ய கோரியதில் ஒப்பந்தத்தில் வழங்கிய விலையினை கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அட்டவணை-*III*

வ-எண்	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் பெயர் திரு/திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை *2024-25* ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல் படி *(18% GST* சேர்த்து) ரூ	விலைக்குறைப்புக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத் தொகை *(18 % GST* சேர்த்து)	*1*வது விலைக்குறைப் புக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் *2024-25* ஆண்டு அலுவலக விலை விவரப் பட்டியல்படி
1	M/s. GM Infras	4,38,42,710.29	4,58,02,479.44	(+) 4.47%

மேற்குறிப்பிட்டுள்ள ஒப்ப சதவீதம் ஏற்க பரிந்துரை வேண்டி. இப்பணிக்கான ஒப்பந்த புள்ளிகள் விவர அறிக்கை *06.02.2026* அன்று துணை ஆணையர் (பணிகள்) அவர்களின்

தலைமையிலான ஒப்பம் ஆய்வுக் குழுவிடம் *(Tender Scrutiny Committee)* சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே,

1. மேற்காணும் கோப்பு ஆய்வு செய்ததில் ஒப்பம்கோரப்பட்ட நிகழ்வில் 2024-2025 ஆம் ஆண்டின் அடிப்படையில் அலுவலக விலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு தவறுதலாக 2025-2026ஆம் ஆண்டு என நிர்வாக ஒப்புதல் முதற்கொண்டு மன்றத்தீர்மானம் வரை ஒப்புதல் பெறப்பட்டதை 2024-2025 என சிறு திருத்தம் செய்திட அனுமதியும்,
2. பெருநகர சென்னை மாநகராட்சி மழைநீர் வடிகால் துறை - மண்டலம்-02, வார்டு 20க்குட்பட்ட மணலி ஏரியில் கூடுதல் மேம்படுத்தும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s. GM Infras அவர்களுக்கு ஒப்பத் தொகை ரூ.4,58,02,479.44/- (Including GST 18%) (நான்கு கோடியே ஐம்பத்து எட்டு இலட்சத்து இரண்டாயிரத்து நாநூற்று எழுபத்து ஒன்பது மற்றும் நாற்பத்து நான்கு பைசா மட்டும்) என்ற மதிப்பிற்கு 2024-25 ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி (+)4.47% கூடுதல் விழுக்காட்டில் நிலைக்குழுவின் ஒப்புதலை எதிர்நோக்கி பணி ஏற்பு கடிதத்தை நிலைக்குழுவின் ஒப்புதலுக்கு முன்பாகவே வழங்க அனுமதியும், மற்றும் ஒப்பத்தின் மீதான அனுமதியும்,
3. மேற்காணும் பணிகளுக்குண்டான செலவினங்களை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி கணக்கு குறியீடு எண்.412-401-100 (Storm Water Drain Culvert) என்ற தலைப்பில் பட்டி தீர்வு செய்யவும், நிதி நிர்வாக பிரிவின் மூலம் இதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.45/2026ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.103/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.5.ந.க.எண்.8835/2024

தீர்மான எண்: 221/2026 **பொருள் எண்.101**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, பகுதி– 13 & 14, துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சாலையோரம் குடிசைவாசிகள் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் குடியமர்வு செய்வது - கணக்கீடு மேற்கொள்ளப்பட்டது – 54 குடும்பங்களுக்கு BRN கார்டன், கிளைவ் பேட்டரி, எல்லிஸ்புரம், காலியாக உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் குடியமர்வு செய்வது - பயனாளிகளின் பங்கு தொகை செலுத்துவது - மன்றத்தின் அனுமதி .

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, பகுதி– 13 & 14 – துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சாலையோரம் குடிசைவாசிகள் சுமார் பல வருடங்களுக்கு மேலாக வாழ்வாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையில் சாலையோரம் பல குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். துறைமுகம் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் சாலையோரம் வாழும் குடிசைவாசிகளுக்கு வாழ்வாதாரம் மேம்படும் வகையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் புதிய அடுக்குமாடி கட்டிடங்கள் கட்டப்பட்டு தயார் நிலையில் உள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு தமிழக துணைமுதல்வர், மாண்புமிகு இந்துசமய (ம) அறநிலைத்துறை அமைச்சர் மற்றும் தலைவர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்கள் மற்றும் மாண்புமிகு மேயர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சாலையோரம்

குடிசைப் பகுதிகளை பல்வேறு நாட்களில் நேரடி களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் சம்மந்தப்பட்ட சாலையோரம் குடிசைவாசிகள் தங்களுடைய வாழ்வாதாரத்திற்காக தமிழக அரசின் குடியிருப்புகளில் தங்களுக்கு வீடு ஒதுக்கி தருமாறு கோரிக்கை விடுத்தனர். இவர்கள் தங்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் குடியிருப்புகளில் மாற்று இடம் ஒதுக்கீடு செய்து தரும்படி மாநகராட்சியை அணுகி கேட்டுக்கொண்டதின் தொடர்ச்சியாக மண்டலம் -5, பகுதி-13&14, துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சாலையோரம் வசிக்கும் மக்களை கடந்த வருடத்திலிருந்து தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதனை இப்பகுதிவாழ் மக்களுக்கு தெரிவிக்கும் வண்ணமாக 05.01.2026 அன்று செயற்பொறியாளர்/மண்டலம்-5, கடன் உதவி வழங்கும் வங்கி அதிகாரிகள் மற்றும் மண்டலம் -5, பகுதி-13 & 14 - துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சாலையோரம் வசித்து வரும் சம்பந்தப்பட்ட குடும்பங்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளின் பங்கு தொகை செலுத்துவதற்கு கடன் உதவி ஏற்பாடு செய்ய அறிவுரை வழங்கப்பட்டது. பயனாளிகளின் பங்கு தொகையை வங்கி கடன் பெற்று செலுத்துவதற்கு இப்பகுதிவாழ் மக்களும் இசைவு தெரிவித்தனர்.

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களின் 20.01.2026 நாளிட்ட கடிதத்தின்படி தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் குடியிருப்பு ஒதுக்கீடு கோரும் சாலை ஓரம் நீண்ட காலமாக வசித்து வரும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் BRN கார்டனில் காலியாக உள்ள 21 குடியிருப்புகள், கிளைவ் பேட்டரி பகுதியில் காலியாக உள்ள 19 குடியிருப்புகள் கோட்டம்-59, எல்லிஸ்புரம் பகுதியில் காலியாக உள்ள 14 குடியிருப்புகளில் என மொத்தம் 54 குடியிருப்புகள் ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்க வேண்டப்படுகின்றது.

திட்டப்பகுதியில் திருத்திய அரசாணையின்படி பயனாளி பங்குத் தொகை விவரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

வ. எண்	குடியிருப்பின் பெயர்	குடியிருப்பின் மதிப்பு	பெருநகர சென்னை மாநகராட்சி பங்காளிப்பு (1/3)	பயனாளி பங்குத் தொகை (ஒரு குடியிருப்புக்கு) ரூ.
1	BRN கார்டன்	ரூ.3,00,000/-	21 x 1,00,000/- = 21 இலட்சம்	21 x 2 இலட்சம்
2	கிளைவ் பேட்டாரி	ரூ.9,99,00.00/-	19 x 3,33,000/- = 63.27 இலட்சம்	19 x 6.66 இலட்சம்
3	எல்லிஸ்புரம்	ரூ.5,00,000/-	14x 1,67,000 = 23.38 இலட்சம்	14 x ரூ.3,33,000 இலட்சம்

	மொத்தம்	ரூ1,07,65,000	

வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை அரசு இணை செயலாளர் அவர்களின் *09.08.2024* நாளிட்ட கடிதத்தில், ஏழைகளுக்கு வீடு கொடுக்கும் திட்டத்தில் பயனாளி பங்குத்தொகை குறைப்பினை தொடர்புடைய உள்ளாட்சி நிர்வாகம் தான் ஏற்க வேண்டும், மேலும், அரசு நிதியில் இருந்து எந்த செலவையும் ஈடுகட்ட இயலாத நிலை உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது, எனவே, மண்டலம் -*5*, பகுதி-*13 & 14* - துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தெருவோரம் வசித்து வரும் குடும்பதாரர்களுக்கு வீடுகள் வழங்கப்பட வேண்டுமென்றால் நிர்ணயிக்கப்பட்ட பயனாளிகளின் பங்குத்தொகை கட்டப்பட வேண்டும், எனவே, மண்டலம்-*5* தெருவோரங்களில் பல ஆண்டுகளாக வாழ்ந்து வரும் மக்களின் சமூக பொருளாதாரத்தின் நிலையினை கருத்தில் கொண்டு இந்த முழுத்தொகையை கட்டுவதனை தளர்த்தி குடியிருப்புகளுக்கான மதிப்பில் மூன்றில் இரண்டு பங்கினை சம்பந்தப்பட்ட *54* குடியிருப்புவாசிகளும், அவ்வாறே *54* குடியிருப்புகளின் மூன்றில் ஒரு பங்கான ரூ1,07,65,000, (ஒரு கோடியே ஏழு இலட்சத்து அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) னை பெருநகர சென்னை மாநகராட்சியால் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு வழங்குவதற்கு ஆணை வேண்டப்படுகிறது.

மேலும், இது நீண்ட நாள் பிரச்சனையாக தொடர்வதனையும், நீதிமன்ற ஆணைக்கு இணங்க சாலை ஓர ஆக்கிரமிப்புகளை அகற்றி ஆக்கிரமிப்பாளருக்கு மறு குடியமர்வு செய்ய அவசியம் என்பதாலும் இக்கருத்துரு குறித்து, நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.106/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.8.வ.து.ந.க.எண்.ஆர்1/408/2026

தீர்மான எண்: 222/2026 **பொருள் எண்.102**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 08, கோட்டம் - 94, சிட்கோ நகர், 4வது பிரதான சாலை, சென்னை - 49ல் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக் கூடம் - பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதித்து வாடகை மற்றும் முன்வைப்புத் தொகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-08, கோட்டம் -94 – பகுதி -21 சிட்கோ நகர், 4வது பிரதான சாலை, சென்னை - 49ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் (ராஜ்ய சபா) நிதியின் கீழ் சமுதாய நலக் கூடம் புதிதாக கட்டப்பட்டுள்ளது.

மேற்படி சமுதாய நலக்கூடம் பொது மக்களின் பயன்பாட்டிற்கு அனுமதிக்கவும், வாடகை மற்றும் முன் வைப்புத் தொகை நிர்ணயிக்கவும் வார்டு குழுவில் பொருள் கீழ்கண்டவாறு வைக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட கட்டிடமானது தரைதளம் 4412 சதுரடியிலும், முதல் தளம் 4412 சதுரடியிலும், 2வது தளம் 4412 சதுரடியிலும் மாடி அறை 1307 சதுரடியிலும் ஆக மொத்தம் 14543 சதுரடி கொண்ட கட்டிடமாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சி சொத்து வரி மதிப்பில் வார்டு 94 நான்காவது பிரதான சாலை, சிட்கோ நகர் பகுதிக்கு குடியிருப்பு அல்லாத கட்டிடத்திற்கு ஒரு சதுர அடிக்கு ரூ.7.50 (BSR RATE) ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, கோட்டம் 94, பகுதி-21, சிட்கோ நகர், 4வது பிரதான சாலை, சென்னை - 49ல் புதிதாக கட்டப்பட்டுள்ள சமூக நலக்கூடத்திற்கு இந்த மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு கீழ்கண்ட விவரங்களின்படி வாடகை நிர்ணயம் செய்யலாம்.

கணக்கீட்டுத்தாள்

கட்டிடத்தின் விவரம்.

வ. எண்	தளம்	சதுரடி	உபயோகத்தன்மை

1.	தரைதளம்	4412 சதுரடி	வாகன நிறுத்துமிடம்
2.	முதல் தளம்,	4412 சதுரடி	உணவு தயாரிக்கும் (ம) உணவு அருந்துமிடம்
3.	2வது தளம்	4412 சதுரடி	நிகழ்ச்சி நடத்துமிடம்
4.	மாடி அறை	1307 சதுரடி	மணமகன் (ம) மணமகள் அறை
மொத்தம்		14543 சதுரடி	

கட்டிடத்தின் மொத்த சதுரடி 14543 ச.அடி X ரூ.7.50 (Non residential BSR Rate) x 12 = 1308870/-

ஆண்டுக்கு 40 நிகழ்ச்சிகள்

ஒரு நாள் வாடகை ரூ. 33000/- (Rounded off) (சேவை வரி தனியே)

அரை நாள் வாடகை ரூ. 16500 /- (Rounded off) (சேவை வரி தனியே)

முன்வைப்புத் தொகையை ரூ.10,000/- ஆக நிர்ணயம் செய்யலாம்.

மண்டலம்-8, வார்டு குழு தீர்மான எண்.264, நாள். 12.02.2026, கோட்டம் 94, பகுதி-21, சிட்கோ நகர், 4வது பிரதான சாலை, சென்னை - 49ல் அமைந்துள்ள சமுதாய நலக்கூடம் பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்கவும், ஒரு நாள் வாடகை ரூ. 33,000/- (G.S.T.தனியே), அரை நாள் வாடகை ரூ.16,500/- (G.S.T.தனியே), முன்வைப்புதொகை ரூபாய் 10,000/- என நிர்ணயம் செய்ய வார்டு குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது

பிற நிபந்தனைகள்:

1. அரசியல் நிகழ்ச்சிகள் வணிக ரீதியான நிகழ்ச்சிகள் போன்றவைகளுக்கு அனுமதி கிடையாது.
2. சென்னை மாநகராட்சி பயன்பாட்டிற்காக அலுவலர் கூட்டங்கள் இயற்கை இடர்பாடுகளின் போது பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் தேர்தல் பணிகள் போன்ற தவிர்க்க முடியாத அவசர நிகழ்வுகளில் சமுதாய நலக்கூடம் தேவைப்படின் மனுதாரருக்கு வழங்கப்படும் முன்பதிவானது ரத்து செய்யப்படும்.
3. ஒதுக்கீடு பெற்ற நிகழ்ச்சிக்காக மட்டுமே சமுதாய நலக்கூடம் பயன்படுத்திட வேண்டும்.
4. சமுதாய நலக்கூடத்திற்குள் உள்ள பொருட்களை சேதப்படுத்தினால் அதற்குரிய தண்டத் தொகை வசூலிக்கப்பட்டு முன்வைப்புத் தொகையிலிருந்து நேர் செய்யப்படும்.

எனவே, கோட்டம் 94, பகுதி-21, சிட்கோ நகர், 4வது பிரதான சாலை, சென்னை - 49ல் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்திற்கு ஒரு நாள் வாடகை ரூ.33,000/- (G.S.T.தனியே), அரை நாள் வாடகை ரூ. 16,500/- (G.S.T.தனியே) , மற்றும் முன்வைப்பு தொகை ரூபாய் 10,000/- நிர்ணயம் செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்

தன்மையை கருத்தில் கொண்டு 19.02.2026 அன்று தீர்மான எண்.107/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.2.ந.க.எண்.எச்2/0145/2026

தீர்மான எண்: 223/2026 **பொருள் எண்.103**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-2 (மணலி) கோட்டம் 15 முதல் 22 வரையுள்ள பகுதிகளில் சுகாதார களப் பணிக்காக - தற்காலிக தினக்கூலி அடிப்படையில் சுய உதவிக் குழுக்கள் மூலம் (SHG) பணியமர்த்தப்பட்ட 90 தற்காலிக சுகாதார களப் பணியாளர்களின் பணிக்காலம் 21.04.2025ல் முடிவடைகிறது - நிர்வாக நலன் மற்றும் அவசர அவசியம் கருதி மேலும் 24.04.2026 முதல் 23.04.2027 வரை ஒரு வருட காலத்திற்கு பணியில் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-2, கோட்டம் 15 முதல் 22 வரையுள்ள பகுதிகளில் வீடுவீடாக சென்று கொசுப்புழு கண்டறிந்து அழித்தல், மருந்து ஊற்றுதல், தற்காலிக கொசுப்புழு உற்பத்தி ஆதாரங்களை கண்டறிந்து அப்புறப்படுத்துதல், வீடு மற்றும் மழைநீர் வடிகால்வாய்களில் புகைப்பரப்புதல், கொசுப்புழுக் கொல்லி மருந்து தெளித்தல் முதலிய கொசுவினால் பரவக்கூடிய மலேரியா, டெங்கு, சிக்கன் குனியா முதலிய தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் பணிகளோடு மற்றும் எலி தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி இருப்பதால் அனைத்து பணிகளையும், மேற்கொள்ள, மண்டலம்-2ல் 19 நிரந்தர சுகாதார கள பணியாளர்கள் மட்டுமே உள்ளனர்.

இதனால் மேற்குறிப்பிட் அனைத்து பணிகளும் தொய்வடையும் நிலையில் இருந்த காரணத்தினால், சுய உதவி குழுக்கள் மூலம் (SHG) தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் ஈடுபடுத்தி பணிகள் மேற்கொள்ள சுய உதவி குழுக்கள் மூலம் (SHG) தற்காலிக தினக்கூலி பணியாளர்களை கொண்டு 22-04-2025 முதல் 21-04-2026 வரை பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களின், 15.03.2025 நாளிட்ட ஆணை பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது,

மேற்கண்ட பணி *21-04-2026* அன்றுடன் முடிவடையும் தருவாயில் உள்ளதால், மேலும் ஒரு வருட காலத்திற்கு *24-04-2026* முதல் *23-04-2027* வரை பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

தற்போது பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப குடியிருப்புகளின் எண்ணிக்கையும் *34437*ல் இருந்து சுமார் *40,000* வீடுகளாக பெருகியுள்ளது. கூடுதலாக்கப்பட்ட வீடுகள் மற்றும் குடும்பங்களுக்கு ஏற்பவும், தொழிற்சாலைகளிலும் மேற்படி பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே பணிபுரிந்து வரும் *90* பணியாளர்களை கொண்டு (சுகாதார களப்பணி மேற்கொள்ள கீழ்கண்டவாறு விவரங்கள் அளிக்கப்படுகிறது.

மண்டலம்-*2*ல் பணிபுரியும் சுகாதார கள பணியாளர்களின் விவரம்

வார்டு-*15*	வார்டு-*16*	வார்டு-*17*	வார்டு *18*	வார்டு *19*	வார்டு *20*	வார்டு *21*	வார்டு-*22*	மொத்தம்-
3	*1*	*1*	*2*	*7*	*1*	*2*	*2*	*19*

(SHG) சுய உதவி குழுக்கள் மூலம் பணிபுரியும் தற்காலிக தினக்கூலி பணியாளர்களின் விவரம்

வ. எண்	வார்டு	தற்போது பணிபுரிந்து வரும் *(SHG)* தற்காலிக பணியாளர்களின் விவரம்	மொத்தம்
(1)	(2)	(3)	(4)
1	15	13	13
2	16	13	13
3	17	10	10
4	18	14	14
5	19	14	14
6	20	9	9
7	21	9	9
8	22	8	8
மொத்தம்		90	90

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-*2*ல் சுகாதார களப் பணிக்காக *19* நிரந்தர பணியாளர்கள் பணிபுரிந்து வரும் நிலையில் சுகாதார களப் பணியின் அவசர அவசியம் கருதி சுய

உதவி குழுக்கள் மூலம் *(SHG)* தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் தற்போது பணிபுரிந்து வரும் *90* பணியாளர்களின் பணிக்காலம் வரும் *21.04.2026* அன்று முடிவடைய உள்ளதால் மேற்படி பணி தொடர்ந்து நடைபெறும் பொருட்டு நிர்வாக நலன் கருதி *24-04-2026* முதல் *23-04-2027* வரை தினக்கூலி அடிப்படையில் ஒராண்டு காலத்திற்கு *90* பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின், *05.12.2025* நாளிட்ட சுற்றறிக்கையின்படி திடக்கழிவு மேலாண்மைத்துறையின் கீழ் அனைத்து மண்டலங்களிலும் அண்டை வீட்டு குழுவின் வழியாக பணியமர்த்தப்பட்டுள்ள தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு *(Unskilled worker)* நாள் ஒன்றுக்கு *01/04/2025* முதல் தினக்கூலி ரூ*753/.* லிருந்து ரூ.*761/-* ஆக உயர்த்தி மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டுள்ளது

வ.எண்	பணி விவரம்	தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை	ஒப்பந்தம் காலம்	தினக்கூலி	மதிப்பீடு ரூ.
1.	சுகாதார களப்பணிகள் மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணிகள்	*90*	*23.04.2026* முதல் *22.04.2027* வரை *365* நாட்கள்	ரூ.*761/-*	ரூ.*2,49,98,850/-*

எனவே,

1. மண்டலம்-2-ல் 24.04.2026 முதல் 23.04.2027 வரை சுகாதார களப்பணி கொசு மூலம் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு மற்றும் சிக்கன்குனியா முதலான நோய்களை தடுக்கும் பணி மேற்கொள்ள 90 பணியாளர்களை SHG சுய உதவிக் குழுக்களின் மூலம் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ள நிர்வாகஅனுமதியும்,
2. இந்த பணியாளர்களுக்கு 24.04.2026 முதல் 23.04.2027 வரை தினக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்க தேவையான செலவீனத் தொகை ரூ.761 X 90 X

365 = ரூ.2,49,98,850/- (ரூபாய், இரண்டு கோடியே நாற்பத்தி ஒன்பது இலட்சத்து தொண்ணுற்றி எட்டாயிரத்து எண்ணூற்று ஐம்பது மட்டும்) யை கணக்குதலைப்புஎண். 30-32-02 (ANTI MOSQUITO OPERATION) 210-10-06-02 (PAYMENT TO CASUAL STAFF-HEALTH WORKS)–ன் கீழ்பட்டிதேர்ச்சிசெய்யவும்,

3. SHG சுய உதவிக்குழுவின் கீழ் உள்ள குழு உறுப்பினர்களுக்கு வருமானவரி பிடித்தம் செய்வதிலிருந்தும் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,
4. 24-04-2026 முதல் 23-04-2027 வரை 90 SHG சுய உதவிக் குழுவின் மூலம் சுகாதார பணியாளர்களை சுகாதார பணியில் ஈடுபடுத்தவும்,
5. சுகாதார பணிக்கான குழு உறுப்பினர்களின் ஊதியத்தை 365 நாட்களுக்கு ஆணையர் அவர்களின் 05.12.2025 நாளிட்ட சுற்றறிக்கையின்படி நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.761/- ஐ வழங்குவற்கு நிர்வாக அனுமதியும்,
6. தற்போது சுகாதார நல பணியாளர்களுக்கு ஆணையர் அவர்களின் 2025- 2026 சுற்றறிக்கையின் படியும் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி 761/- வழங்கப்பட்டு வருகிறது, அடுத்த ஆண்டு 2026-2027 ஆம் ஆண்டிற்கான ஆணையர் அவர்களால் நிர்ணயம் செய்து உயர்த்தி வழங்கும் தொகையை வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது,

> "ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.048/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்,

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்,

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ7.ந.க.எண்.எஸ்1/ 013/2026

தீர்மான எண்: 224/2026 **பொருள் எண்.104**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 7, அம்பத்தூர் - பகுதி – 20 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அண்டை வீட்டு குழு (SHG) வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 15.04.2026 உடன் முடிவடைகிறது. 559 எண்ணிக்கை கொண்ட தூய்மை பணியாளர்களை கொண்டு 16.04.2026 முதல் 14.07.2026 வரை (90 நாட்கள்) பணியினை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி - 20, வார்டு - 89 முதல் வார்டு 93 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 13.08 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 16 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 884 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி-20இன் கீழ் உள்ள 89 முதல் 93 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 2,81,264 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7 அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 360 மெட்ரிக் டன் குப்பைகள் வார்டு-79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் தூய்மை பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர தூய்மை தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால், தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் தூய்மை பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 20இல் (வார்டு – 89 முதல் 93 – வரை) போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும், இன்றைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப தூய்மை பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution private Limited அவர்களுக்கு வார்டு 82, 83 மற்றும் 85ல் பணியாணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பகுதி - 20இல் தற்சமயம் நிரந்தர தூய்மை பணியாளர்கள் மண்டலம்-6 லிருந்து 34 எண்ணிக்கை கொண்ட பணியாளர்கள் வரபெற்றுள்ளனர். இந்த எண்ணிக்கை போதுமானதாக இல்லாத பட்சத்தில் அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக 559 எண்ணிக்கை கொண்ட தற்காலிக தூய்மை பணியாளர்களை வைத்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் தூய்மை பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதாலும் அதற்கேற்ப அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்றத் தீர்மான எண். 1046/2025, நாள்.30.09.2025-ன்படி, அண்டை வீட்டு குழு (SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள் 559 பணியாளர்களை பணியமர்த்தி தூய்மை பணிகளை மேற்கொள்ள 16.10.2025 முதல் 15.04.2026 வரை (182 நாட்கள்) ஆறு மாத காலத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது தூய்மை பணி நடைப்பெற்று வருகிறது.

மேலும், பகுதி-20இல் கோட்டம்-89 முதல் 93 வரை உள்ள கோட்டங்களில் 30 அண்டை வீட்டு குழுவின் வழியாக இப்பணியாளர்களுக்கு தினக்கூலியானது மாதாமாதம் அண்டை வீட்டு குழு(SHG)களின் வங்கிகணக்கிற்கு RTGS மூலமாக பணபரிவர்த்தனை செய்யப்பட்டு குழுக்களின் வங்கி கணக்கிலிருந்து அக்குழுவில் உள்ள ஒவ்வொரு பணியாளர்களுக்கும் தனித்தனியாக RTGS மூலமாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வரப்படுகிறது.

மண்டலம்-7, பகுதி-20இல் அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை வைத்து தொடர்ந்து 16.04.2026 முதல் 14.07.2026 வரை 90 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், பகுதி - 20 (வார்டு - 89 முதல் 93 வரை) தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை 16.04.2026 முதல் 14.07.2026 வரை (90 நாட்களுக்கு) பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 559 தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள், தூய்மை பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-20க்கு, தேவை என கணக்கிட்டு 16.04.2026 முதல் 14.07.2026 வரை (90 நாட்களுக்கு) எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம் 7இல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின், 05.12.2025 நாளிட்ட திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.761/- வீதம் 559 பணியாளர்களுக்கு 16.04.2026 முதல் 14.07.2026 வரை (90 நாட்களுக்கு) ஆகும் செலவு ரூ.3,82,85,910/- (ரூபாய். மூன்று கோடியே

எண்பத்தியிரண்டு இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து பத்து மட்டும்)க்கு என மூன்று மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

வ.எண்	பகுதி எண்	தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை	தோராய செலவினம்
1	*20*	*559*	ரூ.*761 x 559 x 90* (நாட்கள்) = ரூ.*3,82,85,910/*
மொத்தம்			ரூ.*3,82,85,910/*

எனவே,

1. *16.04.2026* முதல் *14.07.2026* வரை *(90* நாட்களுக்கு*)* அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – *7*இல் குப்பைகளை அகற்ற *Chennai Enviro Solution private Limited* மூலம் பகுதி-*20*ல் உள்ள *5* வார்டுகளை எடுத்து *(Takeover)* தூய்மை பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை, எது முன்னர் வருகிறதோ *(Whichever be earlier)* என்ற அடிப்படையில் தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு அண்டை வீட்டு குழு*(SHG)*வின் வழியாக *559* எண்ணிக்கையிலான தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணியை மேற்கொள்ளவும்,

2. மேற்கண்ட *559* தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.*761/-* வீதம், *16.04.2026* முதல் *14.07.2026* வரை *90* நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.*3,82,85,910/-* (ரூபாய், மூன்று கோடியே எண்பத்தியிரண்டு இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து பத்து மட்டும்)-க்கு நிருவாக அனுமதி வேண்டியும்,

3. இப்பணியை கணக்கு குறியீட்டு எண்.*40 - 41- 03* கணக்கு தலைப்பு எண்- *210 –100 - 601* கீழ் *2026-27*ஆம் நிதி ஆண்டிற்கு ரூ. *4,00,00,000/-* (நான்கு கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.049/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை

உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ13.பொ.சு.து.நக.எண்.எச்1/0159/2026

தீர்மான எண்: 225/2026 **பொருள் எண்.105**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-13 -பகுதி-38, 39, 40 மற்றும் 40A- கோட்டம்-168 முதல் 180 வரை - சுய உதவி குழுக்களின் மூலம் தற்காலிக தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட 267 பணியாளர்களின் பணிக்காலம் 15.04.2025 அன்றுடன் முடிவடைவது - மீண்டும் 16.04.2026 முதல் 15.04.2027 வரை ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்தி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, மண்டலம்-*13 (*அடையாறு*)*, பகுதி-*38, 39, 40* மற்றும் *40A*, கோட்டம்-*168* முதல் *180* வரை *13* கோட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சியில் புதிதாக வரையறைக்கப்பட்டுள்ளபடி, இந்த மண்டலத்தில் தோரயமாக *2949* சாலைகள் / தெருக்கள், *1,38,968* வீடுகளும், சுமார் *5.99* இலட்சம் மக்கள் தொகையும் கொண்ட பகுதியாகும். மேலும், அடையாறு ஆறு, பக்கிங்காம் கால்வாய், வீராங்கல் ஓடை, நேரு நகர் கால்வாய் மற்றும் மாம்பலம் கால்வாய் ஆகிய நீர் வழிப்பாதைகள் மேலும், *138.69* கி.மீ நீளம் கொண்ட மழைநீர் வடிகால்வாய் கொண்ட பகுதியாகும். இவைகளில் வாரம் ஒரு முறை வீடுதோறும் கொசு மருந்து போடும் பணி, கொசு கொல்லி மருந்து தெளித்தல் பணி மற்றும் கால்வாய்களில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றி நீரோட்டத்தை ஏற்படுத்தி கொசு உற்பத்தியாகாமல் தடுக்க தடுப்பு நடவடிக்கை பணி, சிறிய புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணி, கைதெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்டலம்-13, பொதுசுகாதாரத்துறையில் நிரந்த மலேரியா பணியாளர்கள் 102 பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதில் 25 பணியாளர்கள் மண்டலம்-13 உள்ள காலிப்பணியிடத்தில் பணியமர்த்தப்பட்டு மாற்றுப்பணி அடிப்படையில் வேறு மண்டலங்களிலும், 09 பணியாளர்கள் மாற்றுப்பணி அடிப்படையில் ஆரம்ப சுகாதாரநிலையம், மண்டல அலுவலகம், வட்டார துணை ஆணையர் அலுவலகம், டிப்போவிலும் பணிபுரிந்து வருகிறார்கள். மீதம் உள்ள 62 பணியாளர்கள் கோட்டங்களில் நோய்த் தடுப்பு பணியில் பணிபுரிகின்றனர். மேலும் மேற்கண்ட 62 பணியாளர்களில் வரும் 2025-26ஆம் நிதியாண்டில் (டிசம்பர்-2025 முதல் மார்ச்-2026 வரை) மாதம் 03 பணியாளர்களும் 2026-2027ஆம் நிதியாண்டில் 02 பணியாளர்களும் வயது முதிர்வு அடிப்படையில் பணியிலிருந்து ஓய்வு பெற உள்ளனர். மேலும் 03 பணியாளர்கள் நீண்ட கால விடுப்பில் உள்ளனர்.

விவரம் கீழ்கண்டவாறு,

அட்டவணை-1

நிரந்தர பணியாளர்கள் மற்றும் சுய உதவிக்குழுக்களின் மூலம் பணியமர்த்தப்பட வேண்டிய பணியாளர்களின் விவரம்													
DN	No. Of. House	ALO	Spray & Fogging	SWD Spray & Fogg	Canal & River	VMF	VMFS	Other Works	Total	NULM Workers	Permanent	Long Absent	Grand Total
168	5685	15	1	3	2	0	0	0	21	18	3	1	21
169	5685	14	3	3	5	0	0	2	27	23	4	0	27
170	5737	11	2	2	5	0	2	3	25	22	3	0	25
171	6497	13	4	4	9	0	0	2	32	18	14	0	32
172	5493	18	2	3	3	0	0	4	30	24	6	1	30
173	9013	18	2	3	0	0	0	2	25	20	5	0	25
174	6783	13	2	3	0	0	0	3	21	15	6	0	21
175	8127	16	2	3	2	0	0	4	27	23	4	0	27
176	6694	13	2	6	3	1	0	4	29	27	2	1	29
177	8051	15	2	5	0	0	0	4	26	24	2	0	26
178	6558	13	2	4	0	0	0	4	23	17	6	0	23
179	6478	13	2	3	0	1	0	2	21	16	5	0	21
180	6387	13	3	2	2	0	0	2	22	20	2	0	22
	87188	185	29	44	31	2	2	36	329	267	62	3	329
VMF Zone		0	0	0	0	6	0	0	6	0	6	0	6

Doing Duty IN UPHC & Other Department	0	0	0	0	0	0	09	09	0	09	0	09
Doing Duty Other Zone	0	0	0	0	0	0	25	25	0	25	0	25
Grand Total	185	29	44	31	8	2	70	369	267	102	3	369

மேற்கண்ட விவரப்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13ல், பொதுசுகாதாரத்துறையில் மேற்கொண்டு வரும் பொதுசுகாதார பணிகளுக்கு என நிரந்தர பணியாளர்கள் இல்லாமல் தற்காலிகமாக 267 பணியாளர்களை 16.04.2026 முதல் 15.04.2027 அன்று வரை ஒரு வருட காலத்திற்கு சுய உதவி குழுக்களின் மூலம் பணியமர்த்தி கொசு ஒழிப்பு பணி மற்றும் நோய்த் தடுப்பு பணிகள் மேற்கொள்ள ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மன்ற தீர்மான எண்.469, நாள்-30.04.2025-ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணியானது வரும் 15.04.2026 அன்றுடன் முடிவடைய உள்ளது. மேலும், ஒராண்டு காலத்திற்கு இப்பணியின் அவசியம் கருதி தொடர்வது அவசியாமாகிறது.

தி.க.மே.து.ந.க.எண்.அ3/5150/2025, 05.12.2025 நாளிட்ட சுற்றிக்கையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, அனைத்து மண்டலங்களில் பணிபுரியும் SHG / NULM/ NMR unskilled தற்காலிக தொழிலாளர்களுக்கு அரசாணை எண். (2D) 62, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு (JI) துறை நாள்-11.10.2017ன்படி, தொழிலாளர் ஆணையர் அவர்களின் கடித எண்.Z3/25464/2025, நாள்-26.08.2025ன் படி 01.04.2025 முதல் திருத்திய அகவிலைப்படி அட்டவணையின்படி தொழிலாளர்களுக்கு தினக்கூலியாக ரூ.761/- வழங்கப்பட தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் தற்காலிக பணியாளர்களுக்கு ரூ.761/- தினக்கூலி என்று கணக்கிட்டு 01.04.2025 முதல் கணக்கிட்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கு உட்பட்டு வழங்க ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்படி, மண்டலம்-13, கோட்டம்-168 முதல் 180 வரை பணிபுரியும் 267 தற்காலிக பணியாளர்களின் விவரங்கள் கீழ்கண்டவாறு,

வ. எண்	கோட்டம்	குழு எண் / பெயர்	தற்போது பணிபுரியும் பணியாளர்களின்

			எண்ணிக்கை
1	168	DIV-170- GROUP -1 VAIGAI	09
2		DIV-170 GROUP -2 PALARU	09
3	169	DIV-171 GROUP -3 NOIYYAL	12
4		DIV-171 - GROUP -4 THAMIRABARANI	11
5	170	DIV-172- GROUP -5 PONNAIYAR	11
6		DIV-172- GROUP -6 BAVANI	11
7	171	DIV-173 - GROUP -7 AMARAWATHI	09
8		DIV-173- GROUP -8 ADYAR	09
9	172	DIV-174- GROUP -9 KOLLIDAM	24
10	173	DIV-175- GROUP -11 COOVAM	10
11		DIV-175- GROUP -12 VAIPPAR	10
12	174	DIV-176- GROUP -13 VELLAR	07
13		DIV-176- GROUP -14 SARABANGA	07
14	175	DIV-177- GROUP -15 VASISHTA	23
15	176	DIV-178- GROUP -17 VENNAARU	13
16		DIV-178- GROUP -18 PAMBAR	14
17	177	DIV-179- GROUP -19 RAMANATHI	12
18		DIV-179- GROUP -20 ARASALAR	12
19	178	DIV-180- GROUP -21 THIRU MANI MUTHARU	10
20		DIV-180- GROUP -22 BHARATHAPPUZH	07
21	179	DIV-181- GROUP -23 MANIMUTHARASALARU	08
22		DIV-181- GROUP -24 SWETHA RIVER	09
23	180	DIV-182- GROUP -25 GANGA	10
24		DIV-182- GROUP -26 YAMUNA	10
		மொத்தம்	267

எனவே,

அ)	மண்டலம்-13, பகுதி- 38, 39, 40 மற்றும் 40 A, கோட்டம்-168 முதல் 180 வரை 267 தற்காலிக மலேரியா பணியாளர்களை 16.04.2026 முதல் 15.04.2027 வரை ஒரு வருட காலத்திற்கு சுய உதவிக் குழுக்களின் மூலம் தற்காலிகமாக பணியமர்த்தி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும்,
ஆ)	மேற்கண்ட தற்காலிக பணியாளர்களுக்கு அரசாணை எண். (2D) 62, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு (JI) துறை நாள்-11.10.2017ன்படி, தொழிலாளர் ஆணையர் அவர்களின் கடித எண்.Z3/25464/2025, நாள்-26.08.2025-ன்படி, குறைந்தபட்ச ஊதியம் மற்றும் அகவிலைப்படி சேர்த்து தினக்கூலியாக ஒரு நபருக்கு நாளொன்றிக்கு ரூ.761/- வீதம் (258 நபர்கள் X ரூ.761/- X 365 நாட்கள்) ரூ.7,16,63,370/- (ரூபாய் ஏழு கோடியே பதினாறு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து முந்நூற்று எழுபது மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதியும், மேற்படி பணியாளர்கள் அவசரம் அவசியம் கருதி பிரதி மாதத்தில் 26 நாட்களுக்கு கூடுதலாக பணிபுரியும் நாட்களில் 30/31 நாட்களுக்கு மிகாமல் நாள் ஒன்றுக்கு 761/- வீதம் கணக்கீடு செய்து வழங்கவும்.
இ)	அரசாணை எண். (2D)36, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு (JI) துறை, நாள்-16.06.2023ன்படி, 2026-2027ஆம் நிதியாண்டில் அகவிலைப்படியினை கணக்கிட்டு அதனடிப்படையில் தினக்கூலியை அப்பணியாளர்களுக்கு வழங்குவதற்கு அனுமதியும்,
ஈ)	மேற்படி செலவீனத்திற்கு பிரிவு குறியீட்டு எண்.30-32-02 கணக்கு தலைப்பு எண்.210-10-06-02 (payment to casual health works) என்ற கணக்கு தலைப்பில் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து ஊதியம் வழங்க அனுமதியும்,
உ)	சுய உதவிக்குழுக்களின் கீழ் உறுப்பினர்கள் இருப்பதால் வருமான வரி பிடித்தம் செய்வதிலிருந்தும் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்வதில் இருந்தும் விலக்கு அளிக்கவும்,
ஊ)	பணியாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் பொதுத்துறையின் 23.01.2025 மற்றும் 06.04.2025 நாளிட்ட சுற்றறிக்கையின்படி குழுவிலிருந்து நீக்கம் செய்வதற்கும், புதிய நபரை பணியில் சேர்த்துக் கொள்வதற்கு அனுமதியும்

மேற்கண்ட அ முதல் ஊ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.02.2026 அன்று தீர்மான எண்.050/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

சு.து.ந.க.எண்.சி1/2404/2025

தீர்மான எண்: 226/2026 **பொருள் எண்.106**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுசுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் துறைகள் - மருத்துவ அதிகாரிகளின் ஊதியம் - சிறப்பு சலுகைகளை அனுமதித்தல் - தொடர்பாக

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 140 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 16 சமுதாய நல மையங்கள், 3 மகப்பேறு மருத்துவமனைகள், 200 சுகாதார நல வாழ்வு மையங்கள் மற்றும் தொற்று நோய் மருத்துவமனை ஆகிய சுகாதார மையங்களில் விரிவான ஆரம்ப சுகாதார சேவைகள் வழங்கி வருகின்றன.

- கர்ப்பம் மற்றும் குழந்தை பிறப்பு பராமரிப்பு.
- புதிதாகப் பிறந்த குழந்தை மற்றும் குழந்தை சுகாதார சேவைகள்.
- குழந்தைப் பருவம் மற்றும் இளம் பருவ சுகாதார சேவைகள்.
- குடும்பக் கட்டுப்பாடு, கருத்தடை சேவைகள் மற்றும் பிற இனப்பெருக்க சுகாதார சேவைகள்.

- தொற்று நோய்கள் உள்ளிட்ட தேசிய சுகாதாரத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.
- எளிய தொற்று நோய் மருத்துவம் மற்றும் புறநோய் பிரிவு
- கடுமையான எளிய நோய்கள் மற்றும் சிறு நோய்களுக்கான வெளிநோயாளர் பராமரிப்பு.
- தொற்று அல்லாத நோய்களுக்கான பரிசோதனை, தடுப்பு, கட்டுப்பாடு மற்றும் மேலாண்மை.
- பொதுவான கண் மற்றும் காது, மூக்கு, தொண்டை பிரச்சினைகளுக்கான பராமரிப்பு.
- அடிப்படை வாய் சுகாதாரப் பராமரிப்பு.
- முதியோர் சுகாதாரப் பராமரிப்பு சேவைகள்.
- அவசர மருத்துவ சேவைகள்.
- மனநல நோய்களுக்கான பரிசோதனை மற்றும் அடிப்படை சிகிச்சை

இந்த வசதிகள் அனைத்தும் மாநகர நல அலுவலர், மாநகர மருத்துவ அலுவலர், கூடுதல் மாநகர நல அலுவலர்கள், மாநகர கூடுதல் மருத்துவ அலுவலர்கள், மண்டல நல அலுவலர்கள், மண்டல மருத்துவ அலுவலர்கள், மகப்பேறு மருத்துவர்கள், குழந்தை மருத்துவர்கள், அறுவை சிகிச்சை நிபுணர்கள், மயக்க மருந்து நிபுணர்கள் மற்றும் பிற சிறப்பு மருத்துவர்கள் போன்ற பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுகின்றன.

சுகாதார சேவைகளை தடையின்றி வழங்குவதற்காக ஒவ்வொரு நிபுணர்களும் சுகாதாரப் பராமரிப்பு அமைப்பில் பல்வேறு பொறுப்புகள் வகிக்கின்றனர்.

நிபுணர்களை பெருநகர சென்னை மாநகராட்சியில் தக்கவைத்துக்கொள்வதன் ஒரு பகுதியாகவும், சேவைகளில் சிறப்புகளை மேம்படுத்துவதன் ஒரு பகுதியாகவும், கூடுதல் தகுதியுடன் பணியில் இருப்பவர்களுக்கு சிறப்பு ஊதியம் வழங்குவதற்கான ஒரு உத்தரவை தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ளது.

குறிப்பு *1* இல், சிறப்பு மற்றும் சூப்பர் ஸ்பெஷாலிட்டி பட்டங்களைக் கொண்ட மருத்துவ அதிகாரிகளின் ஊதிய அளவுகள் குறித்து அரசாங்கம் ஒரு குழுவை அமைத்துள்ளது. "தற்போது கட்டமைக்கப்பட்ட *DACP*, நிபுணரை விட பொது மருத்துவ அதிகாரிக்கே சாதகமாக செயல்படுகிறது" என்று *G.O*-வில் விவாதிக்கப்பட்டது. *23* வயதில் இந்த அமைப்பில் சேரும் ஒரு *MBBS* பட்டதாரி, கூடுதல் உயர் தகுதியைப் பெறாவிட்டாலும், *43* வயதில் மிக உயர்ந்த ஊதிய அளவைப் பெறுகிறார். இதற்கு நேர்மாறாக, நிபுணர்/சூப்பர் ஸ்பெஷலிஸ்ட் தகுதிகளைப் பெற்று பின்னர் அரசுப் பணியில் சேரும் ஒரு மருத்துவர், சுமார் *30* வயதில் மட்டுமே அவ்வாறு செய்ய முடியும்.

அத்தகைய நிபுணர் *50* வயதில் மட்டுமே மிக உயர்ந்த ஊதிய அளவைப் பெறுவார். மேலும், ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட முன்னேற்றத்தின் பலனை அனுபவித்த பொது மருத்துவ அதிகாரி என்பதால், அவர் உண்மையில் நிபுணரை விட அதிகமாக சம்பாதிப்பார், இது அவர்கள் கொண்டிருக்கும் தகுதிகளுக்கும் அவர்கள் செய்யும் பணியின் தன்மைக்கும் எதிரானது. பணியில்

இருக்கும்போது முதுகலை பட்டம் பெறும் மருத்துவ அதிகாரியின் விஷயத்தில் கூட, அதே நேரத்தில் பணியில் சேர்ந்த நிபுணருக்கும் பொது மருத்துவ அதிகாரிக்கும் இடையிலான ஊதியத்தில் உள்ள ஒரே வித்தியாசம், இரண்டு அதிகரிப்புகள் இருக்க வேண்டும். அதிகபட்ச *DACP*-ஐ மேலும் முன்னேற்றுவது இந்த சிதைவை மேலும் அதிகரிக்கும், பொது *MO*-க்கள் நேரடியாக நுழையும் நிபுணர்களை விட மிக வேகமாக அளவுகோல்களை அடைகிறார்கள்.

மேலும், மேலே முதலில் படிக்கப்பட்ட அரசாங்க உத்தரவில் பத்தி *4 | (xiv)*-ன் படி, கணிசமான பதவிகள் கிடைக்கும்போது பொருந்தும், மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி மற்றும் சேவை காலம் தகுதி அளவுகோலாக இருக்கும். நிபுணர்களை ஈர்ப்பதற்கும் தக்கவைத்துக்கொள்வதற்கும் பொது சுகாதார அமைப்பின் அதிக தேவை, ஊதிய அமைப்பு பொது மருத்துவ அதிகாரிக்கு ஆதரவாக வடிவமைக்கப்பட வேண்டும், பொது மருத்துவ அதிகாரிக்கு ஆதரவாக அல்ல.

எனவே, *DACP*-ஐ மேலும் முன்னேற்றுவது இந்த நோக்கத்திற்கு எதிராக மட்டுமே செயல்படும் என்பதால், *DACP*-ஐப் பொறுத்தவரை தற்போதைய நிலை பராமரிக்கப்பட வேண்டும். *DACP*-ஐ மேம்படுத்துவதற்கான கூடுதல் செலவு, மாநிலத்தால் தாங்க முடியாத ஒரு சுமையாகும் வருவாய் பற்றாக்குறை அதிகமாக இருப்பதால், *DACP*-ஐ முன்னெடுப்பதற்கு எந்த நியாயமும் இல்லை, ஏனெனில் இது நிபுணர்களை விட பொது மருத்துவ அதிகாரிகளின் ஊதியத்தை அதிகரிக்க மட்டுமே உதவும். பொது மருத்துவ அதிகாரிகளின் நிலைக்கு மாறாக, நிபுணர்கள் கிடைப்பதில் பற்றாக்குறை உள்ளது, குறிப்பாக பற்றாக்குறையான சிறப்புப் பிரிவுகளில். பொதுத் தகுதியை அல்ல, ஆனால் உயர் தகுதியை அங்கீகரித்து வெகுமதி அளிக்கும் ஒரு இழப்பீட்டு கட்டமைப்பை பின்வருமாறு உருவாக்குவது அவசியம்.

மருத்துவர்கள் சங்கத்தின் கோரிக்கையை அரசாங்கம் பரிசீலித்துள்ளது, மேலும் சிறப்புச் செயலாளர் (*PK*) தலைமையிலான குழுவின் அறிக்கையையும் சேர்த்துள்ளது. ஆய்வுக்கு பிறகு, குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் முடிவு செய்து அதன்படி பின்வருமாறு உத்தரவிட்டது:- ‘

i. மருத்துவ அதிகாரிகளுக்கு உயர் தகுதி பெறுவதற்கு இரண்டு சிறப்பு ஊதிய உயர்வுகளை வழங்குதல்:-

பல்கலைக் கழகப் பட்டயம்/பட்டம்	ஊதிய உயர்வு
முதுகலை பட்டயம் (அனைத்து சிறப்பு பிரிவுகள்)	ஒரு சிறப்பு ஊதிய உயர்வு
முதுகலை பட்டயம் (எம்.டி./எம்.எஸ்.)	இரண்டு சிறப்பு ஊதிய உயர்வு

பன்நோக்கு பட்டம் (DM /MCh)	கூடுதல் இரண்டு சிறப்பு ஊதிய உயர்வு

இந்த சிறப்பு ஊதிய உயர்வுகள் ஊதிய நிர்ணயம், அகவிலைப்படி மற்றும் ஓய்வூதியம் போன்றவற்றுக்கு கணக்கிடப்படும்.

- அனைத்து சூப்பர் ஸ்பெஷலிஸ்ட்களுக்கும் மாதத்திற்கு ரூ. *14,000* உதவித்தொகை வழங்கப்படுகிறது.
- பின்வரும் அரிதான சிறப்புப் பிரிவுகளில் முதுகலை பட்டம் பெற்றவர்களுக்கு மாதத்திற்கு ரூ. *9,000/-* உதவித்தொகை வழங்கப்படுகிறது.
- பிற அரிதான சிறப்புப் பிரிவுகளில் முதுகலை பட்டம் பெற்றவர்களுக்கு மாதத்திற்கு ரூ. *5,500/-* உதவித்தொகை வழங்கப்படுகிறது.
- பின்வரும் அரிதான சிறப்புப் பிரிவுகளில் முதுகலை பட்டம் பெற்றவர்களுக்கு மாதத்திற்கு ரூ. *5,000/-* உதவித்தொகை வழங்கப்படுகிறது:
- பிற பற்றாக்குறைப் பிரிவுகளில் முதுகலை டிப்ளோமா பெற்றவர்களுக்கு மாதத்திற்கு ரூ. *3,000/-* உதவித்தொகை வழங்கப்படுகிறது.
- *G.O.(Ms)* எண்.*86*ல் அறிவிக்கப்பட்டுள்ளபடி, மலைகள், சமவெளிகள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள கடினமான பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் / மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவ அதிகாரிகள் (மருத்துவ அதிகாரிகள், நிபுணர்கள் மற்றும் சூப்பர் நிபுணர்கள்) மாதத்திற்கு *3000/-* உதவித்தொகை வழங்கப்படுகிறது, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை (*MCA-1)* துறை தேதி *06.03.2019*.
- பின்வரும் செயல்பாட்டு ரீதியாக கடினமான பணிகளில் பணிபுரியும் அனைத்து மருத்துவ அதிகாரிகளுக்கும் மாதத்திற்கு ரூ.*3000/-* உதவித்தொகை:
- அதிர்ச்சி/விபத்து/அவசர *CEmONC* மையங்கள்
- *SNCU* (நோய்வாய்ப்பட்ட புதிதாகப் பிறந்த குழந்தை பராமரிப்பு பிரிவு)
- *NBSU* (புதிதாகப் பிறந்த குழந்தை நிலைப்படுத்தல் பிரிவு) "

அரசு உத்தரவு, அரசாணை (*G.O.(Ms).*எண்.*2*, சுகாதாரம் மற்றும் குடும்பம் நலம் (*A1)* துறை தேதி: *03.01.2024*, "இது தொடர்பாக, மருத்துவம் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர், மருத்துவம் மற்றும் கிராமப்புற சுகாதார சேவைகள் இயக்குநர் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குநர் ஆகியோருடன் கலந்தாலோசித்து, மேலே முதலில் படிக்கப்பட்ட அரசு உத்தரவில் திருத்தம் செய்ய முடிவு செய்துள்ளது. இதனால் முதுகலை பட்டம் பெற்றவர்கள் மற்றும் டிப்ளமோ பெற்றவர்கள் தொடர்பாக உதவித்தொகையை அனுமதிப்பதற்கான பற்றாக்குறை மற்றும் பற்றாக்குறை அல்லாத பிரிவுகளை இணைப்பதன் மூலம் பற்றாக்குறை மற்றும் பற்றாக்குறை இல்லாத பிரிவுகளின் வகைப்படுத்தலை நீக்குகிறது. அதன்படி, அரசு *G.O (Ms).No.293*, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, தேதி: *18.06.2021* அரசு உத்தரவில், பின்வரும் திருத்தம் வெளியிடப்பட்டது.

பத்தி *4* இல்

1. மேற்கூறிய அரசு உத்தரவின் பத்தி *4* இன் வரிசை எண், *iii* மற்றும் *iv* இல் உள்ள பதிவுகளுக்கு, பின்வருபவை மாற்றப்பட வேண்டும்.

   iii. முதுகலை பட்டம் பெற்றவர்களுக்கு மாதத்திற்கு ரூ.*9,000/-* உதவித்தொகை வழங்கப்படுகிறது.

2. அரசு ஆணையின் பத்தி *4* இன் வரிசை எண்.*v* மற்றும் *vi* இல் உள்ள பதிவுகளுக்கு, கீழ்க்கண்டவாறு மாற்றப்பட வேண்டும்:

   iv. முதுகலை டிப்ளமோ பெற்றவர்களுக்கு மாதத்திற்கு ரூ.*5,000/-* உதவித்தொகை வழங்கப்படுகிறது.

3. தொடர் எண்.*vii* மற்றும் *viii* இல் உள்ள பதிவுகள் முறையே தொடர் எண்.*v* மற்றும் *vi* எனப் படிக்கப்படும்.
4. மேற்கூறிய திருத்தம் வருங்கால விளைவை மட்டுமே ஏற்படுத்தும் என்றும், வெளியிடப்பட்ட *G.O.Ms.No.293*, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, தேதியிட்ட *18.09.2021* இன் விதிகள் அதன் வெளியீட்டு தேதியிலிருந்து இந்த உத்தரவு வெளியிடப்படும் வரை செல்லுபடியாகும் என்றும் அரசாங்கம் அறிவுறுத்துகிறது.

அதன்படி, அரசு உத்தரவில் கொடுக்கப்பட்டுள்ளபடி, கூடுதல் தகுதி மற்றும் சேவைகளை வழங்கும் மருத்துவ அதிகாரிக்கும் சம்பள உயர்வுகள் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்படலாம். இது பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் மருத்துவ அதிகாரிகளின் மன உறுதியை அதிகரிக்கக்கூடும், அதே போல் சென்னையில் உள்ள மக்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கும் அமைப்பில் நிபுணர்களின் கிடைக்கும் தன்மையையும் அதிகரிக்கும். தற்போது *125* மருத்துவ அதிகாரிகள் பல்வேறு பிரிவுகளில் பணிபுரிகின்றனர். அவர்களில் *52* பேர் கூடுதல் தகுதிகளைக் கொண்டுள்ளனர், அவர்கள் அரசாணையின்படி சிறப்பு ஊதியத்திற்கு தகுதியுடையவர்கள்.

மொத்த நிதி தேவை மாதத்திற்கு ரூ. *5,25,700/-* ஆகும். ஆண்டுக்கு நிதி தேவை ரூ. *63,08,400.*

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையில் உள்ள மருத்துவ அதிகாரிகளுக்கு இணையான ஊதியம் வழங்கப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறந்த சுகாதார சேவைகளை வழங்கவும், நிபுணர்களை தக்க வைத்துக் கொள்ளவும் மருத்துவ அதிகாரிகளுக்கு சிறந்த ஊதியத்தையும் வழங்குவதற்காக பின்வருவனவற்றை அங்கீகரிக்கலாம்.

எனவே,

1. அரசாணை எண்.293, சுகாதாரம் மற்றும் குடும்பம் நலம் (A1) துறை தேதி: 18.06.2021 / அரசாணை எண்.2, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை (A1) துறை தேதி:03.01.2024 பெருநகர சென்னை மாநகராட்சியில் அரசாணை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நிதி சலுகையுடன் அமலுக்கு வர அனுமதி வேண்டியும்,
2. பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் 52 நிரந்தர சிறப்பு மருத்துவர்களுக்கு கூடுதல் ஊதிய உயர்வு மற்றும் கூடுதல் ஊதியத்தை அனுமதிக்கவும்,
3. மேற்கூறிய செயல்பாடுகளுக்கான செலவினமாக வருடத்திற்கு சுமார் ரூபாய். 63,08,400/- அனுமதிக்கவும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 19.02.2026 அன்று தீர்மான எண்.051/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.5.ந.க.எண்.சிறப்பு / 2026

தீர்மான எண்: 227/2026 **பொருள் எண்.107**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5, பகுதி-12, வார்டு-53, ராமதாஸ் நகர் - சென்னை மாநகராட்சி சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வசித்து வரும் - 20 குடியிருப்புவாசிகளுக்கு மறுவாழ்வு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதியில் காலியாக உள்ள குடியிருப்புகளில் குடியமர்வு செய்வது - பயனாளிகளின் பங்கு தொகை செலுத்துவது -மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி , மண்டலம்-5 , பகுதி-12 , வார்டு-53 ராமதாஸ் நகர் இராயபுரம் தொகுதிக்கு உட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி சொந்தமான இடத்தை

ஆக்கிரமிப்பு செய்து வசித்து வரும் குடிசைவாசிகள் சுமார் பல வருடங்களுக்கு மேலாக வாழ்வாதாரம் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருகிறார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மண்டலம்-5, பகுதி-12 , வார்டு-53 ராமதாஸ் நகரில் பெருநகர சென்னை மாநகராட்சி சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு பகுதிகளை பல்வேறு நாட்களில் நேரடி களஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் சம்மந்தப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு குடிசைவாசிகள் தங்களுடைய வாழ்வாதாரத்திற்காக தமிழக அரசின் குடியிருப்புகளில் தங்களுக்கு வீடு ஒதுக்கி தருமாறு கோரிக்கை விடுத்தனர். இவர்கள் தங்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் குடியிருப்புகளில் மாற்று இடம் ஒதுக்கீடு செய்து தரும்படி மாநகராட்சியை அணுகி கேட்டுக்கொண்டதின் தொடர்ச்சியாக மண்டலம்-5 , பகுதி-12 , வார்டு-53 ராமதாஸ் நகரில் பெருநகர சென்னை மாநகராட்சி சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வசிக்கும் குடிசைவாசிகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களின் 20.01.2026 நாளிட்ட கடிதத்தின்படி, தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் குடியிருப்பு ஒதுக்கீடு கோரும் மண்டலம்-5 , பகுதி-12 , வார்டு-53 ராமதாஸ் நகரில் பெருநகர சென்னை மாநகராட்சி சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வசித்து வரும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் மூலகொத்தளம் திட்ட பகுதியில் காலியாக உள்ள 20 குடியிருப்புகள் ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்க வேண்டப்படுகின்றது.

வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை அரசு இணை செயலாளர் அவர்களின் 09.08.2024 நாளிட்ட கடிதத்தில், ஏழைகளுக்கு வீடு கொடுக்கும் திட்டத்தில் பயனாளி பங்குத்தொகை குறைப்பினை தொடர்புடைய உள்ளாட்சி நிர்வாகம் தான் ஏற்க வேண்டும். மேலும், அரசு நிதியில் இருந்து எந்த செலவையும் ஈடுகட்ட இயலாத நிலை உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-12, வார்டு-53 ராமதாஸ் நகர் இராயபுரம் தொகுதிக்கு உட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வசித்து வரும் 20 குடும்பதாரர்களுக்கு சமூக மற்றும் பொருளாதார நிலையினை கருத்தில் கொண்டு இந்த முழு பயனாளி பங்கு தொகையை கட்டுவதனை தளர்த்தி ரூ. 4,27,000/- ல் மூன்றில் இரண்டு பங்கு தொகையாக ரூ. 2,85,000/- பெருநகர சென்னை மாநகராட்சி பங்கீட்டு தொகையாக கட்டலாம் என கருதப்பட்டது.

மேலும், மக்களின் சமூக பொருளாதாரத்தின் நிலையினை கருத்தில் கொண்டு இந்த முழுத்தொகையை கட்டுவதனை தளர்த்தி குடியிருப்புகளுக்கான மதிப்பில் மூன்றில்

இரண்டு பங்கினை சம்பந்தப்பட்ட 20 குடியிருப்பு வாசிகளும், அவ்வாறே 20 குடியிருப்புகளின் மூன்றில் இரண்டு பங்கான மொத்த தொகை ரூ57,00,000 யினை (ஐம்பத்து ஏழு இலட்சம் மட்டும்) பெருநகர சென்னை மாநகராட்சியால் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு வழங்குவதற்கு ஆணை வேண்டப்படுகிறது.

மேலும், இது நீண்ட நாள் பிரச்சனையாக தொடர்வதனையும், நீதிமன்ற ஆணைக்கு இணைங்க சாலை ஓர ஆக்கிரமிப்புகளை அகற்றி ஆக்கிரமிப்பாளருக்கு மறு குடியமர்வு செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 19.02.2026 அன்று தீர்மான எண்.108/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.5.ந.க.எண்.உ.பொ.54/2026

தீர்மான எண்: 228/2026 **பொருள் எண்.108**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் –5, பகுதி–13, கோட்டம் – 54, வ.உ.சி சாலை (Wood Warf Area) - கூடை மற்றும் பாய் முடையும் பணிகளை மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகை நிலத்தில் மேற்கொள்ள அனுமதித்தது - நாளடைவில் நடைபாதைகளை ஆக்கிரமித்து அப்பணிகளை மேற்கொண்டுவருவது - வடசென்னை விரிவாக்க திட்டத்தின் கீழ் ஆக்கிரமிப்புகளை அகற்றி வடசென்னை பகுதியினை அழகுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் அங்கு

குடியிருப்பவர்களை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் அவர்கள் வசிப்பதற்கான குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்து - அவர்கள் மேற்கொண்டு வந்த கூடை மற்றும் பாய் முறையும் பணிகளை தற்போது உள்ள சென்னை மாநகராட்சி குத்தகை நிலத்தில் அதன் வகைப்பாட்டினை வணிகப்பகுதியாக மாற்றம் செய்திட மாமன்றத்தின் தீர்மானம் பெற்று நடவடிக்கை மேற்கொண்டு தேவையான அளவுகளில் கடைகளை கட்டி வாடகை நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, பகுதி – 13, கோட்டம் – 54, வ.உ.சி சாலை (Wood Warf Area) பகுதியில் சுமார் 33 குடும்பங்கள் 26 வீடுகளில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அவர்களுக்கு குத்தகை அடிப்படையில் கடந்த 45 ஆண்டுகளுக்கு முன்பாக குத்தகை தொகை நிர்ணயம் செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு ஒதுக்கீட்டாளர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்து அவ்விடத்தில் அவர்கள் குடியிருந்து வந்த நிலையில் குத்தகைக்கு விடப்பட்ட இடத்தையும் தாண்டி நடைபாதை இடங்களை (Platform) ஆக்கிரமித்து அவர்களின் பரம்பரை தொழிலான கூடை மற்றும் பாய் முடைதல் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் நடைபாதையில் ஆக்கிரமிப்பு காரணமாக பொதுமக்கள் நடந்து செல்வதற்கு சிரமமாகவும் வால்டாக்ஸ் சாலையில் அதிக போக்குவரத்து நெரிசலும் அவ்வப்பொழுது ஏற்படுத்துகிறது, இதனை பல ஆண்டுகளாக முயற்சித்தும் தகுந்த ஏற்பாடுகளை மேற்கொள்ள இயலாமல் இருந்த நிலையில் தற்போது துறைமுகம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் பெருநகர சென்னை வளர்ச்சி குழும தலைவர் அவர்கள் மாநகராட்சி உயர் அதிகாரிகளுடன் பல முறை கள ஆய்வுகள் மேற்கொண்டும் கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தியும் இறுதியாக அங்கு குடியிருக்கும் 33 குடும்பங்களுக்கு அவர்களின் இருப்பிடத்திற்கு நிரந்தர ஏற்பாடு செய்திடும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் ஏழ்மை நிலையில் நிரந்தர குடியிருப்பு இல்லாதவர்களுக்காக ஒதுக்கீடு செய்திட கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில் அவர்களுக்கு முறையான ஒதுக்கீடுகளை அக்குடியிருப்பின் மொத்த மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கை மாநகராட்சி சார்பாகவும் மூன்றில் இரண்டு பங்கை பயனாளிகளிடமிருந்து வசூலிக்கலாம் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

அதேபோல் அவ்விடத்திலிருந்த 33 குடும்பங்களும் அகற்றப்பட்டு தமிழ்நாடு மேம்பாட்டு கழக வாரியத்தில் இட ஒதுக்கீடு செய்திடும் பட்சத்தில் அவர்கள் மேற்கொண்டுவந்த தொழில் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரம் பாதிக்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதால் தற்போது அவர்கள் வசித்துவரும் மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகைக்கு விடப்பட்ட இடத்தில் அதன் வகைப்பாட்டை வணிக பயன்பாடாக மாற்றம் செய்து அவ்விடத்தில் தற்போது நடைபாதையை ஆக்கிரமித்து அமைத்துள்ள கடைகளுக்கு பதிலாக குடியிருப்புகளை அகற்றும் இடத்தில் ஒரு கடை சுமார் 100 சதுர அடி என்ற அளவில் மொத்த பரப்பளவில் 26 கடைகளை கட்டமைத்து அதற்கான வாடகையினை நிர்ணயம் செய்து வழங்கிடலாம் என முடிவெடுக்கப்பட்டது. இதனை நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் அவ்விடத்தில் குத்தகைக்கு விடப்பட்ட ஒதுக்கீட்டாளர் மற்றும் ஒதுக்கீட்டாளரின் வாரிசுகள் இதுநாள் வரை குத்தகை தொகை செலுத்தாமல் வைத்துள்ள நிலுவையினை நிலம் மற்றும்

உடமைத்துறையின் மூலமாக கணக்கிட்டு அதனை அவர்களுக்கு தெரிவித்து அத்தொகைகளை நிலுவையின்றி செலுத்தும் நபர்களுக்கு மட்டும் புதிதாக கட்டப்படவுள்ள கடைகளை அவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இப்பணிகளை மேற்கொள்ளலாம் என முடிவெடுக்கப்பட்டது. ஒதுக்கீட்டாளர்களுக்கு கடை ஒதுக்கியது போக மீதமுள்ள ஆக்கிரமிப்பு பகுதிகளை சரிசெய்து பொதுமக்கள் வசதிக்காகவும் போக்குவரத்து நெரிசலை முறைப்படுத்திடவும் ஏதுவாக நடைபாதையை *(Platform)* அமைக்கலாம் என முடிவெடுக்கப்பட்டது.

மேற்கண்ட நிகழ்வுகளின் படி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் தீர்மானம் பெறவேண்டியது அவசியமாகிறது. அதேபோல் அவர்கள் செய்து வந்த தொழிலின் பொருட்டு அக்குத்தகை இடத்தினை வணிகப்பகுதியாக மாற்றம் செய்து கடைகள் கட்டி அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படவுள்ள கடையின் அளவிற்கான வாடகை நிர்ணயம் செய்வதற்கும் அவ்விடத்தில் குத்தகை இருந்தவர்களுக்கே அவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில்கொண்டு கடைகளை கட்டி அக்கடைகளை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதிகள் *2023* உட்பிரிவு *316*-ன் படி ஏலம் மற்றும் ஒப்பம் முறையில் ஒதுக்கீடு செய்வதிலிருந்து விலக்களித்து இவர்களுக்கு சிறப்பினமாக கருதி நேரடியாக வாடகை நிர்ணயம் செய்தும் வாடகை முன்பணத்தினை பெற்றுக்கொண்டு ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றத்தின் தீர்மானம் பெறப்படவேண்டியது அவசியமாகிறது. அதன் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட இடத்தினை வகைபாடு மாற்றம் செய்து வணிகப்பகுதிக்கான வாடகையினை பின்வருமாறு நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

<u>வாடகை நிர்ணயம்:</u>

ஒரு கடையின் தோராய பரப்பளவு = 100.00 சதுர அடி

$$\text{Formula} = \frac{\text{Area} \times \text{BSR (Commercial)} \times 10.92}{12}$$

$$= \frac{100 \times 8.25 \times 10.92}{12} = \frac{9009}{12} = 750.75$$

R. off = 750/- + 18% GST

எனவே மேற்கண்டவைகளை தொடர்ந்து இப்பொருளின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் பெருநகர வளர்ச்சி குழும தலைவர் அவரது தலைமையில் நடந்த களஆய்வு மற்றும் கலந்தாய்வு கூட்டங்களில் மேற்கண்டவாறு எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் பின்வரும் இனங்கள் மீது அனுமதி வேண்டப்படுகிறது.

அ)	பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – *5*, பகுதி – *13*, கோட்டம் – *54*, வ.உ.சி சாலை *(Wood Warf Area)* பகுதியில் சுமார் *33* குடும்பங்கள் *26* வீடுகளில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் *45* ஆண்டுகளுக்கு முன்பாக அவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு குத்தகை தொகை நிர்ணயம் செய்து ஒதுக்கீட்டாளர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்து அவர்கள் அங்கு குடியிருந்து வந்த நிலையில் குத்தகைக்கு விடப்பட்ட இடத்தையும் தாண்டி நடைபாதை இடங்களை *(Platform)*

	ஆக்கிரமித்து அவர்களின் பரம்பரை தொழிலான கூடை மற்றும் பாய் முடைதல் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் நடைபாதை ஆக்கிரமிப்பு காரணமாக பொதுமக்கள் நடந்து செல்வதற்கு சிரமமாகவும், வால்டாக்ஸ் சாலையில் அதிக போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகிறது. இதனை முறைப்படுத்திட தற்போது துறைமுகம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் பெருநகர வளர்ச்சி குழும தலைவர் அவர்கள் மாநகராட்சி உயர் அதிகாரிகளுடன் பல முறை களஆய்வுகள் மற்றும் பலமுறை கலந்தாய்வுக்கூட்டங்கள் நடத்தியும் இறுதியாக, அங்கு குடியிருக்கும் 33 குடும்பங்களுக்கு அவர்களின் இருப்பிடத்திற்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் ஏழ்மை நிலையில் நிரந்தர குடியிருப்பு இல்லாதவர்களுக்காக உருவாக்கப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில் அவர்களுக்கு முறையாக வீடுகளை ஒதுக்கீடு செய்திட அக்குடியிருப்பின் மொத்த மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கை மாநகராட்சி சார்பாகவும் மற்றும் மூன்றில் இரண்டு பங்கை ஒதுக்கீடு செய்யப்படுபவர்களிடமிருந்து வசூலிக்கலாம் எனவும் முடிவெடுக்கப்பட்டதன் அடிப்படையில் அதனை நடைமுறைப்படுத்திடவும்,
ஆ)	இனம் 'அ' வை ஏற்கும் பட்சத்தில் அவ்விடத்திலிருந்த 33 குடும்பங்களும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமான குடியிருப்புக்கு மாற்றம் செய்யும் பட்சத்தில் அவர்கள் மேற்கொண்டு வந்த தொழில் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரம் பாதிக்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதால் தற்போது அவர்கள் வசித்துவரும் மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகைக்கு விடப்பட்ட அவ்விடத்தின் வகைப்பாட்டை வணிகப்பயன்பாடாக மாற்றம் செய்திடவும்,
இ)	இனம் 'அ' மற்றும் 'ஆ' வை ஏற்கும் பட்சத்தில் அவ்விடத்தில் தற்போது நடைபாதையை ஆக்கிரமித்து அமைத்துள்ள கடைகளை அப்புறப்படுத்தி குடியிருப்பாக பயன்படுத்திய இடத்தில் ஒரு கடை சுமார் 100 சதுரஅடி என்ற அளவில் மொத்த பரப்பளவில் 26 கடைகளை கட்டமைத்து அதற்கான வாடகையினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 உட்பிரிவு 316(4) ன்படி ரூ.750/- மற்றும் 18 விழுக்காடு சரக்கு மற்றும் சேவை வரியுடன் அவ்வப்பொழுது மாற்றத்திற்குட்பட்டது. மேலும் 12 மாத வாடகை முன்பணத்தை வசூலித்து முந்தைய ஒதுக்கீட்டாளர்கள் மற்றும் முந்தைய ஒதுக்கீட்டாளர்களின் வாரிசுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஏலம் மற்றும் ஒப்பம் முறையில் ஒதுக்கீடு செய்வதிலிருந்து விலக்களித்து அவர்களுக்கு

	ஒதுக்கீடு செய்திடவும்,
ஈ)	இனம் 'இ'-வை ஏற்கும் பட்சத்தில் மேற்குறிப்பிட்ட இடத்தில் அவர்கள் ஏற்கனவே செலுத்த வேண்டிய குத்தகை தொகை நிலுவை விவரங்களை நிலம் மற்றும் உடமைத்துறையின் மூலமாக கணக்கிட்டு அதனை அவர்களுக்கு தெரிவித்து அத்தொகைகளை நிலுவையின்றி செலுத்தும் நபர்களுக்கு மட்டும் புதிதாக கட்டப்படவுள்ள கடைகளை அவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய இயலும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இப்பணிகளை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 16.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 19.02.2026 அன்று தீர்மான எண்.109/2026ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.13.ந.க.எண்.சி1/660-2/2025

தீர்மான எண்: 229/2026 **பொருள் எண்.109**

பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம் -13, கோட்டம்- 168 ஆலந்தூர் சாலையில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள குப்பை பிரிக்கும் நிலையத்தை இடித்து அகற்ற மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13 பகுதி-40A, கோட்டம்-168க்குட்பட்ட ஆலந்தூர் சாலையில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள குப்பை பிரிக்கும் நிலையத்தை இடித்து அகற்றி இவ்விடத்தில் புதிய இறைச்சிக் கூடம் கட்டுவதற்கு 13வது மண்டல வார்டு குழு தீர்மான எண் 20/2026 நாள் 09.01.2026 கூட்டத்தில் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று பகுதி – 40A கோட்டம்-168க்குடபட்ட ஆலந்தூர் சாலையில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள குப்பை பிரிக்கும் நிலையத்தை இடிக்க வேண்டியது அவசியமாகிறது

விவரம்

வ எண்	வார்டு எண்	இடம்	கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	கட்டிடத்தின் பரப்பளவு	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா
1	168	ஆலந்தூர் சாலையில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள குப்பை பிரிக்கும் நிலையம்	2011	330 ச.மீ	6,32,035	இல்லை

மேற்கண்ட விவரங்களின் படி பகுதி – 40A கோட்டம்-168க்குட்பட்ட ஆலந்தூர் சாலையில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள குப்பை பிரிக்கும் நிலையத்தை இடித்து புதிய இறைச்சிக் கூடம் அமைக்கும் பணிக்கு ஒப்புதல் வேண்டப்படுகிறது.

எனவே, மண்டலம்-13, பகுதி – 40A கோட்டம்-168 க்குட்பட்ட ஆலந்தூர் சாலையில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள குப்பை பிரிக்கும் நிலையத்தை இடித்து புதிய இறைச்சிக் கூடம் கட்டும் பணிக்கு, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 19.02.2026 அன்று தீர்மான எண். 47/2026ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.13.ந.க.எண்.சி1/660-1/2026

தீர்மான எண்: 230/2026 **பொருள் எண்.110**

பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம் -13 பகுதி – 40A கோட்டம்- 168 கத்திபாரா சாலை கிண்டி தொழிற்பேட்டையில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள பேருந்து நிறுத்துமிடத்தை (South Side) இடித்து அகற்ற மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் *13* பகுதி – *40A* கோட்டம்- *168* க்குட்பட்ட கத்திபாரா சாலை கிண்டி தொழிற்பேட்டையில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள பேருந்து நிறுத்துமிடத்தை *(South Side)* இடித்து அகற்றி இவ்விடத்தில் புதிய நவீன பேருந்து நிறுத்துமிடம் கட்டுவதற்கு *13*வது மண்டல வார்டு குழு தீர்மான எண் *20/2026* நாள் *09.01.2026* கூட்டத்தில் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு *(பணிகள்)* மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று பகுதி – *40A* கோட்டம்- *168* க்குட்பட்ட கத்திபாரா சாலை கிண்டி தொழிற்பேட்டையில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள பேருந்து நிறுத்துமிடத்தை *(South Side)* இடிக்க வேண்டியது அவசியமாகிறது

விவரம்

வ எண்	வார்டு எண்	இடம்	கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	கட்டிடத்தின் பரப்பளவு	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு	கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா
1	168	கத்திபாரா சாலை கிண்டி தொழிற்பேட்டை பேருந்து நிறுத்துமிடம்	2009	300 ச.மீ	5,07,192.79	ஆம்

		(South Side)				

மேற்கண்ட விவரங்களின் படி மண்டலம்-*13*, பகுதி – *40A*, கோட்டம்- *168*க்குட்பட்ட கத்திபாரா சாலை கிண்டி தொழிற்பேட்டையில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள பேருந்து நிறுத்துமிடத்தை *(South Side)* இடித்து புதிய நவீன பேருந்து நிறுத்துமிடம் அமைக்கும் பணிக்கு ஒப்புதல் வேண்டப்படுகிறது.

எனவே, மண்டலம்-*13*, பகுதி – *40A*, கோட்டம்- *168*க்குட்பட்ட கத்திபாரா சாலை கிண்டி தொழிற்பேட்டையில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள பேருந்து நிறுத்துமிடத்தை *(South Side)* இடித்து புதிய நவீன பேருந்து நிறுத்துமிடம் கட்டும் பணிக்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 19.02.2026 அன்று தீர்மான எண். 48/2026ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

கதுநக.எண்.பி1/0599/2026

தீர்மான எண்: 231/2026 **பொருள் எண்.111**

பெருநகர சென்னை மாநகராட்சி -கட்டடத்துறை - Proposed Additional Construction of Animal Birth Control Centre in 1st Floor at Athipet Dumping Yard, Vanagaram Main Road in Div - 86, Zone - 07 கட்டும் பணிக்கு 2025-2026ஆம் ஆண்டின் விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சியில் Proposed Additional Construction of Animal Birth Control Centre in 1st Floor at Athipet Dumping Yard, Vanagaram Main Road in Div-86, Zone-07 கட்டும் பணிக்காக 2025-2026 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியலின்படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

1	பணியின் பெயர்	Proposed Additional Construction of Animal Birth Control Centre in 1st Floor at Athipet Dumping Yard, Vanagaram Main Road in Div - 86, Zone - 07 கட்டும் பணி.
2	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் - 07.
3	மதிப்பீட்டின் தொகை விவரம்	
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 92,23,720.00
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 16,60,269.60
	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 92,237.20
	(ஈ) எதிர்பாரா செலவு	ரூ. 2,23,773.20
	மொத்தம் (Rounded Off)	ரூ.1,12,00,000.00
4	நிதியின் தன்மை	Health Department Buildings (20 - 28 - 00 / 412 - 400 - 301)
5	இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	ரூ.1,12,00,000.00

மேற்குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி Proposed Additional Construction of Animal Birth Control Centre in 1st Floor at Athipet Dumping Yard, Vanagaram Main Road in Div - 86, Zone - 07 கட்டும் பணியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளின் செலவீனத்தை Health Department Buildings (20 - 28 - 00 / 412 - 400 - 301) நிதியில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டடத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட வேண்டும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, கட்டடத்துறை, Proposed Additional Construction of Animal Birth Control Centre in 1st Floor at Athipet

Dumping Yard, Vanagaram Main Road in Div - 86, Zone - 07 கட்டும் பணிக்கு ரூ.1,12,00,000/- மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதியும்,

2. மேற்கண்டுள்ள பணிக்கு ஏற்படும் செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண் : Health Department Buildings (20-28-00/ 412-400 - 301) நிதியில் மேற்கொள்வதற்கு அனுமதியும்,

3. மேற்கண்டுள்ள பணிக்கு கட்டடத்துறை மூலம் ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

****

ம.அ.8.ந.க.எண்.சி1/554/2026

தீர்மான எண்: 232/2026 **பொருள் எண்.112**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 8 - கோட்டம் - 94 முதல் 108 வரை தூய்மை பணிக்காக தற்காலிக தூய்மை பணியாளர்கள் அண்டை வீட்டு குழு மூலமாக பணிபுரியும் 252 இரவு நேர தூய்மை பணியாளர்கள் மற்றும் BOV ஓட்டுநர்களுக்கு 03.05.2026 முதல் 30.06.2026 வரை பணி தொடர்வதற்கு மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின், *07.10.2021* நிர்வாக அனுமதி மற்றும் சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின், மன்றத் தீர்மான எண்.*786/2021*, நாள்.*07.10.2021*-ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-*8*, கோட்டம்-*94* முதல் *108* வரை அமையப்பெற்ற இடங்களில் இரவு நேர தூய்மை பணிகள் மற்றும் *BOV* ஓட்டுநர் பணி மேற்கொள்ள தற்காலிக தூய்மை பணியாளர்களை அண்டை வீட்டு குழு மூலமாக *08.11.2021* முதல் *252* எண்ணிக்கை தற்காலிக தூய்மை பணியாளர்கள் நியமனம் செய்திட அனுமதிக்கப்பட்டு கடந்த *08.11.2021* முதல் *30.04.2026* வரை பணிபுரிய நிர்வாக அனுமதி பெறப்பட்டு இரவு நேர தூய்மை பணிகள் மற்றும் *BOV* ஓட்டுநர் பணி மேற்கொண்டு வருகின்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் *10.09.2025* நாளிட்ட நிர்வாக அனுமதி மற்றும் மன்ற தீர்மான எண்.*1048/2025*, நாள்.*26.09.2025*-ன்படி *252* தற்காலிக தூய்மை பணியாளர்கள் மற்றும் *BOV* ஓட்டுநர்களுக்கு *01.11.2025* மற்றும் *02.11.2025* ஆகிய இரு தினங்கள் இடைக்கால பணிநிறுத்தம் செய்தும் *03.11.2025* முதல் *30.04.2026* வரை *179* நாட்களுக்கு இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் ஒப்புதலுடன் நிர்வாக அனுமதி பெறப்பட்டு இரவு நேர தூய்மை பணிகள் மற்றும் *BOV* ஓட்டுநர் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது இரவு நேர தற்காலிக தூய்மை பணிகள் மற்றும் *BOV* ஓட்டுநர் பணிக்கான மன்ற அனுமதி *30.04.2026* அன்றுடன் நிறைவடைவதால், தூய்மை பணியின் அவசியம் கருதி *01.05.2026* மற்றும் *02.05.2026* ஆகிய இரு தினங்கள் இடைக்கால பணிநிறுத்தம் செய்தும், *03.05.2026* முதல் *30.06.2026* வரை *59* நாட்களுக்கு தொடர்ச்சியாக பணியமர்த்த வேண்டியும் மேற்குறிப்பிட்ட காலத்திற்கு தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.*761/-* என்ற அடிப்படையில் *59* நாட்களுக்கு தேவையான *252 x 761 x 59 =* ரூ.*1,13,14,548/-* நிதி தேவைப்படுகிறது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, திடக்கழிவு மேலாண்மை துறையின் *05.12.2025* நாளிட்ட சுற்றறிக்கை *(தி.க.மே.து.ந.க.எண்.அ3/5150/2025)*ன்படி தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ.*761/-* என்ற அடிப்படையில் *59* நாட்களுக்கு தேவையான தோராய செலவீனம் *252 x 761 x 59 =* ரூ.*1,13,14,548/-*ஐ *(*ரூபாய் ஒரு கோடியே பதிமூன்று இலட்சத்து பதிநான்காயிரத்து ஐந்நூற்று நாற்பத்து எட்டு மட்டும்*)* கணக்கு குறியீட்டு எண்.*40 – 41 – 03*, கணக்கு தலைப்பு எண்.*210 – 100 – 601* என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு வேண்டியுள்ளது. ஆகையால், கீழ்காணும் இனங்களின் மீது மன்றத்தின் தீர்மானம் பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், *252* தற்காலிக பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிதியாண்டில் ஊதியம் உயர்த்தி வழங்கும் பொழுது அதனடிப்படையில் தின கூலியினை உயர்த்தி வழங்கவும்,

எனவே,

1) மண்டலம்-8, கோட்டம்-94 முதல் 108 வரையில் இரவு நேர தூய்மை பணி மேற்கொள்ள அண்டை வீட்டு குழுவின் வாயிலாக 252 தற்காலிக தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணிகள் மற்றும் BOV ஓட்டுநர் பணி மேற்கொள்ள 03.05.2026 முதல் 30.06.2026 வரை 59 நாட்களுக்கு பணியமர்த்தி கொள்வதற்கும்,
2) இப்பணிக்கு தேவையான தோராய செலவீனம் 252 x 761 x 59 = ரூ.1,13,14,548/-ஐ ஆகும் இதற்கான கணக்கு குறியீட்டு எண்.40 – 41 – 03,

கணக்கு தலைப்பு எண்.210–100–601 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 19.02.2026 அன்று தீர்மான எண்.052/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.8.ந.க.எண்.சி1 /165/2026

தீர்மான எண்: 233/2026 **பொருள் எண்.113**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 8 - கோட்டம் - 94 முதல் 108 வரை தூய்மை பணிக்கு போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் அண்டை வீட்டு குழுக்களின் (SHG) கீழ் 342 தூய்மை பணியாளர்கள் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர் - தற்பொழுது இப்பணியாளர்களும் போதுமானதாக இல்லாத காரணத்தினால் மண்டலம் - 5 மற்றும் 6ல் இருந்து 850 தற்காலிக (SHG) தூய்மை பணியாளர்கள் மண்டலம் -8ல் 23.01.2026 முதல் 21.06.2026 வரை (150 நாட்களுக்கு) பணியமர்வு செய்தமைக்கும், ஊதியம் வழங்குவதற்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-8 ஆனது சுமார் 27.02 சதுர கி.மீ பரப்புள்ள 15 வார்டுகளை (வார்டு 94 முதல் 108 வரை) உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 50 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் (BRR) மற்றும் 2344 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் (IRR) பெருநகர சென்னை மாநகராட்சியின் பணியாளர்களைக் கொண்டு தினமும் துய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும். இது தவிர சென்னை மாநகராட்சி மண்டலம்-8க்குட்பட்ட பகுதிகளில் அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவமனை, ரயில் நிலையம், சுடுகாடு , பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், ஓட்டல்கள், வீட்டு வசதி வாரியம் குடியிருப்புகள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் இலவச பொதுக்கழிப்பிடங்கள், மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை சேகரித்து தரம் பிரிக்கும் பணிகள், சாலைகளில் உள்ள பேனர்களை அகற்றும் பணி, BOV வாகனங்களை ஓட்டுவதற்கும் மற்றும் சாலைகளில் அதிகமாக உள்ள மணல்களை அகற்றுவது ஆகியவற்றை சரியான முறையில் சுத்தமாக பராமரித்திட வேண்டும். மேற்கண்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகமாகவும் அடர்த்தியாகவும் வசிப்பதாலும் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டியுள்ளது.

மண்டலம்-8 2011 ஆம் ஆண்டு		மண்டலம்-8 2026 ஆம் ஆண்டு		மண்டலம்-8 வித்தியாசம்	
மொத்த மக்கள் தொகை	மொத்த குடியிருப்புகள்	மொத்த மக்கள் தொகை	மொத்த குடியிருப்புகள்	மொத்த மக்கள் தொகை	மொத்த குடியிருப்புகள்
800456	200114	960547	240137	160091	40023

இந்நிலையில் தற்போது மண்டலம் -8, கோட்டம் - 94 முதல் 108 வரை 2389 நிரந்தர பணியாளர்கள் மற்றும் மண்டலம் -5 மற்றும் 6ல் இருந்து 275 பணியாளர்களும் ஆக மொத்தம் 2664 இப்பணியாளர்களில் ஓய்வு, பணியிடமாற்றம், பதவி உயர்வு மற்றும் இறப்பு காரணமாக 1201 பணியாளர்கள் போக மீதம் உள்ள 1465 பணியாளர்கள் மற்றும் 342 அண்டை வீட்டு குழுக்கள் (SHG) பணியாளர்களை மட்டுமே கொண்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது அண்ணாநகர், வில்லிவாக்கம், அரும்பாக்கம் அமைந்தகரை மற்றும் எழும்பூர் போன்ற பகுதிகளில் மக்கள் தொகை அதிகமாக உள்ளதால் இப்பணியாளர்களை கொண்டு தூய்மை பணி மேற்கொள்வதற்கு சிரமமாக உள்ளதால் மண்டலம் - 5 மற்றும் 6ல் இருந்து 850 தற்காலிக (SHG) தூய்மை பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

<u>அட்டவணை</u>

<u>துப்புரவு பணியாளர் தேவைப்பட்டியல் கணக்கீடு</u>

வ.எண்	கோட்டம்	மொத்தம் அனுமதி பெற்ற கொடிவளர்கள் எண்ணிக்கை	தற்போது பணி புரியும் நிரந்திர பணியாளர்களின்	மன்றத் தீர்மானம் பெறப்பட்ட SHG பணியாளர்கள்	மண்டலம் - 5 மற்றும் 6லிருந்து மண்டலம்8ற்கு அனுப்பப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை	தலைமை பொறியாளர் (SWM) அவர்களின் சுற்றறிக்கை நாள் :10.08.2023 (தி.க.மே.துநக.எண்.அ3/3974/2023)	தோராய செலவினம் ரூ.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1.	94	182	89	28	49	ரூ.761/-	ரூ.761/- x 850 (SHG தூய்மை பணியாளர்கள்) x 150 நாட்கள் = ரூ.9.70.27.500/- (23.01.2026 முதல் 21.06.2026 வரை)
2	95	218	99	21	59		
3	96	73	54	14	22		
4	97	113	61	19	37		
5	98	132	73	11	54		
6	99	161	137	17	44		
7	100	213	139	30	76		
8	101	215	105	31	55		
9	102	221	109	26	85		
10	103	241	105	30	75		
11	104	250	127	32	80		
12	105	203	100	26	73		
13	106	150	84	16	64		
14	107	135	111	9	29		
15	108	158	82	24	48		
மொத்தம்		2664	1465	342	850		

ஆகையால் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 800456 மக்கள் தொகையும் மற்றும் 200114 குடியிருப்புகள் என நிர்ணயம் செய்யப்பட்டு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர், தற்போது 2026ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 960547 மக்கள்தொகையும் மற்றும் 240137 குடியிருப்புகள் அதன் வித்தியாசம் 160091 மக்கள் தொகையும் மற்றும் 40023 குடியிருப்புகள் உள்ளன, தூய்மைப் பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாதததால் மண்டலம் - 5 மற்றும் 6லிருந்து 850 தற்காலிக தூய்மை பணியாளர்ளை (SHG) புதிதாக மண்டலம் - 8ல் நியமிக்கப்பட்டுள்ளனர்,

எனவே, மண்டலம் -8 , கோட்டம் -94 முதல் 108 வரை தூய்மை பணிகளை மேற்கொள்ள அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக மண்டலம் -5 மற்றும் 6ல் இருந்து 850 தற்காலிக (SHG) தூய்மை பணியாளர்களை பணிக்கு எடுத்துக்கொள்ள 23.01.2026 முதல் 21.06.2026 வரையுள்ள காலத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

(அ)	மண்டலம் -8, கோட்டம் -94 முதல் 108 வரை தூய்மை பணிகளை மேற்கொள்ள அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக மண்டலம் -5 மற்றும் 6ல் இருந்து 850 தற்காலிக (SHG) தூய்மை பணியாளர்களை பணிக்கு எடுத்துக்கொண்டமைக்கும், 23.01.2026 முதல் 21.06.2026 வரை காலத்திற்கு ஊதியம் வழங்குவதற்கு அனுமதியும்.
(ஆ)	ஆணையர் அவர்களின் 05.12.2025 நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள ஒரு நாளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.761/- வீதம் 850 நபர்கள் x 150 நாட்கள் x ரூ.761/- = ரூ. 9,70,27,500/-ஐ (ரூபாய் ஒன்பது கோடியே எழுபது இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) அனுமதியும்
(இ)	தூய்மை பணியில் ஈடுபட்டு வரும் SHG தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் தனியரை ஆணையர் அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்ய அனுமதியும்,
(ஈ)	தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் அரசாணை / சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் ஊதியம் வழங்க அனுமதியும்,
(உ)	நிதி ஆலோசகர் மூலமாக ரூ. 9,70,27,500/-ஐ ஆகும் இதற்கான கணக்கு குறியீட்டு எண்.40 – 41 – 03, கணக்கு தலைப்பு எண்.210 – 100 – 601 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும்,
(ஊ)	மண்டலம்-8ல் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்களில் (SHG) 60 வயதை கடந்த பணியாளர்கள் எவரும் பணிபுரியவில்லை என சான்றளிக்கப்படுகிறது.

மேற்கண்ட அ முதல் ஊ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 19.02.2026 அன்று தீர்மான எண்.053/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.8.ந.க.எண்.எச்1/358/2026

தீர்மான எண்: 234/2026 **பொருள் எண்.114**

பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம்-8, பகுதி-21 முதல் 23 வரையுள்ள கோட்டம்-94 முதல் 108 வரை - அண்டைவீட்டு குழுவின் (SHG) கீழ் பணியமர்த்தப்பட்டுள்ள தற்காலிக சுகாதார பணியாளர்களின் பணிக்காலம் 31.03.2026ல் முடிவடைகிறது - 01.04.2026 முதல் 31.03.2027 ஒரு வருட காலத்திற்கு 150 தற்காலிக சுகாதார பணியாளர்களை பணியமர்த்த மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-8 (அண்ணா நகர்) பகுதி 21, 22 மற்றும் 23 (கோட்டம் 94 முதல் 108 வரை) 15 கோட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் சுமார் 81,027 வீடுகள் உள்ளன. இங்கு டெங்கு, மலேரியா, சிக்குன் குனியா போன்ற கொசுவினால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த கொசுப்புழுக்கள் வளரிடங்களை கண்டறிந்து அழிக்கும் பணிகளான கிணறு, கீழ்நிலை மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் மருந்திடும் பணி (Sector Work) மழைநீர் கால்வாய், நீர்வழி பிரிவுகளில் வளரும் கொசுப்புழுவை அழிக்கும் வகையில் மருந்து தெளிக்கும் பணி, புகை மருந்து அடிக்கும் பணி, தடை செய்யப்பட்ட நெகிழி பறிமுதல் செய்யும் பணி மற்றும் பேரிடர் காலங்களில் அனைத்து பொது சுகாதார பணிகளை மேற்கொள்ளுதல் மேலும் எண்ணற்ற பொது சுகாதார துறை சார்ந்த அனைத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள மொத்தம் 226 சுகாதார பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். 93 நிரந்தர சுகாதார பணியாளர்கள் அல்லாமல் 149 தற்காலிக சுகாதார பணியாளர்களை (SHG) பணியமர்த்த 22.03.2025 நாளிட்ட மாமன்றத்தின் ஆணை பெறப்பட்டுள்ளது.

மேலும் , W.P.No.32142 of 2022 and WMP No.31563 of 2022 dated 13/11/2022 மற்றும் மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் 23.09.2025 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, கடந்த 2022ஆம் ஆண்டு பணி நீக்கம் செய்யப்பட்ட திரு.விஜயபாஸ்கர் என்பவரால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. மாண்புமிகு நீதிமன்ற தீர்பின்படி தனியரை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ள உத்தரவிடப்பட்டது. அதன் அடிப்படையில் மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களிடம் ஆணை பெறப்பட்டது. எனவே தனியர் கோட்டம்-97 ல் ஆகஸ்டு-2025 முதல் மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

ஆக மொத்தம் 150 எண்ணிக்கையில் தற்காலிக சுகாதார பணியாளர்களை பணியமர்த்தி நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து பணி நடைபெற்று வருகிறது. இப்பணியானது 31.03.2026 ல் முடிவடைகிறது.

தலைமை பொறியாளர் (தி.க.மே.) அவர்களின், 05.12.2025 நாளிட்ட சுற்றறிக்கையின்படி 01.04.2025 முதல் ரூ.753/- லிருந்து ரூ.761/- ஆக உயர்த்தி அந்தந்த மண்டலத்திலேயே வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 1 முதல் 15 மண்டலங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி உயர்த்தப்பட்ட ஊதியம் 01.04.2025 முதல் வழங்க நடவடிக்கையில் உள்ளது.

எனவே,

அ)	மண்டலம்-8 பகுதி-21, 22 மற்றும் 23 ற்கு உட்பட்ட கோட்டம்-94 முதல் 108 வரை உள்ள பகுதிகளுக்கு நாளொன்றுக்கு ரூ.761/- வீதம் 01.04.2026 முதல் 31.03.2027 ஒரு வருட காலத்திற்கு (365 நாட்கள்) 150 தற்காலிக சுகாதார பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்களின் (SHG) மூலம் பணியில் ஈடுபடுத்தவும் ,
ஆ)	இப்பணிக்கான செலவினத்தை ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.761/- வீதம் (150 நபர்கள் X ரூ.761 X 365 நாட்கள்) ரூ.4,16,64,750/- (ரூபாய் நான்கு கோடியே பதினாறு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்) செலவினத்தை 2026-2027 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யவும், மேலும் 2026-2027ம் நிதியாண்டில் ஊதியம் உயர்த்தப்படின் அதனை வழங்கவும்,

இ)	மேற்படி செலவினங்களுக்கான சுகாதார துறையின் கணக்கு தலைப்பு எண்.*30-32-02* பிரிவு குறியீட்டு எண்.*210-10-06-02* என்ற தலைப்பில் செலவினங்களை மேற்கொள்ளவும், ஒப்பந்த விதி மற்றும் வரி விலக்கு அளிக்கவும்,
ஈ)	ஒரு வருடகாலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்த கீழ் காணும் இனங்களில் கூடுதலாக மேற்கண்ட சுய உதவி குழு *(SHG)* பணியாளர்களின் ஊதியம் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதி ஆண்டுகளில் உயர்த்தி வழங்கும் பொழுது அதனடிப்படையில் தினக்கூலியினை உயர்த்தி வழங்கவும்,

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேணடி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 13.02.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 19.02.2026 அன்று தீர்மான எண்.054/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

இத்துடன் இன்றைய கூட்டம் முடிவடைகிறது. அடுத்த கூட்டம் நடைபெறும் நாள் மற்றும் நேரம் பின்னர் அறிவிக்கப்படும்.

(அவையில் நாட்டுப்பண் பாடப்பட்டது)

கூட்டம் முடிவுற்ற நேரம் : மாலை *4.00* மணி *07* நிமிடம்.